3 1761 10767228 9

Presented to the

LIBRARIES *of the*

UNIVERSITY OF TORONTO

by

François Gros

Digitized by the Internet Archive
in 2022 with funding from
University of Toronto

https://archive.org/details/gc-sh14-0116

THE GOOD FAIRY.

A TAMIL DRAMA

BY

Rao Saheb P. SAMBANDAM, B. A., B. L.,

Author of:
"The Two Sisters," "The Bandit Chief," "True Love," "Manohara," "Blind Ambition," "The Demon Land," "Fate and Love" "Sarangadhara," "Simhalanatha," "Pushpavalli," "Amaladitya," "Magapathi," "Galava," "The Two Friends," "The Golden Fetters," "Farces," "Siruthondar," "Markandeya," "The Fair Ghost," "The Merchant of Vanipura," "The Wedding of Valli," "The Eye of Love," "Vijayarangam," "As you like it," "Ratnavali," "Lord Buddha," "The Tragedy of Silence," "Sabapathy," "Geetha Manjari," "Harischandra," "As We Sow-So We Reap," "The Curse of Oorvasi," etc. in Tamil, and "Harischandra," and "Yayathi" in English.

SECOND EDITION

Madras:
PRINTED BY DOWL N AND CO., AT THE "PEERLESS PRESS,"
21, S kurama Chetty Street.

1922.

All Rights reserved.) (Price per Copy As. 8.

உ

நற்குல தெய்வம்

இந்த தமிழ் நாடகம்

ராவ் சாஹெப்

ப. சம்பந்த முதலியார், பி-ஏ., பி-எல்.,

அவர்களால் இயற்றப்பட்டது.

(இந்த நூலாசிரியரால் இயற்றப்பட்ட மற்ற நூல்கள் :—
"லீலாவதி சுலோசனை," "கள்வர் தலைவன்," "மனோஹரன்,"
"இரண்டு நண்பர்கள்," "சாரங்கதரன்," "வேதாள உலகம்,"
"சத்ருஜித்," "யயாதி," "காலவரிஷி," "அமலாதித்யன்,"
"காதலர் கண்கள்," "பேயல்ல-பெண்மணியே," "மகபதி,"
"மார்க்கண்டேயர்" "பொன் விலங்குகள்," "சிம்ஹளநாதன்,"
"விரும்பிய விதமே," "சிறுத்தொண்டர்," "ரத்னவளி,"
"வாணீபுர வணிகன்," "ரஜபுத்ரவீரன்," "ஹரிச்சந்திரன்,"
"மெய்க்காதல்," "புஷ்பவல்லி," "கீதமஞ்சரி," "சபாபதி,"
"பிரஹசனங்கள்," "ஊர்வசியின் சாபம்," "விஜயரங்கம்,"
"முற்பகற் செய்யின் பிற்பகல் விளையும்," "வள்ளி மணம்,"
"புத்த அவதாரம்" முதலியன.) :: :: :: :: ::

இரண்டாம் பதிப்பு

சென்னை :
டேஎடன் கம்பெனியாரின்
"பியர்லெஸ்" அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

1922.

காபி ரைட்.]

[விலை அணா 8.

LIBRARY
JAN 17 2019
UNIVERSITY OF TORONTO

INSCRIBED

TO

THE MEMORY OF

P. VIJIARANGA MUDALIAR,

and

P. MANICKAVELU AMMAL

MY BELOVED PARENTS

" Let thy mother be to thee like unto a God
Let thy father be to thee like unto a god "

Taittiriyaka Upanishad.

Preface to the First Edition

This small piece was written by me about twelve years ago for an anniversary performance of the Suguna Vilasa Sabha. I give this to my readers as a type of an opera where the musical element is given great prominence.

I find that some societies—professional as well as Amateur—pay me the compliment of staging my dramas—and then writing for my permission to do so! I should like to inform all societies that my formal permission must be obtained beforehand, as otherwise they would make themselves liable to be proceeded against for infringement of copyright.

"PAMMAL LODGE"
MADRAS.

THE AUTHOR.

நற்குல தெய்வம்

நாடக பாத்திரங்கள்

கின்னரன்	...	... நற்குல தெய்வம்
பாஸ்கரன்	...	... காஸ்மீரத்து அரச குமாரன்
விக்கிரமபாஹு		... கன்னமாபுரத்து மன்னன்
ஜகஜ்ஜாலன்	...	... கன்னமாபுரத்து அரசன் விதூஷகன்
பத்மினி	...	... விக்கிரமபாஹுவின் மனைவி
வேதவதி	...	... விக்கிரமபாஹுவின் மகள்

மந்திரி, பலதேசத்து அரசர்கள், சேவகர், தாதியர் முதலாயினோர்.

கதை நிகழிடம் :—கன்னமாபுரத்தை அடுத்த ஓர் வனத்திலும், கன்னமாபுரத்திலும்.

நற்குல தெய்வம்

முதல் அங்கம்

இடம்—ஓர் கானகம். காலம்—பகல்.

கின்னரன் ஆகாயத்தில் தோன்றுகிறான்.

ராகம்—நாட்டை.

கி. எண்ணிய படியே இதுவரை முடிந்தது
மண்ணினி லொப்பார் மன்னனுக் கழகினில்
பெண்ணலங் கனிந்த பேதை யொருத்தியே
கண்ணெதிர்ப் படுவோம் காரிகை யுருக்கொடு.

[மறைகிறான்.]

பாஸ்கரன் வருகிறான்.

ராகம்—நாதநாமக்கிரியை.

பா. இன்னமும் வாரான் என்னுயிர் நண்பன்
தன்வழி மறந்து தயங்குகின் றானோ?
தோழா! தோழா!

கின்னரன், தினகரன் உருவத்துடன் வருகிறான்.

கி. இதோ வந்தேன்!

ராகம்—கல்யாணி.

பா. கானகம் கடந்து செல்லக் கண்டையோ மார்க்கமொன்று
போனகம் கொண்டு மீளப் போதுமோ இந்தக் காலம்?

ராகம்—நாயகி. தாளம்—ரூபகம்.

கி. எதுநா னுரைப்பேன் தோழா இன்று நாம் எழுந்தவேளை
தீதினைக் குறித்த தாமோ தீயுமி ழிந்தக் கானம்

திரிந்து நா னலைந்துமே தெரிகிலே னோர் வழி
அருந்திடவே இதனையே ஆறுவோநா மினைப்பினை.

பா. தோழா, தாகத்திற் கென்ன செய்வது? என் நா வுலர்கின்றதே!

ராகம்—தேசிக தோடி.

கி. கணப்பது பொறுத்திரு கொணருவேன் கடிதினில்
பழுதுறிக் கானகம் முழுதுமே சுற்றியேனும்.

[போகிறான்.]

ராகம்—ஆரபி.

பா. நண்ப னிவனும் நண்ணியே பொருளினை
எண்ணுமுன் மகிழ்ந்தே என்னிட முதவுவான்
தன்சுகம் கருதான் தரணியி லென்றும்
என்சுக மேதன் இன்பெனக் கருதும்
இத்தகை நண்பனை ஒத்திருப் பாரோ
எத்தல மீதும் சித்திரப் பாவையர்
துன்பமே வடிவாய்த் தோற்றியே ஆடவர்
இன்பமே நாடி ஏதமே விளைப்பர்.—
ஆ! இதென்ன?

[வேதவதி உருவைக்கொண்டு கின்னரன் படுத் துறங்குவது போல் எதிர்ப்படுகிறான். கின்னரன் மாய்கையால் சிருஷ்டிக்கப்பட்ட சர்ப்பமொன்று படமெடுத்து அவன் முகத்தைக் கவர்ந்து நிற்கிறது. பாஸ்கரன் அச்சர்ப்பத்தை இரு துண்டாக வெட்டுகிறான்.]

ஆ! இதென்ன விந்தை! இதுவரை இப் பெண்மணியை இங்கு கண்டிலன்! காரிகை யாரோ? கானகம் வந்து கண் வளர்வானேன்? கண்ம் காமதித்திருப்பனேல் கடும்பாம்பின் வாய்ப்பட்டிருப்பாள். பரமனுர் பாகத் தொளிர் பாவையோ? பிரமன்றன் நாவின் பகிழ் பூவையோ? திருப்பாற் கடலி னுதித்த தேவியோ? அனலால் எரிந்த பாறன் ஆவியோ? விண்ணுளும் தேவர்கோன் விழைந்திடு

நங்கையோ? மண்ணாளும் மன்னர்தம் மன்னன் மங்கையோ? அப்படித்தா னிருக்கவேண்டும். உருவத்தை உற்று நோக்கின் இவ் வுலகத்தில் உதித்தவளாகத்தான் தோற்றுகிறது! சித்தஜன் சித்தத்தை யுன்மத்தம் பிடிக்கச்செய் சித்திரப் பாவை யனைய இத்தகை யெழிலாளை இதுவரை நான் எங்கும் கண்டதில்லை. ஐயோ! இத்தனை எழிலும் எத்தனை ஆண்மக்கள் ஆவி யழிக்கப் பெண்ணுருவாய்ப் பிறந்துளதோ? பாபமே பெண் வடிவங்கொண்டு பாரை யழிக்கப் பிறந்ததென வறிந்தும், கந்தமாதனன் மனைவியிடம் காரிகையர் குணத்தைக் கண்டும், இக் கன்னிகையை நான் கண்ணெடுத்துப் பார்ப்பதோ! சீ! இம் மதியை வென்ற வதனமும், வேலை வெறுத்த விழியும், வில்லை வெட்கச்செய் புருவமும், கோவையைக் கரித்த அதரமும்—ஆ! அவ் வரவத்தின் விஷம் இவள் அதரத்திற் றுளித்திருக்கின்றதே! இதை அகலச் செய்யாவிட்டால் அணங்கு ஆவி அழிவாள்! ஐயோ! இதற் கென்ன செய்வது? அயல் மாதரைத் தீண்டினால் அழியாப் பாபம் அணுகுமே! அப்படியே விட்டாலும் அரிவையைக் கொன்ற பாபம் அடையுமே. இத் தர்ம சங்கடத்திற் கென்ன செய்வது? விமலன் விட்ட விதி! முகத்தை வஸ்திரத்தால் மூடி அவ் விஷத்தை அகற்றுகிறேன். [அங்ஙனமே செய்கிறான்.]

கி. [திடுக்கிட் டெழுவதுபோல் பாசாங்கு செய்து] பாதகா!—

பா. ராஜகுமாரி,—

கி. ராஜகுமாரா, இது உமக் கழகோ? அபரந் துறந்தும் அயல் மாதைத் தீண்டும்படி யார் உமக்கு அறம் கற்பித்தது? தாம், ஒரு ஆடவர் என்பதை மறந்தபோதிலும் க்ஷத்ரிய தர்மத்தையும் மறப்பதோ?

பா. ராஜகுமாரி, அவசரப்படவேண்டாம், சற்று நான் சொல்வதைச் செவி கொடுத்துக் கேள். பிறகு என்னை நிந்திக்க வேண்டுமோ, வந்திக்க வேண்டுமோ, நீர்மானம் செய்.

கி. என்ன கேட்பது? அநாதையாய் அருங் கானகத்தில் அயர்ந் துறங்கும்பொழுது—

பா. அயர்ந் துறங்கும்பொழுது ஆடரவம் வந்து உன்னைத் தீண்டவர அதை அடித்துக் கொல்வதோ, அல்லது உன் ஆருயிரை அதற் கிரையாகக் கொடுப்பதோ க்ஷத்ரிய தர்மம்?

கி. ஆயினும் என் முகத்தை யேன்—?

பா. அக் கொடிய சர்ப்பத்தைக் கொன்றபொழுது அதன் விஷ மானது உன் மதியை வென்ற வதனத்தில் விழ, அதை அகற்ற வெண்ணி என் முகத்தை மூடி இது செய்தேன். தவறுயின் மன்னிப்பாய். பூரண சந்திரனிடம் அமுதம் இருக்கவேண்டுமேயொழிய விஷ மிருப்பது நியாய மல்லவே.

கி. இந்த வார்த்தை யெல்லாம் நன்று யறிவேன் நான்; இது உண்மைதானே நான் அறியவேண்டும். எங்கே மடிந்த சர்ப்பம்?

பா. அதோ, நீயே பார். [சர்ப்ப மில்லாதது கண்டு]—ஆ!

கி. எங்கே?

பா. சற்று முன்பாக இங்கே கிடந்தது, என் கண்ணுற் கண்டேன்! எங்கே போயிருக்கும்?—

கி. ஆம், ஆம்! இறந்த சர்ப்பம் எங்கே போயிருக்கும்? நான் நினைத்த வண்ணமே இருக்கிறது. யாரிடத்தி லிந்தப் பொய்யைக் கூற வந்தீர்? ஏதோ சர்ப்பத்தினின்றும் காப்பாற்றியதாகக் கூறி, என் மதியை மயக்கச் செய்யலாமென்று பார்த்தீரா? போம், போம்! இவ் வித்தை யெல்லாம் நன்று யறிவேன் நான்!

பா. ராஜகுமாரி, நீ உன் வாய் திறந்து என்னைப் போகச் சொன்னுல் அதன்படி செய்கிறேன், தடையில்லை. ஆயினும் நீ யென்னைப் பொய் புகலுபவனுகக் கருதுவது நியாய

மன்று சத்தியமாக நான் கொன்ற சர்ப்பம் சற்று முன் னிங்கிருந்தது மறைந்த தென்ன மாயமோ அறியேன்!—

கி. ஆம், நான் அறிவேன், அறியாப் பேதையரின் மனத்தை ஆடவர் மயக்கிடச் செய்யும் மாயம்!—ஐயோ! தஞ்சை யராம் வஞ்சியரைக் கொஞ்சிப் பேசி அஞ்சாது வஞ்சிக் கும் ஆடவரைக் கண்ணெடுத்துப் பார்க்க லாகாதென்று தீர்மானித்து, அருங் கானகத்தை நண்ணியும், என் விதி என்னை விடவில்லையே!

பா. அணங்கே, ஆண்மக்களை ஏன் அவ்வளவு அற்பமாக நினைத்துவிட்டாய்? உனக்கு யார் என்ன தீங் கிழைத் தார்கள்?

கி. தீங் கிழைக்கவேண்டுமோ? எங்களுக்கு வரும் தீங்கெல் லாம் உங்களால்தானே! பெண்ணாற் பெருகு முலகம் ஆணால் அழிகிறது!

பா. அப்படியா!—

ராகம்—பைரவி.

பாவை யொருத்தியாற் பட்டா னிராமன் படுதுயரம்
பாவை யொருத்தியாற் பச்சைக்கதிரோன் பலனழிந்தான்
பாவை யொருத்தியாற் பாரத மாயதிப் பாரினிலே
பாவை யொருத்தியாற் பாக மிழந்தான் பரமனுமே.

கி. ஓகோ!

ராகம்—அடாணா.

கற்பழித்தான் இந்திரனுங் கவுதமனார் நன்மனையைக்
கற்பழித்தான் கலைமதியுங் கற்பித்தான் தாரத்தைக்
கற்பழித்தான் வாலியுமே தற்பிறந்தான் காதலியைக்
கற்பழித்தார் கணக்கிட்டால் கடையுகமும் காணாதே.

பா பெண்டிரோ?

ராகம்—பைரவி.

மங்கை யொருத்திசா ரங்க தானுயிர் மாய்த்தனளால்
மங்கை யொருத்தி கெடுத்தனள் கௌசிகன் மாதவத்தை

மங்கை யொருத்தி தனையனைச் சேர மனமுவந்தாள்
மங்கை யொருத்தி யயாதியின் யௌவன மாற்றினளே.

அன்றியும் காசிபர் முதலிய ரிஷீஸ்வரர்களின் தவமழிந்த தாரால் ?

கி. அவர்களாலேயே! பின் புத்தி யுடைய பேதையராம் பெண்டி ரிச்சித்தால் ஆன்ற புத்தியுடைய ஆண் மக்கள் இணங்குவானேன் ?

பா. காரணமா கேட்கிறாய் ?—

ராகம்—சஹானா.

காதலால் கயிலை நாதன் கங்கையைத் தலைமேற்
கொண்டான்
காதலால் கமல நாதன் கலைமாதை நாவில் வைத்தான்
காதலால் கவுஸ்துவமோடு கட்செவி யுறைவோன்
கொண்டான்
ஆதலால் அவனி தன்னி லதன்புக முரைப்பாருண்டோ !

கி. சுகப்படுவ தெங்களால், தூறு சொல்வ தெங்கள்மேல் ! இப்படிப்பட்ட ஆடவர் காதல் ஒருகாலும் எனக்கு வேண்டாம் !

பா. பெண்கள் நாயகமே, நீ எல்லா ஆண் மக்களையும் ஒன்று கத் தீர்மானிக்க லாகாது. சீதா தேவிக்காகப் படாத பாடுபட்ட ஸ்ரீ ராமனை யொத்தவர்களு மிருப்பார்கள்.

கி. சத்தியவானுக்காக யம லோகமுஞ் சென்ற சாவித்திரி யைப் போன்ற—

பா. உன்னை நிகர்த்த பெண்டிரு மிருப்பார்கள் !—மங்கையர்க் கரசியே, நீயோ மங்கைப் பருவ மடைந்த ராஜகுமாரி யாகக் காண்கிறாய்—

கி. ராஜ குமாரா, நீர் என்ன சொல்லப் போகிறீரென்று எனக்குத் தெரியும். நீர் கேட்டு நான் மறுப்பது தர்ம மன்று. ஆகவே, நீர் கேளா முன்னமே நான் கூறிவிடு கிறேன். தன் தோழன் மனைவியின் துர் நடக்கையைக்

கண்டு, தரணியிலுள்ள தையலரெல்லாம் அத் தகைய ரென வெண்ணி, கன்னியர் முகத்தைக் கண்ணெடுத்தும் பார்ப்பதில்லையென்று தீர்மானித்திருக்கிறராம், காஸ்மீரத்து மன்னன் மைந்தன். அவ் வெண்ணம் தவறென ரூபித்தற்பொருட்டு அச் சீமானையே கடி மணம் புரியலாமென் றிருக்கிறேன்.—ஆகவே—

ராகம்—சங்கராபரணம்.

பா. கண்ணேகேள் காஸ்மீரக் காவலர்கோன் மைந்தனியான்
எண்ணேன்கா ணிழிவாக ஏதிலரை யெப்போதும்.

[கின்னரன் கரத்தை முத்தமிடுகிறன்.]

கி. ராஜ குமாரா, ஏது இதற்குள்ளாக தமது தீர்மானத்தினின்றும் மாறியது ?

பா. உன்னைக் கண்ணாரக் கண்டபின் மாறு திருப்பது எங்ஙனம்? சந்திர னொளியின்முன் இருள் நிற்குமோ ? கண்ணே, அதிருக்கட்டும். இக் கடுங் கானகத்தில் நீ தனியாய் வந்திருக்கவேண்டிய காரணமென்ன ? உன்னைப் பெற்றோர் மனம் துணிந்து இங்கு உன்னை எப்படி யனுப்பினார்கள் ?

சி. என் தந்தை விக்கிரமபாஹு—

பா. ஆ ! விக்கிரமபாஹுவின் குமாரத்தியா நீ ?

கி. ஆம், பிராணநாதா ! இதற்குள் மாற ஆரம்பித்துவிட்டீரா ? இதுதானே முன்பு தாம் கூறிய நியாயம் ?

பா. கண்ணே, அதல்ல ; உன் தந்தை யொருகாலும் உன்னை மணக்க எனக்கு விடை யளியாரே, தெரியுமா வுனக்கு ?

கி. ஆம், தெரியும். அதற்கொரு யுக்தி சொல்கிறேன். நான் சுயம்வரம் ஒன்று ஏற்படுத்தி அதில் தம்மையன்றி வேறெவராலும் முடித்தற் கரிய சுல்கமொன்று ஏற்படுத்துகிறேன். தாம் வந்து அதை வென்று என்னைப் பெறும், அப்பொழுது பிதா ஒன்றும் கூறார்.

பா. எப்பொழுது இந்த சுயம்வரம்?

கி. பிராணநாதா, என் நா உலர்ந்து போகிறது. எனக்குக் கொஞ்சம் தாகத்திற்கு ஜலம் கொண்டுவாரும். எல்லாவற்றையும் பிறகு சவிஸ்தாரமாகச் சொல்லுகிறேன்.

பா. இதோ க்ஷணத்தில் வருகிறேன். இதோ இப் பழ வர்க்கத்தைப் புசித்துப் பசியாறு. ஜாக்கிரதையாக இங்குதானிரு. [விரைந்து போகிறான்.]

ராகம்—ஆரபி.

கி. சடிதினில் வேலை, முடிந்தது பாதி.
தேடியே யென்னைக் கூடிடு முன்னர்
இவ் வுரு வகற்றி செவ்வுரு மார்பனைத்
தினகர னுருக்கொடு மனதினைக் கவரும்
கன்னமா புரத்தின் மன்னி யாங்குறை
காரிகை தன்னைக் கோரிக் காண்போம்.

[மறைந்து போகிறான்.]

பாஸ்கரன் ஜலத்துடன் திரும்பி வருகிறான்.

பா. இதோ!—எங்குற்றாய் காதலி?
கண்டது கனவோ, கண் கட்டி மாயமோ?
வண்ண விந்தையே! நண்ப னெங்குற்றான்?
கண்வளர் கனவல! கண்படும் பழ மிதோ!

ஐயோ!

ராகம்—சங்கராபரணம்.

வாராப் பிழைபற்றி வையத்தி லென்னையே
பாராது செல்லப் பரிந்தனளோ—காராது
கடும்கா னகத்தே கரடி புலிவாய்
படும்காற் பதகனை விட்டு.

ஐயோ! அதோ தினகரன் வருகிறான். அவனிடம் என்னென் றுரைப்பது?—

கின்னரன், தினகரன் உருவத்துடன் ஜலம் கொண்டு வருகிறான்:

கி. தோழா, என்னை மன்னிப்பாய். போன இடத்தில் சற்றே நேர மாயது.— என்ன ஒருவாறாக நிற்கிறாய்? என்ன சமாசாரம்?

ராகம்—எதுகுல காம்போதி.

பா. எதுரைத் திடுவேன் தோழா எந்திழை யோர ணங்கு
போதுடை யரவின் வாயிற் குறிப்படத் தோன்ற விங்ஙன்
மாதென எண்ணி நானம் மாசுணம் வாயகற்ற
சூதுசெய் தென்னை யந்தோ சூன்யமாய் விட்டாளன்றே.

கி. தோழா, என்ன பரிகாசம் செய்கிறாய்! அருங் கானகத்தில் ஆரணங்கு கண்படுவதாவது? கடும் பாம்பின் வாயினின்றும் அவளை நீ காத்திட, பிறகு கண்ணுக்குப் புலப்படாது கரந்திடுவதாவது! கனவு கண்டாயோ? கானக மாயமோ?

பா. தோழா, நான் பொய் யுரைப்பேனோ?

கி. ஆயின் அம்மா தின்னாரெனக் கேட்டறிந்தனையோ?

பா. கன்னமாபுரத்து மன்னன் கன்னிகையெனக் கூறினள்.

கி. இதென்ன ஆச்சரியம்!

ராகம்—மோஹனம்.

மன்னர்முக நோக்கேன்யான் மண்டலத்தென் மானாளைக்
கன்னியெனக் கழிப்பனெனக் கட்டுரைசெய் தாள்ளாளந்
கன்னபுரக் கட்டழகி கரியரிசூழ் கடுங்கானில்
மன்னியுன்றன் கண்ணெதிரின் வருஞ்சூழ்ச்சி யறியேனே.

இங்கு அவள் தனியாய் வருவா னேன்?

பா. பிறகு அதை யோசிப்போம். தினகரா, இக் கானகம் நீங்கி நாளை கன்னமாபுரம் போய்ச் சேரவேண்டும்.

கி. என்ன அங்கு விசேஷம்?

பா. அவ் விராஜ குமாரியின் சுயம்வரம்.

கி. சுயம்வரமானுல் உனக் கென்ன வேலை அங்கே? நீதான் கன்னியரைக் கனவிலுங் கருதுவ தில்லையென்று சபதஞ் செய்திருக்கிருயே!

பா. அதெல்லாம் அவ் வழகியைக் காணுமுன்.

கி. கண்டபின் வே றுத்தேசமே? சரிதான். நீ கண்டது கனவோ என்று சந்தேகித்தேன் சற்று முன்பு. உன் புத்தியையே கலக்கவல்லது காற் றுருவா யிராது, கண்ட துண்மையாகத்தா னிருக்கவேண்டும். அதிருக்கட்டும், இப்பொழுதாவது ஸ்திரீகளைப்பற்றி நான் கூறிய துண்மையென ஒப்புக்கொள்கிருயா, மாட்டாயா?

பா. அப்பொழுதே ஒப்புக்கொண்டேன்.

கி. அப் பெண்மணியிடமோ ?—வெட்கமின்றி—

பா. விளையாட் டப்புற மிருக்கட்டும். காட்டைவிட்டு வெளியே போவோம் முன்பு, புறப்படு.

கி யார் விதி யாரைவிட்டது! வா போவோம்.

[போகிருர்கள்.]

முதல் அங்கம் முடிகிறது.

இரண்டாம் அங்கம்

இடம்—அரச குமாரியின் நந்தவனம். காலம்—மாலை.

பத்மினி ஒரு பக்கமாகவும், வேதவதி ஒரு பக்கமாகவும்
ஒருவரை யொருவர் பாராது வந்து,
ஒரு செடியின் இருபுறத்திலு முள்ள ஆசனத்தில்
உட்காருகின்றனர்.

இருவரும் பெரும் பாபம் ஏதோ முன் செய்தே இப்பொழுது
பெண் ஜென்மமாய்ப் பிறந்திருக்க வேண்டும் நான் !

கண்ணிகள்—ராகமாலிகை.

ப. மக்களில்லையென்று மகநூறு யாணிழைத்துத்
தக்க பெண்ணைப் பெற்றுத் தயங்கிட லானேனே.

வே. பெண்ணாய்ப் பிறந்து நான் பெற்ற பல னிதுவோ
எண்ணத்தின்படி யென்னை ஏனோ விடா ரந்தோ.

ப. பக்கத் தரசியர் பலர் நகைக்க லாச்சே
இக்கட்டி லெண்ணியே இப்படி விடுவாளோ.

வே. புண்ணாக என்நெஞ்சம் புவியில் நான் மணப்பதோ
கண்ணாளனை விட்டுக் காதக னொருவனை.

ப. பெற்றோரிடம் பெண் பிடிவாதம் செய்வதோ
கற்றாளே காரிகை காரண வாதாட.

வே. பெற்றோரே என்றனைப் பீடிங்க னழிப்பதோ
உற்றோரே கூற்றானால் உதவுவார் யாவரே.

ப. சிற்றறி வீதாகும் சீரியோர் நீதியைக்
குற்றம் கூறலாமே குழவி யறியுமோ.

வே. பற்றொன்று மில்லாத பாதகர் கைப் பட்டுநான்
உற்று நடுங்கவோ உன்மத்த மிதினுண்டோ.

ப. மணமென்ப தீதென்று மாதவ ளறியாளே
குணமொன் றறியாத கோதைபென் செய்குவாள்.

வே. மணமென்ப தின்னதென்று மாதாவே யறியாது
கணமு மோயாதென்னைக் கவலையில் விடலாமோ.

ப. மதன் மலர்வாளிகள் மா திவளை வெல்ல
கத மிலாதாகிய காரண மேதோ.

வே. மனதுக் கினியநாதன் மணப்ப தசாத்தியம்
மங்கையாய் மடிவதே மாதென் விதியாகும்.

ப. இதமாகவே நூறு எடுத்தெடுத் துரைத்தேனே
பதம் பணியாக் குறை பாரினி லொன்றுதான்.

வே. தினமுமித் தொல்லையே தெரிவையென் பாக்கியம்
இனிமே லுயிருடன் இருப்பதென் சிலாக்கியம்.

ப. ஐயோ ! இதற் கென்ன செய்வ தினி நான் ? மஹாராஜா வோ மிகவும் கோபங்கொண் டிருக்கிறார். எப்படியும் சீக்கிரம் விவாகம் செய்விக்கவேண்டு மென்கிறார். இந்தப் பெண்ணோ ஒரே பிடிவாதமாய் விவாகமே வேண்டா மென்கிறாள். என்ன காலம் ! என்ன காலம் ! எங்கள் இளம் பருவத்தில் விவாகமென்றால் எவ்வளவோ விருப்பங்கொண் டிருப்போம். வேதவதி விவாக மென்கிற பேச்சைக் கேட்டால் வெறுக்கிறாள் ! ஒரு புறம் கணவன் ! ஒருபுறம் பெண் ! இந்தத் தர்ம சங்கடத்திற் கென்ன செய்வது ?

வே. ஐயோ ! நமது பெற்றோர் வயதில் மூத்தோராயினும் இது தெரியாம லிருக்கிறதே ! இவர்கள் மனதுக் கினிமையாக நான் எப்படி மணம் புரிவது ? விவாகஞ் செய்துகொண்டு சுகதுக்கங்கள் அனுபவிக்கவேண்டியவள் நானன்றோ ? காஸ்மீர தேசத்து அரசிளங் குமரனை மணக்கவிடப் போகிறதில்லை என் தந்தையார்; அவ்வார்த்தையைக் கேட்கினும் என்மீது அடங்காச் சினங் கொள்வார். மணந்தால் என் மனத்துக்கினிய நாதனை மணப்பேன். இல்லாவிடின் எனக்கு விவாகமே வேண்டாம் ! நான் என்ன அவர்களை நிர்ப்பந்திக்கிறேனா என் காதலருக் கென்னை

மணம் புரியும்படி? அவர்கள் ஏன் என்னை மணம் புரியும்படி நிர்ப்பந்திக்கவேண்டும்? ஒருபுறம் தந்தை தாயர்! ஒருபுறம் சாமளாவும் துயர்! இந்தத் தர்ம சங்கடத்திற் கென்ன செய்வது?—

இருவரும். இனி யோசிப்பதிற் பயனில்லை. கடைசி முறை போய் கேட்டுப் பார்ப்போம்—

[எழுந்து ஒருவரை யொருவர் சந்திக்கின்றனர்.]

ப. வேதவதி!

வே. அம்மா!

ப. உன்னைத்தான் தேடிக்கொண்டு வந்தேன்.

வே. நானும் உம்மையே நாடி வந்தேன்.

ப. கண்ணே, இப்படி உட்கார், நான் சொல்வதைக் கேள். என் கண்ணல்ல நீ! உனக்கோ வயதாகிவிட்டது. இனி விவாகமின்றி யிருப்பது நியாய மல்லவே! எத்தனை காலந்தா னிப்படி தனியா யிருப்பது நீ? விவாக மென்கிற பேச்சைக் கேட்கினும் ஏன் வெறுப்படைகிறாய் நீ?

வே. அம்மா, நான் சொல்வதையும் சற்று கேளுமே. என்னைப் பெற்ற தாயல்ல தாம்! என்மீது கோபியாதீர். எனக்கு விவாகத்தின்மீது விருப்பமே யில்லை. அப்படி யிருக்க நான் விவாகஞ் செய்துகொண் டென்ன பயன்? எப்பொழுதும் நான் கன்னிகையாகவே இருந்துவிட்டால் என்ன தவ றிதில்?

ப. ஐயோ! நீ அறியாப் பெண், உனக் கொன்றும் தெரியாது. இது க்ஷத்ரியர்களாகிய நமது குல ஒழுக்க மன்று, நான்கு பெயருக்கு நகைப்பாகும்.

வே. நான்தான் அறியாப் பெண், ஒன்றும் தெரியாதென்கிறீர்களே! அப்படியே இருக்கட்டும். நான் அறிந்தவளாகியபின் விவாகத்தைப்பற்றி யோசிப்போம். இப்போது அவசரமென்ன?

ப. அப்படி யல்ல. உன் பிதாவுக்கோ வயதாகி வருகிறது எங்களுக்கு உன்னை யன்றி வேறு சந்ததி யில்லை என்பது நீ அறியாத விஷயமன்றே. உன் பிதாவோ உனக்கு விரைவில் மணம் செய்வித்து துறவறம் மேற்கொள்ள எண்ணுகிறார். உன் தந்தை மனம் கோணச் செய்யலாமோ நீ? இவ் வைம்பத்தாறு தேசத்து ராஜ குமாரர்களில் யாரை வேண்டினும் உனக்கு மணஞ் செய்விக்கிறேன்.

வே. அது அசாத்தியம்.

ப. எது அசாத்தியம்? கண்ணே, மனத்தில் எதோ நினைத்துக் கொண்டிருக்கிறாய். இன்ன தென்று சொல் என்னிடம்.

வே. ஒன்று மில்லை யம்மா. எனக்குத் தக்க புருஷனாக ஒரு ராஜகுமாரனும் காணப்படவில்லை. ஆகவே எனக்கு விவாகமே வேண்டா மென்கிறேன்.

ப. நீ என்ன, எல்லா அரச குமாரர்களையும் கண்டிருக்கிறாயா என்ன? இதோ நம்முடன் சம்பந்தம் செய்தற்குத் தக்க விவாகத்திற் குரிய அரசிளங் குமாரர்களின் படங்களெல்லாம் வரவழைத்திருக்கிறேன். அவற்றைப் பார்த்து உன் கண்ணுக் கினிய புருஷனைக் கூறு. உன் பிதாவிடம் சொல்லி அப் புருஷனுக்கே உன்னை மணஞ் செய்விக்கிறேன்.

வே. ஐயோ! அம்மா, உமக்கே னிந்தக் கஷ்டம்? இதில் பிரயோஜன மில்லை, யம்மணி.

ப. அப்படி யல்ல, நான் சொல்வதைக் கேள்?—யார் அங்கே?

ஜகஜ்ஜாலன் வருகிறான்.

ஜ. அம்மணி!

ப. நீதான் சரி. அந்தப்புரத்தில் வசந்த மண்டபத்தில் ராஜ குமாரர்களின் படங்களெல்லாம் வைத்திருக்கிறது. அப்படியே ஜாக்கிரதையாய் எடுத்துக்கொண்டுவா விரைவில்.

ஜ. அப்படியே, இதோ. [விரைந்து போகிறான்.]

வே. அம்மா, அப்படித்தான் கோரினேன், அதன்படி எனக்கு விவாகம் செய்வித்தீர்கள், அந்த ராஜகுமாரன் என்மீது காதலோடு வாழ்வா ரென்பது என்ன நிச்சய மம்மணி? என் சுகத்தை யல்லவோ தாம் எப்பொழுதும் கருத வேண்டும்.

ஒரு கட்டு படங்களைக் கையி லெடுத்துக் கொண்டு
மறுபடியும் ஜகஜ்ஜாலன் வருகிறான்.

ஜ. அப்பா! அப்பா!—

ப. ஜகஜ்ஜாலா. இதுவா பளுவாயிருக்கிறது உனக்கு?

ஜ. என்ன, அம்மணி, இத்தனை ராஜ குமாரர்களையும் சுமப்ப தென்றால் இலேசா!

ப. கொடு இப்படி.—இதோ பார், வேதவதி.

ராகம்—சௌராஷ்டிரம்.

அங்க தேசாதிபதி, அவனிக்கோர் மகிபதி
பங்கமொன்றிலா வீரன், பாருளோர்க் கதி சூரன்.

வே. முகத்தை நோக்கு மம்மா மூர்க்க குணமுடையான்
ஜெகத்தினி லிவனிடஞ் சிக்கியா னழிவதோ?

ஜ. அடடா! கொஞ்சம் காட்டுங்க ளம்மணி! வாஸ்தவம்! இப்பொழுதே இவ்வளவு முடுக்கா யிருக்கிறவர் கலியாண மாப்பிள்ளையானால் கேட்கவேண்டிய தில்லை. அப்பா! எனக்கே பயமா யிருக்கிறது.

ப. இதோ பார்!—
மகதத்து மன்னன் இவன், மண்டலேஸ்வரனவான்
பகதத்த னெப்பான் பாரினி லிவன் தான்.

வே. ஐயோ!
உடலே பெருத்திருக்கும் உன்மத்த னிவனையோ
அடலே றனையனென அறைந்திட்டீர் அம்மணி!

ஜ. எதோ ! எதோ ! சரி ! பளுவெல்லாம் இந்த ஐயாதான்—என்னைப்போ லிருக்கிறார், இவரது ஒரு காலுக்கு எட்டு பெயர், குறைந்த பட்சம் ஐம்பது பெயர், வேண்டும்—தூக்கிக்கொண்டுபோக.

ப. ஜகஜ்ஜாலா, விளையாடாதே இப்பொழுது.

ஜ. இல்லை, யம்மணி; உண்மையைக் கூறினேன்.

ப. ஆ ! இதைப் பார் !

மச்சதேசத்து மன்னன் மாரப் பிராதபன்
இச்சகத்தில் இவன் எழிலுக் கிணையில்லையே.

வே. ஆமாம் !

கண்ணினை நோக்கிடும் கருணையில் காதகன்
மண்ணிலே மரித்தாலும் மாலையா னிடேனே !

ஜ. ஆஹா !—அம்மணி ! அதுவு மல்லாமல் ஐயாவுக்கொரு கண் தா னிருக்கிறதுபோல் தெரிகிறது.

ப. சே ! இன்னொரு கண் பின்புற மிருப்பதாகப் பாவனை படத்தில்.

ஜ, ஓகோ ! சரிதான், புத்தியும்கூடப் பின்புறமாக இருப்ப தாகப் பாவனை !

ப. இதோபார், வங்கத்து மன்னன்—கிஷ்கிந்தைக் காவலன்—சோழராஜன்—காம்பிலி யரசன்—

வே. ஐயோ ! இதெல்லா மெதற் கம்மணி ? இவைகளைப் பார்க்கப் பார்க்க எனக்குத் தலை நோ யெடுக்கிறது.

ப. அப்படி யல்ல; நீயாக இவைகளை யெல்லாம் பார்த்துச் சொல்.

[மற்றவைகளை யெல்லாம் வேத வதியிடம் கொடுக்க அவைகளை அவள் கீழே எறிந்து விடு கிறாள்.]

ஜ. ஒரு கை விசுக்கினால் எத்தனை ராஜ குமாரர்கள் கீழே விழுந்தார்கள் !

விக்கிரமபாஹு வருகிறார்.

வி. வேதவதி!

ப. பிராணநாதா! கோபித்துக் கொள்ளாதீர்! ஏதோ அறியாமையாற் செய்தாள்—

வி. அறியாமை இதற்கு மாத்திரம்! அடம் செய்வதிற் கில்லையோ? அறியாக் குழந்தை யென்று பொறுத்துப் பொறுத்தாயிற்று. அரை க்ஷணமும் பொறுக்கமாட்டேன் இனி. அயல் நாட் டரசர்களுக்கெல்லாம் அவமான மாகிறது பெண் போன வழி போகிறானென்று! தினம் வந்து கேட்கும் அரசர்களுக்கெல்லாம் எத்தனை காலம் போக்குச் சொல்லிக்கொண்டு வருகிறது?— இதோ அஸ்தினபுரத்துமன்னன் தன் இளங் குமாரனுக்கு உன்னை மணம் புரியக் கேட் டனுப்பியிருக்கிறார். என்ன சொல்கிறாய்?

வே. அண்ணா! அண்ணா! அந்த ராஜகுமாரன் வேண்டாம்! வேண்டாம்! அவருக்கு முன்பே விவாகமா யிருக்கிறதே! நான் அவர் இரண்டாவது மனைவியாகி வாழ்வதோ?

ப. பிராணநாதா, எத்தனையோ ராஜகுமாரர்கள் நமது பெண்ணை வரிக்க நமது ஒரே புதல்வி பட்டமஹிஷியாகாது இரண்டாந் தார மாவதோ? இது எனக்கு இஷ்ட மில்லை.

வி. எனக்கும் இஷ்ட மில்லை. இந்த ராஜ குமாரனையே மணம் செய்து கொள்ளென்று பலவந்திக்க வில்லை. எப்படியாவது உனக்கு விவாகம் செய்விக்கவேண்டும் விரைவில் என்பதே என் கோரிக்கை; வேதவதி, என்ன சொல்கிறாய்? நான் ஐம்பத்தாறு தேசத் தரசர்களையும் வரவழைக்கிறேன். யார் உனக்கு இஷ்டமோ அந்த ராஜகுமாரனை உனக்கு மணம் செய்விக்கிறேன். விவாகமே வேண்டாமென்று பிடிவாதம் செய்யாதே; என்ன சொல்லுகிறாய்?

வே. அண்ணா, நான் விவாகமே வேண்டாமென்று கூறவில்லை. எனக் கெப்பொழுது விருப்பமோ அப்பொழுது விவா

கஞ் செய்துகொள்ள விடை யளியும்.

[பிதாவின் பாதத்திற் பணிகிருள்.]

வி. விடு என்னை, தீண்டாதே! வேண்ட வேண்டத் தாண்டவ மாடுகிருயா? பெண்களுக்குக் கல்வி பயிற்றுவிக்கும் பேதமை இதுதான்! சரி! உன் பிடிவாதத்தைப் போக்கும் விதத்தில் போக்கவேண்டும். நாளைத்தினம் உன்னை எவன் வந்து கேட்டபோதிலும், கூனு யிருந்தாலும் சரி, குருடா யிருந்தாலும் சரி, குஷ்டனு யிருந்தாலும் சரி, அவனுக் குன்னை மணம் செய்விக்கிறேன் பார்!

ஜ. ஆனல் எத்தனை ராஜ குமாரர்கள் இருக்கிற கண்ணையும் குத்திக்கொண்டு குருடாய் வருவார்கள் நாளைக்கு!

வி. உன்னை யார் கேட்டது? ஜகஜ்ஜாலா, உனக் கெத்தனை முறை சொல்லி யிருக்கிறேன் நான்?

ஜ. அநேகம் தரம்—கோபம் கூடாதென்று!—ஆ! இதோ வந்தேன்! [விரைந்து போகிருன்.]

ப. பிராணநாதா, அவள் பிடிவாதம்செய்கிருளென்று தாமும் பிடிவாதம் செய்வதா? யாராவது பெற்ற பெண்ணை—

வி. சரி! நீ யெனக்குப் புத்தி சொல்ல வருகிருயோ! எல்லாம் உன்னல் வருவது! உன் புத்திதான் உன் பெண்ணுக்கும் படிந்திருக்கிறது! உன் விவாகத்திற்கு முன் நீ எவ்வளவு பிடிவாதம் செய்தாய்?—அந்தக் குணம் படிந்தது உன் பெண்ணுக்கும்!—

ப. உம்! அப்படி யிருந்தபடியினல்தான் உம்மை மணம் புரிந்தேன். இல்லாவிட்டால் என் தந்தை கூறியபடி—

வி. அதெல்லாம் உன்னைக் கேட்கவில்லை இப்பொழுது.—இதோ கடைசி வார்த்தை. வேதவதி! உன் பிடிவாதத்தை விட்டு என் சொல்லுக் கிணங்காவிட்டால் நாளை என் சொற்படி முடிப்பேன், ஞாபக மிருக்கட்டும்.

[போகிருர்.]

ப. வேதவதி, என்ன என்ன கஷ்டத்திற்குக் கொண்டு வருகிறாய் பார்.

வே. அதிருக்கட்டும் அம்மா, நீங்கள்கூட உங்கள் கலியாண காலத்தில் இப்படித்தான் பிடிவாதம் செய்தீரோ? அதென்ன சமாசாரம்? எனக்கு விளங்கச் சொல்லுங்களம்மா.

ப. ஐஐயோ! போதாக் குறைக்கு அது ஒன்று? சும்மா இராது அதையும் உனக்குச் சொல்லிவிட்டாரே!— ஒன்றுமில்லை, நான் சொல்வதைக் கேள்—

வே. உம், உம்! அது சொன்னால்தான்—

ப. ஒன்றுமில்லை, என் பாட்டனார் சாளுவதேசத் தரசனுக்கு மணம் செய்யவேண்டுமென்று பலவந்தம் செய்தனர், நான் ஒரே பிடிவாதமாய் உன் தகப்பனாரையே மணம் செய்துகொள்ள வேண்டுமென்று என் எண்ணப்படியே முடித்தேன், அவ்வளவே—

வே. நினைத்தேன்!—அம்மா, நீங்களே அப்படிச் செய்து விட்டு என்னைப் பலவந்திக்கலாமா தாங்கள்?

ப. நானென்ன, விவாகமே வேண்டாமென்று சொன்னேன் அப்பொழுது?

வே. நானென்ன, விவாகமே வேண்டாமென்று சொன்னேன் இப்பொழுது?

ப. ஆனால் எப்பொழுது நீ விவாகஞ் செய்துகொள்வது? நாங்களெல்லாம் இறந்த பிறகோ? நாங்கள் கண்டு கண் குளிரக் கூடாதென்று இத்தனை பிடிவாதம் செய்கிறாய்? உன்பேரில் தவறில்லை. உன் மதியை மயக்க ஒரு மன்னன் பிறந்திராமற் போகான். அவன் வந்து நேர்ப்படுவானாயின் பிறகு நீயாக வந்து 'எனக்கு விவாகஞ் செய்யுங்கள், விவாகஞ் செய்யுங்கள்' என்று வேண்டுவாய அப்பொழுது நான் பிடிவாதம் செய்யவேண்டும். அப்பொழுது தெரியு முனக்கு!

ஜகஜ்ஜாலன் மறுபடியும் வருகிறான்.

ஜ. அம்மா, தங்களை மகாராஜா அழைத்துவரச் சொன்னார்.

ப. இதோ வந்தேன்.—வேதவதி, இதோ, நான் போய் சமாதானப்படுத்துகிறேன் மஹாராஜாவை, இதற்குள் நான் சொன்னபடி தீர்மானம் செய், தெரியுமா? [போகிறாள்.]

வே. உம்!—ஜகஜ்ஜாலா, ஏன் மகாராஜா என் அன்னையை அழைத்தார்கள்? தெரியுமா உனக்கு?

ஜ. யாரோ ஒரு ராஜகுமாரன் வந்திருக்கிறாற்போ லிருக்கிறது உம்மை விவாகத்திற்காகக் கேட்க—

வே. ஐயோ! நினைத்தேன்! நினைத்தேன்! யார் அது? யார் அது?

ஜ. யாரோ தெரியா தம்மணி எனக்கு.

வே. எப்படி யிருக்கிறா ரவர், அதையாவது சொல்.

ஜ. என்னமா யிருக்கிறா ரென்றால்—ஒரு கண் பொட்டை! இன்னொரு கண்ணோ யில்லை! ஒரு கை கொஞ்சம் நொண்டி, மற்றொரு கை யுத்தத்தில் வெட்டுண்டதாம்! ஒரு கால் முடம்! இன்னொரு காலுக்குப் பதிலாய் கட்டை யூன்றி நடக்கிறார்! தேஜஸ் என்னமோ சூரியனும் சந்திரனும் கலந்த மாதிரியா யிருக்கிறது! முகத்தைப் பார்த்தால் கிஷ்கிந்தை அரசனைப்போல் தோன்றுகிறது!—

வே. ஜகஜ்ஜாலா! என்னைப் பரிகாசம் பண்ணுகிறாயா நீ! போ நீ, இங்கு நில்லாதே!

ஜ. உத்தரவு.—கேட்டதைச் சொன்னேன்.—கோபம் வேண்டாம். [போகிறான்.]

வே. ஐயோ! பாரோர் நகைக்கப் பாவையாய்ப் பிறந்தேனோ பாவி நான்? ஜகஜ்ஜாலன் கூறியது குறும்பா யிருந்த போதிலும், என் மனத்துக் கினிய மாரனை மணக்காது வேறொரு மன்னனை மனத்திலும் எண்ணுவ தெப்படி?

பிதாவோ பிடிவாத முடையவர்!— ஐயோ! பிராண நாதா! நீர் காஸ்மீர மன்னனுப் என் குவலயத் துதித் தீர்! வேறெந்த நாட்டரசனுகவாவது பிறந்திருக்கலாகா தா? அல்லது நானுவது பெண்ணுகப் பிறவாதிருக்க லாகாதா? பெண்ணுகப் பிறந்தாலும் உமது அழகிய உருவை அறியாதிருக்க லாகாதா? சித்தஜனை வென்ற உமது வடிவழகை நான் கண்டபின் வேறொரு புருஷனை நான் சிந்திக்கவு மாகவில்லையே! பிராணநாதா! பிராண நாதா!—ஐயோ! என் கருத்தாளும் காதலரின் கலைக் காலின் கவினுகாதே என்னைக் கடிமணம் புரிய நாடும் இதோ கவிழ்ந்து கிடக்கும் காதகர்களின் ரூபம்!

[கின்னரன் பாஸ்கரன் உருவத் துடன் படுத்துறங்குவதுபோல வேதவதி கண்ணெதிரில் தோற்றுகிறுன்.]

ஆ! இதென்ன விந்தை! சித்தப்பிரமையா? உருவெளித் தோற்றமா? அல்லது கனவு காண்கிறேனே?—சற்று முன்பாகக் காணும், திடீரென்று என் கண்ணெதிர்ப் பட்ட தேது? இதென்ன மாயமோ? என் பூஜா பலமோ? என் விஷ்ட தேவதையின் செய்கையோ, இங் ஙனம் என் காதலனைக் கண்ணாரக் காணச் செய்தது?—

[தன்னிடம் ஒளித்துவைத்திருந்த பாஸ்கரன் படத்தை வெளியே எடுத்து]

ஐயோ! எப் பாதகன் இப் படத்தில் இவர் உருவத்தை வரைந்தான்? கண்ணைக் கவரும் காதலன் கவினில் காற் பங் கில்லையே இது! சீ! இதைப் பார்ப்பது பாதகம்!

[அப் படத்தைக் கீழே எறிந்து விடுகிருள்.]

அயர்ந்து நித்திரை செய்கிருர்!—ஐயோ! இவரைப் பிதா இங்கு கண்டால் பெருந் தீங்குக் கிடமாகுமே! நான் என்ன செய்வது? பிதா திடீரென்று இங்கு வந்துவிட் டால்? ஐயோ! இவரை எழுப்புவோமா? எப்படி எழுப் புவது?—எனக்கு நாணமா யிருக்கிறது! ஐயோ! காத

லொருபுறம் வலிக்கிறதே !—எப்படியும் என் பிராண நாதரை இவ் வாபத்தினின்றும் காப்பாற்ற வேண்டும். என்ன செய்வது ? அவர் விழித்தால் ஏதாவது தவருக எண்ணுவாரோ ?—எண்ணமாட்டார் ! அவர் உயிரைக் காப்பாற்றும் பொருட்டு தானே செய்கிறேம்.

[மெல்ல கையை நொடிக்கிருள்.]

கேட்டிராது [பாட்டு பாடுகிருள்.]

இதிலும் எழுந்திருக்கவில்லையே !

[ஒரு புஷ்பத்தை அவன் முகத்தின்மீது எறிகிருள்.]

ஐயோ ! எதனுலும் இவர் நித்திரை நீங்கவில்லையே !— ஆ ! அதோ பேச்சரவம் கேட்கிறது ! பிதா வருகிருற்போலிருக்கிறதே ! எப்படியும் எழுப்பவேண்டும். தீண்டியாவது எழுப்புவோம் !

[கின்னரன் இருக்குமிடம் விரைந்து செல்ல அவன் மறைந்து போகிருன்.]

ஆ ! பிராணநாதா ! பிராணநாதா !—எனக்கென்ன பயித்தியம் பிடித்திருக்கிறதா என்ன ! எங்கே என் பிராண நாதர் ? சற்று முன்பாக என் கண்ணூரக் கண்டேனே ! எங்கு மறைந்தார் இதற்குள்ளாக ? எனக் கொன்றும் தோன்றவில்லை. நானென்ன கனவு கண்டேனே ? இல்லை ! இல்லை ! என் கண்ணூரக் கண்டது எப்படி கனவா யிருக்கும் ?—காதலா ! காதலா ! என் பேதை மனத்தைத் தாம் இவ்வாறு பரிசோதிக்கிறீரோ ? இதென்ன கண்கட்டி மாயம் ? எப்படி வந்தார் ? எப்படிச் சென்ருர் ?

[தேடுகிருள்.]

ஜகஜ்ஜாலன் மறுபடியும் வருகிருன்.

ஜ. [கீழே கிடக்கும் பாஸ்கரன் படத்தைக் கையிலெடுத்துக்கொண்டு] ஓ !—

வே. ஜகஜ்ஜாலா !—

ஜ. அம்மணி !

வே. உம்—நீ இந் நேரம் எங்கிருந்தாய்?

ஜ. பூமியின்பேரில்.

வே. விளையாட் டொருபுற மிருக்கட்டும்.—ஜகஜ்ஜாலா, நான் ஒன்று கேட்கிறேன், உண்மையைக் கூறு.

ஜ. நான் ஏதாவது பொய்—

வே. கூறமாட்டாய் தெரியுமே எனக்கு.

ஜ உம்!—

வே. ஜகஜ்ஜாலா, சற்று முன்பாக இங்கு யாராவது வந்தார்களா?—தெரியுமா உனக்கு?

ஜ. உம்!—ஜோஸ்யம் பார்த்துச் சொல்லுகிறேன்.

வே. விளையாடாதே மறுபடியும்—

ஜ. விளையாடுகிறேனோ? எனக் கென்ன ஜோஸ்யம் தெரியாதா? அமிர்தலிங்க ஜோஸ்யர் சிஷ்யனும் நானும் ஒரே நாள் பிறக்கவில்லையா? உம்!—

வே. சீ!—யாராவது நமது உத்யானவனத்திற்குள் சற்றுமுன் பாக வந்தார்களா தெரியுமா உனக்கு?

ஜ. உம்—ஒரு ராஜகுமாரர் தவிர வேறு யாவரும் வரவில்லையம்மணி?

வே. ஆம், ஆம். எங்கே அவர்? எங்கே அவர்?

ஜ. ஆ! என் ஜோஸ்யத்தை நம்பமாட்டேன் என்று சொன்னீர்களே, இப்பொழுது என்ன சொல்லுகிறீர்கள்?—

வே. ஆமாம், அந்த ராஜகுமாரர் எப்படி யிருப்பார் சொல், பார்ப்போம்.

ஜ. சொல்லட்டுமா?

வே. சொல், பார்ப்போம்.

ஜ. "ஒரு கண் பொட்டை, மற்றொரு கண்ணோ யில்லை."—

வே. ஜகஜ்ஜாலா! என்னை எளனம் செய்கிறாயா? நான் மஹாராஜாவிடம் போய்ச் சொல்லுகிறேன்!—

ஜ. அம்மணி, அவ்வளவு கோபம் வேண்டாம்.—இதோ ஜோஸ்யம் பார்த்துச் சொல்கிறேன், கேளும்.—இடது பக்கம் கன்னத்திற் சிறு மருள் இருக்கிறது.

வே. ஆம், ஆம்!

ஜ. ஜோஸ்யம்! ஜோஸ்யம்!—வலது கையில் ஒரு வீர கங்கணம் அணிந்திருப்பார்.—

வே. உண்மையே! உண்மையே! எங்கே அவர்? எங்கு சென்ருர்? உனக்கெப்படியும் தெரியும், ஜகஜ்ஜாலா, உனக்கு நூறு பொன் தருகிறேன் சொல்லிவிடு.

ஜ. அவர் இருக்கிற இடமா?—இதென்ன கஷ்ட காலம்!—அது தெரியா தம்மணி!

வே. அதெல்லாம் உதவாது.—இவ்வளவு சொன்னவனுக்கு அது தெரியாமலிருக்குமா? ஜோஸ்யம் பார்த்துச் சொல்.

ஜ. ஓகோ! அம்மணி! எனக்கு ஜோஸ்யமும் தெரியாது, ஒன்றும் தெரியாது.

வே. அதெல்லாம் உதவாது, பொய் பேசாதே.

ஜ. ஐஐயோ! எனக்கொன்றும் தெரியாதே.

வே உம் உம்! நீதான் அவரை எங்கேயோ அழைத்துக் கொண்டு போயிருக்கவேண்டும். இல்லாவிட்டால் ஒளித்துவைத்திருக்கவேண்டும்.

ஜ. இதென்ன பயித்தியமாயிருக்கிறது!

வே. நீ அவரை இப்பொழுது அழைத்து வராவிட்டால் உன்னை விடமாட்டேன்.

ஜ. அம்மணி, என்னை விடாவிட்டால் நானெப்படி அவரை அழைத்து வருவது?

வே. ஆம், ஆம், போய் அழைத்து வா, விரைவில்.

ஜ. ஆம், ஆம். இதோ விரைவில் அழைத்து வருகிறேன்—உம்முடைய பிதாவை!

[விரைந்து போகிறான், போகும் பொழுது படம் நழுகி கீழே விழுகிறது.]

வே. பிராணநாதர் வருவார்!—வருவார் விரைவில்!—வந்தால் என்ன சொல்வார் என்னிடம்?—நா னென்ன பேசுவது அவருடன்? எனக்கு நாணமா யிருக்கிறது! நான் மறைந்துக்கொள்ளலாமா?—மறைந்துகொண்டால் அவர் வந்தவுடன் நான் காணேனென்று போய்விட்டால்? அது உதவாது. நாம் பேசாதிருப்போம். அவராகப் பேசட்டும்.—இப்படித் திரும்பிக்கொண்டு தலை குனிந்து நிற்கிறேன். அவர் அருகில் வந்தவுடன் நாணத்தால் முகத்தை திருப்பிக்கொள்வேன்—அவர் தன் அழகிய கரத்தால் என் முகத்தை மெல்லத் திருப்புவார். நான் என் காதலனைக் கடைக் கண்ணாற் பார்ப்பேன். —அவர் எனக்கு முத்த மிடுவார்!—

பின்புறமாக பத்மினி மெல்ல வந்து நிற்கிறாள்.

ப. பிறகு?—பிறகு என்ன செய்வார்?

வே. உம்! போங்கள் அம்மா!

ப. ஆம், நான் போகவேண்டியதுதா னினி. நீதான் ஒரு பிராணநாதனைக் கண்டுபிடித்துவிட்டாயே!—

வே. என்ன அம்மா, நீங்களும் ஏளனம் செய்கிறீர்கள்?

ப. நான் ஏளனம் செய்யவில்லை. சமாசாரம் என்ன? ஏது இதற்குள் புத்தி மாறியது? யாரைப்பற்றி பேசிக்கொண்டிருந்தாய்? எந்த ராஜகுமாரன் உன் முகத்தைத் திருப்பி முத்தமிடப்போகின்றவர்?

வே. போங்கள் அம்மணி!

ப. இனி உதவுமா? கண்டுபிடித்துவிட்டேன்! எந்த ராஜகுமாரன்மீது காதல் கொண் டிருக்கிறாய்? சொல் என்

ணிடம், நாணப்படாதே. எப்படியும் அவனுக்கே உன்னை மணம் புரிவிக்கிறேன்.

வே. அப்படி சத்தியம் செய்துகொடுங்கள்.

ப. அப்படியே ஆகட்டும். வேதவதி, நீ விவாகம் செய்து கொண்டால் போதுமென்று கோரிக்கொண் டிருக்கி ருேமே உன் பிதாவும் நானும், இதற் கென்ன தடை கூறப்போகிருேம் நீயாகக் கேட்கும்பொழுது? எந்த ராஜகுமாரன்மீது காதல் கொண் டிருக்கிருய்? என்னிடம் கூற வெட்கப்படுவானேன்?

வே. [பாஸ்கரன் படத்தை எடுத்துத் தன் தாயாரிடம் கொடுத்து] இதோ என் பிராணநாதர்!—

ப. கண்ணே, உன் அழகுக் கேற்ற அரசிளங் குமாரனையே வரித்தாய்! மிகவும் சந்தோஷம்! இதேது படம்? இது மற்றவைகளுட னிருக்க நான் கண்டதில்லையே! யார் இந்த ராஜகுமாரன் தெரியுமா உனக்கு?

வே. காஸ்மீர மன்னன் புதல்வன்—

ப. ஆ! ஆ! ஐயோ, வேதவதி!—காஸ்மீர மன்னன் புதல் வனு?

வே. ஆம்—அம்மா, நீங்கள் சத்தியம்செய்து கொடுத்திருப் பதை மறக்கலாகாது—

ப. ஐயோ! வேதவதி!

ராகம்—முகாரி

ஆகாத விடந்தன்னி லேயோநீ காதல்கொண்டாய்
சாகாத சச்சரவுன் தந்தையவர் கொண்டுடையார்
போகாத விடந்தன்னிற் போயிடுமோ வுன்னிதய
நோகாதுன் மனந் தன்னை நுண்ணிடையே மாற்றுவையே.

வே. அம்மா, என்ன ஒன்றும் அறியாதவர்போல் பேசுகிறீரே! காதல் ஒரு புருஷன்மேற் கொண்டபின் கடவுள் வந்தாலும் மனம் மாறுமோ? அம்மா, என் னுயிரை

உம்து கையில் ஒப்புவித்தேன், என் பிராணநாதருக் கென்னை விவாகஞ்செய்து கொடுத்தால் உயிர் வாழ் வேன். இல்லாவிடின் உயிர் துறப்பேன். இது நிச்சயம்!

ப. வேதவதி, ஐயோ! எனக் கொரு ஆட்சேபனையு மில்லை. ஆயினும் உன் பிதாவின் மனத்தை யார் திருப்புவது? அவரோ அந்த அரசிளங் குமாரன்மீது ஜன்மத்துவேஷம் வைத்து எப்படியாவது அவனைக் கொல்ல நிச்சயம் செய் திருக்கிறாரே!

வி, [உள்ளிருந்து] ஆ! அப்படியா சமாசாரம்!

வே அம்மா! அம்மா! பிதா வருகிறார் கோபமாய்! இந்த ஜகஜ்ஜாலன் ஏதாவது சொல்லிவிட்டானோ என்னவோ! அம்மா! நீர்தான் என்னைக் காப்பாற்றவேண்டும், என் னுயிர் உமது கையி லிருக்கிறது!

[பிரிந்து நிற்கிறார்கள்.]

மறுபடியும் விக்கிரமபாஹு வருகிறார்.

அவர் பின்னால் உருவிய கத்தியுடன் ஜகஜ்ஜாலன் வருகிறான்.

வி. எங்கே அப் பாதகன்? எங்கே அவன், ஜகஜ்ஜாலா?—

ஜ. இங்கேதான் வந்திருக்கவேண்டும்! நேராகக் கேளும் உமது மகளை, சமாசாரம் என்ன வென்று.

வி. வேதவதி! நடந்த சமாசாரம் என்ன, உண்மையைக் கூறு கிறாயா என்ன இப்பொழுது?

வே. அண்ணா, என்ன சமாசாரம்?

ப. பிராணநாதா, இதென்ன சாகசம்? நான் போய் மெல்லப் பேசி நமது குழந்தை மனத்தைத் திருப்பி வருகிறேன், சற்று வராமலிரும், என்று சொல்லி வந்தேனே! இதற் குள்ளாக உம்மை யார் வரச்சொன்னது? இப்பொழுது தான் சற்று இணங்கி வந்தாள்—

வி. அதெல்லா மிருக்கட்டும், பாஸ்கரன் இங்கு வந்தது உண்மைதானோ?

ப. யார்? யார்?

வே. யார் அம்மணி அது?

ஜ. யார் அம்மணி அது? ஐயோ பாபம்!

வி. வேதவதி! வாஸ்தவத்தைக் கூறு, காஸ்மீர மன்னன் புதல்வன் இங்கு வந்தானு?

வே. யார் அது காஸ்மீர மன்னன் புதல்வன்?—அம்மா! பிதா ஏன் என்னிடம் இவ்வாறு கோபமாய்ப் பேசுகிருர்? இதற்குத்தான் எனக்கு விவாகமே வேண்டாமென்றது. எனக்கு வேண்டாம் போங்கள்!

[ஒருபுறமாகப் போய் நிற்கிருள்.]

ப. பிராணநாதா! இதென்ன? இப்படித்தானே எல்லாவற்றையும் கெடுக்கிறீர்கள். அவள் சற்று முன்பாக நாம் சொல்லுகிறபடி விவாகஞ் செய்துகொள்வதாக இணங்கி வந்தாளே! இதற்குள் இங்கு வந்து ஏதோ கோபமாய்ப் பேசி அவள் மனத்தை மாற்றிவிட்டீரே! போம், பிராணநாதா. [ஒருபுறம் போய் நிற்கிருள்.]

வி. ஆனல் பாஸ்கரன் இங்கு வரவில்லையா? ஜகஜ்ஜாலன் கூறினனே!—

ப. இங்காவது அவன் வருவதாவது? அந்தப் பயித்தியக்காரன் கூறியதை நீர் நம்புகிறீரே?

ஜ நான பயித்தியக்காரன்!—

வே. அது யார் அண்ணு அந்த ராஜகுமாரன்? மற்ற தேசத்து ராஜகுமாரர்களை யெல்லாம்பற்றி என்னிடம் கூறினீரே, இவரைப்பற்றி ஒன்றும் கூறவில்லையே!—

வி. ஜகஜ்ஜாலா, என்னிடம் பொய்யா கூறினய்?

ஜ. பொய்யா! கொஞ்சம் பொறுங்கள். இதோ ராஜகுமாரி வைத்துக்கொண்டிருந்த அவர் படத்தைப் பார்த்துவிட்டு அப்புறம் சொல்லுங்கள்.

வி. ஏதோ? ஏதோ?

வே. அந்த ராஜகுமாரர் படமா ?—அம்மா, அதை யேன் நீங்கள் என்னிடம் காண்பிக்கவில்லை, நான் பார்க்கவேண்டும், எங்கே அது ?

ஜ. இங்குதா னிருந்தது ! எங்கே போயது ?

[தேடிப் பார்க்கிறான்.]

வி. வேதவதி, நீ அதைப் பார்க்க லாகாது, சற்று பொறு.

வே. ஏன் அண்ணா ?

வி. அப்புறம் சொல்கிறேன்.—ஜகஜ்ஜாலா, எங்கே அது ?

ஜ. இங்கேதா னிருந்தது. [தேடுகிறான்.]

வி. இங்குதா னிருந்தால் எங்கே போயிருக்கும் ? என்ன பயித்தியக்காரனா யிருக்கிறாய் !

ஜ. பயித்தியக்காரனா !—போதும் ! பட்டப் பெயர் ! உள்ளதைச் சொன்னதின் பலன் இது.

வே. அண்ணா, காஸ்மீர மன்னன் குமாரனுக்கா என்னை விவாகஞ் செய்துகொடுக்கப் போகிறீர்கள் ? ஐயோ ! எனக்கு அவர் வேண்டாம். எப்படி யிருப்பாரோ ? என்ன அவலட்சணமா யிருப்பாரோ ? என்ன புத்தி ஹீனரா யிருப்பாரோ ?—இதற்காகத்தான் நான் விவாகமே வேண்டாமென்று சொன்னது.

ஜ. அம்மா ! இப்படி யல்லவோ இருக்கவேண்டும் புத்தி ! மெச்சினேன் ! மெச்சினேன் !

வே. பாருங்கள் அண்ணா ! இந்தப் பயித்தியக்காரனும் என்னை ஏளனம் செய்கிறான் !—

ஜ. சரி ! தாங்களும் பயித்தியக்காரனென்று அழைத்து விட்டீர்களே ! சரியாகிவிட்டது பாக்கி ! ஆனால் நீங்கள் அழைத்ததுதான் சரி ! நீங்கள்தானே என்னை பயித்தியக்கார னாக்கினீர்கள்.—

வி. போதும், நிறுத்து ஜகஜ்ஜாலா.—வேதவதி, நீ வருந்தா தே. அந்தப் பாஸ்கரனுக் குன்னை நான் ஒருகாலும் விவாகஞ்செய்து கொடுப்பதில்லை!—அதிருக்கட்டும் கண் ணே, சற்று முன்பாக உன் தாயாரிடம் நீ மணஞ்செய்து கொள்வதாக ஒப்புக்கொண்டது வாஸ்தவம்தானா?

வே. ஆம், நீங்கள் அவ்வளவு கேட்டபொழுது நான் மறுப் பது நியாய மாகுமா?

வி. நன்றாகக்கூறினாய், வேதவதி, அதுதான் நல்லபெண்ணுக் கடையாளம்.

ப. என் வயிற்றில் பிறந்தது நல்ல பெண்ணா இராது எப்படி யிருக்கும்?

வி. சரிதான்.—வேதவதி, சீக்கிரம் ஐம்பத்தாறு தேசத்திலு முள்ள அரசிளங் குமாரர்களை யெல்லாம் வரவழைக் கிறேன். அவர்களில் உன் மனதுக் கினிய மணாளனை நீ மணப்பாய்.

வே. அப்படி வேண்டாம், அண்ணா. எல்லா தேசத்து ராஜ குமாரர்களையும் வரவழைத்து எவ னொருவன் உமது வில்லை வளைத்து நாம் ஏற்படுத்தும் சுல்கத்தை எய்கிறா னோ அப்படிப்பட்ட ராஜகுமாரனுக்கே நான் மாலை சூட்டவேண்டும். சுத்தவீரனாகிய உமது பெண்ணாகப் பிறந்து எனக்கு ஒரு சுத்த வீரனையன்றி வே றொருவனை யும் மணக்க இஷ்டமில்லை.

வி. சபாஷ்! நன்றாய்ச் சொன்னாய்.

ஜ. சபாஷ்! சபாஷ்! சமாசாரம் தெரிகிறது.

வி. உடனே சுயம்வரத்துக்கு நாள் குறித்து ஓலை அனுப்புகி றேன் எல்லா அரசருக்கும். வேதவதி, உன் புத்தி சாலித்தனத்தை இப்பொழுதுதா னறிந்தேன். நான் வருகிறேன். [போகிறார்.]

ஜ. அம்மணி, காஸ்மீர மன்னன் புதல்வனுக்கும் ஓலை யனுப்பும்படி சொல்லவா?

ப. ஜகஜ்ஜாலா, போ, விளையாடாதே! மகாராஜாவிடம் கூறி தண்டிப்பேன் பிறகு!

ஜ. செய்வீர்கள்! செய்வீர்கள்!

ப. வேதவதி, நாம் போவோம் வா.

[வேதவதியும், பத்மினியும் போகிறார்கள்.]

ஜ. பெண்ணாகப் பிறந்தால் இப்படிப் பிறக்கவேண்டும். சுயம் வர தினத்தில் ஏதோ சூது நடக்கப்போகிறது! பார்ப்போம். [போகிறான்.]

இரண்டாம் அங்கம் முடிகிறது.

மூன்றாவது அங்கம்.

இடம்—அரசனுடைய கொலு மண்டபம். காலம்—பகல்.

அநேகம் அரசர்கள் உட்கார்ந்திருக்கின்றனர்.

ஒருபுறம் மந்திரியும் ஜகஜ்ஜாலனும் வருகிற அரசர்களை யெல்லாம் மரியாதைசெய்து அழைத்துக்கொண்டுபோய் ஆசனங்களில் உட்காரவைக்கின்றனர்.

அங்கதேசத்து அரசன் வருகிறான்.

ஜ. வரவேணும்! வரவேணும்! தங்கள் வரவுக்காகத்தான் எல்லா அரசர்களும் எதிர்பார்த்திருக்கிறார்கள்!

[மந்திரி அழைத்துக் கொண்டு போய் உட்காரவைக்கிறான்.]

[ஒரு புறம்] எல்லோருக்கும் முன்னே வந்துவிடும்!

வங்கத்து மன்னன் வருகிறான்.

வரணும்! வரணும்! எங்கே தாங்கள் வராதிருக்கிறீர்களோ என்று பயந்திருந்தேன்!

[மந்திரி அழைத்துக் கொண்டு போய் உட்காரவைக்கிறான்.]

[ஒரு புறம்] மந்திரி, அழையா வீட்டிற்கு நுழையாச் சம்பந்தி!

பாண்டிய மன்னன் வருகிறான்.

ஆஹாஹா! வரணும்! தாங்கள் வராமல் சபைக்கு ஓர் அழகில்லை.

[மந்திரி அழைத்துக் கொண்டு போய் உட்காரவைக்கிறான்.]

[ஒரு புறம்] திருஷ்டி பரிகாரம்!

சிங்கள அரசன் வருகிறான்.

ஓகோகோ! வரணும்! வரணும்! எங்கே தங்களுக்கனுப்பிய ஓலை சேராதிருக்கிறதோ என்று மந்திரி

யவர்கள் இரண்டு ஓலை யனுப்பினர்!

[மந்திரி அழைத்துக் கொண்டு போய் உட்காரவைக்கிருன்.]

[ஒரு புறம்] மந்திரி, இவருக்கு மண ஓலையே அனுப்பவில்லையே, இவரை யார் வரச் சொன்னது?

சோழநாட்டு மன்னன் வருகிருன்.

வரணும்! வரணும்! தங்களைத்தான் நான் கோரிக்கொண்டிருந்தேன்! தாங்கள் வராது சபை நிறைய வில்லை. தாங்கள் உட்காரவேணும், சபை நிறைய வேணும்!

[மந்திரி அழைத்துக் கொண்டு போய் உட்காரவைக்கிருன்.]

[ஒரு புறம்] மந்திரி, ஆசனம் உடையவில்லையே ஜாக்கிரதை!

சேரநாட்டு அரசன் வருகிருன்.

ஆஹா! வரணும்! வரணும்! ஏது இவ்வளவு நேரம்?— இந்த மோதிரம் கொஞ்சம் மறைந்திருக்கிறது—ஆ! சரி!

[மந்திரி அழைத்துக் கொண்டு போய் உட்காரவைக்கிருன்.]

[ஒரு புறம்] மந்திரி, இவர் வில்லை வளைக்க வந்தாரோ, பல்லை இளிக்க வந்தாரோ?

கேகய அரசன் வருகிருன்.

அடடா!—வரணும்! வரணும்! முதலில் அடையாளமே தெரியவில்லை! நெடு நாளாச்சுது பார்த்து! எங்கே, தங்களுக்கு பெரிய ராஜ்யம், எவ்வளவு விவகாரம், என்ன சமாசாரம்!

[மந்திரி அழைத்துக் கொண்டு போய் உட்காரவைக்கிருன்.]

[ஒரு புறம்] மந்திரி, இவர் யார் ஆசாமி தெரியவில்லை!

பாஸ்கரன் வயோதிகஞன அரசன்போல் வேஷம் பூண்டு வருகிருன்.

ஹா! ஹா! ஹா! வரணும்! வரணும்! தங்களைப் பார்த்தால்தான் கலியாண மாப்பிள்ளைபோ லிருக்கிறது! சந்

தேகமில்லை, மண மாலை தங்களுடையதுதான்!

[மந்திரி அழைத்துக் கொண்டு போய் உட்காரவைக்கிறான்.]

[ஒரு புறம்] மந்திரி, இந்த கிழத்திற்கும் கலியாண ஆசை விடவில்லை பார்த்தீரா!

[மற்ற அரசர்களையும் இங்ஙனமே அழைத்து மரியாதை செய்கின்றனர்.]

இதற்குள்ளாக பத்மினியும், வேதவதியும் தாதியர் புடைசூழ உப்பரிகையின்மீது வருகின்றனர்.

வே. அம்மா, என்னிஷ்ட தேவதைதான் என் பங்கிலிருந்து என் பிராணநாதரை இச் சபைக்குக் கொண்டுவந்து விட வேண்டும்.

ப. அவருக்கு நீ அனுப்பிய ஓலை போய்ச் சேர்ந்ததோ இல்லையோ?

வே. அதுதானே தெரியாது தவிக்கிறேன்.

ப. ஒருவேளை சுயம்வர மண்டபத்தில் மற்ற அரசர்களுடன் எங்காவது உட்கார்ந்திருக்கிறாரோ பார்ப்போம். ஆயினும் வேதவதி, அவர் தன் நிஜ ரூபத்துடன் வந்தால் மஹாராஜா பார்ப்பாராயின் நம தெண்ணமெல்லாம் கெடுமே, அதற் கென்ன செய்வது?

வே. அதற்காகத்தான் மாறு வேஷம் பூண்டு வரும்படி எழுதியிருக்கிறேன்.

ப. ஆனால் நாம் தேடிப் பார்ப்பதில் என்ன பிரயோஜனம்? மாறு வேஷம் பூண்டுவந்தால் நாம் எப்படி அறியக்கூடும்?

வே. அம்மா என் பிராணநாதர் என்ன மாறு வேஷத்தி லிருந்தபோதிலும் என் காதலால் கண்டுபிடித்துவிடுவேன் நான்.

ப. ஆனால் நீதான் தேடிப்பார்.

வே. ஐயோ! எங்கு தேடியும் காணேமே!

ப. அதோ பார் வேதவதி, உயர்ந்த சிம்மாசனத்தில் வலது புறமாய் உட்கார்ந்திருக்கிறாரே, அவரா யிருக்குமா?

வே. அல்ல, அம்மணி.

ப. அல்லது, இந்தப் புறம், பீதாம்பரக் கச்சை யணிந்திருக்கிறாரே, அவரா யிருக்குமா?

வே. அல்ல, அம்மணி.

ப. மந்திரியுடன் நகைத்தவண்ணமாய்ப் பேசிக்கொண் டிருக்கிறாரே, அந்த ராஜகுமாரனா யிருக்குமா?

வே. இராது அம்மணி.

ப. காதில் மரகதமணி துலங்க கலசத்துடன் வந்திருக்கிறாரே, அந்த வீரனா யிருக்குமா ஒரு வேளை?

வே. உம்—உம்—!

ப. இதோ தாம்பூல மணிந்த வண்ணம் தன் தோழனுடன் பேசிக்கொண் டிருக்கிறவர் உன் பிராணநாதர் ஜாடையா யிருக்கிறதுபோ லிருக்கிறதே.

வே. இல்லை, அம்மணி.

ப. பிறகு யார்தான் சொல். யாரைக் கேட்டாலும் இல்லை யென்கிறாய்—அதோ நரைத்த கிழம் ஒன்று வந்திருக்கிறதே அதுவா?

வே. அம்மணி, என்னை ஏளனம் செய்யாதீர்கள்! அவர்போல் தான் இருக்கிறது!—

ப. சிச்சி! வேதவதி, விளையாடுகிறாயா என்ன? என்னதான் வேஷம் தரித்தாலும் வயதுகூட மாறுமோ?—ஒருவேளை அவருக்கு போய்ச் சேர்ந்திராது மணஓலை, அல்லது சேர்ந்தும் வராதிருக்கிறாரோ?—ஒருவேளை அவர் வாராதிருந்தால் பிறகு என் செய்வாய் நீ?

வே. நானென்ன செய்வது?—சும்மா இருப்பது.

ப. சுயம்வரம் எப்படிப் போவது?

வே. அவரை யன்றி நாம் ஏற்படுத்திய சுல்கத்தை யெய்பவர் ஒருவரு மில்லை இவ்வுலகில். ஆகவே நான் பயப்பட வேண்டியதில்லை அம்மா.

ஜ. பராக்! ராஜாதி ராஜன் விக்கிரமபாஹு மஹாராஜா கொலுவுக்கு வருகிறார்! பராக்!

பரிவாரங்கள் புடைசூழ **விக்கிரமபாஹு**
வருகிறார்.

வி. [சிம்மாசனத்தில் வீற்றிருந்து] மந்திரி, சபைக்கு எல்லா அரசர்களும் வந்துவிட்டார்களா?

ஜ. அங்க, வங்க, கலிங்க, குலிங்க, ஒட்டிய, கன்னட, காந்தார, காம்போஜ, கிராட, குடக, குந்தல, குலிந்த, குர்ஜர, கேகய, கேரள, கொங்கண, கொல்ல, கோசல, சாளுவ, சிங்கள, சிந்து, சீன, சூரசேன, சோழ, பாண்டிய, சோனக, திராவிட, துளுவ, நிடத, நேபாள, பாஞ்சால, பப்பர, மல்லவ, புலிந்த, மகத, மச்ச, மகராஷ்டிர, சௌராஷ்டிர, மலையாள, மறவ, யுகந்தர, விதர்ப்ப, வங்கள, கர்நாடக, அருண, யவன, ஆந்திர, நட்டிய, சவ்வீர, அயோத்திய, கருச, இலாட, காச முதலாகிய ஐம்பத்தாறு தேசத்து மன்னர்களும் வந்திருக்கிறார்கள் மஹாராஜா!

வி. சந்தோஷம்.—ராஜாதி ராஜர்களே! இனி தாமதஞ் செய்வானேன்? யார் யாருக்கு என் கன்னிகையாகிய வேதவதியை மணக்கவேண்டுமென்று விருப்ப மிருக்கிறதோ அவர்களெல்லாம்—

எல்லோரும். [எழுந்திருந்து] ஆ! ஆ!—

வி. அவர்களெல்லாம் ஒவ்வொருவராக வந்து இதோ இப்பாரிய வில்லை வளைத்து, நாணேற்றி, அந்தரத்தில் பறக்கும் சக்கிரத்தை வீழ்த்த முயலுங்கள்; யாரொருவர் அங்ஙனம் செய்கிறாரோ அவருக்கு என் மகள் மணமாலை சூட்டுவாள்.

எல்லோரும். ஏ !—

வி. தாமதம் வேண்டாம், ஆரம்பிக்கலாம்—

[ஒவ்வொரு அரசனும் தன் பக்கத்திலிருக்கும் அரசனைப் பார்த்து]

எல்லோரும். ஏன், தாங்கள் போய்ப் பார்க்கிறதுதானே? தாங்கள் போகலாம்! தாங்களே! [உட்கார்ந்துவிடுகிறார்கள்.]

ஜ. அடடா! என்ன! எல்லாம் சும்மா உட்கார்ந்துகொண்டு இருக்குதுகள். கொஞ்சம் முன்னே எல்லோரும் ஒன்றாய் எழுந்த வேகத்தைப் பார்த்துப் பயந்தேன், மஹாராஜா இத்தனை பெயருக்கும் பெண் எங்கு சம்பாதிப்பதென்று!— அடடா! இவ்வளவுதானா? சமாசாரம் கேட்டவுடன் கம்மென்று உட்கார்ந்துவிட்டதுகள்! சரிதான்!—மந்திரி, இதெல்லாம் உதவாது! நாம் சும்மா இருந்தால் இவர்களும் சும்மா இருப்பார்கள். நாம் போய் ஒவ்வொருவராய்க் கேட்டுப் பார்ப்போம், வாரும்.

கு-ம. ஹா— [சரேலென் றெழுந்திருக்கிறார்.]

ஜ. ஆஹா, எழுந்தாரையா சிங்கம்!—அடடா! எங்கே போகிறார்? [அவரைக் தடுக்கிறான்.]

கு-ம. அவசரமாக வெளியில் போகவேண்டும், மறுபடியும் வருகிறேன். [போகிறான்.]

ஜ. மறுபடியும் வருவதே தினி! முதலிலேயே மிஞ்சிக் கொண்டார்.—மந்திரி, இன்னும் தாமதித்தால் எல்லோரும் போய்விடுவார்கள், வாரும் கேட்போம் இதோ, அங்க தேசாதிபதி!

ராகம்—ஆநந்த பைரவி.

ம. அங்க தேசாதிப அட்டியேனினி
சிங்கம்போலவே நீர் சீறி எழுந்திரும்

அ-ம. நங்கஞ் சொல்லுவார், நான்முன ரெழுந்திட்டால்
நாடுவீர் பாரிய நாடாளு மன்னரை.

மந்திரி, என்ன தெரியாமல் பேசுகிறீர்! நான் முன்னெழுந்தால் பெரிய ராஜாக்களை யெல்லாம் அவமானம் செய்ததாகும்! பெரிய ராஜாக்களெல்லா மிருக்கிறார்கள், அவர்களைப் போய்க் கேளுமையா முன்பு! நான் சிற்றரசன், மரியாதை பார்க்கத் தேவையில்லையா?

ஜ. ஆமாம்! ஆமாம்!—[ஒரு புறம்] தப்பித்துக்கொள்ள மரியாதை யெல்லாம் வருகிறது!—வாரும் போவோம், வங்கத்து மன்னனிடம்.

ராகம்—பைரவி.

ம. வங்கத்து மன்னனே, வளைத்திடும் வில்லினை
வஞ்சியை மணந்திடும், அஞ்சாமலே நீரும்.

வ-ம. பங்கப்படுத்தினீர், பாராளு மன்னர்முன்
அங்கத்தரசனை, அழைப்பதோ என்முன்.

மந்திரி, இவ்வளவுதானா உமது புத்தி? இத்தனை அரசருக்கு முன்பாக என்னைப் பங்கப்படுத்தினீரே! அங்கத்துச் சிற்றரசனை முன்பு அழைத்துவிட்டு பிறகு ராஜாதிராஜனான என்னை அழைப்பதா? இப்பொழுதே இவ்வளவு மரியாதை செய்தால் பிறகு உம தரசன் மகளை மணந்தபின் என்ன மரியாதை செய்வீரோ தெரியாது! வேண்டாம் நமக்கு இந்த சம்பந்தம்!

ஜ. அட்டா! என்ன கோபம்! என்ன கோபம்! என்ன கோபம்! இதுவும் ஒரு விதம்தான்!—மந்திரி, பார்த்தீரா உமது தப்பு!—ஜாக்கிரதை!— இதோ சிங்கள மன்னன்! இவர்தான் சரி! இவரைக் கேளும்.

ராகம்—சங்கராபரணம்.

ம. சிங்கள மன்னனே, எங்கள் குறைதீர்த்து
மங்கையை மணந்துநீர், மகிழ்ந்திடுவீரே,

சி-ம. நங்கையவள் தானும், தங்கையெனக் காவாள்
நானிலம் நகைத்திட, நானே மணப்பதோ.

மந்திரி, இதுவரையில் உம்மைப் புத்திசாலியென்று நினைத்திருந்தேன்! இவ்வளவுதானா உமது புத்தி? வேதவ்தி அம்மாள் எனக் கென்னவேண்டும் தெரியுமா? தங்கை முறையாயிற்றே! நான் தங்கையையா மணப்பது? என்ன அறிவீனனா யிருக்கிறீர்?

ஜ. எப்படி அரசே, தங்கை?

சி-ம. என் முப்பாட்டனாருடைய மாமனார் தம்பியின் பேரப் பிள்ளைக்கு—

ஜ. போதும்! போதும்! தெரிகிறது ஸ்பஷ்ட்டமாய்! அப்படியிருக்க அவரைக் கேட்கலாமா? மந்திரி!—வாரும் கேகய மன்னனிடம் போவோம். ஏதோ யோசித்துக்கொண்டிருக்கிறார்—[ஒரு புறம்] என்ன சாக்கு சொல்லலாமென்று!—

ராகம்—கல்யாணி.

ம. கேகய மன்னனே, கீர்த்தி பெறவே இன்று
ஏகினீர் சுல்கத்தை, எய்து மணப்பீரே.

கே-ம. போகப் புறப்பட, பூனை எதிர்வந்த
தாகையினாலே, ஆசைப்படேனானே!

மந்திரி, ஆக்ஷேபனை யொன்று மில்லை. இந்த சுல்க மல்ல, இதைப் பார்க்கினும் கடினமான சுல்க மெய்தல் எனக் கொரு கஷ்டமல்ல —

ஜ. ஆனால் எழுந்திருக்கிறதுதானே உடனே?

கே-ம. ஆனால், நான் அரண்மனையை விட்டுப் புறப்பட்ட பொழுது பூனையொன்று குறுக்கே வந்தது. அந்த சகுனம்பற்றி இதில் பிரவேசிக்க இஷ்ட மில்லை.

ஜ. சரிதான்.—மந்திரி, அப்பொழுதே நான் சொல்லவில்லை. இவர் நன்றாய் யோசித்துச் சொன்னார்—சாக்கு!—வாரும் இதோ சோழராஜன்.

ராகம்—சாவேரி.

ம. சோழதேசாதிப, சொன்னபடி செய்தே
சொர்ணக் கொடியாளை, சுகமாய் மணந்திடும்.

சோ-ம. மந்திரி, முறை சரியாயில்லை, அதுதான் யோசிக்கிறேன்.

ஜ ஐ ஐயோ! அது உதவாது. அந்தச் சாக்கு அப்பொழுதே இன்னொருவர் சொல்லிவிட்டார்! வேறே ஏதாவது சொல்லுங்கள்.

சோ-ம. நான் சொல்லவந்ததை முழுவதும் கேட்கவில்லையே,
காளைக் கருங் குழலாள், காக்குமென் தாய்போல்
கண்ணிற் புலப்பட்டாள், கடிந்தனன் மணத்தையே.

மந்திரி, சற்று முன்பாக மாடிமீது வந்தபொழுது திரும்பிப் பார்த்தேன் ராஜகுமாரியை. நான் பார்த்தபொழுது என் தாயின் ரூபம்போல் தோற்றியது! அது முதல் அம் மாதின் மீது மனம் செல்லவில்லை!

ஜ. நன்ருய்த் திருப்பினீர்! தமது புத்தியே புத்தி!—இதோ சேர மஹாராஜன்!—ஐயா, ஐயா! முகத்தைத் திருப்பிக்கொள்ளாதீர்! மந்திரி விடுவாரா?

ராகம்—மோஹனு.

ம. சேரனே நீர் பெரும், சிங்கம்போல எழுந்து
சீக்கிரமாய் மணம், செய்யவே வாரும்.

சே-ம. மந்திரி, சமாசாரம் தெரியாதோ!
கோர சம்சாரத்தைக், கோணியே துறவறம்
கொள்ள நான் எண்ணினேன், குமரியை வேண்டேன்.

சமாசாரம் தெரியாமல் நீர் எப்படிக் கேட்கிறீர்! நில்லாதீர், போம். நான் சம்சாரத்தையே விட்டுவிடத் தீர்மானித்திருக்கிறேன்!

ஜ. ஐஐயோ! எங்கள் ராஜ குமாரிக்காக நீங்கள் துறவறம் ஏன் கொள்ளவேண்டும்? நாங்கள் உங்களைக் கேட்க

வில்லை. இல்லறத்திலேயே சுகமா யிரும்.— இன்னும் யார் பாக்கி ?—ஆ ! அதோ ஒரு அரசர் மிகுதியா யிருக்கிறார் ! பல்லவ ராஜன்—

ராகம்—காம்போதி.

ம. பாரெங்கும் போற்றிடும் பல்லவ ராஜனே
பாவையை மணந்திடப் பாரும் பராக்கிரமம்.

ப-ம. தார மிரண்டுண்டு தனியாகவேதான்
தங்கினேன் இங்கு தயவுநீர் செய்யும்.

மந்திரி, இங்கே வாரும்; ஒரு சமாசாரம். எனக்கு இரண்டு தாரங்க ளிருக்கின்றன. அந்தக் கஷ்டம் பொறுக்க முடியாமல் தனியா யிருக்க நான் இங்கு வந்தேனே யொழிய இன்னொரு விவாகம் செய்துகொள்ள வந்தவ னல்ல. இரண்டே போதும், மூன்றுவ தொன்று வேண்டுமா ?—என்னை மன்னிக்கவேண்டும்.

ஜ. மந்திரி, ரகசியம் வேறு இதில் ?— சரி ! இனி யாரைக் கேட்பது ! எல்லோரும் ஆயது—ஆ !—அதோ இருக்கிறார் பாண்டிய ராஜன் !—

ராகம்—கானடா.

ம. பார் புகழ் பாண்டிய, ராஜனே நீர்தானும்
பாணத்தை எய்தெங்கள், பாவையை மணந்திடும்,

பா-ம. மந்திரி !
கார்முகம் போலவே கடி தினி லெய்வேன்
கை சுளிக்கிக்கொண்ட, காரணமென் செய்வேன் !

இதென்ன எனக்கு ஒரு லட்சியமா ? ஆனாலும் இப்பொழுது என் சௌரியத்தைக் காட்ட முடியாம லிருக்கிறது.

ஜ. ஏன் ? ஏன் ?

பா-ம. என் கை பெரு விரல் சுளுக்கிக்கொண் டிருக்கிறது, ஆகவே வில்லை வளைப்பது அசாத்தியம் !

ஜ. துதுது! அடடா! என்ன கஷ்டம்! என்ன கஷ்டம்! உம்—மந்திரி, இன்னும் யாராவது மிகுந்திருக்கிறார்களா பார்ப்போம்— ஆ!— அதோ ஒருவ ரிருக்கிறார்!— என்ன தூங்கிக்கொண் டிருக்கிறார்.—ஐயா, மலையாள மன்னனே! தூங்கினால் விட்டுவிடுவோமென்று பார்த் தீர்போ லிருக்கிறது! அது உதவுமா? எழுந்திரும், நீர் தான் சரி!

ராகம்—பூபாளம்.

ம. மலையாள பூபாலா, மாலையிட்டிட நீர்
மண மகனாகுவீர், மகிழ்ந்தே எழுந்திரும்.

ம-ம. மந்திரி, இதோ — [எழுந்திருக்கிறான்.]

ஜ. அப்பா! எழுந்தாரையா!—ஹா!

ம-ம. மந்திரி!—

[ஒருபுறமாக அவரை அழைத்துக் கொண்டுபோய்]

விலையாக வாங்கினேன், வேஷ மிதுவாகும்.
வேடிக்கைப் பார்க்கவே, வந்தேனான் மன்னியும்.

நான் மலையாள மன்ன னல்ல இந்தராஜா உடை இரவல் வாங்கினேன். இங்கே வேடிக்கை பார்க்க வந்தேன்— நம்மை இழுத்து விடாதேயும் நடுச் சபையில். நான் இதை மறக்க மாட்டேன்.

ஜ மந்திரி, என்ன கொடுத்தார் உமக்கு? எனக்குப் பாதி அதில்—பிறகு—

வி. மந்திரி, என்ன தாமதம் இன்னும்?

ஜ. வாரும் ஐயா, இன்னும் யாராவது மிகுந்து இருக்கிறார் களா பார்ப்போம்! எங்காவது ஒளித்துக்கொண் டிருப் பார்கள். ஆ! அதோ! ஒரு ராஜா! காம்பிலி மன்னன்!

ராகம்—அடாணா.

ம. காம்பிலி மன்னனே, கடிதினில் எழுந்திரும்
காளையைப்போல் வென்று, கன்னியை மணந்திடும்.

கா-ம. ஆஹா ! அதற்கென்ன தடை ! இதோ !

ஜ. அப்படி ! அப்படி ! ஆண் சிங்கம் தாமே !—அவரை யென்ன கேட்கிறீர் ? என்ன சாக்கு சொல்லலா மென்று ?—

[காம்பிலி மன்னன் பக்கத்தி லிருக்கும் அரசன் காதில் எதோ சொல்லிவிட்டுப் போக அவன் போய் வில்லை எடுத்த வுடன் பக்கத்து அரசன் தும்பு கிருன்.]

கா-ம். சீ !

தும்பின துற்சகுன மில்லாவிடி னுன்
துண்டித்திருப்பேன் துங்க வில்லதனை.

மந்திரி, என்ன போம் துற்சகுனம் ! எடுக்கப் போகும் பொழுது தும்பினுல் ! இந்நேரம் அந்த வில்லை ஸ்ரீராமர் முறித்தாற்போல் முறித்திருப்பேன் !

ஜ அடடா ! கேட்பானேன் !— அதுதான் கேட்டுக்கொண்டு போனுர் பக்கத்திலேயே—தும்பும்படியாக. மந்திரி, இவர் ராமர்தான்.—அனுல் அவர் ஸ்ரீராமர், இவர் என்ன ராமர் ? ஐயோ சாமி ! இப்படி இருக்குது உலகம் !— மந்திரி, மந்திரி ! வாரும், வாரும் ! அதோ ஒரு ராஜா நழுவுகிருர் !

ம. இதோ ! இதோ வந்தேன் !

ராகம்—பியாகடை.

சாலுவ மன்னனே, சார்ந்தோ மும்மிடம்
சங்கையுமக்கேன், சடுதியில் எழுந்திரும்.

சா-ம. அதற்காகத்தானே எழுந்தேன் ! இதோ க்ஷணம் !

ஜ. அரசே, கொஞ்சம் பொறுங்கள் !—ராஜாதி ராஜர்களே ஒரு மனு ! கொஞ்சம் நேரம் யாரும் தும்பாமல் இருக் கும்படி வேண்டிக் கொள்ளுகிறேன். இல்லாவிட்டால் இவருக்கொரு உபகாரி வந்தால், பிறகு என்ன சொல் வது !—வாருமையா இனி !

சா-ம. மந்திரி,—ஹா!

[சாளுவமன்னன் தடுக்கி வீழ்ந்தது போல் பாசாங்கு செய்கிறான்.]

கால்கள் முறிந்தன, கன்னிகை வேண்டாம்
கற்றநற் பண்டிதரைக் கடிதினிற் றருவியும்.

ஐஐயோ! உங்கள் பெண்ணும் வேண்டாம், ஒன்றும் வேண்டாம். கால் போச்சுதே! முன்பு வயித்தியரை அழைப்பியும்.

ஜ. ஏ!

சா-ம. எல்லாம் இவனால் வந்தது!—நான் புறப்பட்ட உடன் தடைப்படுத்தினையே! அதுதான் துற் சகுனம்!—

ஜ. சரி! என்பேரிலேயே திரும்பினீர்களா? நல்லது!-மந்திரி, ஏன் சும்மா இருக்கிறீர்கள்.—வயித்தியனுக் கனுப்பியுமே —[ஒரு புறம்] கூட நான்கு ஆட்களையும் அழைப்பியும்!— மந்திரி, இனி என்ன செய்வது, ஒரு ராஜாவாவது பாக்கியில்லை! எங்கு சுற்றிப் பார்த்தும் காணோம்!— ஆஹா! அதோ விதர்ப்பத்து வேந்தர்!—மந்திரி, இவரைப்போல் ஒருவரும் கிடையாது. வீராதிவீரன்! சூராதிசூரன்! தீராதிதீரன்! ராஜாதிராஜன்! என்ன, மற்றவர்களைப் போல் சாக்கு சொல்லுவார் என்று எண்ணுகிறீரா என்ன? அதெல்லா மில்லை நான் உத்தரவாதம்.

ராகம்—ஆபோகி

ம. வில்லை வளைத்திட, விதர்ப்பத்து வேந்தே
வேகமாய் எழுந்திரும் வீரனும் நீரே.

வி-ம. ஆஹா! சந்தேக மென்ன, இதோ!

ஜ. பார்த்தீரா மந்திரி, புறப்பட்டுதையா சிங்கக் குட்டி!

வி-ம. [வில்லருகிற் போய்] மந்திரி, இதென்ன இது? இதைப் பார்க்கவில்லை நான்.

வில்லது முறிந்திட்டால் வெந்துயர் சூழும்
விண்டுவின் வில்லது வேண்டாம் நமக்கே.

மந்திரி, என் முகத்தை பார்த்தீரா? என்ன இருக்கிறது? நான் வைஷ்ணவன் என்று தெரியாதா உமக்கு? இந்த வில்லைப் பாரும். இது விஷ்ணுவின் வில்! அதோ பாரும் குறி! இதை நான் எடுத்து வளைத்தால் ஒரு வேளை முறிந்துபோனல் யார் உத்தரவாதம், அந்தப் பாபம் யாரைச் சேர்வது?

ஜ. ஐஐயோ! அப்படியா சமாசாரம்!— நான் உத்தரவாதம் வளையும்.

வி-ம. அது உதவாது! யார் சொன்னலும் அந்தப் பாபத்திற்கு உடன்படமாட்டேன்.

[தன் ஆசனத்தில்போய் உட்காருகிறன்.]

ஜ. இவ்வளவுதான! [ஒரு புறம்] போய் உட்கார்ந்துதையா பூனைக்குட்டி! மந்திரி, இவர்தான் நாமம் போட்டார்! இனி யாராவது சைவ மிருக்கிறதா பார்ப்போம்!—ஒருவரையுங் காணும். அதோதோதோ!—மகதத்து மன்னன், கொடிய சைவம்!

ராகம்—கீரவாணி.

ம. மாரனை நிகர்ந்திடும், மகதத்து மன்னனே
மலையாது நீரும், மணஞ்செய்யப் பாரும்.

ம-ம. ஆகா!

ஜ. இந்த 'ஆகா'வி லெல்லாம் ஏமாறக்கூடாது, அங்கே போய் 'ஆகா' து என்று முடித்தால்!

ம-ம. மந்திரி! இப்படி வாரும், இதென்ன இது?

ஜ. நாமம்.

ம-ம. நான் யார் தெரியாது உமக்கு?
வீரசைவனனிவ், விண்டுவின் வில்லினை
தீண்டலுமாகாது, தெண்ட முமக்கே.
வீர சைவன் நான். இந்த வைஷ்ணவ வில்லைத் தொட்டாலும் பாபம்! வேண்டாமையா! உமக்கொரு கும்பிடு,

உம தரசனுக் கொரு கும்பிடு. வேதவதி யம்மாளுக் கொரு கும்பிடு,

ஜ. சரி! இவருக் கிப்படி திரும்பியதோ! அவருக் கப்படி! இருவருக்கிப்படி! இனி என்ன செய்வது! கடைசியில் நாமத்தில் முடிந்தது வேலை! இன்னும் யாரைக் கேட் பது? மந்திரி.

வி. மந்திரி, என்ன தாமதம்? எந்த வீரனானாலும் சரி. வந்து வில்லை வளைத்திடச் சொல்லும்.

ஜ. ஆனால் மந்திரி, இந்த கர்நாடக நபாபு ஒருவர் வந்திருக் கிறாரே அவரைக் கேட்டுப் பார்ப்போம்! வேறே யாரும் பாக்கி யில்லை.

ராகம்—தேசிகதோடி.

ம. வில்லை வளைத்திட்டு, விவாகஞ் செய்திடவே
வேகமாய் நவாபே, விஜயஞ் செய்யுமே.

க-ந. கியா சொல்ரான்?

ஜ. அடடா மந்திரி. இவரோடு பேச உமக்குத் தெரியாது, நான் அழைக்கிறேன்.

வில்லுகி வளைச்சி, கண்ணாலம் பண்ணிக்க
வேகம்கி நபாபு, ஜல்திஆவ் இப்போ.

க-ந. அரே அரே!

கல்லாணம் சொல்ரா, சண்டகி போடராம்?
கபர்தார்! சாம்னே நிக்காதே ஜாவ் ஜாவ்.

[ஜகஜ்ஜாலனை அடிக்கிறான்.]

ஜ. மந்திரி, இந்த உத்தியோகம் நமக்கு வேண்டாமையா! போதும் பட்டபாடு! இனி நீராகக் கேட்டுக்கொள்ளும் யாராவது பாக்கி யிருந்தால்!

[மூலையில் போய் உட்காருகிறான்.]

வி. மந்திரி, இன்னும் என்ன ஆலஸ்யம்?—என்ன, இத்தனை பெரிய சபையில் ஒரு க்ஷத்ரியனாவது இல்லையா இவ் வில்

லை வளைத்து இந்த லட்சியத்தை எய்யும்படியான சூரன் ! சீ !

பா. மஹாராஜா—யாராயிருந்தாலும் உதவுமா ?

வி. யாரா யிருந்தாலும் சரி ! – க்ஷத்ரியனாகமாத்திர மிருக்க வேண்டும். வயோதிகனானாலும் சரி, எவனாயிருந்தாலும் சரி !

பா. அப்பா, என்னைப் பிடித்து அழைத்துக்கொண்டுபோய் விடு வில்லிடம் !—

மற்ற அரசர்கள். ஆஹாஹா ! இந்தக் கிழம் என்ன செய்யப் போகிறது ! [நகைக்கின்றனர்.]

ஐ. ஐயா ! என்னை மன்னிக்கவேண்டும். தலையெல்லாம் நரைத்துவிட்டதே, தமக்கிது என்னத்திற்கு என்று அழைக்காமல் விட்டுவிட்டேன் ! ஆனால் மற்ற ராஜாக்கள் செய்தது தாம் செய்வது கடின மல்ல.—வாரும் ! நீர் என்ன போக்கு சொல்லப் போகிறீர் ?

[மெல்ல வில் லருகில் அழைத்துச் செல்ல, பாஸ்கரன் வில்லை எடுத்து நாணேற்றி குறியை அடிக்கிறான். மற்ற அரசர்களெல்லாம் ஆச்சரியப்படுகின்றனர்.]

மற்ற அரசர்கள். ஆமாம், இவன் யார் ? க்ஷத்ரியனல்லவே ! முகத்தைப் பார்த்தால் தெரியாதா !

பா. [தன் வேஷத்தைக் களைந்தெறிந்து] என்ன சொன்னீர் ! அரசப் பதர்களே ! நான் க்ஷத்ரியனா அல்லவா வென்று அரை க்ஷணத்தில் காட்டுகிறேன் ! எடுங்கள் உங்கள் ஆயுதங்களை !

[பத்மினி பின் வர, வேதவதி விரைந்து வந்து தன் கரத்திலிருந்த மாலையை அவன் கழுத்தில் சூட்டுகிறாள்.]

மற்ற அரசர்கள். பாஸ்கரன் ! பாஸ்கரன் !

வி. [சிம்மாசனம் விட்டெழுந்து] ஆ! பாஸ்கரா! மோசம் செய்தாயா இப்படி! இதோ உன்னைக் கொன்று அன்று செய்த சபதத்தை நிறைவேற்றுகிறேன்.

[வாளை உருவுகிறான்.]

பா. ஹூம்! என்னையா? பாரும் உமது சாமர்த்தியத்தை!

வே. பிராணநாதா! பிராணநாதா! வேண்டாம்! வேண்டாம்! சமாதானமாய்ப் போம்! சமாதானமாய்ப் போம்!

[பாஸ்கரனைத் தடுக்கிறாள்.]

ப. நாதா! நாதா! இது நியாயமன்று! நியாயமன்று!

[விக்கிரமபாஹுவைத் தடுக்கிறாள்.]

வி. பத்மினி ஒதுங்கு சற்று!

பா. கண்ணே, சற்று ஒதுங்கியிரு,—ஒன்றும் அஞ்சவேண்டாம் நீ!

வே. ஐயோ! பிராணநாதா! என் தந்தை உம்மை தன் மந்திர பலத்தினால் கொன்றுவிடுவார், கொன்றுவிடுவார்!

வி. வேதவதி! ஒதுங்கு. மறைக்காதே அப் பாதகனை!

வே. நான் செய்யேன்! கொல்வதானால் எங்களிருவரையும் இப்படியே கொன்றுவிடும்! கொன்றுவிடும்! நான் இவ்விடம் விட்டுப் பெயரேன்!

வி. வேதவதி! நீ என் பெண்ணாயின் இப் பாதகனை காப்பாற்றாதே!

வே. ஆம், நான் உமது பெண்ணாயிருந்தேன். இப்பொழுதென் பிராணநாதரின் மனைவியாகிவிட்டேன், அவருயிரை என்னுயிரைக் கொடுத்தாவது காப்பாற்றுவேன்.

வி. ஆம்! நீ காப்பாற்றினால்தான் உண்டு. தானாக காத்துக்கொள்ளும் திறமை இவனுக்கேது!—

பா. [வேதவதியை ஒருபுறம் தள்ளிவிட்டு] என்ன கூறினீர்! எடும் வாளை, காட்டுகிறேன் என் வீரம்!

வி. ஆ போதும்!— பாஸ்கரா!

[தன் மந்திரபலத்தினுல் அவனைக் கீழே விழச் செய்கிருன்.]

பா. சீ! சீ! சீ! —தர்ம யுத்தமா இது?—வேதவதி! வேதவதி!

[மூர்ச்சையாகி விழுகிருன். வேதவதி அவன்மீது அழுத வண்ணம் விழுகிருள்.]

வே. ஹா! பிராணநாதா! பிராணநாதா!

[புலம்புகிருள்.]

ப. பிராணநாதா! பிராணநாதா! பொறும்! பொறும்! கொல்லாதீர்! கொல்லாதீர்! ஐயோ! ஜன்மத் துவேஷியாயிருந்தபோதிலும் நமக்கு மருமகனுகியபின் அவனைக் கொன்ருல் நமது மகளுக்குத்தானே கெடுதி பிறகு! நமது மகள் விதவையாக நாம் பார்ப்பதோ? நமது குழந்தையின்பொருட்டாவது பாஸ்கரனைக் கொல்லாது விடும். இரண்டாம் மந்திரத்தைப் பிரயோகியாதீர்! வேண்டாம்! வேண்டாம்!

வே. [எழுந்து] அண்ணு; அண்ணு! இது தர்மமா! தர்மமா! ஐயோ! என் பிராணநாதரைக் கொல்லாதேயும்! கொல்லாதேயும்! பிழைப்பூட்டும்! பிழைப்பூட்டும்!

வி. வேதவதி! நீயும் என்னைச் சூது செய்தனை யல்லவா?

வே. ஐயோ! நான் செய்தது தவறுதான், மன்னியும்! மன்னியும்!

ப. பிராணநாதா! தாம் அடஞ்செய்ய லாகாது, மன்னியும்! மன்னியும்! நமது குழந்தையை நாம் மன்னிக்காவிட்டால் யார் மன்னிப்பது!

வே. ப. மன்னியும்! மன்னியும்! [மௌனக் காட்சி.]

மூன்றுவது அங்கம் முடிகிறது.

நான்காவது அங்கம்

இடம்—நந்தவனத்தில் தடாகத்தின் மத்தியிலுள்ள ஓர் மண்டபம்.

காலம்—காலை.

வேதவல்லி பழவர்க்கங்க ளடங்கிய ஓர் பாத்திரத்தைக் கையி லெடுத்துக்கொண்டு வருகிறாள்.

வே. இன்னும் கதவுகள் திறக்கக் காலமாகவில்லை போலும். ஐயோ! என் வாழ்வு! என்ன வாழ்வு! நித்யகண்டம் பூர்ணாயுசா யிருக்கிறேனே! என்றாவது பிதாவுக்கு நான் பிடிவாதமா யிருக்கிறேனென்று கோபம் மூண்டுவிட்டால் அதனுடன் தீர்ந்தது என் கதி! என் தாயாரும் பிரயோஜனமில்லையென்று சலித்துவிட்டார்கள்! பிறகு எனக்கு யார் கதி? தெய்வமே கதி!

[மண்டபத்தின் கதவுகள் திறக்கின்றன. உள்ளே ஓர் மஞ்சதின்மீது மரண மூர்ச்சையாய்ப் பாஸ்கரன் படுத்திருக்கிறான்.]

[உள்ளே பிரவேசித்து] பிராணநாதா! பிராணநாதா வந்தேன் அடியாள்! ஐயோ! உமது மதி முகத்தால் என்னைத் திரும்பி ஒருமுறை பார்க்கவும் சக்தி யற்றவரா யிருக்கிறீரே! உம்மை வெறுத் தென்ன பலன்? என் பூர்வ ஜன்ம புண்ணியமிது! உம்முடன் நான் கழிக்கும் இந்த இரண்டு நாழிகை தவிர மற்றக் காலமெல்லாம் நான் உயிர் பெற்றும் பிணத்துக்குச் சமானமாகத்தானே இருக்கிறேன். ஐயோ! இந்த இரண்டு நாழிகையும்கூட நான் அனுபவிக்கும் சுக மென்ன? பிராணநாதா! உமது தருமைத் திருமேனியைக் காண்பது தவிர வேறென்ன சுகமுண் டெனக்கு? உமது கனிவாய் திறந்து ஒரு முறையாவது என் பாழுங் காது குளிர 'கண்ணே' என்றொரு வார்த்தையாவது பேசுகிறீரா? இல்லையே! பிராணநாதா! பிராணநாதா! நான் இத் துயரை எத்தனை நாள்

இத் தரணியிற் சகிப்பேன்! இறப்ப தென்றாலும் உம்மைவிட்டு எப்படி இறப்பது என்று மன மெழவில்லை. பிராணநாதா! பிராணநாதா! பிராணநாதா! இதோ இப் பட்சணங்களை அருந்தும். இதோ இப் பழத்தைப் புசியும் இதோ இப் பாலை யருந்தும். ஐயோ! உமது வாய் திறந்து 'வருந்தாதே' என்று ஒரு வார்த்தை கூறும்! கூறும்! பிராணநாதா! பிராணநாதா!

[பாஸ்கரன் உடல்மீது மூர்ச்சை யாகிறாள்.]

தினகரன் வேஷம்பூண்ட கின்னரனுடன், விக்கிரமபாஹுவும், பத்மினியும் வருகிறார்கள்.

ப. பிராணநாதா, இனி ஒரு தடையும் சொல்லாதீர்! நான் மிகவும் பிரார்த்திக்கிறேன். எத்தனை காலம் நமது பெண் இக் கோலத்தி லிருக்க நாம் பார்த்துக்கொண் டிருப்பது! இவ் வயித்தியர் எப்படியும் பிழைப்பூட்டுவதாகக் கூறுகிறாரே, பார்ப்போமே. அதில் என்ன தவறு?

வி. பத்மினி, அது அசாத்தியம். எத்தனை பெயர் முயன்றார்கள்? ஒருவராவது சொன்ன வண்ணம் செய்தார்களா? என் குல தெய்வத்திற் கன்றி அம் மந்திரம் தெரியாது ஒருவர்க்கும்! இது பிரயோஜனமற்ற காரியம்!

கி. அம் மந்திரம் எனக்கும் தெரியும்!—

வி. தெரியாவிட்டால்?

கி. தெரிந்தால்?

வி. தெரிந்தால், நீர் சொன்னபடி நான் செய்வதாகப் பிரமாணம் செய்கிறேன்.

கி. உண்மைதானா?

வி. உண்மைதான்—தெரியாவிட்டாலோ?

கி. தெரியாவிட்டால் என் தலையைக் கொடுக்கிறேன்.

வி. ஆனல் பார்ப்போம் உமது சமார்த்தியத்தை.

கி. ஆனல் முன்பு, பாஸ்கரன் உயிர் பெற்ருல் அவன் மீதுள்ள ஜன்மத்துவேஷத்தையெல்லாம் மறந்து வேத வதியை மனப் பூர்வமாய் மணஞ் செய்விப்பதாகச் சத்தியம் செய்யும்.

ப. பிராணநாதா! பிராணநாதா! அப்படியே செய்யும், செய்யும்! இனி பிடிவாதம் வேண்டாம்.

வி. ஆகட்டும்—அப்படியே.

ப. கண்ணே, வேதவதி, வேதவதி,—எழுந்திரு! இதோ உன் பிராணநாதரை உயிர்ப்பிக்க ஒருவர் வந்திருக்கிருர், எப்படியும் பிழைப்பிப்பார், எழுந்திரு.

வே. [மூர்ச்சை தெளிந் தெழுந்து] ஐயோ! என் னுயிரைக் கொடுக்கிறேன்; என் பிராணநாதரைப் பிழைப்பியும் பிழைப்பியும் பிழைப்பியும்!

கி. அரசே, நான் சொன்னபடி முன்பு செய்யும்.

வி. பாஸ்கரன் இப்பொழுது உயிர் பிழைப்பா னுயின் அவன்மீது எனக்குள்ள ஜன்மத் துவேஷத்தை யெல் லாம் மறந்து அவனுக்கு என் மகள் வேதவதியை மனப் பூர்வமாக மணஞ் செய்விக்கிறேன். இது சத்தியம்!

கி. இப்படி வாரும்.

[விக்கிரமபாஹுவின் காதில் ஓர் மந்திரத்தை ஓதி]

இம் மந்திரத்தை மூன்று முறை பாஸ்கரன் காதில் உச் சரியும்—சற்று பொறும்! உச்சரித்தவுடன் பின்னல் மறைந்துகொள்ளும்! இம் மந்திரத்தால் உயிர் பெற்ற வர்கள் முன்னிருந்ததைவிட பதின் மடங்கு வீரத்துடன் எழுவார்கள்! ஆகவே சற்று தாம் ஜாக்கிரதையா யிருக்

கவேண்டும். —அம்மா, நீங்களும் சற்று மறைந்திருங்கள். பிறகு எதிர் வரலாம்.

[விக்கிரமபாஹு தவிர மற்ற மூவரும் மறைந்து கொள்கின்றனர். விக்கிரமபாஹு மந்திரத்தை மூன்று முறை பாஸ்கரன் காதில் ஓதிவிட்டுத் தானும் மறைந்துகொள்கிறார்.]

பா. [திடுகிட்டெழுந்து] விக்கிரமபாஹு ! எடும் வாளை ! என் வீரத்தைக் காட்டுகிறேன் !—இதென்ன இது ? ஒருவரையும் காணோம் !—நான் எங்கிருக்கிறேன் ? என்னைத் தனியாய்விட்டு வேதவதியும் சென்றுளோ ?

வே. [வெளிவந்து] இல்லை ! இல்லை ! பிராணநாதா ! அப்படிச் செய்வேனா நான் ? [கட்டி யணைக்கிறாள்.]

பா. வேதவதி, இது என்ன இது ? நாம் எங்கிருக்கிறோம் இப்பொழுது ? எங்கே உன் பிதா ? என்னைக் கொன்ற பழி தீர்க்கவேண்டும் !

வே பிராணநாதா ! பிராணநாதா ! அவர்தான் உம்மை இப்பொழுது பிழைப்பித்தார் ! அடியாள் உம்மை முதல் முதலாகக் கேட்கும் வேண்டுகோளை மறுக்கலாகாது ! என் பிதாவின்மீதுள்ள கோபமெல்லாம் மறப்பதாகச் சத்தியம் செய்து கொடும்.

பா. மாட்டேன் ! உங்களால்தான் எல்லாம் கெடுகிறது.

கி. [உள்ளிருந்து பாடுகிறான்.]

ராகம் பைரவி.

பாவை யொருத்தியாற் பட்டா னிராமன் படுதுயரம்

பா. ஆ ! தினகரன் குரல் !—தினகரா !

கின்னரன் தினகரன் உருவத்துடன் வெளி வருகிறான்.

தினகரா ! தினகரா ! உன்னைக் காணப்பெற்றேனே !

கி. ஆம். தாம் தேச சஞ்சாரம் செய்யப் புறப்பட்ட காரண மென்ன, நீர் செய்த காரிய மென்ன ? எல்லாம் மறந்து போய்விட்டீரே ! [பாடுகிறான்.]

ராகம்—பைரவி.

மங்கை யொருத்திசா ரங்க தரனுயிர் மாய்த்தனளால்

பா. தினகரா, உலகத்தில் ஸ்திரீகளிலும் ஸ்திரீக ளில்லையா ?

கி. அதிலும் உமது ஜன்மத் துவேஷியாகிய விக்கிரமபாஹுவின் பெண் ! சீ !

பா. சீ ! தினகரா, விக்கிரமபாஹு என் ஜன்மத் துவேஷியன்று, எனக் குயிரைக் கொடுத்த மாமன் !

விக்கிரமபாஹுவும், பத்மினியும் வெளியே வருகின்றனர்.

வி. சபாஷ் ! பாஸ்கரா ! நீயே எனக்குத் தக்க மருமகன்.

[பாஸ்கரனும் வேதவதியும் அவர்கள் பாதத்தில் பணிகிறார்கள்.]

பாஸ்கரா, எழுந்திரு; எழுந்திரு, வேதவதி.

[இருவரும் எழுந்திருக்கிறார்கள்.]

நாம் எல்லாம் துதிக்கவேண்டியது இம் மகா புருஷனையே—ஐயா, தாங்கள் செய்த மஹோபகாரத்திற்கு நாங்கள் என்ன கைம்மாறு செய்யப் போகிறோம் ?

பா. இது யாரா யிருக்கலாம் ?

கி. எனக் கொன்றும் வேண்டியதில்லை.— இவ்வளவுக்கும் காரண கர்த்தாவை யனுப்புகிறேன், அவரைத் துதியும். [மறைகிறான்.]

கின்னரன் சுயரூபத்துடன் தோற்றுகிறான்.

வி. ப.
பா. வே. } ஆ ! அப்பொழுதே நினைத்தேன் !

ராகம்—சுருட்டி.

வி. என்னையுமே ஈடேற்ற இங்கு வந்தாய் போற்றி
தன்னைநிகர் மருகனையே தரணியிற் றந்தாய் போற்றி.

ப. ஓதாத எங்களையே உவந்தருள் செய்தாய் போற்றி
பாதாதி மலர்தனையே பார்த்தருள்வாய் போற்றி

சிவ. காதலனைக் காத்தெனக்குக் கதி கொடுத்தாய் போற்றி
நாதனையே தந்ததற்கு நன்றியென் செய்கேன் போற்றி.

பா. உயிரெனக் களித்தாய் ஒண்டொடி தந்தாய் போற்றி
பயிலுமென் தோழனே பாதம் பணிந்தேன் போற்றி.

நான்காம் அங்கம் முடிகிறது.

நாடகம் முற்றியது

Printed by Dowden & Co., at the "Peerless Press," Madras.

BLES...

An adaptation of Mr. V. V. Srinivasa Iyengar's Drama of the same name

IN TAMIL

BY

Rao Bahadur P. SAMBANDAM,
B.A., B.L.,

Author of:

"Lilavathi-Sulochana," "Galava." "Manohara," "Blind Ambition," "The Two Friends," "Fate and Love" "Sarangadhara," "Simhalanatha," "Pushpavalli," "Amaladitya," "Magapathi," "Farces," "Siruthondar," "The Golden Fetters," "True Love," "The Bandit Chief," "Markandeya," "The Fair Ghost," "The Merchant of Vanipura," "The Wedding of Valli," "The Eye of Love," "Vijayarangam," "As you like it," "Ratnavali," "Lord Buddha," "The Tragedy of Silence," "The Good Fairy," "Geetha Manjari," "Harischandra," "As We Sow-So We Reap," "The Curse of Oorvasi," "Chandrahari," "The Demon Land," "Sabapati Part I," "The Pongal Feast" or "Sabapathy," (Part II) A Rehearsal or "Sabapathy," (Part III) etc. in Tamil, and "Harischandra," and "Yayathi" in English.

FIRST EDITION.

Madras:

PRINTED BY DOWDEN AND CO., AT THE "PEERLESS PRESS," 21, Sunkurama Chetty Street.

1928

All Rights reserved.

[Price per Copy As. 8.

உ

மனைவியால் மீண்டவன்

இஃது

ராவ் பஹதூர்

ப. சம்பந்த முதலியார், பி-ஏ., பி-எல்.,

அவர்களால் இயற்றப்பட்டது.

(ம-ா-ா-ஸ்ரீ, வி. வி. ஸ்ரீனிவாச ஐயங்கார் இயற்றிய
நாடகத்தின் மொழி பெயர்ப்பு)

(இந்த நூலாசிரியரால் இயற்றப்பட்ட மற்ற நூல்கள் :—
"லீலாவதி சுலோசனை," "கள்வர் தலைவன்," "மனோஹரன்,"
"இரண்டு நண்பர்கள்," "சாரங்கதரன்," "நற்குல தெய்வம்,"
"சத்ருஜித்," "யயாதி" "மார்க்கண்டேயர்," "விஜயரங்கம்,"
"காதலர் கண்கள்," "பேயல்ல-பெண்மணியே." "மகபதி,"
"மெய்க்காதல்," "பொன் விலங்குகள்," "சிம்ஹளநாதன்,"
"விரும்பிய விதமே," "சிறுத்தொண்டர்," "காலவரிஷி,"
"வாணீபுர வணிகன்," "ரஜபுத்ரவீரன்," "ஹரிச்சந்திரன்,"
"ரத்னாவளி," "புஷ்பவல்லி," "கீதமஞ்சரி," "பிரஹசனங்கள்,"
"ஊர்வசியின் சாபம்," "அமலாதித்யன்" "சபாபதி,"
"பொங்கல் பண்டிகை" அல்லது சபாபதி இரண்டாம் பாகம்,
"ஓர் ஒத்திகை" அல்லது சபாபதி மூன்றாம்பாகம், "வள்ளிமணம்"
"முற்பகற்செய்யின் பிற்பகல் விளையும்," "புத்த அவதாரம்,"
"வேதாள உலகம்," முதலியன.

முதற் பதிப்பு

சென்னை :

டௌடன் கம்பெனியாரின்

"பியர்லெஸ்" அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1928

காபி ரைட்]

[விலை அணா 8

INSCRIBED

TO

THE BELOVED MEMORY OF

MY PARENTS

P. VIJIARANGA MUDALIAR,

and

P. MANICKAVELU AMMAL,

and

MY FRIEND

C. RANGAVADIVELU

PREFACE.

TO THE FIRST EDITION

This is an adaptation of an English drama of the same name by my friend Mr. V. V. Srinivasan. I have to thank him for his having kindly given me permission to translate his work. The request of several societies, that I should give them something in Tamil, which could be enacted in an hour and a half, for an aniversary or so, has induced me to translate this and other works of my friend, into Tamil.

I take this opportunity to inform all societies, amateur and professional, that they should obtain my previous permission before staging this or any other drama of mine. Societies will kindly note that as the law stands at present breach of copyright in a drama is a criminal offence.

"PAMMAL LODGE"
MADRAS
1st May 1928.

THE AUTHOR.

நாடக பாத்திரங்கள்

ராமநாதன்	...	ஓர் பெருஞ் செல்வவந்தனுக்கு ஸ்வீகார புத்திரன்.
லலிதை	...	ராமநாதன் மனைவி.
பார்வதி	...	ராமநாதனை ஸ்வீகாரஞ் செய்து கொண்டவருடைய விதவை.
டாக்டர் நாயுடு	...	ராமநாதன் குடும்பத்திற்கு சிநேகிதரும் வயித்தியரும்.
மிஸ் தாரன்	....	ஒரு நர்ஸ்.

கதை நிகழ் இடம் :—சென்னை.

மனைவியால் மீண்டவன்

முதல் அங்கம்

முதல் காட்சி

இடம்—மயிலாப்பூரில் "சந்திரவிலாஸ்" என்னும் பங்களாவில் ஓர் அறை
காலம்—காலை.

ஒரு கையில் பையும் மற்றொரு கையில் ஹிருதயம் பரீட்சிக்கும் கருவியும் வைத்துக்கொண்டிருக்கும் டாக்டர் விஜயம் நாயுடு என்பவர் முகத்தில் மிகவும் வருத்தமும் கவலையும் விளங்க லலிதாவுடன் பேசிக்கொண்டிருக்கிறார்.

டா. குணமா ?—உம்—இல்லை—இன்னும்.

ல. குணமாகும்—இன்றைக்கு—என்று நம்பினீரே ?

டா. நம்பினேன் —நம்புவது சகஜம்தானே எல்லோர்க்கும்—எப்பொழுதும்.

ல. அவ்வளவுதானா? கோரிக்கையை விட விசேஷம் ஏதாவது இருக்கலாமோ—என்று எண்ணினேன்.

டா. ஆம் ஆம் !—என்னை மன்னிப்பாய்—அப்படித்தான்—வீக்கம் குறையும் என்று எண்ணினேன். அவனுடைய புத்தி மாறாட்டம் அதிகமாயில்லை—அவனுடைய ஹிருதயம்தான் எனக்குத்திருப்திகரமாயில்லை.

ல. ஹிருதயமா ?—அது எப்பொழுது திருப்திகரமாயிருந்தது !—ஆயினும்—முன்பைவிட அதிக க்ஷீணதசையிலிருக்கிறதா ? கொஞ்சமாவது குணமாக இடமிருக்கிறதென்று நினைக்கிறீர்களா ?—நான் கேட்பது உங்களுக்குத்தெரியவில்லையா ?

டா. இதோ பார்—லலிதா!—உன்னை என் பெண்ணாகவே நான் பாவித்திரா விட்டால்—உம்—நீ புத்திசாலி, உன்னிட மிருந்து ஒளிப்பதிற்பயனில்லை—அவன் இன்னும் அபாயமான ஸ்திதியில் தான் இருக்கிறான்.

ல. இந்த மூன்று நாட்களாக நான் அதை அறிவேன். எதற்கும் சித்தமாயிருக்கிறேன்; என்னிடம் உண்மையை ஒளியாது உரையும்.

டா. இல்லையம்மா—அப்படி ஒன்றும் கைவிடக்காரணமில்லை; எப்படியாவது அவனைத் தப்ப வைப்பேன் என்று நினைக்கிறேன் இன்னும். இப்பொழுது ஒரு புதிய மருந்து கொடுத்திருக்கிறேன்—நான் மத்தியானம் வந்து பார்க்கிறேன்—எதற்கும் தைரியத்தைக் கைவிடாதே.

ல. முயன்றாலும் முடியாதென்றால்!—அப்படிக் கைவிட்டாலும் எனக்கு என்ன கெட்டுப்போகிறது!—(பெருமூச்செறிந்து). நாள் முழுவதும் நான் இங்கே உட்கார்ந்து கொண்டு அந்த அறையையே பார்த்த வண்ணம் கழிக்கிறேன். டாக்டர், என்னை ஏன் உள்ளே போக விட மாட்டேன் என்கிறீர்?

டா. அவனைக் காப்பாற்றக்கூடும் என்று இன்னும் நான் எண்ணுவதனால் தான். எப்பொழுதாவது அவனுக்கும் கொஞ்சம் பிரக்ஞை வருகிறது—அச்சமயங்களில்—அந்த—பெண்பிள்ளையைப் பற்றிக்கேட்கிறான்—நான் சொல்வதைக்கேள், அந்த வார்த்தைகளைக் கேட்க உன் மனம் பொறாது.

ல. பொறுக்கும்! என்னை நன்றாய் அறியீர்—இப்பொழுது இருக்கும் ஸ்திதியில். என் மனம் இனி கரையாது—கஷ்டப்பட்டுப் பட்டுக் கல்லாய் விட்டது, நரகவேதனையை நான் அனுபவித்தாயது—உங்கள் பெண்ணோடு விளையாடிக்கொண்டிருந்த குழந்தை என்று எண்ணாதீர் இப்பொழுது என்னை!—ஈசா! ஈசா!—அவள் ஏன் போனாள்? நானல்லவோ போயிருக்கவேண்டும்!

டா. அப்படி போனது ஒரு வேளை அவள் அதிர்ஷ்டவசமோ என்னமோ ! அவள் உயிருடன் இருந்திருந்தால் உன்னைப்போல் அவளும் கஷ்டம் அனுபவித்திருக்க வேண்டுமோ என்னவோ—யாருக்குத் தெரியும் ?—உன்னுடைய தாய் தந்தையர்கள் இப்பொழுது உயிருடனிருந்து உன் கஷ்டத்தைக் கண்டிருப்பார்களாயின் என்ன துக்கப்பட்டிருப்பார்கள் ?

ல. அவர்களுக்குப் பதிலாகத்தான் நீங்கள் இருக்கிறீர்களே —எனக்காகத் துக்கப்பட! அன்றைத்தினம்—அந்தப் பெண்பிள்ளை வீட்டிற்குப் போய்—அவரை எடுத்து வந்த பொழுது—அவர் பிணம்போல் கிடந்ததைக் கண்ட பொழுது—கண்ணீர் விட்டழுதீரே ! அப்பொழுது கேவலம் டாக்டராகத்தான் எண்ணிக்கொண்டீரோ உம்மை ?—எல்லாம் எனக்குச் சொன்னார்கள்.

டா. உம்—சரி !—எனக்கு நேரமாகிறது—நான் போகவேண்டும்—சரியாக நாலு மணிக்கு இங்கு வருகிறேன்.

ல. டாக்டர்—உம்மை ஒன்று வேண்டிக்கொள்ளுகிறேன்— என்மீது மனமிரங்கி அதை மறுக்கலாகாது நீங்கள்.

டா. கேள் அம்மா—நீ வேண்டுவதை ஒன்றும் நான் மறுக்க மாட்டேன்—அதாவது, நியாயமாகக் கேட்பதை.

ல. ஈசனுக்குத்தான் தெரியும்-பிழைக்கப்போகிறாரோ இல்லையோ அவர்—என் புருஷன்—எனக்குத் தாலிகட்டினவர்! ஒரு வேளை பிழைத்தபோதிலும்—மறுபடியும் அவள் வீட்டிற்குப் போய்ச் சேரமாட்டார் என்பது என்ன நிச்சயம்? அதை நினைத்த போதிலும் என்னெஞ்சம் பகீர் என்கிறது !—நான் எதற்காக உயிர் வாழவேண்டும் ? ஆயினும் என்னை அவருக்குக் கலியாணம் செய்து வைத்தார்கள்—அவருடைய கோரிக்கைக்கு விரோதமாக— நான் கைக்குழந்தையாயிருந்த பொழுது—இருந்தபோதிலும் உலகறிய, ஈசன் திருஉள்ளமறிய—அக்னிசாட்சி

யாய் நான் மணந்த புருஷன் அவர். ஆகவே, அவருடைய அந்திய காலத்திலாவது அவர் அருகில் இருந்து நான் ஏன் அவருக்கு சுஸ்ரூஷை செய்யலாகாது? தலையை அசைக்காதீர்கள்!—நான் அழுவதில்லை—பேசுவதில்லை—அவருக்கு ஒரு கஷ்டமும் கொடுப்பதில்லையென்று பிரமாணம் செய்து தருகிறேன்—அவர் நான் இன்னாள் என்றே அறியமாட்டார்.

டா. அது எப்படி சாத்தியம்?

ல. சாதிப்பது ஒன்றுமில்லையே! அவர் எப்பொழுதும் என்னை வெறுத்தார்—என்னைக் கண்ணெடுத்தும் பார்த்ததில்லை—என்முகமே தெரியாது. ஆயினும்—நீங்கள் சொன்ன பிற்பாடு—எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. நீங்கள் அனுப்புகிற—ஒரு நர்சைப்போல வேஷம் பூணுகிறேன்! அதிர்ஷ்டம் என்று பெயர் வைத்துக் கொள்ளுகிறேன். அவர்களைப்போலவெ சந்தடி செய்யாமல் நடந்து, சூத்திரப் பாவையைப் போல் எல்லா வேலைகளையும் பார்த்து வருகிறேன்!

டா. சபாஷ்—நீ ஒரு பெண்மணி! இது ஒரு நல்லயோசனை தான்—ஆனாலும் அந்தப் பரீட்சை இப்பொழுது பார்க்கக்கூடாது—நான் சாயங்காலம் வருகிறேன்.

ல. டாக்டர்! டாக்டர்! கொஞ்சம் தயவு பண்ணுங்கள்—இப்படி சொல்லிவிட்டுப்போய் விடாதீர்கள்—நான் அப்படி செய்யட்டுமோ? ஆகட்டும் என்று சொல்லுங்கள்—ஒருவார்த்தை—எனக்காக!—உங்களை வேண்டிக் கொள்ளுகிறேன்.

டா. எல்லாம் அப்புறம் யோசனை பண்ணிச் சொல்லுகிறேன்.

ல. அப்புறம் யோசனை பண்ணுகிறதாவது!—இன்னும் எத்தனை மணி நேரம் அவர் உயிருடன் இருக்கப் போகிறாரோ?

டா. நீ அவசரப்படக் கூடாதம்மா—லலிதா—நீ கேட்டதை நான் யோசனை பண்ணிப்பார்க்கிறேன், அதனால் ஒரு கெடுதியும் இல்லை என்று எனக்குத் தோன்றினால், உனக்கு உத்தரவு கொடுக்கிறேன், சாயங்காலம் வரையில் கொஞ்சம் பொறுத்துக் கொண்டிரு. ஆனபோதிலும்—நான் உனக்கு உத்தரவு கொடுத்தால், நீ நீலக்கண்ணாடி போட்டுக் கொள்ளவேண்டும். அப்பொழுது தான் அவனுக்கு சந்தேகமிராது—இல்லாவிட்டால் உன் கண்கள் உண்மையை வெளிப்படுத்திவிடும்.

ல. எதை வேண்டுமென்றாலும் செய்கிறேன்—எனக்கு உத்தரவு மாத்திரம் கொடுங்கள்.

டா. சரி—எல்லாம் நான் நன்றாய் யோசித்துச் சொல்லுகிறேன் —அதோ பார்! உன் மாமியார் வழி தடவிக் கொண்டு வருகிறார்கள். இப்பொழுது அவர்கள் என்னைக் கண்டுபிடித்து விட்டால், நான் சாயங்காலம் வரவேண்டும் என்கிற கஷ்டம் எடுத்துக் கொள்ளவேண்டியதில்லை; நான் வருகிறேன்.

ல. டாக்டர், சாயங்காலம் வரையில் நான் பொறுத்துக் கொண்டிருக்கிறேன். ஆயினும் ஞாபகம் இருக்கட்டும், அப்புறம் வேண்டாமென்று நீர் சொன்னால், நான் ஒப்பவேமாட்டேன்—நான் தீர்மானித்து விட்டேன்.

டா. என்ன லலிதா!—என்ன சமாசாரம்? என்ன அவ்வளவு கண்டிப்பாய்ப்பேசுகிறாய்?

ல. துரதிர்ஷ்டம் பிடித்த, அனாதையான, தாய் தந்தை யில்லாத ஒரு பெண், புருஷன் முகமெடுத்துப் பாராத பேதை, கண்டிப்பாய்ப் பேசி என்ன பிரயோஜனம்?

டா. ஆயினும் அப்படித்தானே பேசுகிறாய் நீ?

ல. ஐயோ! அப்படியொன்றுமில்லை—உம்மிடம் நான் ஏன் சொல்லக்கூடாது? இன்றைத்தினம் அதிகாலையில் கனவொன்று கண்டேன். அது வாஸ்தவம் போலவே

யிருந்தது. நான் எப்படியும் அவனை மரணத்தினின்றும்—மரணத்தினும் கேடானகதியினின்றும்—காப்பாற்ற முடியுமென்னுல்—என்று எனக்குள் ஏதோ தோற்றுகிறது. நான் முயன்று பார்க்க எனக்கு ஏன் நீங்கள் உத்தரவு கொடுக்கக்கூடாது ?

டா. ஆகட்டும்—உம்—யோசித்துப் பார்க்கிறேன்—நான் உடனே போகவேண்டும்.

பார்வதி கைத்தடியினுல் மெல்ல வழியைத் தடவிக்கொண்டு வருகிருள்.

பா. அது யார் அது ! டாக்டரா ?—ஏன் அப்படி ஓடிப் போகிறீர்கள் ? நான் உங்களோடே பேச வருகிறேன் என்று?

[லலிதா போகிருள்.]

டா. இல்லை அம்மா, அப்படி ஒன்றுமில்லை. நான் பதினேரு மணிக்கு முன்பாக சேலத்திலிருந்து வந்திருக்கும் ஜமீந்தாரைப் பார்ப்பதாக ஒப்புக் கொண்டிருக்கிறேன்.

பா. என்மாட்டுப் பெண்ணிருக்கிருளே—புண்யவதி!—அவள் உம்மோடு மூன்று மணி சாவகாசம் பேசிக் கொண்டிருந்தாள் போலிருக்கிறதே ! எப்பொழுது இந்த சொத்தெல்லாம் தன் கைக்கு வரும் என்று ஆவலோடு கேட்டுக்கொண்டிருந்தாளோ ?

டா. அம்மா, நீங்கள் சொல்வது எனக்கு அர்த்தமாகவில்லை.

பா. ஆம் ஆம், எப்படி அர்த்தமாகும் உமக்கு ? நான் தான் புத்தியில்லாதவளாச்சே ! எனக்கென்ன எழுதப்படிக்கத் தெரியுமா ? நான் சொல்வது உங்களுக்கு என்னமாக அர்த்தமாகும் ! என்மாட்டுப் பெண் சொல்வது மாத்திரம் உங்களுக்கு நன்ருக அர்த்த மாகிறதல்லவா !—ஏன்?

டா. சிலவேளைகளில்.

பா. நான் சொல்வது உமக்கு அர்த்தமாகாது, அர்த்தமாக வேண்டும் என்று இருந்தாலல்லவோ ?

டா. இது என்ன இப்படி பேசுகிறீர்கள்?

பா. யாராவது உம்மிடம் உண்மையைப் பேசினால், அது உமக்கு ஆச்சரியமாயிருக்கிறாற் போலிருக்கிறது.

டா. உங்களை—நேற்று இன்று தெரியுமா என்ன, நிரம்ப நாளாகத் தெரியுமே எனக்கு!

பா. அது எப்படியிருந்தாலென்ன?—நான் தான் கெழமாச்சே, கண்தெரியாதவள், அசங்கியம் பிடித்தவள்—கையிலே அரைக்காசு இல்லாதவள்—என்னை யார் கவனிக்கிறார்கள்?

டா. வேறு யாரும் கவனிக்கா விட்டாலும்—சுவாமி கவனிப்பார்.

பா. ஆமாமாம்! என்னைப்பற்றி நீங்கள் எல்லாம் என்ன நினைக்கிறீர்கள் தெரியும் எனக்கு. இந்தக்கிழம் எப்பொழுது சாகும் என்று கோரிக் கொண்டிருக்கிறீர்கள்—நான் என்னமோ சாகப்போகிறதில்லை! நான் உயிரோடிருக்கிறது எல்லோருக்கும் கஷ்டம் தான்—இப்பொழுதே ஒரு தடையாயிருக்கிறேன்—இன்னும் என் மகனும் இறந்து விட்டால் இன்னும் பெரிய தடையாவேன்,

டா. அது ஏனம்மா, எப்பொழுது பார்த்தாலும் உம்முடைய மகன் சாகிறதைப்பற்றியே பேசிக்கொண்டிருக்கிறீர்கள்? உம்முடைய ஸ்வீகாரப் புத்திரனுயில்லாது, உம்முடைய சொந்த புத்திரனுயிருந்தால் இப்படிப் பேசுவீரா?

பா. மற்றவர்கள் எல்லோரையும்விட நான் அவன் மீது அதிகப் பிரீதி வைத்திருப்பது அந்தபகவானுக்குத் தான் தெரியும்!

டா. அந்த, மற்றவர்களுக்காக—நான் பரிதாபப்படுகிறேன்,

பா. என்னைப்பற்றியோ? எனக்காகப் பரிதாபப்பட மாட்டீரா? என் மகன் இறந்து போனால் என் கதி என்னவாகிறது?

டா. அவன் இறந்து போவான் என்னும் கவலை உமக்கு வேண்டாம். அவன் பிழைக்கப் போகிறான்.

பா. அந்த வார்த்தையை நான் நம்பவே மாட்டேன். நீரும் அதை நம்பவில்லை, எனக்கு நன்றாய்த் தெரியும். அவனுக்கென்னமோ காலம் கிட்டிக் கொண்டிருக்கிறது; எனக்குத் தெரியாதா என்ன? வீட்டிலே இப்படிப்பட்ட மாட்டுப்பெண் வந்து சேர்ந்தால் வேறென்ன கதி வாய்க்கும்?

டா. ஆயினும், நீங்கள் தானே அம்மா, உங்கள் தாயாதியின் பெண்ணைக் கலியாணம் பண்ணிக் கொள்ள வேண்டுமென்று கட்டாயப்படுத்திக் கட்டிவைத்தீர்கள்.

பா. எனக்கு எப்படித் தெரியும், அவளுடைய தகப்பன் தாயார் அவளை இப்படிப்பட்ட யாருக்கும் அடங்காப்பிடாரியாக—தறிதலையாகப் பழக்கி வைப்பார்கள் என்று?

டா. அவள் இங்கே வந்து வாழ ஆரம்பித்த பிற்பாடு நீங்கள் நல்ல பழக்கம் பழக்கி வைத்திருக்கலாமே?

பா. அவளையா? பழக்குகிறதா? நான் அப்படி ஏதாவது செய்தால் வீட்டை விட்டுப்போக எனக்கு வழி காட்டுவாள்!

டா. இப்பொழுது அப்படிப் போக எனக்கு யாராவது வழி காட்டினால் நன்றாயிருக்கும்!—எனக்கு நிரம்ப நாழிகையாகிறது. அம்மா, கூடுமானால் இன்னொரு சமயம் இந்த முக்கியமான சம்பாஷணையை முடிப்போம்—இப்பொழுது நான் ஒரு இடத்திற்கு அவசரமாகப் போக வேண்டியதிருக்கிறது.

பா. டாக்டர்! டாக்டர்! இதற்குள்ளாகப் போய் விடாதீர்கள்—ஒரே வார்த்தை, கொஞ்சம் தயவு பண்ணுங்கள்—நானோ சாகக்கிடக்கிற கிழவி, கொஞ்சம் பொறுத்துக்கொள்ளுங்கள்—இந்த சொத்துகளுக் கெல்லாம்

பின்னாலே ஒரு சச்சரவும் இல்லாதபடி, என் பிள்ளை உயிருடன் இருக்கும்பொழுதே—அதாவது நான் என்ன சொல்கிறேன் என்றால்— ஏதாவது நடக்காததன் முன்—ஒரு ஏற்பாடு செய்து விடவேண்டியது அவசியமில்லையா?

டா. இப்பொழுது என்ன ஏற்பாடு செய்யமுடியும்? அவன் தான் பிரக்ஞையில்லாதிருக்கிறானே! அவனுக்குக் கொஞ்சம் சுவஸ்தமாகிற வரையில் அந்த யோசனையே பண்ண முடியாது.

பா பிரக்ஞை யில்லாதிருக்கும் பொழுது கூட—அநேகம் பெயர்—உயில் எழுதி வைக்கிறதாக—நான் கேள்விப் பட்டிருக்கிறேனே ?

டா. போன ஞாயிற்றுக்கிழமை அவர் வீட்டிற்குப் போயிருந்தீரே, அவரைப் பார்க்க, அப்பொழுது, உங்கள் அக்காள் பிள்ளை, இதை உங்களுக்குக் கற்றுக் கொடுத்தாரோ ?—ஆமாம் ஆமாம், அவர் லாயர் ஆச்சுதே, இந்த விஷயங்களெல்லாம் மற்றவர்களைவிட அவருக்கு நன்றாய்த் தெரியுமல்லவா !

பா. என் மகன் இந்த கிடையிலே கிடக்கும்பொழுது, என் அக்காள் பிள்ளையைப் பார்ப்பதற்காவது, வேறு யாரைப் பார்ப்பதற்காவது, நான் எப்படி போயிருக்கக் கூடும்?

டா. எப்படி போயிருக்கக் கூடும் !—வேண்டுமானால் உமக்குச் சொல்லுவேன் விபரமாக—ஆயினும் எனக்கு நேரமாகிறது இப்பொழுது.

பா. ஆனால், வேறு வழி யில்லையா ? நீங்கள் சாட்சி போடுகிறதாக இருந்தால் கூட அவன், ஒரு உயில் எழுத முடியாதா ?

டா. முடியவே முடியாது !

பா. அப்பொழுது இந்த சொத்தெல்லாம் யாருக்குச் சேருகிறது ?

டா. அவனுடைய வார்சுக்கு.

பா. அவனுக்குத் தான் வார்சு ஒருத்தருமில்லையெ—பெண், பிள்ளை, ஒன்றுமில்லையெ ! அப்படி எதாவது இருந்தால் இப்படி அழுவேனு நான் ? அவனுடைய பெண்சாதியின் அண்ணன் தம்பிமார் வந்து எல்லா வற்றையும் நிச்சயமாகக் கொண்டு போய் விடுவார்கள்.

டா. அவன் பெண்சாதி அவ்வளவு மட்டியல்ல.

பா. அது என்னமோ வாஸ்தவம்—எனக்குத் தெரியாதா என்ன ? அவள் மாமியாரிடத்தில் கெட்டிக்காரியாகயிருக்கலாம், சொந்த அண்ணன் தம்பிகளிடத்தில் இந்த கெட்டிக்காரத்தனம் சாயுமா?

டா. ஏனம்மா, அவளுடைய அண்ணன் தம்பிகள் இந்த சொத்தைக் கொண்டு போனுல் உமக்கென்ன கெட்டுப்போச்சுது ? நீங்கள் சவுக்கியமாக வாழ்வதற்குத்தான் உங்களுக்கு வேண்டியதிருக்கிறதே.

பா. என் புருஷன் சொத்தை—அன்னியர்கள் கொண்டுபோக—அதைப் பார்த்து நான் வாழ்ந்திருக்க மாட்டேன்.

டா. அந்தக் கஷ்டம் உமக்கு வேண்டியிராது—அன்றியும் உமது மாட்டுப் பெண் உமக்கு அன்னியள் அல்லவே.

பா. என் பிள்ளைக்குப் பிற்காலம் என் புருஷன் சொத்துக்கு நான் தானே வார்சு ?

டா. சரி—அப்படியிருந்தால்—உங்களுக்குத் தான்வரும். இப்பொழுது எனக்குப்போக விடைகொடுங்கள்.

பா. ஆஹா! அப்படி நினைக்கிறீர்களா நீங்கள்—ஆகவே அப்பொழுது ஒரு கஷ்டமும் இராதே ?

டா. நான் நினைக்கிறபடி—ஒரு கஷ்டமுமிராது.

பா. அப்பா! என் மனதில் இருந்த பெருங்கவலை போச்சுது. நானும் அப்படித்தான் நினைத்தேன்—டாக்டர், நீங்கள்

நிரம்பபுத்திசாலியாச்சுதே! எப்படியாவது என் பிள்ளையை சுவஸ்தப்படுத்துவீர்கள் என்று எனக்குத் தெரியும்

டா. உம்—உங்களுடைய—ஆசீர்வாதத்தினுலும்—நல் எண்ணத்தினுலும் அப்படியே ஆகுமென நம்புகிறேன்.

[போகிறார்

காட்சி முடிகிறது.

இரண்டாவது அங்கம்

முதல் காட்சி.

இடம்—நோயாளி படுத்திருக்கும் அறை.

ராமநாதன் படுக்கையின் மீது படுத்திருக்கிறான்.

காலம்—சாயங்காலம்.

டாக்டர் நாயுடும், லலிதாவும் பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

ல. டாக்டர், நாம் அந்த அறைக்குப் போய்ப் பேசுவோமே.

டா. டாக்டருக்கு அவருடைய வேலை தெரியும், ஒரு நர்சா அவருக்கு அவருடைய வேலையைச் சொல்லிக்கொடுக்க வேண்டும்?

ல. நாம் பேசும் சத்தடியினுல் அவர் ஒரு வேளை விழித்துக் கொண்டால்?

டா. கொஞ்சம்—நீ—அவ்வளவு பரிவு பாராட்ட வேண்டியதில்லை இப்பொழுது. இன்னும் எட்டுமணி நேரம்வரையில், நீ என்ன தான் செய்தபோதிலும் அவனை விழிக்கச் செய்யமுடியாதுன்னுல். நாளை சூர்யோதயம் அவனுக்கு பிரக்ஞைவரும். வியாதியின் கொடுமை நீங்கி சுவஸ்தமாகும் மார்க்கத்திற்திரும்புவான், அப்புறம் நாம் பயப்பட வேண்டியதில்லை.

ல. நல்ல வழியில் திரும்பும் பொழுதெல்லாம், நமக்கு சூர்யோதயம் தானே? இனிமேல் பயம் ஒன்றுமில்லையென்று நினைக்கிறீர்களா டாக்டர்?

டா. ஆமாம் குழந்தை,—இந்த வியாதிவரைக்கும் அபாயமில்லை.

ல. டாக்டர்!—உங்களுக்கு நான் என்னகைம்மாறு செய்யப்போகிறேன்? இந்த ஏழுதினங்கள் தான் என் வாழ்நாட்களில் நான் மிகவும் சுகமாய்க்கழித்த தினங்கள்!

டா. உயிர் நிற்குமோ போகுமோ, என்று ஊசலாடிக்கொண்டிருந்த கவைக்குதவாத உன் கணவனைக்கண்கொட்டாது கவனித்து, அவனுக்கு சுஸ்ரூஷை செய்துகொண்டிருந்ததா? சந்தோஷம் என்கிற பதத்திற்கு உன் வியாக்கியானம் வெகு விந்தையானதே?

ல. இப்படி—சந்தோஷமாயிருந்தாற் போது மெனக்கு. இப்படிப்பட்ட கடுமையானகஷ்டத்திலும் ஒருவித சுகமிருக்கின்றது.

டா. அம்மா, இந்த விஷயங்களெல்லாம் எங்கள் வயித்திய சாஸ்திரத்திற்குள் அடங்கவில்லை—ஆகவே இதைப்பற்றி உன்னிடம் வாதாட எனக்கிஷ்டமில்லை. ஆயினும் இதோபார்! நீ ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்—மிகவும் ஜாக்கிரதையாய்—அவன் விழித்தவுடன்—

மிஸ் தாரன் என்னும் நர்ஸ் வருகிறாள்.

மி. தா. ஐயா, அந்த கிழவி அம்மா, இவருடைய தாயார், பக்கத்தறையிலிருக்கிறார்கள், இங்கே வந்து, தன் பிள்ளையைப் பார்க்கவேண்டும் என்று ஒரேபிடிவாதமாகச் சொல்லுகிறார்கள்.

டா. அந்த அம்மா எப்பொழுது திரும்பிவந்தார்கள்? அன்றைத்தினம் மத்தியானம் உன்னுடன் சண்டைபோட்ட பிறகு, தன் அண்ணன் மகன் வீட்டிற்கு—அந்தலாயர்

வீட்டிற்குப்—போய் விட்டார்களென்றல்லவோ நினைத்தேன்?

மி. தா, இப்பொழுது தான் கொஞ்சம் நிமிஷங்களுக்கு முன்பாகத் திரும்பிவந்திருக்க வேண்டும். ஒரு வேளை வேலைக்காரர்கள்—உம்—நான் என்ன செய்வது? நான் சொல்வது என்னவென்றால்—நான் அவர்கள் உள்ளே வராதபடி எப்படி தடுப்பது?

டா. அந்த வேலையை எனக்கு விட்டுவிடு, நான் பார்த்துக் கொள்ளுகிறேன் வராதபடி. (கொஞ்சம்தூரம் போய் நிதானித்துத் திரும்பிவந்து) அம்மா, அதிர்ஷ்டம், நான் சொன்னது ஞாபக மிருக்கட்டும். நீ மிகவும் ஜாக்கிரதையாக யிருக்கவேண்டும். அவர் உன்னை—நீ அவரைத் தொந்திரவு செய்யாதே; அவர் எதிரில் அடிக்கடி போகாதே—அவர் நிம்மதியாயிருக்க வேண்டியது நிரம்ப அவசியம்; நான் சொல்வது உனக்கு அர்த்தமாகிறதே?

ல. அப்படியே ஐயா. [டாக்டர் போகிறார்.]

மி. தா, அந்த கிழவி அம்மா, இங்கே வந்து என்ன செய்ய வேண்டுமென்கிறார்கள்? நிரம்ப தத்தளித்துக்கொண்டிருப்பவர்கள் போல் காணப்பட்டார்கள். அந்த அம்மா நிரம்ப விந்தையானவர்களாயிருக்கிறார்கள்.

ல, எப்பொழுதும் இப்படித்தான்.

மி, தா. அவர்களை உனக்குமுன்பே தெரியுமோ? எத்தனை காலமாகத்தெரியும்?

ல. ஒரு விதமாகத் தெரியும்—எத்தனை நாளாகத்தெரியும் என்பது எனக்கு ஞாபகமில்லாதிருப்பதே நல்லது.

மி. தா. அந்த அம்மாளிடம் உனக்கேதோ பயமிருக்கிறாற் போலிருக்கிறதே, அவர்கள் இங்கே வந்தால் என்ன? காலை வரையில் நோயாளி கண் விழிக்கமாட்டார் என்று டாக்டர் தான் சொன்னாரே.

ல. உம், அப்படி இருந்தால்—அது எல்லாம் எனக்குத்தெரியாது—எது எப்படியிருந்த போதிலும் ஒரு ஏற்பாடு ஏற்பாடுதானே; இப்பொழுது வரும்படி விட்டால் ஒவ்வொரு மணியும் உள்ளேவர வேண்டுமென்று கேட்பார்கள். எப்படியோ அந்த அம்மாள் எனக்குப் பிடிக்கவில்லை.

மி. தா. பாவம்! கிழவி அம்மா! அவர்களே சொல்கிறபடி, இன்னும் எத்தனை நாள் உயிரோடிருக்கப் போகிறார்கள்—எனக்கு ஒரு ரூபாய் கூட கொடுத்தார்கள்.

ல. என்ன! லஞ்சமா வாங்குகிறாய்? எப்படி மனம் துணிந்தது? இதை நான் டாக்டருக்குத் தெரிவிக்கவேண்டும்.

மி. தா. நான் ஒன்றும் தப்பு செய்யவில்லையே! இனமாகக் கொடுத்தது தானே; அதைப்பற்றி நீ இவ்வளவு கோபம் கொள்வதானால், இதோ போய் அதைத் திருப்பிக் கொடுத்து விடுகிறேன். [போய்க்கொண்டு]

ல. வெளியே போகும் பொழுது கதவைச் சாத்திக்கொண்டு போ, உன்னுடைய, பாபம் கிழவி அம்மாள், உள்ளேவராதபடி பார்.

பார்வதி வருகிறாள்; மீஸ் தாரன் போகாது நின்றுவிடுகிறாள்.

மி. தா. இந்தாங்க அம்மா உங்கள் ரூபாய்—நீங்கள் இங்கே உள்ளே வரக்கூடாதாம்.

பா. என்ன ரூபாயா? என்னுடைய தல்ல அது? நான் எப்பொழுது கொடுத்தேன் உனக்கு? நான் உள்ளே வரக்கூடாதென்று யார் சொல்லுகிறது? இது என் வீடு! என்னையார் கேட்பது?

மி. தா. அந்த அம்மா—டாக்டர் கண்டிப்பாய் உத்தரவு செய்திருக்கிறார்.

பா. இந்த வீடு டாக்டருக்குச் சொந்தமாக வில்லை—இன்னும், ஸ்வாமியினுடைய தயவினாலே என் பிள்ளை இன்

னும் உயிரோடுதான் இருக்கிறான். ஆனாலும்—அந்த சின்ன அம்மா எங்கே?—புண்யவதி-என் மாட்டுப்பெண்? டாக்டர் சொன்னாரே அவள் இங்கிருப்பதாக.

ல. டாக்டரா?—அப்படி இருக்குமா?—அம்மா, ஒருவேளை அவள் இந்த அறையில் இருப்பதாக நீர் நினைத்தால் நீங்கள் உள்ளே போகமாட்டீர்கள் என்று நம்பி உங்களுக்கு இவ்வாறு டாக்டர் சொல்லியிருக்க வேண்டும். கொஞ்சம் தயவுசெய்து இந்த அம்மாளை அறைக்கு வெளியே அழைத்துக் கொண்டு போய்விடு-கொஞ்சம் தயவுசெய்.

பா. நீயாரம்மா அது? நீ என்ன செய்கிறாய் இங்கே?

ல. நாங்கள் இருவரும் இந்த நோயாளிக்கு நர்சுகள், அவருக்கு சுஸ்ரூஷை செய்கிறோம்.

பா. உன் குரல்—தெரிந்த குரலாயிருக்கிறது—ஏதோபார்ப்போம்—ஓ! நீயா அது! நினைத்தேன் நினைத்தேன்! அப்பொழுதே சந்தேகப்பட்டேன்; அப்படியா சமாசாரம்! இப்பொழுது எல்லாம் பட்டப்பகலாய்த் தெரிகிறது. அந்த பெண்பிள்ளை வீட்டில் நீ தான் அவனுக்கு ஏதோ மருந்துவைத்து, இவ்வாறு நோயுண்டாக்கி, அவனுக்குப்பயித்தியம் பிடிக்கச் செய்தாய்! இப்பொழுது அவனை இங்கே கொண்டுவந்து, கொல்லப் பார்க்கிறாயா? ஆகட்டும்! ஆகட்டும்! இதோ போய் ஊரெல்லாம் குழப்பம் பண்ணுகிறேன்.—ஒருகிழவி என்ன செய்யக் கூடுமென்பதை அறிவாய் உடனே! அப்படியா சமாசாரம்!

ல ஐயோ! என்ன பெண்ஜென்மம்!—அம்மா, இந்த பயமுறுத்தலுக்கெல்லாம் நாங்கள் அஞ்சமாட்டோம். உங்கள் புத்திகொஞ்சம் கெட்டுப் போயிருக்கிறது—உங்கள் பிள்ளையின் மீதுள்ள பிரீதியினால்—வேறென்ன காரணமிருக்கப் போகிறது! ஆயினும் இங்கே ஒன்றும் கலகம் செய்யாதீர். இன்னும் ஒருவார்த்தை பேசுவீரானால் பிறகு அதற்காக வருத்தப்படுவீர்கள். தயவுசெய்து போங்கள் வெளியே!

பா. இதோ உடனே போகப் போகிறேன்–எங்கே தெரியுமா?

ல. எனக்கு அவசியமில்லை. அந்த கிழ அம்பட்டனிருப்பிடம் கண்டுபிடித்து விட்டோம், அவன் உயிருடன்தானிருக்கிறான், அவன் ஒரு பொய்யும் சொல்லமாட்டான்—போங்கள் வெளியே!

பா. கிழ அம்பட்டனா! ஐயோசாமி! கிழ அம்பட்டர்களைப் பற்றி எனக்கென்ன தெரியும்? நீ என்னமோ மறைத்து வைத்துப் பேசுகிறாய்; எனக்கொன்றும் அர்த்தமாக வில்லை! என்பிள்ளை உயிரோடிருக்கிறானா என்று நான் பார்த்து விட்டுப்போக வந்தேன்—பார்த்தாச்சுது—இனிமேலே எனக்கென்ன இங்கு வேலை! இதோ இந்த க்ஷணம் என் தமயன்பிள்ளை வீட்டுக்கு போகிறேன்—நீ என் பேரிலே கோபித்துக்கொள்ளாதே அம்மா நர்சே.

ல. போங்கள்! [பார்வதி போகிறாள்.]
ஈசனே! ஈசனே! என்ன உலகம்!

மி. தா. நீங்கள் இரண்டு பெயரும் பேசிக்கொண்டது எனக்கொன்றும் அர்த்தமாக வில்லை, உங்களிருவருக்குள் ஏதோ ரகசியங்கள் இருக்கிறாற் போலிருக்கிறது. ஒருவருக்கொருவர் பயப்படுகிறாற் போலிருக்கிறதே—என்ன ஆச்சரியம்! அந்த அம்மா எப்படி திடீரென்று அடங்கி விட்டார்கள்!

ல. குற்றமுள்ள நெஞ்சு அப்படித்தான் குறுகச்செய்யும்.

மி. தா. ஆயினும் ஏதோ அம்பட்டனைப்பற்றிச் சொன்னையே அது என்ன?

ல. அது ஒரு பெரிய வேடிக்கை!—இன்னொருசமயம் அதை உனக்குச் சொல்லுகிறேன்—மிஸ்தாரன், நாமிருவரும் கொஞ்சம் இளைப்பாறுவோம். நான் இங்கே பார்த்துக் கொள்ளுகிறேன்; நீ களைத்திருக்கிறாய், பக்கத்து அறைக்குப்போய் படுத்துறங்கு; வேண்டியதாயிருந்தால் உன்னைக்கூப்பிடுகிறேன்.

மி. தா. வேண்டாம், இன்றிரவு நான் இங்கே பார்த்துக் கொள்ளுகிறேன். இது நியாயமல்ல, ஏழிராத்திரியாகக்கண் மூட இல்லையே நீ.

ல. எனக்கு அது பழக்கமாய் விட்டது; நிரம்ப சலாம், நீ போய் கொஞ்சம் இளைப்பாறு.

மி. தா. உன் இஷ்டப்படியே; டாக்டர் மாத்திரம் என் மீது கோபித்துக்கொள்ளாமலிருக்க வேண்டும்.

ல. அதை நான் பார்த்துக் கொள்ளுகிறேன், குட்நைட்.

மி. தா. குட்நைட். [போகிருள்.]

[லலிதை, நோயாளியைச் சற்று உற்றுப்பார்த்து விட்டு, பெருமூச்செறிந்து, ஒரு விளக்கைத் தவிர மற்றெல்லா விளக்குகளையும் அவித்து விட்டு, கைகூப்பி ஈசனைக்குறித்து தியானம் செய்துவிட்டு, பிறகு ஒரு சோபாவின்மீது சாய்கிருள்.]

காட்சி முடிகிறது.

இரண்டாம் காட்சி

இடம்—அதே இடம். காலம்—அதிகாலை.

ராமநாதன் படுக்கையின்மீது புரண்டு விழிக்க ஆரம்பிக்கிருன். லலிதா ஒரு பக்கமாய் அவனைக்கவனித்தவண்ணம் நிற்கிருள்.

ரா. என்ன இது?—நான் இப்பொழுது எங்கே இருக்கிறேன்?—சந்திரா—சந்திரா!

ல. அந்தப் பெண்பிள்ளையா!—இன்னும்!

ரா (கண்களை நன்ருய்த்திறந்து லலிதாவைப் பார்த்து) யார் நீ?—நான் இப்பொழுது எங்கே இருக்கிறேன்?

ல. நீங்கள் உங்கள் சொந்த வீட்டில் இருக்கிறீர்கள்—உங்கள் படுக்கை அறையில்.

ரா. இல்லை—அப்படியல்ல—யார் நீ?

ல. நான்—உமக்கு சிகிச்சைசெய்து கொண்டிருக்கிறேன்—நர்ஸாக.

ரா. எனக்கென்ன உடம்பு அசௌக்கியமா?—எத்தனை நாளாக இப்படி இருந்தேன்?

ல. பிறகு எல்லாவற்றையும் சொல்லுகிறேன். டாக்டர் நீங்கள் பேசக்கூடாதென்று சொன்னார். ஆகவே தயவு செய்து பேசாமல் கொஞ்சம் நிம்மதியாயிரும்.

ரா எனக்கு தாகமாயிருக்கிறது; கொஞ்சம் தீர்த்தம் கொண்டுவா குடிக்க.

ல. அது வேண்டாம், இரண்டு நிமிஷத்தில் சுடச்சுட கொஞ்சம் காபி கொண்டுவருகிறேன்; கொஞ்சம் கண்ணைமூடிக் கொண்டு நிம்மதியாயிரும்.

ரா. ஆம், சீக்கிரம்கொண்டுவா. (தூங்குவது போலக் கண்ணை மூடிக்கொள்கிறான். லலிதை வெளியே போய் காபி கொண்டுவருகிறாள்). கொண்டு வந்தாயா காபியை?

[உட்காரமுயலுகிறான்.]

ல. வேண்டாம், நீங்கள் உட்காரக்கூடாது. இன்னும் உங்களுக்கு மிகவும் பலஹீனமாயிருக்கிறது. இந்த கரண்டியினால் உங்களுக்கு காபியைக் கொடுக்கிறேன்.

[அப்படியே செய்கிறாள்.]

ரா. அப்பா!—இப்பொழுது நிரம்ப பரவாயில்லை எனக்கு; அந்த காபி நிரம்ப நன்றாக இருந்தது என்றால்—நீயா செய்தாய் அதை?

ல. ஆமாம்.

ரா. கொஞ்சம் நிமிஷம் நான் உட்காரலாமா?

ல. தயவுசெய்து முயன்று பார்க்காதீர்கள். அது உங்களுக்கு கஷ்டம்தரும்; இன்னும் கொஞ்சம் தூங்கிப் பாருங்கள்.

ரா. இல்லை, முடியாது என்னால்; அதிக நாழிகை தூங்கிவிட்டாற் போல் தோற்றுகிறது எனக்கு.

ல. கொஞ்சம் கண்ணை மூடிக்கொண்டு பாருங்கள், தூக்கம் வரும் உங்களுக்கு. இன்னும் உங்களுக்கு மிகவும் பல ஹீனமாயிருக்கிறது.

ரா. நான் முயன்று பார்க்கிறேன்.

ல. ஆமாம், பிரயத்னம் பண்ணிப் பாருங்கள். இன்னும் கொஞ்சம் நிம்மதியாக இளைப்பாறுவீரானால் உமக்கு நன்றாய் சுவஸ்தமாகிவிடும்—இன்னும் சில தினங்களில்.

ரா. சில தினங்களா?

ல. அதோ பாருங்கள்! மறுபடியும் பேச ஆரம்பிக்காதீர்கள்!

[ராமநாதன் தூங்கப்பார்க்கிறான்; லலிதை சோபாவின் மீது சாய்ந்து கொள்ளுகிறாள். ராமநாதன் சில நிமிஷங்களில் புரண்டு கண்விழிக்கிறான்.]

ரா. சந்திரா! சந்திரா!

ல. ஈசனே!

ரா. நர்ஸ்! உன் பெயர் என்ன?—என் சந்திராவை உனக்குத் தெரியுமா?—அவள் இப்பொழுது எங்கே இருக்கிறாள்?

ல. அவள்—வெளியே போய்விட்டாள்—என்று நம்புகிறேன்.

ரா. வெளியேயா?—எங்கே போனாள்? எப்பொழுது திரும்பிவருவாள்?

ல. உம்—எனக்குத்தெரியாது—அது சொல்வது கஷ்டம்—ஆயினும் நான் விசாரித்துப்பார்க்கிறேன்.

ரா. அதிருக்கட்டும், இது எந்தவீடு? நான் அவள் வீட்டில் இருந்த ஞாபகம் இருக்கிறதே எனக்கு.

ல. ஆம் இருந்தீர்கள்—அப்படித்தான் எனக்குச் சொன்னார்கள். அங்கே உங்களுக்கு உடம்பு அசௌக்கியமாயிற்

ரும்—அப்பொழுது அவளுடைய வேலையாள் கொண்டு வந்து கொடுத்த மருந்தை நீர் சாப்பிட்டீராம்—நிரம்ப அசௌக்கியம் ஆகவே—உம்மை அவ்விடம் பார்த்துக் கொள்ள—உமக்கு சிகிச்சை செய்ய—ஒருவருமில்லாதிருக்க—டாக்டர் நாயுடு இதைக்கேள்விப்பட்டு—உங்களை இங்கே கொண்டுவந்தார். இப்பொழுது உங்களுக்கு நிரம்ப சவுக்கியமாயில்லையா ?

ரா. ஓ!—அந்த மருந்து!—ஆம், அந்த மருந்து தான்!—ஆயினும் அந்த சந்திரா எப்பொழுது வருவாள்?

ல. அவள் எங்கே இருக்கிருள் என்று கண்டு பிடிக்கப்பார்க்கிறேன். கொஞ்சம் தயவு செய்து நிம்மதியாயிரும். இல்லாவிட்டால் உங்களைப்பேச விட்டேன் என்று டாக்டர் என்னைக்கடிந்து கொள்வார், பிறகு என் வேலை போய்விடும்.

ரா. அப்படி இராது—நீ நிரம்ப நல்லவள்—நான் தூங்கிப் பார்க்கிறேன், எனக்கு உடம்பு சீக்கிரம் சுவஸ்தமாக வேணுமென்று விரும்புகிறேன். [தூங்கப்பார்க்கிருன்.]

காட்சி முடிகிறது.

மூன்றும் அங்கம்

முதல் காட்சி.

காலம்—சாயங்காலம்.

ராமநாதன் ஒரு பெரிய சாய்வு நாற்காலியில் உட்கார்ந்திருக்கிருன். லலிதா மருந்தை புட்டியினின்றும் வார்த்துக்கொண்டிருக்கிருள்.

ல. இந்த மருந்தை தயவு செய்து சாப்பிடுங்கள்.

ரா. ஓ ! பெரிய தொந்திரவாகப் போச்சு! எப்பொழுதுபார்த்தாலும் மருந்தும் மாத்திரையும், மாத்திரையும் மருந்தும்

தான்! எப்பொழுது இது எல்லாம் முடிகிறது? பதினைந்து நாளாச்சுதே!

ல. டாக்டர்—ஒருவேளை—உங்களுக்குச் சொல்லுவார்,

ரா. இந்த அறையிலேயே அடைக்கப்பட்டிருப்பது தான் எனக்கு பெரிய நோயாயிருக்கிறது.

ல. இப்படியிருப்பது உங்களுக்கு நிரம்பகுணத்தைச் செய்கிறதே.

ரா. என்ன குணமோ எனக்குத் தெரியாது வாஸ்தவமாய்!—அதிருக்கட்டும் சந்திரா எங்கே? இன்றைக்குச் சொல்வதாகச் சொன்னையே என்னிடம்?

ல. அவள்—உங்களுடைய—பெண்சாதியல்லவென்று சொல்லுகிறார்களே.

ரா. என் பெண்சாதியா! என் மனைவியாரென்று எனக்குத் தெரியவும் தெரியாது—தெரியவும் வேண்டியதில்லை என் உயிர் மணந்தது சந்திராவை; அவள் தான் என் பெண்சாதி; அவள் மீதுதான் மிகவும் ஆசை வைத்திருந்தேன். நீ எனக்குச் சொல்லாவிட்டால், நானே வெளியே போய் நாளைத்தினமே கண்டுபிடிப்பேன்; நீயும் இந்த டாக்டரும் சேர்ந்து என்னை என்னமோ ஏமாற்றுகிறீர்கள்.

ல. உங்களை ஏமாற்ற வேண்டும் என்னும் எண்ணம் எனக்குக்கொஞ்சமும் இல்லை. உங்களுக்காக நான் எவ்வளவு துயரப் படுகிறேன் என்பது அந்த ஈசனுக்குத் தெரியும்!

ரா. ஆம், அது எனக்குத்தெரியும்—நான் பார்த்தேன—இன்றைத்தினம் காலை நான் சந்திராவைப்பற்றி விசாரித்தபொழுது உன் கண்களில் நீர்தளும்பியதை நான் கண்டேன்; அப்பொழுதே கேட்க வேண்டுமென்று வாயெடுத்தேன்—ஆயினும்—எப்படியோ—முடியாமற் போயிற்று.

இந்த வியாதியில், எனக்கு சிகிச்சை செய்ய நர்ஸாய் வருவதற்குமுன் என்னை உனக்குத்தெரியுமோ?

ல. ஏதோ கொஞ்சம்.

ரா. அப்படியிருக்கும்பொழுது எனக்காக ஏன் இவ்வளவு கஷ்டப்படுகிறாய்?

ல. அது என் கடமை—அதாவது—அது என் சுபாவம்.

ரா. இப்பொழுது எனக்கு ஞாபகம்வருகிறது—என் சொந்த சந்திரா கூட எனக்காகக் கண்ணீர்விட்டதில்லை ஒருபொழுதும்.

ல. உங்களுக்காக அழுதிருக்க மாட்டாள் வாஸ்தவத்தில்—உங்களுடைய பணத்திற்காக அழுதிருப்பாள் பலதரம்.

ரா. இதோ பார்! அவள் பேரில் இந்தமாதிரி யெல்லாம் பேசாதே! எனக்குக் கோபம் வரும்படி செய்யாதே. அவள் நிரம்ப நல்லவள்—என்மீது அவள் நிரம்ப ஆசை வைத்திருந்தாள் என்று நிச்சயமாய்ச் சொல்வேன்.

ல. இருக்கலாம்—அவளுடைய வழியில்—ஆயினும் அதைப் பற்றி நான் ஏன் பேசவேண்டும்?

ரா. நான் உன்னைக் கேட்டுக்கொண்டிருந்தது நீ என்மீது வைத்த பட்சத்தைப் பற்றி—நீ என்மீது எவ்வளவு பட்சமாய் எனக்கு நன்மைசெய்திருக்கிறாய்!

ல. என்னுடைய கடமையைத் தான் நான் செய்தேன்.

ரா. நீ எவ்வளவு காலமாக நர்ஸாக இருக்கிறாய்?

ல. கொஞ்ச காலமாகத்தான்.

டாக்டர் நாயுடு வருகிறார்.

டா. ஓ! கிழவா! எல்லாம் சவுக்கியமாய் விட்டாற் போலிருக்கிறதே. நிரம்ப சந்தோஷம்—என்னமுகத்தை இரக்கிக் கொள்ளுகிறாய்? ஓகோ! நர்ஸ்கிட்ட ஏதாவது ரகசியம் பேசிக்கொண்டிருந்தாயா? அப்படியா சமாசாரம்!

ல. என்ன டாக்டர், என்ன தான் நர்ஸாக இருந்த போதி லும், என்னை அவ்வளவு கேவலமாக எண்ணிவிடலாமா? இந்த மாதிரியாக நீங்கள் என்னைப் பரிஹாசம் செய்வது உங்களுக்கு நியாயமல்ல.

ரா. அப்படி யொன்றுமில்லை அம்மா! டாக்டர் ஒன்றும் தப் பாக எண்ணினவரல்ல. ஏன் டாக்டர்?

டா. சந்தேகமென்ன? எப்படி எண்ணுவேன்?—அது அசாத் தியம்.

ரா. டாக்டர், இந்த அறையிலேயே இன்னும் எத்தனை நாள் என்னை அடைத்து வைக்கப் போகிறீர்கள்?

டா. நீ இந்த அறைக்கு வெளியிலிருப்பதை யெல்லாம் மறக் கும் வரையில் உன்னை இங்கேயே ஏன் அடைத்து வைக்கலாகாது என்று யோசிக்கிறேன். அது என்ன கதிக்குக்கொண்டு வந்து விட்டது பார் உன்னை! நீ சாகக் கிடக்க இருந்தாய்; உன்னை இங்கு வீட்டிற்குக்கொண்டு வந்து, உயிர்தப்பவைத்தது, பிரம்மப் பிரயத்னமாயிற்று எனக்கு.

ரா. டாக்டர், அதற்காக உங்களுக்கு எப்பொழுதும் நன்றி பாராட்ட வேண்டியவனாயிருக்கிறேன். ஆயினும் சாயங் காலங்களில் இப்படி கொஞ்சம் வெளியில் சவாரி போய்வரலாகாதா நான்?

டா. இந்த அம்மாளை உன்னுடன் அழைத்துக் கொண்டுபோ வதானால். இன்னும் சில தினங்கள் உன்னருகில் எப் பொழுதும் ஒரு நர்ஸ் இருக்க வேண்டியது அதி அவ சியம்.

ரா. தினம் சாயங்காலங்களில் இந்த அம்மா என்னுடன் வருவதானால் எனக்கு நிரம்ப சந்தோஷம்—இவர்கள் நிரம்ப நல்லவர்கள், என்மீது மிகவும் பட்சமாயிருக்கி றார்கள் டாக்டர். இவர்கள் நான் எப்பொழுதும் ஈஸ்வ ரனை நினைக்கும்படிச் செய்கிறார்கள் என்னை. இவர்க

ளுடைய குரலைக்கேட்கும் பொழுதெல்லாம் இனிமேல் கெட்ட வழக்கங்களையெல்லாம் விட்டு புருஷ யோக்கியமான மார்க்கத்தில் நடக்கவேண்டுமென்று என்னைத் தீர்மானம் பண்ணும்படிச் செய்கிறது.

டா. அவர்கள் மீது நீ இவ்வாறு பட்சம் வைத்திருப்பது எனக்கும் பிரீதியைத்தருகிறது.

ரா. பட்சமா? இவர்கள் மாத்திரம் எப்பொழுதும் என்பக்கத்தில் இருப்பதானால், என் ஆயுசெல்லாம் இப்படியே நோயாளியாயிருக்கக்கூடாதா என்றல்லவோ கோருகிறேன்.

டா. இது எனக்கு ஆச்சரியமாயில்லை—உனக்கு இவர்களை நன்றாய்த்தெரியாது இன்னும்—

ல. டாக்டர், இவர் இனிமேல் மருந்தும் மாத்திரைகளும் சாப்பிடமாட்டேன் என்று ஆட்சேபணைசெய்கிறார்.

ரா. இல்லை! நான் அப்படி ஆட்சேபிக்கவில்லை-நான் சொன்னதென்னவென்றால்—அவைகளை தினம் ஆறுதரம் விழுங்குவது தான் கஷ்டமாயிருக்கிறதென்றேன்.

டா. அது உதவாதப்பா, பழயபடி சவுக்கியமாகி நல்ல பலம் வருகிறவரையில் அதைச் சாப்பிட்டுத்தான்தீரவேண்டும்.

ரா. அப்படித்தான் செய்யவேண்டுமென்றால்—செய்கிறேன்.

டா. இப்பொழுது எவ்வளவு வழிக்குவந்து விட்டாய் நீ! பெரிய வியாதியில் விழுந்தெழுந்தால்—குணம் எல்லாம் சரிப்பட்டுப்போகும்—நான் வருகிறேன்.

ரா. போய்வாருங்கள் டாக்டர்.

டா. நான் வருகிறேன்; அம்மா, அதிர்ஷ்டம்—நோயாளியின் மீது ஒரு கண்ணுயிரு—அதிருக்கட்டும், உன் கண்கள் எப்படியிருக்கின்றன? உன் கண்ணாடிகளை எடுத்து விட்டதை நான் கவனிக்கவில்லை.

ல. அவைகளை இன்னும் நான் போட்டுக் கொண்டிருக்க வேண்டியது அவசியமாகத் தோன்றவில்லை எனக்கு.

டா. எதற்கும் போட்டுக் கொண்டிருந்தால்—நலமல்லவா ?

ல. இப்பொழுது எல்லாம் சரியாகிவிட்டது. அதை எந்நேரமும் போட்டுக் கொண்டிருப்பதென்றால் கஷ்டமாயிருந்தது; அன்றியும் இவர் தனக்கு ஏதாவது படிக்கும்படி என்னை அடிக்கடி கேட்டுக்கொண்டிருக்கிறார்.

ரா. இவர்களுடைய கண்களில் ஏதோ நோய் இருந்தது என்று எனக்குத் தெரியாது.—ஆயினும் இப்படிப்பட்ட கண்களை நீலக்கண்ணாடிகளால் மூடிவைப்பது என்னதுர் அதிர்ஷ்டம்! இவ்வளவு அழகிய கண்களை நான் பார்த்ததேயில்லை—அவைகள் மிகவும் ஆச்சரியமான சக்தியுடையன; அவைகளின் பார்வையினாலேயே என்னை சுவஸ்தப்படுத்துகிறது போலல்லவோ இருக்கிறது. இவர்கள் என்னை நேராகப் பார்க்கும்போதெல்லாம் எனக்கு ஏதோ ஒரு மாதிரியாயிருக்கிறது; அப்புறம், முன்பைவிட எனக்கு சுவஸ்தமாயிருக்கிறது என்று சொல்லுகிறார்களா, அப்படியே எனக்கு சுவஸ்தமாயிருக்கிறது!

டா. உம் உம்! ரொம்ப சந்தோஷம். இவருடைய வியாதியைத் தீர்ப்பதற்கு புது சிகிச்சையொன்று உன்னிடம் இருக்கிறாற் போலிருக்கிறதே! அந்த சிகிச்சையினால் இவர் வியாதி முற்றிலும் குணமாகுமாக! நான் வருகிறேன்.

ரா. வாருங்கள்.

ல. சந்தோஷம்—வாருங்கள்.

காட்சி முடிகிறது.

இரண்டாம் காட்சி.

இடம்—அதே வீட்டில் மற்றொரு அறை.

காலம்—இரவு

ராமநாதன் ஒரு சோபாவில் உட்கார்ந்து வர்த்தமானப்பத்திரிகை யொன்றை படித்துக்கொண்டிருக்கிறான்.
லலிதா வருகிறாள்.

ல. இவ்வளவு நாழிகை நீங்கள் படிப்பது உங்களுக்கு நல்ல தல்லவென்று நினைக்கின்றேன். இது உங்களுக்கு பல ஹீனத்தையுண்டு பண்ணும். அதிகமாய்ப் படிப்பது ஆயாசத்தையுண்டு பண்ணும்.

ரா. எனக்கு உடம்பு எல்லாம் சவுக்கியமாகிவிட்டது, இனி யொன்றும் பயமில்லை.

ல. அப்படித்தான் டாக்டரும் நினைக்கிறார். ஆகவே நாளை முதல் நான் பார்க்கவேண்டியதில்லை என்று சொல் லுகிறார், இனி அவசியமில்லை என்று எண்ணுகிறார்.—

ரா. யார் அப்படிச் சொன்னது! டாக்டருக்கு என்ன தெரி யும்? இன்னும் எனக்கு நன்றாய் சுவஸ்தமாகவில்லை! நீ நின்று விட்டால், என்னைப்பார்த்துக் கொள்ள இந்த வீட்டில் ஒருத்தருமில்லையே!

ல. எப்பொழுதும் இப்படியே—இங்கே இருக்க—என்னால் எப்படி முடியும்?

ரா. ஏன் முடியாது? ஆயுள்முழுவதும் நோயாளிகளாயிருப் பவர்களைப்பற்றி நீ கேட்டதில்லையா?

ல. அவ்வாறு நீர் இராதபடி ஸ்வாமி அருள்வாராக!

ரா. உம்—இருந்தாலும்—இன்னும் இரண்டு வாரமாவது நீ இருக்க முடியாதா?

ல. இருக்கலாம்.—ஆயினும்,—

ரா. ஆயினும்—என்ன?

ல. எனக்கு—என் வீட்டில் கொஞ்சம் முக்கியமான வேலையிருக்கிறது.

ரா. இன்னும் உனக்கு கலியாணமாக வில்லையே!—ஆய்விட்டதா என்ன?

ல. ஆகவில்லை என்று தான் நான் சொல்லவேண்டும்.

ரா. என்ன விந்தையானபதில்! அதைப்பற்றி உனக்கேதாவது சந்தேகமிருக்கிறதா என்ன?

ல. சந்தேகமில்லை—ஆயினும் வேறு ஒரு விஷயத்தைப் பற்றி யோசித்துக் கொண்டிருந்தேன்.

ரா. நீ எப்பொழுது பார்த்தாலும் வேறு விஷயத்தைப்பற்றி யோசித்துக்கொண்டிருப்பது போலதான் தோற்றுகிறது—அது இன்னதென்று நான் கேட்கலாமோ ?

ல. பெண்ணாய்ப்பிறந்த ஒவ்வொருத்திக்கும் எத்தனையோ ரகசியங்களும் துக்கங்களும் இருக்கலாம்.

ரா. என்னை மன்னிப்பாய்!—நீ மற்ற ஸ்திரீகளைப் போலவன்று என்று எண்ணினேன்—ஒருவிதத்தில்.

ல. அல்ல அல்ல—எவ்விதத்திலும்.

ரா. டாக்டர் உன்னை என்னமோ விந்தையான பெயரிட்டழைத்தாரே—உன் பெயர் என்ன?

ல. என்முழுப்பெயர் அதிர்ஷ்டலட்சுமி, சாதாரணமாக அதிர்ஷ்டம் என்று என்னைக் கூப்பிடுகிறார்கள் என்னைத் தெரிந்தவர்கள்.

ரா. அதிர்ஷ்டம்-அந்தப் பெயர் ஒரு மாதிரியாயிருக்கிறது—என் மனதுக்கு திருப்திகரமாயில்லை—அம்மா—என்னை மன்னிப்பாய், அந்தப் பெயரை மாற்றிக்கொள்ள மாட்டாயா கொஞ்சம்?

ல. மாற்றிக்கொள்ளத்தான் வேண்டும்—என்புருஷன் கிடைத்தவுடன்.

ரா. அது எப்பொழுது நேரிடும்? சீக்கிரத்திலா?

ல. அப்படித்தான் நான் நினைக்கிறேன்.

ரா. உன்னுடைய கலியாணத்திற்கு என்னை அழைக்க மாட்டாயா?

ல. உமக்கு இஷ்டமிருந்தால்.

ரா. அதற்கு சந்தேகமென்ன, சந்தோஷமாய் வருகிறேன்—ஆயினும் உனக்குக் கணவனாகப் போகிறவர்யார்? ஒரு வேளை அவரை எனக்கு தெரியுமோ?

ல. நான் நிச்சயமாய்ச் சொல்லமுடியாது. ஒரு வேளை அவரை நீர் கொஞ்சம் அறிந்திருந்தாலுமிருக்கலாம் இப்பொழுது—பிறகு அவரை நீங்கள் நன்றாக அறிவீர்களெனக் கோருகிறேன்.

ரா. அவர்பெயர்?

ல. சமயம் வரும்பொழுது சொல்லுகிறேன்—உமக்கு நான் அவரைக்காண்பிக்கும் வரையில் நீர் பொறுக்க வேண்டும்.

ரா. எப்பொழுது செய்வாய் அதை?

ல. ஒரு வேளை நீங்கள் நினைப்பதன் முன்பாக இருக்கலாம்.

ரா. உம்! அப்பொழுது அவர்மீது நான் என்ன பொறாமை கொள்வேன் தெரியுமா?

ல. ஏன்?

ரா. இவ்வளவு கற்றறிந்த, புத்திசாலியான, பட்சமுடைய, பெண்மணியைப் காதலியாகப்பெற்றாரே யென்று.

ல. என்னை அதிகமாகப் புகழ்ந்து நாணத்தால் வெட்கப்படும்படிச் செய்கிறீர் நீர்!

ரா. இல்லை—நான் சொல்வதை நம்பு—வாஸ்தவமாக என் மனத்திற் பட்டதையே உரைத்தேன்.

ல. உம்முடைய மனைவி இங்கு உமது எதிரில் இல்லாதபடியால் அவ்வாறு பேசுகிறீர்.

ரா. அவள் என் எதிரில் இருந்த போதிலும் அப்படியே சொல்லியிருப்பேன்; அந்தப் பெண்ணுக்கு நான் பயப்படுபவனல்ல!

ல. அவள் என்ன புத்திசாலியல்லவா? படித்தவளல்லவா?

ரா. எனக்கு தெரியாது—அப்படியிருக்கமாட்டாள்.

ல. அதென்ன அப்படி சந்தேகத்துடன் பேசுகிறீர்? உம்முடைய சொந்த மனைவியைப் பற்றி இது தெரியாமலிருக்குமா உமக்கு?

ரா. வாஸ்தவமாய்—எனக்குத் தெரியாது.

ல. என்ன கல்மனதுடையவர்கள் ஆண்மக்கள்? என்ன துஷ்டர்கள்! என்ன குரூரமானவைர்கள்!

ரா. நானாக அவளைக் கலியாணம் பண்ணிக்கொள்ளவில்லையே! அவளை எனக்குக் கட்டிவைத்தார்கள். அவளைப் பற்றி எப்பொழுதும் நான் கவனித்தவன் அன்று.

ல. ஒருவேளை அவள் கற்றறிந்த, புத்திசாலியான, பட்சமுடைய காதல்குன்றாப் பெண்மணியாயிருந்தாலோ?

ரா. அதெல்லாம் எனக்குத் தெரியாது!

ல. நீர் தெரிந்து கொள்ள வேண்டியது உம்முடைய கடமையல்லவா? என்ன நினைக்கிறீர்?

ரா. அதைப்பற்றி நான் எப்பொழுதும் யோசிக்கவேயில்லை.

ல. ஜகதீசன் உம்மை மன்னிப்பாராக!

ரா. இந்தப்பதினைந்து தினங்களாக காலையில் நீ பரமேஸ்வரனைக் குறித்துப் பிரார்த்தனை செய்வதைக் கண்டபின் தான் அவரிடம் எனக்குக்கொஞ்சம் நம்பிக்கை பிறந்திருக்கிறது. அப்படி நீ பிரார்த்தனை செய்யும் பொழுதெல்லாம் நீ ஏதோ எனக்காகப் பிரார்த்தனை செய்வது போல் என் புத்தியிற் பட்டது; அது என்ன காரணத்

தால் என்று என்னால் சொல்லமுடியாது. ஒவ்வொரு முறையும் உன்னை, நான் கவனிக்கும் போதெல்லாம் எனக்குள் ஏதோ ஒரு மனவெழுச்சி உண்டாச்சுது— அதை இன்னதென்று விவரமாய்ச் சொல்லமுடியவில்லை என்றால்—இதை விட மேலான நிலையை நாடவேண்டும் என்பதே போல். இனியாவது நான் பரிசுத்தனாகி நற் பெயரெடுத்து வாழவேண்டுமென்று தீர்மானித்து விட் டேன்.

ல. ஆ!—எனக்கு மிகவும் சந்தோஷம்! நீர் மரணத்தினின் றும் காப்பாற்றப்பட்டீர்—மரணத்தினும் கேடான கதி யினின்று காப்பாற்றப்பட்டீர்.

ரா. உன்னால்!

ல. ஜகதீசனால்!

ரா. நீமாத்திரம் எப்பொழுதும் என் பக்கத்திலிருப்பதானால் நான் பரிசுத்தனாகி என்வாழ் நாட்களை நல்லவழியில் கழிப்பது மிகவும் சுலபமாயிருக்குமென்று எனக்குத் தோன்றுகிறது. போனதையெல்லாம் அடியுடன் துடைத் துவிட்டு, புதிதாய் எல்லாம் ஆரம்பிப்பேன்!

ல. அப்படியா?--நான் அப்படியே செய்கிறேன் என்று வாக்களித்தால், எனக்காக என்ன செய்வீர்?

ரா. எது வேண்டுமென்றாலும்!

ல. சத்தியமாய்?

ரா. பிரமாணமாக!

ல, ஆனால்—உம்முடைய சொந்த மனைவியை யடைந்து— அவளுடன் வாழ்கிறீரா?

ரா. உம்—செய்கிறேன்—முயல்கிறேன்.

ல. பிரமாணம் செய்யும்.

ரா. ஆகட்டும்—பிரமாணமாக.

ல. நான் போய் உம்முடைய மனைவியை அழைத்துவரவா?

ரா. அவள் என்ன, இந்த வீட்டிலா இருக்கிறாள்?

ல. அருகாமையில்.

ரா. வாஸ்தவமாகவா?

ல. இதோ ஐந்து நிமிஷத்தில் வருகிறேன். [போகிறாள்.]

ராமநாதன் எழுந்து உலாவுகிறான்.

ரா. இதெல்லாம் என்னவோ ஆச்சரியமாகத் தோன்றுகிறது! நான் ஏன் பிரமாணம் செய்தேன்?—அவளுடைய கண்கள் என்னை அவ்வாறு செய்யச் செய்தன—அவள் கேட்ட பொழுது மறுக்கமுடியவில்லை என்றால்-இதெல்லாம் எப்படி முடியப்போகிறதென்று ஆச்சரியப்படுகிறேன்!

லலிதை தன் சொந்த உடையில் வருகிறாள்.

ரா. (ஆச்சரியத்துடன்) யார் இது என் கண்ணெதிரில் படுவது?

ல இது வரையில் உமக்கு நர்ஸாகவிருந்த—உம்முடைய சொந்த கற்புடைய மனைவி—உம்முடைய லலிதா!

ரா. இது உண்மைதானா?—அல்லது நான் கனவு காண்கிறேனோ?

ல. இல்லை—கனவல்ல—நினைவு தான்!

ரா. ஈசனே! என்னை மன்னிப்பீராக!

ல. அவர் முன்பே உம்மை மன்னித்து—இனியாவது நல்வாழ்வு வாழும்படியாக அனுக்கிரகம் செய்திருக்கிறார்.

ரா. உன் பொருட்டு!—கண்ணே! என் காதலியே! லலிதா! [கட்டிமுத்தமிடுகிறான்.]

காட்சி முடிகிறது.

நாடகம் முற்றியது.

Dowden & Co., Madras

BRICKS BETWEEN

AND

At Any Cost

ADAPTATIONS OF

Mr. V. V. Srinivasa Iyengar's Dramas

IN TAMIL

BY

Rao Bahadur P. SAMBANDAM,
B.A., B.L.,

Author of:

" The Two Sisters," "Galava." "Manohara," "Blind Ambition," "The Two Friends," "Fate and Love," " Sarangadhara," " Simhalanatha," " Pushpavalli," "Amaladitya," "Magapathi," "Farces," "Siruthondar," "The Golden Fetters," "True Love," "The Bandit Chief," " Markandeya," " The Fair Ghost," " The Merchant of Vanipura," " The Wedding of Valli," "The Eye of Love," "Vijayarangam," "As you like it," "Ratnavali," "Lord Buddha," "The Tragedy of Silence," "The Good Fairy," "Geetha Manjari," "Harischandra," "As We Sow-So We Reap," "The Curse of Oorvasi," "Chandrahari," "The Demon Land," "Sabapathy Part I," "The Pongal Feast" or "Sabapathy" Part II, "A Rehearsal" or "Sabapathy" Part III, " Blessed-in a Wife," " The Dancing Girl " " Subbadra-Arjuna " "Karna The Giver" "Sahadeva's Stratagem" etc. in Tamil, and " Harischandra," and " Yayathi " in English.

FIRST EDITION.

Madras:

PRINTED BY DOWDEN AND CO., AT THE " PEERLESS PRESS,"
21, Sunkurama Chetty Street.

1929

All Rights reserved.

[Price per Copy As. 8.

இடைச்சுவர் இருபுறமும்.
என்ன நேர்ந்திடினும்.

ம-ா-ா-ஸ்ரீ, வி. வி. ஸ்ரீநிவாச ஐயங்கார்
அவர்கள் ஆங்கிலத்தில் இயற்றிய நாடகங்களின்
தமிழ் அமைப்பு.

ராவ் பஹதூர்
ப. சம்பந்த முதலியார், பி-ஏ., பி-எல்.,
அவர்களால் இயற்றப்பட்டது.

இந்த நூலாசிரியரால் இயற்றப்பட்ட மற்ற நூல்கள் :

"லீலாவதி சுலோசனை" "கள்வர்தலைவன்," "மனோஹரன்," "இரண்டு நண்பர்கள்," "சாரங்கதரன்," "நற்குல தெய்வம்," "சத்ருஜித்," "யயாதி" "மார்க்கண்டேயர்," "விஜயரங்கம்," "காதலர் கண்கள்," "பேயல்ல-பெண்மணியே," "மகபதி," "மெய்க்காதல்," "பொன் விலங்குகள்," "சிம்ஹளநாதன்," "விரும்பிய விதமே," "சிறுத்தொண்டர்," "காலவரிஷி," "வாணீபுர வணிகன்," "ரஜபுத்ரவீரன்," "ஹரிச்சந்திரன்," "ரத்னாவளி," "புஷ்பவல்லி," "கீதமஞ்சரி," "பிரஹசனங்கள்," "ஊர்வசியின் சாபம்," "அமலாதித்யன்" "சபாபதி-முதற் பாகம்," "பொங்கல் பண்டிகை" அல்லது சபாபதி இரண்டாம் பாகம், "ஓர் ஒத்திகை" அல்லது சபாபதி மூன்றாம்பாகம், "வள்ளிமணம்" "முற்பகற்செய்யின் பிற்பகல் விளையும்," "புத்த அவதாரம்," "வேதாள உலகம்," "மனைவியால் மீண்டவன்," "தாசிப்பெண்" "சுபத்திரார்ஜுனா" "கொடையாளி கர்ணன்" "சகதேவன் சூழ்ச்சி" முதலியன.

முதற் பதிப்பு

சென்னை :
டௌடன் கம்பெனியாரின்
பியர்லெஸ் அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

1929

காபி ரைட்] [விலை அணா 8.

Preface to the First Edition.

Persons intending to stage this or any other drama by me are informed that they must obtain my previous permission before doing so, otherwise they make themselves liable to be prosecuted before a Criminal Court under the latest Copyright act.

"PAMMAL LODGE"
G. T. MADRAS.
13th Mar. 1929.

THE AUTHOR.

INSCRIBED

TO

THE BELOVED MEMORY OF

MY PARENTS

P. VIJIARANGA MUDALIAR,

and

P. MANICKAVELU AMMAL,

and

MY FRIEND

C. RANGAVADIVELU.

இடைச்சுவர் இருபுறமும்

நாடக பாத்திரங்கள்

சக்ரபாணி முதலியார்	...	சீமைக்குப் போய்த்திரும்பி வந்த பூஸ்திதிவந்தனுகிய ஒரு முதலியார்.
நளினி	...	அவரது மனைவி.
வீராசாமி	...	அவரது வீட்டு வேலையாள்.
அம்மாயி	...	வீராசாமியின் பெண்சாதி, முதலியார் வீட்டு வேலைக்காரி.
அநந்தாச்சாரி ஜெயகோவிந்த நாயுடு மாணிக்க முதலியார் சாம்பமூர்த்தி ஐயர் முதலியோர்	..	சக்ரபாணி முதலியார் நண்பர்கள்.
நடராஜ சாஸ்திரி	...	கணக்குப்பிள்ளை உத்தியோகம் செய்யும ஓர் ஏழை பிராம்மணன்.
சாவித்ரி	...	அவன் மனைவி.
டாக்டர் ராஜா	...	ஓர் வைத்தியர்.

இடைச்சுவர் இருபுறமும்

ஒரு இரட்டைக்காட்சி நாடகம்.

காலம்:—சாயங்காலம்.

இடம்:—சென்னபட்டணத்திற்கு அருகாமையிலுள்ள ஒரு பேட்டையின் முக்கிய வீதியில் செங்கற் சுவரினுற் பிரிக்கப்பட்ட, பக்கத்தில் பக்கத்திலிருக்கும்படியான, இரண்டு வீடுகளின் பாகங்கள்.

[ரங்கமானது இரண்டு பாதியாக ஓர் செங்கற் சுவரினுல் பிரிக்கப் பட்டிருக்கிறது. நாடகத்தைப் பார்ப்பவர்களுக்கு இச்சுவரின் உயரமும் அகலமும் தான் தெரியும்; இவ்விரண்டு வீடுகளின் முன்பக்கத்து சுவர்களை எடுத்து விட்டதுபோற் காணும். இடது பக்கத்து வீட்டில் ஒரு விருந்துக்காக அலங்காரம் செய்யப்பட்ட நாற்காலி மேஜைகள் முதலியன வெல்லாம் ஒழுங்காய் வைக்கப் பட்ட ஒரு கூடம் தெரிகிறது. இந்த நாடகத்தில் இந்தப்பக்கம் நடக்கும் காரியங்களெல்லாம் "இடது புறம்" என்று குறிப்பிடப் பட்டிருக்கிறது. வலது பக்கத்து வீட்டின் அறையில் ஒரு கயிற்றினுற் பின்னிய கட்டிலின் மீது ஒரு நோயாளி, நடராஜ சாஸ்திரி, படுத்துக் கொண்டிருக்கிருன், அவன் பக்கத்தில் ஒரு முக்காலியின் மீது ஒரு செம்பும் சில மருந்து புட்டிகளும் வைக்கப் பட்டிருக்கின்றன. இங்கு நடக்கும் காரியங்களெல்லாம் "வலது புறம்" என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.]

(இடது புறம்.)

வீராசாமி சாமான்களை யெல்லாம் சரியாகவைத்துக்கொண்டும் அவைகளின் மீதிருக்கும் தூசியைத்தட்டிக் கொண்டு மிருக்கிருன்; **அம்மாயி** சற்று தூரத்தில் நிற்கிருள். அவள் பக்கத்தில் ஒரு துடப்பம் கிடக்கிறது.

அ. இந்த மாதிரி நேரிடுமென்று யார் நினைத்திருக்கக் கூடும்?

வீ. ஆமாம்—யார் நினைத்திருக்கக்கூடும்? கண்ணில்லாதவர்களைப்போல் தட்டித்தடுமாறி நம்மைத்தப்பிதம் செய்ய விட்டு, அதைப்பார்த்து ஆநந்தப்படும் அந்த பரமேஸ்வரன்தவிர!

[தூசியைத்தட்டிக்கொண்டிருக்கிறுன்; அம்மாயி அங்கிருக்கும் ஒரு கண்ணுடியிற் பார்த்து தன் தலைமயிரைக் கோதிக்கொண்டிருக்கிருள்.]

(வலது புறம்.)

ந. [நோயினுல் வருந்தி] ஹா!—ஹா!—ஹா!

(இடது புறம்.)

அ. [தலையைக் கோதியான பிறகு] இதோ! சுவாமியை தூஷியாதே! அவர் என்ன செய்வார் பாவம்! எல்லாம் நாம் முன் செய்தகர்மம், அதன்பலனை இப்பொழுது அனுபவிக்கிறோம்.

வீ. அந்த கர்மத்தை முதல் முதல் நம்மையார் செய்யச் சொன்னது? அதுவுமல்லாமல் நாம் ஒவ்வொருவரும் வெவ்வேறு விதமான கர்மாவைச் செய்வானேன்?—இதோபார்—இந்த நாற்காலியை அந்த மூலையில்வை.

[அம்மாயி அப்படியே செய்கிருள்.]

(வலது புறம்.)

ந. ஐயோ! சிவமே! இப்படிப்பட்ட பொறுக்கமுடியாத பாதையை நான் ஏன் அனுபவிக்க வேண்டும்? நான் என்ன பாபமிழைத்தேன்?

(இடது புறம்.)

அ. அதிருக்கட்டும்—நம்முடைய எஜமானனை,—நல்ல அழகாயும் ஒழுங்காயும் இருக்கிறவர்—அந்த அசங்கியம் பிடித்த குரூபியான முடத்தைப்போய் யார் கலியாணம் செய்து கொள்ளும்படிச் செய்தது?

வீ. வேறுயார் செய்தது ? பொம்மைகளை ஆட்டிவைப்பது போல் நம்மை ஆட்டிவிட்டு, மறைந்திருந்து பார்த்து பரிஹாசம் பண்ணுகிறாரே அவர்தான்—அந்த பரமேஸ்வரன் தான் !

அ. என்ன துர்அதிர்ஷ்டம்! இப்படியும் புத்திகெட்டுப் போகுமா மனிதர்களுக்கு ?

வீ. உனக்குத்தெரியாதா? எல்லாம் பணத்துக்காகத்தான். ஏதோ நெருங்கினபந்து, அவளுடைய தகப்பனாருக்கு நான்வாக்கு கொடுத்து விட்டேன், என்கிற பெரிய பேச்செல்லாம், அவ்வளவும் மேல்வேஷம் !

அ. சும்மா உளராதே நீ! ஸ்வாமியைப்பற்றி தூஷிப்பதுமல்லாமல், எப்பொழுது பார்த்தாலும் மனிதர்களைப் பற்றியும் நீ தவறான எண்ணம்கொண்டிருக்கிறாய். இத்தொட்டு செய்தான், அத்தொட்டு செய்தான், என்று ஏதாவது தப்புசொல்லிக் கொண்டேயிருக்க வேண்டும் நீ! இந்த உலகத்திலே ஒருத்தனாவது உனக்கு யோக்கியனாகவாவது, நிஜம் பேசுபவனாவது, ஈவுஇரக்க முடையவனாவது, தயாளகுண முடையவனாவது, இருக்கிறானென நீ நம்பமாட்டாய் !

வீ. ஏ குட்டி! நீ என்னோடு சண்டை போடவேண்டியதில்லை. உன்னுடைய எஜமானனை, நிரம்பபுத்திசாலி நல்லவர் என்று நீ எண்ணினால், அவரிடம்போய் அதைச் சொல், உனக்கு ஒரு புதுபுடைவைவாங்கிக் கொடுத்தாலும் கொடுப்பார், அல்லது ஒரு ரூபாய் இரண்டு ரூபாய் சம்பளம் உயர்த்தினாலும் உயர்த்துவார், அவருக்குக் கலியாணமாயிருக்கிற சந்தோஷகாலத்தில்.

அ. கலியாணப்பெண்ணை முதலில் பார்க்கட்டும் நான்.

வீ. நான் பார்த்திருக்கிறேன். அந்த அம்மாளுக்கு சாய்கால் அதிகம் உண்டு, உன்பாடு அதிர்ஷ்டம் தான்.

அ. உயர்ந்த ஸ்திதியிலிருப்பவர்களுடைய அங்கஹீனத்தைப்பற்றி அப்படி ஏளனமாகப் பேசாதே. அது தப்பு.

வீ. உயர்ந்தபதவி, தாழ்ந்தபதவி!—தாழ்ந்தபதவி, உயர்ந்த பதவி! எதனுல் தாழ்ந்தபதவி உண்டாகிறது? எதனுல் உயர்ந்தபதவி உண்டாகிறது? பணம் என்று சொல்லுகிறுர்களே, வட்டமாக, அப்படி உருண்டு கொண்டேயிருந்து, கடைசியில் உருண்டேபோய்விடுகிறதே, அது அதிகமாயிருப்பதும் கொஞ்சமாயிருப்பதும் தானே இதற்குக்காரணம்? இன்றைக்குப் பிச்சைக்காரன் நாளை லட்சாதிபதி! இன்றைக்கு நவாபு, நாளைக்குப்பக்கிரி!—கொஞ்சம் யோசனை பண்ணிப்பார்—உனக்கும் எனக்கும் கொஞ்சம் பணம்மாத்திரம் அதிகமாயிருந்தால், இப்பொழுதிருப்பதுபோல் இந்த சோபாவின்பேரில் உட்கார்ந்து கொண்டிருப்பேன், நீ என்பக்கத்திலுட்கார்ந்து கொண்டு நான் போட்டுக்கொள்ள வெற்றிலைமடித்துக்கொடுத்துக் கொண்டிருப்பாய் எனக்கு; நம்முடைய எஜமானுக்கும் எஜமானிக்கும் அந்தப்பணம் கொஞ்சம் குறைவாயிருந்தால்—நான் சொல்லுவதைக்கேள்—நம்முடைய வேலைக்காரர்களாகக்கூட அவர்களை வைத்துக்கொள்ள அவர்களிடம் யோக்கியதையில்லை யென்று நினைப்போம். எப்படி!—இப்பொழுது என்ன சொல்லுகிறுய்? இங்கே வந்து உட்காரமாட்டாயா?

[அம்மாயி திடுக்கிட்டு அசைவற்று நின்று அவனைப் பார்க்கிறுள்.]

(வலது புறம்.)

கி. யார் அங்கே?—யாருமில்லையா அங்கே? ஆ!—ஆ!—ஈசனே!

(இடது புறம்.)

அ. எழுந்திரு! எழுந்திரு!—இந்த நிமிஷம் அவர்கள் வந்து நீ அங்கே உட்கார்ந்திருப்பதைப் பார்ப்பார்களாயின் என்ன நடக்கும்?

வீ. நடக்கும்!—என்ன நடக்கப் போகிறது? தள்ளிவிடப் போகிறார்கள்! அவ்வளவுதானே! இவன் இல்லாவிட்டால் இன்னொருவன்; இந்த பத்து ரூபாயில்லாவிட்டால் இன்னொரு பன்னிரண்டு ரூபாய்! நடக்கப் போகிறது!—சக்கரம் இன்னும் கீழே போவதற்கில்லையே? நடக்க—போகிறது!

அ. எழுந்திரு என்றால்—இது தப்பு—ஏதோ சப்தம் கேட்கிறது, ஒரு வேளை அவர்கள் வருகிறார்களோ என்னவோ?

வீ. மாட்டேன், நான் எழுந்திருக்க மாட்டேன். வா இப்படி, வந்து உட்கார் ஒரு நிமிஷம், பணக்கார புருஷனுடைய பணக்காரப் பெண்சாதியைப் போல், பிறகுதான் நான் எழுந்திருப்பேன். [அம்மாயி இங்கும் அங்கும் பார்த்து, பிறகு சோபாவின் பேரில் போய் உட்காருகிறாள்; வீராசாமி அவள் தோளின் மீது கையை வைத்து] இப்பொழுது என்ன சொல்லுகிறாய்? நாம் அந்தஸ்திலில்லை! சந்தோஷமாயில்லை? [அம்மாயி பதில் கூறாது இந்தப் பக்கமும் அந்தப் பக்கமும் பார்த்துக் கொண்டிருக்கிறாள்.]

(வலது புறம்.)

ந. ஹா! ஈசனே! ஈசனே! என்னையேன் இப்படிக் கஷ்டத்துக்கு ஆளாக்குகிறீர்?—இறப்பது மேலாகும்! இறப்பேனாயின் இச்சங்கடத்தினின்றும் நீங்கினவனாவேன்!—யார் அங்கே?

(இடது புறம்.)

அ. [ஏதோ சப்தத்தை கேட்டு எழுந்ததுபோல்] எழுந்திரு! அவர்கள் வருகிறார்கள்!

வீ சத்! அதெல்லாம் கிடையாது. சாயங்காலம் ஆறு மணிக்கு முன்பாக இங்கு வர மாட்டார்கள் அவர்கள், ராகு காலம் போவதற்காகக் காத்துக்கொண்டிருக்கிறார்கள்.

அ. அதுபோனாற் போகிறது. எனக்கென்னவோ கலவரமாயிருக்கிறது, நிரம்ப பயமாயிருக்கிறது, நீ அங்கே படுத்

துக்கொண்டிருப்பதைப் பார்த்தால்; கொஞ்சம் எழுந்திருந்து செய்யவேண்டியதை யெல்லாம் முடித்து விடு.

வீ. ஏ குட்டி! நிஜமாகச் சொல், நாமும் இப்படி அந்தஸ்திலிருந்து இப்படி சந்தோஷமாயிருந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்? எப்பொழுதாவது நாம் இப்படி இருப்போமென்று நினைக்கிறாயா?

அ. அந்தஸ்தும் சந்தோஷமும்! மெத்தைகள் தைத்த சோபாக்களிலும், வெள்ளிக் கிண்ணங்களிலும், பட்டுத் துணிகளிலும், இரட்டைக் குதிரை கட்டின கோச் வண்டியிலேயும் மோடார் வண்டியிலேயும் தான் சந்தோஷம் இருக்கிறதோ? இல்லவேயில்லை, சந்தோஷம் என்பது மனதில் இருக்கவேண்டும்.

வீ. [மெல்ல யோசனையுடன் எழுந்திருந்து] ஒருவேளை நீ சொல்லுகிறது வாஸ்தவமாயிருக்கலாம். நீ ஒரு பெரிய வேதாந்தியாகப் பிறந்திருக்கிறாய்!

(வலது புறம்)

சாவித்திரி வருகிறாள்.

சா. [கட்டிலின் அருகிற் போய்] அழைத்தீர்களா? நான் கஞ்சி காய்ச்சிக் கொண்டிருந்தேன்—எப்படி யிருக்கிறது உங்களுக்கு இப்பொழுது?

ந. ஆம்—நான் கூப்பிட்டேன்—கூப்பிட்டேன்—ஸ்வாமியை! என்னை கொண்டு போய் விடும்படி! இது என்னால்—பொறுக்க முடியவில்லை!

சா. கொஞ்சம் பொறுத்துக் கொள்ளுங்கள்—கொஞ்சம் நேரம்—இது தான் கடைசி நாள்—வயித்தியர் சொன்னாரே.

ந. அப்படிச் சொன்னாரா?—ஆம்—அப்படித்தான் இருக்க வேண்டும்—அப்படித்தான் முடியு மென்று—நான் நினைக்கிறேன்—ஆயினும்—ஆயினும்—நான் போனபிறகு ஐயோ பெண்ணே!—நீ என்ன செய்யப்போகிறாய்?

உன்னை யார் பார்த்துக் கொள்ளப் போகிறார்கள்?—நீ எங்கே போவாய்? [நடராஜன் படுக்கையின் மீது சாய்ந்து விழுகிறான், சாவித்திரி தன் முகத்தை மூடி தேம்பி அழுகிறாள்.]

(இடது புறம்.)

வீ. ஏ! வேதாந்தி—இதோ பார்—

அ. வேதாந்தமும் சித்தாந்தமும்! அதெல்லாம் எனக்கென்ன தெரியும்? எனக்குத் தெரிந்ததெல்லாம் நாம் ஸ்வாமியை நம்பி யிருக்கவேண்டும், நம்முடைய கடமையைச் செய்ய வேண்டும், நாம் தப்பு செய்யக்கூடாது, என்பது தான்—[ஒரு புஷ்பம் வைக்கும் படிக்கத்தைக் காட்டி] இதை நான் எங்கே வைப்பது?

வீ. அந்தச் சின்ன மேஜையின் பேரில் வை அதை—அதில் தண்ணீர் இருக்கிறதா?

அ. இல்லை—இதைத் தண்ணீரால் நிரம்பச் செய்யவேண்டுமா?

வீ. சந்தேகமென்ன! எல்லாம் வற்றிப்போயிருக்கிறது இன்றைக்கு—உன்னிடம் உன் பை இருக்கிறதா?

அ. ஏன் கேட்கிறாய்? என்ன, குடிக்கவேண்டுமோ நீ இப்பொழுது? அதுவும் இன்றைக்கு?

வீ. எனக்கு தாகமா யிருக்கிறது. கொஞ்சம் வெளியே போய் ஆநந்த ஆசிரம ஹோட்டலில் ஒரு வாய் காப்பி குடித்து விட்டு திரும்பி வந்து விடுகிறேன்.

அ. நீ எங்கே போவாய், என்ன குடிப்பாய், என்று எனக்குத் தெரியும். என்னிடம் ஒரு காசும் கிடையாது, அப்படி இருந்தாலும் உனக்குக் கொடுக்கமாட்டேன்.

வீ. நீ நல்லவளாச்சே—எனக்கு நிரம்ப தாகமா யிருக்கிறது. எங்கே உன் பை?

[தன் பெண்சாதி யருகிற்போய் அவளிடம் பை யிருக்கிறதா என்று பார்த்துக் கொண்டிருக்கிறான். அம்மாயி புன்னகையுடன் வீராசாமியைக் கவனியாதது போல் சாமான்களை ஒழுங்காய் வைத்துக்கொண்டிருக்கிறாள்.]

(வலது புறம்)

ந. என் நா வரண்டு போகிறது!—எரிகிறது எனக்கு!—நிரம்ப தாக மெடுக்கிறது?—கொஞ்சம் போய்—எனக்குத்தீர்த்தம் கொண்டுவா தாகத்திற்கு?

சா. [அழுவதை நிறுத்தி, முகம் எடுத்துப் பார்த்து] கஞ்சி சித்தமாயிருக்கிறது. அதை நீங்கள் சாப்பிடலாம்—அது உங்கள் தாகத்தைத் தணிக்கும்—

ந. வேண்டாம்! வேண்டாம்!—வேண்டாம்! உன் கஞ்சி எனக்கு வேண்டவே வேண்டாம்! எனக்கு வேண்டியது தீர்த்தம்—தீர்த்தம்—தீர்த்தம்!

சா. வயித்தியர் சொன்னரே—

ந. ஐயோ! என் உயிர் போகிறது! என் கடைசி வேண்டுகோளை மறுக்காதே!—கொஞ்சம் தீர்த்தம்! தாகத்திற்கில்லாமலா சாகச்சொல்லுகிறாய் என்னை! தாகம் தாகம் என்று தண்ணீருக்காக அழுது கொண்டு? [கொஞ்சம் எழுந்திருந்து] நீ செய்யமாட்டாய்?—சரி நான் போய்—[பலஹீனத்தினால் எழுந்திருக்க முடியாது அப்படியே படுக்கையில் விழுகிறான்] ஹா! [சாவித்திரி போகிறாள்.]

(இடது புறம்.)

வீ. நீ எனக்குக் கொடுக்கமாட்டாய்? எங்கே உன் பை?
[அவள் உடம்பில் தேடிப்பார்க்கமுயலுகிறான்.]

அ. இதோபார்! என்னைத்தொடாதே!

வீ. கொஞ்சம் தயவுசெய்! நீதான் என் கண்ணு பெண்சாதி!

அ. மற்றப்பெண்சாதிகள் எல்லாம்?

வீ. எல்லாரையும்விட நீதான் என் கண்ணு!—வா, எங்கே இருக்கிறது பை?
[மறுபடியும் அவளருகிற் போகப் பார்க்கிறான்]

அ. என் கிட்டவராதே!—இந்தா எடுத்துக்கொள்!

[இடுப்பிலிருந்து தன் பையைப்பிடுங்கி, தரைமீதெறிகிறுள், வீராசாமி அதை விரைந்தெடுத்து அவிழ்த்துப் பரிசோதித்து, அதிலிருக்கும் வெற்றிலே பாக்கு புகையிலையை எடுக்கிருன்.]

(வலது புறம்.)

சாவித்திரி வருகிறள்.

சா. இதோ தீர்த்தம், சாப்பிட. எழுந்திருக்கவேண்டாம்! வாயைத்திறவுங்கள், நான் மெல்லவார்க்கிறேன்.

ந. முடியாது! நான் எழுந்திருக்கத்தான் வேண்டும். நான் உட்கார்ந்து நெடநெடவென்று அப்படியே நிரம்பவிழுங்கினுல் தான் எனக்குத் திர்ப்தியாகும்! என்னைப் பிடித்துக்கொள்!

சா. [லோட்டாவை பக்கத்திலிருக்கும் விசிப்பலகைமீது வைத்துவிட்டு, அவனைப்பிடித்து உட்காரவைக்கிருள், பிறகு லோட்டாவை அவனிடம் கொடுத்து] அதிகமாகச் சாப்பிடாதீர்.

ந. அதிகமாகச் சாப்பிடுகிறதா! எங்கே பிடித்தாய் இந்த லோட்டாவை? போ—போ! பெரிய செம்புநிறையக் கொண்டுவா! [அந்த லோட்டாவைத் தண்ணீருடன், ஒரு மூலையில் எறிகிருன்] எனக்குக் குளிர்ந்த தீர்த்தம் கொண்டுவா—பனிக்கட்டியைப் போல்-குளிர்ந்திருக்கவேண்டும்! போ—போ— சீக்கிரம் கொண்டுவா!—வீட்டிலிருக்கிற பெரியபாத்திரத்தில்!

சா. வயித்தியர்—

ந. வயித்தியரைக் கொளுத்த! வயித்தியரால் என்னைக்காப்பாற்ற முடியாது! உன்னுலும் முடியாது!—என் உயிர் போகிறது! என் உடல்குளிர்ந்தாவது என் உயிர் போகட்டும்! பிறகு என் உடலை நீ நெருப்பில் வைத்துக் கொ

ளுத்தி விடலாம்—போ! போ!—குளிர்ந்த ஜலம்!—மாட்டாய் நீ?—

[சாவித்திரி போகிறுள், நடராஜன் தன்கைகளின் மீது சாய்ந்து கொண்டு, மிரண்டு மயக்கமானப் பார்வையுடன் பார்த்து, பெருமூச்செறிகிறுன்.]

(இடது புறம்.)

வீ. என்ன இது? ஒரு தம்பிடி கூட இல்லையே உன்பையில்!

அ. அதில் இருக்கிறது என்று உனக்குயார் சொன்னது? அதிலே இருந்தால் உனக்கு அதை நான் கொடுத்திருப்பேன் என்று எண்ணிஞயோ?

வீ. ஈவுஇரக்கமில்லாத மூதேவி நீ!

அ. கேடுகெட்ட ஓயாக்குடியன் நீ!

வீ. பத்திரம்! எனக்குக் கோபம் வரும்படிச் செய்யாதே!

அ. உன்னுலே என்னமுடியும்?

வீ. என்ன? என்னை எதிர்த்துப்பேச வாயிருக்கிறதா?

[அவளை அடிப்பதுபோல் அருகில் நெருங்குகிறுன்.]

அ. அதோபார்! அங்கே என்ன இருக்கிறதென்று! [துடப்பம் இருக்குமிடம் காட்டி] போ—உன் வேலையைப் பார், இல்லாவிட்டால் உன்பவிஷ்யம் கெட்டுப்போம்!

வீ. [தன்னைத்தடுத்துக்கொண்டு சுற்றிப்பார்த்து] என்னவிந்தை! மனுஷன் எல்லாவற்றையும் ஆளுகிறுன்! மனுஷி மனுஷனை ஆளுகிறுள்!

[வீராசாமியும் அம்மாயும் மௌனமாய், செய்ய வேண்டிய காரியங்களை யெல்லாம் முடித்துக் கொண்டிருக்கிறுர்கள்.]

(வலது புறம்.)

சாவித்திரி ஒரு லோட்டாவில் குளிர்ந்த தீர்த்தம் கொண்டுவருகிறுள்.

சா. இதோ குளிர்ந்த தீர்த்தம். அதிகமாய்ச் சாப்பிடாதீர்.

ந. இல்லை நான் சாப்பிடுவேன்! [சாவித்திரி கரத்தினின்றும் அந்த லோட்டாவைப் பிடுங்கி, குடித்துவிடுகிருன்.] பரமேஸ்வரா! என்ன குளிர்ச்சியாயிருக்கிறது! இந்த வயித்தியர்களெல்லாம் சுபாவத்திற்கு விரோதமாக மருந்துகளைக் கொடுப்பானேன்? நான் தூங்கப்போகிறேன்.—என்று நினைக்கிறேன்—நெடுநேரம்.

[படுக்கையின் மீது விழுகிருன்; சாவித்திரி அவனை உற்றுப்பார்த்து, அழ ஆரம்பித்து, ஒரு புறமாகப் போகிருள்.]

(இடது புறம்.)

அ. யாரோ வருகிருர்கள்!

வீ. வேறுயாராவது இருக்க வேண்டும்.

ஜெய கோவிந்த நாயுடு வருகிருர்.

ஜே. என்ன வீராசாமி! உன்னுடைய எஜமானும் அவர் பெண்சாதியும் இன்னும் வரவில்லையா?

வீ. இல்லை ஐயா, இன்னும் வரவில்லை.

ஜே. இன்று சாயங்காலம் ஏதோ விருந்து நடக்கப்போகிறதென நினைத்தேன். அதற்காக அவர்கள் மத்தியானமே வந்து விடுவார்கள் என்றெண்ணினேன்.

வீ. பெரிய விருந்தொன்றுமில்லைங்கள், சில சிநேகிதர்களை மாத்திரம் அழைத்திருக்கிருர்கள். ஐந்து மணி சுமாருக்கு ரெயில்வருகிறது, ராகுகாலம் கழித்து கிரஹப் பிரவேசம் பண்ண ஏற்பாடு செய்திருக்கிருர்கள்.

ஜே. எத்தனை மணிக்கு விருந்து? என் காகிதத்தை எங்கேயோ வைத்து விட்டேன்.

வீ. ஆறரை மணிக்கு ஐயா.

ஜே. மாயவரத்தில் கலியாணத்திற்கு நீ போயில்லையோ, வீராசாமி?

[ஒரு நாற்காலியில் உட்காருகிருர்.]

வீ. போயிருந்தேனுங்கள். வீட்டையெல்லாம் சித்தம் செய்வதற்காக என்னை முன்னே அனுப்பினார்கள். நேற்று காலையில் தான் இங்கு திரும்பிவந்தேன்.

ஜே. உன்னுடைய எஜமானி என்னமாயிருக்கிறார்கள்? நீ பார்த்தாயா அவர்களை? ஜனங்கள் எல்லாம் என்னென்னவோ சொல்லுகிறார்களே?

[அம்மாயி பின்புறமாக இருந்து ஒன்றும்சொல்ல வேண்டாம் என்று வீராசாமிக்கு பலமாகச் சைகை செய்கிறாள்.]

வீ. ஜனங்கள் சொல்லுகிறதுக்கென்னுங்கள்? அது அவர்கள் வழக்கம் தானே.

ஜே. ஆயினும், கலியாணப் பெண்ணை நீ பார்த்தாயல்லவா?

வீ. ஆமாம், பார்த்தேனுங்கள்.

ஜே. எப்படியிருக்கிறார்கள்?

வீ. சௌக்கியமாயிருக்கிறார்கள். ஜுரமாயிருந்ததெல்லாம் கலியாணத்திற்கு முன்பு.

ஜே. நான் கேட்கவந்தது அது அல்ல. அழகாயிருக்கிறார்களா—எல்லாம்—என்று அதைப்பற்றி கேட்டேன்.

வீ. அப்படித்தானிருக்க வேண்டுமென்று எண்ணுகிறேனுங்கள்—இல்லாவிட்டால் எஜமான் கலியாணம் செய்து கொள்வார்கள் என்று எண்ணுகிறீர்களா நீங்கள்?

ஜே. எஜமான் இருக்கட்டும் வீராசாமி, உன் அபிப்பிராயம் என்ன?

வீ. அழகாயிருக்கிறது—இந்த சமாசாரங்களெல்லாம்—எங்களைப்போன்ற ஏழைகளுக்கு என்னதெரியுங்கள்?

ஜே. தெரிகிறது—நான் கேட்பதற்குப்பதில் சொல்ல உனக்கு இஷ்டமில்லை. அதிலிருந்து நான் ஊகித்தறியலாமல்லவா?

வீ. அப்படிச்செய்யக்கூடாது நீங்கள், ஏனென்றால் அழகென்பதும் மனதுக்கு ரம்யமாயிருப்பதும், பார்ப்பவர்கள் கண்களைப்பொறுத்ததுங்கள்.

ஜே நீ சொல்லுவது நிரம்பவாஸ்தவம்தான் வீராசாமி—ஆயினும் அந்த அம்மாள் ஒருகாலில் ஏதோ கொஞ்சம் நொண்டுவதாகச் சொல்லுகிறார்களே—அப்படி இருக்குமா?

வீ. அப்படித்தான் எனக்குத் தோன்றியதுங்கள்—ஆனாலும், ஒருவேளை அதுசுளுக்கினாலிருக்கலாம். வேறு எந்த காரணத்தினாலாவது இருக்கலாம், இல்லையென்று யாரால் சொல்லமுடியும்?

ஜே. ஆமாம் அதென்னமோ வாஸ்தவம் தான்!—ஆனால் சுளுக்கு எப்பொழுதும் சாஸ்வதமாயிராது பார்.

வீ. சுளுக்குகளைப்பற்றி எனக்கு அவ்வளவாகத் தெரியாதுங்கள்.

ஜே. எல்லோரும் சொல்லுகிறார்களே அந்த அம்மாள் கொஞ்சம் கறுப்பு—அவ்வளவாக அழகுமில்லை யென்று?

வீ. இதெல்லாம் யாருக்குத் தெரியுங்கள்? எங்கள் எஜமானைக் கேட்கவேண்டும் இதையெல்லாம் நீங்கள்.

ஜே. ஸ்ரீதனம் அதிகமாயிருந்திருக்குமென்று நினைக்கிறேன்.

வீ. எனக்கென்ன தெரியுங்கள்?

ஜே. சரி, இன்றைக்கென்ன வாய்திறந்து பேசமாட்டேன் என்கிறாய்? என்னவோ ஒரு மாதிரியாக முகத்தை வைத்துக் கொண்டிருக்கிறாய்? நீ பழயபடி இல்லை—[திரும்பி, அதிகமாய் ஒன்றும் பேசவேண்டாமென்று தன் புருஷனுக்குச் சைகை செய்து கொண்டிருக்கும் அம்மாயியைப்பார்த்து] ஓ! தெரிகிறதெனக்கு! அது தான் காரணம்! அது தானே?—நல்லது இருக்கட்டும், ஆறரைமணிக்கென்று சொன்னாயல்லவா? அப்பொழுது வந்து உன் எஜமானனையும் அவர் பெண்சாதியையும் கண்டுகொண்டுபோகிறேன்.

[நகைத்துக் கொண்டே போகிறார்.]

அ. [அடங்காக் கோபங்கொண்டு] என்ன பேசினார் பார் அந்த நாயுடு, என்ன அதனப் பிரசங்கி! எழும்பூரில் இன்

ஞெரு நாயுடு எனக்குத் தெரியும், அவரும் எந்நேரமும் மற்றவர்களைப்பற்றி கெடுதியாகவே பேசிக்கொண்டிருப் பார். எல்லா நாயுடுக்களும் இந்த மாதிரி தான்!

வீ. சீச்சீ! மடத்தனமாகப்பேசாதே! அதில் என்ன கெடுதி? வாஸ்தவத்தைத்தானே பேசினார்?

அ. நல்ல வாஸ்தவம் தான்! இந்த விஷயங்களிலெல்லாம், இவர் மூக்கை நுழைப்பானேன்? மறுபடியும் இப்படி செய்யட்டும் பார்!

வீ. ஏன்? நீ என்ன செய்வாயோ?

சா. கொஞ்சம் பொறு—பிறகு என்ன நடக்கிறதோபார்.

[இருவரும் மேஜைகளின் மீதில் துணிகளைப் பரப்புகிறார்கள்.]

(வலது புறம்.)

ந. [படுக்கையினின்றும் திடுக்கிட்டெழுந்து] நான் தூங்கினேனா என்ன? என்ன பயங்கரமான கனவு!

சா. [திரும்பி அவனருகில் விரைந்து சென்று] என்ன! என்ன சமாசாரம்?

ந. நான் கனவு கண்டிருக்க வேண்டுமென்று நினைக்கிறேன். என்ன பயங்கரமானது! ஒரு குன்றின் உச்சியிலிருந்து நான் கீழே விழுந்தது போல் தோன்றிற்று—அடியென் பதில்லாத மிகுந்த ஆழமான ஓர் பெரும்பள்ளத்தில் நேராகவிழுந்தது போல்! அப்பா! அது என்ன திகிலைத் தந்தது! நான் உடம்பெல்லாம் நடுநடுங்கி எல்லாம் தீர்ந்த தென எண்ணினேன். பிறகு தரையின் பேரில் மோதி யதுபோல் ஓர் அதிர்ச்சி உண்டாச்சுது. திடுக்கிட்டெ ழுந்து—கண்விழிக்க—உடம்பெல்லாம் ஒன்றும் பின்ன மாகாததைப்பார்த்து ஆச்சரியப்பட்டேன்—அது நரகத் தின் படுகுழிபோலிருந்தது!

சா. ஆ! ஈஸ்வரா! இதெல்லாம் எதைக்குறிக்கிறதோ?— பரமேஸ்வரா! கருணைகூரும்! அவரைக்காப்பாற்றும்! காப்பாற்றும்!—எனக்காக! [நடராஜன் பக்கம் திரும்பி]

நீங்கள் உடம்பை அலட்டிக்கொள்ளாதீர்கள். வயித்தியர் நீங்கள் முற்றிலும் நிம்மதியாயிருக்க வேண்டுமென்று சொன்னாரே !

ந. அப்படியே ஆகட்டும்—அது வருகிறது !

[என்று சொல்லிபடுக்கையில் ஒரு புறமாகத்திருப்புகிறான்.]

சா. ஈசன்—திருஉளப்படி—எல்லாம்—ஆகுக!

[ஒரு மூலையிற்போய் உட்கார்ந்து படுக்கையைப் பார்த்தவண்ணமிருக்கிறாள்.]

(இடது புறம்.)

அ. [ஒரு மோட்டார் வண்டியின் சப்தம் வெளியிற்கேட்டு] யார் வண்டி அது ?

வீ. [கடியாரத்தைப் பார்த்து] அது நம்முடைய தாயிராது, இன்னும் ஆறுமணி ஆகவில்லை.

அ. நான் வெளியே போய்ப்பார்க்கிறேன்.

[போகிறாள்.]

வீ. [தரைமீதிருந்து அம்மாயியின் பையை எடுத்து, அதை உதறிப் பார்க்கிறான் அதில் பணம் இல்லையென்று நிச்சயிக்கும் பொருட்டு] ஹா ! என்ன மூதேவி ! இவளைக்கட்டிக்கொண்டு அழுவது போதும் என்று போகிறதெனக்கு!

அம்மாயி வருகிறாள்.

யார் வண்டி அது ?

அ. வயித்தியர் வண்டி, பக்கத்து வீட்டில் நின்றது.

வீ. எந்த வீட்டில் ? நடராஜ சாஸ்திரியார் வீட்டிலா ? யார் அங்கே அசௌக்கியமாயிருக்கிறது ?

அ. உனக்குத்தெரியாதா ? சாஸ்திரியார் சுமார் ஒருவாரமாக நிரம்ப ஜுரத்தோடு படுத்த படுக்கையாகக்கிடக்கிறார் ! அவர் பெண்சாதி—நல்ல அழகு, சின்னவயசு—பாபம்! அழுது அழுது கண்ணெல்லாம் சிவந்து போயிருக்கிறது. புருஷனும் பெண்சாதியும் என்ன ஒற்றுமையாய், ஆசையாயிருக்கிறார்கள் !

வீ. சாஸ்திரியார், பணம் எல்லாம் போய் நிரம்ப ஏழையாகிப் போய்விட்டார் என்று நினைத்தேனே! மோட்டார் காரில் வந்த வயித்தியர் யார் அது?

அ. அவரை டாக்டர் ராஜா என்று கூப்பிடுகிறார்கள்—நிரம்ப நல்லவர், கெட்டிக்காரர், நல்லசுபாவம், பணக்காரன் ஏழை யென்று பாராமல் எல்லோரிடமும் மிகவும்பட்ச மாயிருக்கிறார் என்று சொல்லுகிறார்கள். எல்லோரும் அவரைத் தெய்வம்போலக் கொண்டாடுகிறார்கள்.

வீ. உன் கதைகளை யெல்லாம் கேட்டுக்கொண்டிருக்க எனக்குக் காலமில்லை. நானிப்பொழுது போய் எல்லாம் சித்தம் செய்யவேண்டும். வெளியில் இருந்து ஜாக்கிரதையாகப் பார்த்து எனக்குத் தெரிவி.

[போகிறான்.]

அ. வாஸ்தவம்! பெண் பிள்ளைகளாகிய நாங்கள் காத்துக் கொண்டும் பார்த்துக்கொண்டும் இருக்கவேண்டியது தானே!

[தன் பையை எடுத்து அதிலிருந்து வெளியில் எறியப்பட்ட வெற்றிலை பாக்கு முதலிய வற்றை அதில் மறுபடியும் போட்டு நிரப்ப ஆரம்பிக்கிறாள்.]

(வலது புறம்.)

டாக்டர் ராஜா வருகிறார்.

[சாவித்திரி அவரைக்கண்டதும் எழுந்து தன்முகத்தை மூடித் தேம்பி அழ ஆரம்பிக்கிறாள்.]

டா. அம்மா, கொஞ்சம் பொறுமையுடன் இரு! அவருடைய உயிரைக்காப்பாற்ற வேண்டுமென்றால் நீ இம்மாதிரி யெல்லாம் அழுகைக்கு இடங்கொடுக்கக்கூடாது.

சா. டாக்டர், எனக்கு வேறொருவரும் இல்லை இவ்வுலகில்!

டா. பரமேஸ்வரன் இருக்கிறார்—அவரை நம்பி அவருக்குப் பிரார்த்தனை செய்.

சா. டாக்டர், வேறென்ன இருக்கிறதெனக்கு—உம்முடைய பட்சமும் பரமேஸ்வரன் கருணையுமன்றி!

டா. [நோயாளியின் அருகிற்சென்று] சாஸ்திரியார், எப்படியிருக்கிறீர்கள் இப்பொழுது?

ந. இன்னும் சாகாமல் இருக்கிறேன்—டாக்டர்—இதுவரையில்! யமவாதனை அனுபவிக்கிறேன்! சீக்கிரம் இந்த பாதையெல்லாம் நீங்க, எனக்கு ஏதாவது கொடுத்து விடலாகாதா?

டா. நீர் நினைக்கிறபடி அப்படி கெடுதியாய் ஒன்றுமில்லை உமக்கு என்று எண்ணுகிறேன். நீர் இன்னும் ஒரு ஐம்பது வருஷம் வாழவேண்டியிருக்குமென நம்புகிறேன். அந்த வியாதி அதன் ஸ்வரூபத்தைக் காட்டித்தானே தீரவேண்டும்? நீர் இவ்வளவு தாங்கியது விசேஷம், நாளைக்கு இன்னும் சுவஸ்தமாகும்.

ந. ஆம்—நாளை காலை நான் உயிரோடிருந்தால்!—என் முடிவிற்கு நான் நெருங்குகிறேன் என்று எனக்குள் ஏதோ சொல்லுகிறது.

டா. அதெல்லாம் அபத்தம்! சாஸ்திரி—அப்படியொன்றும் இல்லை. உம்முடைய வியாதி தான் முடிவிற்கு நெருங்குகிறது!—ஏதோபார்க்கிறேன்.

[வயித்தியர் நோயாளியை ஜாக்கிரதையாகப் பரிசோதிக்கிறார்.]

(இடது புறம்.)

அ. ஏதோ பார்க்கிறேன்! மற்றொரு பை எங்கே? [தன் இடுப்பிலிருந்து மற்றொரு பையை எடுத்து அதிலிருக்கும் பணத்தை எண்ணி] ஈசனே! ஈசனே! இந்தப் பையை மாத்திரம் பார்த்திருந்தால்—ஆ! பொழுதாச்சுது நான் போகவேண்டும்.

[மறுபடியும் அந்தப் பையை ஒளித்துவைத்துக்கொண்டு வெளியே போகிறாள்.]

(வலது புறம்.)

டா. இந்த ஜ்வரம் உம்மை விடவேண்டியகாலம் ஆகிவிட்டது. இதற்கு ஏழுநாள் ஜ்வரம் என்று பெயர்வைத்திருக்கிறார்கள்; வாஸ்தவமாய் இது நூற்று நாற்பத்து நான்கு மணியிருக்கும் ஜ்வரம்; போன திங்கட்கிழமை சாயங்காலம் உமக்குக் கண்டதாகச் சொன்னீர் அல்லவா? உம்முடைய நாடி நன்றாயிருக்கிறது, உம்முடைய அங்கங்களில் ஒன்றும் அதிகமாய்க் கெடுதியாய் இல்லை. இனி இன்றும் நீர் தப்பிப்பிழைப்பீர். ஜ்வரமானது தன் முழு மும்மரத்தை அடைந்திருக்கிறது, அதனால்தான் உமக்கு இவ்வளவு பாதையைக் கொடுப்பது போலிருக்கிறது.

ந. பாதையைக் கொடுப்பது போலிருக்கிறதா!—ஹா! இந்தப் பொய்யான உலகத்தில் மெய்யானது பாதை ஒன்று தான்!

டா. கொஞ்சம் பேசாமல், பொறுத்துக் கொண்டு நிம்மதியாயிரும். இப்பொழுது நான் உமக்கு ஒரு புதிய ஔஷதம் கொடுக்கப் போகிறேன். அது உம்முடைய பாதையை உடனே தணியச் செய்யும்.

ந. நான் இப்பொழுது கோருவதெல்லாம் அவ்வளவு தான் டாக்டர்.

டா. [எழுந்திருந்து கொஞ்சம் தூரம்போய், ஏதோயோசிப்பது போல் நிற்கிறார்; பிறகு சாவித்திரியிடம்] ஒரு புதிய மருந்துக்காக எழுதியிருக்கிறேன்—ஆனால் இது கொஞ்சம் விலை அதிகமாயிருக்கும், ஒரு வேளை பதினைந்து ரூபாய் விலையிருக்கும். இதற்கு வேண்டிய ரூபாய் தற்சமயம் வீட்டிலிருக்கிறதா என்று நான் கேட்கலாமோ?

சா. இல்லை—டாக்டர்.—ஒரு ரூபாயுமில்லை; என் கழுத்து சரடை விற்ற ரூபாயில் கடைசி ரூபாயை இன்றுசாயங்காலம் செலவழித்து விட்டேன். ஆயினும், என்னுடைய கம்மலும் இன்னும் ஒன்றிரண்டு சிறிய நகைகளுமிருக்

கின்றன. அவர் மாத்திரம் உயிர்பிழைத்தாற் போதும்—எனக்கு நகைகள் எதற்கு! ஆயினும் இன்று இவ்வளவு பொழுதாகி விட்டதே!

டா. [தன்னிடமிருந்து ஒரு நூறுரூபாய் நோட்டை எடுத்து அவளிடம் நீட்டி] தயவுசெய்து எனக்கு உத்தரவு கொடுக்கவேண்டும். இதைநீ வைத்துக்கொள் அம்மா, சிலவை ஒன்றும் கவனிக்காதே. நான் ஏதோ தர்மமாகக் கொடுக்கிறேன் என்று இதைவாங்கமாட்டேன் என்று சொல்லாதே. உங்களுக்கு எப்பொழுதாவது சவுகர்யமாயிருக்கும் பொழுது இதை உங்களிடமிருந்து வாங்கிக் கொள்ளுகிறேன்.

சா. ஆ! வேண்டாம்! டாக்டர்—அது முடியாது. நீங்கள் வந்து போவதற்கே உங்களுக்குச் சேரவேண்டியதை நாங்கள் கொடுக்கவில்லையே! அதனுடன் இதுவுமா?

டா. அவருடைய உயிரைக் காப்பாற்ற வேண்டியது உன் கடமையல்லவா? உன் சகோதரனிடமிருந்து பெறுவது போல் இதைப் பெற்றுக்கொள் இதற்கு ஆட்சேபணை செய்யாதே!

சா. [யோசனை செய்து, தீர்மானித்து, அந்த நோட்டை வாங்கிக் கொண்டு] ஆம் டாக்டர், இதைவாங்கிக் கொள்ளுகிறேன். எனக்கு இவ்வளவு உபகாரம் செய்யும் இவ்வுலகில் மிகுந்த உத்தமும் பட்சமுமுடைய ஆன்மாவைப் படைத்த உம்மிடமிருந்து, எதையும் வாங்கிக்கொள்ள நான் வேண்டாம் என்று மறுப்பானேன்? அது எப்படி என்னால் முடியும்? நான் திருப்பிக்கொடுப்பதாவது—எதையும்! சுவாமி தான் உமக்கு—

டா. நாளைகாலை நான் வருகிறேன். அவருடைய உடம்பு அனுகூலமாயிருக்குமென்று கோருகிறேன்.

[போகிறார்.]

சா. [அவர் போனதிசையில் சற்றுநேரம் உற்றுப்பார்த்துவிட்டு, பிறகு திரும்பி] இக்கலியுகத்திற் கூட மனிதர்களுக்குள் இப்படிப்பட்ட தெய்வங்கள் பிறந்திருக்கின்றனவா!

(இடது புறம்.)

வீராசாமி சொக்காய் தலைகுட்டை முதலியன போட்டுக்கொண்டு வருகிறான்.

வீ. இதோ வந்து விட்டேன்! நான் அதிக காலம் கழித்து வரவில்லை பார்!—ஆ! எங்கே அவள்? நான்மறந்தேன். அவள் வெளியிலேகாத்துக் கொண்டிருக்கவேண்டும்.

அம்மாயி விரைந்து வருகிறாள்.

அ. வா! வா! அவர்கள் வருகிறார்கள்! அவர்களுடைய வண்டி நம்முடைய தெரிவில் திரும்பியதைப் பார்த்தேன்.

வீ. இப்பொழுது என்னைப்பார்த்தால் தடபுடலாக இல்லை?

அ. ஆமாம்! நீ எப்பொழுதும் தடபுடல்தான்! வாசீக்கிரம்!

[இருவரும் போகிறார்கள்.]

(வலது புறம்.)

ந. ஹா! ஹா! என் உயிர் என்னைவிட்டுப் போகிறாற் போலிருக்கிறது! யார் அங்கே? என்ன! நீயும் என்னைக் கைவிட்டாயா?

[படுக்கையினின்றும் கொஞ்சம் எழுந்து அதன்மீது அப்படியே விழுகிறான்.]

(இடது புறம்.)

சக்ரபாணி முதலியாரும் அவருடையமனைவி நளினியும் வருகிறார்கள்.

ச. இது தான் உன் வீடு—நளினி—அதாவது தற்காலம். நமக்கு அந்த சொத்து கிடைத்த பிறகு, ஒரு தோட்டத்திலிருக்கிற பங்களாவுக்குப் போவோம்.

ந. இது எனக்குப் போதும். பெரியவீடுகளி லிருப்பது எனக்கு இஷ்டமில்லை.

ச. நீ அப்படிச் சொல்லக்கூடாது. ஆயினும் என் வீடு உனக்கு திர்ப்தியாயிருப்பது எனக்கு சந்தோஷம்.

நம்முடைய பாட்டனர் துபாசி ரங்கநாத முதலியார் இந்த வீட்டில்தான் வாழ்ந்திருந்து இங்கேயே காலமானர். நம்முடைய குடும்பத்தில் இது நூற்றைம்பது வருஷத்துக்குமேல் இருந்திருக்கலாம் இந்த வீடு.

ந. ஆனல் இந்த வீட்டை நான் இன்னும் அதிகமாகவிரும்ப வேண்டும்.

அம்மாயியும் அவள் பின்னல் வீராசாமியும் வருகிருர்கள்.

ச. நளினி, அவள்தான் அம்மாயி, வேலைக்காரி. அவளும் அவள் புருஷன் வீராசாமியும் இந்த வீட்டில் பதினைந்து வருஷங்களாக இருக்கிருர்கள்.

ந. அத்தனை வருஷங்கள் தான் ஆச்சுது நானும் இவ்வுலகத்திற் பிறந்து. அம்மாயி, உன் எஜமானர் உன்னைப்பற்றி என்னிடம் அதிகமாய்ச் சொல்லியிருக்கிருர்.

அ. லட்சுமி வருவதற்காக எதிர்பார்ப்பது போல் நீங்கள் எப்பொழுது வருவீர்கள் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம் நாங்கள்.

ந. எங்கே உன் புருஷன்? அவன்தான? அவன் பெயர் என்ன?

ச. ஆம்—வீராசாமி.

ந. ஆமாம், நீ கலியாணத்திற்கு வந்திருந்தாயல்லவா?

வீ. ஆமாம் அம்மா, இந்த வீட்டை எல்லாம் சுத்தப்படுத்தி சித்தமாய்வைக்க முன்பு வந்து விட்டேன்.

ச. நாழியாச்சுது நளினி, இன்னும் கால்மணி நேரத்தில் நம்முடைய சிநேகிதர்களெல்லாம் இங்குவருவார்கள், அவர்களையெல்லாம் வரவேற்று அவர்களுடன் நீ பேசவேண்டும். நீ எப்பொழுது வருவாய் என்று அவர்களெல்லாம் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருப்பதாக நான் கேள்விப்படுகிறேன்.

ந. ஏன்? எதற்காக?

ச. அவர்களுடைய ஆப்தநண்பனுடைய அருமையாம் மனைவியென்று தான், சந்தேகமென்ன ?

ந. ஆடவர்களைப் பார்த்து நான் அவர்களுடன் ஏன் பேச வேண்டும் ?

ச. இதோபார்! நான் சீமைக்குப்போய் அங்கே படித்தவன் ஆச்சுதே; ஆகவே என் பெண்சாதி கோஷாவாயிருக்கலாமா ?

ந. உம் !—நான் என்ன செய்ய வேண்டும் ?

ச. உள்ளே போய், முகங்கழுவிக்கொண்டு இங்கு வந்து உட்கார், பிறகு நான் சொல்லுகிறேன்.

ந. நல்லது அப்படியே—வா அம்மாயி.

[அம்மாயி யுடன் போகிருள்.]

ச. வீராசாமி—எல்லாம் சித்தமாயிருக்கிறதா ?

வீ. ஆமாம், எசமான்—எல்லாம், தேத்தண்ணீரும் பலஹாரமும் கூட, வரவழைத்து சித்தமாய் வைக்கப்பட்டிருக்கிறது.

ச. எனக்கு ஏதாவது காகிதங்களாவது தந்தியாவதுவந்ததா ?

வீ. இல்லை எசமான்.

நளினி வருகிருள்.

ந. இதோ வந்துவிட்டேன்—நான் இப்பொழுது என்ன செய்ய வேண்டும் ?

ச. இதோ சொல்லுகிறேன் [சுற்றிப்பார்த்து] இந்த நாற்காலியில் உட்கார்ந்து கொள், எல்லோரும் போகும் வரையில் இதைவிட்டு எழுந்திருக்காதே; என்னுடைய சினேகிதர்களை நான் இன்னர் இன்னர் என்று தெரிவிக்கும் பொழுது, நமஸ்காரம் செய்து விட்டு, பிறகு பேசிக்கொண்டிரு—நான் சொல்வது தெரிகிறதா ?

ந. தெரிகிறது—மிகவும் நன்றாக! வாஸ்தவம் என்னவென்றால், கால் நொண்டியான பெண்சாதியைக் கட்டிக்கொண்டோமே என்று உங்களுக்கு வெட்கமாயிருக்கிறது, அதை அவர்கள் அறிவது உயக்கிஷ்டமில்லை! அதற்கு என்னை ஏன் கலியாணம் செய்து கொண்டீர்கள்?

ச. நிரம்ப முக்கியமான காரணங்களுக்காகத் தான், அவைகளையெல்லாம், தகுந்த காலத்தில் நீ அறிந்து சந்தோஷப்படுவாய் என்பதற்குச் சந்தேகமில்லை. முதல் நாளிலேயே நீ நொண்டிக்கொண்டு நடப்பதை அவர்கள் எல்லோரும் பார்க்கவேண்டுமென்று ஏன் அவ்வளவு ஆவலாயிருக்கிறாய்?

ந. அதைக்கண்டு பிடிக்கவே மாட்டார்கள் அவர்கள் என்று நினைக்கிறீர்களா?—இன்றைக்கில்லாவிட்டால்—இன்னொருநாள், அவ்வளவு தானே?

ச. அதல்ல, பட்டணம் முழுவதும் இதைப்பறையடிப்பது எனக்கிஷ்டமில்லை—நாளைத்தினமே. அதற்காகத் தான் எனக்கு நிரம்ப சிநேகிதர்களான சிலருக்கு மாத்திரம் சொல்லி அனுப்பியிருக்கிறேன்.

ந. சரி—நீங்கள் என்னைக் கலியாணம் செய்துகொண்டீர்கள், அவ்வளவு என்மீது தயை புரிந்ததற்காக—நான் உங்கள் சொற்படி நடக்கவேண்டியது தான். உங்கள் இஷ்டம்போல் செய்யுங்கள்! இப்படியாகுமென்று அப்பொழுதே சந்தேகித்தேன்.

[நாற்காலியில் உட்காருகிறாள்.]

ச. முகத்தை ஒரு மாதிரி வைத்துக்கொள்ளாதே! அவர்கள் எல்லாம் சீக்கிரம் இங்கு வருவார்கள்.

ந. நான் என்ன ஒரு அசங்கியம் பிடித்த பொம்மைதானே, நீங்கள் சூஸ்திரத்தை எப்படி இழுக்கிறீர்களோ அப்படியே ஆடுகிறேன் சிரிக்கிறேன்.

ச. இதைவிட கொஞ்சம் சந்தோஷமாக உன் மனதை வைத்துக்கொள்ள முடியாதா உன்னால்?

ந. முயன்றுபார்க்கத்தான் முடியும் என்றால்.

ச. அதையாவது செய்! உனக்குப் புண்ணியமாகப்போகிறது!

[சக்ரபாணியும் நளினியும் வரும்விருந்தினரை உபசரிக்க சித்தம் செய்கிறார்கள். வீராசாமி சாமான்களை யெல்லாம் ஒழுங்காக வைத்துக் கொண்டிருக்கிறான்.]

(வலது புறம்.)

ந. எங்கே இருக்கிறாய் நீ? போய்விட்டாயா?—யார் அங்கே? உனக்குப் புண்ணியமாய்ப் போகிறது—இன்னும் கொஞ்சம் நிமிஷங்கள் தான்! பதில்கூடச்சொல்ல மாட்டாயா?

சாவித்திரி விரைந்து வருகிறாள்.

சா. கூப்பிட்டீர்களா?

ந. கூப்பிட்டேனா? நான் கத்திக்கொண்டிருந்தேன்!—ஈசனுக்குத்தான் தெரியும் எத்தனை நாழிகையாக வென்று!

சா. கொஞ்சம் கஞ்சி கொண்டுவரவா?

ந. உன் கஞ்சியைக்கொண்டுபோய் சாக்கடையில் ஊற்று! தாகம் தாகம் என்று சாகிறேன்! எனக்குத் தண்ணீர் தான் வேண்டும்.

சா. வயித்தியர் எழுதிக் கொடுத்துவிட்டுப்போன புது மருந்து இன்னும் ஐந்து நிமிஷங்களுக்குள் வந்துவிடும் இங்கே; முதலில் அதைச் சாப்பிடும், பிறகு உங்களுக்குத் தண்ணீர் கொடுக்கிறேன்.

ந. அந்த ஐந்து நிமிஷத்துக்குள் நான் செத்துப்போய்விடுவேன்!—இப்பொழுதே நீ எனக்குத் தண்ணீர் கொடுக்காவிட்டால்!—கொடுக்கிறாயா?—மாட்டாயா?

சா. ஐயோ! நான் என் செய்வேன்? ஈஸ்வரன் சித்தப்படி ஆகிறது! வென்னீர் தீர்த்தம் வேண்டுமா குளிர்ந்த தீர்த்தம் வேண்டுமா?

ந. சில் என்று!—சில் என்று!—பனிக்கட்டிபோல்!

[சாவித்திரி போகிருள்.]

(இடது புறம்.)

ச. தேத்தண்ணீர் செய்தாயிற்று? தயாராக இருக்கிறதா?

வீ. ஆம் எசமான், எல்லாம் தயாராக இருக்கிறது.

(வலது புறம்.)

சாவித்திரி வருகிருள்.

சா. மருந்து வந்து விட்டது.

ந. நீ அந்த மருந்தைச் சாப்பிடு! எனக்குத் தண்ணீரைக் கொடு.

[எழுந்து உட்கார்ந்து, சாவித்திரி கையினின்றும் லோட்டாவைப் பிடிங்கி தீர்த்தத்தைக் குடித்து விடுகிருன். சாவித்திரி மருந்து புட்டியைத்திறந்து ஒருபுள்ளி மருந்தைக் கொடுப்பதற்கு யத்னம் செய்கிருள். சாவித்திரிபோகிருள்.]

(இடது புறம்.)

அநந்தாசாரியார் வருகிருர்.

ச. ஆஹா! அநந்தாசாரியார்! வாருங்கள், க்ஷேமம் தானே?

அ. க்ஷேமம் தான். நிரம்ப சந்தோஷம். என் ஆசிர்வாதம் உங்களுக்கு! நீங்கள் பெருவாழ்வு வாழ வேண்டுமென்பது என் கோரிக்கை.

ச. நாங்கள் இங்கு வந்த முதல்நாளே எங்களை நீங்கள் பார்க்கவந்தது நிரம்ப சந்தோஷம். நான் சில சிநேகிதர்களுக்குத் தான் எழுதியனுப்பினேன். நீங்கள் பட்ட

4

ணத்திலிருக்கிறீர்களோ அல்லது வெளியே வேலையாகப் போயிருக்கிறீர்களோ என்று சந்தேகம்.

அ. இன்று காலை தான் பட்டணம் திரும்பிவந்தேன் முக்கியமாக.

ச. என் பெண்சாதி—அநந்தாசாரியார் அவர்கள்—தபால் ஆபீசில் டெபுடி சூபரின்டென்டெண்ட்.

[அவர்களிருவரும் ஒருவரை ஒருவர் நமஸ்கரிக்கின்றனர்.]

ந. தயவு செய்து உட்காருங்கள்.

அ. சந்தோஷம்.

ந. கொஞ்சம் தேத்தண்ணீர் சாப்பிடுகிறீர்களா?—பையா!

அ. நான்—நான்—சாதாரணமாக—நான் சொல்ல வந்தது—இங்கு வருவதன்முன் தான் சாப்பிட்டு விட்டு வந்தேன்.

ந. சோடா ஏதாவது சாப்பிடுகிறீர்களா? லெமனேட்சாப்பிடுகிறீர்களா?

அ. வேண்டாம்–வேண்டாம்–மன்னியுங்கள். ஒன்றும் வேண்டாம் இப்பொழுது, எனக்கு தாகமாக இல்லை.

ந. தாகமாயிருந்தால் தான் ஏதாவது சாப்பிடுகிறார்களா என்ன? ஒரு சம்மர்கப், மாதிரிபாருங்களேன், ஐயங்கார் அவாள்.

ச. அய்யங்கார் அவர்களைத் தொந்திரவு செய்யாதே. அவர் நிரம்ப வைதீகம், நம்முடைய வீட்டில் எதையும் சாப்பிடவுமாட்டார் குடிக்கவுமாட்டார்.

ந. அதை நீங்கள் எனக்கு முன்பே சொல்லியிருக்க வேண்டும்.—என்னை மன்னியும்.

ஜெயகோவிந்த நாயுடும் ராமகிருஷ்ண முதலியாரும் வருகிறார்கள்.

ச. ஆஹா! ஜெயா, க்ஷேமம் தானே?

ஜே. நீங்கள் க்ஷேமம் தானே? நீங்களும் உங்கள் மனைவியும் பதினாறும் பெற்று பெரு வாழ்வு வாழவேண்டும்!

ச. முதலியார் அவாள் க்ஷேமம் தானே?

ரா. நீங்களும் க்ஷேமம் தானே? உங்களுக்குக் கலியாண மாச்சுது என்று கேள்விப்பட்டேன், நிரம்ப சந்தோஷம். நீங்களிரண்டு பெயரும் பெருவாழ்வுவாழ வேண்டும்!

ச. அது தான் என் பெண்சாதி—என்னுடைய சிநேகிதர்கள்.—ஜெய கோவிந்த நாயுடு—உம்—பாரியண்டு கம்பெனி துபாசி—ராமகிருஷ்ண முதலியார்—ஹைகோட்டு வக்கீல்.

[நளினி அவர்களிருவருக்கும் நமஸ்காரம் செய்ய, அவர்கள் அவளுக்கு நமஸ்காரம் செய்கிறார்கள்.]

ந. தயவுசெய்து உட்காருங்கள், நான் எழுந்திருக்காததற்காக என்னை மன்னிக்க வேண்டும்; இன்றைக்கு என்னால் முடியாது.

ஜே. உங்கள் காலுக்கு என்ன நேர்ந்தது?

ந. [கலவரப்பட்டு] ஒன்றுமில்லை—இன்றைக்கு மாத்திரம். ரெயிலில் இருந்து அரைமணி நேரத்துக்கு முன் தான் நாங்கள் வந்து சேர்ந்தோம்—உங்களுக்குத் தெரியுமே?

ஜே. எனக்கு மிகவும் வருத்தமாயிருக்கிறது.

ந. வருத்தப்படவேண்டிய விஷயம் ஒன்றுமில்லை—கொஞ்சம் தேத்தண்ணீர் சாப்பிடமாட்டீர்களா? கொஞ்சம் வேண்டாமா?—

ரா. சந்தோஷம்—கட்டாயமாகச் சாப்பிடுகிறோம்.

ந. பையா! இவர்களிரண்டு பெயருக்கும் தேத்தண்ணீர் கொண்டுவா.

[வீராசாமி போகிறான்.]

ஜே. நீங்களும் கொஞ்சம் சாப்பிடமாட்டீர்களா ?

ந. அப்படியே நானும் சாப்பிடுகிறேன்—இன்னும் மற்ற விருந்தாளிகளும் வந்து சேர்ந்தபின்.

ரா. இன்றைக்கு அநேகம் பெயர் வரமாட்டார்கள் என்று நினைக்கிறேன். பாங்கிவட்டிங் ஹாலில் ஒரு முக்கியமான கூட்டம் கூடுகிறார்கள் இன்றைக்கு, அதில் கவர்னர் துரையவர்கள் அக்கிராசனம் வஹிக்கிறார்.

ஜே. ஆனால் முதலியார் ஏது அங்கு போகாதது ?

ரா. இங்கேயும் அங்கேயும் இரண்டிடத்திலும் என்னால் இருக்கமுடியாது. அதல்லாமலும், கவர்ன்மெண்ட் உத்தியோகம் வேண்டும் என்று நான் அபேட்சிக்க வில்லை— ஏதாவது பட்டம் வரவேண்டு மென்றும் நான் அபேட்சிக்கவில்லை.

ச. ஆனால் முதலியார்—நீங்கள் சொல்வது—அங்கே போகிறவர்கள் எல்லாம்—

ரா. அதல்ல; அப்படிச் சொல்லவில்லை நான்—என்னைப் பற்றி மாத்திரம் நான் பேசிக் கொண்டேன்.

வீராசாமி, தேத்தண்ணீர் பலஹாரம் முதலியனவெல்லாம்

கொண்டுவருகிறான்.

ந. இந்த சின்ன மேஜையின்மீதுவை அவைகளை. [வீராசாமி அப்படியே செய்கிறான்] இந்தத்தித்திப்புகளைக் கொஞ்சம் ருசிபார்க்கிறீர்களா ?

ஜே.. எனக்குக் காரம்தான் இஷ்டம்.

ந. சாப்பாட்டு விஷயத்தில் தான் அப்படி என்று கோருகிறேன் !

அ. குணத்திற் கேற்றபடி உணவு, என்று ஒரு பழமொழி சொல்லுகிறார்கள்.

ஜே. அப்படியானல் ஒன்றுமே சாப்பிடாதவர்கள் எல்லோரையும் வெறுக்கவேண்டும்! அது தங்கள் குற்றத்தைத் தாங்களே ஒப்புக்கொள்வது போலாகும்!

[இதர விருந்தாளிகள் வந்து வரவேற்கப் பட்டு, எல்லோரும் பட்சணங்களைப் புசிக்க ஆரம்பிக்கிறார்கள்.]

(வலது புறம்.)

சாவித்திரி வருகிறாள், கையில் ஒரு வேளை மருந்தை எடுத்துக்கொண்டு.

சா. அந்தப்புதுமருந்தில் ஒருபுள்ளி வார்த்துக்கொண்டு வந்திருக்கிறேன். இதைக் கொஞ்சம் சாப்பிடுகிறீர்களா? டாக்டர் இதைப்பற்றி மிகவும் விசேஷமாகப்பேசுகிறார்!

ந. சுடு உன்வயித்தியரைக் கொண்டுபோய் சுடுக்காட்டில்! மருந்துகளைக்கொடுத்து என்னை யேன் கொல்லுகிறாய்? என் அந்தியகாலத்தில் கூட என்னைச் சும்மா விடமாட்டாயா?

சா. ஐயோ! ஈசனே!—நீங்கள் ஏன் இப்படிப் பேசுகிறீர்கள்? வயித்தியர் இது உம்மை சுவஸ்தப் படுத்தும் என்கிறாரே.

ந. சுவஸ்தப்படுத்திவிடும்—அதற்குச் சந்தேகமில்லை—ரொம்ப சரிதான்! நீ ஒரு மட்டி! வயித்தியரினால் எனக்கு விதித்திருக்கிற ஆயுசை அதிகப்படுத்த முடியுமா? நான் போனபிறகு உன்கதி என்னவாகுமென்று அந்த ஈசனுக்குத்தான் தெரியும்! உன்னுடைய மிகுந்திருந்த நகைகளையும் விற்றுவிட்டாய்! நான் அதற்கு அருஹனாயில்லாதபோதிலும், நீ என் மீது அதிகபட்சம் வைத்து பிரியமாயிருந்தாய்! நான் உனக்குச் செய்த குற்றங்களுக்கெல்லாம் என்னை மன்னிப்பாய்—உன்

மனதைத் திர்ப்தி செய்வதற்காக இந்தக் கடைசி மருந்தை நான் சாப்பிடுகிறேன்.

[மருந்தைக் கையில் வாங்கிக் கொள்ளுகிறான், அவன் கை நடுங்குகிறது.]

சா. நான் கொடுக்கிறேன் அதை, தயவு செய்து வாயைத்திறவுங்கள்.

[அவன் வாயைத்திறக்க, மருந்தை அவன்வாயில் வார்க்கிறாள்.]

ந. நிரம்ப தித்திப்பாயிருக்கிறது.

சா. வயித்தியர் இது நிரம்ப சிரேஷ்டமான மருந்து என்று சொன்னார். நிம்மதியாகச் கொஞ்சம் தூங்குங்கள்.

[போகிறாள்.]

(இடது புறம்.)

மாணிக்க முதலியாரும், சாம்பமூர்த்தி ஐயரும் வருகிறார்கள்.

ச. விருந்து விஷயத்தில், போகாதிருப்பதைவிட காலம் கழித்தாயினும் போதல் மேலாம், என்பது உண்மை தான் —க்ஷேமம்தானே ?

சா. அது வாஸ்தவமே, ஆயினும் ரெயிலுக்குப்போக வேண்டிவந்தால் அந்தப்பழமொழி அவ்வளவாக உபயோகப்படாது. உங்களுக்குக் கலியாணமானது மிகவும் சந்தோஷம், பதினாறும்பெற்று பெருவாழ்வு வாழ வேண்டும்!

மா. அப்படியே என்னுடைய கோரிக்கையும், அண்ணா.

சா. கலியாணத்திற்கு மாத்திரம்தான் நம்மைக் கூப்பிடாது நாமம் போட்டார்.

ச. கடைசியில் திடீரென்று நாள் குறிக்கப்பட்டது. அதல்லாமல் இன்னும் சில கஷ்டங்கள் இருந்தன.

சா. கஷ்டத்தின் பக்கமாகவே நீங்கள் எப்பொழுதும் சாய்கிருற்போலிருக்கிறதே, முதலியார். அதோ இருக்கிறவர்கள்தான் முதலியாருடைய மனைவியோ ?

ச. வாருங்கள்—என் பெண்சாதி—மாணிக்கமுதலியார், சாம்பமூர்த்தி ஐயர். [நமஸ்கரிக்கிருர்கள்.] உங்களை யெல்லாம் கலியாணத்திற்கு வரவழைக்காததற்காக, விவரத்தைக்கூறி உங்கள் மன்னிப்பைக் கேட்கவேண்டியவனுயிருக்கிறேன். வாஸ்தவம் என்ன வென்ருல், நான் வரவழைக்க வேண்டிய அத்தனை சிநேகிதர்களுக்கும் மாயவரத்தில் தகுந்தபடி விடுதி ஏற்பாடு செய்வது முடியாதகாரியமாயிருந்தது.

ஜே. அந்த நியாயம் உதவாது, அது நிற்பதற்குக்கூட இரண்டு காலில்லை, என்னசொல்லுகிருய் சாம்பமூர்த்தி ?

[சக்கரபாணி தன்மனைவியைப் பார்க்கிருன்.]

சா. உண்மை எப்படியும் வெளியாகும்—இன்றைக்காவது என்றைக்காவது ஒருநாள். இதன்கீழே ஏதோ இரகசியம் இருக்கிறது.

[வெளியில் ஒரு பைசிகல் மணி ஓசை கேட்கிறது. வீராசாமி போகிருன்.]

ஜே. நானும் அப்படித்தான் சந்தேகிக்கிறேன். நாம் கண்டு பிடிப்போம் பிறகு.

வீராசாமி ஒரு தந்தியைக் கொண்டுவருகிருன்.

ச. [மிகுந்த பரபரப்புடன்] சிநேகிதர்களே, என்னை ஒரு நிமிஷம் மன்னிக்கவேண்டும். [வெளியே போகிருன்.]

அ. பெரிதல்ல, போய்வாருங்கள்—
[கவலையோடிருக்கும் நளினியைப் பார்த்து] முற் காலத்தில் ஒரு தந்தி என்ருல் ஒரு பெரிய விஷயமாயிருந்தது, ஏதோகெட்ட சமாசாரம் என்று எண்ணிக் கொண்டிருந்தார்கள்—இப்பொழுதோ—

ந. நிரம்ப சாதாரணமாகி விட்டது! அதைப்பற்றி கவலைப் படுவார் யார்?

[ஜெய கோவிந்து நாயுடும், சாம்பமூர்த்தி ஐயரும் ஒரு புறமாகப்போய் பேசு கிறார்கள்.]

ஜெ. என்ன அவலட்சணமாயிருக்கிறாள்! அவர்கள் ஒருவருக் கொருவர் எப்படி பார்த்துக் கொண்டார்கள் என்று கவனித்தீரா? அவளுடைய காலைப்பற்றிய மற்றொரு கதையும் வாஸ்தவமாகத் தானிருக்கும் என்பதற்கு சந்தேகமில்லை.

சா. படுபாவி! பணத்திற்காக ஆசைப்பட்டு இப்படிப்போய் கலியாணம் செய்து கொள்வானா? கண்டுபிடிப்போம் நாம் அதை.

ஜெ. எப்படி நாம் கண்டுபிடிப்பது?

சா. நீ என்ன பெரியமடையனா என்ன? ஒரு தரம்கூட அவள் எழுந்திருக்கவில்லை யென்பதை கவனிக்கவில்லையா நீ? நாம் உள்ளே வந்த பொழுதுகூட! வேறு என்ன காரண மாயிருக்கக் கூடும்?

ஜெ. ஆமாம்! ஆமாம்! ஆயினும்—அவன் ஏன் இப்படி நடக்கிறான்? எப்பொழுதும் நம்மை இம்மாதிரி மோசம் செய்ய முடியுமென்று நினைக்கிறானா என்ன?

சா. நான் சொல்வதைக்கேள்—எனக்கு ஒரு அற்புதமான யோசனை தோன்றியிருக்கிறது. இரகசியம் சீக்கிரம் வெளியேவரும் பார்!—நாம் கவனிக்கப்படுகிறோம்; நாம் போய் மற்றவர்களுடன் கலந்து கொள்வோம்.

[அவர்களிருவரும் மற்றவர்களிருக்குமிடம் போய்ச்சேர்கிறார்கள்.]

(வலது புறம்)

ந. என்னைக்கூப்பிட்டாயா? நான் தூங்கிக்கொண்டிருந் தேனா? கனவுகண்டேனா?

(இடது புறம்.)

சக்ராபாணி வருகிறான்.

ந. எங்கிருந்துவந்தது தந்தி? என்ன சமாசாரத்தைப் பற்றி?

ச. ஒன்றும் விசேஷமில்லை—பிறகு நீ அறிவாய்.

அ. நாழியாச்சுது, நாங்கள் போக விடை கொடுக்க வேண்டும்.

மா. ஏன் அண்ணா, இப்பொழுதுதான் லட்சாதிபதி பெண்ணைக்கலியாணம் செய்து கொண்டீரே, இனி உங்கள் பூர்வீகமான இந்த வீட்டையும் தெருவையும் விட்டு வேறிடம் போவீர்கள் என்று நினைக்கிறேன்.

ச. இல்லை இல்லை! அதை நினைக்கவுமாட்டேன்.

ந. சாயங்காலம் சொன்னீர்களே, இதை விட்டு தோட்டத்தில் பங்களாவிற்குப் போகவேண்டுமென்று நீங்கள் யோசிப்பதாக?

ச. ஆம்—அதற்கப்புறம் அந்த அபிப்பிராயத்தை மாற்றி விட்டேன்.

சா. [நளினி உட்கார்ந்திருக்கும் இடத்திற்குப் பின்னால் உள்ள சுவரருகிற் காண்பித்து.] பாம்பு! பாம்பு! அதோ உங்கள் பின்னால்!

[ஜெய கோவிந்து நாயுடு உட்பட எல்லோரும் பயந்தெழுந்திருக்கிறார்கள்; நளினியும் திடீரென்று எழுந்து நொண்டிக்கொண்டு ஒருபுறமாகப்போகிறாள்.]

ச. எங்கே? எங்கே? [தரையில் பாம்பிற்காகத் தேடிப்பார்க்கிறான்.] பாம்பைக்காணோமே!

சா. அந்த மூலையில் ஏதோ சுருண்டிருந்ததே! என்ன அது? வெறும்கயிறா என்ன?

ச. உங்கள் கண்ணுக்கு என்னவந்தது ?

அ. உம்முடைய பெண்சாதி, ஓடமுயன்று கால் அதிகமாகச் சுளிக்கிக் கொண்டார்கள் என்றுபயப்படுகிறேன்.

ஜே. என்ன மூடனாய் இருக்கிறாய் சாம்பமூர்த்தி! காலில் ரொம்ப காயம்பட்டாற் போலிருக்கிறதே,—நீங்கள் தவறி விழுந்ததை நான் பார்க்கவில்லை.

ச. இல்லை இல்லை! இங்கே நேரிடவில்லை அது. இன்று ரெயிலிலிருந்து எழுந்திருக்கும் பொழுது தவறிவிழுந் தாள்.

ந. நான் எங்கே ரெயிலில்தவறி விழுந்தேன்? நான் கால் நொண்டுவதைப் பற்றி சொல்லுகிறார்கள் அவர் கள்.—நான் பிறந்தது முதல் அப்படித் தானிருக் கிறது அது.

[சக்கரபாணி அவளை உறுத்துப் பார்க்கிறான்.]

இவர்கள் உங்களுடைய சிநேகிதர்கள், இவர்களிடமிருந் தாவது அல்லது மற்றவர்களிடமிருந்தாவது எத்தனை காலம் அதை மறைக்க முடியும்? எல்லாவற்றையும் அவர் கள் சீக்கிரமாகவே அறிந்துவிடுவார்கள்!

அ ரொம்ப நாழிகையாச்சுது. நாங்கள் போகவேண்டும், வருகிறேன் முதலியார் அவர்கள். நான் உத்திரவு பெற் றுக் கொள்ளுகிறேன், வருகிறேன்.

[போகிறார்; மற்றசிநேகிதர்களும் விடைபெற்றுக் கொண்டு வெளியே போகின்றனர்.]

(வலது புறம்.)

ந. சாவித்ரி, அங்கே இருக்கிறாயா ?

சாவித்திரி வருகிறாள்.

சரி—நான் போகிறேன். கடைசிகாலம் சமீபித்து விட்டாற் போலிருக்கிறது. என் நோயெல்லாம் அடங்கி

விட்டது,—அன்றியும்—அன்றியும்—எனக்குப் பெரும் தூக்கம்—வருவதுபோல் தோற்றுகிறது—நான் போகிறேன்!—ஈசன்—உன்னைக்காப்பாற்றுவாராக!—ஈசனே!—

[தூங்கிவிடுகிறான்.]

சா. [அழுதுகொண்டே] ஹா! ஐயோ! ஐயோ! இறந்து போனார்! வயித்தியர்—வயித்தியர்!—என்ன பிரயோஜனம்?—எல்லாம் தீர்ந்துவிட்டது!—நான் பாழாகிப் போனேன்! பாழாகிப்போனேன்!

[தலையில் அடித்துக்கொண்டு, தரைமீது வீழ்ந்து மூர்ச்சையாகிறாள்.]

(இடது புறம்.)

விருந்தாளிகளெல்லாம் விடைபெற்றுப் போகும்பொழுது, ஜெயகோவிந்து நாயுடு, சாம்பமூர்த்தி ஐயரின் விலாவில் விரலினால் குத்திப்பேசுகிறார்.

ஜெ. [ஒரு புறமாக] பட்சமில்லாப் படுக்காளி நீ.

சா. [ஒரு புறமாக] அவளுக்காக எனக்கு வருத்தமாயிருக்கிறது—ஆயினும் அவனுக்கு இது வேண்டும்!

[எல்லா விருந்தாளிகளும் போகிறார்கள்.]

ச. வீராசாமி! அந்த தந்தி என் மேஜையின் பேரில் இருக்கிறது, போய் எடுத்துவா அதை.

[வீராசாமி போகிறான்.]

ந. எதைப்பற்றி தந்தி?

ச. சீக்கிரம் அதைத்தெரிந்து சந்தோஷப்படுவாய்.

வீராசாமி வருகிறான்.

வீ. இதுதானா அந்த தந்தி எசமான்?

ச. ஆமாம், நீ போகலாம். [வீராசாமி போகிறான்.]

[தந்தியை நளினியிடம் எறிந்து] இதோ, இதைப் படித்துப் பார்!

ந. [அதைப் படித்துப் பார்த்து] சரி! ஈசன் திருவுளம் இப்படி இருந்தது போலும்!—உங்களுக்காக தான் விசனப்படுகிறேன். என் தகப்பனாருடைய உயில் பிரகாரம், அந்த சொத்துகளுக்கும் எனக்கும் ஒரு பாத்யதையுமில்லை யென்று பிரிவிகவுன்சில் முடிவாகத் தீர்மானித்து விட்டார்கள் என்று அர்த்தமா என்ன? அல்லது அதற்குமேல் ஏதாவது அப்பீலுக்கு இடமுண்டோ?

ச. இல்லை! இதுதான் கடைசி முடிவு! இனி கோருவதற்கொன்றும் இடமில்லை! நல்ல பிரிவிகவுன்சில் இது! இந்தியாவில் இரண்டு கோர்ட்டுகள் தீர்மானித்ததை மாற்றி, ஹிந்துலா இப்படி யென்று நிர்ணயம் செய்ய! நாம் எப்படியும் ஜெயிப்போம் என்று எண்ணியே இன்றைத்தினம் கிரஹப்பிரவேசத்திற்கும் விருந்திற்கும் ஏற்பாடு செய்தேன்! இப்படி நடக்குமென்று நான் கனவிலும் நினைத்திருப்பேனாயின்!—

ந. நீங்கள் என்னைக் கலியாணம் செய்து கொண்டிருக்கமாட்டீர்கள்! ஏன் அப்படிச் செய்தீர்கள்? நான் உங்களிடம் அப்பொழுதே சொன்னேன், உங்களுடைய குணம் எனக்குத் தெரியும் என்றும், உங்களுக்கு என்மீது கொஞ்சமாவது பிரிய மில்லையென்றும்.

ச. எல்லாம் உன் தாயார் செய்த மோசம்! உன்னையும் உன் சொத்தையும் அடித்துக் கொண்டு போக இன்னொருவன் காத்துக் கொண்டிருக்கிறான் என்று என்னை நம்பும்படிச் செய்தாள். அவளுக்குத் தெரிந்திருக்க வேண்டும், பிரிவி கவுன்சலில் விரோதமானால் யாரும் உன்னைத் தீண்டமாட்டார்கள் என்று! ஏமாந்தவன் நான்!

ந. உம்! நிரம்ப சந்தோஷம்! ஆகவே என்னைக் கலியாணம் செய்து கொண்டது என் பணத்துக்காக என்று நீங்கள் ஒப்புக்கொள்ளுகிறீர்கள்!—அப்படி யில்லையென்று என்

னிடம் பிரமாணம் செய்த போதிலும்' [சக்கரபாணி மௌனமாயிருந்து பெருமூச்சு மாத்திரம் எறிகிறான்; நளினி தன் கணவனருகிற் போய்] கவலைப்பட வேண்டாம்! என்னைக் கலியாணம் செய்துகொண்டாயது, இருப்பதை வைத்துக்கொண்டு ஒப்பேற்ற வேண்டியது தான். எது போனாலும் இன்னும் என் தாயார் சொத்து இருக்கிறதல்லவா? அவர்கள் அதை தன் சக்களத்திப் பிள்ளைக்கு வைத்துவிட்டுப் போவார்கள் என்று நினைக்கிறீர்களா என்ன?

ச. என்ன!—அவள் இறந்த பிறகு!—இன்னும் எத்தனை வருஷம் பொறுத்து?

ந. பிடிவாதமாய்ப் பேசாதீர்கள்! இதோ பாரும்—உமக்கென்மீது ஆசை யில்லை உண்மையே!—ஆயினும் நான் உம்மீது ஆசையாயிருக்கிறேன்—நான் எப்படியாவது—

[என்று சொல்லி அவனது தோளின்மீது தன் கையைப் போடப்பார்க்கிறாள்.]

ச. போ! என் எதிரில் நிற்காதே! நீ என்னைத் தொடுவதும் எனக்கு வெறுப்பாயிருக்கிறது!—உன்னைப் பார்ப்பதும் எனக்கிஷ்டமில்லை!

[என்று சொல்லி அவளைப் பிடித்துத் தள்ள அவள் கீழே விழுகிறாள்.]

(வலது புறம்.)

ந. [மெல்ல படுக்கையிற் புரண்டு, பிரக்ஞையைப் பெற்று, எழுந்து உட்கார்ந்து கண்களை நிமிட்டி சாவித்ரி தரையில் விழுந்து கிடப்பதைப் பார்த்து] என்ன இது? சாவித்ரி! சாவித்ரி!—மூர்ச்சையாயினளா என்ன? அல்லது—அல்லது—

சா. [திடீரென்று விழித்து] என்ன! என் கண்களை நான் நம்பலாமா?—என் நாதா!—ஈசனே!—இப்படியாகுமென்று யார் எதிர்பார்த்திருக்கக் கூடும்?

[என்று சொல்லி தன் கணவன் கரங்களைத் தன் கைகளில் எடுத்துக்கொண்டு அவன் முகத்தில் உற்றுப் பார்க்கிறாள்.]

(இடது புறம்.)

[நளினி மெல்ல எழுந்திருக்கிறாள். சக்கரபாணி கோபமாய் நெறித்துக் கொண்டு நிற்கிறான். வீராசாமி ஓடி வருகிறான். அவன் பின்னால் அம்மாயி தலை காட்டுகிறாள்.]

வீ. [நளினியிருக்குமிடம் விரைந்து] என்ன அம்மா? எப்படி விழுந்தீர்கள்?

ச. வீராசாமி! போ வெளியே! உன் வேலையைப் பார்!
[வீராசாமி, மெல்ல யோசனையுடன் போகிறான்.]

ந. [மெல்ல பிடித்துக் கொண்டு எழுந்து நின்று] ஈசனே!—ஈசனே! இப்படியாகுமென்று யார் எதிர்பார்த்திருக்கக் கூடும்!
[என்று சொல்லி கோபத்துடன் தன் கணவனைப் பார்க்கிறாள்.]

அ. என்ன நாடகமிது! இப்படியாகு மென்று யார் எதிர்பார்த்திருக்கக் கூடும்!

திரை இறங்குகிறது.

நாடகம் முற்றியது.

என்ன நேர்ந்திடினும்

நாடக பாத்திரங்கள்.

அக்பர்	...	டில்லி சக்ரவர்த்தி
அபுல்பஜல்	...	அவரது ஆப்த மந்திரியும் சிநேகிதனும்
வீராபாய்	...	சிற்றூர் ராணுவாகிய உதயசிங்கின்ராணி
பத்மினிபாய்	...	உதயசிங் ராணுவின் தங்கை
பிரதாப்சிங்	...	ரஜபுத்ர சைனியத்தில் ஓர் தளகர்த்தன்
அப்துல் கரீம்	...	அக்பரிடம் சேவகம் செய்யும் ஓர் மகம்மதிய போர் வீரன்.
ஒரு சிப்பாய்	....	காவலாள்

என்ன நேர்ந்திடினும்

ஒரே காட்சியிலடங்கிய ஒரு சிறு சரித்திர சம்பந்தமான நாடகம்.

இடம்:—யுவராஜ புரத்தருகில் அக்பர் சக்ரவர்த்தியின் பாசறை.

காலம்:—சாயங்காலம் இருட்டியபிறகு.

அக்பர் தன் கூடாரத்தில் ஒரு மெத்தையின் மீது சாய்ந்து கொண்டிருக்கிறார், அபுல்பஜல் அவர் அருகில் உட்கார்ந்திருக்கிறார்.

அ. ஆம்—நாம் ஜெயித்தோம் என்பது உண்மையே— ஆயினும் இன்றைத்தினம் யுத்தத்தின் சிறப்பு, நமது பெரிய சைனியம் அடியுடன் அழித்த, சுத்தவீரர்கள் அடங்கிய அந்தச் சிறு ரஜபுத்ர சைனியத்துடையதாம். போர்க் களத்தில் அவர்களுடைய வாலிபனுன தலைவனை நீபார்த் திருப்பாயாக! யுத்தவீரமே மனுஷ்ய உருவெடுத்தது போல் தோன்றினன்—அவனை உயிருடன் பிடித்துவர வேண்டுமென்று உத்தரவு கொடுத்தேன். ஆயினும் நம்மிடமிருந்து அவன் தப்பித்து விட்டானென அஞ்சுகிறேன். ஹா!—என்ன சண்டை போட்டார்கள் அவர்கள்!

அபு. ஆம்.—புகழத்தக்க தைரியத்துடன் அந்த ரஜபுத்திரர்கள் நம்மை எதிர்த்ததாகக் கேள்விப்பட்டேன்.

அ. அவர்களில் ஒவ்வொருவனும், எப்படியும் அழிக்கப் படுவோம் என்று அறிந்திருக்க வேண்டும்—இருந்தும்

அவர்கள் காட்டிய தைரியம் என்ன ஆச்சரியகரமா யிருந்தது!

அபு. பாதுஷா அவர்களுக்கு—தைரியம் என்று நாம் கூறுகிறோமே, அந்தக் குணத்தைப்பற்றி ஆலோசித்துப்பார்த்திருக்கிறீர்களா எப்பொழுதாவது?

அ. ஏன்? என்ன அதைப்பற்றி?

அபு. தைரியம் என்று நாம் கொண்டாடுவது, என்ன நேர்ந்த போதிலும் தைரியமாயிருக்கும் குணத்தையே! அதனால் உண்டாகும் பலன் இன்னதென்பதை அணுவளவேனும் யோசியாத அதிலிருக்கும் தன்மையே நமது மனத்தைக்கவர்கிறது. அதிக மடத்தனமாய்த் தோன்றும்பொழுதுதான் அதை நாம் அதிகமாகக் கொண்டாடுகிறோம்.

[சற்று தூரத்தில் வீராபாயும் பத்மினிபாயும் ஹிந்து சன்யாசிகளைப் போல் வேஷம் பூண்டு பாடிக்கொண்டு வருகிறார்கள்.]

(பாட்டு.)

"வாழ்வாவது மாயம்மிது மண்ணாவது திண்ணம்
பாழ்போவது பிறவிக்கடல் பசிநோய் செய்தபறிதான்
தாழாதறஞ்செய் மின்றடங் கண்ணான் மலரோனும்
கீழ்மேலுற நின்றான் திருக்கேதார மேனீரே."

அ [அதைச் செவிசாய்த்துக் கேட்டு] அந்தப் பிச்சைக்காரர்கள் என்ன இனிமையாகப்பாடுகிறார்கள்! அவர்கள் பாடும் பதங்களில் எவ்வளவு உத்தரார்த்தம் அடங்கியிருக்கிறது! யார் அங்கே?

ஒரு சிப்பாய் வருகிறான்.

சி. ஹூஜூர்! தங்கள் அடிமை.

அ. அங்கே பாடிக்கொண்டிருக்கும் பக்கிரிகள் யார்?

சி. ஹாஜுர், தாங்கள் ஹிந்து பக்கிரிகள் என்று சொல்லுகிறார்கள் கூடாரத்துக் கருகில்வராதபடி அவர்களைத் தடுக்க நாங்கள் முயன்றும், அவர்கள் பாதுஷாவைப் பார்க்கவேண்டுமென்று கட்டாயப்படுத்தினார்கள்; பக்கிரிகளைத் தடுக்கக்கூடாதென்று சர்க்கார் உத்திரவாயிருக்கிறபடியால், நாங்கள் இன்னது செய்வதென்று தெரியாதிருக்க, அவர்கள் இங்குவந்து விட்டார்கள்.

அ. அவர்களை இங்கு அழைத்துக்கொண்டுவா.

[சிப்பாய் போகிறான்.]

அபு. குரலைக்கவனித்தால் அவர்கள் பக்கிரிகளாகத்தோன்றவில்லை. பாதுஷாவின் சமீபத்தில் அதிக நெருக்கமாக நாம் அறியாத பேர்களை அனுகவிடுவது அவ்வளவு யுக்தமல்ல.

அ. நம்பிக்கை நம்பிக்கையை உண்டுபண்ணுகிறது; சந்தேகம் சந்தேகத்தை விளைவிக்கிறது.

சிப்பாய் வீராபாயையும் பத்மினிபாயையும் அழைத்துக் கொண்டுவருகிறான்.

வீ. எவன் மகம்மதியர்களுக்கும் ஹிந்துக்களுக்கும் ஈஸ்வரனாயிருக்கிறானோ, அப்படிப் பட்டவன் மொகலாய் பாதுஷா அவர்களுக்கு ஆயுசையும் ஐஸ்வர்யத்தையும் கொடுக்கவேணும்!

அ. நீங்களும் கொடுக்கலாமே, நீங்கள் பக்கிரிகளானபடியால்.

வீ. நாங்கள் வேலையாட்கள்—வேலை செய்யும் கருவிகள்.

அ. [அபுல்பஜலிடம்] இவர்களுடைய குரல் மிகவும் இனிமையாயிருக்கிறது.

[வீராபாயும் பத்மினிபாயும் ஒருவரையொருவர் உற்றுநோக்குகின்றனர்.]

அ. எந்த தேசத்திலிருந்து வருகிறீர்கள் நீங்கள் ?

வீ. எங்களுக்கு இப்பொழுது எந்த தேசமும் சொந்த தேசமில்லை.

அ. எத்தனை வருஷங்களாக இம்மாதிரியாக பக்கிரிகளாக இருக்கிறீர்கள் நீங்கள் ?

வீ. இவ்வுலக இன்பங்களை யெல்லாம் நாங்கள் விடும்படி நேர்ந்தது கொஞ்ச காலத்துக்கு முன்தான்.

அ. உங்களுக்கு மனைவியர் இல்லையோ ?

வீ. எங்கள் கோட்பாடுகளின்படி, நாங்கள் மனைவியரைக் கொள்ளலாகாது.

அ. ஆகவே உங்களுக்கு குழந்தைகளுமில்லை !

வீ. எங்களுக்கு எப்பொழுதும் பெண்சாதிகளே கிடையாது.

அ. இருவரும் இன்னும் மிகவும் சிறு பிராய முடையவர்களாகத்தோற்றுகிறீர்கள்; நீங்கள் ஏன் பக்கிரிகளானீர்கள் ?

வீ. இந்தச் சிறுவயதிலேயே, இந்த உலகத்திலும் உயிரிலும் உள்ள பற்றெல்லாம் விட்டுவிட வேண்டுமென்று அப்படி எங்கள் தலைவிதி விதித்தது !

அ. என்னைப் பார்க்கவேண்டுமென்று ஏன் ஆவல் கொண்டீர்கள் ?

[வீராபாய், பத்மினிபாயைக் கடைக்கண்ணுற் பார்க்கிறாள்.]

ப. உண்மையை உரைக்குமிடத்து, பாதுஷா அவர்களே—கானத்திலும் பக்கிரிகளிடத்திலும் உங்களுக்குப்பிரீதி அதிகம், என்று உலகம் உம்மைப்புகழ்வதே, இப்படி உங்கள் சந்நிதானத்தில் வருவதற்கு மார்க்கம் தேடும்படியாக எங்களுக்குத்தைரியம் கொடுத்தது.

வீ. உங்களுடைய பெருங்குணங்களெல்லாம், எங்கணும் புகழப்படுவதைக் கேள்வியுற்று, நாங்கள் இறப்பதன்

முன் உங்களைப் பார்க்கவேண்டுமென்று, எங்களுக்குள் பிரமாணம் செய்து கொண்டோம்.

அபு. இன்றைத்தினமே பாதுஷாவை நீங்கள் பார்க்கவேண்டுமென்று பிடிவாதம் செய்ததாக எங்களுக்கு இப்பொழுது தான் தெரிவித்தார்கள். உங்களுடைய அந்திய காலம் அவ்வளவு நெருக்கத்திலிருக்கிறதென, எண்ணினீர்களா?

வீ. இம்மாதிரியான சந்தர்ப்பங்கள், எங்களுக்கு தினம் கிட்டமாட்டா; அன்றியும் அந்திய காலத்தைப்பற்றி நம்முள் யார் தான், அது இந்த சமயத்தில், இவ்விடத்தில், என்று கூறக்கூடும்?

அ. ஆம், எப்பொழுதும் இறப்பதற்குச் சித்தமாயிருத்தல் புத்திசாலித்தனமாகும்.

ப. இந்த உடையை நாங்கள் தரித்தபொழுதே நாங்கள் மரணத்துக்கு ஆயத்தமானேம்.

அபு. ஆம், உங்களைப்பார்த்த பொழுது எனக்கு அப்படித் தான் தோன்றியது.

வீ. எங்களுடைய சாஸ்திரப்பிரகாரம், இருப்பதெல்லாம் வெளித்தோற்றமே, உண்மையானது நம்மிடமிருந்து மறைக்கப்பட்டிருக்கிறது.

அபு. வெளித்தோற்றத்தை ஊடுருவிப் பார்த்தால் நமக்கு உண்மைபுலப்படாதா?

வீ. இல்லை! உண்மைவெளியாகாது — எப்பொழுதும்! முதல் தோற்றத்திற்குப் பின்னிருக்கும் இன்னொரு தோற்றமாம், அதைப்போலவே இதுவும் மாயமாம்.

அபு. சாதுர்யமாகப் பேசவும் உங்களால் முடியும் என்று தெரிகிறது.

அ. கொஞ்ச நேரத்துக்கு முன் கூடாரத்துக்கு வெளியில் நீங்கள் பாடியதை நாங்கள் கேட்டபொழுது உங்கள்

குரல் மிகவும் இனிமையாக இருந்தது. வாஸ்தவத்தில், யாரோ ஸ்திரீகள் பாடுகிறார்களென்றே ஆச்சரியப்பட்டேன்.

அபு. நீங்கள் ஸ்திரீகளாகப் பிறந்திருக்க வேண்டும்.

வீ. ஆனால் நாங்கள் மிகவும் சந்தோஷப்பட வேண்டும், ஏனென்றால் ஸ்திரீகளாக, பாதுஷாவின் சந்நிதானத்தைக்கிட்ட, எங்களால் முடிந்திராது.

அ. உங்களுடைய சாதுர்ய வார்த்தைகளால் நான் மிகவும் சந்தோஷமடைகிறேன்.

வீ. எங்கள் சாதுர்யத்திற்குக் காரணம், தர்மஸ்வரூபியாகிய தங்கள் முன்னிலையில் நாங்கள் இருப்பது தான், என்பதற்கு ஏதேனும் சந்தேகமுண்டோ? நாங்கள் இப்பொழுதிருக்கும் ஸ்திதியில், சாதுர்யமாயில்லாமல் எப்படியிருக்கக்கூடும்?

[சிப்பாய்பிரவேசித்து அபுல்பஜலிடம் ஒரு நிருபத்தைக் கொடுக்கிறான். அபுல்பஜல் அதைப்படித்து, வீராபாய் பத்மினிபாய் இருவர்களையும் சற்று உற்றுப்பார்த்து, நிருபத்தை அக்பரிடம் கொடுக்க, அதை அவர்படித்து வீராபாய் பத்மினிபாயைத்தாமும் சற்று உற்றுப்பார்த்து விட்டு, பிறகு அபுல்பஜலைப் பார்த்து, புன்சிரிப்புக் கொள்கிறார்.]

அ. அப்துல்கரீமை உள்ளே வரச்சொல்.

[சிப்பாய் போகிறான். வீராபாயும் பத்மினிபாயும் கொஞ்சம் கலவரத்துடன் ஒருவரையொருவர் பார்த்துக்கொள்ளுகின்றனர்.]

அப்துல்கரீம் வருகிறான்—[வீராபாயும் பத்மினிபாயும் அவனைக் கண்டதும் சற்று திடுக்கிடுகின்றனர்.]

அ. பக்கிரிகளே!—உங்களைத்தான்— இந்த மனிதனை நீங்கள் முன்பே அறிவீர்கள் போலும், எங்கே, எப்பொழுது, எவ்விதம், இவனை யறியும்படி நேர்ந்தது உங்களுக்கு?

வீ. இந்த உலகம் எனும் நாடகத்தில் அநேக பாத்திரங்கள் மற்றும் அநேகபாத்திரங்களைச் சந்திக்கின்றன. எப்

பொழுது, எங்கே, எவ்விதம் என்று யாரால் சொல்லத்தகும்? இந்த மனிதனுடைய ஞாபகசக்தி எவ்வளவு நம்பத்தக்கதோ, அவ்வளவு அவன் வார்த்தைகளும் நம்பத்தக்கனவாயின், பாதுஷா அவர்களின் கேள்விகளுக்குத்தகுந்தபடி பதில் கிடைக்கும் என்று, உறுதியாய் நம்பலாம்.

அப். க. தகுந்த தென்பதும் தகாததென்றும் நாம் பார்க்கும் நிலையிலிருக்கிறது, ஒன்றைச் செய்து முடிக்கக்கட்டுப் பட்டவன், அக்கட்டினை அவிழ்த்துவிடவும் கடன்பட்டிருக்கலாம்.

[கூடாரத்துக்கு வெளியே கொஞ்சம் சப்தம் கேட்கிறது.]

அபு. சிப்பாய்! அங்கே என்ன கூச்சல்?

சிப்பாய் வருகிறான்.

சி. வஜீர்சர்க்கார் அவர்களுக்கு,—முஹம்மதியனைப் போல் வேஷம்பூண்டு பாசறையில் அங்கும் இங்கும் சுற்றிக் கொண்டிருந்த ஒரு ரஜபுத்திரனைக் கண்டுபிடித்தார்கள். காவலாளிகள் அவனைக்கைதியாக்கி பாதுஷாவின் உத்திரவுக்காக இங்கே கொண்டு வந்திருக்கிறார்கள்.

அ. பஜல்ஜீ! உண்மையில், இன்றைத்தினம் சாதாரணமாகக் கழிந்தது என்றாவது, அல்லது விசேஷம் ஒன்று மின்றிக்கடந்தது என்றாவது, தாம் குறை கூறுவதற்கிடமில்லை!

அபு. இன்னும் என்னென்ன விசேஷங்கள் நடக்க இருக்கின்றனவோ, யாருக்குத் தெரியும்?

அ. [சிப்பாய்க்கு] அந்த ரஜபுத்திரனைக்கொண்டுவா இங்கே.

[என்று சொல்லி அக்பர் வீராபாய் பத்மினிபாயைப் பார்க்கிறார், அவர்கள் ஒருவரை யொருவர் உற்றுப் பார்க்கின்றனர்.]

சிப்பாய் வெளியேபோய் பிரதாப்சிங்கை அழைத்துக்
கொண்டு வருகிறான்.

[பிரதாப் சிங்கைப்பார்த்ததும் வீராபாயும் பத்மினிபாயும் திடுக்கிடு கிறார்கள்; அப்துல்கரீமும் பிரதாப் சிங்கும் ஒருவரையொருவர் விழித்துப்பார்க்கிறார்கள்.]

அ. யாரப்பா நீ? என் பாசறையருகில் நீ சுற்றிக்கொண்டி ருக்கும்படி எப்படி நேர்ந்தது?

அபு. உதய சிங்கினுடைய வேவுகாரர்களின் ஒருவனா நீ? உன் அரசனுடன் மலைகளின் குகைகளிற் பதுங்கி நீ சவுக்கியமாயிருந்திருக்கலாமே?

பி. பாதுஷா அவர்களுக்கு எனது விண்ணப்பம்! யுத்தத் திற்குரிய உமது பாசறையருகில் ஒரு ரஜபுத்திரன் சுற்றிக்கொண்டிருந்தால் அது பாதுஷா அவர்களைக் காப்பாற்றும் பொருட்டன்று என்று உறுதியாய் நம் பலாம். அன்றியும் அந்த ரஜபுத்திரன் அதைமறுக் கமாட்டான்.

அ. இவர்கள்—இப்பக்கிரிகள்—உனக்குத் தெரிந்தவர்களா? [அபுல்பஜலுக்கு] என்ன ஆச்சரியம்! நம்மைத்தவிர மற் றெல்லோரும் இப்பக்கிரிகளை அறிந்தவர்களாகத் தோற் றுகிறார்கள்.

[வீராபாயும் பத்மினிபாயும் மறுபடியும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள் ளுகின்றனர்.]

பி. நான் டில்லி பாதுஷாவின் சேவகன் அல்ல, அவருடைய ஜன்மவைரி! என்னைப்பதில் உரைக்கும்படி கட்டாயப் படுத்த முடியாது.

அ. உன்னைக்கடைசி முறை கேட்கிறேன்; உண்மையை முற் றிலும் ஒளியாது உரைத்து, உன் குற்றத்தை யெல்லாம் ஒப்புக்கொள்வாயாயின் நீ உயிர் பிழைக்கலாம், இல்லா விடின் இன்னும் க்ஷணநேரத்தில் நீ இறந்தவனே.

பி. [புன்னகையுடன்] மரணதண்டனை விதிக்கப்படுமென்று, இது தான் முதன்முறை ஒரு ரஜபுத்திரன் பயப்படுத்தப் பட்டான் போலும்!

அபு. ரஜபுத்திரனுக்குக் கூட மனைவிமக்கள் இருக்கின்றனர் அல்லவா?

பி. ஒரு ரஜபுத்திரனுக்கு அவன் மானமே அவன் மனைவி; அவன் உயிர் வாழ்வது அவனது நாட்டின் பொருட்டே.

அ. இம்மாதிரியான வார்த்தைகளை நாம் முன்புகேட்டது ஞாபகமிருக்கிறது, ஆயினும் யோசித்துப்பார், இம்மாதிரியான வீம்புவார்த்தைகளால் அதோ இருக்கும் உன் நண்பர்களுக்கு நீ உதவி செய்வதாக எண்ணினால், அது முற்றிலும் தவறாகும். என்ன சொல்லப்போகிறாய்?

பி. நான் ஒன்றும் சொல்லப் போகிறதில்லையென்று.

அ. அவர்கள் யாரென்று எனக்குத்தெரியாதென்று நினைக்கிறாயா நீ?

பி. தெரியாதவர்கள் எப்படி பதில் உரைக்க முடியாதோ, அப்படியே தெரிந்தவர்கள் கேள்வி கேட்கமாட்டார்கள் என்று நினைக்கிறேன்.

அ. உன் உயிரை நீ ஒரு பொருட்டாகப்பாவியாதது, உன்னை இவ்வாறு அவமரியாதையாய்ப் பேசச் செய்கிறது போலும். சிப்பாய்! உடனே சேனாபதியிடம் போய் நமது பாசறையில் ஒளிந்து திரிந்து கொண்டிருந்த இந்த ஒற்றனை, நாளைத் தினம் சூர்யோதயத்திற்கெல்லாம், சிற்றூரின் பெரியவீதியில் தூக்கிவிடவேண்டுமென்று நான் கட்டளையிட்டதாகச் சொல்

சி. ஹுஜூர் சர்க்கார் உத்திரவின்படி!— [பிரதாப்சிங்கை கூடாரத்தினின்றும் அழைத்துக்கொண்டு போகப் பார்க்கிறான்; வீராபாயும் பத்மினிபாயும், தங்கள் உயிரைக் காப்பாற்ற

முயன்ற பிரதாப்சிங்கை தூக்கிலிடக்கொண்டு போகிறார்கள் என்பதை அறிந்தவர்களாய், ஒருவருக்கொருவர் பார்த்துக் கொண்டு இருவரும் ஒரே சமயத்தில் முழந்தாளிடுகின்றனர்.]

வீ. சக்கிரவர்த்தியே! டில்லிபாதுஷா! நாங்களிருவருமே உத்தரவாதம் சொல்லவேண்டிய ஒரு குற்றத்திற்காக, மனிதர்களுக்குள் மிகுந்த தர்மமும் கருணையும் படைத்தவர் என்று உலகமுழுவதும் பெயர் பெற்ற தாம், இந்த மனிதனைத் தூக்கிலிடும்படி உத்தரவு செய்வது சரியன்று.

அ. உண்மையை உரையுங்கள், குற்றத்தை ஒப்புக்கொள்ளுங்கள், யார் நீங்கள்?

[வீராபாய் தன் சன்யாசி உடையையும் தலைகுட்டையையும் களைந்தெறிகிறாள்; பத்மினிபாயும் அப்படியே செய்கிறாள்.]

வீ. சக்கிரவர்த்தியானவர் உண்மையை அறிய விரும்புகிறபடியால், துக்ககரமான இவ்வுண்மையனைத்தும் கேட்டறியட்டும். நான் சித்தூர் ராணாவின் பட்டமஹிஷி வீராபாய்! இவள் அவருடைய தங்கை பத்மினிபாய். நீங்கள் சித்தூரைப்பிடிக்க வந்தபொழுது, பரம்பரையாய் வந்த ரஜபுத்திர கோட்பாடுகளுக்கெல்லாம் விரோதமாக, ராணாவானவர், போருக்கேகாது, வெட்கமென்பது சிறிதுமின்றி மலைக்கு ஓடி ஒளிக்கத்தீர்மானித்ததைக் கண்டு, நாங்கள், பெண்பாலர்களாயிருந்த போதிலும், யுத்தப்பயிற்சி சிறிதும் இல்லாதவர்களாயினும், ஆண் உடையைத் தரித்து, எங்கள் சிறுசைனியத்தை உங்களுக் கெதிராக நடத்தினோம். மலையின் மீது மழைபெய்வதை போல் அது வியர்த்தமாயிற்று. நாங்கள் தோற்கடிக்கப்பட்டு, எங்கள் சைனியமெல்லாம் அழிந்து, எங்கள் தேசம் ஜெயிக்கப்பட்டு, எங்கள் கோரிக்கை யெல்லாம் பாழாகியது; அதனுடன் எங்கள் நாணமும், சுயகௌரவமும் போனது. ஆகவே நாங்கள், இவ்வளவு கெடுதிகட்கும் துரதிர்ஷ்டங்களுக்கும் காரணபூதமாயிருந்த

உம்மீது பழிவாங்க வேண்டுமென்று தீர்மானித்து, எப்படியாவது எங்கள் உயிர்களைக் கொடுத்தாவது எங்கள் எண்ணத்தை நிறைவேற்ற இங்கு வந்தோம். ஒரு வார்த்தையிற் சொல்லுமிடத்து, உங்களைப் பார்த்து, என்ன நேர்ந்த போதிலும், உம்மைக்கொன்று, எங்களையும் கொன்று கொள்ள வேண்டுமென்று தீர்மானித்தோம். எங்கள் யத்னத்தில் அதிக பாகத்தைச் செய்து முடித்தோம், நீங்கள் அறிந்தபடி உங்கள் கூடாரத்திற்குள்ளும் நுழைந்தோம்—ஆயினும், உங்கள் சந்நிதியில் வந்த க்ஷணம், சாந்தமும் கருணையும் பொருந்திய உமது முகமண்டலமானது எங்கள் எண்ணத்தைத் தோற்கடிக்க, எங்கள் குற்றமானது உமது கண்ணுக்குப் புலப்பட, எங்களாலேயே நாங்கள் தண்டிக்கப்பட்டவர்களாய், இங்கு நின்றோம். அதோ நிற்கிறானே அம்மனிதன்—அவனுயிரை நாங்கள் ஒரு முறை காப்பாற்றினோம்—மனிதனாகவும் சுத்த வீரனாகவும் அவனை மதித்து, அவன் எங்களைக் காட்டிக்கொடுக்க மாட்டான் என்று நம்பினோம், ஆயினும் உண்மையில் அவன் எங்களைப்பின் தொடர்ந்து, அவன் எங்களுக்கு முற்றிலும் துரோகியானான். உங்கள் இஷ்டப்படி எங்களை நீர் தண்டியும்; எங்களுக்கு மரண தண்டனையிடும்—ஆயினும், எங்கள் நண்பனைப் பின் தொடர்ந்த ஒரு குற்றமும் இழைக்காத எங்களுக்காகத் தன்னுயிரையும் இங்ஙனம் இழக்கத் துணிந்த, இம்மனிதனை மாத்திரம் காப்பாற்றும்! கருணைக் கடலாகிய சக்கிரவர்த்தியே! உம்மை இரந்து வேண்டுகிறோம்!

அ. உத்தமிகளாகிய ராணிகளே, எழுந்திருங்கள்! இத்தனை வீரமும் பெருந் தன்மையும் வாய்ந்த நீங்கள், இப்படி என்னெதிரில் முழந்தாளிடுவது பொருத்தமானதன்று. உங்களுடைய ரஜபுத்ர குலத்திற்குரிய உண்மையான வீரத்தின் பொருட்டும், கௌரவத்தின் பொருட்டும், உங்கள் மானத்திற்காகவும் தேசத்திற்காகவும் நீங்கள்

மேற்கொண்ட முயற்சியின் பொருட்டும், எதனிலும் மேலாக உங்கள் சத்திய வாக்கின் பொருட்டும், இம்மனிதனை மன்னித்து, அவனுயிரை அவனுக்குக் கொடுத்தேன். ஆயினும் ராஜ பக்தியுள்ள என் படையாளியாகிய அப்துல்கரீம் மீது நீங்கள் குற்றஞ் சாட்டியது முற்றிலும் தவறு. அவன் இக்கடிதம் எனக்கெழுதி எல்லா சமாசாரங்களையும் எனக்கு விவரமாய்த் தெரிவித்ததென்னவோ உண்மைதான். இதில் உங்கள் உயிரை நான் காப்பாற்ற வேண்டுமென்று எவ்வளவு மன்றாடி யிருக்கிறான் என்பதை நீங்களே பார்ப்பீர்கள். ஆயினும் அந்தக் கஷ்டம் அவன் தனக்குக் கொடுத்திருக்க வேண்டியதில்லை. உங்களுடைய குரலைக் கேட்டவுடன் எனக்குச் சந்தேகம் உதித்தது; நீங்கள் இங்கு வந்தவுடன் ஸ்திரீகளுக்குரிய நாணத்தை உங்கள் முகக்குறியில் நான் கண்டவுடன் அந்த சந்தேகமானது அதிகரித்தது; பிறகு உங்கள் பதில்கள் அதை ஊர்ஜிதப் படுத்தியது; எனக்கு முன்பு தெரியாமலிருந்து இந்நிருபத்தில் அப்துல் கரீம் எனக்குப் புதிதாய்த் தெரிவித்ததெல்லாம், வீர மாதர்களாகிய நீங்கள், மலைப்பிரதேசத்திற்கு ஓடி ஒளித்த அந்த பயங்காளி உதயசிங்குக்கு, எப்படி உறவினர் என்பது தான்.

வீ. ஆண் உடை தரித்தபோதிலும், பெண்களின் தைரியமானது பலஹீனமானது என்பதைக் கண்டோம்.

அபு. தைரியமானது பலஹீனமானதன்று, பெண் பால் என்னும் மேப்போர்வையே, அதை பலஹீனமாக்குகிறது.

அ. உத்தமராணிகளே! உங்களுக்கு நான் ஏதாவது உதவி செய்யக்கூடுமோ?

ப. கூடும்! சக்கிரவர்த்தியாகிய தாங்கள் எங்கள் உயிரினையும் வெட்கத்தினையும் உடனே அழிக்கும்படி உத்திரவு செய்யவேண்டும்!

அ. அவ்வாறு நீங்கள் பேசலாகாது—நீங்கள் ஏன் இறக்க விரும்பவேண்டும்?

வீ. சிற்றூர் அந்தப் புரத்தைச் சார்ந்த இரண்டு ஸ்திரீகள் மாறுவேடம் பூண்டு பாதுஷா பாசறைக்குப் போய், அங்கே கைதிகளாகப்பட்டார்கள் என்பது இன்றைக்கோ நாளைக்கோ உலகப்பிரசித்தமாகும். அந்த அவமானம் நேரிட்டபின் நாங்கள் எப்படி உயிர் தரிப்போம்? மரணம் தான் எங்களுக்கு கதி!

அ. அந்த உமது வேண்டுகோளுக்கு நான் உடன்படாவிட்டால்?

வீ. நாங்கள் விரும்பும் ஒன்றை நீர் வெறுத்தவராவீர்.

அ. அப்பா தோடூர பஜல்ஜி! இப்படிப்பட்ட வீரம் பொருந்திய உத்தமமான மனோதிடத்தைப் பற்றி நீர் என்ன நினைக்கிறீர்?

அப். உங்கள் தேசத்து ஸ்திரீகளெல்லாம் இப்படிப்பட்ட வீரமும் உத்தமமான மனோதிடமுமுடையவர்களாயிருக்கிறார்களா?

வீ. இல்லை! அவர்களெல்லாம் எங்களினும் மேலானவர்கள்—அதிக மேலானவர்கள்—அவர்களுள் ஒருத்தியாவது இப்படி அவமானம் அடைந்தபின் உயிர் வாழ்ந்திராள்.

அ. வீரத்தன்மை பொருந்திய உங்கள் முயற்சியை அவமான காரியமாக நீங்கள் மதிப்பது நியாயமன்று. நீங்கள் எதை வேண்டினும் அதைக் கொடுக்கிறேன், கேளுங்கள்.

ப. வேண்டுவதை நாங்கள் எப்பொழுதும் கற்றோமில்லை.

அ. நீங்கள் கேட்காமலே நான் கொடுக்கப் போகிறதைச் சொல்லுகிறேன். உங்கள் அரசை உங்களுக்குக் கொடுத்துவிட்டேன். [வீராபாய்க்கு] நாளை காலை நீங்களிருவரும் சகலமரியாதைகளுடன் உங்கள் பட்டணம் போவீர்கள்;

அங்கே வீராபாயாகிய நீ உன் புருஷனுடைய ஸ்தானத்தில் மஹாராணியாக முடிசூட்டப்படுவாய்.

வீ. சக்கிரவர்த்தியின் கொடையாயிருந்த போதிலும் இப்படிப்பட்ட நிபந்தனைக்குட்பட்டதை நான் எப்படி அங்கீகரிக்கக்கூடும்?

அ. நீ பெண்பாலா யிருந்தபோதிலும் உன்னை திர்ப்தி செய்வது கடினம் அம்மா! ஆயினும், என்ன நேர்ந்த போதிலும், உன்னைத் திர்ப்தி செய்யவேண்டுமென்று நான் தீர்மானித்து விட்டேன். நிபந்தனைகள் ஒன்றுமின்றி, இந்த ராஜ்யத்தை நீ பெற்றுக்கொள்.

வீ. இத்தனை தயாளமும் பெருந் தன்மையும் இவ்வுலகமானது எப்பொழுதாவது பார்த்திருக்கிறதா?

ப. உங்கள் பெருமையானது, எங்கள் நன்றியறிதலைப் போல் அத்தனை பெரிதாக தழைத்தோங்குமாக!

வீ. உண்மையில் உயர்ந்தோரே, என்ன நேர்ந்திடினும், உத்தமராய் விளங்குகின்றனர்!

திரை இறங்குகிறது.

நாடகம் முற்றியது.

The Tragic Denoument

AND

THE SUB ASST. MAGISTRATE OF SULTANPET

IN TAMIL

BY

Rao Bahadur P. SAMBANDAM,
B.A., B.L.,

Author of:

" The Two Sisters," "Galava." "Vikramorvasi" "Blind Ambition," "The Two Friends," "Fate and Love," " Sarangadhara," " Simhalanatha," " Pushpavalli," "Amaladitya," "Magapathi," "Farces," "Siruthondar," "The Golden Fetters," "True Love," "The Bandit Chief," " Markandeya," " The Fair Ghost," " The Merchant of Vanipura," " The Wedding of Valli," "The Eye of Love," "Vijayarangam," "As you like it," " Ratnavali," " Malavikagnimitram," " The Tragedy of Silence," " The Good Fairy," " Geetha Manjari," " Harischandra," " As We Sow-So We Reap," " The Curse of Oorvasi," "Chandrahari," "The Demon Land," "Sabapathy Part I," "The Pongal Feast" or "Sabapathy Part II," " A Rehearsal " or " Sabapathy " Part III, "Blessed-in a Wife." "The Dancing Girl" "Subbadra Arjuna" "Karna-The Giver" "Sahadeva's Stratagem" "Bricks Between & At Any Cost" " Surgeon General's prescription & Vichu's Wife" "Sakuntala" "The Point of View & The Two Selves" "Manohara" " Lord Buddha" etc. in Tamil; and " Harischandra," and " Yayathi " in English.

FIRST EDITION.

Madras:
PRINTED BY DOWDEN AND CO., AT THE "PEERLESS PRESS,"
21, Sunkurama Chetty Street.

1930

All Rights reserved.] [Price per Copy As. 8.

உ

விபரீதமான முடிவு

இஃது

ராவ் பஹதூர்

ப. சம்பந்த முதலியார், பி-ஏ., பி-எல்.,

அவர்களால் இயற்றப்பட்டது.

இந்த நூலாசிரியரால் இயற்றப்பட்ட மற்ற நூல்கள் :—

"லீலாவதி-சுலோசனை" "கள்வர் தலைவன்," "விக்கிரம ஊர்வசி"
"இரண்டு நண்பர்கள்," "சாரங்கதரன்." "நற்குல தெய்வம்,"
"சத்ருஜித்," "யயாதி" 'மார்க்கண்டேயர்," "விஜயரங்கம்,"
"காதலர் கண்கள்," "பேயல்ல-பெண்மணியே." "மகபதி,"
"மெய்க்காதல்," "பொன் விலங்குகள்," "சிம்ஹளநாதன்,"
"விரும்பிய விதமே." "சிறுத்தொண்டர்," "காலவரிஷி,"
"வாணிபுர வணிகன்," "ரஜபுத்ரவீரன்," "ஹரிச்சந்திரன்,"
"ரத்னவளி." 'புஷ்பவல்லி," "கீதமஞ்சரி," "பிரஹசனங்கள்,"
"ஊர்வசியின் சாபம்," "அமலாதித்யன்" "சபாபதி முதற் பாகம்,"
"பொங்கல் பண்டிகை" அல்லது சபாபதி இரண்டாம் பாகம்,
"ஓர் ஒத்திகை" அல்லது சபாபதி மூன்றாம்பாகம், "வள்ளிமணம்"
"முற்பகற்செய்யின் பிற்பகல் விளையும்," "சகதேவன் சூழ்ச்சி'
"வேதாள உலகம்," "மனைவியால் மீண்டவன்," "தாசிப்பெண்"
"சுபத்திரார்ஜுனா" "கொடையாளி கர்ணன்" "சர்ஜன் ஜெனரல்
விதித்த மருந்து-விச்சுவின் மனைவி" "மாளவிகாக்னிமித்திரம்"
"இடைச்சுவர் இருபுறமும் - என்ன நேர்ந்திடினும்" "சகுந்தலை"
"நோக்கத்தின் குறிப்பு - இரண்டு ஆத்துமாக்கள்" "மனோஹரன்"
"புத்த அவதாரம்" முதலியன.

முதற் பதிப்பு

சென்னை :
டோடன் கம்பெனியாரின்
பியர்லெஸ் அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

1930

காபி ரைட்]

[விலை அணா 8.

PREFACE.

These two plays are adaptations of two dramas written by my friend Mr V. V. Srinivasa Iyengar, in English. I have to thank my friend for his having kindly given me permisson to do so.

Societies desirous of staging this or any other drama by me are informed that they have to pay a small Royalty for each performance and obtain my previous permission before doing so.

"PAMMAL LODGE"
G. T. MADRAS.

The Author

INSCRIBED

TO

THE BELOVED MEMORY OF

MY PARENTS

P. VIJIARANGA MUDALIAR,

and

P. MANICKAVELU AMMAL,

and

MY FRIEND

C. RANGAVADIVELU

விபரீதமான முடிவு

நாடக பாத்திரங்கள்

ஆத்மாராம் ராவ்	...	டிஸ்டிரிக்ட் முன்சீப்பாயிருந்த ஒரு ஹைகோர்ட்டு வக்கீல்.
பாலா	...	அவர் மனைவி.
நாதமுனி	...	அவர் வேலையாள்.
வரதாச்சாரி.	...	அவருடைய குமாஸ்தா.
சுப்பைய செட்டி	...	ஒருகட்சிக்காரன்.
பாக்மல்	...	ஒரு சாவுகார்.
ஜகன் மோஹன நாயுடு	...	தன் புத்தியைக் கொண்டு ஜீவித்துவரும் ஒரு மனிதன்.
சஞ்சிதபாத ஐயர்	...	இன்கம்டாக்ஸ் இன்ஸ்பெக்டர்.

விபரீதமான முடிவு

இடம்:—சென்னை புதுடவுனில் ஹைகோர்ட் வக்கீல்
ஆத்மாராம்ராவுடைய ஆபீஸ் அறை.

காலம்—காலை.

ஆத்மாராம் ராவ் வீட்டு வேலைக்காரன் வைஷ்ணவனான
நாதமுனி நாயுடு, ஸ்நாநம் செய்து விட்டு, நெற்றியில் நாமம்
அணிந்து, சாமான்களிலுள்ள தும்பையெல்லாம் தட்டிக்
கொண்டும், காகிதங்களையும் புஸ்தகங்களையும் ஒழுங்காக
வைத்துக்கொண்டும் இருக்கிறான்.

நா. எவ்வளவு தும்பு! வீதியிலிருந்து இவ்வளவும் வந்திராது; இதில் பெரும்பாகம் நம்முடைய எஜமான் உதைபட்டு எழும்பியிருக்கவேண்டும்.

[மேஜையின் மீதிருக்கும் காகிதங்களை
ஒழுங்காகவைத்துக்கொண்டு.]

அதே காகிதங்கள்!—அதே நிருபங்கள்!—உம்! அதே பழய கதையும்தான் என்று நினைக்கிறேன்.

கொஞ்சம் அலங்கோலமாயும், உறக்கமுடைய முகத்துடனும்
ஆத்மா ராவ் வருகிறார்.

ஆ. இன்னமா தும்பு தட்டிக்கொண்டிருக்கிறாய்! நான் கீழே இறங்கி வருவதற்குமுன், தும்பெல்லாம் தட்டியாக வேண்டுமென்று, உனக்கு எத்தனை முறை சொல்வது நான்?

நா. என்றைக்காவது, எப்பொழுது இறங்கிவருவார் எஜமான் என்று யாரால் சொல்லமுடியும்? இப்பொழுது தான் ஆறுமணியாகிறது; இதற்கு முன்னே என்னால் இங்கு வரமுடியாது!

ஆ. நீ அதனப் பிரசங்கியாகப் போகிறாய்! உனக்கு இரண்டு ரூபாய் அபராதம் போட்டேன்.

நா. அதனால் ஒன்றும் கெட்டுப் போகவில்லை; மூன்று மாசம் தான் சம்பளம் பாக்கியாயிருக்கிறதே! சம்பளப்பாக்கி அதிகமாக ஆக, அபராதமும் அதிகமாகிறாற் போலிருக்கிறது.

ஆ. உன் நடவடிக்கையானது பொறுக்கமுடியாதபடி ஆகிக் கொண்டு வருகிறது. உன்னைத்தள்ளிவிடலா மென்று அரைமனசு இருக்கிறதெனக்கு!

நா. அரைகுறையாக எஜமான் ஒன்றும் செய்வதில்லை. நான் மாத்திரம் ஏன் துர் அதிர்ஷ்ட சாலியாயிருக்க வேண்டும்? என்னுடைய சம்பளபாக்கியைக் கொடுத்து விடுங்கள், இந்த நிமிஷம் வெளியே போய்விடுகிறேன்.

ஆ. நீ செய்வாய் என்று தெரியும் எனக்கு! வேறு எதற்காக உன் சம்பளத்தை நிறுத்திவைத்தேன் என்று நினைத்தாய்? என்னை மடயன் என்று நினைக்காதே! இந்த நிமிஷம் நீவெளியே போகலாம்.

நா. என்னுடைய சர்டிபிகேட்டுகளையாவது கொடுங்கள்.

ஆ. அவைகளை உனக்குக் கொடுக்கமாட்டேன்.

நா. புழுவாயிருந்த போதிலும் காலால் மிதித்தால் கடிக்கும்! எஜமான் அவ்வளவு தூரம் போகவேண்டாம்.

ஆ. நீ இந்த மாதிரி பேசினால், உன்னைப்பிடித்து வெளியே தள்ளுவேன்!

நா. அவ்வளவு தூரம் வந்துவிட்டதா? சரி ஆனல்! உங்கள் கோர்ட்டிலேயே உங்களை அவமானப்படுத்தாவிட்டால் பாருங்கள்!—ஹா! ஹா!

ஆ. பார்ப்போம், யாரை நம்புகிறார்களென்று!

நா. [போய்க்கொண்டே] ஸ்வாமி பார்த்துக்கொள்வார்!

[போகிறான்.]

ஆ. அவனைக்கூப்பிடலாமா?—வேண்டாம்! அது ஒரு பொழுதும் முடியாது! காலை எழுந்த வேளை நல்லவேளையாயில்லை! கண்ணாடியில் என் முகத்தையே நான் முன்பு பார்த்தேன். [உள்ளே தன்மனைவியின் குரலைக் கேட்டு] யார் அங்கே? பாலா?

பாலா வருகிறாள்.

பா. கூப்பிட்டீர்களா?

ஆ. ஆம், யாருடன் பேசிக்கொண்டிருந்தாய் அங்கே?

பா ஏன்? நாதமுனியோடு பேசிக்கொண்டிருந்தேன்.

ஆ. நான் அவனைத் தள்ளிவிட்டேன். அவன் அதை உன்னிடம் சொல்லவில்லையா?

பா. அதைத்தான் இப்பொழுது சொல்லிக்கொண்டிருந்தான்.

ஆ. என்ன காரணத்தினால் என்று சொன்னானா?

பா. ஆமாம்! சொன்னான்!

ஆ. என்ன சொன்னான்?

பா. வாஸ்தவத்தைச் சொன்னான்.

ஆ. வாஸ்தவத்தையா?

பா. ஆமாம்—வாஸ்தவத்தை!

ஆ. நீ சொல்வது எனக்கு அர்த்தமாகவில்லை.

பா. என்னமாக அர்த்தமாகும்?—வேலைக்காரன் சம்பளப் பாக்கியைக் கொடுக்காமல் மோசம் செய்ய அவனைத் தள்ளிவிடுகிறவருக்கு!

ஆ. என்ன பொய்! அதை நீ எப்படி நம்புகிறாய்? ஏழை வேலைக்காரனுடைய சம்பளத்தைக் கொடாமல் மோசம் செய்யவிரும்புகிறேன் என்று நினைக்கிறாய்? அவன் இன்று காலை எவ்வளவு அதனப் பிரசங்கித்தனமாய் நடந்தான் என்று உனக்குத்தெரியாது.

பா. ஒரு வேளை இருக்கலாம்—இருந்தாலும் அவனுடைய சம்பளத்தை அவனிடம் கொடுத்து அவனை அனுப்பி விடுகிறது தானே?

ஆ. இப்படிப்பட்ட பயல்களை தண்டிக்கவேண்டும். பாலா, உனக்கு சிறு வயதாகையால் உனக்கு உலகவியவஹாரம் தெரியவில்லை; அவன் சம்பளத்தை எப்படியும் கொடுக்கத்தான் போகிறேன்—கொஞ்சம் பொறுத்து, இப்பொழுது என்கையில் காசில்லை.

பா. காசு இல்லை! காசு இல்லை! காலையில் ஒவ்வொருநாளும் ஆபிசு அறையில் கூச்சல் மாத்திரம் அதிகமாயிருக்கிறது!

ஆ. ஆமாம்—கூச்சல் அதிக மாகத்தான் போடுகிறேன்—ஆயினும் இன்னும் காசு சம்பாதிக்க ஆரம்பிக்கவில்லை.

பா. ஐயோ! டிஸ்டிரிக்ட் முன்சீப்பாயிருந்த கௌரவமான வேலையை எந்தப்பாழும் வேளையில் ராஜீநாமா கொடுத்தீரோ!

ஆ. அப்படியல்ல—பாலா, நீ எண்ணுவது தவறு!

பா. அப்படியல்ல—நான் எண்ணுவதுசரி! கௌரவமான உத்தியோகம்! மாசம் பிறந்தாற் சம்பளம்!, இதைவிட வேறென்ன வேணும் ஒரு மனுஷ்யனுக்கு? இதல்லாமல்—

இதையோசியும்—முன்பு தவாலி போட்ட இருபது வேலைக்காரர்கள் காத்திருந்தார்கள் நம்முடைய வீட்டில் —இப்பொழுதோ-இருந்த ஒரு வேலைக்காரனும் சிரித்து விட்டுப் போய் விட்டான்! பணம் நிரம்பசம்பாதித்து விடலாம் என்று அதை யெல்லாம் விட்டீர்; அந்தப் பணம் என்னவோ உம்மைவிட்டு அதிக தூரமாய்ப் போய்க்கொண்டிருக்கிறது.

ஆ. பாலா, இத்தனை காலம் பொறுத்தாய்—இன்னும் கொஞ்சம் பொறு—சில மாசங்கள்—அல்லது வாரங்கள் —அல்லது சில மணிநேரம்—யாருக்குத்தெரியும்?

பா. அதற்கென்ன, நான் காத்துக்கொண்டிருக்கிறேன்— நமக்கு என்ன காத்துக்கொண்டிருக்கிறதோ—யாருக் குத்தெரியும்!

ஆ. ஜெயம்! செல்வம்!

பா. [நகைப்புடன்] சரி!—அது தான் என் கோரிக்கையும்! வாருங்கள்—வந்து ஸ்நானஞ் செய்து விட்டு காப்பிசாப் பிடுங்கள்.

ஆ. இன்று காலை காப்பி நீயா தயார் செய்தாய்?

பா. ஆம்—சந்தேகமென்ன? நான் செய்ய வேண்டுமென்று நீங்கள் விரும்பவில்லையா?—வாருங்கள்!

[இருவரும் உள்ளே போகின்றனர்.]

வரதாச்சாரி வருகிறான்.

வ [சுற்றிப்பார்த்து] அந்தப்பயல் நாதமுனி இன்னும் வர வில்லை—நாதமுனி!

சுப்பைய செட்டி வருகிறான்.

வாருங்கள் செட்டியாரே. இப்பொழுது தான் உங்களுக் குச்கொஞ்சம் தயவு பிறந்தாற்போலிருக்கிறது—வாருங்

கள்—உட்காருங்கள் செட்டியார்—ஏதாவது வேலை யுண்டோ?

சு. [தொண்டையைக் கனைத்துக்கொண்டு]-ஆமாம்-நிரம்ப சின்ன வேலை!—பாருங்கள்—நான் வேலைக்குப் போகிறதில்லை. என் வியாபாரத்தையும் நிறுத்தி விட்டேன். இருந்தாலும், எவனோ ஒருபாவி என்னைக் கோர்ட்டுக்கு இழுத்து, என் பேரிலே இருபத்து நாலு ரூபாய்க்கு சம்மன் பண்ணிவிட்டான். அந்தத் தொகையை நான் அவனுக்கு வாடகைக்காகக்கொடுக்க வேணுமாம். நான் கிடங்கை நிரம்ப நாளைக்கு முன்பாகவே காலி செய்துவிட்டேன்.

வ. எப்பொழுது வியாஜ்யம் வருகிறது?

சு. யாரோ புதிதாக முனிசீப்வக்கீல் இருப்பதாகச் சொன்னீரே, எங்கே அவர்?

வ. உள்ளே இருக்கிறார்—இங்கே சீக்கிரம்வருவார்.

சு. அவர் பீசு நிரம்ப அதிகமாகக் கேட்பாரோ? பாருங்கள்—நான் என்னமோ வியாபராத்தை நிறுத்திவிட்டேன்—எனக்கு வயதும் ஆகிவிட்டது.

வ. ஏ! அதெல்லாம் ஒன்றும் பயப்படாதீர்கள். உங்களுக்கு எல்லாம் இலவசமாக ஏற்பாடு செய்கிறேன். ஆயினும், நீங்கள் என்னை மறந்துவிடக்கூடாது. எவ்வளவு கொண்டு வந்திருக்கிறீர்கள்,

சு. என்னை நம்பமாட்டீர்களா?

வ. அதற்கென்ன சந்தேகம்? இருந்தாலும், இன்று காலை நீங்கள் தான் முதல் போணி—ஆகவே—உங்களுக்குத் தான் தெரியுமே—கையில் காசு விழவேண்டும்.

சு. சரி ஆனால்—நீங்கள் என்னை நம்பாமற் போனால் நான் என்னசெய்வது?—

[என்று சொல்லி, தன்மடியிலிருந்து ஒரு ரூபாயை எடுத்து நான்கு புறமும் சுற்றிப்பார்த்துவிட்டு அதை வரதாச்சாரி கையில் அழுத்துகிறான்.]

வ. இது என்ன இது? இது என்ன கொத்தவால் சாவடியா?

சு. இந்த சமயம் இதை வைத்துக்கொள்ளுங்கள்.

ஆத்மாராவ் மறுபடி வருகிறார்

ஆ. உம்!--வரதாச்சாரி!—மறுபடியும் நேரம் பொறுத்து வந்தாய்!—யார் இந்த செட்டியார்?

வ. இவர்தான் பெயர் பெற்ற மூலைக்கடை சுப்பைய செட்டியார். முத்துசாமி ஐயருடைய பழய கட்சிக்காரர் இவர்; இந்த இருபத்தைந்து வருஷமாக இவரை எனக்குத் தெரியும்; இவர் பேரில் ஏதோ ஒரு சின்ன வியாஜ்யம் இருக்கிறதாம்.

ஆ. எங்கே?

வ. சின்ன கோர்ட்டில்.

ஆ. இந்த சின்ன கோர்ட்டில் நான் ஒரு வியாஜ்யமும் எடுத்துக்கொள்ள மாட்டேன் என்று நான் உனக்கு எத்தனை தரம் சொல்வது?

வ. அதை செட்டியாருக்கு இப்பொழுது தான் சொல்லிக்கொண்டிருந்தேன், இருந்தாலும், இவர் என்னுடைய பழய சிநேகிதர், ஆனபடியினாலே, நீங்கள் கொஞ்சம் அவருக்காக தயவு பண்ணவேண்டும் என்பது என் கோரிக்கை.

ஆ. முடியவே முடியாது!—எனக்கு சாவகாசம் ஏது?

வ. அதெல்லாம் இப்பொழுது சொல்லிப்பிரயோஜனமில்லை. அல்லாமலும் செட்டியார் மூலமாக நமக்கு அநேகவியாஜ்யங்கள் வரும். அவர் சொந்த வியாபார விஷயமாகக்கூட நிதம் வியாஜ்யங்கள் இருக்கும்.

ஆ. நீ நிரம்பத்தொந்திரவுக்காரன். ஒவ்வொரு வியாஜ்யத்திற்கும் இப்படித்தான் சொல்லுகிறாய்—இதைமாத்திரம்

எடுத்துக் கொள்ள வேண்டுமென்று—என் மாமூலுக்கு விரோதமாய்.

வ இதை மாத்திரம் நீங்கள் பிரத்தியேகமாய் நினைத்து ஒப்புக்கொள்ளும்படி நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஆ. சரி, என்ன பீசு கொடுப்பார்? வியாஜ்யத்தின் தொகை என்ன?

வ. இது முதல் கேசானபடியினாலே—

ஆ. ஒன்றும் இல்லாமல் நான் ஆஜர் ஆகவேண்டுமோ என்ன?

வ. செட்டியார், நான் உங்களுக்குச் சொல்லவில்லையா?

[சுப்பைய செட்டியார் காதில் ஏதோ ஓதுகிறான்; சுப்பைய செட்டி இரண்டு ரூபாயை எடுத்து மேஜையின் பேரில் வைக்கிறான்.]

ஆ. என்ன? இரண்டு ரூபாய் தானா?

[பணத்தை எடுத்து தன் ஜேபியில் போட்டுக்கொள்ளுகிறார்.]

வ. இது ஒன்றுமில்லைதான்; ஆயினும் நாம் இனிமேல் வருவதையல்லவோ பார்க்கவேண்டும்.

சு. ஆமாம் சந்தேகமென்ன—இதை நீங்கள் இருநூறு ரூபாயாக எண்ணி, என் வியாஜ்யத்தை முக்கியமாகக் கவனிக்க வேண்டும்.

ஆ. எப்பொழுது வருகிறது வியாஜ்யம்?

சு. வருகிற செவ்வாய்க்கிழமை.

ஆ. செவ்வாய்க்கிழமை எனக்கு சாவகாச மிருக்குமே?

வ. இருக்கும், அதற்குச் சந்தேகமேயில்லை.

சு. நான் என் சாட்சிகளை எப்பொழுது அழைத்துக் கொண்டுவருவது?

ஆ. கோர்ட்டுக்கு நேராக—அது போதும்.

சு. ஆனாலும், நீங்கள் காகிதங்களை யெல்லாம் பார்க்க வில்லையே இன்னும் ஐயா; என்ன வியாஜ்யம் என்று கூட விசாரிக்கவில்லையே நீங்கள்.

ஆ. அதெல்லாம் சரிதான், காகிதங்களையெல்லாம் என் குமாஸ்தாவிடம் கொடுத்துவிட்டுப்போம்; திங்கட் கிழமை காலை என்னை வந்துபாரும்.

சு. சாட்சிகளையும் அழைத்துக் கொண்டுவரவா நான்?

ஆ. ஓ! வேண்டாம்—சாட்சிகளுக்கெல்லாம் சொல்லிக்கொடுக் கிறவழக்கமில்லை எனக்கு.

சு. ஆனாலும், சாட்சிகளெல்லாம் இன்ன சொல்லவேண்டு மென்று அவர்களுக்குச் சொல்ல வேண்டாமா? பிறகு வக்கீல் என்பவர் எதற்காக?

ஆ. சரி, ஆனல், திங்கட்கிழமை வாரும். இப்பொழுது எனக்கு வேலை அதிகமாக இருக்கிறது.

சு. நான் திங்கட்கிழமை காலை ஆறு மணிக்கு என் சாட்சி களை எல்லாம் அழைத்துக் கொண்டு வருகிறேன்.

வ. செட்டியார் மறந்து போகக்கூடாது.

சு. இல்லை இல்லை!—நான் மறக்கமாட்டேன்.

[போகிருன்.]

ஆ. இதோ பார் வரதாச்சாரி! இந்த சின்ன வியாஜ்யங்களை யும் சில்லரை பீசுகளையும் எடுத்துக்கொள்ள எனக்கு இஷ்டமேயில்லை! இதைப்பற்றி உன்னிடம் நான் சொல் லும் பொழுதெல்லாம், நீ எனக்கு ஒரு உபன்யாசம் பண்ண ஆரம்பிக்கிறாய்! ஒருவக்கீல் என்ன பீஸ் வாங்கிக் கொள்ள ஒப்புக்கொள்ளுகிறானே அதற்குத்தக்கபடி தான் தன்னைத்தானே மதித்தவனுகிறான்; அவனுடைய மதிப்பின் பிரகாரம் தான் உலகமும் அவனை மதிக்கிறது. இதை உனக்கு நான் எத்தனைமுறை சொல்வது?

வ. படிப்படியாக, என்பது உலகவியவஹாரத்திற்கு ஏற்ற பழமொழி; இரக்கைகள் சரியாக முளைக்காததன்முன் உயரம்பரக்க யத்னம் செய்வதில் பிரயோஜனமென்ன ?

ஆ. நீ ஒரு—அதோ! ஜன்னல்வழியாகப்பார். அதோ வருகிறவன் அந்த சௌக்கார், பாக்மல்லா பார் !

வ. [வெளியில் கழுத்தை நீட்டிப்பார்த்து] ஆம்—அவன் தான் !

ஆ ஏதாவது சாக்குசொல்லி அனுப்பிவிடு அவனை ! நான் வெளியே போயிருக்கிறேன். என்று சொல்லிவிடு.

[விரைந்து உள்ளே போகிறார்.]

வ. உம்! எவ்வளவு காலம் ?—

பாக்மல் வருகிறான்.

வாருங்கள் சேட்ஜி ! விசேஷம் ஏதாவதுண்டோ ?

பா. வக்கீல் ஐயா எங்கே ?

வ. ஏன் ?—அவர் இங்கில்லை.

பா. இந்த அறையில் அவர் இல்லை எனக்குத் தெரியும்; அவர் உள்ளே இல்லையோ ?

வ. இல்லை இல்லை ! அவர் பட்டணத்தில் இல்லை.

பா. நேற்று சாயங்காலம்தான் நான் அவரைப்பார்த்தேனே!—நான் உள்ளே நுழைவதற்குமுன் உள்ளே போனது யார் ?

வ. இன்று காலை தான் போனார்—ஏதாவது அவசரமான வேலையோ ?

பா. ஆம்—இன்றைக்கு ஒரு வியாஜ்யம் இருக்கிறது; அதை வக்கீலுக்குக் கொடுக்கலாம் என்று நினைத்தேன்; அந்த பீசையாவது பாக்கியில் கழித்துக்கொள்ளலாமே என்று பார்த்தேன்.

வ. ஒரு வேளை பத்துமணிக்குத் திரும்பிவந்தாலும் வந்து விடுவார்.

பா. அது எப்படி முடியும்? எங்கே போயிருக்கிறார்? கோர்ட்டு விஷயமாகப் போகவில்லையே அவர்?

வ. கோர்ட் விஷயமாகத்தான் போயிருக்கிறார், ஆயினும், ஒருவேளை அந்த வியாஜ்யத்திற்கு வாய்தா போடும்படி யாக சம்பவித்தாலும் சம்பவிக்கலாம் பாருங்கள்.

பா. சரி!—அப்படிச் சம்பவிக்கு மென்றெண்ணி நடக்க முடியாதென்றால். எனக்கென்ன கஷ்டம்? என் கடைக்கு பழய வக்கிலாக இருந்தவரிடம் போகிறேன். அவர் இந்த மாதிரி திடீரென்று பட்டணத்தைவிட்டு போகிற வழக்கமில்லை.

வ. எனக்கு வருத்தமாயிருக்கிறது.

பா. நீயும் நானும் இதற் கென்ன செய்யக்கூடும்?

வ. ஒன்றும் முடியாது, வாஸ்தவம் தான்.

பா. நீ தான் பார்க்கிறாயே எப்படி இருக்கிறதென்று—வக்கீலிடம் எல்லாவற்றையும் சொல். இந்தமாதிரி அடிக்கடி பட்டணத்தை விட்டுஅவர் வெளியேபோவது நல்லதல்ல.

வ. நான் சொல்லுகிறேன் அவரிடம்.

பா. சரி, நான் போகவேண்டியது தான்—உம்!

[சுற்றிப்பார்த்துவிட்டு மெல்லப்போகிறான்.]

வ. இந்த சாவுகார்கள் என்ன அசாத்தியர்கள்! இதனால் தான் அவர்கள் பணத்தைக் குட்டி போடச்செய்து பெருக்குகிறார்கள்!

ஆத்மாராவ் நான்கு புறமும் பயத்துடனும் கவலையுடனும் சுற்றிப் பார்த்துக்கொண்டு மெல்ல திரும்பவருகிறார்.

ஆ. போய்விட்டானா?

வ. ஆ்—ஆயினும் அவன் ஒரு வியாஜ்யத்திற்காகத்தான் வந்தான்.

ஆ. ஒரு வியாஜ்யத்திற்காகவா? அதில் ஒரு வார்த்தையையும் நான் நம்பமாட்டேன்! திருட்டுக்கழுதைகள்!

வ. கையில் ஏதோ காகிதங்கள் வைத்திருந்தான்.

ஆ. எல்லாம் பத்திரங்களாயிருக்கும் என்பதற்குச் சந்தேகமில்லை.

வ. அவன் ஏதோ வாஸ்தவமாகத்தான் பேசியது போல் காணப்பட்டான்.

ஆ. யார் அப்படி இல்லை? அவனுடைய வாஸ்தவத்தைப் பற்றி எனக்குக் கொஞ்சமேனும் சந்தேகமில்லை!

வ. இருந்தபோதிலும், ஸ்பஷ்டமாக அவனுக்குச் சொல்லி கொஞ்சம் பொறுக்கும்படியாக கேட்பது நல்லதல்லவா?

ஆ. ஆமாம்! அந்த காலமெல்லாம் அப்பொழுதே போய் விட்டது.

வ. ஒருவேளை அவன் சந்தேகப் பட்டால்?

ஆ. இப்பொழுது அவன் சந்தேகப்பட வில்லையா என்ன! ஆயினும் என்ன செய்ய முடியும் என்றால்? நீயோ ஒன்றுக்கும் பிரயோஜனமில்லை—மற்ற குமாஸ்தாக்களெல்லாம் அவர்களுடைய வக்கீல்களுக்கு, தினம் எத்தனையோ வியாஜ்யங்கள் கொண்டுவந்து தருகிறார்கள் என்று கேள்விப்பட்டேன். அவர்கள் எல்லாம் கஷ்டம் எடுத்துக் கொள்ளுகிறார்கள், ரெயில் ஸ்டேஷனுக்குப் போகிறார்கள், கடைகளுக்குப்போகிறார்கள், இப்படியெல்லாம் தங்களாலியன்ற அளவு செய்கிறார்கள்; நீ என்னவென்றால் சோம்பேறியாய் ஒன்றும் கவனிப்பதேயில்லை.

வ. எனக்கு மிகவும் வருத்தமாயிருக்கிறது, ஐயா,—தங்களுக்கு என் வேலை திர்ப்திகரமாயில்லா விட்டால் உங்களுடைய ஆபிசை இந்தக்ஷணம் விட்டுப்போகிறேன். நீங்கள் வேறுயாராவது ஒரு குமாஸ்தாவைப் பார்த்துக் கொள்ளலாம்.

ஆ. இல்லை இல்லை! வரதாச்சாரி, நான் சொல்வது உனக்கு அர்த்தமாகவில்லை. அதிர்ப்திகரமில்லா விட்டால் ஒருவன் அபிவிர்த்தி அடையமுடியாது.

வ. அபிவிர்த்தியில்லாதவன் தானே அதிர்ப்தியுடையவனாயிருக்கவேண்டும்?

ஆ. அதோ!— யாரோவருகிறார் போலிருக்கிறது! யார் அது?

வ. [வெளியிற் பார்த்து] யாரோ புது ஆசாமி, அவன் வக்கீல்கள் வீடுகளுக்குப் போவதை நான் பார்த்திருக்கிறேன் முன்பு, ஆயினும் அவன்யாரோ தெரியாது எனக்கு.

ஜகன்மோஹன நாயுடு வருகிறார்.

ஜ. க்ஷேமம் தானே' எப்படியிருக்கிறீர்கள்—என்ன'—என்னை ஞாபகமில்லையா உங்களுக்கு?

[ஒரு நாற்காலியை இழுத்து அதன் பேரில் உட்காருகிறான்.]

ஆ. ஓஹோ! நீங்களா! எங்கிருந்து வருகிறீர்கள் இப்பொழுது?

ஜ. ஸ்டேஷனிலிருந்து நேராகவருகிறேன். அரைமணி நேரத்துக்கு முன்பு தான் பட்டணம் வந்தேன். என்னை உங்களுக்கு ஞாபகம் இருப்பதாகக் காணோமே—நான் இல்லாலூர் ஜமீன்தாருடைய ஏஜண்டு. நீங்கள் அங்கே டிஸ்டிரிக்ட் முனிசிப்பாயிருந்த போது, ஜில்லா கோர்ட்டில் அவருடைய பெரிய தத்துவியாஜ்யத்தை நடத்திக் கொண்டிருந்தேன்.

ஆ. ஓ! ஆமாம்! அது தான் ஞாபகப்படுத்திக் கொண்டிருந்தேன். அந்த வியாஜ்யம் என்னவாச்சுது? முடிந்துபோய் விட்டதா இப்பொழுதாவது?

ஐ. கடைசி நிமிஷத்திலே டிஸ்டிரிக்ட் ஜட்ஜ் எங்களுக்கு விரோதமாகத் தீர்மானம் கொடுத்தார். அதிலே ஒரு சங்கதி யிருக்கிறது. [சுற்றிப்பார்த்து] அப்புறம் அதை உங்களுக்குச் சொல்லுகிறேன். நேற்றுராத்திரி தான், நீங்கள் சென்னபட்டணத்திலே வக்கிலாயிருப்பது ஜமீன்தாருக்கும் எனக்கும் தெரிந்தது; நான் உடனே உங்கள் மேல்விலாசத்தைத் தெரிந்து கொண்டு புறப்பட்டேன். அப்பீலுக்கு உங்களை வக்கிலாக ஏற்பாடு செய்ய வேண்டுமென்று தீர்மானித்தோம். வழியிலே பெரிய ஆபத்து ஒன்று நேர்ந்தது—ஒரு தைரியமான களவு! ஸ்டேஷனில் இறங்கினவுடனே, ஒரு புருஹாம் வண்டியில் ஏறிக்கொண்டு நேராக உங்கள் வீட்டிற்கு ஓட்டச்சொன்னேன். வருகிறவழியில் ஒரு காபிஹோட்டலில் கோச்மானை நிற்கச்சொல்லி, உள்ளே கைகாலலம்பிக்கொண்டு காப்பி சாப்பிடப் போனேன். வெளியில் வந்து பார்த்தால் வண்டியைக்காணோம்! அந்த கோச்மான், என்னுடைய வியாஜ்ய காகிதங்கள், நான் பணம் வைத்திருந்த பெட்டி, எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு டுடுக்கிகொடுத்ததைக் கண்டேன்! வாஸ்தவத்திலே காபி ஹோட்டல்காரனுக்குக் கொடுக்கவும் கையில் பணமில்லை.

ஆ. பெட்டியில் நிரம்ப பணம் இருந்ததோ?

ஐ. இல்லை, அதிகமொன்றும் இல்லை, எல்லாம் சேர்த்து ஒரு ஆயிரம் ரூபாய் சில்லரை இருக்கும்; என் கவலையெல்லாம் அந்தக் காகிதங்களைப் பற்றி இப்பொழுது.

ஆ. நீங்கள் அந்த கோச்மானை எப்படியும் கண்டுபிடிக்கலாமே, அவன் வண்டி நம்பர் உங்களுக்கு ஞாபகம் இருக்கிறதா?

ஜ. அதைக் குறித்துக்கொண்டிருக்க வேண்டும்!

ஆ. உம்!— நாம் என்ன செய்வதிப்பொழுது?

ஜ. பணத்தைப் பற்றிக் கவலையில்லை, ஜமீன் தாருக்கு தந்தி கொடுத்து எவ்வளவு வேண்டுமென்றாலும் வரவழைத்துக் கொள்வேன். இந்த வியாஜ்பக் காகிதங்களுக் கெல்லாம் வேறு நகல்வாங்க வேண்டும்.

ஆ. ஆம் ஆம்—அந்த கஷ்டம் ஒன்று இருக்கிறது.

ஜ. உடனே நான் பணத்துக்காக தந்திகொடுக்க வேண்டும். போலீசார் உதவியைக் கொண்டு இரண்டு மூன்று தினங்களில் அந்தக் காகிதங்களை நாம் கண்டுபிடிக்கலாம்.

ஆ. அந்த நம்பிக்கை வேண்டாம், உங்களுக்குச் சென்ன பட்டணம் சமாசாரம் நன்றாய்த்தெரியாது.

ஜ. அதென்னமோ நிஜம், காகிதங்களைப்பற்றி தந்தி கொடுப்பது எனக்கு இஷ்டமில்லை—அப்படிச் செய்தால் ஜமீன் தார் ஒரு வேளை பயந்து போவார். அப்படி அவசியமாயிருந்தால் நானே நேராகப்போய் ஒரு வாரத்திற்குள் வேறுநகல்கள் வாங்கிக்கொண்டுவந்து விடுவேன்.

ஆ. அதற்குப் போதுமான காலம் இருக்கிறதா?

ஜ. சந்தேகமில்லை, தீர்மானத்தின் நகல் இரண்டு தினங்களுக்கு முன்புதான் கிடைத்தது எங்களுக்கு.

ஆ. என்ன ஆச்சரியம்! என்ன தைரியமான திருட்டு! அந்தக் கோச்மானைப் பார்த்தால் இவன் தான் என்று சொல்லமுடியுமா உங்களால்?

ஜ. ஒருவேளை முடிந்தாலும் முடியும்—அவ்வளவு உறுதியாய்ச் சொல்லமுடியாது—ஆயினும் போலீசாருக்கு நான் உடனே தெரிவிக்க வேண்டுமென்று நினைக்கிறேன்.

ஆ. ஆம், அதை உடனே செய்யவேண்டும் நீங்கள்.

ஜ. ஆம், உடனே செய்கிறேன் அப்படியே; நான் உங்களை இன்றிரவு பார்க்கிறேன். மறுபடியும் வீட்டிற்கு எப்பொழுது வருவீர் ?—எட்டுக்கா ?—ஏ—தயவு செய்து ஒரு பத்து ரூபாய் கொடுங்கள். தந்தி கொடுக்கக்கூட என்கையில் பணமில்லை ! சென்னபட்டணத்தில், ஒரு வீதியில், கையில் ஒரு காசுமின்றி கலவரப்பட நேர்ந்தது என்கதி!

ஆ. என்ன கஷ்டம்! என்னிடம் இச்சமயம் ரொக்கம் ஒன்றுமில்லை; வாஸ்தவம் என்ன வென்றால்—என் சிலவிற்கெல்லாம் நான் செக் எழுதிக்கொடுக்கிறவழக்கம். ஒரு செக் கொடுத்தால் போதுமோ இல்லையோ?

ஜ. ஒரு செக்கா ?—செக்கை மாற்றுகிற கஷ்டம் எனக்கு வேண்டாம்—உம்முடைய வீட்டில் கொஞ்சமாவது ரூபாய் இல்லாமலா இருக்கும் ?

ஆ. [மேஜையின் அறையை இழுத்து, தன்பையை மெல்ல தடவி அதில் தான் வைத்த இரண்டு ரூபாய்களை வெளியில் எடுக்கிறார்.] இவ்வளவு தான் என்னிடம் இப்பொழுது இருக்கிறது —இதைக் கொண்டு நீங்கள் என்ன செய்யக்கூடும் ?

ஜ. என்னதுர் அதிர்ஷ்டம்!—[அவர்கையினின்றும் அந்த இரண்டு ரூபாய்களையும் பிடுங்கிக்கொள்வதுபோல் வாங்கி] இதில் பாதி ஒரு மணி நேரத்தில் எனக்கு ஆயிரம் ரூபாய் கொண்டு வரும்-நான் வருகிறேன். ராத்திரி பார்க்கிறேன் உங்களை. [போகிறான்.]

ஆ. எங்கே உங்களுடைய ஜாகை? சாப்பாட்டிற்கு இங்கே வரமாட்டீர்களா நீங்கள் ? என் குமாஸ்தாவை உங்களோடு போலீஸ் ஸ்டேஷனுக்கு அனுப்பவா ?—நிரம்ப அவசரமாயிருக்கிறாற் போலிருக்கிறதே அவருக்கு ?

வ. ஒரு காலையில் ஆயிரம் ரூபாய் போக்கடித்துக் கொண்டவர், எப்படி நிதானமாயிருக்கக் கூடும் ?

ஆ. இந்தப்பயலை எங்கேயோ பார்த்த ஞாபகமாயிருக்கிறதெனக்கு.

வ. ஆனால் எஜமானுக்கு ஆசாமியே தெரியாதோ? அவன் பேசியதைப் பார்த்தால் உங்களுக்குப் பெரிய சிநேகிதன் போலிருந்ததே. ஆயினும் அவன் சேலத்து ஆசாமி யல்லவென்று நினைக்கிறேன்.

ஆ இப்படிப்பட்டபயல்கள் எங்கும் திரிகிறார்கள்.

வ. உம்—நேற்றுசாயங்காலம்—அதைச்சொல்ல மறந்தேன்—ஆனரபில் முத்துசாமி ஐயர் அவாள்—கிருஷ்ணகிரி அப்பீல் காகிதங்களை உங்களை வைத்துக்கொண்டு படிக்க வேண்டுமென்று உங்களைவரும்படி சொல்லியனுப்பினார், எஜமான் கிளப்பிலிருந்து வரவில்லை. நான் அவரிடம் போய்ச் சொன்னேன்; அவர் அதிக கோபங்கொண்டு பலவிதமாகச் சொன்னார்.

ஆ. அவர் என்னதான் சொன்னார்? சொல்.

வ. ஜூனியர் வக்கீல்களுக் கெல்லாம் அவர்களுடைய உத்திரவாதம் தெரிகிறதில்லை; கௌரவமென்பது கிடையாது, பேராசைமாத்திரம் உண்டு; என்று இப்படி பல விதமாகக் கண்டபடிவைதார்.

ஆ. அப்படியா சொன்னார்? நான் எப்படிப்பட்டவன் என் பதையும், அவர் கீழிருக்கும் முகஸ்துதி செய்யும் கெஞ்சுகின்ற ஜூனியர்களை அவர் நடத்துவது போல் என்னிடம் முடியாது என்பதையும், அவருக்கு ஒரு நாள் காண்பிக்கிறேன்! இந்த சீனியர்களுக் கெல்லாம் இந்த கர்வமுண்டு—வருகிற பீசுகளை யெல்லாம் ஜேபியில் போட்டுக்கொள்ளுகிறது, வேலையெல்லாம் ஜூனியர்களைச் செய்யச் சொல்கிறது! இந்தக்கதை யெல்லாம் என்னிடம் நகராது இந்த வழக்கத்தை யெல்லாம் சின்னா பின்னமாய் ஒரு நாள் உதைத்தெறிகிறேன்!

வ. அந்த அப்பீல் கட்சிக்காரன் எப்படிப் போவது? அவன் முறையிடமாட்டானா?

ஆ. அவனைத்தூக்கு போட்டுக்கொண்டு சாகச் சொல்!

துஞ்சிதபாத ஐயர் மெல்ல சாவதானமாய் வருகிறார்.

கு. தாங்கள் தானே ஆத்மாராம் ராவ் ஐயா ?

ஆ. ஆம் ஐயா, நான்தான்; ஏதாவது உங்களுக்கு நான் செய்யக்கூடுமோ ?

கு. நான் கொஞ்சம் ரகசியமான வேலையாய் வந்திருக்கிறேன்.

ஆ. அது அவசரமானதாயிருந்தால் இப்பொழுதே உம்முடைய வேலையைக்கவனிக்கிறேன்; இல்லாவிட்டால், என் குமாஸ்தாவுக்குச் சொல்ல வேண்டிய வேலையை முடித்துக்கொண்டு பிறகு உம்முடைய வேலையைப் பார்க்கிறேன்.

கு. நான்காக்கக்கூடும். இன்று காலை நான் பார்க்கவேண்டிய வீடுகளில் இதுதான் கடைசி என்று தீர்மானித்திருக்கிறேன்.

ஆ. சந்தோஷம்!—கட்டை அந்த சின்ன மேஜையின் பேரில் வைக்கலாம் நீங்கள்.

கு. பரவாயில்லை, இவைகளைக் கையில் வைத்திருக்கும் வழக்கமாய் விட்டது.

ஆ. சரி—குமாஸ்தா, சீக்கிரம் வாரும்; அவர் காத்துக்கொண்டிருக்கிறார்.

வ. அப்படியே ஐயா.

ஆ. ஷார்ட் ஹான்ட் குமாஸ்தா எங்கே? இன்று காலை என் அவன் இன்னும் இங்குவரக்காணோம் ?

வ. எனக்குத் தெரியாது ஐயா.

ஆ. சரி, உன்னால் முடியுமானவரைக்கும் நான் சொல்வதை எழுதிக்கொள்ள வேண்டியது தான். ஆரம்பி சீக்கிரம்!

வ. [ஒரு நோட் புஸ்தகத்தையும் பென்சிலையும் எடுத்துக் கொண்டு] இதோ சித்தமாயிருக்கிறேன், ஐயா.

ஆ. உம்—நகிரி ஜமீன்தாரிடம் இருந்து ஏதாவது பதில் தந்தி வந்ததா?

வ. இல்லை—இன்னும் வரவில்லை ஐயா.

ஆ. ஆனால், இதை தந்தி மூலமாக அவருக்கு உடனே தெரிவி!—அர்ஜன்டாக—"எதிர்கட்சி நிர்ப்பந்தம் செய்கிறார்கள்—ஐயாயிரம் ரூபாய்—ரிடெய்னர்—கொடுப்பதாக சாயங்காலம் ஆறுமணிக்குள்ளாக உங்கள் ரிடெய்னர் வந்து சேராவிட்டால்—எதிர்கட்சியிடம் வக்காலத் ஒப்புக்கொள்ளப்படும். பதில் தந்தி உடனே கொடுக்கவும்"

வ. சரி—ஐயா.

ஆ. கார்வேடிநகர் சமஸ்தான அவிபக்தத்தைப் பற்றி என்னுடைய அபிப்பிராயம் கொடுத்தேனே, அதை அனுப்பி விட்டாயா?

வ. இல்லை—இன்னும் அனுப்பவில்லை ஐயா.

ஆ. ஆனால் நான் உனக்குச் சொல்லுமளவும் அதை அனுப்பாதே. அந்தப் பயல்கள் ஏதோ என்னை ஏமாற்றப் பார்க்கிறார்கள் என்று எண்ணுகிறேன்.

வ. அப்படியே ஆகட்டும் ஐயா.

ஆ. அதை குறித்துக்கொள், இல்லாவிட்டால் அதை மறந்து விடுவாய்.

வ. அப்படியே செய்கிறேன் ஐயா.

ஆ. நுஸ்வீட் அப்பீல் இன்றைய ஜாபிதாவில் போட்டு இருக்கிறதா?

வ. இல்லை ஐயா, இந்த வாரம் கடைசியில் தான் அதை ஜாபிதாவில் போடுவார்கள் என்று நினைக்கிறேன் ஐயா,

ஆ. நாம் அப்பீல் பிரதிவாதி பக்கமல்லவா? அவன் பாக்கி பீசைக்கொடுத்து விட்டானு?

வ. இல்லை ஐயா.

ஆ. எவ்வளவு அது? சுமார் அறுநூறு ரூபாயல்ல?—என்ன பசகள்! நீங்கள் எப்பொழுதும் அஜாக்கிரதையாயிருக்கிறீர்கள்! எத்தனை தரம் உங்களுக்கு அதைப் பற்றி நான் சொல்வது?

வ. பீசைப்பற்றி சந்தேகமில்லை ஐயா.

ஆ. சந்தேகமோ இல்லையோ—என்னுடைய ஏற்பாடு என்னவென்றால், ஒரு மஹாராஜவுக்குக்கூட, என்பீ செல்லாம் பூராவாக வைத்தாலொழிய, ஆஜர் ஆகமாட்டேன் என்பதே! கட்சிக்காரனுக்கு தந்தி அனுப்பு. உம்—எழுதிக்கொள்—"அப்பீல் விசாரணைக்கு இந்த வாரம வருவது நிச்சயம்—பாக்கிபீசு இன்னும் கொடுக்கவில்லை—உடனே பாக்கிபீசு பூராவாகக் கொடுத்தாலொழிய ஆஜராகமாட்டேன். பதில் தந்தி அனுப்பவும்."

வ. எழுதியாச்சுது ஐயா.

ஆ. எந்த பெஞ்சின் முன்பாக அது வரும் போலிருக்கிறது?

வ. இரண்டாவது அபெல்லெட் பெஞ்சின் முன்பாக ஐயா; ஜஸ்டிஸ் ஹெட்ஸ்ட்ராங் ஜஸ்டிஸ் ஸ்லோகோச், முன்பாக.

ஆ. அந்த வியாஜ்யத்துக்கு அது தான் மிகவும் சரியான பெஞ்ச். இதையெல்லாம் ஏற்பாடு செய்கிற அந்த கோர்ட் குமாஸ்தாவைப்பார்த்து, வேறே பெஞ்சுக்கு அதைமாற்றுதபடி அவனுடன் ஏற்பாடு செய், தெரிகிறதா?

வ. அப்படியே ஆகட்டும் ஐயா.

ஆ. பிறகு—நன்றாய் கவனி—சோம்பேரிக் கழுதை !—வெங்கடகிரி அப்பீல் எப்போது விசாரணைக்கு வரும் போலிருக்கிறது ?

வ. இவ்வளவு சீக்கிரத்தில் வராது, ஐயா.

ஆ. அது ஜஸ்டிஸ் ஸ்னேடர் முன்பாக வராதபடி நீ பார்த்துக்கொள்ளவேண்டும். போனவாரம் கவர்ன்மென்ட் அவுஸ் பார்ட்டியில் நம்முடைய கட்சிக் காரரை அநேக வருஷமாகத் தனக்குத் தெரியும் என்றும், அவரைப் பற்றி தனக்கு அதிகமான மதிப்பு கிடையாதென்றும் அவர் என்னிடம் சொன்னார். எப்படியாவது அவருடைய ஜாபிதாவில் வராதபடி பிரயத்னம் பண்ணு.

வ. அப்படியே செய்கிறேன் ஐயா.

ஆ. இன்னும் என்ன? இவருடைய வேலையை நான் பார்க்க வேண்டும் "சர்பிரெடரிக் பாலக் ஆன் மிஸ் ரெப்பிரசன்டேஷன் அன்ட் பிராட்" புஸ்தகம் திருப்பி வந்துவிட்டதா ? எனக்கு அது அவசியமாக வேண்டும் இன்றைக்கு.

வ. எனக்குத் தெரியாது ஐயா.

ஆ. உனக்கு ஒன்றும் தெரியாது ! ஜஸ்டிஸ் கிருஷ்ணசாமி ஐயர் வீட்டிலிருந்து யாரோ வந்து வாங்கிக்கொண்டு போனார்கள் அதைப் போனவாரம். உடனே யாரையாவது அனுப்பி அதை வாங்கிக் கொண்டுவா. இந்த ஜட்ஜுங்களெல்லாம் பெரிய தொந்திரவு ! இனிமேல் என் உத்திரவில்லாமல் அவர்கள் ஒருவருக்கும் எந்த புஸ்தகத்தையும் அனுப்பாதே.

வ. நான் அனுப்பவில்லை ஐயா.

ஆ. சரி, அவ்வளவுதான்—நீ போகலாம் இனி.

வ. வேறொன்றும் வேலை இல்லையே ஐயா? நான் வருகிறேன். [போகிறான்.]

ஆ. உம்—என்ன செய்யக்கூடும் உங்களுக்கு நான் ?

சு. ஏறக்குறைய ஜூனியர் வக்கீலாயிருந்தும், தங்களுக்கு அதிகவேலை யிருப்பதாகக் காணப்படுகிறது எனக்கு நிரம்ப சந்தோஷம்.

ஆ. உம்—ஜூனியர் என்று யாரைச் சொல்லுகிறீரோ என்று எனக்கு தெரியவில்லை. வாஸ்தவமாய், ஜூனியர் என்பதும் சீனியர் என்பதும், வக்கீல் ஆகி எத்தனை வருஷமாச்சுது என்று கணக்குப் போட்டுப் பார்க்கக்கூடாது; அது அவர்களுக்கு கோர்ட்டில் எத்தனை வியாஜ்யங்கள் இருக்கின்றன என்பதைப் பொறுத்ததாகும்.

சு. மிகவும் உண்மை—கொஞ்சம் வருஷத்திற்கெல்லாம் மாதத்திற்கு இரண்டாயிரம் ரூபாய் வரும்படி உடைய சில வக்கீல்களை எனக்குத் தெரியும்.

ஆ. உம்—மாசத்திற்கு இரண்டாயிரம் ரூபாய் என்ன ஒரு பெரிய வரும்படியா என்ன ? இருப்பதற்குள் பெரிய படியைக் கொண்டல்லவோ அளக்கவேண்டும் நீங்கள் !

சு. ஆமாம், வேறு எந்த உத்தியோகத்தைவிட வக்கீல் வேலைதான் அதிக வரும்படியைத் தருகிறது தற்காலம்.

ஆ. அது சரிதான்; வரும்படி வருகிறது வாஸ்தவமே, ஆயினும் என்ன தான் இருந்தபோதிலும், மிகவும் நிர்ப்பந்தமான உத்யோகம்! தற்காலத்திய ஜட்ஜுகளுடன் யார் மல் கொடுக்கிறது ?

சு. ஆயினும் தங்களைப் பற்றி இரண்டு மூன்று ஜட்ஜுகள் மிகவும் நல்ல அபிப்பிராய முடையவர்களா யிருப்பதாகக் காணுகிறதே.

ஆ. உம்!—அதனாலென்ன ? இம்மாதிரியான பேச்சு எனக்கு வெறுப்பைத் தருகிறது. அந்த விஷயத்தைப் பற்றி பேசுவதென்றால்—ஜட்ஜுகள் எல்லோரும் என்னை நேராக

அறிவார்கள்; அவர்கள் எல்லோரும் என்மீது பட்சமாய்த் தான் இருக்கிறார்கள் என்று நான் உறுதியாய்ச் சொல்வேன். ஆயினும் எல்லோர் எதிரிலும் அதைப்பற்றியே எடுத்துப்பேசிக்கொண்டிருக்கிறார்களே சிலர், அவர்களைப்போல் நானும் செய்ய எனக்கிஷ்டமில்லை.

கு. இவ்வளவு நீங்கள் விர்த்திக்கு வந்தது மல்லாமல், உங்களுடைய நடவடிக்கையில் உத்தமமான நியமங்களுடன் நடப்பதை உலகத்தோருக்கெல்லாம் நீங்கள் தெரிவிப்பது, எனக்கு மிகுந்த சந்தோஷத்தைத் தருகிறது.

ஆ. எங்கள் உத்யோகத்தில் அபிவிர்த்தி யடைதலும் நற்குணமுடையனா யிருத்தலும் ஒன்றுதான்—எப்படியும் அப்படி இருக்க வேண்டியது நியாயம்.

கு. ஒப்புக்கொண்டேன்—அப்படி யிருக்கவேண்டியதுதான்! இன்று காலை என் மனதுக்கு ஒரு பெரும் விருந்து கிடைத்தது போல் எண்ணுகிறேன்.

ஆ. ஆம்—நான் மறந்தேன். இனி வேலையை கவனிப்போம் தாங்கள் என்னுடைய அபிப்பிராயம் கேட்கவந்தது அசல் வியாஜ்யத்தைப் பற்றியா? அல்லது அப்பீல் வியாஜ்யத்தைப் பற்றியா?

கு. இனி உங்களுக்குக் கஷ்டம் கொடுப்பது எனக்கிஷ்டமில்லை ஐயா!

ஆ. வாஸ்தவமாய்—நான்—நான்-சொல்வதென்ன வென்றால்—உங்களுக்கு ஏதாவது கோபம் உண்டுபண்ணினேனோ?

கு இல்லவே யில்லை—அதற்கும் எனக்கும் நிரம்ப தூரம்.

ஆ. நீங்கள் சொல்வது எனக்கு அர்த்தமாகவில்லை.

கு. அதனால் பாதகமில்லை, ஐயா.

ஆ. வாஸ்தவமாய்—வியவஹாரத்தைப்பற்றி என்ன?

கு. நான் வந்த வியவஹாரம் விசாரணையாகி முடிந்துவிட்டது ஐயா.

ஆ. என்ன உம்முடைய மனதில் இருக்கிறது? என்னுடைய காலத்தை இப்படி அனுவசியமாய்ப் போக்க உமக்கு எப்படி தைரியமுண்டாயிற்று? எதற்காக என்னிடம் வந்தீர்?

கு. நான் இங்கு வந்தது சில சமாசாரங்களைத் தெரிந்து கொண்டு போக. அவைகளை அறிந்துகொண்டேன்—ஆகவே இப்பொழுது தயவு செய்து எனக்குப் போக விடைகொடுக்கவேண்டும்.

ஆ நான் இது வரையில் பார்த்திராத சாவதானமுடை அதனப் பிரசங்கியா யிருக்கிறீர் நீர்!—யார் நீர்?

கு உங்களுக்கு நான் இன்னான் என்று அறிவது சந்தோஷகரமா யிருக்கும்—நான் வரும்படி வரி (இன்கம்டாக்ஸ்) இன்ஸ்பெக்டர்!

ஆ. என்ன!—என்ன?

கு. நான் வருகிறேன். [போகிறார்.]

ஆ. என்ன மடயன் நான்!

[அப்படியே அசந்துபோய் வெட்டவெளியைப் பார்த்த வண்ணம் நிற்கிறார். அவர்மனைவி பாலா பிரவேசித்து அவரைப்பார்த்து, ஆச்சரியப்பட்டு என்ன நடந்ததோ என்று பிரமித்து நிற்கிறாள். இந்த தோற்றக்காட்சியில் படுதாமெல்ல இறங்குகிறது.]

நாடகம் முற்றியது.

சுல்தான்பேட்டை சப் அசிஸ்டெண்ட் மாஜிஸ்டிரேட்

நாடக பாத்திரங்கள்

சேத்துப்பட்டு கிருஷ்ணசர்மா	...	சப் அசிஸ்டெண்ட் மாஜிஸ்டிரேட்
கனகவல்லி	...	அவர் மனைவி
ருக்மிணி அம்மா	...	அவருடைய தாயார்
கோபாலையங்கார்	...	ஒரு குமாஸ்தா
மகம்மது சுல்தான் சாயபு வீராசாமி	...	கிருஷ்ண சர்மாவின் வேலைக்காரர்கள்
ராமாசாஸ்திரி காமாசாஸ்திரி	...	இரண்டு பிராம்மணர்கள்
மிஸ்டர் ஹேஸ்டிராங் ஐ சி. எஸ்.	...	டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேட்
மிஸ்ஸஸ் ஹேஸ்டிராங்	...	அவருடைய மனைவி

போலீஸ் இன்ஸ்பெக்டர் கான்ஸ்டெபில்கள் முதலியோர்.

சுல்தான்பேட்டை சப்
அசிஸ்டெண்ட் மாஜிஸ்டிரேட்

முதல் அங்கம்

முதற் காட்சி

இடம்:—கிருஷ்ணசர்மாவின் பழய வாடகைவீடு.

கிருஷ்ணசர்மா சாப்பிட்டான பிறகு சமயல் அறையி லின்றும், முழங்கைவரைக்கும் தள்ளப்பட்டிருக்கும் கம்பிளி குடுத்தாவைப் போட்டுக் கொண்டு, வந்து கொண்டிருக்கிருர்.

ச. தைரிய சாலியே அதிர்ஷ்டசாலி!—யாராவது கனவு கண்டிருப்பார்களா ?

கனகவல்லி வருகிருள்.

க. நான் கண்டேன்—நேற்றிரவு நான் ஒருகனவு கண்டேன்.

ச. உன் கனவு பாழாய்ப்போக! போ அப்புறம்! என்னைத் தொந்திரவு செய்யாதே.

க. ஏதாவது ஜுரமாயிருக்கிறதா என்ன உமக்கு ?

ச. ஆமாம், அது ஒரு மாதிரி ஜுரம்தான்—நீ போகி ருயா என்ன ?

க. நான் அப்படித் தான் நினைத்தேன்—அதை உங்கள் தாயாரிடமும் சொன்னேன்— உங்கள் தாயார் என்ன வோ என்னை நம்பவில்லை—ஜுரமாயில்லா விட்டால், ஒரு பிராம்மணன் கம்பிளி சட்டையைப் போட்டுக் கொண்டு சாப்பிடுவாரோ ?

ச. நீ சொல்வது மிகவும் சரி தான்! உள்ளே போய் பாத்திரங்களை அலம்பு.

க. ஏன் என்னைத் துரத்திவிடுகிறீர்கள் இப்படி? ஆனால்—சாயங்காலம் நான் கேள்விப்பட்டதை உமக்குச் சொல்ல மாட்டேன்.

[போகப்புறப்படுகிறாள்.]

ச. வேண்டாம் வேண்டாம்! வா இப்படி கொஞ்சம்—நீ நிரம்ப நல்ல பெண்ணாச்சே!—வர மாட்டாய் நீ?

க. [திரும்பி வந்து] ஒரு பந்து கூட, நீர் அதை உதைத்தால், உம்மை விட்டுத் தூரமாகப் போய்விடுகிறது.

ச. இன்னொரு உதை உதைத்தால் திரும்பி வந்து விடுகிறது, உனக்குத்தெரியாதா என்ன?

க. ஆமாம்—ஆனாலும்— பெண்சாதி என்பவளுக்கு புத்தி என்பது ஒன்றிருக்கிறது.

ச. சே! ஆயினும் நீ மிகுந்த புத்திசாலியாயிற்றே.—வா சொல்லு—என்ன கேள்விப்பட்டாய்?

க. இன்று சாயங்காலம் நான் தண்ணீர் கொண்டுவரக் கிணற்றுக்குப் போன போது, இன்றைக்கு உமக்கு பெரிய உத்யோகம் கிடைத்ததாகவும், நீங்கள் ஒருவர் பாக்கியில்லாமல் எல்லோரையும் ஜெயிலில் போடப் போகிறதாயும் அங்கே சொன்னார்கள்.

ச. அப்படியா சொன்னார்கள்?—என்ன புத்திசாலிகள்!

க. அவர்களெல்லாம் நீங்கள் நிரம்ப கெட்டிக்காரர் என்றும், நான் நல்ல பெண் ஒன்றும் தெரியாதவள், என்றும் சொல்லிக்கொண்டிருந்தார்கள்.

ச. தெரிகிறது!—இன்னும் என்ன சொன்னார்கள்?

க. ஒருவருக்கும் தெரியாமல் உங்களுக்கு இந்த வேலை எப்படி கிடைத்ததென்று மிகவும் ஆச்சரியப்பட்டுக் கொண்டிருந்தார்கள்.

ச. ஏன், சுல்தான் பேட்டெல்லாம் முன்பே அறிந்திருக்கிறாற் போலிருக்கிறதே இதை !

க. நான் தான் சுல்தான் பேட் அல்லபோலும்? வாஸ்தவத்தில் கடைசியாகக் கேள்விப்பட்டது நான்தான். அதைக் குறித்து என்னை ஏளனம் செய்து கொண்டிருந்தார்கள் அங்கே.

ச. அப்படியா ? அவர்களுக்கு அவ்வளவு தைரியம் வந்ததா? சுல்தான் பேட்டை சப் அசிஸ்டெண்ட் மாஜிஸ்டிரேட்டின் மனைவியைக்குறித்து நகைப்பதென்றால் இன்னது என்பதை அவர்கள் கூடிய சீக்கிரத்தில் அறிவார்கள் !

க. எவ்வளவு பெரிய பெயர் ! அதற்கு அர்த்தமென்ன ?

ச. உம்— உனக்கு அது அர்த்தமாகாது —உம்— அதற்கு அர்த்தம் என்னவென்றால்–இன்று முதல் நான் சுல்தான் பேட்டை மகாராஜா என்பது தான்.

க. எதுவரைக்கும் ?

ச. ஓ! அது —இதைவிட இன்னும் பெரிய பதவியை அடைகிறவரையில். அதிருக்கட்டும், உன்னைப்பற்றி சிரித்தது யார் யார் ?

க. சொன்னால் —நாளைக்கு அவர்களை யெல்லாம் ஜெயிலில் போடுவீர்களா ? சொல்லுங்கள்.

ச. இதற்குள்ளாக முடியாது —ஆயினும் இனிமேல் நீ தண்ணீர் கொண்டுவரக் கிணற்றுக்குப் போகலாகாது.

க. பிறகு குடிப்பதற்கு தண்ணீருக்கு நாம் என்ன செய்வது? உங்கள் தாயார் போகமாட்டார்கள், அவர்கள் குருடாயிற்றே !

ருக்மணி வருகிருள்.

ரு. நடக்கிற சமாசாரம் ஒன்றும் தெரியாதபடி அவ்வளவு கண் குருடாகவில்லை இன்னும் நான்!—என்ன! என் வயிற்றிலே பிறந்த பிள்ளை, நேற்றுவரைக்கும் தொட்டி லிலிருந்தவன், தன் பெண்சாதியோடு இவ்வளவு நேரம் வெட்கமில்லாமல் பேசிக்கொண்டிருக்கிறதா!—என்னடா பையா! உன் தாயாரை வீட்டை விட்டுத்துரத்தும் படி ரகசியமாக உனக்கு உபதேசம் செய்து கொண்டிருக்கிருளோ அந்தக்குட்டி? வேறு என்ன அவள் பேசக் கூடும்?

ச. இல்லை அம்மா—கோபித்துக்கொள்ளாதே—என்னுடைய ஜுரத்தைப்பற்றி அவளிடம் சொல்லிக்கொண்டிருந் தேன்.

ரு. அவள் என்ன உன் தாயாரா என்ன அவளிடம் உன் ஜுரத்தைப்பற்றி நீ சொல்ல? இந்தக் காலத்திலே எல் லாம் தலை கீழாயிருக்கிறது! நான் உன்னைப் பெற்றேன், வளர்த்தேன், பசித்தழுத பொழுது பால் கொடுத்தேன், நோயா யிருந்தபொழுது மருந்து கொடுத்தேன், இப்படி யெல்லாம் செய்து உன்னை மனுஷனுக்கினேன். இப் பொழுதென்ன வென்ருல், உன் அகமுடையாளாகிய இந்தக்குட்டிக்கு தாரைவார்த்தேன்!

க. எனக்கு நிரம்ப வருத்தமாயிருக்கிறது! நீங்களே அவரை ஏன் கலியாணம் பண்ணிக்கொள்ளவில்லை?

ச. பேசாதீர்கள் இரண்டு பெயரும்! இன்று முதல் நான் இந்த சுல்தான் பெட்டை சப் அசிஸ்டென்ட் மாஜிஸ் டிரேட் என்பதை நீங்கள் அறிய வேண்டும். நான் இவ் விடம் கலகம் யாதொன்றுமில்லாமல் எல்லாம் சமாதான மாயிருக்கும்படிப் பார்த்துக் கொள்ளவேண்டிய சவரட் சணை கர்த்தா. நான் வேலையை மேற்கொண்ட முதல் நாள்

இராத்திரியே, என் சொந்த வீட்டில், சண்டைசச்சரவு, கலகம், அவதூறு முதலியவெல்லாம் நடக்க உடன் படேன்!

ரு. உன் வீட்டில் என்னை இருக்கவிடமாட்டாயா? அப்படி யாசமாசாரம்? ஹூம்! நீங்கள் இரண்டு பெயரும் அதைப் பற்றிதான் சதிபேசிக்கொண்டிருந்தீர்கள் என்று எனக்குத்தெரியும். நல்லது ஆகட்டும், இனிமேல் நான் எதற்காசப் பிழைத்திருக்கவேண்டும்!—இந்த நிமிஷம் நான் போய் கிணற்றில் விழுந்து சாகிறேன். அப்புறம் இந்த தடை உங்கள் வழியைவிட்டு நீங்கினவுடன் நீங்கள் இரண்டு பெயரும் சுகமாய் வாழலாம்.

ச. [ஒரு புறமாக] என்ன தொல்லை—இந்தக் குருட்டுக்கிழவி யான ஒன்றுக்கும் உதவாத தாயார்! [உரக்க] கூடாது, அப்படி யொன்றும் செய்யக்கூடாது, நீ அவசரப்பட்டு.

க. [ஒரு புறமாக] இது என்ன எப்பொழுதாவது நடக்கப் போகிறதா என்ன? அவளாவது சாவதாவது!

ரு. இல்லை-நான் அவசரப்படமாட்டேன், பொறுமை உடையவர்கள் தான் இந்த உலகத்தை ஒருநாள் ஆள்வார்கள் என்று சொல்லியிருக்கிறதே.

ச. ஆமாம் அம்மா—நீங்கள் இல்லாவிட்டாலும் உங்கள் பிள்ளை ஆள்வான்.

ரு. என்ன வானாலும்—நீ என் பிள்ளை.

க. என்ன வானாலும்!

ச. நீங்கள் போகமாட்டீர்களா—இரண்டு பெயரும்—வீட்டிற்குள்ளே?

க. சந்தேகமென்ன, இதோ போகிறோம், நாங்கள் செய்வதற்கு இங்கு என்ன இருக்கிறது? வாருங்கள் அத்தை,

அடுப்பண்டைப்போவோம். யோசிக்குமிடத்து, அது தான் நமக்கு சொந்தமான இடம்; ஆடவர் நம்மை இப்படித்தான் நடத்துவார்கள்—வாருங்கள் !

[கனகவல்லி ருக்மணியைகையைப் பிடித்து அழைத்துக்கொண்டு அடுப்பண்டைப் போகிறுள்.]

ச. ஹா ! ஹா ! இது தான் முதல் முதல் என் முன்பாக விசாரணைக்கு வந்த முக்கியமான வியாஜ்யம்! அது சமாதானமாய்ப் போய்விட்டது! என்ன கஷ்டம்! இது கொஞ்சம் அபசகுனமாயிருக்கிறது!—இந்தப் பழய இடிந்த வீட்டில் ஒரு நாற்காலிகூட இல்லே! என்ன செய்வது? மரியாதையும் அந்தஸ்தும் திடீரென்று வந்து சேர்கிறது! முன்புவருவதாகத் தெரிவிக்காமலே.—உம், பியூன் !?

மகம்மது சுல்தான் சாயபு வருகிறுன்.

ம. ஆஜர்.

ச. மூன்று வீட்டிற்கப்புறம் இருக்கும் வக்கீல் நாராயணராவ் வீட்டிற்குப்போய், பெரிய சாய்வுநாற்காலியொன்று வாங்கிக்கொண்டுவா. அவர்களிடம் நான் கேட்டதாகச்சொல், இதோபார்—இரண்டு மூன்று சின்ன நாற்காலிகளும் வாங்கிக் கொண்டுவா.—உம்—வேண்டாம். ஒரு சின்ன பெஞ்சுபோதும்.

ம. எஜமான் உத்தரவு.

[போகிறுன்.]

ச. இன்று இராத்திரி கோபாலேயங்கார் என்ன யோசித்துக் கொண்டிருக்கிறுர் என்று ஆச்சரியப்படுகிறேன்.—யார் அங்கே ?

வீராசாமி வருகிறுன்.

வீ. எஜமான் கூப்பிட்டாரா என்னே ?

ச. ஆம் ; கோபாலையங்கார் வீடு உனக்குத் தெரியுமே, தெரியாது உனக்கு? அங்கே போய் நான் அவரை உடனே பார்க்கவிரும்புகிறேன் என்று நான் சொல்லியனுப்பினதாகச் சொல்.

வீ. எஜமான் புரோகிதர் கோபாலையங்காரையா சொல்லுகிறீர்கள் ?

ச. அல்ல மடக்கழுதை! நான் வேண்டுவது ஹைகோர்ட் கோபாலையங்காரை. போ! ஓடடா கழுதை!

வீ. அப்படியே—எஜமான் உத்திரவுபடி

[விரைந்து போகிறான்.]

ச. ஹா! செய்ய வேண்டியது எவ்வளவு இருக்கிறது! அவ்வளவிற்கும் எவ்வளவு கொஞ்ச காலம்!

கனகவல்லி மறுபடிவருகிறாள்.

ச. ஏன்? என்ன விசேஷம் இப்பொழுது?

க. இந்தப் பற்று உங்கள் தலைக்காகச் சித்தம் செய்தேன்; அது தலைக்கு குளிர்ச்சி உண்டாக்கும், எல்லாவித ஜுரங்களுக்கும் இது மிகவும் சிறந்த ஔஷதம்.

ச. போ! போவெளியே!—கழுதை! என் ஜுரத்தைப் பற்றி உனக்கென்ன தெரியும்?

க. வெள்ளைக்காரர்களெல்லாம் அவர்கள் பெண்சாதிமார்களை அப்படித்தான் கூப்பிடுகிறார்களோ?

ச. அதனப்பிரசங்கித்தனமாய்ப் பேசாதே!

க. நான் ஏதாவது கேள்விகேட்டால் அது அதனப் பிரசங்கித்தனம்!

ச. மூடுகிறாயா என்ன?

க. தெருக்கதவையா சொல்லுகிறீர்? இதோ—
[போய்க்கொண்டு.]

ச. இல்லை—நில்! வெறுமையாய்ப் பேசுகிற உன் வாயை மூடச்சொன்னேன்.

க. ஓ! தெரிகிறது! ஆயின் நீங்கள் ஒரு ஊமையை ஏன் கலியாணம் செய்துகொள்ளவில்லை?

ச. அப்படிச் செய்திருந்தேனாயின் நலமாயிருக்கும்!

க. ஐயோ! இனிமேல் முடியாது—என்ன கஷ்டம்!

ச. ஏ கழுதை!—உள்ளே போகிறாயா இல்லையா?

க. கழுதையின் புருஷனுக்கு என்ன பெயரிட்டழைக்கிறார்கள்?

ச. இதோபார்! போ!—போகிறாயா என்ன?

க. ஐயோ! என்ன புருஷர்கள்! என்ன கொடுமையானவர்கள்! மூன்று முழுக்கு படுத்திவிட்டால் முற்றிலும் கலை துள்ளிபபோகிறது!
[உள்ளேபோகிறாள்.]

ச. ஒரு மனுஷனுக்கு தகுந்த பெண்சாதியிருக்கவேண்டும்! ஒரே பெண்சாதியைக் கட்டிக்கொண்டழுவதென்றால் எப்பொழுதும்!

மகம்மது சுல்தான் சாயபு ஒரு கையில்லாத ஒரு பெரியசாய்வு நாற்காலியைத் தூக்கிக்கொண்டுவந்து அதை அறையின் நடுவில்வைத்து அதன் மீதிருக்கும் தூசைத்தட்டுகிறான்.

ச. உடைந்து போயிருக்கிறதே இந்த நாற்காலி! இதை ஏன் கொண்டு வந்தாய்?

ம. எதி குடுத்தாங்க, அதி கொண்டாராங்கோ நம்போ, எஜமான்.

ச. வக்கீல் நாராயண ராவ் வீட்டிற்குப் போயிருந்தையா?

ம. ஆமா எஜ்மான்.

ச. முதுகுசுருத்தோல் அடித்திருந்த அந்த கருப்புமார நாற்காலி எங்கே?

ம. வக்கீல்சாப் அதுலே படுத்துகினு இந்தா; இத்தே நம்பள்கிட்டே குடுத்தான்!

ச. அப்படியா செய்தான்!—நல்லது—நல்லது!—நான்பார்க்கிறேன்! அதிருக்கட்டும், பெஞ்ச் எங்கே!

ம. பெஞ்ச் இல்லே இண்ணு சொன்னுங்கோ, எஜ்மான்.

ச. சரி!—பரவாயில்லை.

[நாற்காலியைப் பரிசோதித்துப் பார்த்து அதன்மீது சயனித்துக் கொள்ளுகிறார்.]

ராமாசாஸ்திரியும் குமாரசாஸ்திரியும் கையில் இரண்டு எலுமிச்சம்பழங்கள் எடுத்துக்கொண்டு வருகிறார்கள்.

ச. யார் அங்கே?

ரா. நாங்கள் பக்கத்துக் கிராமத்திலிருந்து வருகிறோம்.

ச. இதோ பார் சாயப்! இப்படிப்பட்ட மனிதர்களையெல்லாம் இந்த மாதிரி வரும்படி நீ விடக்கூடாது. என் உத்தர வில்லாமல் ஒருவரையும் உள்ளே விடாதே.

ம. இதான் மொதல் நாள் எஜ்மான். இப்பொ எஜ்மான் பிரியம் நம்பள்கி தெரிஞ்சி பூட்டான்—இனி மேலேக்கு நம்போ ரொம்ப ஜாக்கிரதையா யிருக்கிராங்க!

[வெளியே போகிறான்.]

இரண்டு சாஸ்திரிகளும் உட்கார ஏதாவது ஆசனமிருக்கிறதா என்று சுற்றிப்பார்த்து காணாமையால் நின்று கொண்டிருக்கின்றனர்.

ச. என்ன வேண்டும் உங்களுக்கு? என்ன வேலையாக வந்தீர்கள்?

கா. பக்கத்து கிராமம்—ஆத்தூரில் இருப்பவர்கள் நாங்கள்.

ச. சரி, இருந்தாலென்ன? எதற்காக இங்கே வந்தீர்கள்?

கா. இதுவரையில் துலுக்கர்களால் வியாபிக்கப் பட்ட இந்த பட்டணத்தில், இத்தனை காலம் பொறுத்து, இப்பட்டணத்துக்கு சிரேஷ்டனாக இந்த உத்தம பதவியில் பிராம்மணர் ஒருவரை ஏற்படுத்திய சுபமும் சந்தோஷமுமான இந்த சமாசாரத்தைக் கேள்விப்பட்டோம். தங்களுடைய நற்குணமும் சுபாவமும் உலகெங்கும் பிரசித்தியடைந்திருக்கிறது; சகல ஐஸ்வர்யத்திற்கும் பாக்கியத்திற்கும் தேவியாகிய லட்சுமிதேவி தங்களை அடைய வேண்டுமென்று நெடுநாள் காத்துக்கொண்டிருந்ததற்கு இப்பொழுது தான் சமயம் வாய்த்தது!

ச. உங்களைப் போன்றவர்களுடைய முகஸ்துதியால் நான் மோசம் போகும் மடையன் என்று எண்ணவேண்டாம் என்னை. எனக்கு இதற்கெல்லாம் சாவகாசமில்லை—எதற்காக என்னிடம் வந்தீர்கள்?

கா. நாங்கள் வேதாத்யயனம் செய்த பிராம்மணர்கள்.

[என்று சொல்லி "ஓம் ராஜாதிராஜாய" என்னும் ஸ்லோகத்தைப் பாட ஆரம்பிக்கிறார்கள்.]

ச. போதும் நிறுத்துங்கள்! இந்த அர்த்தமில்லாத விண் கதையெல்லாம் எனக்கு வேண்டாம்!—அதிருக்கட்டும்—நீங்கள் யாசகத்திற்குத்தானே வந்திருக்கிறீர்கள்?

கா. இல்லை—பணத்துக்காகவல்ல—ஒரு பிராம்மணப்பையனுடைய உயிருக்காக!

ச. ஏன்? அது என்ன சமாசாரம்?

கா. இந்த ராமாசாஸ்திரி என்னுடைய சிநேகிதர். இவருடைய தங்கையின் மகன். சில தினங்களுக்கு முன்பாக, ஒரு பறப்பையன் தன் வேலையைவிட்டு சிலோனுக்குப்

மாஜிஸ்டிரேட்

போகிறேன் என்று சொன்னதற்காக, அவனை ஒரு சின்ன தடியாலே ஒரு அடி அடித்தான், சும்மாக தடியாலெ, சும்மா அப்படி தொட்டான்; துர் அதிர்ஷ்டம் என்னவென்றால், அந்தப் பறப்பையன் கீழேவிழுந்து செத்துப் போய்விட்டான். அது ஏதோ அவன் பூர்வ ஜன்மத்தில் செய்த கர்ம விசேஷமாயிருக்க வேணும். அந்தப் பறப்பையனை தடியால் தொட்டதிற்காக, பிராம்மணனை விசாரணைக்குக் கொண்டுவந்து தூக்குப் போடப் போகிறார்களாம்.

ச. வியாஜ்யம் முடிந்துவிட்டதா? இன்னும் நடக்கிறதா?

கா. போலீஸ்காரர்கள் அதைப் பற்றி நிரம்ப பிரயத்னம் பண்ணிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு சில சாட்சிகள் கிடைத்தவுடன் உங்கள் கோர்ட்டின் முன்பாகத்தான் முதலில் விசாரணைக்குக் கொண்டு வரப்படுமாம் அது.

ச. ஆ! வியாஜ்யங்களைப்பற்றி என்னிடம் நீங்கள் வந்து பேசுவது நிரம்ப தப்பிதம்! இது ஒன்றிற்கே உங்களை ஜெயிலுக்கு அனுப்பிக்கவேண்டுமே! தெரியுமா உங்களுக்கு? ஆயினும் இந்த தரம் உங்களை மன்னிக்கிறேன்.

ஶா. பிறகு அந்தப் பிராம்மணப்பையன் கதி என்னவாகிறது?

ச. அதைப் பற்றி என்னிடம் மறுபடியும் பேச உங்களுக்கு எப்படித்தைரியம் உண்டாகிறது? பிரிடிஷ் ராஜாங்கத்தின் நியாயமானது எரிகின்ற சூரியனுடைய பிரகாசத்தைப் போன்றது! அது எல்லோரையும் கொளுத்தும், அது வித்யாசத்தையும் அறியாது, வித்யாசத்தையும் செய்யாது! அதற்கு ஜாதிபேதம், மதபேதம், ஜனபேதம் என்பதே கிடையாது!

கா. ஜாதிபேதமில்லாதது, ஜாதிக்கு பஹிஷ்காரமானதே! அன்றியும் நாங்கள் கொஞ்சம் கருணைக்காகவே யாசிக்கின்றோம்.

ச. கருணைக்காக யாசகந்தான்! போய் ஒரு மனுஷ்யனைக் கொன்று விடுவது, பிறகு கருணைக்கு யாசிப்பது!—அது மிகவும் கடுமையான குற்றமாச்சுதே!

ரா. எங்களுக்கு அது தெரியும்—அதற்காகத்தான்—

ச. அந்த பையனுக்கு ஏதாவது சொத்திருக்கிறதா?

கா. ஒரு காசுமில்லை.—பரமதரித்திரன்!

ச. பரமதரித்திரர்கள் பறையர்களைக் கொல்லக்கூடாது! உங்களுக்கு ஏதாவது சொத்திருக்கிறதா?

ரா. இல்லை! நாங்கள் வைதீகாள், மனுமாந் தாதாகால முதல் எங்கள் முன்னோர்கள் ஜீவித்தபடி நாங்களும் பிச்சையெடுத்து ஜீவனம் செய்து வருகிறோம்.

ச. போங்கள் வெளியே!—பிரயோஜனமில்லை!—பியூன்!

மகம்மது சுல்தான் சாயபு மறுபடி வருகிறான்

இந்தப்பிச்சைக்காரப் பார்ப்பார்களை வெளியில் தள்ளு!

கா. வேதங்களின் ஆசிர்வாதத்தை வெறுக்கும் படியான தைரியமுடைய ஒருவனை இது வரையில் நாங்கள் சந்தித்ததில்லை; நாங்கள் போகிறோம். இந்த இடத்தைவிட்டுப் போக எங்களுக்குவழி தெரியும்.—எங்கள் கோரிக்கை—

வீராசாமி வருகிறான்.

ச. சரி—பியூன் என்ன அது! கோபாலையங்கார் எங்கே?

வீ. அவருக்கு ஜுரமாயிருக்கிறதாம், அவர் இப்பொழுது வரமுடியாதாம்.

மாஜிஸ்டிரேட்

ச. ஆ! அது என்ன ஜாரம்? அவர் அப்படிச் சொன்னரா உன்னிடம்?

வீ. இல்லே எஜமான், அவர் வீட்டிலிருந்த யாரோ ஒரு அம்மா வெளியே வந்து சொன்னர்கள்.

ச. [நாற்காலியிருந்து எழுந்து] யாருக்குத்தெரியும்! ஒருவேளை உண்மையாயிருக்கலாம்.—உம்! நானே நேராகப் போய் அவனைப் பார்த்தாலோ? அது இன்னும் அவன் மனதில் அதிகமாக உறுத்தும்; நானும் ஏதோ மேல் மரியாதை காட்டினபடியாகும். சரி—சாயப்! எங்கே என் செருப்பு? கொண்டுவா இப்படி!

ம. அரே! நம்பள் ஷெர்ப்பு தூக்கறன்! இதுகி கூடம் வந்தூட்டான? அரே, நம்பள்கி இதுவரைக்கி ஓர்த்தர் கூட இப்படி உத்தரவு பண்ணயில்லே—கல்கட்டர் சாயபுகூட உத்தரவு பண்ணயில்லே இந்த மாதிரி!

ச. என்ன? என் செருப்பை நீ—உடனே—கொண்டுவருகிருயா இல்லேயா?

ம. நம்போ மாட்டான்!

ச. அப்படியா சமாசாரம்!

ம. நம்போ உங்கவேலேக்காரன் இல்லே—சர்க்கார்வேலேக்காரன்!

ச. ஆனல் உன்னே டிஸ்மிஸ் பண்ணி விடுவேன்!

ம. அந்த கஷ்டம் உங்கள்கி வேணும்!—இந்தாங்க—எடுத்துங்க இத்தே! [தன் பெல்டைக்கழற்றி கீழே எறிகிருன்.] அதோ! எடுத்துங்க!—இந்த வேலே நம்பள்கி வேணும்! என்னே என்ன நெனேச்சிங்கோ? ஹிந்து கூலிக்காரன் அல்லா நானு—உங்கள்கியே எய்வு வேலெ செய்ய! நம்போ முசல்மான் ஜாதி! நம்போ பேர் சுல்தான் சாயபு!

இந்த சுல்தான்பேட்டேலே நப்பொ தாதாகி தாதாகி தாதா ஆண்டாங்கோ! நப்பொவுடப்பிலே நவாப் ரத்தங்கி இருக்கரான்! வஹ்ஹா! நேத்து வந்த ஒரு பொம்மன் குமாஷ்டாகி ஷெர்ப் நம்பள் தூக்கரான்!—ஹூம்!

ச. [பயந்து திரும்பிப்பார்த்து அந்த இரண்டு சாஸ்திரிகளும் இன்னும் அங்கேயே இருப்பதைக் கண்டு] இந்த பிராம்மணுளை இங்கே யார் இருக்கச் சொன்னது?—போங்கள்!—போய்விடுங்கள்!

கா. வாரும்—ராமா சாஸ்திரி—நாம் போவோம்! ஸ்வாமி ஒருத்தர் இருக்கிருர்!

[இரண்டு சாஸ்திரிகளும் போகிருர்கள்.]

ச. சரிதான் வீராசாமி—நீயும் போகலாம் [வீராசாமி போய் கதவின் பின்னல் ஒளிந்து கொண்டு பார்த்து, கேட்கிருன்.] என்ன அது சாயபு? ஏன் நீ அவ்வளவு கோபித்துக் கொண்டாய்?

ம. கோபம்! இப்படி நம்பளே அவமானம் பண்ணப்போ, பொறுக்கராங்க இண்ணு நினைக்கிரா எஜ்மான்?

ச. வாஸ்தவமா—நான்—நான் வீராசாமி தான் என் செருப்பைக்கொண்டுவர வேண்டுமென்று எண்ணினேன், உன்னை அவமானம் செய்ய எண்ணவில்லை.

[கதவின் பின் புறத்திலிருந்து ஓ! ஓ! என்கிற சப்தம் கேட்கிறது.]

ம. ஆனு எஜ்மான் நப்பள்கி உத்தரவு பண்ணுங்கோ?

ச. ஆ! இதோபார்!—இதற்கெல்லாம் கோபித்துக்கொள்ளாதே! [கீழே கிடக்கும் பெல்டை எடுத்து அவனிடம்கொடுத்து] இதை வாங்கிப் போட்டுக்கொள் மறுபடியும்.

ம. [ஒரு கையால் அதை வேண்டாவெறுப்புடன் வாங்கிக்கொண்டு] எஜ்மான்கி சந்தோஷம் கோசரம் நம்பொ இத்தெ திருப்பிவாங்கிராங்கொ!

ச. அதற்கு சந்தேகமென்ன! ஆயினும், என்னதான் நீ சொல்ல வேண்டியிருந்த போதிலும், அன்னியர்களுக் கெதிரில்—விராசாமிகூட—இருந்தபொழுது,—நீ அம் மாதிரி நடந்து கூச்சல் போட்டிருக்கக்கூடாது.

ம. நம்போ என்ன செய்ராங்க எஜமான்? அந்த பேஷ் கேட்ட உடனே நம்போ ரத்தம்கி கொதிச்சிபூட்டான்!

ச. போனது போகட்டும் நடந்ததை நாமிருவரும் மறந்து விடுவோம்—வேறொருவருக்கும் இது தெரிய வேண்டாம் —நான் சொல்வது தெரிகிறதா?

ம ஆமா எஜமான்.

ச. அந்த டபேதார் லீவ் வாங்கிக்கொண்டுபோகப்போகிறுன் என்று கேள்விப் படுகிறேன். எப்பொழுது போகப்போ கிறுன் தெரியுமா?

ம. அதைபத்தி நம்போ கேள்விபடலே எஜமான்.

ச. இன்றிரவு நான் வெளியே போகமாட்டேன் என்று நினைக்கிறேன்—நீ வீட்டிற்குப் போகலாம்.

ம. சலாம் எஜமான்.

ச. சலாம் [சுல்தான் சாயப் போகிறுன். கிருஷ்ணசர்மா ஆலோ சனையில் மூழ்கினவனுய் இங்கும் அங்கும் உலாவுகிறுன்; வெளி யில் கொஞ்சம் கெக்கலி நகைப்பு சப்தம் கேட்கிறது.] உம்! சுல்தான் பேட்டை என்னைப் பற்றி நகைக்கிறதா என்ன இதற்குள்ளாக?

திரை இறங்குகிறது.

இரண்டாம் அங்கம்

முதற் காட்சி.

இடம்:—சுல்தான் பேட்டைக் கருகாமையிலுள்ள ஒரு சோலை, இவ்விடம் டிஸ்டிரிக்ட் கலெக்டர் மிஸ்டர் ஹெட்ஸ்ட்ராங் ஐ. சி. எஸ். கூடாரம் அடித்திருக்கிறார்.

காலம்—சாயங்காலம்.

கலெக்டர் மனைவி, தேத்தண்ணீரைக் கோப்பையில் வார்த்துக்கொண்டிருக்கிறாள், கலெக்டர் காம்ப் சாய்வு நாற்காலியில் சாய்ந்து கொண்டிருக்கிறார். கொஞ்சம் தூரமாக சேத்துப்பட்டு கிருஷ்ணசர்மா மரியாதையுடன் நின்று கொண்டிருக்கிறான். இரண்டொரு கொலைகளும் சில பழங்களும் தேமேஜையின் பேரில் வைக்கப்பட்டிருக்கின்றன.

க. ஆம், மிஸ்டர் சர்மா, கூடாரம் அடிப்பதற்கு இது நல்ல அழகான சோலைதான்; முன் வருஷங்களில் கோயில் தர்ம கர்த்தா இங்கே என் கூடாரம் அடிப்பதற்கு ஆட்சேபணை செய்தார்—அப்படித்தான் உன் வேலையில் உனக்கு முன் இருந்தவன் சொல்லிக்கொண்டிருந்தான். இம்முறை இதற்கு இணங்கும்படி எப்படிச் செய்தாய்?

ச. முன்னிருந்த தர்ம கர்த்தா படித்த ஆசாமி, துரையவாள், இப்பொழுது அவர் இறந்து போய்விட்டார், ஒரு பெண் சாதியையும் ஒருமைனர் பிள்ளையையும் விட்டு விட்டு.

க. ஆனால் இவ்விடத்தில் கூடாரத்தை நீ அடிக்கும்படி விட்டது சரியல்லவென்று நினைக்கிறேன். அவர்களுடைய உத்தரவு பெற்றாயா நீ?

ச. ஆட்சேபமில்லாமல், துரையவாள்.

மாஜிஸ்டிரேட்

க. ம. மிஸ்டர் தாசில்தார், அந்த பெரிய மீன் எங்கிருந்து கிடைத்தது உமக்கு? அது மிகவும் நன்றாயிருந்தது.

ச. என்னுடைய நிலங்களிலிருந்து வந்தது.

க. ம. உம்முடைய நிலத்திலிருந்தா? அது எங்கே யிருக்கின்றது?

ச. சேலத்திலிருந்து இருபது மைல் வண்டிமார்க்கமாய்ப் போகவேண்டும்.

க. அது என்ன கிராமமா? அந்த இடத்திற்குப் பெயரென்ன? நாங்கள் காலையில் சாப்பிட்டது உப்புநீர் மச்சமல்லவோ? உன் நாட்டிலிருந்து அது எப்படி கிடைத்திருக்கும்?

ச. மீன்களைப்பற்றியாவது அவைகளைப் பிடிப்பதைப்பற்றியாவது எனக்கு ஒன்றும் தெரியாது துரையவாள். என்னுடைய மணியகார் சொன்னார் துரையவாள்.

[கலெக்டர் மனைவி கலெக்டருக்கு ஒரு கோப்பைத் தேத்தண்ணீர் கொடுக்கிறாள்.]

க. [அதை ருசிபார்த்துக் கொண்டே] அந்த மாம்பழங்கள் கூட மிகவும் ருசியாயிருந்தன. அவைகள் எங்கே கிடைத்தன உனக்கு? இது மாப்பழக்கால மல்லவே?

ச. என்னுடைய தாயாதி ஒருவன் மைசூரிலிருக்கிறான் துரையவாள், அவன், அதிர்ஷ்ட வசத்தால், நேற்றுதான் ஒரு கூடை மாம்பழம் அனுப்பித்தான்.

க. ம. நீர் எதையும் சாதிக்கவல்ல கெட்டிக்காரரான தாசில்தார்.

க. அவர் இப்பொழுது சப் அசிஸ்டெண்ட் மாஜிஸ்டிரேட்டாகத்தானிருக்கிறார், கண்ணே.

க.ம. நான், அவரை உடனே நீர் தாசில்தாரராகச் செய்ய வேண்டுமென்று நினைக்கிறேன். இப்படிப்பட்ட புத்தி சாலிகளான சுருசுருப்புள்ளவர்களுக்கு உயர்ந்த உத்தியோகங்கள் கொடுக்காது கஷ்டப் படச்செய்வது அவமானம் ஆகும்!

க. ஆ! கொஞ்ச நாளைக்கு முன்புதானே அவருக்கு அறுபது ரூபாய் சம்பளம் கொடுத்தோம்—பதினைந்து நாள் கூட இராது—அல்லவா? அதற்குமுன்பாக அவர் பதினைந்து ரூபாய் சம்பளம் வாங்கிக்கொண்டிருந்த குமாஸ்தாவாகத் தானிருந்தார்.

க.ம. அப்படியா? அது எனக்குத் தெரியாது, இந்த நல்ல சமாசாரத்தைக்கேட்க சந்தோஷப்படுகிறேன் மிஸ்டர்—

க. சர்மா—

க.ம. சர்மா.

க. வாஸ்தவத்தில் அந்த ஆபீசில் அவருக்குமேல் இருந்த சுமார் பன்னிரண்டு குமாஸ்தாக்களை விட்டுவிட்டு இவருக்கு இந்த வேலை கொடுத்தோம்.

க.ம. அதை எப்படிச் செய்தீர்? அது பெரிய அநியாயம் அல்லவா?

க. இதைத்தான் நாங்கள் ஸ்திரீகளுடைய நியாயம் என்று கூறுவது! உடனே அவருக்கு ஏன் தாசில்தார் வேலை கொடுக்கவில்லை யென்று சற்று முன்பாகத்தான் நீ என் மீது குறை கூறிக்கொண்டிருந்ததாக அல்லவோ எண்ணினேன்.

க.ம. இந்த விஷயங்களெல்லாம் எனக்கு எப்படித் தெரியும்!—மிஸ்டர் சர்மாவுக்கு இந்த உத்யோகம் கொடுத்தது தகுந்ததுதான் என்று நான் நிச்சயமாய் நினைக்கிறேன்.

க. அதிருக்கட்டும், மிஸ்டர் சர்மா, நீ இந்த கிரமினில் ஹையர் பரீட்சை தேறினதைப்பற்றி என்னவோ காபுரா பண்ணிக்கொண்டிருக்கிறார்களே என்ன அது? அதைப் பற்றி நீ ஏதாவது கேள்விப்பட்டாயா?

ச. [கலவரப்பார்வையுடன்] இல்லை துரையவாள்!—ஒன்று மில்லை—ஒருவார்த்தையும் கேள்விப்படவில்லை—என்ன சமாசாரம் என்று கேட்கலாமோ நான் துரையவாளை?

க. எனக்குத் தெரியாது. கைபொப்பம் போடாத ஏதோ பெடிஷனாயிருக்கவேண்டுமென்று நினைக்கிறேன்—இது சாதாரணம்தானே!—முதல்வகுப்பில் முதலாக நீ தேறினதாகச்சொன்னதாக ஞாபகமிருக்கிறது எனக்கு, அல்லவா?

க. ம. அப்படியா? அப்படித்தானிருக்கவேண்டுமென்று நானும் நினைக்கிறேன்.

ச. ஆம் துரையவாள்.

க. அப்படியானால், இந்த ரெவின்யுபோர்டில் இருக்கப்பட்டவர்கள் இந்த காபுரா எல்லாம் ஏன் பண்ணுகிறார்கள்? உனக்கு யாராவது விரோதிகள் இருக்கிறார்களா?

ச. ஆபீசில் இருப்பவர்களெல்லாம் எனக்கு விரோதிகள் தான் என்று துரையவாளுக்குத் தெரியுமே.

க. ஆ!—ஆமாம்—அதை மறந்தேன்—அது தான் அதற்குக் காரணம்.

ச. வேறென்ன இருக்கப்போகிறது துரையவாள்?

க. அந்தப் பரீட்சைக்கு நீ மிகவும் கஷ்டப்பட்டு படித்திருக்கவேண்டும்.

ச. அதற்கு சந்தேகமென்ன? அப்படித்தான் செய்தேன் துரையவாள்—உண்மையைக் கூறுமிடத்து—என்னைப்

பற்றி நானே புகழ்ச்சியாகச் சொல்லிக் கொள்ளக் கூடாது—ஒரு புஸ்தகத்தை நான் ஒருமுறை படித்த போதிலும் எல்லாம் ஞாபகம் இருக்கிறது எனக்கு—சில வேளைகளில்.

க. ஆமாம்! பரீட்சைகளில் தேறுவதில் சிலருக்கு சுபாவமாக கெட்டிக்காரத்தன மிருக்கிறது.

க. ம. நான் படிப்பது ஒன்றும் என் ஞாபகத்திலிருப்பதில்லை. நான் ஏதாவது பரீட்சைக்குப் போனால் கடைசிவகுப்பில கடைசியாகக்கூட நான் தேறமாட்டேன் என்று நினைக்கிறேன்!

க. தற்காலத்திய ஸ்திரீகள் உடுப்புகளைப் பற்றி எவ்விதமான கஷ்டமான பரீட்சைவைத்த போதிலும் அதில் நீ தேறாமற் போவாயா என்ன கண்ணே?—தேறமாட்டாய் நீ?

க. ம. விளையாடாதே ஜான்!

க. இதோபாரும், மிஸ்டர் சர்மா, இந்த வருஷத்திய கிரிமினல் ஹையர் பரீட்சகர்களுக்குள் உன்னுடைய பந்துக்கள் யாராவது இருக்கிறார்களா? நேர்வழியில் நீ அந்தப் பரீட்சையில் தேறியிருக்க முடியாதென்று அவர்கள் ஏன் சந்தேகப்பட வேண்டும்?

ச. பந்துக்களா துரையவர்கள்? இந்த உலகத்திலெல்லாம் எனக்கு ஒருவரும் பந்துக்கள் இல்லை என்னுடைய கிழவியான தாயாரும், சின்ன பெண் என்பெண்சாதியும் தவிர.

க. ஆயின், உன்னைப்பற்றி ரகசியமாக ஒரு ரிபோர்ட் அனுப்பும்படி அவர்கள் கேட்டிருப்பதின் அபிப்பிராயம் என்ன?

ச. ஸ்வாமிக்குத்தான் தெரியும், துரையவாள் — துரையவாளுக்குத் தெரிந்தபடி அவ்வளவும் பொருமையன்றி வேறொன்றுமில்லை.

க. ம. அத்தனை பெயர்மீது நீர் தாண்டிப் போகப்பிரயத்னப் பட்டதனால், உங்கள் மீது நீங்களே இதைவரவழைத்துக்கொண்டிருக்க வேண்டும்.

ச. இல்லை அம்மா — நான் தாண்டவில்லை, துரையவாள் தான் என்னைத் தூக்கிவிட்டார்.

க. அவர்களையெல்லாம் விட்டு உனக்கு இந்த வேலையைக் கொடுத்ததினால், சில குமாஸ்தாக்கள் செய்யும் சில்மிஷம் இது என்று எழுதித்தெரிவிக்கிறேன். இதற்குள், உன்னுடைய ஆபீசில் உனக்கு விரோதமாக கைபொப்பமில்லாமல் எழுதியது யாராயிருக்கக்கூடும் என்று விசாரித்துக் கண்டுபிடி.

ச. அப்படியே துரையவாள். நான் கண்டுபிடிக்கிறேன் துரையவாள். நான் சந்தேகிப்பது—

க. யார், சொல்லும் எனக்கு?

ச. அந்த, ஹெட்க்ளார்க் கோபாலையங்கார்— துரையவாள்; ஆயினும் நான் விசாரித்துக் கண்டுபிடிக்கிறேன்.

க. ஆம்—செய். நாழியாகிறது மிஸ்டர் சர்மா—பூராவாக மூன்று மயில் இருக்கிறதே. உனக்கு வண்டியிருக்கிறதா? நீ நடந்து தான் போகவேண்டுமென்று நினைக்கிறேன்.

ச. நான் வெகுசீக்கிரத்தில் போய்ச்சேர்வேன் துரையவாள்.

க. போய்வா. குட்ஈவ்னிங்!

ச. நான் உத்தரவு பெற்றுக் கொள்ளுகிறேன் துரையவாள்— அம்மாளுக்கு, ஏதாவது நான் அனுப்பிக்க உத்தரவு உண்டோ?

ஜ. ம. வேண்டாம், உங்களுக்கு வந்தனம் மிஸ்டர் சர்மா— இங்கே எங்களுக்கு வேண்டியது எல்லாம் இருக்கிறது— குட்பை! போய்வாரும்.

[சர்மா, கலெக்டருக்கும் அவர் மனைவிக்கும் தாழ்ந்து சலாம் போட்டு விட்டு போகிறான்.]

ச. [போகும் பொழுது பாரம் நீங்கினவன்போல் பெருமூச்சு விட்டு] என்ன வருகிறதோ என்று பயந்தேன்!—இதுவரைக்கும்—தப்பினேன்!—ஸ்வாமியின் அருளால்!

திரை இறங்குகிறது.

மூன்றாம் அங்கம்

முதற் காட்சி.

சேத்துப்பட்டு கிருஷ்ணசர்மாவின் புதியவீட்டில் ஓர் அறை. ஒரு புறம் ஒருகட்டில் போட்டிருக்கிறது; மற்றொரு புறம் ஆபீஸ் மேஜை ஒன்றிருக்கிறது; அதன்பேரில் ஒரு கெரொசின் ஆயில் விளக்கெரிந்து கொண்டிருக்கிறது; மேஜையைச் சுற்றிலும் மூன்று நான்கு நாற்காலிகள் இருக்கின்றன; சேத்துப்பட்டு கிருஷ்ணசர்மா ஒரு சாய்வு நாற்காலியில் சாய்ந்து கொண்டு, மிகவும் கலங்கினவராயும் கவலையுள்ளவராயும் இருக்கிறான்.

அவரருகிலுள்ள ஒரு நாற்காலியில் கோபாலையங்கார் உட்கார்ந்திருக்கிறார்.

காலம்:—கடந்த காட்சிக்குப்பதினான்கு நாள் பிறகு.

ச. உண்மையைக்கூறுமிடத்து, உம்மை நம்பலாமா, கூடாதா என்று எனக்குத் தெரியவில்லை. என்மனமெல்லாம் ஏதோ குழப்பமாயிருக்கிறது.

கோ. உலகத்தை ஒவ்வொருவனும் தன்னைக் கொண்டு அளக்கின்றான். நீர் எனக்குக் கெடுதி செய்தீர், ஆகவே நான் உமக்கு நன்மை செய்யக கூடும் என்று உம்மால் நம்ப முடியவில்லை. இது எனக்கு ஆச்சரியத்தைத் தரவில்லை.

ச. நீரே அந்த வாரண்டை நேராகப்பார்த்ததாகவா சொல்லுகிறீர்?

கோ. ஆம்—நானே பார்த்தேன். நீர் எனக்குக் கெடுதிசெய்தபடியால், நான் உம்மைப்பகைவனகப்பாவித்து, இதை உமக்குத் தெரிவிக்கவுமாட்டேன், உம்மைத்தப்பும்படி உதவி செய்யவுமாட்டேன் என்று நினைத்து, அதை எனக்குக் காண்பித்தார்கள்.

ச. சென்னபட்டணத்திலிருந்தா அது வந்தது? எந்த பிரிவுகளின்கீழ் குற்றம் சாற்றியிருந்தது?

கோ. மூன்று நான்கு பிரிவுகளின் கீழ் குற்றம் சாற்றியிருந்தது. நான் ஜாக்கிரதையாக அவைகளை குறித்துக்கொள்ள வில்லை—எங்கு நான் அவர்கள் மனதில் சந்தேகத்திற்கு இடங்கொடுக்கிறேனோ என்று.

ச. உங்களிடம் கொஞ்சமேனும் சிநேகம் பாராட்டாத என்னிடம், நீர் இவ்வளவு சிநேகம் பாராட்டும்படியான காரணம் என்ன?

கோ. குறைந்த பட்சம் இரண்டு காரணங்களாவது இருக்கின்றன—நான் தலைவிதி என்று ஒன்று உண்டென நம்புகிறேன், அதனால்தான் நாமிருவரும் விரோதமாயிருப்பது என்று எப்பொழுதும் நம்பியிருந்தேன்.

ச. மற்றொருகாரணம்?

கோ. உம்முடைய கிழவியான தாயாருக்காகவும் இளவயதுடைய மனைவிக்காகவும் பரிதாபப் பட்டேன். ஏதாவது மிகவும் கெடுதியாகச் சம்பவிக்குமாயின் அவர்கள் கதி என்னவாவது? என்ன உலகம் இது! சரியான தண்டனையானது எப்பொழுதும் குற்றஞ் செய்யாதவர்கள் மீது விழுகிறது! ஆகவே காலமிருக்கும் பொழுதே இதை உமக்கு முன்பாகத் தெரிவித்தேன்—பிராம்மணனுக்கு மரணத்தை விடகேடான கதியினின்றும் எப்படியாவது தப்புவீரென்று.

ச. உம்முடைய நற்குணத்தை நான் என்னென்று சொல்வேன்! இப்படிப்பட்ட நற்குண வானுடைய பட்சத்திற்கு நான் எப்படி பாத்திரனாவேன்!

கோ. இப்பொழுது காலதாமதம் செய்வதற்கில்லை, நான் இங்கு தங்கும் ஒவ்வொரு நிமிஷமும் எனக்கே கெடுதியை உண்

டாக்கிக் கொள்ள இடங்கொடுப்பதாகும்.

[போக எழுந்திருக்கிறார்.]

ச. நான் என்ன செய்ய வேண்டு மென்கிறீர்? எனக்கு எல்லாம் கலவரமாயிருக்கிறது. என்னவென்றாலும்—நான் அப்பரீட்சைக் கேள்வி காகிதங்களை திருட வில்லையே?

கோ. ஆம் வாஸ்தவம், நீர் திருடவில்லை—ஆயினும் வினையின் விளைவு இப்படித்தான். போம்—ஓடிப்போம்!—புதுச்சேரிக்காவது—எங்கேயாவது! உம்முடைய பெயர் நடையுடைபாவனைகள் எல்லாவற்றையும் மாற்றிக்கொள்ளும். பிறகு, சில வருஷங்கள் கழிந்தபின்—ஒரு வேளை எல்லாம் சரியாகப் போகலாம்.

ச. என் தாயாரையும் பெண்சாதியையும் யார் பார்த்துக் கொள்வார்கள்?

கோ. இதற் கெல்லாம் காலமில்லை! இந்தக்ஷணம் அவர்கள் இங்குவந்தாலும் வந்து விடுவார்கள்!—நான் போய்விடுகிறேன்.

[இந்தப்புறம் அந்தப்புறம் பார்த்து போகப்புறப்படுகிறார்.]

ச. [கலக்கத்துடன்] கொஞ்சம் பொறும்!—கொஞ்சம் நிமிஷங்கள்! இதெல்லாம் உண்மைதானா? அல்லது என்னை ஏதாவது ஏமாற்றுகிறீரா? சொல்லும்—உண்மையைச் சொல்லும்!—ஈசன் மீதாணை! ஈசன் ஒருவன் இருப்பதாக நீர் நம்புவதானால்!

[வீட்டின் வெளிக்கதவைத் தட்டுகிற சப்தம் கேட்கிறது.]

கோ. [மெல்லிய குரலுடன்] அதோ வந்து விட்டார்கள்! ஐயோ! என் கதி என்னவாவது! புழக்கடை வழியாக சங்காசாரியார் வீட்டிற்குள் ஓடிப்போய் அங்கிருந்து பக்கத்துத்

தெருவிற்குப் போய்விடுகிறேன். வாரும்கூட!—ஜெயிலுக்குப் போக இஷ்டமில்லாவிட்டால்!

[பின்கதவு பக்கம் ஓடிப்போகிறார்.]

ச. இந்த திருட்டுப்பயல்செய்த சூதாயிருக்கும் இதெல்லாம், என்னைத்தன் வழியினின்றும் நீக்கிவிட! ஆயினும், ஒருவேளை அவன் உண்மையை உரைத்திருந்தாலும் இருக்கலாம். அப்படியாயின் என்கதி என்னவாவது? [வீட்டின் முன்கதவில் தட்டுகிற உரத்த சப்தம்] ஆ! ஐயோ!—நான் திறந்து பார்க்கவா? அல்லது யார் அது என்று கேட்கவா?

ருக்மணியும் கனகவல்லியும் வீட்டின் உள்ளறையிலிருந்து வருகிறார்கள்.

ரு. வெளியே யாரடா பையா அது அப்படி தட்டுகிறது? நீ கேட்கவில்லையா? வேலைக்காரர்களெல்லாம் எங்கே போய்விட்டார்கள்?

க. பெரியகும்பலாக ஏதோ வெளியில் இருக்கிறாற் போலிருக்கிறது. யாரோ கதவை உடைத்துவிடும்படி உத்தரவு செய்ததை இப்பொழுது நான் கேட்டேன். இதோ பாரும்! என் உடம்பெல்லாம் பயத்தால் நடுங்குகிறது! என்ன காரணத்தால் என்று சொல்லமுடியவில்லை!

ச. அவர்களாகத் தானிருக்கவேண்டும்!அம்மா—அவர்கள் என்னைப் பிடித்துக்கொண்டு போக வந்திருக்கிறார்கள்! [வெளியில் கதவை உடைக்கிற சப்தம்] அதோ வந்துவிட்டார்கள்!—நான் ஓடிப்போகிறேன்—போகிறேன்—உங்களைப் பார்த்துக் கொள்ளுங்கள் இரண்டுபெயரும்—என்னை மறந்துவிடுங்கள்!

[புழக்கடை கதவுபக்கம் ஓடிப்போகிறான்.]

ரு. இதென்ன இதெல்லாம்? அவனுக்கென்ன பயித்தியம் பிடித்துவிட்டதா என்ன?

[கதவு கீழே விழுகிற சப்தம்.]

மாஜிஸ்டிரேட்

போலீஸ் இன்ஸ்பெக்டர், கான்ஸ்டேபில்கள், பெரிய கும்பல் பின்தொடர வருகிறார்கள்; கனகவல்லி உள் அறைக்கு ஓடிப்போகிறாள்.

ரு. என்ன இதெல்லாம் சமாசாரம்?

போ இ. சொல்லுகிறோம் சீக்கிரம் உங்களுக்கு. கிழவி, எங்கே உங்கள் பிள்ளை?

ரு. ஏதோ கூச்சலைக் கேட்டு அடுப்பங்கரையிலிருந்து இங்கு நான் வந்தேன். என் பிள்ளை இங்கு இருந்தான் என நினைத்தேன். எங்கே போயிருக்கக் கூடும் அவன்?

போ இ. வீடுமுழுதும் நாங்கள் சோதனை போடவேண்டும்.

ரு. என்ன! உங்களுக்கு அவ்வளவு தைரியமிருக்கிறதா அப்படிச்சொல்ல? என் வீட்டையா சோதனை போடப் போகிறீர்கள்! உங்களுக்கென்னவேலை இங்கே?

[புழக்கடை பக்கமிருந்து ஒரு கான்ஸ்டெபில் கிருஷ்ணசர்மாவை கையில் பிடித்துக் கொண்டு வருகிறான். கும்பலிலிருந்து கூச்சல் "அதோ! அதோ! அதோ இருக்கிறார்; பிடித்துக்கொண்டார்கள் ஆசாமியை!" என்று கிளம்புகிறது.]

போ இ. ஆ! அது தான் சரி!

ச. எல்லாம் தப்பு என்று சீக்கிரம் உமக்குத் தெரியும்! என்னைத் தொடுவதற்கு உங்களுக்கென்ன அதிகாரம்?

போ இ. மாஜிஸ்டிரேட் அவர்களுக்கு, போலிஸ்காரர் வாரண்டில்லாமல், தப்போ சரியோ, ஒன்றும் செய்வதில்லையென்று நன்றாய்த்தெரியுமே!

ச. உம்!—எதைப்பற்றி இது எல்லாம்?

போ இ. வாஸ்தவமாய் மாஜிஸ்டிரேட் அவாளுக்கு ஒன்றும் தெரியாது பாவம்! அதனால்தான் மாஜிஸ்டிரேட் அவாள் புழக்கடைசுவர் ஏறிக்குதிக்கப் பார்த்தீர்—எங்கேயடா பிடித்தாய் இவரை?

ச. அகஸ்மாத்தாய் சரியாக அச்சமயம் அங்கிருந்தேன். தெரிவின் திருப்பத்தில் யாரோ ஓடுவதைக்கண்டேன்; ஒருவேளை இவராக இருக்கலாம் என்று சந்தேகித்தேன்; ஆயினும் அதிர்ஷ்ட வசத்தால் வேறொருமனிதனை நான் பின் தொடரவில்லை; ஒரு நிமிஷம் தாமதித்திருப்பேனு யின் ஆசாமி டும்கி கொடுத்திருப்பார்; மாஜிஸ்டிரேட் அவாளை அந்த எல்லைச்சுவரினின்றும் இறங்கிவர நான் ஒத்தாசை செய்தேன் என்பதை மாஜிஸ்டிரேட் அவாளே இப்பொழுது ஒப்புக்கொள்வார்.

போ இ. உம்! நினைத்தேன்! போகலாம் வாருங்கள்.

ச. எங்கே? எனக்குத் தெரியவேண்டும் என்னைத்தீண்டாதிர்கள்! நான் எங்கே வரவேண்டுமென்று சொல்லுங்கள், நாளுகவருகிறேன்.

போ இ. இந்த விஷயங்களை யெல்லாம் பற்றி இத்தனை பெயர் எதிரில் நாம் பேசவேண்டுமோ?

ச. சரி—உங்களுக்கு எங்கே கொண்டுபோக இஷ்டமோ அங்கே கொண்டு போங்கள் என்னை! அதிக நேரம் என்னைக்கட்டுப்படுத்திவைக்க முடியாதுங்களால்!

போ இ இரண்டுவருஷங்கள் தான்!

ச. அதற்கப்புறம்—அதற்கப்புறம்—நான் சுயராஜ்யக் கட்சியைச் சேர்ந்து, உங்களையும் உங்கள் கவர்ன்மெண்டையும் ஆட்டிவைக்கிறேன் பாருங்கள்!

[போலீஸ் இன்ஸ்பெக்டர் கிருஷ்ணசர்மாவின் கரத்தைப் பிடித்துக்கொண்டு வீட்டிற்கு வெளியே அழைத்துப் போகிருர்; கான்ஸ்டெபில்களும், மற்றவர்களும் பின்தொடர்கிருர்கள்.]

திரை இறங்குகிறது.

நாடகம்முற்றியது

FARCES

IN TAMIL

BY

RAO BAHADUR P. SAMBANDAM, B.A., B.L.

AUTHOR OF:

"Simhalanathan, Amaladitya, Merchant of Vanipura, Magapathi, As you like it, Manohara, Lord Buddha, Harischandra, Ratnavali, The Two Friends, The Two Sisters, True Love or Sundari, Vijiarangam, The Eye of Love, Pushpavalli, Blind Ambition or Satrujit, The Bandit Chief, The Wedding of Valli, The Dancing Girl, Subhadra - Arjuna, The Golden Fetters, The Surgeon Genl.'s Prescription and Vichu's Wife, The Point of View and The Two Selves, The Demon Land, Markandeya, Vikramorvasi, Galava, Fate and Love or Yayathi, Sarangadhara, Siruthondar, The Fair Ghost, The Tragedy of Silence or The Rajput Hero, The Good Fairy, Gita Manjari, Part I, As we sow—so we reap, The Curse of Oorvasi, Chandrahari, Sabapathi Part I The Pongal Feast or Sabapathi Part II, A Rehearsal or Sabapathi Part III, Blessed in a Wife, Karna The Giver, Sahadeva's Stratagem, Bricks Between & At any Cost, Sakuntala, Malavikagni-mitram

IN TAMIL"

HARISCHANDRA AND YAYATHI IN ENGLISH.

SECOND EDITION

PRINTED BY

THE BRITANNIA PUBLICITY CO.,

MADRAS.

1930

ALL RIGHTS RESERVED.

PRICE PER COPY RE. 0-10-0.

உ

பிரஹஸனங்கள்

இவை

ராவ் பஹதூர்

ப. சம்பந்த முதலியார், பி. ஏ., பி. எல்.

அவர்களால் இயற்றப்பட்டன.

இந்நூலாசிரியரால் இயற்றப்பட்ட மற்றத் தமிழ் நாடகங்கள் :—

"லீலாவதி-சுலோசனை, கள்வர் தலைவன், மனோஹரன், இரண்டு நண்பர்கள், சாரங்கதரன், நற்குல தெய்வம், சத்ருஜித், யயாதி, மார்க்கண்டேயர், விஜயரங்கம், காதலர் கண்கள், பேயல்ல பெண் மணியே, தாசிப் பெண், மெய்க்காதல், பொன் விலங்குகள், மகபதி, விரும்பிய விதமே, சிறுத்தொண்டர், காலவரிஷி, வாணீபுர வணிகன், ரஜபுத்ரவீரன், ஹரிச்சந்திரன், ரத்னாவளி, புஷ்ப வல்லி, கீதமஞ்சரி, சிம்ஹளநாதன், ஊர்வசியின் சாபம், அமலாதித்யன், சபாபதி முதற் பாகம், பொங்கல் பண்டிகை அல்லது சபாபதி இரண்டாம் பாகம், ஓர் ஒத்திகை அல்லது சபாபதி மூன்றாம் பாகம், வள்ளி மணம், முற்பகற் செய்யின் பிற்பகல் விளையும், புத்த அவதாரம், வேதாள உலகம், மனைவியால் மீண்டவன், சந்திரஹரி, சுபத்திரார்ஜுனா, கொடையாளி கர்ணன், சகதேவன் சூழ்ச்சி, இடைச்சுவர் இருபுறமும், என்ன நேர்ந்திடினும், சர்ஜன் ஜெனரல் விதித்த மருந்து விச்சுவின் மனைவி, மாளவிகாக்னிமித்ரம், சகுந்தலை, விக்கிரமோர்வசி, நோக்கத்தின் குறிப்பு, இரண்டு ஆத்மாக்கள், முதலியன."

———

இரண்டாவது பதிப்பு.

———

சென்னை

பிரிடானியா பப்ளிசிடி கம்பெனியாரால்

அச்சிடப்பட்டது.

1930.

காபி ரைட்.] [விலை அணா 10

INSCRIBED

TO

THE BELOVED MEMORY OF

MY PARENTS

P. VIJIARANGA MUDALIAR

AND

P. MANICKAVELU AMMAL

AND

MY FRIEND

C. RANGAVADIVELU.

PREFACE

I am afraid that even the most bigoted lover of Tamil Literature, must confess, that there is nothing in it, corresponding to the English "Farce." In fact I have to translate the word Farce, by a Sanskrit word "Prahasanam." No doubt Samskrit Literature can boast of a few Farces. But some of them which have come down to us, are obviously so obscene, that the Police authorities would come down upon any body performing same.

In this small book, I have printed three specimens of Farces. The first entitled "Prince Koneri" is a rough adaptation of the robbery incident in Henry IV. The Second Farce, entitled "The Search" is from my own imagination; I may mention here that I have used it as an interlude to my drama entitled "The Good Fairy." The third, I give as a specimen of a Farce in vogue in the Indian Professional stage of the present day but shorn of all obscenity.

I have to warn all Societies, professional and amateur, against staging these Farces, or any drama of mine, without my previous permission in writing, as by doing so, they render themselves liable to be prosecuted both criminally and civilly. All Societies have to pay a small royalty for each performance of my drama, beforehand.

PAMMAL LODGE.

THE AUTHOR.

கோனேரி அரசகுமரன்

நாடக பாத்திரங்கள்

கோனேரி	....	ஓர் யாதவ அரசகுமரன்.
பாலஸ்தம்பன்	....	கோனேரியின் நண்பன்.
பணையன், பரதன், பெத்தன், காடலன்	....	யாதவ இழி ஜனங்கள்.

பிரயாணிகள், சத்திரத்து பிராம்மண ஸ்திரீ, கொத்தவால் முதலியோர்.

இடம். முதற் காட்சி.—*சிங்களம் அரண்மனையிலோர் அறை.*

இரண்டாம் காட்சி.—*கடகமலைக்குப் போகும் பாதை.*

மூன்றும் காட்சி.—*கிழக்கு சத்திரத்தில் ஓர் அறை.*

கோனேரி அரசகுமரன்

முதற் காட்சி.

இடம்—சிங்களம் ; அரண்மனையில் ஓர் அறை.

கோனேரி இளவரசனும், பாலஸ்தம்பனும் வருகிறார்கள்.

பா. அப்பன், கோனேரி, என்ன மணியிருக்கும் இப் பொழுது ?

கோ. காலையில் எழுந்தால் காடி சாராயத்தைக் குடிப்பதும், கண்டதை யெல்லாம் தின்பதும், பிறகு கும்பகர்ணனைப் போல் குறட்டைவிட்டுத் தூங்குவதும் தவிர வேறு வேலை யில்லாத உனக்கு, உண்மையாக எதுவேண்டுமோ அதைக் கேளாது, ஞாபக மறதியாய் வேறெதையும் கேட்பானேன் ? உங்கள் அப்பா ஆணை ! உனக்கு மணியைப்பற்றி கவலை யேன்? கடியாரங்களெல்லாம் காடி சாராயப் புட்டிகளாகவும், மணிகளெல்லாம் பணியாரங்களாகவும், இருந்தாலன்றி, என்ன மணியென்று இந்த அனாவசியமான கேள்வியைக் கேட்பானேன் ?

பா. கோனேரி, நீ நிரம்ப புத்திசாலித்தனமாகப் பேசுகிறாய் இப்பொழுது நீ மஹாராஜாவானால்—

கோ. ஆனால், என்ன சொல் சீக்கிரம்.

பா. நீ மஹாராஜாவானால், முதலில் செய்யவேண்டிய வேலை இராக்காலத்து வீரர்களாகிய நம்மையெல்லாம், பகல்

திருடர்களென்று அழைக்கக்கூடாதென்று, ஒரு உத்தரவு செய்யவேண்டியது.—அதிருக்கட்டும், அப்பன், நம்முடைய சத்திரத்து சேஷி யிருக்கிறளே, அவள் மிகவும் அழகாக இல்லையா ?

கோ. அஷ்டவக்கிரன் தங்கையைப்போல் !— கைவிலங்கு நிரம்ப அழகாக இல்லையா ?

பா. ஏனடா அப்பா !—உனக்கென்ன பயித்தியம் பிடித்திருக்கிறதா என்ன ? உன் குறும்பும் கோமாளித்தனமும் ! கைவிலங்குக்கும் எனக்கும் என்ன சம்பந்தம் ?

கோ. சத்திரத்து சேஷிக்கும் எனக்கும் என்ன சம்பந்தம் ?

பா. எத்தனைதரம் நான் அவளுக்குக் கொடுக்கவேண்டிய பாக்கியை யெல்லாம் நீ பைசல் பண்ணி யிருக்கிறய் ?

கோ. எப்பொழுதாவது உன்னை யேதாவது கொடுக்கச் சொன்னேனு ?

பா. சீச்சி ! நீ ரொம்ப நல்லவனுச்சுதே, எல்லாவற்றையும் நீதான் கொடுத்தாய் அங்கே.

கோ. அங்கேயும் கொடுத்தேன் மற்ற விடங்களிலும் கொடுத்தேன், என் கையில் பணம் இருக்கும் வரையில்—அதற்கப்புறம் கடன் வாங்கியும் கொடுத்தேன்.

பா. ஆம் ஆம், அப்படித்தான் செய்தாய், நீ அப்படிச் செய்யாவிட்டால் நீ அரச குமாரன் என்று எல்லோருக்கும் எப்படித் தெரிவது ? அதிருக்கட்டும். நான் ஒன்று சொல்லுகிறேன் கேள். நீ மஹாராஜாவானவுடன் சிங்கள முழுவதும், ஒரு தூக்குமரம்கூட இருக்கக்கூடாதென்று, கட்டளையிட்டுவிடு. ஒரு திருடனையும் தூக்கில் போடாதே.

கோ. இல்லை, நீ செய் அதை.

பா. நானு? நிரம்ப சந்தோஷம்! எங்கள் அப்பா ஆணை! நான் நிரம்ப தைரியசாலியான நியாயாதிபதியா யிருப்பேன்.

கோ. இதற்குள்ளாகவே தவறுகத் தீர்மானிக்கிறுயே! நான் சொல்லவந்த தென்னவென்றால்—தூக்குப் போடுகிற வேலையை உனக்குக் கொடுக்கிறேன் என்று.

பா. அதெல்லா மிருக்கட்டும்—கோனேரி, என் மனசு ஒரு மாதிரியா யிருக்கிறது. நீ என்னை மிகவும் கெடுத்து விட்டாய். உன்னை நான் அறிவதன்முன், ஒன்றும் தெரியாத குழந்தையைப்போல் இருந்தேன். இப்பொழுதோ, உண்மையை உரைக்குமிடத்தில் நிரம்ப கெட்டவனுகி விட்டேன். இந்த வாழ்க்கையை நான் விட்டுவிடவேண்டும், எப்படியும் விட்டுவிடவேண்டும். இல்லாவிட்டால் நான் பெரும்பாதகனுவேன். ஒரு ராஜகுமாரனுக்காக நான் கெட்டுப்போகிறதென்றால், நன்றுக இல்லை!

கோ. அதிருக்கட்டும் பாலா! நாளைக்கு எங்கே பணம் பறிக்கலாம் நாம்? சொல்.

பா. உனக்கு எங்கே இஷ்டமோ சொல் அப்பன்! நானும் கூட வருகிறேன். நான் வராவிட்டால் என்னை என்னவென்றுலும் அழை.

கோ. சற்று முன்பாக இதையெல்லாம் விட்டுவிடவேண்டும் என்றுயே, இதுதானே விட்டுவிடுவது?

பணையன் சற்று தூரத்தில் வருகிறுன்.

பா. ஏன்! அதற்கென்ன செய்வது? அவனவன் தலைவிதியின்படி நடப்பது பாபமாகாது. இப்படி நடக்க வேண்டுமென்று என் தலையில் எழுதியிருக்கிறது, அதற்கு நான் என் செய்வது?

கோ. வா, பணையா, வா.

ப. நமஸ்காரம் அப்பா—என்ன ஒருவாருய் இருக்கிருர் நம் முடையவர்? சாராய பிப்பாய் என்ன சொல்லுகிறது?

கோ. தன்னுடைய உடல் பொருள் ஆவியெல்லாம் ஒரு புட்டி சாராயத்திற்காக விற்கிறேன் என்கிறது.

ப. அதிருக்கட்டும், பசகளா! நாளைத்தினம் காலை, நாலு மணிக்கெல்லாம், விடியுமுன்—கடகமலை யருகில்—காந்தார புரிக்குப் பிரார்த்தனை செலுத்த சிலப் பிரயாணிகள் ஏராள மான பொருள் கொண்டு போகிருர்கள். அன்றியும், லண்ட புரத்திற்கு சில வர்த்தகர்கள் பொருள் கொண்டு போகிருர் கள். நமக்கெல்லாம் முகமுடியைச் சித்தம் செய்து வைத் திருக்கிறேன்; உங்களில் ஒவ்வொருவனுக்கும் குதிரை யிருக்கிறது. காடலன் இன்றிரவு ரோஷா நகரத்தில் தங்கி யிருக்கிருன்; நாளை யிரவு நமக்கெல்லாம் கிழக்கு சத்திரத்தில் சாப்பாட்டிற்குச் சொல்லி யிருக்கிறேன். தூங்குகிறதைப்போல், ஒரு கஷ்டமுமில்லாமல், இந்த வேலையை முடிக்கலாம். நீங்கள் வருவதானுல், உங்கள் பைகள் நிரம்ப பொன்னை நிரப்பிவைக்கிறேன். வராம லிருப்பதானுல், வீட்டிலடைபட்டு வெளியில் போகாமல், தூங்கிக்கொண்டு சாவுங்கள்!

பா. அப்பனே, யாதவா, கேட்கிறதா, நான் போகாமல் வீட்டி லிருப்பதானுல், நீ போவதற்காக உன்னைத் தூக்கில் போடுவேன்.

கோ. செய்வாயா நீ? சொத்தை!

பா. கோனேரி, நீயும் எங்களுடன் வருகிருயா?

கோ. யார்? நானு கொள்ளை யடிப்பது? நானு திருடுவது? ஆணைப்படி அது முடியாது.

பா. நீயும் ஒரு யோக்கியனு, ஆண்பிள்ளையா? சிநேகிதனு? ராஜவம்சத்திற் பிறந்தவனு? பத்து பொன் திருடுவதற்குப் பயப்படுகிறவன் என்ன பிரயோஜனம்?

கோ. சரி, ஆனல், என் ஆயுளில் ஒருதரம் பயித்தியக்காரனாகிறேன்.

பா. அதுதான் சரி, நன்றாய்ச் சொன்னாய்.

கோ. சரி, வருவது வரட்டும்—வீட்டில்தா னிருப்பேன் !

பா. அப்படிச் செய்தாயோ, எங்கப்பாணை, நீ ராஜாவானல் உன்னை என்ன செய்கிறேன் பார்.

கோ. என்னவென்றாலும் செய்துகொள், பயமில்லை எனக்கு.

ப. [ஒரு புறமாக] ஐயா, பாலஸ்தம்பரே, ராஜகுமாரனையும் என்னையும் சற்று தனியே விட்டு விலகிப்போம். எப்படியாவது இந்த சாஹசத்திற்குத் துணியும்படி நியாயங்கள் அவருக்கு எடுத்துக் காட்டி நம்முடன் போகும்படி செய்கிறேன்.

பா. [ஒரு புறமாக] நம்முடைய வழிக்குத் திரும்பும்படியான வாக்கு நயத்தை உனக்கும், அதைக் கேட்டு லாபத்தையடையும்படியான புத்தியை அவனுக்கும், ஜகதீசன் கொடுப்பானக ! நீ பேசுவது அவன் மனத்தைக் கரைக்க வேண்டும், அவன் கேட்பதை அவன் நம்பவேண்டும், அப்பொழுது தான், உண்மையான ராஜகுமாரன் பொய்யான திருடனாவான். நான் வருகிறேன், கிழக்கு சத்திரத்தில் என்னை வந்து காண்பாய்.

கோ. போய்வா, பஞ்சு மூட்டையே ! கூஷ்பாண்ட லேகியமே !

[பாலஸ்தம்பன் போகிறான்.]

ப. என் கண்ணல்ல, வா அப்பா நாளை எங்களுடன். ஒரு வேடிக்கை பண்ண உத்தேசித்திருக்கிறேன், அதை நான் ஒருவனாக செய்து முடிக்க முடியாது. நாம் வழி மறிக்கப் போகிற மனிதர்களை, பாலஸ்தம்பன், பரதன், பெத்தன், காடலன், நால்வரும் கொள்ளையடிக்கட்டும் ; நீயும் நானும் அங்கிரா திருப்போம் ; பிறகு அவர்களிடமிருந்து இவர்கள் கொள்ளையடித்த பொருளை, நாமிருவரும்

கொள்ளை யடிக்காமற் போனால், இந்தத் தலையை வெட்டி விடு.

கோ. ஆனால், புறப்படும்பொழுது அவர்களிடமிருந்து நாம் எப்படிப் பிரிவது ?

ப. ஏன், அவர்களுக்குச் சற்று முன்பாகவாவது பின்பாக வாவது நாம் புறப்படுவோம் ; ஓரிடத்தில் அவர்களைச் சந்திப்பதாகச் சொல்லி, அவ்விடம் அவர்களைச் சந்தியாதிருப்போம். அப்பொழுது அவர்களே இந்த வேலையைச் செய்து முடிப்பார்கள், அதை அவர்கள் முடித்தவுடனே, நாம் அவர்கள்மீது பாய்வோம்.

கோ. ஆம், அவர்கள் நம்மை இன்னாரென்று, நம்முடைய குதிரைகளாலும், நம்முடைய நடையுடை பாவனைக ளாலும், எல்லாவிதத்தாலும், எளிதில் கண்டுபிடித்து விடமாட்டார்களா ?

ப. சீச்சீ ! நம்முடைய குதிரைகளை அவர்கள் காணமாட் டார்கள்—காட்டில் ஒருபுறமாகக் கட்டி விடுகிறேன் ; நம் முடைய முகமூடிகளை, அவர்களைவிட்டுப் பிரிந்தவுடன் மாற்றிவிடுவோம் ; அவர்கள் பார்த்திருக்கும் நம்முடைய ஆடைகளை முற்றிலும் மறைத்திட வேறு உடைகள் சித்தம் செய்திருக்கிறேன்.

கோ. இத்தனை பெயரையும் நாம் ஜெயிக்கமுடியுமா என்று சந் தேகப்படுகிறேன்.

ப. ஹும் ! அவர்களில் இருவர், முதுகுகாட்டி ஓடும் பயங் காளிகளில் முதல்தர மானவர்களென்று நன்றாயறிவேன். மூன்றாவது ஆசாமி, சமயத்திற்குத்தக்கபடிதான் சண்டை போடுவான் ; இவர்கள் ஓடுவதைக் கண்டால் பிறகு ஒரு க்ஷணமும் சண்டை போடமாட்டான் ; அப்படியில்லா விட்டால் இனி நான் ஆயுதத்தைத் தொடுவதில்லை என்று பிரமாணம் செய்கிறேன் பார். இதில் முக்கியமான வேடிக் கை, நாம் சாப்பாட்டிற்கு ஒன்றாய்ச் சேரும்பொழுது

இந்த தடிமொத்து, இல்லாத பொய்களை யெல்லாம் சரமாரியாக விடுவான் நம்மிடம்; குறைந்தபட்சம் முப்பது பெயர்களுடன் தான் சண்டை போட்டதாகவும், அவர்களையெல்லாம் தான் எப்படி எப்படி அடித்தான், தான் என்னென்ன கஷ்டப்பட்டான், என்று கப்பிகட்டி யிரக்குவான்—அதையெல்லாம் பிறகு பொய்யென்று நாம் வெளிப்படுவதுதான் மிகுந்த வேடிக்கையாகும்.

கோ. சரி, நான் உன்னுடன் போகிறேன், வேண்டிய பொருள்களெல்லாம் சித்தம் செய்துகொண்டு, நாளைத் தினம் கிழக்கு சத்திரத்தில் என்னை வந்து சந்திப்பாய், அங்கே நான் சாப்பிடுகிறேன்.

ப. அப்படியே இளவரசே.

[போகிறார்கள்.]

காட்சி முடிகிறது.

இரண்டாம் காட்சி.

இடம்—கடகமலைக்குப் போகும் பாதை.

கோனேரி இளவரசனும், பணையனும் வருகிறார்கள்.

பாதனும், பெத்தனும் சற்று தூரத்தில்
வருகிறார்கள்.

ப. வா, மறைந்துகொள், மறைந்துகொள்! பாலஸ்தம்பன் குதிரையைக் கொண்டுபோய் மறைத்துவிட்டேன்; அதற்காக அவன் பெருந் துருத்தியைப்போல் பெருமூச்சுவிட்டுக் கதறுகிறான்.

கோ. ஒரு பக்கமாயிரு.

[மறைந்து கொள்ளுகிறார்கள்.]

பாலஸ்தம்பன் வருகிறான்.

பா. பணையா! பணையா! பாழாய்ப்போக! பணையா!

கோ. [முன்னுக்கு வந்து] ஸ்! மொத்து! ஏன் அப்படிக் கூச்சல் போடுகிறாய்?

பா. எங்கே அந்தப் பணையன் அப்பா?

கோ. குன்றின்மீது ஏறிப் போயிருக்கிறான், நான் போய் கண்டு பிடித்து வருகிறேன்.

[அவனைத் தேடுவதுபோல் பாசாங்கு
செய்கிறான்.]

பா. அந்தத் திருட்டுப் பயலுடன் திருடும்படி வந்ததே என் தலைவிதி! படுக்காளி என் குதிரையை எங்கேயோ கொண்டுபோய்க் கட்டிவிட்டான் நான் அறியாதபடி. ஒரு அடி எடுத்து வைப்பதென்றால் எனக்கு மேல்சுவாசம் காண்கிறது! அந்தத் திருட்டுப் பயலை கொன்றதற்காக என்னைத் தூக்கிலிடாவிட்டால், நான் சுகமாய்த் தான் என் படுக்கையில் சாவேன். இந்த இருபத்திரண்டு

வருஷமாக, மணிக்கு மணி, இவனுடன் இனி சகவாசம் செய்வதில்லை யென்று நான் சத்தியம் செய்வதுதான், ஆயினும் அவனை விட்டுப் பிரியாதபடி சொக்குபொடி போடுகிறான். அவன்மீது ஆசையா யிருக்கும்படி எனக் கேதோ மருந்து கொடுத்திருக்கிறான் என்று உறுதி யாய்ச் சொல்வேன்; வேறொரு காரணமு மிராது; அந்த மருந்துகளை யெல்லாம் நான் குடித்திருக்கவேண்டும்.— பனையா! கோனேரி! இரண்டு பெயரையும் வாரிக்கொண் டுபோக! பரதா! பெத்தா!—இனிமேல் ஒரு அடி நகர் வதைவிட பசியால் இங்கேயே சாவேன்! இந்தத் திருட் டுப் பசகள் சகவாசத்தை யெல்லாம் விட்டு, யோக்கிய னாகாவிட்டால் என்னைப்போல் முழுமுண்டம் இந்த மூன்று லோகத்திலும் கிடைக்கமாட்டான். இந்த மேடு பள்ளத்தில் எட்டடி தூரம் நடப்பதென்றால் எண்ணூறு மயில் நடப்பதற்குச் சமானமா யிருக்கிற தெனக்கு. இந்தப் பச்சாத்தாப மில்லாத படுக்காளிப் பசகளுக்கு நன்றாய்த் தெரியுமது! என்ன பேரிழவா யிருக்கிறது! திருடர்களில் ஒருவனுக்கொருவன் துரோ கம் பண்ணுவதென்றால்!

[அவர்கள் ஈசல் அடிக்கிறார்கள்.]

வீ!—உங்கள் எல்லோரையும் வாரிக்கொண்டு போக! கொண்டுவாருங்களடா என் குதிரையை, திருட்டுப் பச களே! என் குதிரையை என்னிடம் கொடுத்துவிட்டு எப்படியாவது நாசமாய்ப் போங்கள்!

கோ. [முன்னுக்கு வந்து] ஏ! தொப்பை! கூச்சல் போடாதே! கீழே தரையில் படுத்து, காதை பூமியோடு வைத்து, பிரயாணிகள் நடந்து வருகிற சப்தம் கேட்கிறதாவென்று கவனித்துப் பார்.

பா. நான் கீழே படுத்துக்கொண்டால், பிறகு என்னை மேலே தூக்க, ஏதாவது, கப்பி கிப்பி தன்னிமரம் கொண்டு வந் திருக்கிறாயா? எங்கப்பானே! உங்களப்பாவினுடைய

பொக்கிஷத்திலுள்ள பொன்னை யெல்லாம் எனக்குக் கொடுப்பதானாலும், என்னைத் தூக்க என்னால் முடியாது பிறகு! நீ பாழாய்ப்போக என் குதிரையை எங்கே கொண்டுபோனாய்?

கோ. பொய் பேசாதே! உன் குதிரையை எங்கேயோ விட்டு விட்டு என்மீது பழி சுமத்துகிறாயா?

பா. அப்பனே கோனேரி! என் ராஜாவல்ல, என் குதிரையைப் பிடித்துக்கொண்டுவா அம்மா, நீ நல்லவனாச்சுதே!

கோ. போடாத் திருடா! நான் என்ன உன் குதிரைக்காரனா!

பா. ஆனால் போ, உன் கச்சைப் பட்டையாலே தூக்குப் போட்டுக்கொண்டு சாவுபோ! என்னை யாராவது கண்டு பிடித்து விட்டார்களோ உங்களையெல்லாம் காட்டிக் கொடுத்துவிடுகிறேன்! வாருங்கள், இதற்காக உங்கள் பேரிலெல்லாம் பாட்டுக்கட்டி சந்துக்கு சந்துக்குப் பாடாவிட்டால், நான் குடிக்கும் சாராயம் எனக்கு விஷமாகட்டும்!—இந்த சமயத்திலா இப்படி செய்கிறது? எனக்கு வருகிற கோபம்!—

காடலன் வருகிறான்.

கா. நில் அங்கே?

பா. அப்படித்தான் செய்கிறேன்— என் இஷ்டத்திற்கு விரோதமாய்.

ப. ஓ! நம்முடைய ஆள்—அவன் குரல் எனக்குத் தெரியும்.

பாதனும் பெத்தனும் முன்னால் வருகிறார்கள்.

பா. என்ன சமாசாரம்?

கா. மூடிக்கொள்ளுங்கள்! மூடிக்கொள்ளுங்கள்! முகமூடியைப் போட்டுக்கொள்ளுங்கள், மஹாராஜாவின் நாணயம் இவ்வழியாக வருகிறது; மஹாராஜாவின் பொக்கசத்திற்குப் போகிறது.

பா. பொய் பேசாதே திருடா! நம்முடைய சத்திரத்திற்குப் போகப்போகிறது.

கா. நமக்கெல்லாம் வேண்டியமட்டும் கிடைக்கும்.

பா. தூக்குமரம்.

கோ. அடே நீங்கள் நான்கு பெயரும் இந்த நெருக்கமான சந்தில் அவர்களை எதிர்த்திடுங்கள், நானும் பனையனும் கீழே இழிந்து செல்கிறோம், உங்களிடமிருந்து அவர்கள் தப்பித்துக்கொண்டால், எங்களிடத்தில் அகப்பட்டுக் கொள்வார்கள்.

பெ. அவர்கள் எத்தனை பெயர் இருக்கிறார்கள்?

கா. ஒரு எட்டு பத்து பெயர்.

பா. அப்பாடா! அவர்கள் நம்மைக் கொள்ளையடிக்க மாட்டார்களா?

கோ. ஏ! குண்டோதரா! என்ன பயங்காளியா யிருக்கிறாய்?

பா. ஏ! உன் பாட்டனாரைப்போல் வற்றலா யிருக்க வேண்டுமோ! கோனேரி, நான் எப்படியிருந்த போதிலும் பயங்காளிமாத்திரம் ஆகமாட்டேன்.

கோ. நல்லது, எல்லாம் ருஜுவில் சீக்கிரம் பார்ப்போம்.

ப. ஏ! கோணிப்பை, உன் குதிரை அதோ அந்த புதரிற்குப் பின் நிற்கிறது, உனக்கு வேண்டியபொழுது அங்கே போய்ப்பார் அகப்படும். நான் வருகிறேன்—பத்திரம் பத்திரம்!

பா. கையில் அகப்படாதபடி தூரத்தில் போய்விட்டான் பார்! இல்லாவிட்டால் கொன்று காலைவாரி இழுத்து விட்டிருப்பேன், அதற்காக என்னைத் தூக்கில் போட்டாலுஞ் சரியென்று!

கோ. [ஒருபுறமாக பனையனுக்கு] பனையா, எங்கே நமது வேஷங்கள்?

ப. இதோ, அருகாமையில், இப்படி வாரும்.

[கோனேரியும், பனையனும் போகிறார்கள்.]

பா. வாங்கடாப்பா, ஏ! பசகளே! ஒவ்வொருத்தனுக்கும் நல்ல கொழுத்த ஆசாமி கிடைப்பானாக! ஒவ்வொருவனும் அவனவன் வேலையைப் பார்க்கட்டும்.

பிரயாணிகள் வருகிறார்கள்.

மு-பி. வா, அண்ணன், அந்தப்பையன் நம்முடைய குதிரைகளைக் குன்றினின்றும் கீழே இரக்கிக்கொண்டு வரட்டும்—நாம் கொஞ்சம் தூரம் நடந்து, நமது கால்களை ஆற்றிக் கொள்வோம்.

பா. கா. பே. ப. நில்லுங்கள்!

பி-ள். ஐயோ! சாமி!

பா. அடியுங்கள்! கொல்லுங்கள்! விடாதீர்கள்! கழுத்தை அறுத்துவிடுங்கள்! ஆ! கறுப்பாம் பூச்சிகளே! கொழுத்தக் கடாக்களே! எங்களை எதிர்க்கிறீர்களா கிழங்களே! தள்ளுங்கள் கீழே! பறியுங்கள் அவர்கள் பணத்தை!

பி-ள். ஐயோ! போச்சுது நமது உயிரும் பணமும்!

பா. அவர்கள் தொப்பையைப் பார்! நன்றாய்த் தின்று கொழுத்திருக்கிறார்கள்! கக்கவையுங்கள் அவர்கள் பணத்தையெல்லாம்! நாம் எல்லாம் வற்றலாய் உலர்வது, இவர்கள் மாத்திரம் தின்று கொழுப்பது! ஏனடா! இவ்வளவுதானா கொண்டு வருவது! நாங்கள் இருக்கிறோமென்று பயந்து இன்னும் கொஞ்சம் கொண்டுவரக் கூடாதா? எங்களைப்போன்ற வயசுக்காரர்கள் வாழ வேண்டும், கிழப்பிணங்களாகிய உங்களுக்கு என்னத் திற்கு என்கிறேன்?

[பாலஸ்தம்பன் முதலியோர் பிரயாணிகளைத் தூரத்திக்கொண்டு வெளியே போகிறார்கள்.]

கோனேரியும் பனையனும் மறுபடி வருகிறார்கள்.

கோ. இந்த திருடர்கள், பாவம், அந்த யோக்கியர்களைக் கட்டி விட்டார்கள் பின்கட்டாக. நீயும் நானும் இப்பொழுது, இந்த திருடர்களிடமிருந்து கொள்ளை யடித்து, சந்தோஷமாய்ப் பட்டணம் போய்ச் சேர்வோம்; ஒருவாரம் இதைப்பற்றி வாதாடலாம், ஒரு மாசம் சிரிக்கலாம், என்றென்றைக்கும் கேலியாகும்.

ப. ஒருபுறம் ஒதுங்கு, அவர்கள் வருகிற சப்தம் கேட்கிறது.

பாலஸ்தம்பன், காடலன், பாதன், பெத்தன் வருகிறார்கள்.

பா. வாங்கடாப்பா, நாம் பங்கு போட்டுக்கொண்டு பிறகு குதிரைகள் மீதேறிப் போவோம் பொழுது விடியுமுன். அந்த ராஜாபிள்ளையையும் பனையனையும்போன்ற இரண்டு பயங்காளிப் பசகள் இந்த உலகம் எங்கு தேடினாலும் கிடைப்பது கஷ்டம்! அஞ்சி வயசு குழந்தைக்கு இருக்கிற தைரியம்கூட அவர்களிடமில்லை. பயந்துதான் அவர்களிரண்டு பெயரும் நம்மை விட்டுப் பிரிந்து போயிருக்க வேண்டும்.

கோ. [*உருவிய கத்தியுடன் அவர்கள்மீது பாய்ந்து*] கக்குங்கள் உங்கள் கையிலிருப்பதை!

ப. [*தானுமப்படியே செய்து*] திருட்டுப் பயல்களே!

[*காடலன், பாதன், பெத்தன் ஓடிப்போய் விடுகிறார்கள். பாலஸ்தம்பன் இரண்டு மூன்று அடி வாங்கிக்கொண்டு, பணத்தை விட்டுவிட்டு ஓடிப்போகிறான்.*]

கோ. மிகவும் சுலபமாய்ப் பெற்றோம். சந்தோஷமாய்க் குதிரை ஏறிச் செல்வோம். நான்கு புறமும் ஓட்டமெடுத்திருக்கிறார்கள் திருடர்கள், அவர்களுக்கிருக்கிற பயத்தில் ஒன்றாய்ச் சேரமாட்டார்கள். ஒவ்வொருவனும் மற்

றவனை அரண்மனை அதிகாரி என்று எண்ணுகிறான். வா போவோம் பனையா. பாலஸ்தம்பன் உயிர்போவதே போல் வியர்க்கிறான், அவன் நடக்கும்பொழுது பூகம்பம் தான்! எனக்குச் சிரிப்பு வராவிட்டால், அவனைப் பார்த்து பரிதாபப்படுவேன்.

ப. என்ன கத்தினான் படுக்காளி!

[**போகிறார்கள் பணத்தை யெடுத்துக்கொண்டு.**]

காட்சி முடிகிறது.

மூன்றும் காட்சி.

இடம்—கிழக்குச் சத்திரத்தில் ஓர் அறை.

கோனேரியும், பனையனும் உட்கார்ந்திருக்கிறார்கள்.

பாலஸ்தம்பன், பரதன், பேத்தன், காடலன், வருகிறார்கள்.

ப. வா, பாலா, எங்கே போயிருந்தாய்?

பா. இந்தப் பயங்காளிப் பசகளெல்லாம் பாழாய்ப் போகவேணும்! பழி வாங்கவேண்டு மவர்கள்மீது! சத்தியமாய்! அடே பையா, கொஞ்சம் சாராயம் கொடடா! இம்மாதிரி இன்னும் கொஞ்சம் வாழ்ந்துவந்தேனாயின், சீக்கிரத்தில் மூலையில் உட்கார்ந்துகொண்டு முக்காடிட்டுக் கொண்டு, மிளகா யரைக்கவேண்டி வரும். இந்தப் படுக்காளிப் பசகளெல்லாம் பாழாய்ப் போகவேணும்!—அடே! திருட்டுப்பயலே! வாரடா கொஞ்சம் சாராயம்! தைரியம் என்பதே உலகத்தில் இல்லாமற் போச்சுதா!

[குடிக்கிறான்.]

கோ. குண்டோதரன் வைகையாற்றின் ஜலம் என்னமா யிருக்கிறதென்று ருசி பார்த்ததாகச் சொல்கிறார்களே, அதை நீங்கள் யாரும் பார்த்ததில்லையே, இதோ பாருங்கள், இப்படித்தா னிருக்கும்.

பா. அடே முறியா! இதோ பார், சாராயத்தில் எலிமிச்சம் பழத்தோல். இந்த மனுஷ ஜன்மத்திலேயே திருட்டுத்தனம் தவிர வேறொன்றும் கிடைக்காது. ஆயினும் எலிமிச்சம்பழத் தோலிருக்கிற சாராயக் குவளையைவிட, பயங்காளி கேடு கெட்டவனே!—நல்ல திருட்டுப் பயங்காளி!—கிழ பாலா, உன் காலத்தைக் கழித்துவிடு அப்பா, நீ எப்பொழுது சாகிறாயோ, அதனுடன் ஆண்பிள்ளைத்தனம் என்பதே உலகத்தில் அற்றுப்போம்; அது

இருந்ததாகவே உலகத்தில் மறந்துபோய்விடுவார்கள். இந்த சிங்களத்திலே யோக்கியன் என்று பெயர்வைத்துக் கொண்டு வாழ்பவர்கள் மூன்று பெயர்கூட இல்லை. அவர்களில் ஒருவனுக்கு உடம்பு பெருத்துப்போய் வயசாகி வருகிறது; சுவாமிதான் காப்பாற்றவேண்டும். உலகமே கெட்டுப் போச்சுது! இதைவிட ஏற்றம் இறைக்கலாம்—ஏதாவது பாடிக்கொண்டே.—இந்தப் படுக்காளிப் பசகள் மாத்திரம் பாழாய்ப் போகவேண்டும்!

கோ. ஏ! கோணிப்பை! என்ன்சமாசாரம், என்னவோ மொண மொண என்கிருய்?

பா. நீ ஒரு ராஜகுமாரனு! உன் ராஜ்யத்திலிருந்து, ஒரு வாழைப் பட்டையைக் கையிலெடுத்துக்கொண்டு, உன்னை அடித்துத் துரத்தி, உனக்கு முன்னுல் வாத்துக் கூட்டங்களைப்போல் உன் ஜனங்களையும் நான் துரத்தாவிட்டால், இந்த மீசையைச் சரைத்து விடுகிறேன். நீ ஒரு இளவரசனு?

கோ. ஏன்? தொப்பைப் பையே! சமாசாரம் என்ன சொல்?

பா. நீ பயங்காளியா, இல்லையா? அதற்குப் பதில் சொல்.—அதோ அந்த பனையனும்கூட?

ப. ஏ! குண்டுதொப்பை, என்னை பயங்காளியென்று கூப்பிட்டாயோ அப்படியே குத்திவிடுவேன் உன்னை.

பா. உன்னைப் பயங்காளி என்று நானு கூப்பிடுவது! உன்னை பயங்காளி என்று கூப்பிடுமுன், நீ பாழாய்ப் போகப் பார்ப்பேன்! ஆயினும் உன்னுல் எவ்வளவு வேகமாய் ஓட முடியுமோ அவ்வளவு வேகமாய் என்னுல் ஓட முடியுமானுல், ஆயிரம் பொன் தருவேன். முன்னுல் பார்த்தால், ஆள் என்னவோ ஒழுங்காய்த்தா னிருக்கிருய்—ஆயினும் உன் முதுகை யார் பார்த்தாலும் அதற்காகக் கவலைப்படுவ தில்லை. உன்னுடைய சிநேகிதர்களுக்கு உதவி செய்வது இதுதான் போலும்? உன் உதவி

பாழாய்ப்போக! என்னை எதிர்த்து சண்டை போடு வோனை என்னிடம் கொண்டுவந்து விடு!—கொடுடா கொஞ்சம் சாராயம்—காலையிலிருந்து ஒரு துளி குடித் திருந்தால் நான் ஒரு குடியன்!

கோ. அடே பாவி! கடைசியில் குடித்தது உன் உதட்டி லிருக் கிறதே—அதை இன்னும் துடைக்கக்கூட இல்லையே!

பா. எல்லாம் ஒன்றுதான். இந்தப் பயங்காளிப் பசகள் மாத்திரம் பாழாய்ப் போகவேண்டும்!

[குடிக்கிறான்.]

கோ. சமாசாரம் என்ன?

பா. சமாசாரம் என்ன! இதோ இருக்கும் நாங்கள் நான்கு பெயரும் இன்று காலை பதினாயிரம் பொன் கொள்ளை யடித்தோம்.

கோ. எங்கே இருக்கிறது அது? எங்கே இருக்கிறது அது? பாலா.

பா. எங்கே இருக்கிறது! எங்களிடமிருந்து பிடுங்கிக்கொண்டு போகப்பட்டிருக்கிறது. நாங்கள் நாலு பெயர், நூறு பெயர் வந்து எதிர்த்தால்!

கோ. என்னடா அப்பா! நூறு பெயரா?

பா. இரண்டுமணி நேரம் அவர்களில் பத்தி பனிரண்டு பெயருடன் நான் கத்திச் சண்டை போட்டிராவிட்டால், நான் ஒரு பொட்டை! நான் தப்பிப்பிழைத்தது மறு ஜன் மம். என்னுடைய சட்டையில் எட்டு முறை கத்தி பாய்ந்தது, ஜல்லடத்தில் நான்கு தரம். என்னுடைய கேடயமானது கத்தி வெட்டு பட்டுப்பட்டு கவைக் குதவாதாயது, என்னுடைய வாளானது வெட்டி வெட்டி ரம்பத்தைப்போல் பற்களுடையதாயது. நான் ஆளா னது முதல் இது வரையில் அம்மாதிரி சண்டை போட் டதில்லை; எல்லாம் பிரயோஜனப்படாமற் போச்சுது,

இந்த பயங்காளிகளெல்லாம் பாழாய்ப் போகவேண்டும்! இவர்கள் சொல்லட்டும்—இவர்கள் வாஸ்தவத்திற்கு அதிகமாகவோ குறைவாகவோ பேசினார்களோ, பாதகர்களாவார்கள், பேய்க்குப் பிறந்தவர்களாவார்கள்—

கோ. சொல்லுங்களடா அப்பா, என்னமாய் நேர்ந்தது?

கா. நாங்கள் நாலு பெயரும், சுமார் பன்னிரண்டு பெயரை எதிர்த்து—

பா. குறைந்த பட்சம் பதினாறு பெயராவது இருக்கும் அரசே.

கா. அவர்களைக் கட்டினோம்.

பெ. இல்லை இல்லை, அவர்களைக் கட்டவில்லை.

பா. போடாத் திருடா! அவர்களைக் கட்டினோம், ஒவ்வொருவனையும், இல்லாவிட்டால் நான் ஒரு பறையன்!

கா. நாங்கள் பணத்தை பங்கிட்டுக்கொண் டிருக்கும்பொழுது ஏழெட்டு பெயர் புதிதாய் வந்து எங்களை எதிர்த்தார்கள்.

பா. பிறகு கட்டப்பட்டவர்களை அவிழ்த்து விட்டார்கள், அப்புறம் அவர்களும் எங்களை எதிர்த்தார்கள்.

கோ. என்ன! இத்தனை பெயருடனுமா நீங்கள் சண்டை போட்டீர்கள்?

பா. எல்லாருடனுமா! நீ எல்லாருடனு மென்று எதைச் சொல்லுவாயோ எனக்குத் தெரியாது, ஆயினும் நான் குறைந்த பட்சம் ஐம்பது பெயருடனாவது சண்டை போட்டிராவிட்டால், நான் ஒரு மணைக்கட்டைதான். இந்தக்கிழவனுன பாலன்மீது ஐம்பதுக்கு மேற்பட்டவர்கள் சண்டை போட்டிராவிட்டால் ஒரே காலத்தில், நான் ஒரு மனுஷன் அல்ல.

கோ. ஐயோ பாபம்! அவர்களில் ஒருவனையும் நீ கொன்று விடவில்லையே!

பா. ஸ்! அதற்குப் பயந்து பிரயோஜனமில்லை. இரண்டு பெயரை வற்றல் போட்டேன்.—இரண்டு பெயரை நிச்சயமாய்க் கொன்றேன்.—இரண்டு திருட்டுப்பயல்கள் கறுப்பு சட்டைபோட்டுக் கொண்டிருந்தார்கள்—நான் சொல்வதைக்கேள் அப்பா.—நான் பொய் ஏதாவது பேசினால், என் முகத்தில் காரிதுப்பு, என்னைக் கழுதை என்றழை. என் பழயவாள் வரிசை தெரியுமே உனக்கு? இப்படியிருந்து, இப்படி தடுத்தேன், கறுப்புச்சட்டை யணிந்த நாலு திருடர்கள் என்னை எதிர்த்து வந்தார்கள்.

கோ. என்ன! நாலு பெயரா? கொஞ்சம் முன்பு இரண்டு பெயர் என்றாயே?

பா. நான்கு, அப்பா, நான்கு பெயர் என்றுதான் சொன்னேன்.

ப. ஆம் ஆம், நான்கு என்றுதான் சொன்னான்.

பா. இந்த நாலு பெயரும் என் எதிராக வந்து அவர்கள் முழு பலத்துடன் வெட்டினார்கள். நான் உடனே தாமதிக்காமல் அவர்கள் ஏழு கத்திகளையும் என் கேடயத்தால் இப்படித் தடுத்தேன்.

கோ. ஏழா? நான்கு பெயர்தானே இருந்தார்கள் கறுப்புச் சட்டை யணிந்தவர்கள், சற்று முன்பாக.

ப. ஆம், கறுப்புச் சட்டை யணிந்தவர்கள் நாலு பெயர் தானே.

பா. ஏழு பெயர், இந்த கத்தியின்மீ தாணை, இல்லாவிட்டால் நான் ஒரு பாதகன்!

கோ. [ஒரு புறமாக] அவனை சும்மாக விட்டுவிடு.—இன்னும் எத்தனை பெயர் வருகிறார்கள் பார்.

பா. கேட்கிறாயா அப்பா நான் சொல்வதை?

கோ. மிகவும் ஜாக்கிரதையாய்க் கவனிக்கிறேன் அப்பா.

பா. அப்படியே செய், இது கேட்கவேண்டிய விஷயம். இந்தக் கறுப்புச் சட்டை யணிந்து வந்ததாகக் கூறினேனே அவர்கள், ஒன்பது பெயர்.—

கோ. சரி, இதற்குள்ளாக இன்னும் இரண்டாச்சுது.

பா. அவர்கள் கத்திகள் உடைந்துபோகவே—

ப. கேடயங்கள் கீழே விழுந்துவிட்டன.

பா. பின்வாங்கினார்கள், நான் அவர்களை உடனே பின் தொடர்ந்து காலாலும் கையாலும் கொடுத்து, ஒரு நிமி ஷத்திற்குள் அந்தப் பதினொரு பெயரில் ஏழு பெயரைக் கொன்றேன்.

கோ. என்ன ஆச்சரியம்! இரண்டு பெயரிலிருந்து பதினொரு பெயர் முளைத்தார்கள்!

பா. அப்பொழுது என்னவென்றால், என் துரதிர்ஷ்டம் பட்டி மக்கள் மூன்று பெயர், பச்சை யுடுப்பணிந்தவர் கள், என் முதுகின் பக்கம் வந்து என்னை எதிர்த்தார்கள். நிரம்ப இருட்டா யிருந்தது அப்பா, உன் கையே உனக்குத் தெரியாதபடி.

கோ. இந்தப் பொய்களும் அவைகளை யுண்டு பண்ணுகிற அவைகளது தகப்பனைப்போல்தா னிருக்கின்றன.—மலை யைப்போல், பெரிதாயும் பலரும் எளிதிற் காணக்கூடிய தாயும்! ஏனடா தடிராமா, மட்டி மடையா, மொத்து, மக்கு, குண்டு, தொப்பை—

பா. ஏன்! உனக்கென்ன பயித்தியமா? பயித்தியமா பிடித் துப்போச்சுது உனக்கு? வாஸ்தவம் எப்பொழுதாவது பொய்யாகுமா?

கோ. ஏனடா, உன் கையே உனக்குத் தெரியாதபடி அவ் வளவு இருட்டா யிருந்தது என்றாயே, அப்படி யிருக் கும்பொழுது, அவர்கள் பச்சை யுடுப்புப் போட்டுக்கொண் டிருந்தார்கள் என்று உனக்கு எப்படி தெரிந்தது?

எதோ, உன் நியாயத்தைச் சொல். இதற்கென்ன சொல்லுகிருய் பார்ப்போம்.

ப. வா, சொல் உன் நியாயத்தை—உம்—என்ன நியாயம்?

பா. என்ன! பலாத்காரத்தின்மீதா? மாட்டேன் நான். என்னை முள் பிப்பாயிலிட்டு உருட்டினுலும் சரி, உலகத்திலுள்ள செக்குகளிலெல்லாம் போட்டு ஆட்டினுலும் சரி, பலாத்காரத்தின்மீது என் நியாயங்களை எடுத்துறைக்க மாட்டேன். உனக்கா பலாத்காரத்தின்மீது நான் நியாயஞ் சொல்வது! அருநெல்லிக் காய்களைப்போல் அத்தனை நியாயங்கள் அதிகமாய்க் கிடந்தாலும், பலாத்காரத்தின்மீது எந்த மனிதனுக்கும் நான் நியாயம் சொல்லமாட்டேன்.

கோ. இந்த பாபம் இனி எனக்கு வேண்டாம்! இந்தப் பயங்காளி இருக்கிருனே, படுக்காளி, நெல்லிக்காய்மூட்டை, குண்டுதொப்பை, வண்ணுன்சால், பெரும்பூதம், கூஷ்பாண்டம், சாராய ஜாடி.—

ப. போதும் நிறுத்து, நீ தெரியாதோ, அவரைக்காய் வற்றல், ஓலைவாளைமீன், ஒணுன்வால், கண்டங்கருவாடு, காட்டுச்சரகு! ஹா! நீ எதையெல்லாம்போலிருக்கிருயென்று சொல்ல என் மூச்சல்லவோ தடுமாறுகிறது!—எழுதுகிற ஓலை, எலும்புக்கூடு, தோல்பை, தொப்புக்குதவாத துப்பு—

கோ. கொஞ்சம் மூச்சு வாங்கிக்கொள்—அப்புறம் மறுபடியும் ஆரம்பி. உன் உபமானங்களெல்லாம் சொல்லிச் சலித்தபின், நான் சொல்வதை சற்றே கேள்.—

ப. நன்ருய்க் கவனி பாலா.

கோ. நாங்களிருவரும், நீங்கள் நான்கு பெயரும் மற்ற நால்வரை எதிர்த்ததைக் கண்டோம், நீங்கள் அவர்களைப் பின்கட்டாய்க் கட்டி அவர்கள் பொருள்களையெல்லாம் கவர்ந்தீர்கள்—இனி கவனி, உண்மையை உரைக்குமிடத்து

உன் கதை என்னமா யிருக்கிறதென்று கேள். பிறகு— நாங்கள் இரண்டு பெயரும், உங்கள் நால்வர்களையும் எதிர்த்தோம், சுருக்கி ஒரு வார்த்தையில் சொல்லு மிடத்து, உங்களிடமிருந்து நீங்கள் கொள்ளையடித்ததை ப்பிடிங்கிக் கொண்டோம்; அது எங்களிடம் இன்னும் இருக்கிறது, ஆம் உண்மையில், இந்த வீட்டிலேயே உங் களுக்கதைக் காண்பிக்கக்கூடும்—அதன்பேரில் பாலஸ் தம்பா, உன் உடலைக் காப்பாற்றிக் கொள்ளும்பொருட்டு எடுத்தாய் ஓட்டம், எருமைக்கடாவைப்போல் கத்திக் கொண்டே, கூவிக்கொண்டே, ஓடினுய். என்ன படுக்காளி! கத்தியையெல்லாம் கண்டம் துண்டமாய் வெட்டிக் கொண்டு, சண்டையில் நேர்ந்த தென்கிருயா? இப் பொழுது என்ன பொய் பேசப்போகிருய், என்ன குத்திர யுக்தி பண்ணப் போகிருய், எந்த எலிவளை பார்க்கப் போகிருய், இந்த வெளிப்படையான வெட்கக் கேட்டை மறைத்திட?

ப. வா வா, பாலா, கேட்போம், இப்பொழுது என்ன யுக்தி சொல்லப் போகிருய்?

பா. போடா! பங்கதாசிரி! உங்கள் அப்பன்மார்கள் உங்களைத் தெரிந்துகொள்ளாம லிருந்திருக்கலாம், எனக்கா தெரி யாது? ஹூம்!—ஏனடா அப்பா, நீங்கள் எல்லோரும் சொல்லுங்கள். ராஜாவினுடைய பிள்ளையை நான் கொல்வது நியாயமா? இளவரசின்மீது எதிர்த்து நான் சண்டை போடலாமா? ஏன், உங்களுக்குத் தெரியாதா என்ன, பீமனைப்போன்ற என் பராக்கிரமம்? இயற்கை யாக இதை அறியும் தன்மை எனக்குண்டு. சிங்க மானது உண்மையான அரசனைத் தீண்டமாட்டாது. இந்த இயற்கை யறிவு இருக்கிறதே, அது பெரிய விஷ யம். அந்த இயற்கை யறிவு என்னை பயப்படச் செய் தது. என் ஆயுள் பர்யந்தம், இதனுல் உன்னைப் பற்றி யும் என்னைப் பற்றியும் அதிக மேன்மையாக மதிப்பேன்

—என்னை ஒரு வீரமுடைய சிங்கமாகவும், உன்னை ஒரு உண்மையான ராஜகுமாரனுகவும். அதிருக்கட்டும், பசகளா! நிரம்ப சந்தோஷம்! அந்தப் பணமெல்லாம் உங்களிடம்தானே இருக்கிறது?— சத்திரக்கார அம்மா! [உள்ளே பார்த்து]

கதவுகளை எல்லாம் சாத்திவிடு, இன்றிரவு ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொண்டிரு—நாளைக்கு ஸ்வாமியைக் குறித்துப் பிரார்த்தனை செய். நண்பர்களே! சிநேகிதர்களே! உத்தமர்களே! உங்களுச்கு எல்லா சுகமும் உண்டாகுமாக! என்ன சொல்கிறீர்கள்? நாம் எல்லாம் சந்தோஷமா யிருப்போமா? ஒரு நாடகம் ஆடுவோமா அப்படியே?

கோ. சந்தோஷம்!—அந்த நாடகத்தின் கதையாக நீ ஓடிப்போனதை வைத்துக்கொள்ளலாம்.

பா. சீ! அதுவேண்டாம் இனிமேல், அப்பா, நீ நல்லவனுச்சுதே.

சத்திரத்து பிராமணத்தி வருகிருள்.

ச-பி. ஐயோ! நாராயணு! ராஜகுமாரரே!—

கோ. என்ன அம்மணி? சத்திரத்தம்மா, என்ன சொல்லுகிறீர்கள்?

ச-பி. நான் என்ன சொல்லப் போரேன்! அரமனையிலிருந்து ஒரு பெரிய மனுஷர் வந்திருக்கிருரு, அவர் உங்களோடே பேசணுமாம். அவர் உங்கள் அப்பாவிட மிருந்து வந்ததாக சொல்ராரு.

கோ. அவரை பெரிய மனுஷ்யனுக்குவதற்கு எவ்வளவு பொருள் வேண்டுமோ, அவ்வளவு கொடுத்து, மறுபடியும் என் அப்பாவிடம் அனுப்பும்.

பா. எப்படிப்பட்ட மனிதன் அவன்?

ச-பி. ரொம்ப வயசானவர்,

பா. பாதி இராத்திரியில் வயசானவருக்கு வீட்டில் படுக்கையில் இருப்பதைவிட்டு, வெளியே என்ன வேலே? அவருக்கு நான் பதில் சொல்லி அனுப்பிவிடவா?

கோ. செய் அப்பா, பாலா, செய்.

பா. இதோ துரத்திவிட்டு வருகிறேன் அவனே.

[போகிருன்.]

கோ. இங்கே வாருங்களடா அப்பா!—வாஸ்தவத்தில் நன்ருய்ச் சண்டை போட்டீர்கள்.—பெத்தா, நீயும் நன்ருய்ச் சண்டை போட்டாய்—பரதா நீயும்—நீங்களும் சிங்கங்கள் தானே! இயற்கை யறிவினுல் ஓடிப்போய் விட்டீர்களோ? உண்மையான ராஜகுமாரனேத் தீண்டமாட்டீர்களோ?—சீ! படுக்காளிப் பயல்களே!

கா. வாஸ்தவமாக, மற்றவர்கள் ஓடக்கண்டு நானும் ஓடினேன்.

கோ. இப்பொழுது என்னிடம் வாஸ்தவத்தைச் சொல்லுங்கள். பாலஸ்தம்பன் கத்தி எப்படி இவ்வாறு வெட்டப்பட்டது?

பெ. அவர் தன் பிச்வாவை எடுத்து இவ்வாறு கத்தியை வெட்டி வைத்தார். எப்படியாவது சண்டையில் இப்படி ஆச்சுது என்று நீர் நம்பும்படிச் செய்வதாக சத்தியம் செய்தார், எங்களேயும் அப்படியே செய்யும்படிச் செய்தார்.

கா. ஆம், அன்றியும் ஒரு முயலேக் கொன்று அதன் ரத்தத்தைக் கொண்டு எங்கள் ஆடையெல்லாம் பூசிக்கொண்டு, எங்களே எதிர்த்தவர்களுடைய ரத்தம் உண்மையில், என்றும் சத்தியம் செய்யச் சொன்னுர்.

கோ. இதோ இளேத்தபாலர் வருகிருர். எலும்புக் கூண்டுதானிருக்கிறது பாபம்!—

பாலஸ்தம்பன் மறுபடியும் வருகிருன்.

ஏனப்பா! அட்டஹாச முழுமோசம்! பாலா, உன்னுடைய முழங்காலே நீ பார்த்து எத்தனே வருஷமாச்சுது?

பா. என் முழங்காலையா? நான் உன் வயதாயிருந்தபொழுது உடுக்கையின் மத்தியைப்போ லிருந்தது என் இடுப்பு. ஒரு மணியக்காரன் பெருவிரல் மோதிரத்தின் வழியாகப் புகுந்து போயிருப்பேனே; இந்தப் பெருமூச்சும் துக்கமும் பாழாய்ப் போக! இதல்லவோ என்னைப் பெருக்கச் செய்தது பெருந் துருத்தியைப்போல.—நிரம்ப கெட்ட சமாசாரம் வந்திருக்கிறது. உன்னுடைய தகப்பனாரிடமிருந்து ஒரு மந்திரி வந்திருந்தார். நாளை காலை நீ அரண்மனைக்குப் போகவேண்டும்—அந்தப் பயித்தியக்காரன் ஒருவன் இருக்கிறானே—வடக்கே சகேதநாட்டான் இருக்கிறானே—அவன் படையெடுத்திருக்கிறானும்—அவனோடே—அந்த வேலைநாட்டான், அவன் பாழாய்ப்போக!—அவன் பெயரென்ன?—

கோ. ஓ! கிரந்தபுரனா?

பா. ஆம் ஆம், அவன்தான். அவன் மருமகன் ஒருத்தன் மார்த்தாண்டன்—இந்த மூன்று பெயரும் ஒன்றாய்ச் சேர்ந்திருக்கிறார்களாம். இதைக்கேட்டு உங்கள் தகப்பனார் தலையெல்லாம் நரைத்துப் போச்சுதாம்.—ஏனப்பா, கோனேரி, உனக்கு நிரம்ப பயமாக இல்லையா? உன் உடம்பெல்லாம் அப்படியே சில்லிட்டுப் போகவில்லையா?

கோ. கொஞ்சங்கூட இல்லை. உன்னுடைய இயற்கை யறிவு எனக்கில்லை.

பா. உங்கள் தகப்பனாரிடம் போனவுடன் நன்றாய் வாங்கிக் கொள்ளப்போகிறாய், திட்டு, நாளைகாலை. என் சொற்படி கேட்பதானால், இப்பொழுதே என்ன பதில் சொல்வது என்று பழகி வைத்துக்கொள்.—

கோ. நீ என் தகப்பனாருடைய ஸ்தானத்திலிருந்து என்னைப் பற்றி என்னென்ன கேட்கவேண்டுமோ கேள்—

பா. கேட்கட்டுமா? சந்தோஷம், வா. இந்த நாற்காலிதான் என் சிம்மாசனம், இந்த பிச்வா, என் செங்கோல், இந்த

தலையணை என் கிரீடமா யிருக்கட்டும். ஒரு கிண்ணம் சாராயம் கொடுங்கள் எனக்கு. நான் அழுதுகொண் டிருந்தேன் என்று எல்லோரும் எண்ணும்படியாக, என் கண்களெல்லாம் சிவந்திருக்கவேண்டும். நான் நிரம்ப வருத்தத்துடன் பேசவேண்டும்.—

கோ. சரி, இதோ நான் நிற்கிறேன்.—

பா. இதோ நான் பேசுகிறேன்—மந்திரிகளே, நீங்கள் எல் லாம் ஒருபுறமாய் நில்லுங்கள்—

ச-பி. இது ஒரு நல்ல விளையாட்டுதான்—சின்ன குழந்தை! பாபம்!

பா. துக்கப்படாதே என் பட்டத் தரசியே! கண்ணீர்விட் டென்ன பிரயோசனம்?

ச-பி. ஆ! கெட்டேனே! அசல் மஹாராஜாவைப்போலே முகத் தே வைச்சிண்டிருக்கே இது!

பா. மந்திரிகளே! மிகவும் துக்கப்படுகிற என் அரசியை அந் தப்புரம் அழைத்துச் செல்லுங்கள், கண்ணீரினால் அவ ளது கண்கள் மறைக்கப்படுகின்றன.

ச-பி. நாராயணா! நம்ப தெருக் கூத்தாடிகள் ஆடர மாதிரியா அச்சம் அப்படியே இருக்கே!

பா. பொறு, போதுமினி—அடே கோனேரி! நீ உன் காலத் தை எப்படிக் கழிக்கிறாயென்றும் யாருடன் கழிக்கிறா யென்றும், நான் மிகவும் ஆச்சரியப்படுகிறேன்! நீ என் மகனாய்ப் பிறந்து இவ்வாறு எல்லோரும் உன்னைச் சுட் டிக் காட்டும்படியாக ஏன் நடந்து வருகிறாய்? ஆகாயத் தில் பிரகாசிக்கும் ஆதித்யன் சோம்பேறியாகி சுண்டங் காய் தின்பதா? இக்கேள்வி கேட்கலாகாது. சிங்கள மன் னன்புதல்வன் திருடனாகி, முடிச்சு கத்தரிப்பதா? இக்கேள்வி கேட்கவேண்டும். கோனேரி, ஒரு வஸ்து வைப்பற்றி நீ அநேகமுறை கேள்விப்பட் டிருக்கலாம்,

நம்முடைய தேசத்தில், அதனை அநேகர் தார் என்று அழைக்கிறார்கள், இந்த தாரானது, பெரியோர்களெல்லாம் முற்காலத்தில் எழுதியிருக்கிறபடி, கையில் தொட்டால் ஒட்டிக்கொண்டு அசங்கியப் படுத்தும், அது போலவே உனது தற்கால சகவாசமும் உன்னைக் கெடுக்கிறது. ஏனெனில், அப்பா கோனேரி, இப்பொழுது நான் குடிவெறியில் பேசவில்லை, துக்கத்தின் மிகுதியாலே பேசுகிறேன்; கோபமாய்ப் பேசவில்லை, வருத்தத்துடன் பேசுகிறேன்.—ஆயினும் பல சமயங்களில் உன்னுடன் நற்குணம் வாய்த்த சீமான் ஒருவன் பழகி வருவதைப் பார்த்திருக்கிறேன்.—ஆனால், அவன் பெயர் எனக்குத் தெரியாது.

கோ. அவன் எப்படி இருப்பான்? மஹாராஜா அவர்கள் கொஞ்சம் தயைசெய்து சொல்லவேண்டும்?

பா. நல்ல பெரிய மனுஷ்யன், உண்மையில் உடல் கொஞ்சம் பெருத்திருப்பான், முகமலர்ச்சி யுடையவன், கண்பார்வைக்கு நன்றா யிருப்பான், கம்பீரமான நடையுடையவன், நான் நினைக்கிறபடி அவன் வயது சுமார் ஐம்பது இருக்கும், ஒருவேளை கிட்டத்தட்ட அறுபதிருக்கலாம்.—ஆ! இப்பொழுது எனக்கு ஞாபகம் வருகிறது, அவன் பெயர் பாலஸ்தம்பன். அவன் மிகுந்த யோக்கியனா யில்லாவிட்டால், நான் மோசம்போயிருக்க வேண்டும். ஏனெனில் அவன் முகப் பார்வையிலே அவனது சிறந்த நற்குணம் விளங்குகிறது; பழத்தைக் கொண்டு மரத்தை அறிவதானால், மரத்தைக் கொண்டு பழத்தை அறிவதே போல், நான் கட்டாயமாய்க் கூறுவேன், அந்த பாலஸ்தம்பனிடம் சிறந்த நற்குண மிருக்கிற தென்று. அவனோடு மாத்திரம் சகவாசம் செய், மற்றவர்களை யெல்லாம் துரத்திவிடு. பிறகு—துஷ்டப்பயலே, இப்பொழுது கூறுவாய் என்னிடம்—இந்த ஒருமாசகாலமாக எங்கே போயிருந்தாய்?

கோ. இதுதானே நீ மஹாராஜாவைப்போல் பேசுவது? நீ என்னைப்போல் பேசு, நான் மஹாராஜாவைப்போல் பேசுகிறேன்.

பா. என்னை என் சிம்மாசனத்தினின்றும் இரக்கிவிடப்போகிருயா என்ன? நான் மஹாராஜாவைப்போல் பேசின கம்பீரத்துடன் நீ பேசுவாயானால், என்னைத் தூக்குப் போடட்டும்!

கோ. சரி, இதோ உட்கார்ந்தேன்.

பா. இதோ நான் நிற்கிறேன்—நீங்கள் தீர்மானம் பண்ணுங்களப்பா.

கோ. அடே, கோனேரி! எங்கிருந்து வருகிருய் நீ?

பா. ராஜாதி ராஜனே! கிழக்கு நாட்டிலிருந்து.

கோ. உன்னைப்பற்றி நான் கேள்விப்படும் பிராதுகள் மிகவும் கெடுதியாயிருக்கின்றன.

பா. ஈசன்மீதாணை, அரசே, அவ்வளவும் பொய்.

கோ. பொய்யாகப் பிரமாணம் செய்கிருயா துஷ்டப்பயலே என் முன்பாக! இனிமேல் என் கண்ணெதிர் வராதே. நீ மிகவும் கெட்டுப்போ யிருக்கிருய். பெருத்த கிழப்பேயொன்றால் நீ பிடிக்கப்பட்டிருக்கிருய்! அந்த மனிதனுடனேயே உனக்கு எப்பொழுதும் சகவாசம். அந்த பாபங்கள் நிறைந்த கோணிப்பையுடன், கெடுதிகளெல்லாம் குடிகொண்டிருக்கும் குண்டோதரனுடன், அந்த பெரும் சாராயப் பிப்பாயுடன், தலையெல்லாம் நரைத்த வயதான பாதகனுடன், ஏன் சகவாசம் செய்கிருய்? எந்நேரமும் சாராயத்தை ருசி பார்த்துக் குடிப்பதற்கன்றி அவன் எதற்குப் பிரயோசனம்? எப்பொழுதும் தின்பதற்கன்றி அவனுக்கு வேறு என்ன வேலை தெரியும்? அவன் புத்தியோ, திருட்டுத்தனம்தான், திருடுவதோ எல்லாப் பொருளையும் தான், யோக்கியமோ, ஒன்றினுமில்லை.

பா. தங்களுடைய அபிப்பிராயத்தை நான் அறியும்படியாகச் சொல்லவேண்டும்—தாங்கள் யாரைப்பற்றிக் கூறுகிறீர்கள்?

கோ. அந்த கொடிய மஹா பாதகன், சிறுவர்களை யெல்லாம் கெடுக்கிறானே, அவன், பாலஸ்தம்பன், தலையெல்லாம் நரைத்துப்போன பிசாசு.

பா. மஹாராஜா, அந்த மனிதனை நான் அறிவேன்.

கோ. நீ அறிவாய் என்று நான் அறிவேன்.

பா. என்னிடமிருப்பதைவிட, அவனிடம் அதிக கெடுதியிருக்கிறதென்று நான் சொல்வேனாயின், நான் அறிந்ததைவிட அதிகமாய்ச் சொல்வதாகும். அவன் வயதானவன் என்பதை அவனுடைய நரைத்த கேசம் ரூபிக்கிறது. அவன் தீயகுணமுடையவன் என்பதை மாத்திரம் நான் கட்டாயமாய் மறுக்க வேண்டும். அவன் பெருத்திருப்பதைப்பற்றி அவனை நீர் வெறுப்பதானால், பிருங்கி மஹரிஷியின்மீதுதான் தாம் பிரியம் வைக்க வேண்டும். மஹாராஜா, பெத்தனைத் துறத்திவிடும், பாதனைத் துறத்திவிடும், பனையனைத் துறத்திவிடும், இனிய பாலஸ்தம்பனையோ, கருணையுள்ள பாலஸ்தம்பனையோ, உண்மையான பாலஸ்தம்பனையோ, சுத்த வீரனான பாலஸ்தம்பனையோ, வயோதிகனாகியும் வீரம் குறையாத பாலஸ்தம்பனையோ, அவனை மாத்திரம் துறத்தாதீர்! உம்முடைய குமாரன் கோனேரியின் சகவாசத்தை விட்டு—துறத்தாதீர்! அழகாய்ப் பெருத்திருக்கும் பாலஸ்தம்பனைத் துறத்திவிட்டால், இவ்வுலக வின்பத்தையெல்லாம் விட்டுத் துறத்தி விடுகிறீர் உமது குமாரனை—

கோ. அப்படியே செய்கிறேன் பார்.

[வெளியில் கதவைத் தட்டுகிற சப்தம்.]

பரதன் வேகமாக ஓடி வருகிறான்.

ப. ஆ! அரசே! அரசே! கொத்தவால் அநேகம் ஜவான்களுடன் கதவண்டை வந்திருக்கிறார்.

பா. அடே! போடா வெளியே!—நாடகத்தை முடியப்பா. பாலஸ்தம்பனைப்பற்றி இன்னும் நான் அதிகமாகச் சொல்லவேண்டிய திருக்கிறது.

சத்திராத்து பிராமணத்தி வேகமாய் வருகிறாள்.

ச-பி. ஐயோ! அரசே! அரசே!

கோ. என்னடா இது கஷ்டம்! எந்த பிசாசு வந்திருக்கிறது? என்ன சமாசாரம்?

ச-பி. கொத்தவால் ஜவான்களை யெல்லாம் கூட்டி வந்திருக்கிறாரு. இந்த வீட்டெ பரிசோதனெபோட வந்திருக்கிறாகளாம். அவாளெ உள்ளே விடவா நான்?

கோ. பாலா, இதோ நீ போய் திரைக்குள் மறைந்துகொள்.—மற்றவர்களெல்லாம் மேலே போயிருங்கள்,—இப்பொழுது நான் மிகவும் யோக்கியனைப்போல் வேஷம் போடவேண்டும்.

பா. நான் போய் ஒளித்துக்கொள்ளுகிறேன்.

[கோனேரியும் பனையனும் தவிர மற்றவர்களெல்லாம் போகிறார்கள்.]

கோ. கூப்பிடு கொத்தவாலை.

கோத்தவால் வருகிறான்.

என்ன ஐயா கொத்தவால், என்ன வேண்டு முமக்கு என்னிடம்?

கோ. அரசே, முதலில் என்னை மன்னிக்க வேண்டும் தாம்—இந்த வீட்டிற்கு வந்திருக்கும் சிலரைப் பின் தொடர்ந்து வந்திருக்கிறோம்—

கோ. யார் அந்த மனிதர்கள்?

கோ. ஒருவனை நன்றாய்த்தெரியும்.—எல்லோருக்கும்—அரசே, உடல் மிகவும் பெருத்திருப்பவன்.

கோ. அந்த மனிதன் இங்கில்லை என்று என் உறுதிமொழியைக் கொள்ளும், ஏனெனில் நானே அவனை இப்பொழுது கொஞ்சம் வேலையாய் அனுப்பி யிருக்கிறேன். ஆகவே கொத்தவால், நாளைத்தினம் போஜன வேளைக்கு உம்மிடம் அவனை அனுப்புவதாக வாக்களிக்கிறேன். அவன்மீது வந்திருக்கும் பிராதைப்பற்றி நீராவது வேறு யாராவது அவனை விசாரித்துக் கொள்ளலாம். ஆகவே தாம் இனி வீட்டைவிட்டுப் போகவேண்டுகிறேன்.

கோ. அப்படியே இளவரசே, இந்தக் கொள்ளையில் இரண்டு பெரிய மனுஷர்கள் முன்னூறு பொன் பறி கொடுத்திருக்கிறார்கள்.

கோ. இருக்கலாம், அவன் அவர்களிடமிருந்து கொள்ளையடித்திருந்தால் அதற்கு அவன் உத்தரவாதமாகட்டும். ஆகவே, போம் இனி.

கோ. நமஸ்காரம், நான் வருகிறேன் இளவரசே.

[**போகிறான்.**]

கோ. நம்முடைய கோயில் கோபுரம் போல் இந்த தடி மொத்தை யெல்லோருக்கும் தெரியும். போய் அவனை அழைத்துவா.

ப. ஏ! பாலஸ்தம்பா! திரைக்குப் பின்னால் தூங்குகிறான், நன்றாய் குதிரையைப்போல் குறட்டைவிட்டுக்கொண்டு.

கோ. துருத்தியைப்போல் மூச்சு விடுகிறான் கேள்—அவனுடைய ஜேபியைத் தேடிப்பார்.

[**பணியன் தேடுகிறான்.**]

என்ன கண்டு பிடித்தாய்?

ப. இளவரசே, காகிதங்கள் தவிர வேறொன்றையும் காணேம்.

கோ. அவைகள் என்னவென்று பார்ப்போம், படி அவைகளை.

ப. [படிக்கிறான்.]

பத்து, கொழுக்கட்டைக்கு	0—2—6
பத்து, மேற்படிக்கு துவையல்	0—0—6
பத்து, இரண்டு பிப்பாய் சாராயம்	6—8—0
பத்து, தோசையும் சாராயமும் சாப்பாட்டிற்குமேல்	3–12—0
பத்து, ரொட்டி	0—0—3

கோ. என்ன கோரம்! இவ்வளவு சாராயத்திற்கும் காலணு ரொட்டியா! இன்னும் ஏதாவதிருந்தால், மறைத்துவை. பிறகு சாவகாசமாய் வாசித்தறியலாம். காலை வரையில் அங்கேயே தூங்கட்டுமவன். காலையில் நான் அரண்மனைக்குப் போகிறேன். நாம் எல்லாம் சண்டைக்குப் போக வேண்டியதுதான். நாம் திருடிய பணத்தை வட்டியுடன் கொடுத்துவிடவேண்டும். காலையில் என்னை வந்து பார். போய்வா, பணியா.

ப. நமஸ்காரம், வருகிறேன், இளவரசே.

[போகிறார்கள்.]

காட்சி முடிகிறது.

கோனேரி அரசகுமரன்

பிரஹஸனம் முற்றியது.

கண்டு பிடித்தல்

பாத்திரங்கள்

வித்யாலயன்	...	... ஓர் விதூஷகன்.
கணேசதாசன் குமாரதாசன்	...	... அரண்மனை வேலையாட்கள்.

ஒரு ஸாயபு.

இடம். முதற் காட்சி.—ஓர் வீடு.

இரண்டாம் காட்சி.—ஓர் சத்திரம்.

மூன்றும் காட்சி.—ஓர் வீட்டின் புறம்.

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

கண்டு பிடித்தல்

முதல் காட்சி.

இடம்—ஓர் வீடு.

குமாரதாசனும், வித்யாலயனும் வருகிறார்கள்.

கு. என்ன ஐயா அது, விதூஷகரே? உங்களுக்குத் தெரியாதிருக்குமா? எந்நேரமும் அவரோடே இருக்கிறவரு நீங்க, உங்களுக்குத் தெரியாதிருக்குமா? நானு விசாரிச்சதுலே, இந்த ஊருக்குத்தான் வந்ததாக சொல்ராங்க. அதுக்குத் தகுந்தாப்போலெ, நீங்க இங்கே வந்திருக்கைங்க.

வி. இதென்னடா, தர்ம சங்கடமாக வந்திருக்கிறது! எனக்குத் தெரியாதடா அப்பா அவரிருக்கிற இடம். நானும் உன்னைப்போலத்தான் தேடுகிறேன் அவரை.

கு. அதெல்லாம் நம்பமாட்டேடே நானு—நானு சொல்ரத்தெ கேளுங்க, மஹாராஜா கொடுக்கரத்லே பாதி கொடுத்தூடரே நானு உங்களுக்கு. அவரிருக்கிற எடத்தெ மாத்ரம் சொல்லிடுங்கொ.

வி. ஆமாம், சொன்னபிறகு நீ ஏமாற்றிவிட்டால் என்ன செய்கிறது நான்?

கு. என்ன ஐயா, ஒங்களெ ஏமாத்துவனு நானு? இந்தாங்க, இந்த நூறு பொன்னெ அச்சாரமா வைச்சிகிங்க.

[கொடுக்கிறான்.]

வி. இந்தா, இப்படிவா, இதை நிரம்ப ரஹஸ்யமாக வைத்துக்கொள்; ஒருவரிடமும் சொல்லாதே. சொன்னயோ, என் தலை போய்விடும்.—ராஜகுமாரர் இங்கேதான் வந்திருக்கிறர், ஒரு பெண்பிள்ளை வேஷம் போட்டுக்கொண்டு; எல்லா தேசங்களுக்கும் போய், அந்தப்புரங்களிலே இந்த வேஷத்தோடு நுழைந்து, எந்த ராஜகுமாரி நிரம்ப அழகாயிருக்கிறள், என்று பார்த்து கல்யாணம் பண்ணிக்கொள்ளவேணும் என்று. நான் தூரத்திலே இருந்து ஆளைக் காண்பிக்கிறேன்—கவனித்துக்கொள்.

கு. ஆமாம், அவருதான் இண்ணு எனக்கு என்னமா நிச்சியமா தெரியரது? அப்பறம் ஏதாவது தப்பா யிருந்தா? நேரா பேசிபாத்தா ரெண்டு வார்த்தையாவது, தெரிஞ்சிபூடும்.

வி. ஆ! அதற்கு ஒரு யுக்தி சொல்கிறேன் கேள்.—உன்னைப் பார்த்தாரென்றல் ஓடிப்போய்விடுவார். ஆகவே நீயும் ஒரு பெண்பிள்ளையைப்போல் வேஷம் போட்டுக்கொண்டு வா இங்கே. நான் மெல்ல ஏதாகிலும் சாக்கு சொல்லி இங்கே அவரை அழைத்துக்கொண்டு வருகிறேன்.

கு. ஆ! அப்படியே செய்யுங்க. இதோ போயி ஒரு நிமிஷத்துலே, நானு பொம்மனட்டி வேஷம் போட்டுகினு வந்தூடரே.

[போகிறன்.]

மற்றொருபுறமாக கணேசதாசன் வருகிறன்.

வி. [ஒரு புறமாக] நாம் ராஜகுமாரரைக் கண்டுபிடிக்கப் போகிறேமோ என்னவோ, ஆயிரம் பொன் நமக்குக் கிடைக்கிறதோ என்னவோ—தத்காலம் நூறு பொன் கிடைத்துப்போச்சு!—அதோ கணேசதாசன் வருகிறன், அவனிடம் இருக்கிறதையும் பிடிங்கிக்கொண்டு, ஒரு வேடிக்கை பண்ணவேணும்.

க. என்னு ஐயா அது விதூஷகரே! தினம் எமாத்திகினு வர்ரைங்க, ராஜகுமாரரெ காட்ரே காட்ரே இண்ணிகினு.

வி. ஆமாமடா அப்பா, நான் கேட்டதைக் கொடுத்தால் அவரிருக்கிற இடத்தைச் சொல்கிறேன்.

கு. நான் தான் எனக்கு ஆப்பிடறத்லே பாதி கொடுக்கிறேன் இண்ணனே.—

வி. அப்புறம் சமாசாரத்தைத் தெரிந்துகொண்டு நாமத்தைப் போட்டால், நான் என்ன செய்கிறது?

க. இந்தாங்கையா ஆனு, இந்த நூறு பொன்னெ வைச்சிங்க—இப்பவாவது சரிதானு? ஓங்களெ நானு மோசம் பண்ணுவனு அப்படி?

வி. இப்படிவா சொல்கிறேன்; இதை ரஹசியமாக வைத்துக் கொள். நான் சொன்னேன் என்று தெரிந்ததோ, என் தலை போய்விடும். ராஜகுமாரர் இங்கேதான் வந்திருக்கிறார்—ஒரு பெண்பிள்ளை வேஷம் போட்டுக்கொண்டு—யாரும் கண்டுபிடிக்கமாட்டார்கள் என்று.

க. என்னு ஐயா அது, அவராவது பொம்மனட்டி வேஷம் போட்டுகிறதாவது? என்னு, ஓங்க கதெயெ ஆரம்பிக்கிறைங்களா, என்னு?

வி. உனக்குச் சந்தேகமாக இருந்தால், நேராக அழைத்துக் கொண்டுவந்து காட்டுகிறேன்—ஆனால் ஒரு யோசனை.—உன்னைத் தெரியும் அவருக்கு; நேராகப் பார்த்துவிட்டால் மறைந்து போய்விடுவார்—நான் ஒரு யுக்தி சொல்கிறேன் கேள்—நீ ஒரு புடைவை கட்டிக்கொண்டு, பெண்பிள்ளையைப்போல் வேஷம் போட்டுக்கொண்டுவா இங்கே சீக்கிரம். நான் ஏதாகிலும் சாக்குச் சொல்லி அவரை இங்கே அழைத்துக்கொண்டு வருகிறேன். நீ நேராகப் பேசித் தெரிந்துகொள்.

க. அது நல்ல யோசனெ, எனக்கும் சந்தேகம் இருக்காது.

வி. ஆனுல் போய் சீக்கிரம் வேஷம் போட்டுக்கொண்டு வா.

க. இதோ வந்துாட்டேன். [விரைந்து போகிருன்.]

வி. இந்த இரண்டு முண்டங்களேயும் முட்டிக்கொள்ள விட்டு விட்டு, நாம் ஓடிப்போகவேணும், இந்த ஊரை விட்டு,

குமாரதாசன் பெண் உடையில் வருகிருன்.

வி. அடடா! நீயா! எனக்கே அடையாளம் கண்டு பிடிக்க முடியவில்லேயே! ராஜகுமாரர் வேறே எங்கேயோ போய்த் தேடுவானேன்? உன்னேயே கல்யாணம் பண்ணிக் கொள்ள வேண்டும் என்று கேட்பார்போல் இருக் கிறதே!

கு. என்ணு ஐயா, விதூஷகரே விளேயாடரைங்க!

வி. அதிருக்கட்டும், அவசரப்பட்டு ஒன்றும் கெடுத்துவிடாதே, மெல்ல முகத்தைக் காட்டாமல் பேசித் தெரிந்துகொள்.

கு. ஏ! எம்மொகத்தே காட்டுவனு! முக்காடே நண்ணு மூடிக்கமாட்டேன்!

வி. ஆமாம், அவரும் வேஷம் போட்டுக்கொண்டு இருக் கிருரே, அவரை நீ எப்படிக் கண்டு பிடிப்பாய்?

கு. அவரு கழுத்துலே ஒரு மச்சம் இருக்குதே, அத்தே மொள்ளமா பாத்துட்டேனிண்ணு, நிச்சயமா போவுது.

வி. அது நல்ல யுக்திதான். வரச்சொல்லி இருக்கிறேன் அவரை இங்கே—ஒரு நல்ல அழகான பெண் இருக் கிருள், நீங்கள் வந்து பாருங்கள் என்று. அதோ அவர் வருகிருர்போ லிருக்கிறது—நீ ஒரு பக்கமாக முகத்தைத் திருப்பிக்கொண்டு இரு.

[குமாரதாசன் அங்ஙனமே செய் கிருன்.]

கணேசதாசன் பெண் உடையில் வருகிருன்.

வி. [அவனிடம் போய்] அதோ இருக்கிருர் ராஜகுமாரர்—அவசரப்படாதே—மெல்ல பேசித் தெரிந்துகொள்; அடை

யாளம் வேண்டுமென்றால், அவர் கழுத்தில் ஒரு மச்சம் இருக்கிறதே தெரியுமா ? அதைப் பார்த்துக்கொள்.

[விரைந்து போகிறான்.]

கு. } [கனைக்கிறார்கள்.]
க. }

க. யாரம்மா, நீங்க புதுசா இருக்குது ?

கு. நானு அசலூரு—நீங்க எப்பவந்தைங்கோ இங்கே ?

க. } [ஒரு புறமாய்] என்னடா வேறே கொரலா இருக்குது !
கு. }

க. அது ஏம்மா மூஞ்சியே இப்படி மூடிக்கினு இருக்கைங்களே ?

கு. நீங்க என் இப்படி மூஞ்சியெ மூடிக்கினு இருக்கைங்களே ?

க. } [ஒருவன் முக்காட்டை மற்றொருவன் எடுத்துவிட்டு] ஏ ! ஏண்
கு. }

டா தடியா ! நீயா ?

க. அடடா ! ஏமாத்திவுட்டாண்டா, அந்த விதூஷகன் !

கு. ஆமாண்டா, நூறு பொன்னும் பூட்டுதடா !

க. எங்கிட்டகூட இருந்து நூறு பொன்னு தூக்கிகினு பூட்டாண்டா !

கு. இப்போ என்னடா செய்யறது நம்போ ?

க. ரெண்டுபேரும் ஓர்த்தர் காதே ஓர்த்தர் பிடிச்சுகினு, "உன்னாலே நான் கெட்டேன், என்னாலே நீ கெட்டே" இண்ணு தோப்பளம் போடலாம் வா ! அவன் இந் நேரம் எங்கேயோ மறைஞ்சு பூட்டிருப்பான்.

[போகிறார்கள்.]

காட்சி முடிகிறது.

இரண்டாம் காட்சி.

இடம்—ஓர் சத்திரம்.

வித்யாலயன் ஒரு விருத்தபுருஷன் வேஷத்தில் வருகிறான்.

வி. இந்த மடையர்களிடமிருந்து தெரிந்துகொள்ள வேண்டியதெல்லாம் தெரிந்துகொண்டேன். இனிமேல் இவர்களுக்கு நாமத்தைப் போட்டுவிட்டு நாம் முந்திக்கொள்ள வேண்டியதுதான். கன்னமாபுரத்திற்குத்தான் போயிருக்கிறார்போ லிருக்கிறது, நம்முடைய ராஜகுமாரர்; நாம் போய் முன்னே கண்டு பிடித்தால், நமக்கு அகப்படும் அந்த நூறுபொன். இல்லாவிட்டால், இவர்கள் இரண்டு பெயரில் ஒருவன் முந்திக்கொள்வான். போகும்போது சும்மா போகக்கூடாது. இவர்கள் இரண்டு பெயரிடமும் இன்னும் இருக்கிறதை யெல்லாம் சுற்றிக்கொண்டு போகவேணும்.—அதோ வருகிறான் ஒருவன்.

[உட்கார்ந்து ஜபம் செய்வது போல் நடிக்கிறான்.]

குமாரதாசன் வருகிறான்.

கு. குருமஹாராஜ், நமஸ்காரம்.

வி. அப்பனே, குழந்தாய் அந்த மூலிகை அகப்பட்டதா ?

கு. குருமஹாராஜ், ஊர்லே ஒரு கடெ பாக்கியில்லே, எங்கேயும் அகப்பட்லே.

வி. பம் ! பம் ! மஹாதேவ் !

கு. குரு மஹாராஜ், அது போனாபோவுது, இத்தினி நாளா உங்களெ அடுத்து சிஸ்ரூஷெ செய்ததுக்கு, அந்த ஞான திஷ்டி குளிகெ மாத்ரம் ஒண்ணு பண்ணி குடுத்தைங்கண்ணா, அத்தெ கொண்டு, நானு எங்க ராஜ கொமாரரு இருக்கிற இடம் கண்டு பிடிச்சுக்குவேன்.

வி. அப்பனே, அப்படியே ஆகட்டும், உனது பணிவிடைக்கு மெச்சினேம்; இன்றைத்தினம் நல்லநாள், உனக்கு அந்த குளிகை செய்து கொடுக்கிறேம்.

கு. எல்லாம் குருமஹராஜ் பாக்கியம்.

வி. ஆனல் நான் சொல்லுகிறபடி செய்யவேண்டும், நீ அருகாமையிலுள்ள ஆற்றுக்குப்போய், சீக்கிரம் ஸ்நானம்செய்து, ஒற்றை வஸ்திரம் அணிந்து, அங்கே பிள்ளையார் கோவிலுக் கெதிரில் இருக்கும் மண்ணில், ஒரு பிடி, ஒருவருக்கும் தெரியாமல் எடுத்துக்கொண்டுவா. வந்தவுடன், நான் முகத்தை மூடி நிஷ்டையி லிருப்பேன் வாயை மாத்திரம் திறந்துகொண்டு; நீ மூன்றுதரம் என்னை வலம் வந்து, நமஸ்காரம் செய்து, என் வாயில் அந்த பிடி மண்ணைப்போடு தைரியமாய். நான் உனக்கு உத்தரவு கொடுக்கிறேன்; தப்பில்லை இதில். உடனே எனது நிஷ்டை முடிந்தவுடன் அந்த மண்ணுனது நீ வேண்டிய குளிகையாக மாறும்; அதை உனக்குக் கொடுக்கிறேன். பிறகு உன் காரிய ஸித்தியாகும்.

கு. அப்படியே ஆவட்டும் குருமஹராஜ்.

வி. உனது ஆடைகளை எல்லாம் களைந்துவிட்டுப் போ; ஒற்றை வஸ்திரத்துடன் வரவேண்டும்.

கு. அப்படியே, அப்படியே. இதோ இங்கே ஒரு பக்கமா வைச்சுட்டுப் போறேன்: [அவ்வாறே செய்கிறன்.]

வி. [எழுந்துபோய் அவன் பையிலிருந்த பணத்தையெல்லாம் எடுத்துக்கொண்டு] என்ன அதிகமாகக் காணேம். ஒரு ஐம்பது பொன்தானிருக்கும்—அடடா அவனும் வருகிறன்! சரி, நல்ல யுக்தி செய்தோம்.

[மறுபடி நிஷ்டையி லிருப்பது போல் நடிக்கிறன்.]

கணேசதாசன் வருகிறான்.

க. குருமஹாராஜ், நமஸ்காரம்; எங்கெங்கயோ போயி பிராஞ்சிகினு வந்தே, முப்பத்தெட்டு பொன்தா ஆப்டுது, அத்தெ வச்சிகினு, எப்படியாவது அந்த தூரதிஷ்டி குளிகெ பண்ணி கொடுத்தூடணும்நீங்க.

வி. தம்பி, அப்படியே ஆகட்டும். இன்றைக்கு நமக்கு உன் மீது அநுக்கிரஹம் பிறந்திருக்கிறது. இப்படி வந்து உட்கார்.

க. இந்தாங்க அந்த முப்பத்தெட்டு பொன்.

வி. நமக்கென்னத்திற்கு அது? உன்னுடைய பக்தியைச் சோதிப்பதற்காக அப்படி கேட்டேன். நீயே வைத்துக் கொள். நான் போய் ஆற்றிலே ஸ்நானம் செய்துவிட்டு மந்திர உச்சாடனம் பண்ணிக்கொண்டு வருகிறேன். நீ பரிசுத்தமா யிருக்கவேண்டும். காலையில் ஸ்நானம் செய்தாயா?

க. ஆச்சுது, குருமஹாராஜ்.

வி. சந்தோஷம். இந்த ஆடையைக் களைந்துவிடு. என்னுடைய சட்டையைப் போட்டுக்கொள். இந்த காஷாய வஸ்திரத்தால் முகத்தை மூடிக்கொள். நான் உனக்கு மந்திரோபதேசம் செய்கிறேன். அதை நான் வருகிற வரையில் மனதில் த்யானம் செய்துகொண்டே யிரு. வாயை மாத்திரம் திறந்துகொண்டிரு. நான் வந்தவுடன் அந்த குளிகையை உன் வாயில் போடுவேன். அதை அப்படியே அடக்கிக்கொள்ளவேண்டும். பிறகு உன் காரியம் ஸித்தியாகும்.

க. அப்படியே குருமஹாராஜ். [அங்ஙனமே செய்கிறான்.]

வி. கண்ணை மூடிக்கொள். த்யானம் ஆரம்பி.

[அவன் அவ்வாறு செய்ய, அவனுடைய துணியை எடுத்துக் கொண்டு விரைவில் மறைகிறான்.]

குமாரதாசன் வேகமாக வருகிறான்.

கு. [மூன்றுதரம் பிரதக்ஷணம் செய்து கையிலிருக்கும் பிடிமண்ணை கணேசதாசன் வாயில் போடுகிறான்.] குருமஹாராஜ், குளிகை கிருபை செய்யவேண்டும்!

க. தூத்தெரி!—யார்டா அது, வாயிலே மண்ணெ போடரது!

[அவன் கன்னத்தில் அடிக்க, இருவரும் சண்டை போடுகிறார்கள்.]

கு. ஏண்டா! நீயா கணேசதாசா!

க. அடே! நீயா குமாரதாசா!

கு. எங்கே அந்த ஸித்த புருஷரு?

க. ஓஹோ! சரிதான். அடே! அந்த வித்யாலயனுதாண்டா இருக்கணும்! நம்ப ரெண்டுபேரையும் ஏமாத்திபுட்டாண்டா. ஒரு குளிகெ பண்ணித்தர்ரேன் ராஜகுமாரரெக் கண்டுபிடிக்க, கண்ணெ மூடிக்கினு வாயைத் தொரந்துகினு இரு, நான் குளிகெ கொண்ணாந்து வாயிலே போட்ரே, இண்ணு சொன்னாண்டா!—அடே இர்ரா! இந்த பொன் இருக்குதா பாக்கலாம்.—சரிதான்! அத்தெயும் தூக்கிகினு பூட்டான்!

கு. எனக்கும் அப்படிதாண்டா சொன்னான், ஆத்துக்குப் போய் ஸ்நானம் பண்ணி, ஒரு புடி மண்ணெ கொண்ணாந்து என் வாயிலே போடு, நான் ஒரு குளிகெ பண்ணித்தர்ரேண்டா இண்ணு. அந்தமட்டும் என் சொக்காயே தூக்கிகினு போவாப்பூட்டானே! அதுலே என் பணம் வைச்சிருக்கிறேண்டா.

க. அத்தெ பார்ரா, அதுலே இருக்குதா இண்ணு.

கு. அது அவனுக்கு தெரியாதுடா—அடடே!

[பணம் களவு போனதைக் கண்டு]

சரிதான், பூட்டுதடா பணமும்! அடடே! என் கண்லே
மண்ணெ போட்டாண்டா!

க. அது பரவாயில்லியேடா, என் வாயிலே மண்ணெ போட்
டாண்டா!

கு. நானு ஒண்ணு சொல்றேன் கேளு. நம்ப ராஜகுமாரனெ
கண்டு பிடிக்கா போனுபோவுது; இவனெ கண்டு புடிச்சி,
மின்னே பழி தீர்த்துக்கோணும். வா, சீக்கிரம் போ
வோம். ரொம்பதூரம் போயிருக்கமாட்டான்.

[போகிறார்கள்.]

காட்சி முடிகிறது.

மூன்றாம் காட்சி.

இடம்—ஒரு வீட்டின் புறம்.

ஒரு துலுக்கனைப்போல் வேஷம் போட்டுக்கொண்டிருக்கும் வித்யாலயனை கணேசதாசனும் குமாரதாசனும் கையைப்பிடித்து இழுத்துக்கொண்டு வருகிறார்கள் பலவந்தமாக.

வி. அரே ரே ரே, தும் கோன்? தும் கோன்?

க. இனிமேலெ அந்த கதையெல்லாம் ஒதவாது. இனி என்ன சொன்னாலும் உடமாட்டோம்.

[தாடியை இழுத்துவிட்டு அவன் வேஷத்தைக் கலைத்து விடுகிறார்கள்.]

கு. எங்களே ஏமாத்தி வாங்கின பொன்னெ யெல்லாம் முன்னேவையுங்க இங்கே. இல்லாவிட்டா உடமாட்டோம்.

வி. இப்போ என்ன செய்யவேணும் என்கிறீர்களடா அப்பா?

கு. எங்ககிட்ட ஏமாத்தி சம்பாதிச்ச பொன்னே யெல்லாம் வையுங்க முன்னே.

வி. அது என்னமோ முடியாத சமாசாரம். அது அப்பவே செலவழிந்து போச்சே.

க. அதெல்லாம் பொய். ஆனா உடமாட்டோம், அவ்வளவு தான்.

வி. நான் சொல்வதைக் கேளுங்கள், போனது என்னமோ போனதுதான். அது வரப்போகிறதில்லை. அதற்குப் பதிலாக உங்களுக்கு ஆயிரம் பொன் வருகிற வழி காட்டுகிறேன், என்னை விட்டுவிடுங்கள்.

க. என்ன வழி? முன்னே சொல்லுங்க.

வி. என்னை விடுங்கள் சொல்கிறேன்.

க. ஏ! உங்களெ உட்டா டும்கி கொடுப்பைங்களே! முன்னே சொல்லுங்க.

வி. ராஜகுமாரர் இப்பொழுது எங்கே இருக்கிறார் தெரியுமா உங்களுக்கு?

கு. என்னமோ, இந்த ஊர் ராஜகுமாரி சுயம்வரத்துக்கு வேஷம் போட்டுகினுவந்து, வில்லை வளைச்சாரா. அப்பறம் இந்த தேசத்து ராஜா, என்னெ ஏன் மோசம் பண்ணெ இண்ணு சொல்லி, பொண்ணெ கண்ணாலம் பண்ணி கொடுக்கமாட்டேன் இண்ணிட்டாராமே.

வி. அப்புறம் எங்கே போனார்?

க. அதான் தெரியலே.

வி. அவர் இருக்கிற இடத்தைச் சொல்லிவிடுகிறேன், விட்டு விடுங்கள்.

க. ஆவட்டும் ஆவட்டும்.

வி. இந்த மாதிரி கல்யாணம் ஆகவில்லை என்று வெட்கப் பட்டு, யாருக்கும் தெரியாமல் இந்த ஊரைவிட்டுப் போய் விடவேண்டுமென்று, ஒரு துலுக்கனைப்போல் வேஷம் போட்டுக்கொண்டு, நீயும் ஒரு துலுக்கனைப்போல் வேஷம் போட்டுக்கொண்டு இந்த இடத்தில் வந்து சேர், நாம் இருவருமாக ஓடிப்போய்விடலாம், என்று சொன்னார், என்னிடம்.

க. நிஜம்பா?

வி. அதோ மெல்ல வருகிறார் பாருங்கள் நீங்களே. நான் இங்கே இருந்தால், நான்தான் காட்டிக் கொடுத்தேன் என்று கோபித்துக்கொள்வார். என்னை விட்டுவிடுங்கள் —நீங்கள் போய்க் கண்டு கொள்ளுங்கள்.

க. ஆமாம்—நியாயம்தான்.

[**வித்யாலயனை விட்டுவிடுகிறார்கள்.**]

வி. நான் வருகிறேன் ; என்னை மாத்திரம் மறந்துவிடாதீர்கள். ஒரு பங்கு கொடுக்கவேண்டும் கிடைப்பதில்.

க. அவரா ? பாத்தா, ராஜகுமாரரு ஜாடையா காணுமே ?

வி. அந்த தாடியை இழுத்துவிட்டுப் பாருங்கள் தெரியும்.

க. சரிதான், சரிதான்—நீங்கள் போங்கள்.

வி. [ஒரு புறமாக] அந்த பங்கி சாயபு நன்றாகக் கொடுப்பார், வாங்கிக்கொள்ளுங்கள் !

[விரைந்து போகிறான்.]

ஹுக்கா பிடித்தவண்ணம் ஒரு நிஜமான ஸாய்பு தள்ளாடிக்கொண்டு வருகிறான்.

க. அரசே !

கு. ராஜ குமாரா !

க. மன்னிக்கவேணும் எங்களை.

கு. மஹாராஜா உங்களை காணுமெ ரொம்ப துக்கப்படராரு !

க. ராஜபத்னி சாப்பிடரதே யில்லே !

கு. எப்படியாவது ஊருக்கு தயவு பண்ணணும்.

ஸா. அரே ! சுப்ரஹோ ! தூர்ஜாவ் ! சைதான்கி பச்சா !

க. அடே, என்னடா இது ? கஷ்டமா யிருக்கிறது.

கு. அடே, கணேசா, இங்கேவா ஒரு யுக்தி சொல்றேன். நம்ப மறுபடியும் கிட்டே போயி, அந்த தாடியெ மொள்ள இழுத்தூட்டமுண்ணு, அப்பறம்தான் ஒப்புகுவாரு.

க. ஆமாம்.

[மறுபடியும் அருகில் போகின்றனர்.]

சாயபு, ரொம்ப சலாம் வருதுங்க.

கு. என் சலாம்கூட வருதுங்க.

க. சாய்பு, ஒங்க தாடி ரொம்ப சிக்கா யிருக்குது, கொஞ்சம் சிக்கு வாங்கிவிடரேன்.

கு. நானு இந்த பக்கம் சிக்கு வாங்கிவிடறேன்.

[இருவரும் இரண்டு பக்கமும் சிக்கு வாங்குவதுபோல் தாடியைப் பற்றி இழுக்கிறார்கள்.]

ஸா. அரெரெரெ ! சைத்தான்கி பச்சோ !

[இரண்டு பெயரையும் நன்றாய்ப் புடைக்கிறான்.]

க.
கு. } மறுபடியும் மோசம் பண்ணுண்டா அவன் !

[ஓடிப்போகிறார்கள்.]

காட்சி முடிகிறது.

கண்டு பிடித்தல்

பிரஹசனம் முற்றியது.

The Knavery of Kalappa

AN ADAPTATION OF
MOLIERE'S FAMOUS DRAMA
" The Knavery of Scalpin "

IN TAMIL

BY

Rao Bahadur P. SAMBANDAM, B.A., B.L.,

Author of :

"The Two Sisters," "Galava," "Manohara," "The Curse of Urvasi," "The Merchant of Vanipura," "Fate and Love," " Simhalanatha," "Pushpavalli," "Amaladitya," "Magapathi," "Farces," "Siruthondar," "The Golden Fetters," "True Love," "The Bandit Chief," "Bricks-between" "At any cost," "The Fair Ghost," "The Wedding of Valli," "The Eye of Love," "Vijayarangam," "As you like it," "Ratnavali," "Lord Buddha," "The Tragedy of Silence," "The Good Fairy," "Geetha Manjari," "The True Brother" "As We Sow-So We Reap," "Malavikagnimitra," "Chandrahari," "The Demon Land," "Sabapathy" Part I, "The Pongal Feast" or "Sabapathy" Part II, "A Rehearsal" or "Sabapathy," Part III, "Blessed in a Wife," "The Dancing Girl," "Subbadra—Arjuna," "Karna the Giver," "Sahadeva's Stratagem," " The Surgeon General's Prescription" " Vichu's Wife," "Sakuntala," "Vikramorvasi." "The Point of View" " The Two Selves" "The Tragic Denouement " " The Sub-Asst. Magistrate of Sultanpet " " Harischandra, " " Blind ambition " " Markandeya ", "Sarangadhara" "The Two Friends," etc., in Tamil, and "Harischandra," and " Yayathi" in English :

FIRST EDITION.

Madras

PRINTED BY INDIA PRINTING WORKS.

Copy Right] 1931 [Price Per Copy As. 10.

காளப்பன் கள்ளத்தனம்

இந்த நாடகம்

மாலியர் எனும் நாடகாசிரியர் பிரெஞ்சு பாஷையில் எழுதிய

தி நேவரி ஆப் ஸ்காபின்

என்னும் நாடகத்தை அனுசரித்து

ராவ்பஹதூர்

ப. சம்பந்த முதலியார், பி.ஏ., பி.எல்.,

அவர்களால் தமிழில் இயற்றப்பட்டது.

இந்நூலாசிரியரால் இயற்றப்பட்ட மற்றத் தமிழ்நூல்கள் :—

லீலாவதி - சுலோசனை, சாரங்கதரன், மகபதி, மனோஹரன், நற்குல தெய்வம், ஊர்வசியின் சாபம், இடைச்சுவர் இருபுறமும், என்ன நேர்ந்திடினும், விஜயரங்கம், காதலர் கண்கள், பேயல்ல பெண் மணியே, தாசிப்பெண், மெய்க்காதல், பொன் விலங்குகள், சிம்ஹளநாதன், விரும்பிய விதமே, சிறுத்தொண்டர், கால வரிஷி, ரஜபுத்ரவீரன், உண்மையான சகோதரன், ரத்னாவளி, புஷ்பவல்லி, கீதமஞ்சரி, பிரஹசனங்கள், அமலாதித்யன், சபாபதி முதற்பாகம், பொங்கல் பண்டிகை அல்லது சபாபதி இரண்டாம் பாகம், ஓர் ஒத்திகை அல்லது சபாபதி மூன்றும் பாகம், வள்ளி மணம், முற் பகற் செய்யின் பிற்பகல் விளையும், புத்த அவ தாரம், விச்சுவின் மனைவி, வேதாள உலகம், மனைவியால் மீண்டவன், சந்திரஹரி, சுபத்திரார்ஜுனா, கொடையாளி கர்ணன், சஹதேவன் சூழ்ச்சி, நோக்கத்தின் குறிப்பு, இரண்டு ஆத்மாக்கள், சர்ஜன் ஜெனரல் விதித்த மருந்து, மாளவிகாக்னிமித் ரம், விபரீதமான முடிவு, சுல்தான் பேட்டை சப் அசிஸ்டெண்ட் மாஜிஸ்டிரேட், சகுந்தலை, விக்கிரமோர்வசி, முதலியன.

முதற் பதிப்பு.

சென்னை இந்தியா அச்சுக்கூடத்தில்
அச்சிடப்பட்டது.

காபிரைட்.] 1931 [விலை அணா 10.

INSCRIBED

THE BELOVED MEMORY OF

MY PARENTS

P. VIJIARANGA MUDALIAR

AND

P. MANICKAVELU AMMAL

AND

MY FRIEND

C. RANGAVADIVELU.

முகவுரை

இங்கிலாந்து தேசத்தில் ஷேக்ஸ்பியர் மஹா நாடககவி எப்படி பெயர் பெற்றவரோ, அப்படியே பிரான்சு தேசத்தில் மாலியர் என்பவர் பெயர் பெற்றவர்; அப்பிரான்சு பாஷையில் பல நாடகங்கள் எழுதியிருக்கிறார்; அதில் "தி நேவரி ஆப் ஸ்காபின்" என்பது ஒன்றாம்; இந் நாடகம் அதன் தமிழ் அமைப்பாகும்.

இந்நாடகத்தையாவது, அல்லது நான் பதிப்பித்துள்ள எனது மற்ற நாடகங்களையாவது எந்த சபையாராவது ஆடவேண்டுமென்றால், முன்னதாக எனக்குச்சேரவேண்டிய ராயல்டி கட்டணத்தைக் கட்டி, என் அனுமதி பெற்றே, பிறகு ஆடவேண்டும். இல்லாவிடில் காபிரைட் சட்டப்பிரகாரம், போலீஸ் கோர்ட்டில் தாவாவுக்குள்ளாவார்கள் என்பதை இதனால் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

ஒரு கிரந்த கர்த்தாவுக்குச் சேரவேண்டிய ராயல்டி, அவர் ஆயுசு பரியந்தமும், அதற்குமேல் 50 வருஷகாலம் அவரது வார்சுகளுக்கும், உரித்தாயது என்பதை எல்லோரும் அறிவார்களாக.

நான் அச்சிட்டிருக்கும் புஸ்தகங்கள் வேண்டியவர்கள் சென்னை ஆச்சாரப்பன் வீதி 70-வது கதவிலக்கமுள்ள வீட்டிலும், எல்லாப் பிரபல புஸ்தக வியாபாரிகளிடமும் வாங்கிக்கொள்ளலாம்.

3—8—31 }
சென்னை. }

இப்படிக்கு,
ப. சம்பந்தம்.

காளப்பன் கள்ளத்தனம்

நாடக பாத்திரங்கள்

அழகாநந்தன்	....	அஸ்வதேவனுக்கும் சரோஜதளநேத்ரிக்கும் தந்தை.
கௌரிநாதன்	....	லீலாநாதனுக்கும் யாகசேனைக்கும் தந்தை.
அஸ்வதேவன்	....	அழகாநந்தர் புதல்வன், யாகசேனையின் காதலன்.
லீலாநாதன்	....	கௌரிநாதன் புதல்வன், சரோஜதளநேத்ரியின் காதலன்.
சரோஜதளநேத்ரி	....	குறக்கூட்டத்தில் வாழும் ஒரு பெண்; உண்மையில் அழகாநந்தர் புதல்வி, லீலாநாதன் காதலி.
யாகசேனை	....	கௌரிநாதன் புதல்வி, அஸ்வதேவன் காதலி.
காளப்பன்	....	லீலாநாதன் வேலையாள்.
செல்வநேசன்	....	அஸ்வதேவன் வேலையாள்.
நாராயணி	....	யாகசேனையின் தாதி.
காரளன்	....	ஒரு துடுக்குப் பையன்.

இரண்டு வேலையாட்கள்.

கதை நிகழ் இடம்:—நாகபட்டணத்தில்.

காளப்பன் கள்ளத்தனம்

முதல் அங்கம்

இடம்—ஹரகாந்தன் வீட்டில் ஓர் அறை.

அஸ்வதேவனும் செல்வநேசனும் வருகிறார்கள்.

அ. ஹா ! காதலன் செவிக்கு எத்துணை கடூரமான சமாசாரங்கள்! என் ஸ்திதியை என்னென்று சொல்வேன் !—செல்வநேசா, துறைமுகத்தில் என் தந்தை திரும்பி வருகிற சமாசாரம் இப்பொழுது தான் கேட்டாயல்லவா ?

சே. ஆம், கேட்டேன்.

அ. அவர் வரப்போகிறார்—இன்று காலையிலேயே ?

சே. இன்று காலையிலேயே.

அ. எனக்கெப்படியாவது கலியாணம் செய்து வைக்க வேணுமென்னும் தீர்மானத்துடன் வருகிறார் ?

சே. தீர்மானத்துடன் வருகிறார்.

அ. கௌரிநாதர் பெண்ணுடன் ?

சே. கௌரிநாதர் பெண்ணுடன்.

அ. இதற்காக அப்பெண்ணும் தாராதீவத்திலிருந்து இங்கு வருகிறாள் ?

சே. இங்கு வருகிறாள்.

அ. இந்த சமாசாரம் உனக்குத் தெரிவித்தார் என் சிற்றப்பா ?

சே. உங்கள் சிற்றப்பா.

அ. இந்த விஷயத்தை என் தகப்பனார், அவருக்குத் தெரிவித்தார்—ஒரு கடித மூலமாக ?

சே. ஒரு கடிதம் மூலமாக.

அ. நீசொல்கிறபடி, இந்தச் சிற்றப்பாவுக்கு, நம்முடைய சமாசாரம் எல்லாம் தெரியும் ?

சே. எல்லா சமாசாரமும் தெரியும்.

அ. வாடாப்பா, ஏதாவது சொல், நான் சொல்வதற்கெல்லாம் இம் மாதிரியாக கொனுக்கோல் கொடுத்துக் கொண்டிராதே.

சே. நான் சொல்வதற் கென்ன இருக்கிறது? ஒரு சமாசாரமும் நீங்கள் விடவில்லையே; எல்லாவிஷயங்களையும் நடந்தபடி நீர் கூறி விட்டீரே.

அ. இந்த கஷ்ட ஸ்திதியில் என்ன செய்வதென்ருவது, எனக்கு ஏதாவது புத்தி மதியாவது சொல்.

சே. எங்கப்பாணே, உங்களைப்போல் தான் நானும் கலவரத்திலிருக் கின்றேன். எனக்கு யாராவது புத்தி சொல்ல வேண்டுமிப் பொழுது.

அ. பாழாய்ப்போக!—அவர் திடீரென்று திரும்பிவந்து என்னை இக்கஷ்டத்திலா வைக்கிறது!

சே. அதே ஸ்திதியில் தான் நானுமிருக்கிறேன்.

அ. நடந்த சமாசாரமெல்லாம் என் தகப்பனுருக்குத் தெரிந்ததோ, என்ன நேரிடுமென்று எனக்குத் தெரியும்; திடீரென்று கோபம் பொங்கி வார்த்தை களால் என்னை வெளுக்கப் போகிருர்!

சே. வார்த்தைகளால் வெளுத்தால் பெரிதல்ல; என் கணக்கு அத னுடன் பைசலானல் சந்தோஷப் படுவேனே. நீர் செய்த குற் றத்திற்காக நான் அதைவிட அதிக கஷ்டம் அனுபவிக்க வேண் டும்போல் தோற்றுகிறது எனக்கு; காற்றும் மழையுமாய்க் கலந்து கொண்டிருக்கிறது, அது என் முதுகின் பேரில் கழி யடிகளாக இறங்கும் போலிருக்கிறது!

அ. ஈசனே! ஈசனே! இந்த கஷ்டங்களினின்றும் நான் எப்படித் தப்புவேன்!

சே. இந்த கஷ்டங்களுக்குள் அகப்படுமுன், அதை யெல்லாம் யோசித்திருக்க வேண்டும்.

அ. அகாலமான இப்போதனைகளால் என் ஆவியையே போக்கு கிருய் நீ!

சே. மூடத்தனமான உமது நடவடிக்கைகளால், எனதுயிரை நீர் முன்பு போக்கிவிடுவீர்!

அ. நான் என்ன செய்வது? நான் என்ன தீர்மானிப்பது?— என்ன பரிகாரம் செய்வது?

காளப்பன் வருகிருன்.

கா. நமஸ்காரம் அஸ்வதேவரே; க்ஷேமம் தானே?—என்ன உங் களுக்கு? ஒரு மாதிரியாயிருக்கிறீர், என்ன சமாசாரம்?

இந்த முகவாட்டத்திற்கெல்லாம் காரணம் என்ன? மிகுந்த துர்ப்பாக்கிய ஸ்திதியிலிருப்பதுபோல் காண்கிறீர்?

அ. ஹா! காளப்பா, நான் அழிந்தேன்! எனக்கு இன்ன செய்வதென்று தோன்றவில்லை! இவ்வுலகில் என்னைப்போன்ற துர் அதிர்ஷ்டம் பிடித்தவர்கள் ஒருவருமில்லை!

கா. ஏன் அப்படி?

அ. எனக்கு நேரிட்டதைப்பற்றி நீ கேள்விப்படவில்லையா?

கா. இல்லை.

அ. என் தகப்பனார் கௌரிநாதருடன் வருகிறார்; அவர்களிருவரும் எனக்குக் கலியாணம் பண்ணிவைக்கத் தீர்மானித்திருக்கிறார்கள்.

கா. உம்! இதில் என்ன அப்படிப்பட்ட துர் அதிர்ஷ்டம் இருக்கிறது?

அ. ஐயோ! என் வருத்தத்தின் காரணம் நீ அறியாய்.

கா. அறியேன் வாஸ்தவமாய், ஆகவே அதை உடனே எனக்குத் தெரிவிக்கவேண்டியது உம்முடைய பாரமாகும். உம்மைப் போன்ற வாலிபர்களுடைய சமாசாரங்களையெல்லாம் அறிந்து, அவர்களுடைய மன வருத்தத்தை நீக்குவதற்கு எப்பொழுதும் சித்தமாயிருக்கிறேன்.

அ. ஹா! காளப்பா, இப்போது நானிருக்கும் கஷ்டஸ்திதியினின்றும் கரையேற, ஏதாவது மார்க்கம் கண்டு பிடிப்பாயாயின், ஏதாவது யுக்தி செய்வாயாயின், என் ஆயுள் பர்யந்தமும்,— அதற்கு மேலும்— உனக்குக் கடமைப்பட்டவனாயிருப்பேன்.

கா. உம்மிடம் வாஸ்தவத்தைச் சொல்வதானால், நான் செய்ய வேண்டும் என்று தீர்மானிப்பேனாயின், இந்த உலகத்தில் அசாத்தியம் என்பதே எனக்குக் கிடையாது. கூர்மையான புத்தியைக்கொண்டு செய்யவேண்டிய யுக்திகளுக்குத் தக்க பாண்டித்யம் எனக்கு பகவான் கொடுத்திருக்கிறார் என்பதற்குச் சந்தேகமேயில்லை; இந்த புத்தி சாதுர்யமான யுக்திகளை, புத்தியில்லாத மடையர்கள் திருட்டுத்தனம் என்று கூறுகிறார்கள்; சூழ்ச்சிகள் செய்வதிலும், பாசாங்கு செய்வதிலும், என்னைவிட கெட்டிக்காரன் இவ்வுலகிலில்லை யென்று, தற்புகழ்ச்சியின்றி, நானே சொல்லிக்கொள்ளலாம்; இந்த உத்தமமான உத்தியோகத்தில் என்னைவிடப் பெயர் பெற்றவர் இல்லை யென்றே சொல்லவேண்டும்.—ஆயினும்—வாஸ்தவமாக, தற்காலத்தில்

யோக்யதைக்கு தக்கபடி பரிசுகொடுத்து ஆதரிப்பார் கிடையாது. ஒருசின்ன விஷயத்தில் எனக்குக் கஷ்டம் நேரிட்டபின், இதையெல்லாம் விட்டு விட்டேன்.

அ. அது என்ன அது ? என்ன சமாசாரம் காளப்பா ?

கா. நியாயாதிபதியும் நானுமாக ஒரு சொல்ப விஷயத்தில் எதிர்க்க வேண்டி வந்தது ?

அ. நியாயாதிபதியுடனா ?

கா. ஆம், எங்களிருவருக்கும் கொஞ்சம் மனஸ்தாபம் நேரிட்டது.

அ. உனக்கும் நியாயாதி பதிக்குமா ?

கா. ஆம், அவர் எனக்குத் தக்கபடி நியாயம் சொல்லவில்லை, அது முதல் நன்றி கெட்ட இவ்வுலகத்தை வெறுத்து, இனிமேல் ஒன்றும் செய்வதில்லை என்று தீர்மானித்தேன்.—இருந்த போதிலும்— உங்கள் சமாசாரத்தைச் சொல்லுங்கள்—கேட்கிறேன்.

அ. காளப்பா, கௌரிநாதரும் என் தகப்பனாரும், இரண்டு மாதங்களுக்கு முன்பாக, இரண்டு பெயரும் ஒன்றாய்ச் சேர்ந்து சில வர்த்தக விஷயமாய், கடல் யாத்திரையாகப் போனார்கள் என்பது, உனக்குத் தெரியுமே.

கா. ஆம், தெரியும்.

அ. லாவண்யனையும் என்னையும் எங்கள் தகப்பன்மார்கள் இங்கு விட்டுப் போனார்கள் ; என்னை செல்வநேசன் வசத்திலும், லாவண்யனை உன் வசத்திலும்.

கா. ஆம், என் வேலையை நான் சரியாகச் செய்து முடித்தேனல்லவா ?

அ. கொஞ்சநாள் பொறுத்து, லாவண்யன் குறவர்கள் கூட்டத்திலிருந்த ஒரு பெண்ணைக் கண்டு அவள்மீது காதல் கொண்டான்.

கா. அதுவும் தெரியுமெனக்கு.

அ. நாங்கள் இருவரும் மிகுந்த சிநேகிதர்களானபடியால், தான்காதல்கொண்ட விஷயத்தைப்பற்றி எனக்கு இரகசியமாய்த் தெரிவித்து, தன் காதலியைக் காண என்னை அழைத்துச் சென்றான். அவளை நான் பார்த்தபொழுது அவள் அழகாகத்தான் தோற்றப்பட்டாள்; ஆயினும், நான் அவளைப்பற்றி எண்ண வேண்டுமென்று என் நண்பன் நினைத்தபடி, அவள் அவ்வளவு அழகாயில்லை.எந்நேரமும் அவளைப்பற்றியே என்னிடம் பேசிக்

கொண்டிருந்தான்; அவளது அழகைப் பற்றியும் ஒய்யாரத்தைப் பற்றியும், ஒரு நிமிஷமும் விடாது பேசிக்கொண்டிருந்தான்; அவளது புத்திகூர்மையைப் புகழ்ந்து, அவள் வார்த்தையாடும் அழகைப்பற்றி, அடங்காத சந்தோஷத்துடன் வர்ணித்தான்; இவ்வுலகில், அவள் வார்த்தையின் புத்தி சாதுர்யத்தை விட மேம்பட்டது வேறொன்றும் கிடையாது என்று நான் எண்ணும்படி அவள் பேசிய வார்த்தைகளையெல்லாம் ஒன்று விடாது என்னிடம் உரைத்தான்.

கா. இதெல்லாம் எங்கு போய் முடிகிறதென எனக்குத் தெரியவில்லை.

அ. ஒருநாள், அவனது காதலியை வளர்த்து வந்தவர்கள் கூட்டத்திற்கு அவனுடன் நான் போய்க் கொண்டிருந்த பொழுது, பக்கத்து சந்தில் ஒரு வீட்டில், கொஞ்சம் கூச்சலும் அதிக அழுகையும் நாங்கள் கேட்டோம். நாங்கள் என்னவென்று விசாரிக்க, ஒரு பெண்பிள்ளை, நாங்கள் அங்கு போனால், அங்கு இரண்டு அந்நிய தேசஸ்திரீகள் இருப்பதாயும், அவர்கள் ஸ்திதியைக் கண்டால் கருங்கல்லும் உருகுமென்றும், பரிதாபம் என்பது எங்கள் மனதில் கொஞ்சமேனும் இருக்குமாயின், அவர்களைக்கண்டு நாங்கள் பச்சாத்தாபப் படுவோமென்றும், பல பெருமூச்சுகளுடன் தெரிவித்தாள்.

கா. இதெல்லாம் எங்குபோய் முடிகிறது?

அ. இப்புதுமையைக் காணவேண்டுமென்று ஆவல்கொண்டவனாய் லாவண்யனிடம், அதைப்போய்ப் பார்க்கலாமென்று வற்புறுத்தினேன். அங்கு சென்று ஒரு அறைக்குள் நுழைந்த பொழுது, அங்கு ஒருகிழவி மரணவஸ்தையிற் கிடந்தாள்; அவள் பக்கலில், ஒரு வேலைக்காரி, கோவென்று அழுது கொண்டிருந்தாள், ஒரு அழகிய பெண் கண்ணீர் ஆறாக பெருக நின்றுக் கொண்டிருந்தாள். அப்பெண்ணின் அழகையும், பரிதாப நிலையையும் வர்ணிக்க, என்னால் முடியவே முடியாது.

கா. ஆஹா!

அ. அவள் இருந்த ஸ்திதியில் வேறு யாராவது இருந்திருப்பார்களாயின் அது அவலட்சணமாயிருந்திருக்கும்; ஒரு பழைய பாவாடை ஒன்றைக் கட்டிக் கொண்டு, கிழிந்த அங்கவஸ்திரம் ஒன்று அணிந்து கொண்டிருந்தாள்; தலைமயிர் அவிழ்ந்து

தொங்கிக் கொண்டிருந்தது தோட்களின் மீது; இப்படி இருந்தும், அவளது அழகானது ஆயிரம் கண் கொண்டு பார்க்கத்தக்கதாயிருந்தது; அவளைப்போன்ற அணங்கை நான் அவனியில் கண்டதே யில்லை!

கா. அப்புறம் வரப் போகிறது தெரிகிறது.

அ. அவள் இருந்த ஸ்திதியில், நான் பார்த்தபடி, நீ அவளைப் பார்த்திருப்பாயாயின் அவனியில் அவளுக்கு இணையேயில்லை யென்று நீ கூறியிருப்பாய்.

கா. ஓ! அதற்குச் சந்தேகமேயில்லை! அப்பெண்ணைப் பார்க்காமலே, அப்பெண்மணியைப் போன்ற அழகிகள் அகிலத்திலில்லை யென்று நம்பிவிடுவேன்.

அ. அழும்பொழுது மற்றவர்கள் முகத்தை அசங்கியமாகத் தோற்றச் செய்கிறதே, அப்படியில்லை அவள் வரைக்கும்; பார்த்தவர் பரிதாபப் படும்படியாய் என்ன ஒயிலாய் அழுதாள் தெரியுமா? அவள் மனத்துயரமானது பார்த்தவர்கள் மனதை யெல்லாம் கவரும்படியானதா யிருந்தது.

கா. நன்றாய்த் தெரிகிறது.

அ. தனது தாயாரென அவள் அழைத்து, மரணாவஸ்தையிலிருந்த அந்த ஸ்திரீயின் உடலின்மீது, வாத்ஸல்யத்தோடு அவள் விழுந்தபொழுது, பக்கத்திலிருந்தவர்களையெல்லாம் கண்ணீர் விடும்படிச் செய்தாள்; அப்பேதையின் நற்குணத்தைக் கண்டு பரிதாபப் படாதவர்கள் ஒருவருமில்லை.

கா. எனக்கே என்ன பரிதாபமாயிருக்கிறது!—தெரிகிறது—அப்பெண்மணியின் நற்குணமானது உம்மை அவள்மீது காதல் கொள்ளும்படிச் செய்தது.

அ. ஆ! காளப்பா! கல்மனமுடைய காட்டுமுராண்டியும் அவள் மீது காதல் கொண்டிருப்பான்.

கா. சந்தேகமென்ன? யாரால் அதைத் தடுக்கமுடியும்?

அ. துக்கப்பட்டுக் கொண்டிருந்த அப்பெண்மணிக்கு சில தேறுதல் வார்த்தைகள் நான் கூறிவிட்டு, பிறகு நாங்கள் வந்து விட்டோம். அதன் பிறகு, லாவண்யனை அவளைப்பற்றி நீ என்ன எண்ணுகிறாய் என்று கேட்க, "ஏன், சுமாராகத் தான் இருக்கிறாள்" என்று ஒருவாறு மொழிந்தான்; அப்பெண்மணியைப் பற்றி இவ்வளவு சாதாரணமாகச் சொல்லவே, எனக்கு மிக

வும் கோபம் பிறந்து, என்மனதை அம்மாது சிரோமணி கவர்ந்ததைப்பற்றி, அவனிடம் தெரிவிக்க எனக்கிஷ்டமில்லை.

சே. உங்கள் கதையை நீங்கள் சுருக்கிச் சொல்லாவிட்டால், நாளை வரையில் நாம் இங்கிருக்க வேண்டும். பத்துவார்த்தையில் முடித்து விடுகிறேன் இதை. அந்த க்ஷணமுதல் இவர்காதல் அதிகரித்தது ; தன் காதலியின் துயரத்தை ஆற்றவதற்காக அவளிடம் போகாமல் இவரால் உயிர் வாழ முடியவில்லை ; அந்தப் பெண்ணின் தாயார் மடிந்துபோகவே, அப்பெண்ணுக்கு சவரட்சணை கர்த்தாவாகிய அந்த வேலைக்காரி, இவர் அடிக்கடி அப்பெண்ணைக் காண்பதைத் தடுத்தாள் ; அதனால் எனது நண்பர் துக்கத்திலாழ்ந்தார், பார்க்கவேண்டுமென்று வற்புறுத்தினார், வேண்டினார், கெஞ்சினார் ; ஒன்றும் பயன்படவில்லை. அப்பெண்ணுக்கு பந்துக்களாவது ஐஸ்வர்யமாவது இல்லாவிட்டாலும், அவள் உயர் குலத்திலுதித்தவளென்றும், அவளை அவர் மணம்புரியாவிட்டால், அடிக்கடி பார்க்கமுடியாதென்றும், அவருக்குத் தெரிவித்தனர். இந்த இடையூறுகளால், அவருடைய காதலானது அதிகப்பட்டது. ஆலோசனை பண்ணினார், அப்படி இப்படி கலக்கப்பட்டார், துக்கித்தார், வாதித்தார், தீர்மானித்தார்; கல்யாணம் செய்து கொண்டார், மூன்று நாளைக்குமுன்.

கா. உம், தெரிகிறது.

சே. போதாக்குறைக்கு, இன்னும் இரண்டு மாதம் வரையில் வரமாட்டார் என்றெண்ணி யிருந்த, இவருடைய தகப்பனார் திடீரென்று வந்து சேர்ந்தார்; இவர் இரகசியமாக மணந்த விஷயம் இவருடைய சிற்றப்பாவுக்கு எட்டிவிட்டது ; தாரா நகரத்தில் கௌரிநாதர் இரண்டாம் கலியாணம் செய்து கொண்ட அந்த மனைவிக்குப் பிறந்த பெண்ணை இவருக்குக் கலியாணம் செய்யத் தீர்மானித்திருக்கிறார்களாம்.

அ. கஷ்டங்களுடன் கஷ்டமாக இந்த அழகிய பெண்மணி அநாதையாயிருக்கிறாள் ; அவளைக் காப்பாற்ற எனக்குச் சக்தியில்லை.

கா. இவ்வளவுதானா ? இந்த அற்ப விஷயத்திற்காகவா நீங்கள் இரண்டு பெயரும் இவ்வளவு கஷ்டப்படுகிறதாகக் காண்கிறீர்கள் ? ஏண்டாப்பா, இந்த சொல்ப விஷயத்தினின்றும் தப்பிவைக்க வகையறியாது விழிக்கிறாயே ? வெட்கமில்லையா ? தத்தி

ராமன்! உயரத்திலும் பருமனிலும் உன்தகப்பனர் தாயாரை ஒன்ருய்ச் சேர்த்தது போலிருக்கிருய்! உங்கள் விவஹாரங் களையெல்லாம் ஒழுங்கு படுத்துவதற்கு, உன் மூளையைக் கொண்டு ஒரு யுக்தியும் செய்ய முடியவில்லை; உன் புத்தியைக் கொண்டு ஒரு சூழ்சியும் செய்ய முடியவில்லை! தூத்தெரி! உன் மடையபுத்தி மண்ணுய்ப்போக!—இந்த இரண்டு கிழங் களையும் ஏமாற்ற எனக்குக் காலம் வாய்க்காமற் போச்சுது அந்த காலத்தில்; இரண்டு பெயரையும் கவிழ்த்து விட்டிருப் பேன் க்ஷணத்தில், அவ்வளவு உயரம்தான் நான் இருந்த போதே, நூறு குத்திரயுக்திகள் செய்து நான் பெயர் பெற் றேன்.—

சே. வாஸ்தவம்தான், ஸ்வாமி உனக்குக் கொடுத்த புத்திக் கூர் மையை எனக்குக் கொடுக்கவில்லை, உன்னைப்போல் நியாயாதி பதியுடன் மனஸ்தாபப் பட எனக்கு மதி கொடுக்கவில்லை ஈசன்!

அ. இதோ என் கண்மணி யாகசேனை!

யாகசேனை வருகிருள்.

யா. ஹா! பிராணநாதா! நாகையிடம் செல்வநேசன் சற்று முன் பாகத்தான் கூறியது உண்மைதாணு? உம்முடைய தகப்பனர் திரும்பிவருகிருராம், உமக்குக் கலியாணம் செய்யத் தீர்மா னித் திருக்கிருராமே?

அ. ஆம் கண்மணே யாகசேனு! இந்த சமாசாரத்தைக் கேள்விப்பட் டதும் இடிவிழுந்தாற்போல் ஆனேன்.–ஆயினும் இதென்ன? அழுகிருயே! ஏன் இந்தக் கண்ணீர்? உனக்குக் கூறிய கட் டுறுதியினின்றும் ஏதாவது தவறினேன் என் றெண்ணிணுயா? அல்லது உன் மீதுள்ளகாதல் குன்றினேன் என்று நினைத் தாயா?

யா பிராணநாதா! நீர் என்மீது காதல் கொண்டிருக்கிறீர் என்பதை நம்புகிறேன், அக்காதல் எப்பொழுதும் குன்ருதிருக்கும் என் பது நிச்சயமென்ன?

அ. கண்மணே! உன் மீது ஒருமுறைகாதல் கொண்டபின், எவனு வது அவன் ஆயுள்பர்யந்தம் அக்காதல் குன்றுவனே?

யா. பிராணநாதா, ஸ்திரீகளுடைய காதலைப்போல் ஆடவர்களு டைய காதல் நீடித்திருப்பதில்லை யென்று கேள்விப்பட்டிருக்கி றேன். ஆண்மக்களுடைய ஆசையானது எவ்வளவு எளிதில்

விர்த்தியடைகிறதோ அவ்வளவு எளிதில் தணிவையுமடைகிறதெனவும் கேள்விப்பட்டிருக்கிறேன்.

அ. ஆ! கண்மணி யாகசேனே! மற்ற வர்களுடைய ஹிருதயம் போலல்ல என் ஹிருதயம், என் உயிருள்ளளவும் உன்மீதுள்ள காதல் குன்றேன் என்பதை உறுதியாய் நம்பு.

யா. உமது வார்த்தையின்படி உமது உள்ளமுமிருக்கிறதென உறுதியாய் நம்ப விரும்புகிறேன்; நீர் என்னவோ வாஸ்தவமாய்த்தான் பேசுகிறீர், சந்தேகமில்லை. உமக்கென் மீதுள்ள காதலைத் தணித்திட வேறொரு காரணம் உதிக்குமோ என அஞ்சுகிறேன். நீரோ உமது தந்தைக் குட்பட்டவர்; அவரோ நீர் வேறொரு பெண்ணை மணக்கவேண்டுமென்று விரும்புகிறார்; என் துர் அதிர்ஷ்டத்தால் அவ்வாறு நேரிடுமாயின் நிச்சயமாய் நான் உயிர் துறப்பேன்.

அ. கண்ணே! யாகசேனே, என்னை உனக்குத் துரோகி யாக்கும் படியான தந்தை இவ்வுலகிலில்லை; உன்னை விடுவதை விட, இந் நாட்டையும், என் உயிரையுமே துறப்பேன் என்று உறுதியாம் நம்பு. நான் அப்பெண்ணை இது வரையில் பாராவிட்டாலும், இவர்கள் எனக்குக் கலியாணம் செய்ய விரும்பும் பெண்மீது, அழியாத வெறுப்பு கொண்டு விட்டேன். கடின சித்த முள்ளவளைக் காண விருப்ப மில்லா விட்டாலும், அவளை இங்கு நான் பாராதபடி சமுத்திரமானது அவளை விழுங்கி விடுமாக! ஆகவே கண்ணே, யாகசேனே அழாதே! உன்னை வேண்டிக் கொள்ளுகிறேன். உன் கண்ணீரைக் காண என் மனம் தாளவில்லை,—அவைகளைப் பார்த்தலே என் ஹிருதயத்தைப் புண்ணாக்குகிறது.

யா. நீர் கோருகிறபடியால் என் கண்ணீரைத் துடைத்துக் கொள்ளுகிறேன். ஈசன் எனக்கு விதித்தபடி ஆகிறதெனப் பொறுத்திருக்கிறேன் பொறுமையுடன்.

அ. ஈசன் நமக்கு விதித்தவிதி நன்மையேயாகும்.

யா. அது துன்பமாகாது— நீர் மாத்திரம் என்னைக் கைவிடாதிருந்தால்.

அ. சத்தியமாக உன்னை கைவிடேன்.

யா. ஆனல் நான் சந்தோஷமாயிருக்கிறேன்.

கா. (ஒரு புறமாக) வாஸ்தவத்தில் இப்பெண் வெறுக்கத் தக்கவள் அல்ல; சரியானவள்தான்.

அ. இதோ இருக்கும் ஆள்மாத்திரம் நமக்கு உதவிசெய்யத் தீர்மானித்தால் நம்முடைய கஷ்டத்தினின்றும் கரையேறுவோம்.

கா. மற்றவர்கள் விஷயங்களில் தலையிட்டுக் கொள்ளலாகாதென்று நான் பன்முறை பிரமாணம் செய்திருக்கிறேன்—ஆயினும்—நீங்கள் இரண்டுபெயரும்—என்னை மிகவும் வற்புறுத்தி வேண்டுவதாயின்— ஒருவேளை—

அ. ஹா! உன்னுடைய உதவியைப் பெற உன்னை நான் வேண்ட வேண்டுமாயின், மனப்பூர்வமாய், உன்னை வேண்டிக் கொள்ளுகிறேன்—எப்படியாவது எங்களைக் கரையேற்றுவாயாக!

கா. ஏன் அம்மா நீயோ? நீ எனக்கொன்றும் சொல்ல விரும்பவில்லையா?

யா. அவர் வேண்டுவதைப் போல்—நானும், உம்மை மிகவும் வேண்டிக் கொள்ளுகிறேன், எப்படியாவது எங்கள்மீது கருணை கூர்ந்து, எங்களை கஷ்டத்தினின்றும் நிவர்த்திக்க வேண்டும்.

கா. நீங்கள் இரண்டு பெயரும் இவ்வளவு வேண்டும்பொழுது நான் என் தீர்மானத்தினின்றும் மாறவேண்டியதுதான்.—நான் ஒரு மனிதன் என்பதை மறக்கலாகாது—ஆகவே—உங்களுக்கு உதவி புரியலாமென்று தீர்மானிக்கிறேன். (பின்புறமாகக் கையை நீட்டுகிறான்.)

அ. என்னை நம்பு—(ஒரு பொன்னை அக்கையில் வைத்து)

கா. ஓ! அதெல்லாம் சரிதான்!—அம்மா! உனக்கினி கவலைவேண்டாம் வீட்டிற்குப்போ! (யாகசேனை போகிறாள்.) அப்பா—நீ—பயமில்லாதபடி உன் தந்தையைக் காணச் சித்தஞ் செய்.

அ. உன்னிடமிருந்து இதை ஒளிப்பதற்கெனக் கிஷ்டமில்லை, அவர் வருகிறாரெனக் கேட்டவுடன், முன்பாகவே நான் பயத்தால் நடுங்கினேன். வாஸ்தவமாக எனக்கு அவரிடம் நிரம்ப பயம்; அதைவிட்டகல முடியவில்லை என்றால்.

கா. ஆயினும், அவரைப் பார்ப்பது முதல் நீர் மிகவும் மனவுறுதியுடையவனாகத் தோற்றவேண்டும்; இல்லாவிட்டால் உம்முடைய கோழைத் தனத்தையறிந்து உம்மை யொரு குழந்தையைப்போல் நடத்துவார். வாரும், இப்போது தயார் செய்து கொள்ளுமும்மை. கொஞ்சம் தைரியம்தான் வேண்டியது; அவர் என்ன சொன்ன போதிலும், திட்டமாய் பதில் உரைக்க மனதில் தீர்மானம் செய்துகொள்ள வேண்டும்.

அ. என்றால் முடியுமான வரையில் பார்க்கிறேன்.

கா. சரி, இப்பொழுதே முயன்றுபாரும், எப்படி நடந்து கொள்வீர் என்று. அவர் முன்னிலையில் எப்படி பேசுவீரோ இப்பொழுதே அதை அப்யசித்துப் பாரும், சரியாக இருக்கிறதா சொல்லுகிறேன்.—பயமில்லாத வனுக்க் காட்டவேண்டும்.—தலை நிமிர்ந்திருக்கவேண்டும்—திடசித்தனுயிருக்கவேண்டும்.—

அ. இப்படியா ?

கா. இப்படி (காட்டுகிருன்)

அ. இப்படியா ? (அவனைப்போல் நின்று முகத்தைச் சுளித்து)

கா. இன்னொரு முறை.

அ. இப்படித்தானே.

கா. சரி!—நான்தான் இப்பொழுதான் பட்டினம் வந்து சேர்ந்த உம்முடைய சொந்த தகப்பனர் என்று எண்ணிக் கொண்டு அவரிடம் எப்படி பயமில்லாமல் பதில் உரைப்பீரோ அப்படி எனக்கு பதில் உரையும்—ஏனடா! தடிக்கழுதை, மூதேவி, பழமுறம், பாபாசு, துரோகி! என் வயிற்றில் ஏனடா பிறந்தாய் ? உன் மனதுபோல் நடந்து விட்டு என் முன் உன் முகத்தைக் காட்ட தைரிய மிருக்கிறதா உனக்கு ? நான் இல்லாத காலத்தில் என்னை ஏமாற்றி விட்டு, என்னை ஏறெடுத்துப் பார்க்கிருயா ? திருட்டுப்பயலே! நான் உன்னை வளர்த்து வந்ததற்கு இதுதான பலன் ? இது தானு நீ எனக்குக் காட்ட வேண்டிய மரியாதை ? இது தானு நீ எனக்குச் செய்யும் மரியாதை ?" வாரும் வாரும்—"படுக்காளிப் பயலே! இத்துணை ஆணவமா உனக்கு ? உன் தகப்பனர் உத்தரவின்றி நீ ஒரு பெண்ணின் மீது இச்சை கொள்கிருயா ?—அவளைத் திருட்டுத் தனமாய் மணம் புரிகிருயா ? சொல்லடா பதில் திருட்டுக் கழுதை, சொல் !—உன்னுடைய நியாயங்களை யெல்லாம் நான் கேட்கட்டும்"—ஐயோ! இதென்ன இது! திக்பிரமை கொண்டவர்போல் நிற்கிறீரே !

அ. என்சொந்த தகப்பனர் பேசுவதைக் கேட்பதுபோலவே இருக்கிற தெனக்கு !

கா. ஆம், அதனுல் தான் மடையனைப்போல் நீர் நடவாதிருக்க வேண்டும்.

அ. என்மனதைத் தேற்றிக்கொண்டு, தைரியமாய் பதில் உரைக்கிறேன்.

கா. வாஸ்தவமாய்.

அ. வாஸ்தவமாய்.

சே. இதோ உம்முடைய தகப்பனுரே வருகிறுர்!

அ. ஐஐயோ! நான் போய் விடுகிறேன்! (ஓடிப்போகிருன்.)

கா. ஹா! அஸ்வதேவரே, நில்லும்! நில்லும்!—ஓடிப்போய் விட்டார்! என்ன பயங்காளி!—இருக்கட்டும்—நாம் இங்கிருப்போம், அந்தக் கிழம் வரட்டும்.

சே. நான் அவருக்கு என்ன பதில் சொல்வது?

கா. அதையெல்லாம் எனக்கு விட்டு விடு—என் பின்னுல் நின்று கொண்டு நான் செய்கிறபடி நட.

அழகானந்தர் வருகிருர்.

அழ. இப்படி நடந்ததை யாராவது கேட்டதாவதுண்டா?

கா. (ஒரு புறமாக செல்வநேசனுடன்) சமாசாரம் முன்பே எட்டிவிட்டாற்போலிருக்கிறது. அவர் தலையில் இனி வேறென்றும் ஏருது!—தனக்குத் தாளுக உரக்கப் பேசுகிருர்.

அழ. இப்படி அதனப் பிரசங்கித்தனமாய் நடப்பதா?

கா. (ஒருபுறமாக) கொஞ்சம் கேட்போம் பொறு.

அழ. இந்தக் கல்யாணத்தைப்பற்றி அவர்கள் எனக்கு என்ன சொல்லப் போகிருர்களோ பார்ப்போம்!

கா. (ஒரு புறமாக) அதையெல்லாம் யோசித்து வைத்திருக்கிறேம்.

அழ. ஒரு வேளை நடக்கவில்லையென்று சொல்வார்களோ?

கா. (ஒரு புறமாக) இல்லை, அப்படிச் செய்வது யோசனை யில்லை.

அழ. அல்லது அதற்கு ஏதாவது சாக்குசொல்லப் பார்ப்பார்களோ?

கா. (ஒரு புறமாக) இருந்தாலு மிருக்கலாம்.

அழ. ஏதாவது கட்டுக்கதை சொல்லி என் கண்ணில் மண்ணைப் போடப் பார்ப்பார்களோ?

கா. ஒருவேளை.

அழ. அவர்கள் என்ன சொன்னுலும் பயன் படாது.

கா. (ஒரு புறமாக) பார்க்கலாம்.

அழ. என்னை மாத்திரம் மோசம் பண்ண முடியாது.

கா. (ஒரு புறமாக) அதை அவ்வளவு உறுதியாய் நம்பாதீர்.

அழ அந்தத் திருட்டுப்பயலாகிய என்பிள்ளையை அவனிருக்கவேண்டிய இடத்திற்கு அனுப்ப எனக்கு வழிதெரியும்.

கா. (ஒருபுறமாக) அதை அப்புறம்பார்ப்போம்.

அழ. அந்தத் திருட்டுக் கழுதை செல்வநேசனை உதை உதை என்று உதைக்கிறேன்.

சே. (ஒரு புறமாக) என்னை எங்கு மறந்து விட்டாரோ யென்று ஆச்சரியப்பட்டுக் கொண்டிருந்தேன்.

அழ. ஆஹா! இங்கேயடா அப்பா இருக்கிறாய்! குடும்பத்தை யெல்லாம் சரியாகப் பார்த்துக் கொள்பவன்! சிறுவர்களுக்கெல்லாம் நல்வழிபோதிக்கும் உபாத்தியாயன்!

கா. (செல்வநேசன் முன்னின்று அவனை மறைத்து) வாருங்கள் ஐயா, நீங்கள் சுகமாய்த் திரும்பிவந்தது மிகவும் சந்தோஷம்.

அழ. வாஅப்பா காளப்பா (செல்வ நேசனிடம்) நான் உனக்கிட்ட கட்டளையை நன்றாக நிறைவேற்றினாய்! என் பிள்ளைநான் ஊரிலில்லாத காலத்தில் மிகவும் புத்திசாலித்தனமாய் நடந்ததாகக் கேள்விப்படுகிறேன்.

கா. நான் காண்கிற வரையில் உங்கள் உடம்பு மிகவும் சௌகரியமாகி இருக்கிறாற் போலிருக்கிறதே?

அழ. இருக்கிறது சுமாராக—(செல்வநேசனிடம்) ஏனடா வாயை மூடிக்கொண்டிருக்கிறாய்? துரோகி! வாயைத் திறந்து ஏதாவது பேசேன்?

கா. தாங்கள் வரும்பொழுது கடல் பிரயாணம் சவுக்கியமாயிருந்ததா?

அழ. ஆமாம். எல்லாம் சவுக்கியமாயிருந்தது!—நான் கொஞ்சம் கண்டிக்க விடேன்.

கா. கண்டிக்கவா விரும்புகிறீர்?

அழ. ஆமாம் கண்டிக்கத்தான் விரும்புகிறேன்.

கா. யாரை ஐயா?

அழ. இந்தப் பாதகனை!

கா. ஏன் அந்தப்பாதகனை?

அழ. நான் இங்கில்லாதிருந்த பொழுது நடந்ததைப்பற்றி கேள்விப்பட வில்லையா நீ?

கா. ஏதோ சொல்ப வியவஹாரம் நடந்ததாகக் கேள்விப்பட்டேன்.

அழ. சொல்ப வியவஹாரமாவது! அப்படிப்பட்ட வியவஹாரத்தை அற்பமென்று சொல்லுகிறாய்?

கா. நீங்கள் சொல்வ தென்னவோ வாஸ்தவந்தான்.

அழ. அப்படிப்பட்ட துணிகரமான விஷயம்!

கா. ஆம் வாஸ்தவம்.

அழ. ஒரு பிள்ளை தன் தகப்பனுடைய உத்தரவின்றி கலியாணம் செய்துக் கொள்வதாவது!

கா. ஆம், அது கொஞ்சம் விசாரிக்வேண்டிய விஷயம் தான். ஆயினும், அதைப்பற்றித் தாங்கள் அதிகமாக காபுரா செய்யக் கூடாதென்று தோன்றுகிற தெனக்கு.

அழ. அப்படி நான் நினைக்கவில்லை! எவ்வளவு காபுரா செய்ய முடியுமோ அவ்வளவு செய்யப்போகிறேன். என்ன! என் கோபமானது கொதித்தெழும்ப காரணமில்லையென்றா எண்ணுகிறாய்?

கா. ஆம் வாஸ்தவமாக. எனக்கும் அப்படித்தானிருந்தது, முதலில் நான் இதைப்பற்றிக் கேள்விப்பட்டபொழுது; உங்களுக்கு மனஸ்தாப முண்டாகுமேயென்று வருந்தினவனாய், உங்கள் பிள்ளையுடன் இதைப்பற்றி கடிந்து பேசினேன். நான் அவரை எவ்வாறு கடிந்தேன், உங்கள் பாத தூளியைத் தன் தலைமேல் வகிக்கவேண்டியவனாகிய அவர் உங்களுக்கு இவ்வாறு மரியாதை குறைவாக நடந்து கொண்டதைப்பற்றி எப்படிப் பிரசங்கம் செய்தேன், இதையெல்லாம் பற்றி அவரை நேராகக் கேட்டுப்பாரும்; நீங்கள்கூட அவரை அவ்வாறு கண்டித் திருக்கமாட்டீர்—ஆயினும் என்னபிரயோஜனம்?—கடைசியில் நியாயத்திற்கு ஈடுபடவேண்டியதாயிற்று; நான் நினைத்தபடி அவ்வளவுபெருங்குற்றம் அவர் செய்யவில்லையென்று நான் முடிவில் ஒப்புக்கொள்ள வேண்டியதாயிற்று.

அழ. என்னகதை யிதெல்லாம்? அவளுடைய பூர்வீகம் ஒன்றுமே தெரியாத ஒரு பெண்ணை திடீரென்று கலியாணம் செய்து கொள்வது குற்றமல்ல?

கா. அவர் என்ன செய்யக் கூடும் பாபம்! அவர் தலைவிதி அவரை அப்படிச் செய்யும்படி செய்தது.

அழ. ஆஹா! நான் இதுவரையில் கேட்ட நியாயங்களிலெல்லாம் இதுதான் மிகவும் சிரேஷ்டமானது! அப்படியாயின், ஒருவன் தன் மனத்திற்குத் தோன்றிய குற்றங்களையெல்லாம் செய்து விடலாம், மோசம் செய்யலாம், கொள்ளையடிக்கலாம், கொலை செய்யலாம், கடைசியில் தன் தலைவிதி அவ்வாறு செய்யும்படிச் செய்தது என்று பதில் சொல்லிவிடலாம்!

கா. ஐயோ ஸ்வாமி! என் வார்த்தைகளுக்கு சட்டக்கல்வி கற்றவர்களைப்போல் அர்த்தம் செய்து விடுகிறீர்களே! நான் என்ன

சொல்லவந்தேன் என்றால்—இவ்விஷயத்தில் அவர் தப்பித்துக் கொள்ள வகையில்லாதபடி கட்டப்பட்டார்.

அழ. அவன் அப்படிக் கட்டுப்படுவானேன் ?

கா. உங்களைப்போல் அவ்வளவு புத்திசாலித்தன மில்லாதபடியால்; உங்களுக்கு ஒரு ரகசியம் சொல்கிறேன். இவ்வுலகத்தில் வாலிபர்கள் வாலிபர்களே ! ஒவ்வொரு காரியத்தையும் செய்ய லாமாகூடாதா என்று ஆராய்ந்து பார்த்துச்செய்ய அவர் களுக்கு அவ்வளவு விமரிசை கிடையாது.என் எஜமான்பிள்ளை லாவண்யரைப் பாருங்கள், நான் எவ்வளவோ புத்தி புகட்டியும் எவ்வளவோ கண்டித்தும், உங்கள் பிள்ளையைவிட கேடான காரியத்தைச்செய்துக் கொண்டார் தனக்குத் தானுக! உங்கள் காலத்தில் நீங்களும் யௌவன முடையவராயிருந்ததில்லையா ? மற்றவர்களைப்போல் நீங்களும் பிழைகள் இழைத்ததில்லையா ? என்று கேட்க விரும்புகிறேன். தங்களுடைய இளமையில் தாங்களும் பல பெண்களை இச்சித்தநாகவும், அக்காலத்தில் பல ஆட்டங்கள் ஆடினதாகவும் உம்முடைய மனோபீஷ்டம் நிறைவேறுமளவும் விடாது தொடர்ந்ததாகவும் நான் கேள்விப் பட்டிருக்கிறேன்.

அழ. அது. வாஸ்தவம்தான், ஒப்புக் கொள்ளுகிறேன், ஆயினும், நான் காமுகனுயிருந்தேனேயொழிய, இவனைப்போல் இவ்வ ளவு தூரமா போனேன் ?

கா. அவர் என்ன செய்வார் பாபம்! அவர் ஒரு அழகிய பெண் மணியை அகஸ்மாத்தாய் சந்திக்கிறார், அப்பெண்மணி இவர் மீது இச்சைப்படுகிருள்—மாதர்களுடைய மனதைக் கவரும் படியான குணம், தன் தகப்பனாராகிய உங்களிடமிருந்து பெற் றார் போலும்—அவள் மீது இவர்காதல் கொள்கிறார்—அடிக் கடி அவளைப்போய்ப் பார்க்கிறார்—அவளுடன் பேசுகிறார்— பெருமூச்சுவிடுகிறார்—தன் காதலைத் தெரிவிக்கின்றார்—அவள் இவரது வேண்டுகோளுக் கிணங்குகிருள்—இருவரும் ஒன்று யிருக்கும் பொழுது, அவரது பந்துக்கள் கண்டுபிடித்து விடு கின்றனர்—அவர்கள் பலாத்காரமாய் இவரைக் கலியாணம் செய்துகொள்ளும்படி நிர்ப்பந்திக்கின்றனர்.

சே. (ஒருபுறமாக) என்ன நய வஞ்சகன் !

கா. அவரை அவர்கள் கொன்றிருந்தால் உமக்குத் திர்ப்தியாயிருக்குமா? கட்டையேறுவதை விட கலியாணம் செய்து கொள்வது மேலல்லவா?

அழ. இப்படி நடந்ததென்று எனக்குத் தெரிவிக்கவில்லையே?

கா. சரி, அவரைக் கேட்டுப்பாருங்கள், அல்லவென்று கூறமாட்டார்.

அழ. பலாத்காரமாகவா அவனுக்குக் கலியாணம் செய்து வைத்தார்கள்?

சே. ஆமாம் ஐயா.

கா. நான்பொய் பேசுவேனென்று எண்ணுகிறீர்!

அழ. அப்படியாயின் அவன் உடனேபோய், ஒரு நியாயாதிபதியிடம் இம்மாதிரியாகப் பலாத்காரமாய் கலியாணம் செய்விக்கப் பட்டதைப்பற்றி ஆட்சேபித்திருக்க வேண்டும்.

கா. அவர் அவ்வாறு செய்யமாட்டார்.

அழ. அப்படிச் செய்திருப்பானாயின், அதை ரத்துசெய்வது எனக்கு சுலபமாயிருந்திருக்கும்.

கா. கலியாணத்தை ரத்துசெய்வதா?

அழ. ஆம்.

கா. நீர் அவ்வாறு செய்யமாட்டீர்.

அழ. நான் செய்யமாட்டேனா?

கா. மாட்டீர்.

அழ. ஏன்? ஒரு தகப்பனுருக்குரிய சுதந்தரம் என் பட்சமில்லையா? அன்றியும், இன்னொரு நியாயமாக, என் பிள்ளையை பலாத்காரம் செய்ததொன்றில்லையா?

கா. அதற்கவர் ஒப்புக் கொள்ளார்.

அழ. அதற்கவன் ஒப்பமாட்டானா?

கா. மாட்டார்.

அழ. என்பிள்ளை?

கா. ஆம் உமதுபிள்ளை, தான் பயங்காளியென்றும், பலாத்காரத்தினால் இவைகளையெல்லாம் அவர் செய்யும்படி நேர்ந்ததென்றும், அவர் பயிங்கரமாய் நியாயஸ்தலத்தில் ஒப்புக் கொள்வது உமக்கு திர்ப்தியாயிருக்குமா? அதை ஒப்புக்கொள்ளாதிருக்கும் வண்ணம் எப்படியும் பார்த்துக்கொள்வார். அப்படிக்குச் செய்வாராயின், தன்னைத்தானே இழித்துக் கொள்பவர் ஆவார், அன்றியும், உம்மைப் போன்ற தந்தையின் பெயரையும் பழித்தவர் ஆவர்.

அழ. அதை எல்லாம் ஒரு பொருட்டாக பாவியேன்.

கா. அவருடைய கௌரவத்திற்கும், உம்முடைய கௌரவத்திற்கும், உலகத்தோர்க்கெல்லாம் அவர் தானய் சுயேச்சையாய் இந்த மணம் புரிந்ததாகச் சொல்லவேண்டியது அவசியமல்லவா ?

அழ. சரி, என்னுடைய மானத்திற்காகவும், அவனுடைய மானத்திற்காகவும், அப்படியல்லவென்று அவன் கூறவிரும்புகிறேன்.

கா இல்லை, அவர் ஒருகாலும் அப்படிச்செய்யார் எனநம்புகிறேன்.

அழ. அவன் அப்படிச் சீக்கிரம் செய்யும்படி பல வந்திக்கிறேன்.

கா. அப்படிச் செய்யமாட்டார் அன்று நான் உமக்குச் சொல்கிறேன்.

அழ. அப்படித்தான் அவன் செய்ய வேண்டும், இல்லாவிட்டால் என் சொத்தில் அவனுக் கொருகாசும் கொடுக்கப்போகிறதில்லை.

கா. நீங்களா ?

அழ. ஆம், நான் தான்.

கா. சந்தோஷம்.

அழ. சந்தோஷமா, ஏன் ?

கா. அவரை அவ்வாறு பராதீனம் செய்யமாட்டீர்.

அழ. நான் அவனைப் பராதீனம் செய்யமாட்டேனு ?

கா. செய்ய மாட்டீர்.

அழ. செய்யமாட்டேனு ?

கா. செய்யமாட்டீர்.

அழ. பார்ப்போம் ! இதென்ன பரிகாசமா ? நான் என்னுடைய மகனைப் பராதீனம் செய்யமாட்டேன் !

கா. செய்யமாட்டீர்—நான் சொல்லுகிறேன் பாரும்.

அழ. யார் என்னைத் தடுக்கக் கூடும் ?

கா. நீங்களே !

அழ. நானே ?

கா. ஆம்—உமக்கு மனம் வராது.

அழ. எப்படியும் மனம் வரும் !

கா. நீர் பரிகாசம் செய்கிறீர்.

அழ. நான் பரிகாசம் செய்யவில்லை.

கா. தந்தைக்கு சுபாவமாயுள்ள பட்சம் தடுக்கும் உம்மை.

அழ. தடுக்காது.

கா. தடுக்கும்.

அழ. நான் கட்டாயமாய் அவனைப்பராதீனம் செய்கிறேன் பார்.

கா. நீர் வேடிக்கையாய்ப் பேசுகிறீர்.

அழ. நான் வாஸ்தவமாய்ப் பேசுகிறேன்.

கா. எங்கப்பாணை! சுபாவத்தில் நீர் மிகவும் பட்சமுடையவர் என்று எனக்குத்தெரியும்.

அழ. எனக்குப் பட்சமே கிடையாது. நான் விரும்பும் பொழுது மிகவும் கடின சித்தமுடையவனா யிருப்பேன். இந்தப் பேச் செல்லாம் இதனுடன் முடியட்டும், என் கோபத்தை அதிகரிக் கின்றது இது.(செல்வநேசனிடம்.)போடா கட்டைதடியா! போய் என்பிள்ளையாகிய அந்தத் திருட்டுப் பையனை அழைத்துவா; நான்போய் இதற்குள், கௌரிநாதரைச் சந்தித்து எனக்கு நேரிட்ட துர் அதிர்டஷத்தை அவருக்குத்தெரிவிக்க வேண்டும்.

கா. ஏதாவது விஷயத்தில் நான் உங்களுக்கு உதவிசெய்யக் கூடு மாயின், நீங்கள் எனக்குக் கட்டளையிடலாம்.

அழ. அப்படிக் கூறுவதற்காக உனக்கு வந்தனம் செய்கிறேன்-ஹா! இவன் எனது ஏக புத்திரனாயிருக்க வேண்டுமா? தெய்வச் செய லாய் நான் இழந்தபெண், இப்பொழுது என்னுடன் இருக்க லாகாதா? என் ஆஸ்தியை யெல்லாம் அவளுக்குக் கொடுத் திருப்பேனே!—(போகிறான்.)

(மற்றிருவரும் நகைக்கின்றனர்.)

செ. நான் ஒப்புக்கொள்ள வேண்டியதுதான். நீ நிரம்ப கெட்டிக் காரன்; எல்லாம் சரியாகத்தான் நடந்தேறி வருகிறது.—ஆயி னும், இதெல்லாம் இப்படி இருந்தபோதிலும், நம்முடைய ஜீவ னத்திற்குப் பணம் அவசியமாக வேண்டுமே? நம்முடைய கடன்காரர்களெல்லாம் நான்கு புறமும் நம்மை நிர்ப்பந்திக் கின்றனரே!

கா. அதையெல்லாம் எனக்கு விட்டுவிடு. மந்திரம் பலித்து வருகி றது. முக்கியமாக வேண்டிய ஒரு ஆளைப் போல் ஒருவன் வேஷம் போடவேண்டியிருக்கிறது? அவன் நாம் நம்பத் தக்க வனாயிருக்கவேண்டும், அப்படிப் பட்டவனைக் கண்டு பிடிக்க என் மூளையை உருக்கிக் கொண்டிருக்கிறேன்!—இரு!—நீ கொஞ்சம் நிமிர்ந்து நில்—முண்டாசை இப்படி முறுக் கிக் கட்டிக்கொள்—ஒருகாலை இப்படிமுன்னால் எடுத்து வை.—கையை இடுப்பின் பேரில் இப்படி வைத்துக்கொள்.—

முறைத்துப்பார்—இப்படி கொஞ்சம்கம்பீரமாக நாடகமேடையில் நடப்பது போல் நட—ஆ! சரி—என்னுடேவா, உடுப்பை மாற்றி உன் முகத்தையும் மாற்ற எனக்குத்தெரியும்.

சே. என்னவேண்டுமென்றாலும் செய், நியாயாதிபதிக்கும் எனக்கும் மனஸ் தாப முண்டாகும் படி மாத்திரம் செய்யாதே!

கா. சீச்சீ! எல்லாக் கஷ்டங்களையும் அண்ணன் தம்பிகளைப்போல் பாகித்துக் கொள்வோம்; மூன்று வருஷம் மண்ணுக்குப் போட்டாலும் நம்முடைய தைரியமானது மழுங்கிப் போயா என்ன? (போகிறார்கள்)

காட்சிமுடிகிறது.

இரண்டாம் அங்கம்

கௌரி நாதரும் அழகானந்தரும் வருகிறார்கள்.

கௌ. ஆம், சந்தேகமில்லை, காற்று இப்படியே மாறுதிருக்குமாயின், நம்முடைய நண்பர்கள் இன்று இங்கு வந்து சேர்வார்கள். தாரா நகரத்திலிருந்து வந்த ஒரு மாலுமி, என் சிநேகிதர் அங்கிருந்து புறப்படும் தருவாயில், அவரைக் கண்டதாக உறுதியாகக் கூறினான். நாம் யோசித்திருக்கும் காரியத்திற்கு, இச்சமயம்என் பெண் இங்குவந்து சேர்வது அத்தனை உசிதமாயிராது. உம்முடைய குமாரனைப் பற்றி, நீர் இப்பொழுது என்னிடம் கூறியது, நாமிருவருமாகக் கலந்து தீர்மானித்திருந்த ஏற்பாடுகளை யெல்லாம் முற்றிலும் வியர்த்தமாக்கி விட்டது.

அழ. அதைப்பற்றி உமக்குக் கவலை வேண்டாம். எல்லா இடையூறுகளையும் நீக்கிவிடுவதற்கு நான் உத்திரவாதம்; இதோ அந்த வேலையாக உடனே புறப்படுகிறேன்.

கௌ. உம்! அழகானந்தரே, நான் சொல்வதைச் சற்றுகேளும், நம்முடைய பிள்ளைகளை நாம் மிகவும் ஜாக்கிரதையாக வளர்த்து வர வேண்டி யிருக்கிறது.

அழ. சந்தேகமில்லை—எதைப்பற்றி இவ்வாறு கூறுகிறீர்?

கௌ. உம்—வாலிபர்கள் சரியாக நடந்துகொள்ளாததற்கு, அவர்கள் தகப்பன்மார் அவர்களைச் சரியாகக் கொண்டு வராதது தான் காரணம்.

அழ. அப்படித்தான் சில சமயங்களில் நேர்கிறது ; ஆயினும் இப்படி நீர் கூறுவதின் அர்த்தமென்ன ?

கேள. நான் கூறுவதின் அர்த்தமென்னவா ?

அழ. ஆம்.

கேள. தகப்பனார் செய்ய வேண்டியபடி, உம்முடைய குமாரனை நீர் அடக்கி வந்திருப்பீராயின், உம்முடைய மகன் உம்மை இவ்வாறு மோசம் செய்திருக்க மாட்டான்.

அழ. அதுவா ? ஆமாம். நீர் உம்முடைய குமாரனை அடக்கி ஆண்டதுபோல் செய்திருக்க வேண்டுமென்கிறீர் வாஸ்தவத்தில் !

கேள. வாஸ்தவமாய். எனக்கு இம்மாதிரியாக அவன் ஏதாவது செய்திருந்தால் நான் மிகவும் வருத்தப் பட்டிருப்பேன்.

அழ. உம், தகப்பனார் செய்யவேண்டியபடி, நீர்மிகவும் நன்றாய் அடக்கி ஆண்ட உமது குமாரன், என் குமாரன் செய்ததை விட, இன்னும் கேடான காரியத்தைச செய்திருந்தாலோ ?—உம்—

கேள. என்ன !

அழ. என்னது என்ன ?

கேள. நீர் சொல்வது எனக்கு அர்த்தமாகவில்லை.

அழ. கௌரிநாதரே, மற்றவர்கள் நடவடிக்கையைக் கண்டிப்பதில் நீர் அவ்வளவு துரிதப்பட்டது அழகல்ல ; மற்றவர்களுடைய சிறுகுற்றங்களை எடுத்துக் காட்டு முன், தங்களிடமுள்ள பெருங் குற்றங்களைக் களைய முயலவேண்டும்.

கேள. இதென்ன குதிர் போடுகிறீர் ?

அழ. சீக்கிரம் இதன் விவரத்தை அறிவீர்.

கேள. என்னுடைய மகனைப்பற்றிஏதாவது கேள்விப்பட்டீரா என்ன?

அழ. இருக்கலாம்.

கேள. என்ன அது ?

அழ. உம்முடைய ஆள் காளப்பன், நான் இருந்த கஷ்டதிசையைக் கண்டு, மொத்தமாகப் பொதுவில் அதைப்பற்றி என்னிடம் கூறினான்; மற்ற விவரங்களையெல்லாம், அவனிடமிருந்தாவது, மற்றவர்களிடமிருந்தாவது, சீக்கிரம் கேட்டறிவீர். நான் உடனே ஒரு வக்கீலிடம் போக வேண்டியயிருக்கிறது, நான் செய்ய வேண்டியதின்னவென்று, வக்கீலைக் கேட்கவேண்டியதிருக்கிறது.—நான் வருகிறேன். (போகிறார்.)

கேள. என்ன அர்த்தம் இதற்கெல்லாம் ?—அவர் பிள்ளை செய்ததை விட கேடான காரியம்!—அதை விட கேடானது என்ன இருக்கக் கூடுமென்று நான் நினைக்க முடியவில்லை. என் கோட்பாட்டின் பிரகாரம், ஒருவன் தன் தகப்பனுருடைய அனுமதியின்றி கலியாணம் செய்துக் கொள்வது, எல்லாக் கெட்ட காரியங்களிலும் மிகவும் கேடானதாம்.-ஆ! இதோ வருகிறுன் என் குமாரன்.

லீலாநாதன் வருகிறுன்.

லீ. ஆ! தந்தையே—நீர் திரும்பிவந்தது மிகவும் சந்தோஷம். (அவரை ஆலிங்கனம் செய்துகொள்ள விரைகிறுன்.)

கேள. (அதைத்தடுத்து) கொஞ்சம் பொறு—இந்த விஷயத்தைப் பற்றி முன்பு பேசி முடிப்போம்.

லீ. அப்பா! உங்களை நான் ஆலிங்கனம் செய்து கொண்டபிறகு—

கேள. (அதைத்தடுத்து) கொஞ்சம் பொறு!—முன்பு நான் சொல்வதைக்கேள்.

லீ. என்ன அப்பா? நீர் சுகமாய்த் திரும்பி வந்ததற்காக என் சந்தோஷத்தை நான் தெரிவிக்கலாகாதா ?

கேள. ஆம், அதற்கு முன் நாமிருவரும் ஒரு வியவஹாரம் பேச வேண்டியிருக்கிறது.

லீ. என்ன அது ?.

கேள. நிமிர்ந்து நில்; உன் முகத்தை நான் நேராகப் பார்க்கட்டும்.

லீ. ஏன் ?

கேள. என்னை நேராகப்பார்.

லீ. அப்படியே.

கேள. இப்பொழுது சொல்—என்ன நடந்தது ?

லீ. என்ன நடந்ததா ?

கேள. ஆம், நான் வெளியூருக்குப் போயிருந்த பொழுது, என்ன செய்தாய் நீ ?

லீ. நான் என்ன செய்திருக்க வேண்டும் என்கிறீர் ?

கேள. நீ என்ன செய்திருக்க வேண்டுமென்பதைப்பற்றி நான் கேட்கவில்லை—நான் கேட்பது—நீ என்ன செய்தாய் என்று.

லீ. உமக்குக் கோபம் விளைக்கும் படியான ஒன்றையும் நான் செய்யவில்லை.

கேள. ஒன்றும் செய்யவில்லையா ?

லீ. இல்லை.

கேள. உனக்கு நிரம்பதைரியமிருக்கிறது !
லீ. என்மீது ஒரு குற்றமு மில்லாத படியால்.
கேள. உம்—காளப்பன் உன்சமாசாரமெல்லாம் தெரிவித்திருக்கிறான்.
லீ. காளப்பனா ?
கேள. ஆஹா !—இப்பொழுது தெரிகிறதா ?
லீ. அவன் என்னைப் பற்றிய சமாச்சாரம் உமக்குத் தெரிவித்திருக்கிறானா ?
கேள. அதைப் பற்றி நான் தீரவிசாரிப்பதற்கு இது சரியான இடமல்ல ; வேறு இடத்தில் இதைப் பற்றி ஆராயவேண்டும். நீ வீட்டிற்குப்போ. நான் சீக்கிரம் வருகிறேன் அங்கு. ஆ ! போக்கிரிப்பயலே ! எனக்கு மாத்திரம் நீ அவமானம் கொண்டு வந்திருந்தால், என் பிள்ளை யென்றும் பாராமல், உன்னை என் வீட்டை விட்டு துரத்தி விடுகிறேன். என் முகத்தில் மறுபடியும் விழிக்காதபடி செய்கிறேன் ! (போகிறார்.)

அஸ்வதேவனும், காளப்பனும் ஒரு புறமாக வருகிறார்கள்.

லீ. (ஒருபுறமாக)—என்னை இப்படி மோசம் செய்வதா ? திருட்டுக் கழுதை ! நான் அவனுக்குக் கூறிய ரகசியத்தை மிகவும் ஜாக்கிரதையாகப் பாது காப்பதை விட்டு, என் தகப்பனார் வந்ததும் அவரிடம் இதைத் தெரிவித்து விடுகிறானா ? ஆகட்டும் ! எங்கப்பானை இந்த நம்பிக்கைத் துரோகத்திற்காக அவனைத் தக்கபடி கண்டிக்கிறேன்.
அ. என் பிரிய நண்பனே, காளப்பா, உனக்கு நான் என்ன கைம்மாறு செய்யப்போகிறேன் ! உன்னை நான் என்னென்று புகழ்வது ! எனக்குதவியாக உன்னை எனக்களித்ததற்காக ஈசனுக்கு நான் வந்தனம் செய்யவேண்டும்.
லீ. ஆ ஹா ! வந்தாயடா அப்பா ! இன்று உன்னைப் பார்த்தது மிகவும் சந்தோஷம் !—திருட்டுப்பயலே !
கா. உங்கள் அடிமை !—நீங்கள் அப்படிச் சொல்லக் கூடாது !
லீ. (தன் கத்தியை உருவி) துரோகி ! நிரம்ப அழகாய் வேலை செய்திருக்கிறாய் !—உன்னைத் தக்கபடி தண்டிக்கவேண்டும்.—
கா. எஜமான் ! (முழந்தா ளிடுகிறான்)
அ. (லீலாநாதன் காளப்பனை அடிக்காதபடி, அவர்களுக் கிடையில் நின்று லீலாநாதனை தடுத்து) ஆ ! லீலாநாதா !
லீ. ஒதுங்கு அஸ்வதேவா ! என்னைத் தடுக்காதே !
கா. ஐயோ ! எஜமானே !

அ. (லீலாநாதன் கைகளைப் பிடித்துக்கொண்டு) கொஞ்சம் தயவுசெய்.

லீ. என்னைக் கொஞ்சம் பழிதீர்த்துக் கொள்ளவிடு.

அ. லீலாநாதா, உன் நண்பனாகிய நான் வேண்டுகிறேன் உன்னை! அவனை ஒன்றும் செய்யாதே.

கா. எஜமான்! நான் உங்களுக் என்ன கெடுதி செய்தேன்?

லீ. பாதகா! எனக்கு என்ன கெடுதி செய்தாயா?

[அவனை அடிக்கப் போகிறான்)

அ. (அவனைத் தடுத்து) மெல்ல! மெல்ல!

லீ. என்னை விடு அஸ்வதேவா!—இந்தப் பாதகன் எனக்குச் செய்த துரோகத்தை அவன் வாயினின்றும் வரவழைக்கிறேன் இந்த க்ஷணம்!—திருட்டுப் பயலே! நீ எனக்குச் செய்த மோசத்தை அறிவேன் நான்; இப்பொழுது தான் அறிந்தேன் அதை. இந்த ரகசியம் எனக்குத் தெரியாதென்று நினைத்தாய் போலும்! உன் வாயால் நீயே ஒப்புக் கொள்ளும்படிச் செய்கிறேன்—இல்லாவிட்டால்—இந்தக் கத்தியால் ஒரே வெட்டாய் வெட்டி விடுகிறேன்.

கா. ஐயோ! எஜமானே! உங்களுக்கு அப்படிச் செய்ய மனம் துணியுமா!

லீ. வா—உடனே உண்மையைக் கூறு.

கா. நான் உங்களுக்கு—துரோகமா—செய்தேன்?

லீ. ஆம் பாதகா! உன்மனதுக்குத் தெரியும் அது இன்னதென்று நன்றாய்.

கா. நான் பிரமாணமாகச் சொல்கிறேன்—நான் ஒன்றும் செய்யவில்லையே!

லீ. (மறுபடியும் அவனை அடிக்கப் பிரயத்னப்பட்டு) ஒன்றும் செய்யவில்லையா?

அ. (லீலாநாதனைத் தடுத்து) லீலாநாதா!

கா. ஆனால்—எஜமானே, எப்படியும் நீங்கள் அறிய விரும்புவதினால், சில நாட்களுக்கு முன் உமக்குப் பரிசாக அனுப்பிய பாணதேசத்து மதுவை, என்னுடைய சிநேகிதர்களும் நானுமாகக் குடித்து விட்டோம், என்று ஒப்புக் கொள்ளுகிறேன்; அந்த பிப்பாயில் ஒரு ஓட்டை செய்து, அதிலிருந்த மதுவெல்லாம் தரையில் ஓடி விட்டது என்று நீர் எண்ணும்படியாக, சுற்றிலும் தண்ணீரை இறைத்து வைத்தேன்.

வீ. ஆ. ஹா! திருட்டுக் கழுதை! பாண நகரத்திலிருந்து வந்த மதுவை யெல்லாம் குடித்தவன் நீதானா? பாபம்! அந்த வேலைக்காரி உன்னை மோசம் செய்தாள் என்று அவளை வீணில் கோபித்துக் கொண்டேன்.

கா. ஆம் எஜமானே! அதற்காக என்னை மன்னிக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

வீ. இதை நான் அறிந்தது சந்தோஷமாச்சுது. ஆயினும், இப்பொழுது நான் பேச வந்தது அதைப் பற்றி அல்ல.

கா. அதைப்பற்றி யல்லவா எஜமானே?

வீ. அல்ல, அதை விட எனக்கு மிகவும் முக்கியமான சமாசாரம், அதைப்பற்றி எனக்கு நீ சொல்லித்தான் தீரவேண்டும்.

கா. வேறொன்றும் நான் தப்பிதம் செய்ததாக எனக்கு ஞாபகமில்லை எஜமானே!

வீ. [அவனை அடிக்கமுயன்று) சொல்ல மாட்டாயா?

கா. ஐயோ!—

அ. மெல்ல, மெல்ல, (அவனைத் தடுத்து)

கா. ஆம், எஜமானே, இப்பொழுது ஞாபகம் வருகிறது. உண்மையைக் கூறுகிறேன்; மூன்று வாரங்களுக்கு முன்பாக, நீர் காதல் கொண்டிருக்கும், குறக் குலத்தில் வாழும் பெண்மணியிடம், ஒரு நாள் சாயங்காலம், அவளுக்குக் கொடுக்க ஒரு சிறிய கடியாரத்தை அனுப்பினீரே; நான் திரும்பி உம்முடைய வீட்டிற்கு உடம்பெல்லாம் புழுதி படிந்தவனாயும், முகமெல்லாம் இரத்தம் படிந்தவனாயும் வந்து, என்னைத் திருடர்கள் வழிமறித்து அடித்து அந்தகடியாரத்தைக் களவுசெய்து கொண்டு போய் விட்டார்களென்று கூறினேனல்லவா?—அப்படி நடக்கவில்லை, அந்த கடியாரத்தை நானே திருடி வைத்துக் கொண்டேன் எஜமானே!

வீ. நீயா என்கடியாரத்தைத் திருடினவன்?

கா. ஆம் எஜமானே, மணிஎன்னஎன்று பார்ப்பதற்காக, வைத்துக் கொண்டேன்.

வீ. ஆ ஹா! நல்ல நல்ல சமாசாரங்களெல்லாம் எனக்குத் தெரிகிறது! நிரம்ப யோக்கியமான மனிதனைத்தான் என் வேலையாளாகவைத்துக் கொண்டிருக்கிறேன். ஆயினும் இப்பொழுது என் மனதைக் கஷ்டப்படுத்துவது அதல்ல.

கா. அதல்லவா ?

வீ. இல்லை பாதகா! இதை யன்றி வேறொரு விஷயத்தைப் பற்றி நீ செய்த தப்பிதத்தை ஒப்புக் கொள்ள வேண்டியிருக்கிறது.

கா. இதென்ன கஷ்டகாலமாயிருக்கிறது! (தலையைச் சொரிகிறான்.)

வீ. சீக்கிரம் சொல். எனக்கு அவசரமாய் இருக்கிறது.

கா. அவ்வளவுதான் நான் செய்தது எஜமானே.

வீ. (அவனை அடிக்க யத்னித்து) அவ்வளவு தானா ?

அ. (அவனைத்தடுத்து) ஆ!

கா. ஓ! ஆமாம் எஜமானே !—ஆறுமாசத்திற்கு முன்பாக, ஒரு நாள் இரவு, ஒரு தடியினால் உம்மை நன்றாய்ப் புடைத்ததே ஒரு பிசாசு, ஞாபகமிருக்கிறதா ? நீர் ஓடினபொழுது நில அறைக்குள் வீழ்ந்து, உம்முடைய கழுத்து முறிந்திருக்கும் என்று பயந்தீரே ?

வீ. ஆம், அதைப்பற்றி என்ன ?

கா. நான் தான்—எஜமானே !—அந்த பிசாசாய் வந்தது.

வீ. துரோகி! நீயா அந்த பிசாசாக நடித்தது ?

கா. ஆம். எஜமானே ! அப்படிச் செய்தால் நீர் பயந்து தினம்ராத்திரியில், எங்கள் மீது கட்டுக் காவலாயிருக்க விரும்பமாட்டீர், என்று அப்படிச் செய்தேன். வேறொன்று மில்லை.

வீ. வேறொருசமயத்தில், வேறொரு இடத்தில், இப்பொழுது நான் அறிந்ததையெல்லாம் கவனிக்கிறேன்—அதிருக்கட்டும், இப்பொழுது நான் எடுத்த சமாசாரத்துக்குவருகிறேன்—என் தகப்பனாரிடம் நீசொன்னதை எல்லாம் ஒப்புக்கொள்ள வேண்டும்.

கா. உங்கள் தகப்பனாரிடமா ?

வீ. ஆமாம் திருட்டுப் பயலே !—என் தகப்பனாரிடம்.

கா. அவர் திரும்பி வந்த பிறகு அவரை நான் பார்க்கவு மில்லையே.

வீ. அவரைப் பார்க்கவுமில்லையா ?

கா. இல்லை எஜமானே.

வீ. வாஸ்தவமாய் ?

கா. வாஸ்தவமாக, அவரையே கேட்டுப் பாருங்கள்.

வீ. என்ன ஆச்சரியம் ! அவர் வாயினின்றும் இதை நான் கேட்டேனே !

கா. அப்படியாயின்—நீங்கள் என்னை மன்னிக்கவேண்டும்—அவர் உண்மையைப் பேசவில்லை.

கோளன் வருகிறான்

கோ. ஐயா, நீங்கள் கலியாணம் செய்து கொள்ளவிரும்பும் பெண் மணியைப்பற்றி துக்க கரமானசமாசாரம் கொண்டுவந்திருக் கிறேன்.

வீ. என்ன அது ?

கோ. உம்முடைய ஜ்வாலகிசோரியை, அந்தக் குறவர்கள் தங்களுடன் அழைத்துக்கொண்டுபோய் விடப்போகிறார்களாம். உடனே, அப்பெண்மணி என்னை அழைத்து, கண்களில் நீர்ததும்ப உம் மிடம் உடனே போய், இன்னும் இரண்டுமணி நேரத்திற்குள் ளாக, தன்னை உம்மிடம் ஒப்புவிப்பதற்காக அவர்கள் கேட்ட பணத்தை, நீர் அவர்களுக்கு கொடுக்காவிட்டால், அவளை நீர் மறுபடியும் காணுதபடி இழந்து விடுவீர், என்று சொல்லும் படி வேண்டிக் கொண்டார்கள்.

வீ. இரண்டுமணி நேரத்திற் குள்ளாகவா ?

கோ. ஆம் இரண்டு மணிக்குள். (போகிறான்.)

வீ. ஹா !—காளப்பா ! நீ நல்லவனுச்சே ! நீதான் எனக்கு உதவி செய்யவேண்டும்.

கா. (கர்வத்துடன் அவன் எதிரில் நடந்து) ஹா ! இப்பொழுது நான் நல்ல காளப்பன் !—உமக்குத் தேவையாயிருக்கும் பொழுது, நான் "நல்ல காளப்பன்" !

வீ. இதோபார் ! சற்று முன்பாக நீ செய்ததாக ஒப்புக்கொண்ட தப்பிதங்களை யெல்லாம் மன்னித்துவிட்டேன் !—அவைகளை விட இன்னும் கேடானது ஏதாவது செய்திருந்தாலும் மன் னித்து விட்டேன்.

கா. வேண்டாம் ! வேண்டாம் ! நான் செய்ததொன்றையும் மன் னிக்க வேண்டாம். உம்முடைய கத்தியினல் குத்தி என்னைக் கொன்றுவிடும். உம்மால் கொல்லப்பட்டால் நான் சந்தோஷ மாய்ச் சாவேன்.

வீ. அப்படியல்ல, நீ எனக்கு உதவிபுரிந்து, எனக்கு உயிரைக் கொடுக்கும் படியாக உன்னை வேண்டிக் கொள்ளுகிறேன்.

கா. இல்லை இல்லை ! நீங்கள் என்னைக் கொன்று விட்டால்தான் நல்லது.

வீ. உன் உயிரானது எனக்கு மிகவும் விலையிலாததாம் ! என் பொருட்டு உன் புகழத்தக்க புத்தியை உபயோகிக்கும்படி

வேண்டுகிறேன் உன்னை. எந்தக் கஷ்டத்தையும் உன்னால் தான் சாதிக்க முடியும்.

கா. வேண்டாம், என்னைக் கொன்று விடுங்கள்—உங்களை வேண்டுகிறேன்.

லீ. ஹா! என்மீது கொஞ்சம் தயைபுரிந்து, அதையெல்லாம் பற்றி இனி யோசியாதே. நான் வேண்டுகிற இந்த உதவியைச் செய்யும் வழியைப்பார்.

அ. காளப்பா, அவருக்காக நீ ஏதாவது செய்துதான் ஆக வேண்டும்.

கா. இவ்வாறு நான் அவமானப்பட்ட பிறகு, எப்படி செய்யக் கூடும்?

லீ. நான் கோபித்ததை யெல்லாம் மன்னித்து, உன் புத்தியைக் கொண்டு எனக்கு உதவிபுரி.

அ. நானும் அவரோடு சேர்ந்து உன்னை வேண்டுகிறேன்.

கா. இந்த அவமானமானது என் மனதை அரிக்கின்றது.

அ. உன் கோபத்தைக் கொஞ்சம் தணித்துக் கொள்.

லீ. காளப்பா, என் கலியாண விஷயத்தில் நான் இவ்வளவு கஷ்டதிசையில் இருப்பதைக் கண்டு, நீ என்னைக் கைவிடலாமா?

கா. நேராக என் முகத்திற் கெதிரில், என்னை இப்படி நீர் அவமானம் செய்வதா?

லீ. நான் செய்தது தவறுதான்; ஒப்புக் கொள்ளுகிறேன்.

கா. என்ன, ஒரு திருட்டுப் பயல்! முடிச்சுமாறி! ஜெயிலுக்குப் போனவன், பாதகனைப் போல, எண்ணிப்பேசுவதா?

லீ. அப்படிச் செய்ததற்காக நான் மிகவும் துக்கப்படுகிறேன்.

கா. உமது கத்தியை என்உடலில் ஊடுருவிச் செலுத்தப் பார்ப்பதா!

லீ. என் முழுமனதுடன், என்னை நீ மன்னிக்க வேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறேன். அன்றியும் நான் உனக்கு முழந்தாளிடவேண்டுமென்று விருப்பமிருந்தால், காளப்பா, இதோ அப்படியே செய்கிறேன் (முழந்தாளிட்டு) என்னை இச்சமயம் கைவிட வேண்டாமென்று இரந்து வேண்டுகிறேன்.

அ. ஆ! காளப்பா! இனிமேல் நீ இசைய வேண்டியது தான்.

கா. எழுந்திரும்—இன்னொருதரம் இம்மாதிரியாக அவசரப்படப் பேசிவிடாதீர்.

லீ. நீ எனக்குதவுவதாக வாக்களிக்கிறாயா?

கா. அதைப் பற்றியோசிக்கிறேன்.

லீ. ஆயினும், நமக்குக் காலம் அதிகமில்லை யென்பதை அறிவாய்.

கா. அதைப் பற்றி உமக்குக் கவலைவேண்டம். உமக்கு எவ்வளவு வேண்டும்?

லீ. ஐந்நூறுபொன்.

கா. உமக்கு?

அ. இருநூறு பொன்.

கா. உங்கள் தகப்பன்மார் களிடமிருந்து இப்பணத்தை நான் வரவழைக்கிறேன்—உங்கள் தகப்பனர் விஷயத்தைப் பற்றி முன்பே எல்லாம் ஏற்பாடாய்விட்டது.—உம்முடைய தகப்பனுரைப் பற்றி, அவர் முதல் தரமான லோபியாயிருந்த போதிலும், அவ்வளவு கஷ்டமிராது; ஏனெனில் ஸ்வாமியின் கிருபையால், அவருக்கு மூளை அதிகமாயில்லை யென்பது, நீர் முற்றிலும் அறிந்த விஷயமே. மற்றவர்கள், அவர் எப்படி நம்பவேண்டுமென்று விரும்பினர்களோ, அப்படியே நம்புவார் என்பதற் கையமில்லை. நான் அவரைப்பற்றிச் சொல்வது உமக்குக் கோபம் விளக்கலாகாது; உங்களுக்கும் அவருக்கும் புத்திவிஷயத்தில் யாதொரு ஒற்றுமையு மில்லை.

லீ. மெல்ல, காளப்பா.

கா. ஆயினும்—இதோ வருகிருர் அஸ்வதேவருடைய தகப்பனர். அவரிடம் நமது வேலையை முன்பு ஆரம்பிப்போம், அவர் முதலில் வருகிறபடியால் நீங்கள் இரண்டு பெயரும் போய் விடுங்கள்.—நீர் செல்வநேசனிடம் அவன் நடக்கவேண்டியதைச்செய்ய, சீக்கிரம் வரச் சொல்லுங்கள்.

(அஸ்வதேவரும், லீலாநாதரும் விரைந்து போகின்றனர்.)

அழகாநந்தர் வருகிருர்.

கா. தனக்குள் பேசிக்கொள்ளுகிருர்.

அழ. தகப்பனுயிற்றே என்று எனக்காக கொஞ்சமாவது பார்க்க வேண்டாமா? கொஞ்சமாவது மரியாதை இருக்கவேண்டாமா? இப்படி இழிந்த குலத்திலுதித்த ஒரு பெண்ணைக் கலியாணம் செய்து கொள்வதாவது!—ஆ! இந்த யௌவனத்தின் கொழுப்பிருக்கிறதே!—

கா. ஐயா, உங்கள் ஊழியன்,

அழ. வா அப்பா, காளப்பா.

கா. உம்முடைய குமாரன் விஷயத்தைப்பற்றி யோசிக்கிறீர் போலும்.

அழ. ஆம், அது எனக்கு அடங்காக் கோபத்தை விளைத்திருக்கிறது.

கா. பாருங்கள், இந்த உலக வாழ்க்கையென்பது மிகவும் விசித்திரமானது. எந்த க்ஷணம் என்ன நேரிடுமோவென்று எதற்கும் சித்தமாயிருப்பதே மிகவும் உசிதமாகும் ; அநேக வருஷங்களுக்கு முன் ஒரு பெரியவருடைய உபதேசத்தைப் பற்றி கேள்விப்பட்டேன், அதை எப்பொழுதும் என் ஞாபகத்தில் வைத்திருப்பது நான்.

அழ. என்ன அது?

கா. அவர் சொன்னதென்னவென்றால், ஒரு குடும்பஸ்தன், கொஞ்சகாலம் கழித்துத் தன் வீட்டுக்குப் போவதானால், அவன் திரும்பிப் போனவுடன், அங்கு நேரிட்டதென அவனுக்குத் தெரிவிக்கக் கூடிய எல்லாதுர் அதிர்ஷ்டங்களைப் பற்றியும் அவன் மனதில் யோசித்துக் கொண்டே போகவேண்டும், என்பதாம்; அவன், தன்வீடுதீப்பற்றி எறிந்துபோய் விட்டது, தன் பணத்தை திருடர்கள் திருடிக் கொண்டு போய் விட்டார்கள் ; தன் பெண்ஜாதி இறந்து போனாள், தன்மகன்கைகாலறுப்புண்டான், தன் பெண் வீட்டைவிட்டு ஓடிப்போய்விட்டாள், என்று இப்படிப்பட்ட விஷயங்களெல்லாம் தனக்கு நேரிட்டதாக நினைத்துக் கொள்ளவேண்டும் ; பிறகு எது எது நடக்க வில்லையோ, அவைகள் நடவாததற்காக தன் அதிர்ஷ்டம் என்று சந்தோஷப்படவேண்டும் என்பதாம். என் சொந்த வாழ்க்கையில் இந்த புத்திமதியை நான் அனுசரித்து வந்திருக்கிறேன். நான் எனது எஜமானர் வீட்டிற்குத் திரும்பிப் போகும் பொழுதெல்லாம், அவர்கள் என்னை கோபித்துக் கொள்வார்கள், திட்டுவார்கள், செருப்பால் அடிப்பார்கள், உதைப்பார்கள் என்று என்மனதை சித்தப் படுத்திக் கொள்வேன் ; இதிலேதாவது குறைவுபட்டாலோ, என்பாக்கியம் என்று சந்தோஷப்படுவேன்.

அழ. அதெல்லாம் சரிதான்—ஆயினும் இந்த இழிகுலத்திற் பிறந்த பெண்ணை என்மகன் கலியாணம் செய்து கொண்டதை, என்னால் பொறுக்கமுடியவில்லை. நான் அவனுக்காகத் தீர்மானித்து வைத்திருந்த விவாஹம் இதனால் தடை பெறுகிறது. ஆகவே

சிலவக்கீல்களிடம் போய் அதை ரத்துசெய்ய ஏற்பாடு செய்தி ருக்கிறேன்.

கா. ஐயோ! நான்சொல்வதை நம்புங்கள் ஐயா, இந்த வியவஹாரத்தை வேறெந்த விதத்திலாவது முடிவுக்குக் கொண்டு வருவது நலமெனத் தோன்றுகிறது. இந்த தேசத்தில் கோர்ட்டு வியவஹாரம் என்றால் எப்படிப்பட்டதென்று உமக்கு நன்றாய்த் தெரியும்; அநேகம் கஷ்டங்களுக்கு உள்ளாக்கப்படுவீர் பிறகு.

அழ. நீசொல்வது சரிதான், நானும் அப்படித்தான் நம்புகிறேன், ஆயினும் வேறு என்ன வழியிருக்கிறது?

கா. நான் ஒருவழி கண்டு பிடித்திருக்கிறேன் என்று நினைக்கிறேன். இந்த மனக்கவலையினின்றும் உம்மைத் தப்புவதற்கு, எப்படியாவது ஒருவழி கண்டு பிடிக்க வேண்டுமென்று முயன்றேன், உம்முடைய கஷ்டத்தைப் பார்த்து பரிதாபப்பட்டவனாய். உத்தமரான தகப்பன்மார்கள் அவர்களது பிள்ளைகளைப்பற்றி துக்கப்படுவதைக் கண்டால், என்மனமானது மிகவும் சஞ்சலத்தையடைகிறது; அதுவும் உங்கள் விஷயத்தில் எனக்கு மிகவும் கௌரவம் உண்டு.

அழ. மிகவும் சந்தோஷம்.

கா. ஆகவே, உம்முடைய மகன் விவாகஞ்செய்து கொண்ட அப்பெண்ணின் சகோதரனைப் போய்ப் பார்த்தேன். அவனுக்கு வெட்டுவதும் கொல்லுவதும் தான் தொழில்; எந்நேரமும் கையும் கத்தியுமாயிருப்பவன், பேச்செல்லாம் வெட்டும் குத்தும் தான்! ஒருவனைக் கொல்வதென்றால், அவனுக்கு, காலையில் எழுந்ததும், காப்பிசாப்பிடுவதுபோல். அவனுடன் பேசி, மெல்ல இந்த கலியாண விஷயத்திற்குக் கொண்டு வந்து, அது பலாத்காரத்தின் பேரில் நடந்த படியால் எவ்வளவு எளிதில் இதை நீர் ரத்து செய்ய மார்க்கம் அகப்பட்டதென்று அவனுக்குக் காண்பித்து, தகப்பனாகிய உமக்கு இதிலுள்ள சுதந்தரங்களை அவனுக்கு அறிவித்து, நியாயசட்டத்தின்படியும், உமது செல்வாக்கினாலும், உமது சிநேகிதர்கள் மூலமாயும், உமக்கு நியாயஸ்தலத்தில் கிடைக்கக் கூடிய ஒத்தாசைகளையெல்லாம், எடுத்துக் காட்டினேன். முடிவில் அவனை அப்படியே கவிழ்த்து விட்டேன், அதன் பேரில், ஏதோ ஒரு

தொகையைப் பெற்றுக் கொண்டு, இந்த வியவஹாரத்தைப் பைசல் பண்ணிவிட வேண்டுமென்று நான் சொன்னதற்கிசைந்தான்; நீர் அந்தத் தொகையை அவனுக்குக் கொடுப்பதானால் தான் இந்த கலியாணத்தை ரத்து செய்வதாக ஒப்புக்கொண்டான்.

அழ. என்ன கேட்டான் அவன்?

கா. ஓ! அசாத்தியமான தொகையில் ஆரம்பித்தான்.

அழ. எவ்வளவு அது?

கா. ஐந்நூறு அறுநூறு பொன்என்று ஆரம்பித்தான்.

அழ. அவனுக்கு ஐந்நூறு அறுநூறு தரம் வாந்தி பேதிவர! நம்மை என்ன கேலி பண்ணுகிறுஞ அவன்?

கா. அப்படித்தான் நானும் கேட்டேன். அதெல்லாம் முடியவே முடியாதென்று ஒதுக்கிவிட்டேன். ஐந்நூறு அறுநூறு பொன் அவனுக்குக் கொடுக்க நீர் ஏமாந்த சோணகிரி அல்லவென்று அவனுக்கு ஸ்பஷ்டமாய்த் தெரிவித்தேன்; சுருக்கிச் சொல்லுமிடத்து, நெடுநேரம் எங்களுக்குள் நடந்த வாக்கு வாதத்தின் முடிவு இதாகும். "நான் ராணுவத்தைச்சேரவேண்டிய காலம் வந்து விட்டது. ஆகவே என் உடை முதலியவைகளுக் கெல்லாம் ஏற்பாடு செய்ய வேண்டி யிருக்கிறது. நீர் விரும்புகிறபடி செய்ய, எனக்கிஷ்ட மில்லாவிட்டாலும், எனக்குக் கொஞ்சம் பணம் அவசியமாய் வேண்டியிருக்கிற படியால், இதற்கு ஒப்புக்கொள்ள வேண்டியவனுயிருக்கிறேன். எனக்கு ஒரு குதிரை வேண்டி யிருக்கின்றது. ஒரு சுமாரான நல்ல குதிரை அறுபது பொன்னுக்குக் குறைந்து கிடைக்காதெனக்கு" என்று அவன் தெரிவித்தான்.

அழ. உம்—சரி—அறுபது பொன் தொலைக்கிறேன்.

கா. "ஜீனி முதலிய குதிரையின் முஸ்தீபும், துப்பாக்கிகளும், வேண்டியிருக்கிறது. அவைகள் குறைந்த பட்சம் இருபது பொன்னுவதுபிடிக்கும்"

அழ. உம்—இருபதும் அறுபதும்—எண்பது பொன் ஆகிறது.

கா. சரியாக.

அழ. நிரம்ப அதிகம்—ஆயினும் ஒழியட்டும்—ஒப்புக் கொள்ளுகிறேன்.

கா. "என்னுடைய வேலைக்காரனுக்கும் ஒரு சின்ன மட்டமாவது வேண்டியிருக்கிறது, அது ஒரு முப்பது பொன்னுகும்."

அழ. அவன் பாழாய்ப் போக! அவன் காலால் நடந்து போகட்டும்! நான் ஒரு பைசாவும் கொடுக்க மாட்டேன்!

கா. ஐயா—

அழ. மாட்டேன்! அதனப்பிரசங்கிக் கழுதை!

கா. எஜமான் பின்னால் அவன் நடந்து போக முடியாது பாருங்கள்.

அழ. நடந்து போகா விட்டால் பறந்து போகட்டும்! வேலைக்காரக் கழுதைக்கு ஒரு குதிரை என்ன!—இல்லாவிட்டால், அவன் எஜமானும் அவனும் இரண்டு பெயரும், காலால் நடக்கட்டும்!

கா. ஐயோ ஸ்வாமி! ஐயா, அற்பத்துக்காக எல்லாவற்றையும் கெடுத்து விடாதீர். உம்மை வேண்டிக் கொள்ளுகிறேன். கோர்ட்டுக்கு மாத்திரம் போகாதீர், கோர்ட்டுக்குப் போய் சிக்கிக்கொள்வதைவிட, எதையும் கொடுத்துத் தொலையும்.

அழ. உம்—சரி—அப்படித் தானகட்டும்—இந்த முப்பதுபொன்னை யும் நான் தொலைக்க வேண்டியது தான்.

கா. "என் சாமான்களை யெல்லாம், தூக்கிக்கொண்டுவர—ஒரு பொதிமாடு—"

அழ. ஓ! அது வொன்று?—அதைவிட அவன் எருமைக்கடாவின் மீதேறிக் கொண்டு எமலோகம் போய்ச் சேரட்டும்!—இதெல்லாம் முடியவே முடியாது! நாம் கோர்ட்டுக்குப் போவோம்.

கா. ஐயா, கொஞ்சம் தயவு பண்ணுங்கள்—

அழ. மாட்டேன்! அதெல்லாம் ஒன்றும் முடியவே முடியாது.

கா. ஒரு சின்ன பொதி மாடு.

அழ. ஒரு சின்ன கழுதை குட்டிகூட கொடுக்க மாட்டேன் அவனுக்கு!

கா. கொஞ்சம் யோசித்துப் பாருங்கள்—

அழ. மாட்டேன். நான் கோர்ட்டுப் போகிறேன்

கா. ஐயோ! ஐயா, நீங்கள் என்ன இப்படி பேசுகிறீர்களே! இப்படி நீங்கள் தீர்மானம் பண்ணலாமா? கோர்ட்டுக்குப் போவதினால் என்னென்ன கஷ்டங்கள் இருக்கின்றன வென்று யோசித்துப் பாருங்கள். முதலில் நோடீசு கொடுக்கவேணும், அதற்கு சிலவு; பிறகு சம்மன் தாக்கல் பண்ணவேண்டும், அதற்கு சிலவு; பிறகு பிரதிவாதியிடம் சம்மனைச் சேர்க்கவேணும், அதற்கு சிலவு, இதற்காக பெய்லீப்புக்கு துட்டு,சாட்சி சம்மன் பண்ண வேண்டும், அதற்கு சிலவு, இதல்லாம் அல்லாமல், வக்கீலுக்கு

வியாஜ்யம் நடத்த பீசு, வக்கீல் குமாஸ்தாவுக்கு செலவு, வக்கில் ஆபீசு பையனுக்கு பத்யம்; இந்த செலவெல்லாம் ஒரு புறம் இருக்கட்டும்; வியாஜ்யம் சீக்கிரம் தீர்மானமாகுமா என்ன? தற்காலம் கோர்ட்டுகளில் நடக்கிற மாமூல்பிரகாரம், எத்தனை வாய்தா விழும் என்று யோசித்துப் பாருங்கள், ஒவ்வொரு வாய்தாவுக்கும் கட்டைத் தூக்கிக்கொண்டு, வீட்டிலிருந்து வக்கீல் வீட்டிற்கும், அங்கிருந்து கோர்ட்டுக்கும், ஓடவேண்டியதுதான்! இதன்றியும் வாய்தாவுக்கு வாய்தா சாட்சிக்காரர்களைச் சரிப்படுத்தவேண்டும். "சாட்சிக் காரர் காலில் விழுவதைவிட கட்சிக்காரன் காலில் விழலாம்" என்னும் பழமொழியைத் தாங்கள் கேட்டிருப்பீர். இவ்வளவு தொல்லையும் கடந்து, தெய்வாதீனத்தால் வியாஜ்யம் எடுத்துக் கொள்ளப்பட்டால், உம்முடைய வக்கீல் வேறு கோர்ட்டில் வேலையாயிருப்பார்! வியாஜ்யத்தைப் பற்றி ஒன்றும் தெரியாத தன் ஜூனியரை அனுப்பிவிடுவார். நியாயாதிபதி கேட்கும் கேள்விகளுக்கு பதில் உரைக்கத் தெரியாது அவர் விழிப்பார். நியாயாதிபதி உம்மைத் திட்டுவார், வக்கீலும் உம்மைத் திட்டுவார், வக்கீல் குமஸ்தாவும் உம்மால்தான் வியாஜ்யம் கெட்டுப்போய் விட்டது என்று உம்மை வைவார்! எதிராளியின் திட்டுகளுடன் இவைகளையும் நீங்கள் பொறுக்க வேண்டும். இந்தக் கஷ்டமெல்லாம் அனுபவித்த பிறகு, நியாயாதிபதி எப்படி தீர்மானம் செய்கிறாரோ? யாருக்குத் தெரியும்? அவர் லஞ்சம் வாங்குகிற ஆசாமியாயிருந்தால் உம்முடைய சரியான வியாஜ்யம் கூட அதோகதிதான்! இல்லை. உங்களுக்கு அனுகூலமாகத் தெய்வாதீனத்தால் தீர்மானம் ஆச்சுதென்று வைத்துக் கொள்வோம், எதிரி அப்பீல் செய்வான்! அல்லது உமக்கு விரோதமாகத் தீர்மானம் ஆனால், நீங்கள் அப்பீல் செய்யவேண்டும். உடனே, 'அடியைப் பிடியடாபாரதபட்டா" என்று, செலவும் கஷ்டமும் மறுபடியும் ஆரம்பமாக வேண்டியதுதான். முதல் அப்பீல், இரண்டாவது அப்பீல், ஹைகோர்ட்டு ரிவிஷன், பிரிவிகௌன்சில் அப்பீல்! இதெல்லாம் முடிவதற்குள்ளாக மூன்றுதலை முறை ஆகிவிடும்! ஐயா! இந்த யமவேதனையினின்றும் எப்படியாவது நீர் தப்பித்துக் கொள்ளும். கோர்ட்டுக்குப் போவதைவிட, நரகத்திற்குப் போகலாம்.

கோர்ட்டில் காலை எடுத்து வைப்பதைவிட,நான் அந்தமானுக்கு ஓடிப்போய்விடுவேன் !

அ. அந்தப் பொதிமாட்டிற்காக அவன் எவ்வளவு கேட்டான் ?

கா. அந்தப் பொதிமாடு, தன் குதிரை தன் வேலையாளின் மட்டம், ஜீனிகள், துப்பாக்கிகள், இவைகளெல்லாவற்றிற்காகவும், தான் ஹோட்டல்காரனுக்குக் கொடுக்க வேண்டிய கொஞ்சம் பாக்கிக்காகவும், எல்லாம்சேர்த்து இரு நூறு பொன் கேட்கிறான்.

அ. இரு நூறு பொன்னு !

கா. ஆம்.

அ. (கோபத்துடன் ரங்கத்தில் இங்கு மங்குமாய் நடந்து)சரி.—ஆனால்—கோர்ட்டுக்குத்தான் போகவேண்டும் !

கா. கொஞ்சம் தீர்க்காலோசனை பண்ணுங்கள்.

அ. நான்கோர்ட்டுக்குத் தான் போவேன் !

கா. வீணாகத்தாங்கள் கஷ்டத்திற்கு—

அ. நான் எப்படியும் கோர்ட்டுக்குத் தான் போவேன் !

கா. நீங்கள் இந்த விஷயத்தை மாத்திரம் யோசித்துப் பாருங்கள். கோர்ட்டிற்குப்போனால் மாத்திரம் செலவில்லையா ? நோட்டீசு செலவு, வக்கீல் செலவு, வக்கீல் குமாஸ்தா செலவு, சம்மன் செலவு, சாட்சி சம்மன் செலவு, டிக்ரிநகல்செலவு, உங்களுக்கு விரோதமானால்,அப்பீல் செலவு,இரண்டாவது அப்பீல் செலவு ரிவிஷன் செலவு, பிரிவுகௌன்சில் செலவு ! இதெல்லாம் அல்லாமல் பெய்லீப்புகள் முதல் எத்தனை பெயருக்கு லஞ்சம் கொடுக்க வேண்டும் ! இந்த செலவை யெல்லாம் விட, இந்த மனிதனுக்கு 200 பொன் கொடுத்து விட்டு ஆயு மென்றிருக்கலாம் நீர்.

அ. என்ன ? இருநூறு பொன்னு !

கா. ஆம், அப்படிச் செய்தால் உமக்கும் லாபகாரமாகும். கோர்ட்டுக்குப் போனால் எவ்வளவு மொத்தம் செலவாகுமென்று, ஒரு புள்ளிப்போட்டுப் பார்த்தேன் ; இந்த மனிதனுக்கு இருநூறு பொன் கொடுத்துப் பைசல் பண்ணினால், குறைந்த பட்சம், ஐந்நூறு பொன்னாவது உமக்கு லாபமாகும் என் கணக்கின்படி ; அல்லாமலும் கோர்ட்டின் கஷ்டமுமிராது, உமது காலும் ஓடியாது,மனமும் நிம்மதியாயிருக்கும்,இந்த வக்கீல்கள் கையில் அகப்பட்டு, கஷ்டப் படுவதைவிட, கோர்ட்டுக்குப் போகாமலிருக்க நான் முன்னூறு பொன் கொடுப்பேன்.

அ. அதற்காகப் பயப்படுபவனல்ல, இந்த வக்கீல்கள் என்னை என்ன வேண்டுமென்றாலும் செய்யட்டும்.

கா. உங்களிஷ்டம்—ஆயினும் நானாயிருந்தால், வியாஜ்யத்தின் அருகில் அண்ட மாட்டேன்.

அ. நான் இருநூறு பொன் கொடுக்க மாட்டேன்.

கா. ஆ !—நான் பேசிக் கொண்டிருந்த மனிதன் இதோ வருகிறான்!

செல்வநேசன் மாறுவேடம் பூண்டு வருகிறான்.

செ. காளப்பா ! அஸ்வதேவனுடைய தகப்பன் அழகாநந்தன் எங்கிருக்கிறான், எனக்கு கொஞ்சம் தெரிவி !

கா. ஏன் ஐயா ?

செ. அந்த ஆசாமி, என்னை கோர்ட்டுக்கு இழுக்கப் போகிறதாயும், என் தங்கையின் கலியாணத்தை ரத்து செய்யப் பிரயத்னப் படுவதாயும் இப்பொழுதுதான் கேள்விப் பட்டேன் !

கா. அப்படிச் செய்ய எண்ணுகிறாரோ என்னமோ அது எனக்குத் தெரியாது; நீர் விரும்புகிற அந்த இருநூறு பொன்னைக் கொடுக்க இசைய மாட்டேன் என்கிறார்; அது நிரம்ப அதிகம் என்று சொல்லுகிறார்.

செ. என்ன! என்ன சொன்னான்! அப்படியா சமாசாரம் அவன் மாத்திரம் என் கண்ணில் அகப்பட்டால் அவன் தோலை அப்படியே உரித்து விடுவேன்! அதற்காக என்னைத் தூக்கில் போடுவதா யிருந்தாலும் !

(அழகாநந்தன் காளப்பன் பின்னால், செல்வநேசன் கண்ணுக்குப் புலப்படாதிருக்கும்படி, மறையப் பார்க்கிறான்.)

கா. ஐயா, அஸ்வதேவருடைய தகப்பனாருக்கு கொஞ்சம் தைரியமுண்டு, ஒரு கால் உமக்கு அவர் பயப்படமாட்டார்.

செ. அவனா? அவனா?—என் கண் எதிரில் மாத்திரம் படட்டும் !—இங்கிருப்பானாகில் இட்சணம் இந்தக் கத்தியை அவன் உடலை ஊடுருவிச் செல்லச் செய்வேன் !—அது யார் அந்த மனிதன்?

கா. அவரல்ல ஐயா, அவரல்ல.

செ. அவனுடைய சிநேகிதனா என்ன ?

கா. இல்லை ஐயா, அவருக்கு ஜன்மவிரோதி.

செ. ஜன்மவிரோதி ?

கா. ஆமாம்.

செ. ஆ! நிரம்ப சந்தோஷம்! ஏன் ஐயா இந்தக் கழுதை அழகாநந்தனுக்கு விரோதியா நீர் ?

கா. ஆமாம், அதற்கு நான் உத்தரவாதம்.

சே. (முறட்டுத்தனமாய் அவன் கையைப் பிடித்துக் குலுக்கி) உன் கையைக் கொடு! மிகவும் சந்தோஷம்! நான் சத்தியம் செய்கிறேன், எங்கப்பாணை, இதோ என் கையிலிருக்கும் கத்தியின்மீதாணை, நான் அறிந்த எல்லா தெய்வங்களின் மீதாணை!—இன்று சாயங்காலத்திற்குள், அந்தப் படுக்காளி பாதகன் அழகாநந்தன், உம்மைத் தொந்தரவு செய்யாதபடி அவனை யமலோகம் அனுப்பிவிடுகிறேன்—என் வார்த்தையை நம்பும்.

கா. ஐயா, இந்த நாட்டில் அப்மாதிரியாக ஒருவரை கொல்லக் கூடாதுங்கள்.

சே. அதெல்லாம் ஒன்றும் பார்க்கமாட்டேன்! எனக்கென்ன கெட்டுப்போகிறது?

கா. அவர் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள ஜாக்கிரதையாயிருப்பார் என்று நம்பும்; அவருக்கு, பந்துக்கள், சிநேகிதர்கள், வேலைக்காரர்கள் இருக்கிறார்கள்—உம்முடைய கோபத்தினின்றும் அவரைக் காப்பாற்ற.

சே. எங்கப்பாணை! அது தான் நான் கோருவது! அதைவிட வேறொன்றும் விரும்பேன். (தன் கத்தியை உருவி, நான்கு பக்கமும் ஏதோ மனிதர்கள் இருப்பது போலும், அவர்களைக் குத்திக் சொல்வதுபோலும், கத்தியை வீசுகிறான்.) அப்படி! அப்படி! போங்கள் யமலோகம்!—ஆ! அவன் தன் பரிவாரங்களுடன் இட்சணம் என் எதிர்ப்படுவானாயின்! ஒரு இருபது முப்பது பெயரை அழைத்துக்கொண்டு வரவேண்டும்! கத்தியும் கையுமாய் என்னை எதிர்க்க வேணுமவன்!—ஆ! பாதகர்களே! என்னை எதிர்க்கும்படியாக அவ்வளவு தைரிய மிருக்கிறதா உங்களுக்கு!—வாருங்கள்! அனுப்புகிறேன் உங்களை யமலோகம்!—தயை கியையெல்லாம் இங்கு கிடையாது!—எதிருங்கள்!—நில்லுங்கள்! குத்துங்கள்!—பின்வாங்காதீர்!—நேராகப் பாருங்கள்! ஆ! பாதகர்களே! கேப்மாரிகளே!—இப்படியா குத்த வேண்டும் உங்களை! போதும் என்கிற வரையில் கொடுக்கிறேன் உங்களுக்கு! எதிருங்களடா எதிருங்களடா என்னை! திருட்டுப் பயல்களே! வாருங்கள்! வாங்கிக் கொள்ளுங்கள்! இதை வாங்கிக் கொள்ளுங்கள்!—இதையும்! இதையும்!—அதையும்—என்ன! பின்னிடுகிறீர்களா? ஓடாதீர்கள்! ஓடாதீர்கள் நில்லுங்கள்!

கா. ஐயையோ! ஐயா, நாங்களல்ல அவர்கள்.

சே. என்னை ஏமாற்ற முடியாதென்று இதனால் அறிவீர்கள்! (போகிறான்.)

கா. பார்த்தீர்களா! இந்த இருநூறு பொன்னுக்காக, எத்தனை பெயர் மாளவேண்டி வருமென்று? சரி! உங்கள் அதிர்ஷ்டம்! நான் வருகிறேன்.

அ. (நடுநடுங்கி) காளப்பா—

கா. அழைத்தீரா?

அ. அந்த இருநூறு பொன்னையும் கொடுக்கத் தீர்மானித்தேன்.

கா. அதைக் கேட்க சந்தோஷப்படுகிறேன்—உமது நன்மையின் பொருட்டு.

அ. நீ போய் அழைத்துவா அவனை. என்னிடம் அந்தப் பணம் இருக்கிறது.

கா. அதை என்னிடம் கொடுத்து விடுங்கள், போதும். நீர் வேறொரு மனிதன் என்று அவனுக்குச் சொல்லிவிட்டு, இப்பொழுது நீர்தான் காளப்பன் என்று அவன் எதிரிற் படலாகாது. அன்றியும் அவனை நீர் நேரிற் காண்பீராயின், ஒருவேளை இன்னும் அதிக பணம் கேட்கவேண்டுமென்று எண்ணினாலும் எண்ணுவான்.

அ. ஆமாம், ஆயினும், என் பணம் எங்குபோய்ச் சேர்ந்ததென்று எனக்குத் தெரிந்தால் திர்ப்திகரமாயிருக்கும்.

கா. என்னை நம்பவில்லையா நீர்?

அ. அப்படியல்ல, ஆயினும்—

கா. ஐயா, இதைக் கொஞ்சம் யோசனை பண்ணிப் பாருங்கள்; நான் யோக்கியனாகவாவது இருக்க வேண்டும் அயோக்கியனாகவாவதிருக்கவேண்டும். இரண்டிலொன்று; நான் உங்களை மோசம் செய்வேன் என்று நினைக்கிறீர்களா? என் எஜமானனது குடும்பத்துடன் சம்பந்தம் செய்ய வேண்டுமென்று விரும்புகிற உங்களுக்கும், என் எஜமானனுக்கும் உதவிசெய்ய வேண்டிய வேலையைத்தவிர, வேறொன்றெனக் குண்டோ? நீர் என்மீது சந்தேகப்பட்டால், இதற்கு மேல் இவ்விஷயத்தில் நான் பிரவேசிக்க வில்லை; உம்முடைய வியவஹாரங்களையெல்லாம் சரிப்படுத்த வேறு யாரையாவது பார்த்துக் கொள்ளும்.

அ. ஆனால்—இதை வாங்கிக்கொள்.

கா. வேண்டாம் ஐயா, உம்முடைய பணத்தை என்னிடம் கொடாதீர். வேறு யார் மூலமாகவாவது அனுப்பினால், எனக்கு மிகவும் சந்தோஷமாயிருக்கும்.

அ. சேச்சே! அப்படிச் சொல்லாதே!—வாங்கிக்கொள்.

கா. வேண்டாம், நான் சொல்வதைக் கேளும், என்னை நம்பாதீர். உம்முடைய பணத்தை நான் அபகரிக்க விரும்ப வில்லையென்று உமக்கு எப்படித் தெரியும்?

அ. நான் சொல்வதைக் கேளப்பா, வாங்கிக்கொள்; இனி ஒன்றும் வார்த்தையாட வேண்டாம்—ஆயினும், அவனிடமிருந்து ஒப்பந்தம் மாத்திரம் ஜாக்கிரதையாக வாங்கிக் கொள்.

கா. அதெல்லாம் என்னிடம் விட்டு விடுங்கள்— நான் ஒரு மடையன் அல்ல— ஏமாந்து போக.

அ. நான் வீட்டிற்குப் போய் உனக்காகக் காத்திருக்கிறேன்.

கா. நான் தவறாமல் வருகிறேன் அங்கே. (அழகானந்தன் போகிறான்.) ஒரு ஆசாமி தீர்ந்தது. மற்றொரு ஆசாமியைக் கண்டு பிடிக்க வேண்டும்—ஆ! என் அதிர்ஷ்டம்! இதோ வருகிறார் அவர். ஒவ்வொருவராக ஸ்வாமியே இவர்களை என் வலைக்குள் சிக்கச் செய்கிறார் போலும்!

கௌரிநாதர் வருகிறார்.

கா. (அவரை பாராதது போல்) ஐயோ ஸ்வாமி! இப்படிப்பட்ட துரதிர்ஷ்டம் நேரிடுமா? இதை விட ஒரு தகப்பனாருக்கு என்ன கெடுதி சம்பவிக்கக் கூடும்?—ஐயோ! கௌரிநாதரே! நீர் என்ன செய்யப் போகிறீர்?

கௌ. என்ன சொல்லுகிறான் என்னைப் பற்றி—இந்த துக்க காரமான முகத்துடன்?

கா. எஜமான் கௌரிநாதர் எங்கிருக்கிறார் என்று எனக்கு யாராவது தெரிவிக்க மாட்டார்களா?

கௌ. என்னடா அப்பா அது காளப்பா?

கா அவரை நான் எங்கு கண்டு பிடிக்கக் கூடும்? இந்த துக்ககரமான சமாசாரத்தை தெரிவிக்க?

கௌ. இந்த—என்ன சமாசாரம்?

கா. ஐயோ! எனக்கு அவர் அகப்பட வில்லையே.

கௌ. இதோ நான் இங்கே இருக்கிறேனே.

கா. அவர் ஒருவர் கண்ணிலும் அகப்படாத படி அவரை நான் எங் காவது ஒளித்து வைக்க வேண்டும்.

கேள. அடேய்! உனக் கென்ன குருடா? என்னைத் தெரியவில்லையா உனக்கு?

கா. ஆ!— எஜமானே! உங்களை நான் எங்கெங்கு தேடுவது?

கேள. நான் ஒருமணி நேரமாக உன் எதிரில் தான் இருக்கிறேன்!— உம்—என்ன சமாசாரம் இதெல்லாம்?

கா. எஜமானே!—

கேள. என்ன?

கா. எஜமானே!— உங்கள் குமாரன்—

கேள. என்ன, என்ன என் குமாரனுக்கு?

கா. பெரிய கஷ்டத்தில் அகப்பட்டுக் கொண்டிருக்கிறார்!

கேள. என்ன அது?

கா. கொஞ்ச நேரத்திற்கு முன்பாக அவரைச் சந்தித்தேன்; மிகுந்த முகவாட்டத்துடன் இருந்தார், என்னவென்று கேட்டதற்கு, நான் ஏதோ உம்மிடம் அவதூறான விஷயங்கள் அவரைப் பற்றி தெரிவித்ததாகச் சொன்னார்; இது எனக்கும் வருத் தத்தையுண்டு பண்ணியது, அதன்பேரில் இந்த வருத்தத்தைப் போக்கிக்கொள்ள, இருவருமாக ஒரு படகேறிச் சென்றோம் துறைமுகத்திற்குள். அவ்விடம், நாங்கள் பார்த்த கண்காட்சி களுக்குள்; துர்க்கி தேசத்திலிருந்து வந்த பெரும் தோணி ஒன்றையும் கண்டோம். அதிலிருந்த அழகிய துர்க்கிதேசத்து வாலிபன் ஒருவன், எங்களுக்குச் சைகைசெய்து, தங்கள் தோணியைப் பார்க்கவரும்படி அழைத்தான் எங்களை. நாங் கள் போனோம். எங்களுக்கும் மிகவும் மரியாதை செய்தான் அவன்; எங்களுக்கு பலஹாரமெல்லாம் கொடுத்தான் தின்ப தற்காக, மிகுந்த ருசிகரமான பழங்களையெல்லாம் கொடுத் தான். உலகத்தில் மிகுந்த ருசிகரமான மதுவைக் கொடுத் தான் நாங்கள் குடிக்க.

கேள. இதில் இவ்வளவு வருத்தப் படவேண்டிய விஷயம் என்ன?

கா. கொஞ்சம் பொறுங்கள் எஜமானே, இதோ வந்து விட்டேன். நாங்கள் இவற்றை யெல்லாம் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் பொழுது, தன் தோணியை சமுத்திரத்தில் ஓட்டி விட்டான்! துறைமுகத்தை விட்டு கொஞ்சதூரம் போனவுடன், என்னை

மாத்திரம் ஒரு சிறு படகில் போட்டு, தனக்கு நீர் உடனே ஐந்நூறு பொன் கொடுத்தனுப்பாவிட்டால், உம்முடைய குமாரனை, அரேபியா தேசத்திற்குக் கொண்டு போய் அடிமையாக விற்று விடுவதாக, உம்மிடம் சொல்லச் சொன்னான்!

கேள. என்ன இழவாயிருக்கிறது ! ஐந்நூறு பொன்னா ?

கா. ஆம் எஜமானே !—அன்றியும் இன்னும் இரண்டு மணி நேரத்திற்குள்ளாக அதை அவனிடம் கொண்டு வரவேண்டுமென்று கட்டாயப் படுத்தியிருக்கிறான்.

கேள. ஐயோ ! அவனைத் தூக்கிலிட ! திருட்டுக் கழுதை ! இப்படி என்னை மோசம் செய்யலாமா ?

கா. ஆகவே, ஐயா, உம்முடைய பிரியமான குமாரன் அடிமையாகிக் கஷ்டப் படாமலிருக்கும் படிச் செய்ய, நீங்கள் உடனே பிரயத்னப் படவேண்டும்.

கேள. இந்தக் கழுதை அந்தத் தோணியின் அருகில் ஏன் போனான் ?

கா. அவருக்கு என்ன தெரியும் இப்படி நேரிடப்போகிறதென்று?

கேள. காளப்பா, நீ ஓடிப்போய் இந்தத் துலுக்கனிடம், உடனே அவனைப் பிடித்துவா. நான் போலீஸ்காரர்களை அனுப்புவதாக தெரிவி.

கா. சமுத்திரத்திலிருக்கும்போது இந்த போலீஸ்காரர்கள் என்ன செய்வது ? அவர்கள் என்ன மடையர்களா அங்கே போக ?

கேள. இந்தக் கழுதை அந்தத் தோணியண்டை ஏன் போனான் ?

கா. நம்முடைய தலைவிதி இவ்வாறு நம்மை தவறி நடக்கச் செய்கிறது—சில சமயங்களில்.

கேள. காளப்பா, இந்த விஷயத்தில் எனது உண்மையான ஊழியனாக நடக்கவேண்டும்.—எப்படியும் நீ ஒன்று செய்யவேண்டும்.

கா. என்ன செய்யவேண்டும் நான் ?

கேள. நீ போய், அவன் கேட்கிற தொகையை நான் சேகரித்தனுப்பும் வரையில், என் குமாரனுக்கு பதிலாக நீ ஜாமீனாக இருப்பதாகச் சொல்லி, அவனுக்கு பதிலாக நீ அங்கிருந்து என் குமாரனை அனுப்பும்படி நீ அவனுக்குத் தெரிவிக்கவேண்டும்.

கா. ஐயோ ! எஜமானே! நீர் என்ன சொல்கிறீர் என்று நீர் யோசிக்கிறீரா? உமது குமாரனை விட்டு, கவைக்கு உதவாத என்னை ஜாமீனாக அந்த துலுக்கன் ஒப்புக்கொள்ள என்ன மடையனா ?

கேள. இந்தக் கழுதை அந்தத் தோணியண்டை ஏன் போனான் ?

கா. இம்மாதிரி துர்திர்ஷ்டம் நேரிடுமென்று அவர் கனவிலும் நினைக்கவில்லை—ஐயா, இன்னும் இரண்டுமணி சாவகாசம்தான் இருக்கிறதென்பதை கவனியும்

கேள. அவன் எவ்வளவு கேட்கிறான் என்றாய் ?

கா. ஐந்நூறுபொன்.

கேள. ஐந்நூறுபொன் !—அவனுக்கு மனசாட்சி என்பதொன் றில்லையா ?

கா. துலுக்கனுக்கு அது ஏதுங்கள் ?

கேள. ஐந்நூறு பொன் என்றால் எவ்வளவு என்று அவனுக்குத் தெரியுமா ?

கா. ஆம் ஐயா, ஐயாயிரம் ரூபாய் ஆகிறதென்று அவனுக்குத் தெரியும்.

கேள. கண்ணை மூடித் திறப்பதற்குள் ஐயாயிரம் ரூபாய் பெறமுடியு மென்று நினைக்கிறானா என்ன அந்தப் படுபாவி ?

கா. இப்படிப்பட்ட மனிதர்களுக்கு புத்தியென்பது ஏதுங்கள் ?

கேள. ஆயினும்—இந்தக் கழுதை அந்ததோணியண்டை என் போனான் ?

கா. அது என்னவோ வாஸ்தவம்தான். பின்னால் நேரிடப்போ கிறதை முன்னால் எப்பொழுதும் அறிவது கஷ்டம் பாருங்கள். —ஐயா, கொஞ்சம் கருணை கூர்ந்து சீக்கிரம் பணம் சேகரிக் கும் வழியைப் பாருங்கள்.

கேள. இந்தா, இதோ என் பெட்டியின் சாவி இருக்கிறது.

கா. நல்லது.

கேள. அதைத் திறந்தால்—

கா. அப்படியே. (போகப்பார்க்கிறான்.)

கேள. கொஞ்சம் பொறு—அதன் இடது பக்கத்தில் ஒரு பெரிய சாவி இருக்கிறது—என்மேல் மாடியைத் திறப்பதற்கு.

கா. ஆம்.

கேள. அதை திறந்து கொண்டு போவாயாயின், அதன் ஒருமூலையில் ஒருபெரிய அழுக்குக் கூடையிருக்கிறது, அதிலுள்ள பழந் துணிகளையெல்லாம் எடுத்துக் கொண்டு போய், கடையில் விற்று என் குமாரனை மீட்கவேண்டிய பொருளை சேகரிப்பாய்.

கா. (சாவியை அவரிடம் திருப்பிக் கொடுத்து) ஐயோ !எஜமானே, நீங் கள் என்ன கனவு காண்கிறீர்களா ? என்ன, அதை யெல்லாப்

விற்றாலும் நூறுரூபாய் கூட கிடைக்காதே!—அன்றியும் எனக்குக்காலம் இரண்டு மணிதான் என்பதை கவனியும்.

கேள. ஆமாம்—அந்தக் கழுதை அந்தத் தோணியண்டை ஏன் போனான்?

கா. ஐயோ! வீணாக ஏன் உடம்பை அலட்டிக் கொள்கிறீர்கள்? அந்தத் தோணியை விட்டுத் தொலையும்; மணி ஓடுகிறது, சீக்கிரம் பணம் சேகரிக்காவிட்டால் உம்முடைய குமாரனை இழந்தவரே நீர்—ஐயோ! சின்ன எஜமானே!—இந்த ஜென்மத்தில் நான் உம்மை மறுபடியும் காணப்போகிறேனோ என்னவோ? இப்படி நான் பேசிக் கொண்டிருக்கும் போதே உம்மை அடிமையாக அரேபியா தேசத்திற்கு கொண்டு போகிறார்களே!—ஆயினும் என்னால் ஆனப் பிரயத்னம் பட்டேன் என்பதை அந்த ஈசன் அறிவார். உம்மை அடிமைத் தனத்தினின்றும் மீட்காவிட்டால், உம் மீது பிரிய மில்லாத உமது தகப்பனார் தான் அதற்கு உத்தரவாதம்—நான் என்ன செய்வது?—(போவதுபோல் பாசாங்கு செய்கிறான்.)

கேள. பொறு—காளப்பா—இந்தப் பணத்தைப் போய் கொண்டு வருகிறேன்.

கா. சீக்கிரம் சீக்கிரம் ஐயா! எங்கே இரண்டு மணி அடித்து விடுகிறதோ என அஞ்சுகிறேன்.

கேள. நாநூறு பொன் என்று சொன்னாயல்லவா?

கா. இல்லை ஐந்நூறுபொன்.

கேள. ஐந்நூறு பொன்னா?

கா. ஆமாம்.

கேள. ஹா!—இந்தக் கழுதை அந்தத் தோணியண்டை ஏன் போனான்?

கா. அது வாஸ்தவம் தான்—நீங்கள் துரிதப் படுங்கள்.

கேள. படகில் போனவன்—அதனருகில் ஏன் போனான்?

கா. வாஸ்தவம்—சீக்கிரம் பாருங்கள்.

கேள. ஹா! அந்தத் தோணி பாழாய்ப்போக!

கா. (ஒருபுறமாக) அந்தத்தோணி பிசாசு விடாது அவரை!

கேள. இந்தா காளப்பா, இந்த ஐந்நூறு பொன்னை எனக்கு சற்று முன்பாக ஒருவன் கொடுத்தான் என்பதை மறந்தேன்—இதற்குள்ளாக இதை நான் விட்டுப் பிரிய வேண்டு மென்பதை நான்

நினைக்கவில்லை !—(பொன்னிறைந்த பையை காளப்பனிடம் நீட்டியும், அவனிடம் அதைக் கொடுக்காது கோபத்துடன் இந்தப் பக்கம் அந்தப்பக்கமாக கையை வீசுகிறான், காளப்பன் அதைப்பற்றமுயலுகிறான்.) இந்தா—போய் என் குமாரனை மீட்டுவா—

கா. அப்படியே ஐயா.

கேள. ஆயினும் அந்தத் துர்க்கி தேசத்தானை, கொலை பாதகனென நான் அழைத்ததாகச் சொல்!

கா. அப்படியே.

கேள. கொடுந்துரோகி !

கா. ஆமாம்.

கேள. நன்றிகெட்ட பாபி ! திருட்டுக்கழுதை !

கா. ஆமாம்—சந்தேகமில்லை—அதெல்லாம் எனக்கு விட்டு விடுங்கள்.

கேள. இந்த ஐந்நூறு பொன்னையும் என்னிடமிருந்து; ஒரு நியாயமுமில்லாமல் கொள்ளையடித்தான் என்று கூறு.

கா. அப்படியே.

கேள. இதை அவனுக்குச் சொந்தமாக, இந்த உலகத்திலாவது, மறு உலகத்திலாவது கொடுக்கவில்லையென்று, உறுதியாய் நம்பும்படிச் செய்.

கா. நிரம்ப சரி.

கேள. அவன் மாத்திரம் என் கண்முன் அகப்படுவானாயின், நான் பழிவாங்குவேன் என்று சொல்.

கா. ஆமாம்.

கேள. (பையை ஜேபியில் வைத்துக்கொண்டு) போ சீக்கிரம்—போய் என் குமாரனை அழைத்துவா. (போகப் பார்க்கிறான்.)

கா. ஐயா, எஜமானே !

கேள. (திரும்பிப் பார்த்து) என்ன அது ?

கா. கொஞ்சம் வாருங்கள். எங்கே பணம் ?

கேள. உன்னிடம் கொடுக்கவில்லையா ?

கா. இல்லை—வாஸ்தவமாக—உங்கள் ஜேபியிலேயே வைத்துக் கொண்டீர்கள்.

கேள. *ஹா ! இந்தக் கஷ்டமானது என் புத்தியையே கலக்கி விட்டது!

கா. அதற்கு சந்தேகமில்லை. (பையை வாங்கிக்கொண்டு)

கௌ. உம்!—இந்தக் கழுதை அந்தத் தோணியண்டை ஏன்போனான்? அந்தத் தோணி பாழாய்ப்போக!—அந்தத் துர்க்கி தேசத்தான் எழவெடுக்க! (போகிறான்.)

கா. நான் அவரிடமிருந்து சொளையஞ்செய்த ஐந்நூறு பொன்னை மறக்க முடியாது அவரால், ஆயினும் அவரை இதனுடன் விட்டேனில்லை, அவரது குமாரன் விஷயமாக அவர் என்னை மோசம் செய்ததற்காக, மற்றொரு விதத்தில் பழி வாங்குகிறேன்.

அஸ்வதேவரும் லீலாநாதரும் வருகிறார்கள்.

அ. அப்பா, காளப்பா, என் விஷயத்தில் காரியம் கைகூடியதா?

லீ. என் கலியாண விஷயமாக, நான் கடைத்தேறும் மார்க்கம் ஏதாவது கண்டு பிடித்தனையா?

கா. அ(ஸ்வதேவருக்கு) இந்தாரும், உம்முடைய தகப்பனாரிடமிருந்து நான் பெற்ற இருநூறு பொன்.

அ. ஆ! என்னை சந்தோஷத்தில் மூழ்கவைக்கிறாய்!

கா. (லீலா நாதருக்கு) உமக்காக நான் ஒன்றும் செய்வதற்கில்லாமற் போயிற்று,

லீ. (போகயத்னித்து) ஆயின் நான் மடியவேண்டியவனே! சரோஜ தளநேத்ரி என்னிட மிருந்து பிரிக்கப்பட்டால், நான் உயிர் வாழவேண்டிய நிமித்தியமில்லை.

கா, வாரும் வாருமிப்படி, அவசரப்படாதீர். ஏன் அவ்வளவு கோபமாய் ஓடிப்போகிறீர்?

லீ. (திரும்பி) நான் எக்கதியானால் என்ன இனி?

கா. வாரும்—இதோ நீர் வேண்டியது என்னிடமிருக்கிறது.

லீ. (அவனிடம்விரைந்து வந்து) ஹா! என் உயிரை அளிக்கின்றாய் நீ.

கா. ஆனால் ஒரு நிபந்தனைக் குட்படவேண்டும் நீர், அவர் என்னை ஏமாற்றிய தற்காக, உம்முடைய தகப்பனார்மீது நான் பழி வாங்க எனக்கு உத்தரவு கொடுக்கவேண்டும்.

லீ. உன்னிஷ்டம்போல் செய்.

கா. இவர் சாட்சியாக நீர் எனக்கு வாக்களிக்கின்றீர்?

லீ. ஆம்.

கா. ஆனால், இதோ ஐந்நூறு பொன் (கொடுக்கிறான்.)

லீ. நான் உடனேபோய், என் காதலியை மீட்டு வருகிறேன். (அஸ்வதேவரும் லீலாநாதரும் ஒவ்வொரு பக்கமாகப் போகிறார்கள்.)

காட்சி முடிகிறது.

மூன்றும் அங்கம்.

இடம்—ஒரு தோட்டத்தைச் சார்ந்த பிரதேசம்.

சரோஜதளநேத்ரி, யாகசேனை, காளப்பன், செல்வநேசன் வருகிறார்கள்.

சே. ஆமாம், உங்கள் காதலர்கள், நீங்கள் இருவரும் இங்கு தங்கி யிருக்கவேண்டுமென்று தீர்மானித்திருக்கிறார்கள்; அவர்கள் எங்களுக்கிட்ட கட்டளையைத்தான் நாங்கள் நிறைவேற்று கிறோம்.

யா. இங்ஙனம் கட்டளை யிட்டது எனக்கு மிகவும் சம்மதமே. இப்பெண்மணி என் தோழியாயிருப்பது எனக்கு மிகவும் சந் தோஷத்தைத் தருகிறது. எங்கள் காதலர்கள் அன்யோந்யமா யிருப்பது போல நாங்களும் சிநேகிதர்களாகாவிட்டால், அது என் தவறாகாது.

ச. அங்ஙனமே நானும் கோருகிறேன். சிநேகமானது என்னரு கில் வந்தால் அதைத் தடுப்பவள் நானல்ல.

கா. காதல் அருகில் வந்தாலோ?

ச. காதல் வேறு விஷயம். அதில் கொஞ்சம் அபாயமிருக்கிறது: அதில் நான் அவ்வளவு தைரிய முடையவளல்ல.

கா, என்னுடைய எஜமானுக்கு உம்முடைய ஹிருதயத்தை நீர் முற்றிலும் கொடுக்க வில்லை என்றெண்ணுகிறேன். உம் பொருட்டு அவர் இப்பொழுது செய்தது, உம்முடைய ஹிரு தயத்தை அவருக்கு இணங்கும் படிச் செய்ய வேண்டும்.

ச. என்னைச் சிறையினின்றும் நீக்கியதினால், அவருக்கு இணங்கு வேன் என்று நினைப்பாராயின் அது தவறாகும். என்னை அக் கினி சாட்சியாகக் கடிமணம் புரிந்தாலொழிய அவர் காத லுக்கு நான் இணங்கேன்.

கா. அதற் கென்ன சந்தேகம்? அவர் வேறு விதமாக எண்ணங் கொண்டிருப்பதாயின் இதற்கு நான் உட்பட்டிருப்பேனோ?

ச. நீர் அப்படி சொல்வதினால் அதை நம்புகிறேன்—ஆயினும் அவர் தந்தை ஏதாவது ஆட்சேபனைகள் செய்வாரென்று எண்ணுகிறேன்.

கா. அதை யெல்லாம் அகற்ற வழி கண்டு பிடிப்போம் அஞ்சாதீர்.

யா. நம்மிருவருக்கும் ஓரேவிதமான துர் அதிர்ஷ்டம் நேர்ந்தது நம்மை அத்யந்த சிநேகிதர்களாக்க வேண்டும். நாமிருவரும் ஓரே துர்க்கதியிலிருக்கிறோம், ஓரே மாதிரியான துர் அதிர்ஷ்டம் நேர்ந்திருக்கிறது நம்மிருவருக்கும்.

ச. ஆயினும், உனக்கு இந்த அனுகூல மிருக்கிறது ; நீ இன்னொருடைய மகள் என்று உனக்குத் தெரியும், அதைக் கொண்டு நீ எல்லாவற்றையும் சரிப்படுத்திக் கொள்ளலாம், உன் கருத்திற்கினிய காதலனைக் கட்டாயமாய் கடிமணம் புரியலாம். என் விஷயத்திலோ நான் அநாதையாயிருக்கிறேன். என் கதியோ பணத்தின் மீதே கருத்தாயிருக்கும் தந்தையின் மனதைச் கரையச் செய்யாது.

யா. ஆயினும், உனக்கு இந்த அநுகூல மிருக்கிறதே ; இன்னொரு பெண்ணைக் கொண்டு உன் காதலனை உன்னிடமிருந்து பிரித்திட யத்னம் செய்யப்படவில்லையே ?

ச. நம்முடைய காதலன் மனம் மாறும் என்பதல்ல, இவ்விஷயங்களிலெல்லாம் பெறுத்த அபாயம். நாம் ஜெயித்தது நம்மை விட்டுப் போகாது என்று நாம் ஒருவிதத்தில் நம்பலாம் ; இதிலெல்லாம் நாம் பயப்பட வேண்டியது என்ன வென்றால், தகப்பனுருடைய பலாத்காரமே ; அதற்கு முன்பாக வெறுங்காதல் பயன்படாது.

யா. ஐயோ ! காதலானது இக்கஷ்டங்களுக் கெல்லாம் ஆளாவானேன் ? உண்மையில் காதல் கொண்ட இருவர் ஒருங்குசேர, இடையூறுகளே இல்லாதிருந்தால் அதைவிட சுகமென்ன விருக்கிறது இவ்வுலகில் !

கா. அது வாஸ்தவமல்ல. காதல் விஷயத்தில் கஷ்டங்களே நேரிடா விட்டால் சுகமில்லை, அப்படிப்பட்ட சுகம் ருசியற்றதாம் ; இல்வாழ்க்கையில் இடையூறுகள் நேர்ந்தால்தான் இன்பம் பெருகும் ; சூழுங் கஷ்டங்களை யெல்லாம் அகற்றிச் சுகம்பெருவதே பேரின்பமாம்.

ச. அதிருக்கட்டும், காளப்பா, அந்தக் கிழலோபியிடமிருந்து நீ பணம் பரித்த சூழ்ச்சியைப்பற்றி எங்களிடம் சொல். அது மிகவும் விநோதமானதாய்த் தானிருக்கவேண்டும், அந்தக்கதையைக் கேட்டு நாங்கள் சந்தோஷப் படட்டும்.

கா. இதோ செல்வநேசனிருக்கிறான், என்னை விட அவன் வேடிக்கையாய்ச் சொல்வான் இக்கதையை ; எனக்குக் கொஞ்சம்

வேலையிருக்கிறது, நான் கொஞ்சம் பழிவாங்க வேண்டி யிருக்கிறது, அதை முடித்து சந்தோஷப்படும் விதத்தைப் பார்க்க வேண்டும் விரைவில்.

சே ஏனடா அப்பா, பாழாய்ப்போன இந்தக் கஷ்டங்களிலெல்லாம் நீயாகப்போய் தலையை நுழைத்துக் கொள்ளுகிறாய்?

கா. கஷ்டமான காரியங்களைச் சாதிப்பதுதான் எனக்கு சந்தோஷத்தைத் தருகிறது.

சே. என் சொற்படி கேட்பதானால், நான் முன்பே உனக்கு கூறியபடி இந்தக் காரியத்தை விட்டுவிடுவாய்.

கா. மாட்டேன், இதில் என்மனம் உந்துகிறபடியே நடப்பேன் நான்.

சே. இப்பொழுது என்ன குறும்பு செய்யப்போகிறாய்!

கா. இப்பொழுது உனக்கு அந்தக் கவலை யேன்?

சே. வீணாக உன்முதுகில் அடிவாங்க வழிதேடுகிறாயே என்றுதான்.

கா. சரி, அப்படி அடி விழுவதானாலும், என் முதுகில் விழப்போகிறதே யொழிய, உன் முதுகில் விழப்போகிற தில்லையே?

சே. அது வாஸ்தவம் தான், உன் முதுகு உனக்குத் தானே சொந்தம், அதை உன் இஷ்டப்படி உபயோகிக்கலா மல்லவா நீ?

கா. இம்மாதிரியான யோசனைகளெல்லாம் என்னைத் தடுக்கமாட்டா, என்னமோவரப் போகிறதென்று பயந்து, தைரியமாய் ஒரு காரியத்தையும் செய்யாத கோழைமனதை நான் வெறுக்கின்றேன்.

ச. அப்பா, உன் உதவி எங்களுக்கு வேண்டும்.

கா. நீங்கள் உள்ளேபோங்கள்; நான் சீக்கிரம் உங்களிடம் வந்து சேருகிறேன். (மற்ற மூவரும் போகிறார்கள்.)— என் ரகசியத்தை இவர்கள் அறிந்து கொண்டார்கள் என்றுகூற இடங்கொடுப்பேனா? சிலரகசியங்களை அப்படியே மனதிலேயே போட்டு வைக்க வேண்டும், ஒருவரிடமும் வெளியிடலாகாது.

கௌரிநாதர் வருகிறார்.

கௌ. என்ன காளப்பா, என் குமாரன் சமாசாரம் என்ன?

கா. உம்முடைய குமாரனைப்பற்றி உமக்குக் கவலையே வேண்டாம், அவரை மீட்டு ஒரு பத்திரமான இடத்தில் வைத்திருக்கிறேன்; ஆயினும் எதிர் பார்க்கக் கூடாத ஒரு பெரிய விபத்து உமக்கு வந்திருக்கிறது. நீங்கள் உம்முடைய வீட்டிலேயே இருந்திருந்தால் மிகவும் நலமாய் இருக்கும்.

கேள. சமாசாரம் என்ன ?

கா. நான் இப்படிபேசிக் கொண்டிருக்கும் பொழுதே, உம்மைக் கொல்வதற்காக ஒருவன் உம்மைத் தேடிக்கொண்டிருக்கிறுன், எங்கனும்.

கேள. என்னையா ?

கா. ஆம்.

கேள. யார் தேடுவது ?

கா. அஸ்வமேதவர் கலியாணம் செய்துகொண்ட பெண்ணின் சகோதரன். அவர்கள் கலியாணத்தை ரத்து செய்ய முயல்வதின் முக்கிய காரணம், தன் தங்கையிருக்கும் ஸ்தானத்தில் உம்முடைய குமாரத்தியை நீர் வைக்க விரும்புவதே யென்று அவன் நம்புகிறுன் ; அப்படி நம்பினவனுய், தன் கோபத்திற்கு உம்மை ஆளாக்கி,தன் மானத்தின்பொருட்டு உம்மைக் கொன்று பழிவாங்கத் தீர்மானித்திருக்கிறுன் ; அவனுடைய நண்பர்களும்—எல்லோரும் அவனைப்போன்ற கத்திகட்டி சிப்பாய்கள்—எங்கும் தேடுகிறுர்கள்—உம்மைப்பற்றி விசாரித்துக் கொண்டு; அவனுடைய பட்டாளத்தைச் சேர்ந்த சில ராணுவ வீரர்கள் எதிர்ப்படுபவர்களையெல்லாம் உம்மைப்பற்றி விசாரிப்பதை என் கண்ணுரக் கண்டேன், பல இடங்களில் ; அவர்களில் சிலர் கூட்டமாய் உம்முடைய வீட்டை நான்கு புறமும் சூழ்ந்திருக்கின்றனர். உம்முடைய வீட்டைச் சுற்றி முற்றுகைபோட்டமாதிரி இருக்கிறுர்கள், நீர் உம்முடைய வீட்டிற்குப் போவதும் கஷ்டம் ; எந்தப்பக்கம் நீர் போனபோதிலும் அவர்கள் கையில் விழவேண்டியதுதான்.

கேள. (பயந்து) அப்பா, காளப்பா, நான் என்ன செய்வது ?

கா. எனக்கொன்றும் தோன்றவில்லை ஐயா ; பெரிய பயங்கரமான சமாசாரமாயிருக்கிறது—உம்மைப்பற்றி நினைத்தால் நடுக்கமெடுக்கிறதெனக்கு! அன்றியும்—பொறுங்கள்! (திரும்பி யாரையோ தூரத்தில் பார்த்து பயப்படுவது போல அபிநயிக்கிறுன்.)

கேள. (நடுங்கி) ஹா !—

கா. (அவன் பக்கம் திரும்பி) இல்லை, இல்லை—ஒன்றுமில்லை.

கேள. இந்த சங்கடத்தினின்றும் என்னைத் தப்புவிக்க ஏதாவது ஒரு மார்க்கம் பார்க்கமாட்டாயா ?

கா. எனக்கு ஒருமார்க்கம் தான் தோற்றுகிறது ; ஆனால், அதனால் எனக்கே கஷ்டமாய் முடிந்தாலும் முடியும்.

கேள. அப்பா ! காளப்பா ! நீ எனது உண்மையான ஊழியன் என் பதைக் காண்பி ; என்னைக் கைவிடாமே, உன்னை வேண்டிக் கொள்ளுகிறேன்.

கா. அப்படியே மனப் பூர்வமாய்ச் செய்கிறேன் ; உம்மிடம் எனக் குள்ள பிரீதியானது உம்மை ஓர் உதவியுமின்றி விட்டுப்போகச் செய்யா தென்னை.

கேள. அதற்காக உனக்கு ஏதாவது பரிசளிப்பேன் என்றுஉறுதியாய் நம்பு—இந்த சட்டையை உனக்குத் தருகிறேன்—இன்னும் கொஞ்சம் நாள் நான் போட்டுக் கொண்டு பழசானபின்—

கா. சரி, உம்மைக் காப்பாற்றும் பொருட்டு நான் யோசித்திருக்கிற வழி ஈதாகும்—நீர் இந்தக் கோணிப் பைக்குள் புகுந்துகொள் ளும்—ஹா ! (திரும்பிப்பார்த்து)

கேள. (யாரோ வருவதாக எண்ணி) ஐயோ !

கா. இல்லை இல்லை, இன்னும் ஒருவரும் வரவில்லை—நான் சொல்லு கிறபடி செய்யும். நீர் இதற்குள் ஒளித்துக்கொள்ளும்—ஒரு அணுவளவும் அசையாதீர் ; ஏதோ சாமானைக் கோணியில் தூக்கிக் கொண்டு போவது போல், என் முதுகின் பேரில் உம் மைப் போட்டுக் கொண்டு, உம்முடைய பகைவர்களின் மத்தி யில் நுழைந்து, உம்முடைய வீட்டிற்குக் கொண்டு போய்ச் சேர்க்கிறேன். அங்கு போய்ச் சேர்ந்த பிறகு, கதவுகளையெல் லாம் தாளிட்டுக் கொண்டு, அவர்கள் உமக்கு ஒருதீங்கும் செய் யாதபடி, போலீஸ்காரர் உதவியை நாடுவோம்.

கேள. இது ஒரு நல்ல யோசனையே.

கா. இதை விட மேலானது கிடையாது. இதன் பயனைப் பார்ப்பீர் சீக்கிரம்—(கோணிக்குள் புகச்செய்து, பிறகு ஒரு புறமாக) என்னை ஏமாற்றி யதற்காக வட்டியுடன் வாங்குகிறேன்.

கேள. (கோணிக்குள் இருந்து தலையை நீட்டி] என்ன அது ?

கா. உம்முடைய பகையாளிகள் நன்றாய் ஏமாந்துபோவார்கள்என்று சொன்னேன்—கோணியின் கீழே பதுங்கிக் கொள்ளும்—முக் கியமாக இதனுள் நீர் இருப்பதை அவர்கள் அறியும்படி ஒன் றும் செய்யாதீர்—என்ன நேரிட்டாலும் கப்சப் பென்றிரும், அசையாதீர்.

கௌ. அதை நான் பார்த்துக் கொள்ளுகிறேன்—என்னைக் காப்பாற்றிக் கொள்ள எனக்கு வழி நன்றாய்த் தெரியும்—

கா. ஒளிந்துக் கொள்ளும்! ஒளிந்துக் கொள்ளும்! இதோ ஒரு கொள்ளைக்காரன் உம்மைத் தேடிக்கொண்டு வருகிறான்! (கௌரிநாதர் கோணிப் பைக்குள் புகுந்து தலையை மூடிக்கொண்ட பிறகு, தன் குரலைமாற்றி)—"என்ன துரதிர்ஷ்டம்! இந்த கௌரிநாதரைக் கொல்லும்படியான பாக்கியம் எனக்குக் கிடைக்காதா? தயவு செய்து யாராவது, அவன் எங்கிருக்கிறானென்று எனக்குத் தெரிவிக்க மாட்டார்களா?" (கௌரிநாதருக்கு தன் சொந்த குரலுடன்) ஸ்! அசையாதீர் (மாறிய குரலுடன்) "எங்கப்பாணை! அவன் பாதாளத்தில் ஒளிந்திருந்த போதிலும் அவனை கண்டு பிடிக்கிறேன்." (கௌரிநாதருக்கு சொந்த குரலுடன்) நீர் உள்ளே இருப்பதாகக் காட்டாதீர்—(மாறிய குரலுடன்)"ஹா! யாரடா அப்பா, அங்கே, கோணிப்பையை வைத்துக் கொண்டிருப்பவன்?" (யாரோ ஒருவனுடன்சம்பாஷிப்பதுபோல் குரலை மாற்றி மாற்றிப் பேசுகிறான்.) ஏன் ஐயா? "கௌரி நாதரிருக்குமிடத்தை எனக்குச் சொல்வாயாயின், உனக்கு ஒரு பொன் தருகிறேன்."—கௌரி நாதரையா தேடுகிறீர் நீர்?—"நான் எங்கப்பாணை அவனைத்தான் தேடுகிறேன்"—எதற்காக ஐயா?—"எதற்காகவா?"—ஆம்—"இந்தத் தடியால் அவன் முதுகெலும்பை யெல்லாம் நொருக்கி, அவன் உயிரை வாங்கவேண்டும் நான்"—ஐயா, அவர் பெரிய மனுஷ்யருங்கள், அவரை நீங்கள் தடியால் அடிக்கலாமா? அவர் இதை யெல்லாம் பொறுக்க மாட்டாருங்கள்—"யார்? அந்த பயித்தியம் கௌரிநாதனா? அந்தக் கழுதையா? அந்தமடையனா?" ஐயா, கௌரிநாதர் பயித்தியக் காரர் அல்ல, கழுதையுமல்ல, மடையருமல்ல, இப்படி யெல்லாம் அவரைப்பற்றி நீங்கள் அவதூறாகப் பேசக்கூடாதுங்கள்"-"நீ யார் அது? என்னிடம் இப்படி அதனப் பிரசங்கித்தனமாய் பேசுவது?" அவரில்லாத காலத்தில் அவரைப்பற்றி நீர் அவதூறாகப் பேசியதால், நான் அவர் மானத்தைக்காப்பாற்ற வேண்டியது என்கடமையாகும்-"நீ என்ன இந்த கௌரிநாதன் நண்பனா?"—ஆம் ஐயா—"ஆ! அகப்பட்டாய் என் கையில்!—அவனுடைய சிநேகிதனுனைபடியால் இதை வாங்கிக்கொள்!" (கோணிப்பையை நன்றாய்ப் புடைக்கிறான்.) "இதோ! அவனுக்குப்

பதிலாக இதை வாங்கிக்கொள்! அச்சாரமாக"—ஐஐயோ! ஐஐயோ! மெல்ல! மெல்ல! ஐயா! "போகழுதை! இவைகளை யெல்லாம் நான் அனுப்பியதாக அவனிடம் கொண்டு போய்க் கொடு—நான் வருகிறேன்"—ஆ! இந்தப் படுக்காளியை யமன் கொண்டு போக! அப்பப்பா!—(தான்தான் அடிபட்டதுபோல் பாசாங்கு செய்து முதுகைத் துடைத்துக்கொள்ளுகிறான்.)

கௌ. (கோணிப்பையிலிருந்து தலையை நீட்டி) ஆ!—காளப்பா!—இனி என்னால் பொறுக்க முடியாது!

கா. ஐயோ! எஜமானே, என்முதுகெல்லாம் போச்சுது! உடம் பெல்லாம் நோகிறது!

கௌ. ஏன்? என் முதுகிலல்லவோ விழுந்தது அடி?

கா. இல்லை எஜமானே!—என் முதுகில்தானடித்தான்.

கௌ. நீ சொல்வது எனக்கு அர்த்தமாக வில்லை—என் முதுகி லல்லவோ அடிகள் விழுந்தன. இன்னும் எனக்கு நோயெடுக் கிறதே.

கா. இல்லை ஐயா. நான் சொல்வதைக்கேளும். அந்தத் தடியின் முனை உமது முதுகில் தாக்கியிருக்கலாம், அடியெல்லாம் எனக் குத்தான்!

கௌ. அப்படியாயின், எனக்குப்படாதபடி இன்னும் கொஞ்சந்தூரம் போயிருக்கவேண்டும் நீ—

கா. (அவன் தலையை கோணிக்குள் அழுக்கி) ஜாக்கிரதை! ஜாக்கிரதை! இதோ இன்னொருவன் வருகிறான்—முரட்டுத் துலுக்கனைப் போல் இருக்கிறான்! (முன்போலவே, குரலை மாற்றி மாற்றிப் பேசுகிறான்) "அரே! தூத்தேரி! நம்பள் எங்கேயும் ஓடிப்பாக்றான்! இந்த சைத்தான் கோரிநாத், நம்பள் கிட்ட ஆப்பிட்டான் இல்லே!"—அப்படியே அசையாமலிருங்கள்—"அரே!, பயில்வான், நிம்பள்கி இந்த கோரிநாத் இருக்கர எடம் தெரிஞ்சாக்கே, நம்பள்கிட்ட சொல்ராம்; நம்பொ அவனெடாக்கணும்"—ஐயா சாயபு, கௌரிநாதர் இருக்கிற இடம் எனக்கு தெரியாதுங்கள்—"அரே! நம்பள் கிட்ட நெஜம் சொல்ராம் பாய்! அவன்கி நம்பள் ரொம்ப தொந்தரவு பண்றான் இல்லெ. இந்த தடியாலே அவன்கி சொக் காய்லே இருக்கறதும்பு கொஞ்சம் தட்டி, இந்த கத்திபாலே

நாலெஞ்சு குத்து அவன் மார்லே குத்துணும் பாய்!''—சாயபு, வாஸ்தவமாக அவரிருக்கிற இடம் எனக்கு தெரியாதுங்கள்—“அதோ அந்தக் கோணியிலே என்னமோ அசைதே அது என்ன?''—அது ஒண்ணுமில்லே சாயபு—“அதுக்குள்ளே என்னமோ தமாஷ் இருக்குது பாயி''—ஒன்றும் விசேஷ மில்லே சாயபு—“இந்தகத்தியாலே நம்ப குத்திப் பார்க்கிறான் பாயி''—ஐயோ! சாயபு! ஜாக்கிரதை அப்படி ஒன்றும் செய் யாதீர்!—“ஆனகே,-அதுக்குள்ளே என்ன இருக்குது? நம்பொ பாக்கரான்''—மெல்ல சாயபு—“அரே, மொள்ள என்னத்கு சொல்ரான்?''—நான் ஏதாவது கோணியில் தூக்கிக் கொண்டு போனால் அதை நீங்கள் என்னவென்று பார்ப்பதற்கு உங் களுக்கு சுதந்தாமில்லே—“நம்பொ எப்படியும் பாப்பான்!—நீங்கள் பார்க்கக் கூடாது—“அரே! திவானா! நம்பள்கி என் னமோ சத்தம் கேக்குதுபாய்!—என்னுடைய பழந்துணிகள் இருக்கின்றன இதில்-“அத்தெ நம்பள்கி காட்டு பாயி!''—நான் காட்ட மாட்டேன்!—“காட்ட மாட்டெ?''—மாட் டேன்—“ஆனக்கே! உன்கி இந்த தடியாலே அடிப்பேன்''—அதற் கெல்லாம் நான் பயப்படுபவனல்ல—அரே! உன்கி புத்தி வரப் பண்ரா! (தடியால் கோணிப் பையைப் பொத்துகிறான்.) ஐஐயோ! ஐஐயோ! சாயபு! சாயபு! வேண்டாம்! வேண்டாம் —“நம்பொ மறுபடி பாக்கிரவரைக்கும் உனக்கி இது காபகம் இருக்கட்டும்! நம்பகிட்ட ரொம்ப பேசனத்துக்கு உன்கு புத்தி காட்றென்!''—ஐயோ!—இந்தத் துலுக்கன் பாழாய்ப்போக! —அப்பா! (முதுகை துடைத்துக் கொள்ளுகிறான்.)

கௌ. (பையிலிருந்து தலையை வெளியே நீட்டி) அப்பா! என்எலும்பெல் லாம் நொருங்கிப்போச்சுது!

கா. ஆ! நான் செத்துப்போகிறேன்!

கௌ. என்முதுகில் ஏனடா அடித்தான் அவன்?

கா. பத்திரம்! பத்திரம்! (அவன் தலையைப்பைக்குள் அமுக்கி மூடிவிட்டு) பத்துப் பன்னிரண்டு சிப்பாய்கள் வருகிறார்கள் இதோ! [அநேகம்பெயர் ஒன்றாய்ப் பேசுவது போல் பேசுகிறான்). “வாருங் கள்! வாருங்கள்! இந்த கௌரிநாதனை எப்படியும் கண்டுபிடிக் கவேண்டும்! ஒரு மூலை முடிச்சு விடாமல் தேடிப்பார்ப்போம்! நம்முடைய செருப்பு தேய்ந்து போனாலும் போகட்டும்!—ஒரு

இடத்தையும் விடாதீர்கள் !—எங்கேயும் நுழைந்து பாருங்கள். ஒரு பெருச்சாளி பொந்து கூட விடாதீர்கள்—நாம் எங்கேபோவோம் இப்பொழுது ?—இந்தப் பக்கம் போவோம் முதலில், இப்படித் திரும்புவோம் இல்லை, இப்படி இப்படி !—வலது புறம்—இடதுபுறம்—இல்லை இல்லை ! ஆமாமாம் !"—(சொந்த குரலுடன்) நன்ருய் ஒளித்துக் கொள்ளும்—(மாற்றி) "ஹா !தோழர்களே ! இதோ இருக்கிருன் அவனுடைய வேலையாள்—அடேய் யாரடா இங்கே ?—எங்கே உங்கள் எஜமான் இருக்கிருர் சொல்கிருயா என்ன ?"—ஐயா ! என்னை அடிக்காதீர்கள் !—"ஆனுல், உங்கள் எஜமான் இருக்கிற இடத்தைச் சொல்—சீக்கிரம் !—நாழி ஆகிறது—நிமிர்ந்துபார் ! சீக்கிரம் !" ஐயா, கொஞ்சம் தயவு பண்ணுங்கள்—(கௌரிநாதன் மெல்ல கோணிப்பையினின்றும் தலையை வெளியில் தூக்கிப்பார்த்து காளப்பன் கள்ளத்தனத்தை அறிகிருன்)'—"நீ உடனே உன் எஜமானர் இருக்கிற இடத்தை எங்களுக்குத் தெரிவிக்கா விட்டால் உன்னை அடி அடி என்று அடித்துக் கொன்று காலைவாரி இழுத்து விடுவோம் !"—ஐயா! என்னை என்ன வேண்டுமென்ருலும் செய்யுங்கள். என் எஜமானுக்குதுரோகம் செய்யமாட்டேன். "உன்னை உதைஉதை என்று உதைப்போம் !"—உங்கள் இஷ்டப்படி செய்யுங்கள்—"உனக்கு உதை தான் வேண்டும் போலிருக்கிறது!"—என் எஜமானைக் காட்டிக் கொடுக்க மாட்டேன்.—"ஆனுல் இந்த சூட்டைவாங்கிக் கொள் !" (கோணிப்பையை அடிக்கத்திரும்புகிருன், இதற்குள்ளாக கௌரிநாதர் பையிலிருந்து வெளி வருகிருர், இதைக் கண்டதும் காளப்பன் ஓடிப்போய் விடுகிருன்.)

கௌ. படுக்காளிப்பயலே! அப்படியா சமாசாரம் ! திருட்டுக் கழுதை ! துரோகி ! இப்படி நீயா என்னை அடித்தாய் ?—

சரோஜதளநேத்ரி வருகிருள்.

ச. அப்பா ! வெளியிலாவது வந்து கொஞ்சம் காற்று வாங்குவோம் !—சிரித்துச் சிரித்து வயிறெல்லாம் புண்ணுகி விட்டது ! (சிரிக்கிருள்.)

கௌ. உம் ! என்னைப் பார்த்து நகைப்பதற்காக உன்னை என்ன பாடு படுத்துகிறேன் பார் !

ச. ஹா ! ஹா ! ஹா ! என்ன வேடிக்கை இந்தக் கிழவனை இப்படி ஏமாற்றியது.

கேள. இதிலென்ன வேடிக்கை யிருக்கிறது ? இதற்காக நீ நகைப்பானேன் ?

ச. என்ன ?—என்ன சொல்லுகிறீர்கள் ஐயா ?

கேள. என்னைப் பார்த்து நீ சிரிக்கக் கூடாதென்கிறேன் !

ச. உம்மைப் பார்த்தா ?

கேள. ஆம்.

ச. இதென்ன ! உம்மைப்பார்த்து நகைக்கிறேனா ? கனவு காண்கிறீரா என்ன?

கேள. என் எதிரில் இவ்வாறு நீ நகைப்பானேன் ?

ச. அதற்கும் உமக்கும் ஒரு சம்பந்தமு மில்லை சற்று முன்பாக நான் கேட்ட மிகவும் வேடிக்கையான ஒரு கதையைக் குறித்து நான் சிரித்துக்கொண்டிருந்தேன், அந்த விஷயத்தில் நானும் ஒருவிதத்தில் சம்பந்தப் பட்டிருப்பதால் எனக்கு அப்படித் தோன்றலாம், ஒரு வேளை—ஆயினும், லோபியான தன் தகப்பனிடமிருந்து, ஒரு மைந்தன் கொஞ்சம் பணத்தைப் பிழிந்தெடுக்கச் செய்த இந்த சூழ்ச்சியைப்போல் நகைக்கத்தக்க கதை, இதற்கு முன் நான் கேட்டதேயில்லை.

கேள. ஒரு மைந்தன்,—தன் தகப்பனரிடமிருந்து—பணத்தைப் பிழிந்தெடுக்க—

ச. ஆம்—அதை நீர் கேட்க விரும்பினல் கேளும், சொல்லுகிறேன். என்னல் அதை அடக்கிவைக்க முடியவில்லை. (நகைக்கிருள்.)

கேள. சொல், அந்தக் கதையைக் கேட்கிறேன்.

ச. சந்தோஷமாய். அதை உமக்குச் சொல்வதினல் அதிக கெடுதியில்லை. ஏனெனில் அது சீக்கிரம் எப்படியும் வெளியாகி விடும். ஊர் ஊராய்ச் சுற்றி கூத்தாடிவரும் குறக் கூட்டத்தின் கையில் நான் சிக்கும்படி என் தலைவிதி இருந்தது. அவர்களுடன் நான் இந்த ஊருக்கு வர, ஒரு வாலிபன் என்னைக்கண்டு என் மேல் காதல் கொண்டார் ; அது முதல், என்னை விடாது பின் தொடர்ந்தார் ; வாய்திறந்து கேட்டவுடன் தங்கள் இச்சைக்கு இணங்குவார்கள் என்று எண்ணும் மற்ற வாலிபர்களைப்போல் முன்பு நடந்துப் பார்த்தார். ஆயினும் அதற் கெல்லாம் நான் இணங்காத படியால், முதலில் தான் கொண்ட தப்பான எண்ணத்தை விட்டார். அதன் பேரில், என்னைக்கைதியாக வைத்தி

ருந்த குறக் கூட்டத் தாரிடம், தான் என் மீது உண்மையில் காதல் கொண்டிருப்பதாகத் தெரிவிக்க, அவர்கள் தங்களுக்கு ஒரு தொகையை கொடுத்தால், என்னை அவரிடம் ஒப்புவிப்ப தாகத் தெரிவித்தார்கள். ஆயினும், இதில் நேர்ந்த கஷ்டம் என்ன வென்றால், என் காதலன், உயர் குலத் துதித்த அநே கம் வாலிபர்கள் தற்காலமிருக்கும் கஷ்டதிசையிலிருந்தார்— அதாவது, அவர் கையில் அந்தத் தொகையில்லாதிருந்தது. அவர் தகப்பன் செல்வ வந்தனு யிருந்தபோதிலும், ஒருபெரிய லோபி, அவரைப்போல் பிசுனாரி இந்த உலகத்திலேயே கிடை யாது—கொஞ்சம் பொறும் கதையை முற்றிலும் கேளும்— அவர் பெயர் எனக்கு ஞாபகமில்லை—ஆ! கொஞ்சம் எனக்கு ஒத்தாசை புரியும்—இந்த ஊரில் எல்லாரைப் பார்க்கிலும் மிகுந்த லோபி என்று யாரைச் சொல்லுகிறார்கள்? அவர் பெயர் உமக்குத் தெரியுமா?

கௌ. தெரியாது.

ச. அதில்—என்னவோ—நாத—நாதன் என்று வருகிறது. கோ— கோபி—இல்லை இல்லை—கௌரி—ஆம்! ஞாபகம் வந்தது. கௌரிநாதன் அவர் பெயர், நான் சொன்னமடையன் அவர் தான்—பிறகு கதையை முடிக்கு மிடத்து—நானிருந்த குறக் கூட்டத்தார் இன்று இந்த ஊரைவிட்டுப் போகத் தீர்மானித் தார்கள்; தன் கையில் அவர்கள் கேட்டதைக் கொடுக்க பண மில்லாதபடியால், என் காதலன் என்னை இழந்தேயிருப்பார்— தன் தகப்பனரிடமிருந்து இந்தத் தொகையைப்பெற அவரது வேலையாள் அவருக்கு உதவி செய்திராவிட்டால். அவர்வேலைக் காரன் பெயர் நன்றாய் ஞாபகமிருக்கிறது. அவன் பெயர் காளப் பன். அவன் நிரம்ப கெட்டிக்காரன். அவன் புத்தியை நான் மிகவும் புகழவேண்டும்.—

கௌ. (ஒருபுறமாக) ஆ! திருட்டுக்கழுதை! அப்படியா சமாசாரம்!

ச. அந்தக் கிழவரை மோசம் செய்ய அவன் செய்த சூழ்ச்சி ஈதா கும். ஹா! ஹா! ஹா!—அதைப்பற்றி நினைக்கும் பொழு தெல்லாம் எனக்கு அடங்காச் சிரிப்பு வருகிறது—ஹாஹா ஹா!—இந்த லோபியான நாயிடம் போய்—ஹா ஹா ஹா!— துறைமுகப்பக்கமாய் தன் சின்ன எஜமானுடன் நடந்து போய்க் கொண்டிருந்தபொழுது, ஹா ஹா!—அவர்கள் ஒரு தூர்க்கி

தேசத்து தோணியைக் கண்டதாகவும்—ஹா ஹா !—தோணியில் பலர் தங்களை அதைப் பார்வையிடும்படி அழைத்ததாகவும்—ஹா ! ஹா!—அந்தத்தோணியின் தலைவன், தங்களுக்கு, சாப்பிடுவதற்குப் பலகாரம் எல்லாம் கொடுத்ததாகவும்—அதை அவர்கள் சாப்பிட்டுக் கொண்டிருந்தபொழுது—ஹா ஹா !—தோணியை ஓட்டி விட்டதாகவும், பிறகு—அந்த துர்க்கி தேசத்தான்—தன்னை ஒறு சிறு படகில் போட்டு, கரைக்கு அனுப்பி, உடனே தன்னிடம் ஐந்நூறு பொன் அனுப்பாவிட்டால், அவருடைய மகனை, அரேபியா தேசத்துக்கு அடிமையாகக் கொண்டுபோவதாகச் சொல்லி யனுப்பியதாகவும், அந்த லோபிக்குத் தெரிவித்தான். ஹா ஹா ! இதைக் கேட்டவுடன்—இந்தப் பரம லோபி இடிவிழுந்தது போல் ஆகிவிட்டான்—ஒரு பக்கம் பிள்ளையின் பேரில் ஆசை, மற்றொரு பக்கம் பணத்தின் பேரில் ஆசை ! இந்த மாதிரி இரண்டு பக்கமும் வலிக்கப் படவே என்ன செய்வான் பாவம் ! இந்த ஐந்நூறு பொன்னைக் கேட்டது அவனை ஐந்நூறு தரம் பிச்வாவால் குத்துவது போல் இருந்தது !—ஹாஹாஹா !—இந்தப் பணத்தை விட்டுப் பிரிவதென்றால், அவன் உயிரையே கொடுப்பது போலிருந்தது. அதற்காக அந்தப் படுக்காளி எப்படியாவது பணம் கொடாதபடி தன் மைந்தனை மீட்க குத்ர யுக்திகளெல்லாம் செய்து பார்த்தான்—ஹாஹாஹா !—சமுத்திரத்தின் மீது அந்தத் தோணியை துரத்திக் கொண்டுபோக போலீஸ் காரரை அனுப்புவதாயென்று யோசித்தான் !—ஹாஹா !—அந்த வேலைக்காரனை ஜாமினாகப் போயிருக்கச் சொல்லி, பணம் கொடாதபடி தன் மைந்தனை மீட்டுக் கொள்ளப் பார்த்தான் !—ஹாஹாஹா !—முப்பது பொன் கூடப் பெறாத, நாலைந்து பழந்துணிகளைக்கொடுத்து அவைகளைவிற்று அந்த ஐந்நூறு பொன்னைக் கொடுத்து வரும்படி, வேலைக்காரனை அனுப்பப் பார்த்தான். ஹாஹாஹா ! இந்த மாதிரி ஒவ்வொரு பிரயத்னம் செய்யும் பொழுதும், அவனது வேலையாள்—இது அசாத்தியமான காரியம் என்று தெரிவிக்க—அதைப் பற்றி தனக்கு ஞாபகம் வரும்போதெல்லாம்—"இந்தக் கழுதை அந்ததோணி பண்டை ஏன் போனான் ? அந்தத் தோணி பாழாய்ப் போக ! அந்த துர்க்கி தேசத்தான் நாசமாய்ப் போக !" என்று கூவிக்

கொண்டிருந்தானும்—பிறகு கடைசியில்—பணம் கொடாதபடி தப்ப ப்பன் முறை பிரயத்னம் செய்தும்—பயன்படாமற் போகவே—பெருமூச்செறிந்து—கதறியழுது—என்ன நீர் இக்கதையைக் கேட்டும் சிரிக்காமலிருக்கிறீரே? இதைப்பற்றி என்ன நினைக்கிறீர் நீர் ?

கௌ. அந்த வாலிபன் ஒரு நன்றி கெட்ட நாய் ! அதனைப் பிரசங்கிக் கழுதை! என்று எண்ணுகிறேன்! அவன் தகப்பனாரை இப்படி மோசம் செய்ததற்காக தக்க தண்டனைக்குட் படுவான் என்று நினைக்கிறேன்! அந்தக் குறக்குட்டி, இப்படி இவ்விடம் வந்து யோக்கியமான ஒரு குடும்பத்தில் பிறந்த பிள்ளையைக்கெடுத்து கௌரவமுடைய பெரிய மனிதனை தூஷித்த வாயாடிநாரி என்று நினைக்கிறேன்! அந்த வேலைக்காரன், நாளைக் காலைக்குள் தூக்கு மரத்திற்கு அனுப்பவேண்டிய மகா பாதகன் என்று நினைக்கிறேன் ! (கோபத்துடன் போகிறார்.)

(மற்றொரு புறமாக செல்வநேசன் வருகிறான்.)

சே. எங்கே போயிருந்தீர் ?—இப்பொழுது நீர் பேசிக்கொண்டிருந்தது உம்முடைய காதலன் தகப்பனார் என்பதை அறிவீரா ?

ச. அப்படித்தான் இருக்கவேண்டுமென்று இப்பொழுது தான் என் புத்தியிற் படுகிறது. நான் யோசித்துப் பாராமல், அவருடன் பேச ஆரம்பித்தேன்— அவருடைய கதையையே அவருக்குச் சொன்னேன் !—

சே. என்ன ! அவர் சொந்த கதையையா ?

ச. ஆம் !—அதைக் கேட்டவுடன் எனக்கு சிரிப்படங்கவில்லை—யாருக்காவது சொல்ல வேண்டுமென்று அடக்க முடியாதபடி இச்சைகொண்டேன். ஆயினும் என்ன இப்பொழுது அதனால்? அவருக்குக் கெடுதியேயன்றி, எங்களுக்கு இப்பொழுது இருப்பதைவிட ஒன்றும் கெட்டுப்போவதற் கில்லையென்று எண்ணுகிறேன்.

சே. என்ன அம்மா ? கொஞ்சம் வாயை அடக்கிவைக்கக் கூடாதா ? தங்களுடைய குரலைத் தாங்களே கேட்பது மிகவும் இனிமையாயிருக்கவேண்டும். அதனால்தான் அநேகர் தங்கள் இரகசியங்களை அடக்கி வைக்க முடியாதவர்களா யிருக்கிறார்கள் போலும்.

ச. நான் கூறுவிட்டால், அவர் வேறு யாரிடமிருந்தாவது தெரிந்து கொள்ள மாட்டாரோ ?

அழகாநந்தர் வருகிறார்.

அழ. அடேய்! செல்வ நேசா!

சே. நீர் வீட்டிற்குள் போம்—என் எஜமானர் என்னை அழைக்கிறார். (சரோஜதளநேத்ரி போகிறாள்.)

அழ. அடே திருட்டுக் கழுதை! மற்றவர்களுடன் கூடி இத் திருட்டுத்தனம் நீயும் செய்திருக்கிறாய்! நீ, காளப்பன், என் குமாரன், எல்லோரும் சேர்ந்து என்னை இவ்வாறு மோசம் செய்திருக்கிறீர்கள். இதை நான் சும்மாகப் பொறுத்துக் கொண்டிருப்பேன் என்று நினைத்தாயா?

சே. சத்தியமாகச் சொல்கிறேன் எஜமானே! காளப்பன் உம்மை ஏதாவது மோசம் செய்திருந்தால் அவனை இனி நான் பார்ப்பதுவு மில்லை; இதற்கும் எனக்கும் சம்பந்தமு மில்லை யென்று உறுதியாய் நம்பும்.

அழ. எல்லாம் பார்ப்போம், திருட்டுப்பயலே, எல்லாம் பார்ப்போம்—என்னை இனி மோசம் செய்யமுடியாது.

கௌரிநாதர் வருகிறார்.

கௌ ஆ! அழகாநந்தரே! எனக்கு பெரிய துர் அதிர்ஷ்டம் நேர்ந்தது.

அழ. எனக்கும் அப்படித்தான் நேர்ந்திருக்கிறது.

கௌ. அந்த திருட்டு நாய் காளப்பன், என்னிடமிருந்து மோசம் செய்து ஐந்நூறு பொன் அடித்துக் கொண்டு போய்விட்டான்.

அழ. அந்த திருட்டு நாய்தான், காளப்பன், என்னிடமிருந்தும், இருநூறுபொன் ஏமாற்றிக் கொண்டு போய்விட்டான்.

கௌ. இந்த ஐந்நூறு பொன் கொண்டு போனது மாத்திர மன்று; என்னை மிகவும் அவமானப் படுத்தினான், அதைச் சொல்வதற்கும் வெட்கமாயிருக்கிறது—ஆயினும் எப்படியாவது அவன் மீது பழிவாங்குகிறேன்.

அழ. நானும் அவன் என்னை மோசம் செய்ததற்காகப் பழிவாங்க வேண்டுமென்று தீர்மானித்திருக்கிறேன்.

கௌ. எப்படியும் தக்கபடி அவனை சிட்சிக்க வேண்டும் நான்.

சே. (ஒரு புறமாக) அதில் எனக்கு ஒரு பாகமும் கிடைக்காதிருக்குமாக!

கௌ. இதனுடன் போகவில்லை அழகாநந்தரே, நமக்கு ஒரு துர்அதிஷ்டத்தின் பின்னை மற்றொரு துர் அதிஷ்டம் வருகிறது. இன்றைத் தினம் என்குமாரத்தியை நான் காண்பேன் என்று சந்

தோஷப்பட்டுக் கொண்டிருந்தேன், அவள் ஒருத்திதான் எனக்கு ஆறுதலே. என்னுடையஆள் மூலமாக, அவள், தாரா நகரத்தை விட்டு நெடுகாளாயதென்றும், அவள் ஏறிச்சென்ற கப்பலானது எங்கேயோமூழ்கி, அவள் இறந்து போயிருக்க வேண்டுமென்றும், இப்பொழுதுதான் எனக்கு சேதி வந்தது.

அழ. உம்முடனே உம்முடைய குமாரத்தியை இருக்கச் செய்து சந்தோஷிப்பதை விட்டு, அவளைத் தாரா நகரத்தில் ஏன் இருக்கச் செய்தீர்களென்று நான் கேட்கலாமோ?

கேள. அதற்கு சில காரணங்கள் உண்டு, என் குடும்ப சம்பந்தமாய் எனது இரண்டாவது கலியாணத்தை நான் இரகசியமாய் வைத்திருக்க வேண்டி வந்தது—ஆயினும் இது யார்?

நாராயணி வருகிறாள்.

கேள. ஆ!—நீயா, தாதி?

நா. (அவா பாதத்தில் விழுந்து) ஆ! எஜமானே! பண்டரிநாதரே!—

கேள. ஸ்! என்னை கௌரிநாதர் என்று அழை; மற்றொரு பெயரை உபயோகியாதே. தாரா நகரத்தில் நான் வேறு பெயர் பூண வேண்டியிருந்த காரணம், இப்பொழுது இல்லை.

நா. ஐயா, இம்மாதிரி நீர் வேறு பெயர் பூண்டது, உம்மை இவ்விடம் நாங்கள் கண்டு பிடிப்பதில், என்னென்ன கஷ்டங்களையும் கவலைகளையும் உண்டு பண்ணியது எங்களுக்கு!

கேள. என் பெண்ணும் அவள் தாயாரும் எங்கே?

நா. உம்முடைய குமாரத்தி அருகில்தான் இருக்கிறாள்—ஆயினும் அவளை நீர் காணுமுன், அவள் விவாகம் செய்து கொள்வதற்கு நான் உடன் பட்டதற்காக நீர் என்னை மன்னிக்கவேண்டும்; உம்மைக் காணாதபடியால் அவளைக் காப்பாற்ற வேறு வகை யில்லாதவளாய்த் தத்தளித்தேன்.

கேள. என் பெண், விவாகஞ்செய்து கொண்டாளா!

நா. ஆம், ஐயா.

கேள. யாரை?

நா. அஸ்வமேதவரெனும் இந்திரன் ஓர் வாலிபனை; அவர் தகப்பன் பெயர் அழகாநந்தராம்.

கேள. ஈசனே!

அழ. என்ன எதிர் பாராத அதிர்ஷ்டம்!

கேள. எங்களை அழைத்துக்கொண்டுபோ, சீக்கிரம் அழைத்துக் கொண்டுபோ அவளிருக்குமிடம்.

நா. இதோ இந்த வீட்டிற்குள் நீங்கள் நுழைய வேண்டியதுதான்.

கௌ. வழிகாட்டு—வாரும் வாரும், அழகாநந்தரே. (செல்வநேசனைத் தவிர மற்றவர்கள் உள்ளேபோகிறார்கள்.)

செ. சரி!—என்ன ஆச்சரியமாய் முடிந்திருக்கிற தெல்லாம்!

காளப்பன் வருகிறான்.

கா. அடே, செல்வநேசா, எங்கே நம்மவர்களெல்லாம்?

செ. உனக்கு நான் இரண்டு புதிய சமாசாரங்கள் சொல்ல வேண்டும். ஒன்று அஸ்வதேவருடைய சங்கதி சந்தோஷமாய் முடிந்தது. நம்முடைய யாகசேனை, கௌரிநாதருடைய பெண்ணும்; தெய்வாதீனத்தால் அவள் தந்தை முடிக்க விரும்பிய படியே அவள் கலியாணம் முடிந்தது. இரண்டாவது சமாசாரம், இதோ இந்த இரண்டு பெரிய கிழங்களும், உன்மீது கொடும் பழி வாங்குவதாகப் பிரமாணம் செய்திருக்கிறார்கள்—முக்கிய மாக கௌரிநாதர்.

கா. உம்—அது ஒன்று மில்லை. இந்த பயமுறுத்தலுக்கெல்லாம் பயப்படுவனல்ல நான். இவைகளெல்லாம் எனக்கு தலைமேல் காற்றடிப்பது போல் சர்வ சாதாரணம்.

செ. உன்னை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்; பிள்ளைகள் தங்கள் தகப்பன்மார்களுடன் சமாதானமாக போய் விடுவார்கள்; நீதான் தனியாக அகப்பட்டுக் கொள்வாய்.

கா. அதை யெல்லாம் எனக்கு விட்டு விடு; அவர்கள் கோபத்தை அடக்கும் மார்க்கம் எனக்குத் தெரியும்—அன்றியும்—

செ. போ போ! போய் விடு! அதோ அவர்கள் வருகிறார்கள். (காளப்பன் விரைந்து போகிறான்.)

கௌரிநாதர், அழகாநந்தர், நாராயணி, யாகசேனை வருகிறார்கள்.

கௌ. வா குழந்தாய், வா நம்முடைய வீட்டிற்குப் போவோம்; உன்னுடன் உனது தாயாரையும் பார்த்திருப்பேனாயின் என் சந்தோஷம் பூரணமாயிருக்கும்.

அழ. இதோ—அஸ்வதேவன் வருகிறான்—சரியான சமயத்தில்.

அஸ்வதேவனும் சரோஜதளநேத்திரியும் வருகிறார்கள்.

அழ. வா அப்பா, உனது விவாகம் சந்தோஷமாய் முடிந்ததற்காக ஈசனைக் குறித்துப் பிரார்த்திப்போம்—

அஸ். (யாகசேனையைப் பாராதவனாய்) தந்தையே, என்னை மன்னிக்க வேண்டும். என்னுடைய விவாகத்தைப்பற்றி நீர் கூறுவதொன்றையும் நான் ஒப்புக்கொள்ள மாட்டேன். நான் யாரை மணம்

புரியத் தீர்மானித்திருக்கிறே னென்பதை நீர் இப்பொழுது அறிந்திருக்கிறபடியால், உம்மிடமிருந்து அதை நான் ஒளிக்க வேண்டியதில்லை இனி.

அழ. ஆமாம்—அது உனக்குத் தெரியாதே—

அஸ். எனக்குத் தெரியவேண்டிய தெல்லாம் நன்றாய்த் தெரியும்.

அழ. நான் உனக்கு சொல்லவந்த தென்னவென்றால், கௌரிநாதர் பெண்தான்—

அஸ். கௌரிநாதருடைய பெண்ணை நான் கண்ணெடுத்தும் பாரேன் எப்பொழுதும்.

கௌ. அவள்தான்—

அஸ். ஐயா, தாமும் என்னை மன்னிக்க வேண்டும்—நான் தீர்மானித்து விட்டேன்.

சே. கொஞ்சம் கேளும்—

அஸ். மாட்டேன்—என்னுடன் பேசாதே—நான் கேட்கவே மாட்டேன்.

அழ. உன்னுடைய மனைவி—

அஸ். இல்லை—அப்பா—என் கடைசிவார்த்தையைக் கேளும்—என் கண்மணியை விட்டு பிரிவதை விட, என் னுயிரை விட்டுப் பிரிவேன்! ஆ! இதோ! (அவளிருக்கு மிடம்போய் அவள் கரத்தைப் பற்றி) ஆம்—இனி உங்கள் இஷ்டப்படி நீங்கள் செய்யலாம். இப் பெண்மணியைத் தான் நான் மணந்தேன். இவளையன்றி வேறொரு பெண்ணைக் கண்ணெடுத்தும் பாரேன்.

அழ. சரிதான்!—சரிதான்! இப்பெண்ணைத்தான் உனக்குத் தாரமாகக் கொடுக்கிறோம். எப்பொழுது பார்த்தாலும் இப்படித்தான் தவறிழைக்கிறாய். தலைகால் தெரியாமல் பிடிவாதமாய் ஓடுகிறாய்.

யா. ஆம், பிராணநாதா, இவர் தான் என் தந்தை. இப்பொழுது தான் இவரைக் கண்டி பிடித்தேன்—நம்முடைய கவலையெல்லாம் ஒழிந்தது.

கௌ. வாருங்கள் எல்லோரும், எனதுவீட்டிற்குப் போவோம், இங்கே பேசு வதைவிட எல்லாம் சவிஸ்தாரமாக அங்கு பேசுவோம்.

யா. அப்பா, உம்மை நான் மிகவும் வேண்டிக் கொள்ளுகிறேன், என் மீது தயை கூர்ந்து இதோ இருக்கும் இப் பெண்மணியை விட்டு என்னை பிரிக்காதீர்; அவளது குணங்களை நீர் நன்றாய் அறிவீராயின், அவளை மிகவும் நன்கு மதிப்பீர் என்பதற்கைய மில்லை.

கௌ. என்னை என் முகத்திற் கெதிரிலேயேவைத ஒரு பெண்ணையா நான் என் வீட்டிற்கு அழைத்துக் கொண்டு போவது ?

ச. ஐயா, உங்களுடைய மன்னிப்பை மனப்பூர்வமாக கேட்கிறேன். நீர் இன்னாரென் றறிந்திருந்தால் அவ்வாறு நான் பேசியிருக்கமாட்டேன்—உம்மைப்பற்றி நான் கேள்விப்பட்டதுதான்.

கேள. என்ன கேள்விப்பட்டாய் ?

யா. என் சகோதரன் இப் பெண்மணியின் மீது இச்சைப் பட்டதில் தவறொன்று மில்லை—இப்பெண்மணி மிகுந்த கற்புடையவள், அதற்கு நான் உத்தரவாதம்.

கௌ. அதெல்லாம் சரிதான்—இப்பெண்ணை என் குமாரனுக்கா நான் கலியாணம் செய்து கொள்ளவேண்டுமென்கிறாய் ? குலம் கோத்திரம் இல்லாத பெண்—ஊர்ஊராய்த் திரிந்து கொண்டிருக்கிறவள்—

லீலாநாதன் வருகிறான்.

லீ. அப்பா, ஊர்பேர் தெரியாத ஒரு பெண்ணின் மீது நான் காதல் கொண்டேன் என்று என்மீது குறை கூறுதீர். அவளுக்கு அந்தஸ்தும் ஆஸ்தியும் இல்லையென்றும் கூறுதீர். இப்பெண்மணி இந்தப் பட்டணத்தில் தான் பிறந்தவளென்றும், ஒரு பெரிய அந்தஸ்துள்ள குடும்பத்தில் உதித்தவளென்றும், நான் எந்த குறக்கூட்டத்தாரிடமிருந்து இவளைமீட்டு வந்தேனோ, அவர்கள் இப்பொழுதுதான் எனக்குத் தெரிவித்தார்கள்; இவள் நான்கு வயது குழந்தையா யிருந்த பொழுது இவளைத் திருடிச் சென்றார்களாம், அப்பொழுது இவள் அணிந்திருந்த ஒரு கைவளையை இதோ என்னிடம் கொடுத்திருக்கிறார்கள். இதைக் கொண்டு இவள் தாய் தந்தையரை நாம் கண்டுபிடிக்கலாம்.

அழ. ஹா! காட்டு இப்படி அதை !(வாங்கிப் பார்த்து) இது என் பெண்ணுடையதே. ஆகவே இவள் தான் நான்கு வயது சிறு குழந்தையாயிருந்த பொழுது காணமற் போன, என் குமாரத்தி என்பதற் கைய மில்லை.

கேள. உம்முடைய குமாரத்தியா ?

அழ. ஆம், சந்தேகமே யில்லை. இவள் தான் ; முகஜாடையெல்லாம் அப்படியே யிருக்கிறது. இதில் அணுவளவேனும் சந்தேக மில்லை.

யா. ஈசனே ! என்ன ஆச்சரியங்களெல்லாம் நேரிடுகின்றன !

காரளன் வருகிறான்.

கா ஐயோ ! எஜமான் மார்களே ! மிகுந்த துக்ககரமான சமாசாரம் நேரிட்டது இப்பொழுது தான் !

கேள. என்ன விசேஷம் !

கா. பாவம்—காளப்பன் ! (அழுகிறான்)

கேள. அந்தக் கழுதையைத் தான் தூக்கிலிடப்போகிறேன் !

கா. ஐயோ ! எஜமானே, அந்தக் கஷ்டம் உங்களுக்கு வேண்டியதில்லை. சற்று முன்பாக காளப்பன், மராமத்தாய்க்கொண்டிருந்த ஒரு கட்டடத்தின் கீழாகப் போய்க் கொண்டிருந்த பொழுது, மேலே இருந்த ஒரு கொல்லத்துக் காரனுடைய கெட்டப்பாறை, அவர் தலையில் விழ, மண்டை உடைந்து மூளையெல்லாம் வெளியில் வந்து விட்டது. அவர் மரணாவஸ்தையில் லிருக்கிறார். அவர் தன்னைஉம்மிடம் தூக்கிக்கொண்டு போய் உங்களிடம் ஏதோ பேசவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறார்.

அழ. எங்கே அவன் ?

(தலையெல்லாம்மிகவும் காயம்பட்டதுபோல் கட்டிக்கொண்டு இரண்டு பெயரால்தூக்கப்பட்டு, காளப்பன் வருகிறான்.)

கா. இதோ வருகிறார்.

கா. அப்பா! அப்பா !—எஜமான்மாரே !—என்னைப் பாருங்கள்!—ஐயோ ! என் கதியைப் பாருங்கள் !—ஐயோ ! நான் யார் யாருக்கு தீங்கிழைத்தேனோ, அவர்களுடைய மன்னிப்பையெல்லாம் பெறுமல், நான் மரிக்க எனக்கிஷ்ட மில்லை !—ஹா !—ஆமாம் எஜமான்மார்களே !—என் உயிர் போகுமுன் —உங்களுக்கெல்லாம் நான் செய்த பிழைகளை மன்னிக்கும்படி என்மனப் பூர்வமாக—வேண்டிக் கொள்ளுகிறேன்—முக்கியமாக, அழகாநந்தரையும், கௌரிநாதரையும் மன்னிப்புக்கேட்டுக் கொள்ளுகிறேன், ஐயோ !—

அழ என் வரைக்கும் உன்னை மன்னித்தேன்—மனதில் ஒன்று மில்லாமல் நிம்மதியாய் மரிப்பாயாக.

காள. ஐயா, உங்களுக்குத்தான் நான் பெரும் பிழை இழைத்தேன்—அந்தத் தடியால் அடித்தது—

கௌ. அதைப்பற்றி ஒன்றும் பேசாதே—நானும் உன்னை மன்னித்து விட்டேன்.

காள. நான் செய்தது மிகவும் துணிகரமான வேலை—நான் அந்தத் தடியால் அடித்தது—

கேள. அதைப்பற்றி இனி ஒன்றும் பேசவேண்டாம்.

காள. நான் மரிக்கும்பொழுது—என்ன துக்கமாய் இருக்கின்றது தெரியுமா ?—அந்தத் தடியைப் பற்றி நினைக்கும்பொழுது—

கேள. அடே ! போதுமடா ! பேசாமலிரு !

காள. அந்த பெருத்த தடியால், உம்மை நான் அடித்தது—

கேள. அடே ! வாயைத் திறக்காதே!—நான் எல்லாவற்றையும் மறந்து விடுகிறேன்.

காள. ஹா ! மிகவும் சந்தோஷம் !—ஐயா, நான் தடியாலடித்ததை வாஸ்தவத்தில் மன்னித்து விடுகிறீர்களா ?—

கேள. ஆம் ! ஆம் ! இனி ஒன்றைப்பற்றியும் பேசாதே !—நீ செய்ததை யெல்லாம் மன்னித்துவிட்டேன். அதெல்லாம் முடிந்து விட்டது.

காள. அப்பா ! எஜமானே ! அந்த வார்த்தையானது எனக்கு மிகுந்த ஆறுதலைத் தருகின்றது.

கேள. ஆயினும் நீ ஒரு நிபந்தனைக்கு உட்படவேண்டும். நீ உடனே இறந்து போகவேண்டும்.

கா. என்ன எஜமானே ?

கேள. நீ பிழைப்பாயாயின், என் வார்த்தையை மீட்டுக்கொள்வேன்.

காள. ஹா ! ஹா ! எனக்கு மறுபடியும் மூர்ச்சைவருகிறது !

அழ. கௌரிநாதரே, நாம் எல்லாம் இவ்வளவு சந்தோஷத்தை அடைந்தற்காக, நிபந்தனை ஒன்றுமில்லாமல் இவனை முற்றிலும் மன்னித்து விடும்.

கேள. சரி, அப்படியே யாகட்டும்.

அழ. வாருங்கள் நாம் எல்லோரும்போய்—ஒன்றாய் மணவிருந்து சாப்பிடுவோம்.

காள. (தன் தலைக்கட்டுகளை யெல்லாம் அவிழ்த்துவிட்டு எழுந்துநின்று) ஆமாம் !—நான் சாகுமளவும் மணவிருந்தே சாப்பிட்டுக் கொண்டிருக்கிறேன் !

காட்சி முடிகிறது.

நாடகம் முற்றியது.

THREE COMICS

— IN TAMIL —

BY

Rao Bahadur P. SAMBANDAM, B. A., B. L.

AUTHOR OF

The Two Sisters, Galava, The Eye of Love, The Curse of Urvasi, The Merchant of Vanipura, Fate and Love, Simhalanatha, Pushpavalli, Amaladitya, Magapathi, The Ideal Wife, Siruthondar, The Golden Fetters, True Love, The Bandit Chief, Bricks-Between, At any Cost, The Fair Ghost, Brahmin *vs* Non-Brahmin, Vijayarangam, As you Like it, Sati Sulochana, Lord Buddha, The Tragedy of Silence, The Good Fairy, Geetha Manjari, The True Brother, Malavikagnimitra, Chandrahari, The Demon Land, Sabapathy Part I, The Pongal Feast or Sabapathy Part II, A Rehearsal or Sabapathy Part III, Sabapathy Part IV, Mixture, Blessed in a Wife, The Dancing Girl, Subadra-Arjuna, Karna the Giver, Sahadeva's Stratagem, The Surgeon General's Prescription, Vichu's Wife, Sakuntala, Vikramorvasi, The Point of View, The Two Selves, The Tragic Denouement, The Sub-Assistant Magistrate of Sultanpet, Harischandra, Blind Ambition, Markandeya, Sarangadhara, Manohara, The Two Friends, The Knavery of Kalappa, As We Sow-So We Reap, Over Forty Years Before the Footlights Parts I, II, III, IV, V & VI, The Search, Prince Koneri, The Crowd in the Shandy, Ratnavali, The Gypsy Girl, Vaikunta Vaithiyar, Dikshithar Stories, Funny Stories, The Good Sister, Short Stories, Hints to Actors, The Tamil Drama, Humorous Essays, A hand book for Tamil Talkies, Stray Flowers, The Wedding of Valli, Talkie Experiences etc. in Tamil; and Harischandra, and Yayathi in English.

FIRST EDITION

MADRAS.

PRINTED BY THE PEERLESS PRESS,
15, LINGHI CHETTY STREET, G. T.

1940

All rights reserved.] *[Price As. 10.*

உ

மூன்று நகைச் சுவை நாடகங்கள்

ராவ் பஹதூர்

ப. சம்பந்த முதலியார், பி. ஏ., பி. எல்.,

அவர்களால் இயற்றப்பட்டவை.

இந்த நூலாசிரியரால் இயற்றப்பட்ட மற்ற நூல்கள் :

லீலாவதி-சுலோசனை, சாரங்கதரன், மகபதி, காதலர் கண்கள், நற்குல தெய்வம், மனோஹரன், ஊர்வசியின் சாபம், இடைச்சுவர் இருபுறமும், என்ன நேர்ந்திடினும், விஜயரங்கம், கள்வர் தலைவன், தாசிப்பெண், மெய்க்காதல், பொன் விலங்குகள், சிம்ஹளநாதன், விரும்பிய விதமே, சிறுத்தொண்டர், காலவரிஷி, ரஜபுத்ரவீரன், உண்மையான சகோதரன், சதி-சுலோசனா, புஷ்பவல்லி, கீதமஞ்சரி, உத்தமபத்தினி, அமலாதித்யன், சபாபதி முதற்பாகம், பொங்கல் பண்டிகை அல்லது சபாபதி இரண்டாம் பாகம், ஓர் ஒத்திகை அல்லது சபாபதி மூன்றாம் பாகம், சபாபதி நான்காம் பாகம், பேயல்ல பெண்மணியே, புத்த அவதாரம், விச்சுவின் மனைவி, வேதாள உலகம், மனைவியால் மீண்டவன், சந்திரஹரி, சுபத்திரார்ஜுனா, கொடையாளி கர்ணன், சஹதேவன் சூழ்ச்சி, நோக்கத்தின் குறிப்பு, இரண்டு ஆத்மாக்கள், சர்ஜன் ஜெனரல் விதித்த மருந்து, மாளவிகாக்னிமித்ரம், விபரீதமான முடிவு, சுல்தான் பேட்டை சப் அசிஸ்டென்ட் மாஜிஸ்டிரேட், சகுந்தலை, காளப்பன் கள்ளத்தனம், விக்ரமோர்வசி, முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும், நாடகமேடை நினைவுகள் முதற்பாகம், இரண்டாம் பாகம், மூன்றாம் பாகம், நான்காம் பாகம், ஐந்தாம் பாகம், ஆறாம் பாகம், நாடகத் தமிழ், யயாதி, பிராம்மணனும் சூத்திரனும், வாணீபுரவணிகன், இரண்டு நண்பர்கள், சத்ருஜித், ஹரிச்சந்திரன், மார்க்கண்டேயர், ரத்னவளி, கண்டு பிடித்தல், கோனேரி அரசகுமாரன், சந்தையிற் கூட்டம், வைகுண்ட வைத்தியர், தீட்சிதர் கதைகள், ஹாஸ்யக் கதைகள், குறமகள், நல்ல தங்காள், சிறுகதைகள், நடிப்புக்கலையில் தேர்ச்சிபெறுவதெப்படி?, ஹாஸ்ய வியாசங்கள், தமிழ் பேசும் படக்காக்ஷி, விடுதிப்புஷ்பங்கள், பேசும்பட அனுபவங்கள், வள்ளி மணம், கதம்பம், முதலியன.

முதற் பதிப்பு

சென்னை 'பியர்லெஸ்' அச்சுக்கூடத்தில்
அச்சிடப்பட்டது.

காபிரைட்] 1940 [விலை அணா 10.

INSCRIBED

TO

THE BELOVED MEMORY

OF

MY PARENTS

P. VIJIARANGA MUDALIAR

AND

P. MANICKAVELU AMMAL

AND

MY FRIEND

C. RANGAVADIVELU

முன்னுரை

இப் புஸ்தகத்தில் "மாண்டவர் மீண்டது" "ஆஸ்தானபுர நாடக சபை" (ஷேக்ஸ்பியர் நாடகத்தினின்றும் எடுக்கப்பட்டது) "சங்கீதப் பயித்தியம்" எனும் மூன்று நகைச் சுவை நாடகங்கள் அடங்கியிருக்கின்றன. இவைகளையாவது, அல்லது நான் எழுதி இருக்கும் மற்றெந்த நாடகங்களையாவது, ஆடவிரும்புவோர், எனக்குச் சேர வேண்டிய ராயல்டி கட்டணத்தைக் கட்டி, என் உத்திரவு பெற்ற பிறகே ஆடவேண்டும். இல்லாவிட்டால் காபிரைட் சட்டப் பிரகாரம், போலீஸ் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

5–12–40
சென்னை.
70 ஆச்சாரப்பன் தெரு.

ப. சம்பந்தம்.

மாண்டவர் மீண்டது

நாடக பாத்திரங்கள்

பீமராஜன்	...	.... ஓர் சிற்றரசன்
ஆநந்தன் பிரம்மாநந்தன்	}	... அரண்மனை விதூஷகர்கள்
வீரபத்திரன்	...	... பீமராஜன் வேலையாள்
மஹாராணி	....	.... பீமராஜன் மனைவி
ரஞ்சிதம்	...	.... மஹாராணியின்வேலைக்காரி

மாண்டவர் மீண்டது

முதல் அங்கம்

முதற் காட்சி

இடம்—ஆநந்தன் வீட்டில் ஓர் அறை.

ஆநந்தனும் பிரம்மாநந்தனும் பேசிக்கொண்டு வருகிறார்கள்.

ஆ. அடே தம்பி! இந்த கஷ்டத்துக்கு என்னடா செய்யரது? அத்தையம்மாளே கேட்டா, கல்யாண செலவுக்கு நூறு பொன் கொண்டு வந்தாதான் எம்பொண்ணெ கண்ணாலம் பண்ணிக் கொடுக்க முடியும் இண்ணு கண்டிப்பா சொல்லி வுட்டாங்கடா இண்ணெக்கி. நானு எவ்வளவோ சொல்லி பாத்தேன், கொஞ்சம் கொறைச்சிங்க இண்ணு, கேக்க மாட்டேண்ராங்கடா; நீ பொன்னே கொறைச்சா, நானு பொண்ணெ கொறைச்சுடரேன் இண்றாங்க!

பி. அது என்னமா அண்ணு பொண்ணெ கொறைக்கிரது?

ஆ. உம்—அதையும் கேட்டு பாத்தேன். நீ நானு கேக்கரத்துலே பாதி பொன்னு கொடுத்தா, நானும் எம்பொண்லெ பாதி பொண் கொடுக்கிறேன் இண்ராங்க—நமக்கு மேலே இருக்க ராங்கடா அவுங்க!

பி. நம்ப அத்தெ அல்லா!

ஆ. அதிருக்கட்டுண்டா—இப்பொ இந்த கஷ்டத்துக்கு என்னடா செய்யரது? எனக்கோ வயசாயி போச்சி; எத்தனி நாளு கண்ணாலம் இல்லாதே இருக்கிறது? கண்ணாலம் சீக்கிரம் ஆவணுமிண்ணு சொன்னுகா, நூறுபொன்னு சீக்கிரம் கொண்டா இண்ராங்க! இந்த கஷ்ட காலத்திலே

இப்பொ நூறு பொன்னுக்கு எங்கே போரது? மானமோ காய்ஞ்சி போச்சி, துளி மழெயே காணோம்! ராஜா என்னுடா இண்ணு, சண்டைக் கோசரம் பணம் வோணும் இண்ணு வரியெல்லாம் ஓஸ்த்திவுட்டாரு!

பி. ராஜாவே போய் கேட்டு பாரேன் அண்ணு, கலியாணத்துக்கு செலவுக்கு வோணும் இண்ணு?

ஆ. அது பிரயோஜனமில்லே! அல்லாம் நேத்து கேட்டுபாத்தேன்! இதுக்குள்ள என்னுடா உனக்கு கல்யாணம், அல்லாம் எம்பிள்ளேக்கி கலியாணம் ஆவும்போது உனக்கும் என் செலவிலே கல்யாணம் பண்ணிவைக்கிறேன் இண்ராரு! ராஜா பிள்ளே தான் ஓனக்கு தெரியுமே — சின்ன பிள்ளே — அவருக்கு கலியாண மாகரத்துக்கு இன்னும் எத்தனி வருஷமாகுமோ! அதுக்குள்ள எனக்கு கருமாந்திரமாயி பூடும் போலே இருக்குது!

பி. அண்ணு! எனக்கொரு நல்ல யுக்தி தோணுது அண்ணு!

ஆ. என்னுடா அது? சொல்லு பார்ப்போம்.

பி. உங்களுக்கு கருமாந்திரம் செலவுக்கு பொன் வோணும் இண்ணு நூறு பொன் கேட்டுப்பாருங்களே!

ஆ. குட்டுடா அவனே!—புத்திசாலி! எனக்கு கருமாந்திரம் ஆவணும், அதுக்கு பொன்னு ஓணும், இண்ணு நானே என்னமாடா கேக்கரது?

பி. அது ஒரு கஷ்டம் இருக்குது வாஸ்தவம்தான்—ஆனு—நானுசொல்ரத்தே கேளுங்க—நானு செத்து பூட்டேன் இண்ணு, ராஜாகிட்டபோயி, ரொம்ப அழுரமாதிரி அழுது, கருமாந்திர செலவுக்காக இண்ணு, நூறு பொன் வாங்கி வந்துடுங்க—அப்பரம் பாத்துக்கலாம்.

ஆ. ஆமாண்டா தம்பி! நல்ல யுக்திதான் இது! அப்பொ நானு உடனே போய் ராஜாவே கேக்கட்டுமா?

பி. போய் வாங்க!—அண்ணு—இன்னொரு சின்ன சமாசாரம்.

ஆ. என்னு சீக்கிரம் சொல்லு.

பி. உங்க கல்யாணத்தோடே எனக்கும் அப்படியே ஒரு கல்யா ணம்—பண்ணி வுடுங்களேன் அண்ணு ?

ஆ. குட்டுடா அவனே !—என் கல்யாணத்துக்கே வழியே காணும்—இதுக்குள்ள உனக்கென்னுடா கல்யாணம் ?

பி. இல்லே அண்ணு உங்க கல்யாணத்தோடே எனக்கும் ஒண்ணு பண்ணிவுட்டா, செலவு சுலபமா பூடுமே இண்ணு பாக்கரேன்.

ஆ. அமாண்டா, பொண்ணு எங்கேடா மொதல்லே ?

பி. நம்ப அத்தைக்கு இரண்டாவது பொண்ணு இருக்குதே அண்ணு, அதுக்குக்கூட வயசாயி இருக்குது அண்ணு.

ஆ. கெட்டிக்காரன் ! எல்லாம் விசாரிச்சி வைச்சிருக்கிரையா !—ஆமாண்டா, அவுங்க அந்த பொண்ணெ உனக்குக் கொடுக்க ஒப்புக்கணுமே ?

பி. அண்ணு—நானு நேத்து மொள்ளபோய் கேட்டு பாத்தே —நம்ப அத்தெதானே இண்ணு—

ஆ. குட்டுடா அவனே !—ஏண்டா இதுக்குள்ள இந்த யுக்தி பண்ணையா ? — அதிருக்கட்டும், அவுங்க என்னு பதில் சொன்னுங்க ?

பி. பெரிய பொண்ணு இருக்கும்போது சின்ன பொண்ணுக்கு என்னமா கண்ணுல மாகரது அப்பா, பெரிய பொண்ணுக்கு கண்ணுலம் ஆகட்டும், அப்புறம் பாத்துகலாம் இண்ணுங்க.

ஆ. ஆமாம், கல்யாண செலவுக்கு என்னமாணு கேட்டாங்களா ?

பி. என்னையும் நூறுபொன் கேட்டாங்க-எல்லாம் பேரம்பண்ணி அம்பது பொன்னுக்கு தீர்மானம் பண்ணிவைச்சிருக்கிறேன்!

ஆ. ஏண்டா! இதெல்லாம் எங்கிட்ட சொல்லாதே என்கதை யெல்லாம் முன்னே கேட்டுகணையோ ? குட்டுடா இவனே !

பி. இல்லே அண்ணு, எப்பவும் அண்ணுத்தெ சமாசாரம் மொதல்லே, தம்பி சமாசாரம் பின்னுலே.

ஆ. சரிதாண்டா தம்பி, நீரொம்ப புத்திசாலிதான்—நீ ஊட்டு லேயே இரு, நானு போய் ராஜாகிட்ட நீ சொன்னமாதிரி சொல்லி நூறு பொன்னு முன்னே வாங்கினுவந்தூடரேன்.

பி. கொஞ்சம் இருங்க அண்ணு—எனக்கு இன்னொருயுக்தி தோணுது—ராஜாவும் ராஜாத்தியும் தனி தனியாயிருக்கர சமயம் பாத்து, நீங்க ராஜாகிட்டபோய், நானு சொன்ன மாதிரி கேளுங்க—நானு ராஜாத்திகிட்டபோயி பொன்னு கேட்டு வாங்கிவந்தூடரேன்

ஆ. நல்லயுக்திதான் ஆனல்—குட்டுடா அவனே! நீ என்னமாடா நீ செத்து பூட்டே இண்ணு செலவுக்கு கேப்பே?

பி. இல்லெ அண்ணு—இது கூடவா உங்களுக்கு சொல்லணும்! நானு ராஜாத்திகிட்ட நீங்க செத்து பூட்டைங்க இண்ணு சொல்லி பொன்னு கேட்டு வாங்கிவர்ரேன்!

ஆ. அடே தம்பி! நீதாண்டா கெட்டிக்காரன்! நீ என்னே குட்டு சொல்ரேன்—நானு பட்டுகிரேன்.

பி. வேணும் அண்ணு, என்னண்ணுலும் நீங்க பெரியவங்க— சீக்கிரம் பொறப்படுங்க!—நீங்க அரமணேக்கு முன்புரமா ஜல்தியாபோங்க, நானு பின்பக்கமா ராஜாத்தி இருக்கிற அந்தபுரத்துக்கு போரேன். [போகிருர்கள்.]

காட்சி முடிகிறது.

இரண்டாவது காட்சி

இடம்—*அரண்மனேயில் ராஜாவின் அறை.*

பீமராஜன் வேலேயாளுடன் பேசிக்கொண்டிருக்கிருர்.

பீ. ஏண்டா வீரபத்ரா, உங்களில் ஒரு கல்யாணம் பண்ணுவ தென்ருல் எவ்வளவு செலவு பிடிக்கும்?

வீ. கொறைஞ்ச பட்சம் 25 பொன்னுவது பிடிக்குங்க.

பீ. அப்படி யிருக்கும்போது, நமது அரண்மனே விதூஷகன், தன் கல்யாணத்திற்கு அதிகமாகக் கேட்கிருனே.

வீ. தாராளமா—சம்பிரமாபண்ரதானு, 50 பொன்னுவது பிடிக்காதுங்களா ?

பீ. அவன் நூறுபொன் வேண்டுமென்கிருனடா.

வீ. மஹாராஜா அரண்மனேயில் உத்யோகஸ்தனு யிருந்து, அந்த அந்தஸ்துக்கு தகுந்தாப் போலே செலவு பண்ணனும், இண்ணு கேட்கராப்போலே இருக்குது.

பீ. அவன் நிரம்ப செலவாளி என்று நினைக்கிறேன்.

வீ. அது வாஸ்தவம் தானுங்க—அதிகமாகத்தான் செலவழிக்கிருன், கண்ணு மண்ணு தெரியாதே.

பீ. ஆனலும், சில விஷயங்களிலே மாத்திரம் சிக்கினமாகத்தானிருக்கிருன்.

வீ. மஹாராஜா சொல்வது என்னமோ வாஸ்தவம், தன் சொந்த விஷயங்களிலே ரொம்ப சிக்கினம், ஒரு காசு செலவழிக்க மாட்டான்—ஆ! இதோ வர்ரானுங்க—அழுதுகினே !

ஆநந்தன் அழுதுக்கொண்டேவந்து பீமராஜன் காலில் விழுகிருன்.

ஆ. மஹாராஜா ! மஹாராஜா ! [அழுகிருன்.]

பீ. என்னடாப்பா ! என்ன சமாச்சாரம் ? ஏன் அழுகிருய் ?

ஆ. மஹாராஜா ! நானு என்ன சொல்லப்போரேங்க — என் தம்பி—தம்பி ! [அழுகிருன்.]

பீ. என்ன உன் தம்பிக்கு ?

ஆ. [அழுதுக் கொண்டே] பதினெட்டு வருஷமாக என் கண்ணெப்போலே வளர்த்தேனுங்க ! கூட பிறந்த தம்பி ! [தேம்பி அழுகிருன்.]

பீ. ஐயோ பாவம் !

ஆ. ரொம்பபுத்திசாலிங்க ! ரொம்ப கெட்டிக்காரன் ! என்வார்த்தைக்கு ஒரு பேச்சு குறுக்க பேசமாட்டானுங்க ! அவனெப் போலே இந்த உலகத்துலே இன்னொரு தம்பி ஆப்படாது கஷ்டங்க ! [தேம்பி அழுகிருன்.]

பீ. பாவம்! என்ன உடம்பு ?

ஆ. நானு என்னுண்ணு சொல்லப்போரேன்! மூணே மூணு நாள் காய்ச்சல்! நேத்து ராத்திரிகூட சாப்பாடு சாப்பிட்டா னுங்க! எனக்கு கண்ணாலம் ஆவும்போது அவனுக்கும் ஒரு கண்ணாலம் பண்ண யோசிச்சிகினு இருந்தேன்! என்விதி என்விதி! இப்படியாச்சி என்கதி! [தேம்பி அழுகிறான்.]

பீ. [பெரு மூச்செறிந்து] உம்! விசனத்தை அடக்கிக்கொள் இனி விசனப்பட்டென்ன பலன்? உலகம் இப்படியிருக் குது! இதற்கு நாம் என்ன செய்யலாம்? உம்—இந்த கர்மங்களுக்கெல்லாம் உங்களவர்களில் என்ன பிடிக்கும்?

ஆ. மஹாராஜா! என்கையிலே இப்போ ஒரு காசுமில்லே! [அழுகிறான்.]

பீ. அதற்காக நீ துக்கப்படவேண்டாம் வேண்டிய செலவிற் கெல்லாம் நான் தருகிறேன். நேர்ந்துவிட்டது அகஸ்மாத் தாய் — இதற்கு என்ன செய்யலாம்! ஸ்வாமியை நம்பி தைரியமாயிரு—எவ்வளவு வேண்டு முனக்கு?

ஆ. மஹாராஜா, ஒரு நூறு பொன்னுவது வேண்டும்.

பீ. நூறு பொன் எதற்காகடா? கலியாணத்திற்குதான் நூறு பொன் கேட்டாய்.

ஆ. மஹாராஜா, கலியாணத்தைவிட இதற்கு அதிகமாகப் பிடிக் கும். கலியாணத்திற்காவது 4 நாள் எங்கள் பந்துக்களுக் கெல்லாம் சாப்பாடு போடவேண்டும். இதற்கு 10 நாள் சாப்பாடு போடவேண்டும். உங்களால்தான் இந்த காரியம் முடியவேண்டும் [அழுகிறான்] எப்படியாவது நூறு பொன் தயவு பண்ணவேண்டும், மந்திரியவர்களுக்கு நூறு பொன் உடனே கொடுக்கும்படி உத்தரவாக வேண்டும்—தம்பி! தம்பி!

பீ. அப்படியே ஆகட்டும். [ஒரு ஓலையில் எழுதிக்கொடுக்கிறார்.]

ஆ. மஹாராஜா, காரியம் எல்லாம் ஆனவுடனேவந்து பாக்க ரேன் அது வரைக்கும் கொஞ்சம் ரஜா கொடுக்கணும்; நான் வருகிறேன், — தம்பி! தம்பி! [போகிறான்.]

பீ. பாவம்! தம்பிக்காக நிரம்ப துக்கப்படுகிருன்.

வீ. ஆமாங்க ரொம்ப அழுதான்.

பீ. ஆனாலும் கொஞ்சநாளைக்கு முன்னே அவன் அதனபிரசங்கியாயிருக்கிருன், நான் எதாவது சொன்னால் அதற்குமேலே பேசுகிருன், என்று சொன்னனே.

வீ. அதென்னமோ உண்மைதானுங்க; அந்தபயலே எனக்குக் கூட தெரியும்—அதனபிரசங்கி—என்நேரமும் ஏதாவது குட்ரயுக்தி பண்ணிக்கினே யிருப்பான்—அண்ணனுக்கு மேலே அவன்!

பீ. ஆனாலும் — பாவம்! என்னமோ சிறு வயதிலே பூட்டான்.

வீ. பாவம்! என்னமோ சிறுவயதுதான் — இன்னும் கலியாணம்கூட ஆகலே.

பீ. ஆமாம், கர்மாந்திரத்திற்கெல்லாம் நூறு பொன் எதற்காகடா?

வீ. ஆமாங்க, அது அவன் கேட்டது அதிகம்தான்; மஹாராஜா கொடுக்கரதெ நானு தடுக்கக்கூடாது இண்ணு சும்மா இருந்துட்டேன்.

பீ. ஆனாலும் நம்முடைய அரண்மனை விதூஷகன்பார், அவன் விட்டில் ஏதாவது காரியம் நடந்தால், அந்த அந்தஸ்திற்கு தக்கபடி அவன் செலவழிக்க வேண்டாமா?

வீ. அதுக்கு என்ன சந்தேகங்கள்! அவன் அப்புறம் சரியாக செலவழிக்காப்போனு அது நம்ப மஹாராஜாவின் சமஸ்தானத்துக்கல்லவா பேச்சாகும்—

பீ. வீரபத்ரா — நான் அங்குபோவது — முடியாது — நீயே எல்லா காரியமும் சரியாய் நடக்கிறதா என்று பார்த்து விட்டுவா.

[போகிருன்.]

வீ. உத்திரவு மஹாராஜா.

காட்சி முடிகிறது.

மூன்ருவது காட்சி

இடம்—அந்தப் புறம்.

மஹாராணி வேலைக்காரி ரஞ்சிதத்துடன் பேசிக் கொண்டிருக்கிருள்.

ம. ஏண்டி ரஞ்சிதம், உன் பெண்ணுக்கு சீக்கிரம் கலியாணம் ஆகப்போகிறது என்ருயே—எப்பொழுது கலியாணம்?

ர. உம்—உம். அந்த கலியாணம் எல்லாம் பழுத்துப் போச்சம்மா! நம்ப அரமனெ விதூஷகன் ஆநந்தனுக்குத்தான் கட்டிக் கொடுக்கலாமிண்ணு இருந்தேன்; அல்லாம் ஆவட்டும் அவட்டும் யோசிக்கிறேன் இண்ணு சொல்லிகினு இருந்து, கடைசியிலே அவுங்க அத்தெ பொண்ணெ கண்ணாலம் பண்ணிக்க போரேன் இண்ணு, நேத்து சொல்லி விட்டான் அம்மா! இந்த விதூஷகனுங்களே மாத்திரம் நம்பக்கூடாதம்மா. அவங்க பேசரது, என்ன வெளே யாட்டு, என்ன நெஜம், இண்ணு சொல்றத்துக்கில்லே அம்மா.

ம. அவன் இல்லாமற்போனல் போகிறது — அவன் தம்பி ஒருவன் இருக்கிருனே, அவனுக்காவது பிடித்து கட்டுகிறது தானே?

ர. அவன் மாத்திரம் என்ன நிச்சயம்? அவன் தம்பி, அங்கதன்! —அண்ணனுக்கு மேலே பொய் பேசுவான் அவன்—அதோ வர்ரான் பாருங்க—என்னமோ மூக்கே சிந்திகினு!

பிரம்மானந்தன் அழுதவண்ணம் வந்து மஹாராணியின் காலில் விழுகிருன்.

பி. மஹாராணி! மஹாராணி!

ம. என்னடாப்பா? என்ன சமாசாரம்?

பி. மஹாராணி! என்கதியிப்படி—இப்படி ஆவுமிண்ணு நானு கனவிலேகூட நெனேக்கலேயே! என் தலைவிதியிப்படியா இருந்தது! [அழுகிருன்.]

ம. என்ன அப்பா, சமாசாரம்? கொஞ்சம் துக்கத்தை அடக்கிக் கொண்டு சொல்.

பி. என்னுண்ணு சொல்ரது நானு! எங்கதகப்பனுரு தாயாரு இறந்த போதுகூட நானு இவ்வளவு துக்கப்படலே! அவுங்களுக்குமேலே என்னே அவ்வளவு பட்சமாபாத்து வந்தாரே! [அழுகிருன்.]

ம. யார் யார்?

பி. எங்க அண்ணுத்தே! அவரெப்போலே அண்ணுத்தே இந்த பூலோகத்திலேயே கெடைக்கப் போராங்களா இனிமேலே! எனக்கு முன்னே கொடுக்காதே வாயிலே ஒரு துரும்பு போடுவாரா? நேத்துகூட—தம்பி! ஒனக்கு கண்ணுலம் தீர்மானிக்காதே நானு கண்ணுலம் பண்ணிக்கமாட்டேன் இண்ணுரே! நம்பரெண்டுபேருக்கும் ஒண்ணு கண்ணுலம் ஆவணும் இண்ணு சொன்னுரே! என் கிராச்சாரம்! கிராச்சாரம்! [கிரம்ப அழுகிருன்.]

ம. கொஞ்சம் துக்கத்தை அடக்கிக்கொள் அப்பா! பிறக்கிறதும், இறக்கிறதும் தெய்வசங்கல்பம்-இதற்கு நாம் என்ன செய்யலாம்?—பாவம் — சின்னவயது! கலியாணத்திற்காக ஏற்பாடு செய்துக்கொண்டிருந்தான்.

ர. ஆமாம்!—எம் பொண்ணெ கண்ணுலம் பண்ணிக்கினு செத்திருந்தா?

ம. அடி ரஞ்சிதம்! இறந்து போனபின் ஒருவரையும் தூஷிக்கலாகாது, நேத்துகூட என்னேவந்து கண்டுகொண்டு போனுனே பாவம்!—என்ன உடம்பு அப்பா அவனுக்கு?

பி. உடம்புக்கென்னு—நண்ணுதாயிருந்தது, இன்னமும் இருக்குது — இருந்தாபோலே இருந்து திடீரிண்ணு சாஞ்சிவுட்டாரு! திடீரிண்ணு காத்தடிச்சி கப்பல் கவுந்துபோச்சி—மஹாராணி! மஹாராணி! [கிரம்ப அழுகிருன்.]

ம. மனதை தேற்றிக்கொள் அப்பா! பிறப்பதும் இறப்பதும் சகஜம்.

பி. ஐயோ! இறக்கிறதும் பெழைக்கிறதும் சகஜமாயிருக்ககூடாதா!

ம. அது திருவுள செயல்! கண்ணைத்துடைத்துக்கொள் அப்பா, மேல் நடக்க வேண்டிய காரியத்தைப்பார்!

பி. மேலே நடக்கவேண்டிய காரியம் என்ன இருக்கிறது! நானுகூட செத்துப் பூடலாம் இண்ணு இருக்கிறேன்! மஹாராணி எனக்கு உத்தரவு கொடுங்க. [அழுகிருன்.]

ம. சீச்சி! அப்படி சொல்லாதே! போனவர்கள் போன போதி லும் இருக்கிறவர்களாவது சுகமாய் வாழவேண்டாமா?

பி. இனிமேலே எனக்கென்ன சொகம் இருக்குது! அவரெப் போலே என்னெ பட்சமா யார் காப்பாத்த போராங்க! [அழுகிருன்.]

ம. பயப்படாதே, மஹாராஜா இல்லையா? நான் இல்லையா? இப்போ உன் செலவிற்கு ஏதாவது வேண்டுமா கேள் தரு கிறேன்.

பி. ஒரு அம்பது பொன்கொடுங்க!—ஏழைங்க எங்களுக்கு என்னத்திற்கு அதிகம்?

ம. அப்படியல்ல, நான் மந்திரிக்கு ஒரு ஓலை கொடுக்கிறேன்—நூறு பொன் கொடுக்கும்படி—நன்ருக சம்பிரமாக நடத்து காரியத்தை! மஹாராஜா அரண்மனை விதூஷகனுக்கு தக்க அந்தஸ்தின்படி.

பி. எல்லாம் உங்கதயவு—கொடுங்கள்.

[மஹாராணி ஒரு ஓலையை எழுதுகிருள்.]

ஐயோ! இப்படிப்பட்ட தயாளத்தே கேட்டு அவரு சந் தோஷப்பட கொடுத்துவைக்க இல்லையே!

[ஓலையை வாங்கிக்கொண்டு]

நானு வர்ரேன், மஹாராணி! [போகிருன்.]

ர. எனக்கென்னமோ சந்தேகமாயிருக்குது அம்மா! அவன் நல்ல பலசாலியாச்சே! திடீரிண்ணு என்னமா செத்து பூடுவான்! நான் போய்பாத்து வரட்டுமோ?

ம. சீச்சீ! இதுலேகூடவா உனக்கு சந்தேகம்? உன் பெண்ணைக் கலியாணம் பண்ணிக்கொள்ளவில்லையென்று உனக்கு

கோப மிருக்கிறாற் போலிருக்கிறது! ஒரு விதத்தில் உன் பெண்ணை அவன் கலியாணம் பண்ணிக்கொள்ளா திருந்தது நல்ல தல்லவா! கலியாணம் பண்ணிக்கொண்டிருந்தால் அவள் கதி இப்பொழுது என்னவாயிருக்கும்?

ர. நீங்க சொல்வது சரிதான்—எதுக்கும் நானு போயிபாத்து வுட்டு வர்ரேன்—உத்திரவுகொடுங்க கொஞ்சம்.

ம. போய்வா!—போய் சீக்கிரம் வந்துவிடு.

[ரஞ்சிதம் போகிறாள்.]

காட்சி முடிகிறது

நான்காவது காட்சி

இடம்—ஆநந்தன் வீட்டில் ஓர் அறை.

ஆனந்தனும், பிரம்மாநந்தனும் பேசிக்கொண்டு வருகிறார்கள்.

ஆ. ஆடே! தம்பி! இந்த பொம்மனாட்டிங்களே மாத்திரம் எப்பவும் நம்பக்கூடாதுடா! நூத்தியம்பது பொன் கொண்டு வந்தா நம்ப ரெண்டு பேருக்கும் கண்ணாலம் பண்ணிக் கொடுக்கிறேன் தன் ரெண்டு பொண்ணுகளேயும் இண்ணு சொல்லிவுட்டு, இப்போ இன்னம் 50 பொன்வோணும் இண்ணு கேக்கரா பாத்தையா, நம்ப அத்தே! இப்படி மோசம் செய்யலாமாடா நம்மே?

பி. ஆமாம்—நம்ப மாத்திரம் கருமாந்திரத்துக்கு இண்ணு சொல்லிவுட்டு ராஜாகிட்ட இருந்து கல்யாணத்துக்கு, பொன் மோசம்பண்ணி வாங்கிவரலையா! அப்படி தான் அல்லாரும்; ஆனாலும் நம்ப அத்தெ நம்ப கல்யாணத்துக்கு தானே கேக்கரா—அதுவும் சாமானுங்க வெலெ அதிகமா போச்சிண்ணு! எப்படியாவது அந்த 50 பொன்னும் தேடரவழியே பாக்கலாம் அண்ணா.

ஆ. ஆனா, அதுக்குவழி நீதான் சொல்லு.

பி. அண்ணா, நீங்க இந்த வழியாபோங்க—நானு இந்தவழியா போரேன்—ரெண்டு பேரும் ஒண்ணா சேர்ந்து போவரத்துக்

கில்லே—இன்னும் யாரையாறு ஏமாத்தி 25, 25 பொன் வாங்கினு வரலாம்—புறப்படுங்க. [புறப்படுகிறார்கள்]

ஆ. [திடீரென்று திரும்பிவந்து] அடே! தம்பி! கெட்டுதேகுடி! ராஜா ஆளு, வீரபத்திரன்—நம்ப வூட்டுக்கு வர்ராண்டா! அவன்கிட்ட நீ செத்து போயிருக்கிரே இண்ணு சொல்லியிருக்கிறேன்டா!—வாவா! இப்படி படுத்துகோ—செத்து போனுபோலே மூச்செபுடிச்சிகினு இரு—

[பிரம்மாநந்தன் அப்படியே செய்கிறுன்.]

வீரபத்திரன் வருகிறுன்.

ஆ. வா அப்பா! வீரபத்தரா! நல்ல சமயத்துக்கு வந்துசேந்தே! எனக்குயாரும் திக்கில்லே, ஒருதம்பி இருந்தா அவனும் இப்படி கைவிட்டுட்டான் என்னே! இந்த சமாசாரம் நம்ப பந்துக்களுக்கெல்லாம் சொல்லணுமே, ஆளுயார் ஆப்புடுவான் இண்ணு கவலேபட்டுகினு இருந்தே, சரியான சமயத்துக்கு வந்து சேந்தே அப்பா—நீ சமய சஞ்சீவி!

வீ. [தனக்குள்] நல்ல வேலேதான்!—அப்படியே ஆகட்டும்—என்னுண்ணு சொல்ல?

ஆ. இதுகூடவா தெரியாது — நாளெகாலே செத்துபோனவனுக்கு தகனம் இண்ணு சொல்லிவிடு—சீக்கிறம் புறப்படு.

வீ. அப்படியே. [போகிறுன்.]

பி. [எழுந்திருந்து] நல்லயுக்திபண்ணுங்க அண்ணு — இல்லாபோனு நானு எத்தனி நாழிமூச்செ புடிச்சிகினு இருக்கிறது?

வீ. [வெளியில் இருந்து] ஆநந்தா—

ஆ. அடடே! திரும்பிவர்ராண்டா — படுத்துக்கோ, படுத்துக்கோ! [பிரம்மாநந்தன் அப்படியே செய்கிறுன்.]

வீரபத்திரன் மறுபடி வருகிறுன்.

வீ. ஏண்டாப்பா, எத்தனி நாழிக்கி இண்ணு சொல்ரது?

ஆ. வெய்யில் அதிகமா ஏர்ரத்துக்குள்ளோ—அஞ்சி நாழிக்குள்ள—இண்ணு சொல்லிவிடு.

வீ. உம் — ஆநந்தா — என்னுடா என்னமோ மூச்சு வர்ராப் போலே இருக்குதே?

ஆ. உம் உம்! பயித்தியமா என்ன!—காத்து அடிச்சத்துலே துணி அப்படி ஆடுது—சீக்கிரம் போய் வா அப்பா!

வீ. இதோ. [போகிறான்.]

ஆ. மறுபடியும் திரும்பி வந்தாண்ணு என்னு செய்யரது!—இந்த கதவே மொள்ள தாப்பாளு போட்டுகிரேன் — அடே! தம்பி, நம்பரெண்டு பேரும் ஒண்ணுவெளியே போனு யாராவது பாத்து, வூட்டிலே ஒருத்தரும் இல்லே இண்ணு தெரிஞ்சா, ஏதாவது சந்தேகத்துக்கு எடமாகும்—நம்ப சூது தெரிஞ்சி பூடும்—நான் இங்கேயே இருக்கிரேன்—நீ போய் மொதல்லே—அந்த வழியா — எவ்வளவு பொன் கொண்டு வரமுடியுமோ பாரு.

பி. அப்படியே அண்ணு—நீங்க சொல்ரதும் சரிதான்.

[மற்றொருவழியாகப் போகப் பார்க்கிறான். திடீரென்று திரும்பி வந்து.]

அண்ணு! அண்ணு! ராஜாத்தி வேலேகாரி வர்ராண்ணு!—ராஜாத்தி கிட்ட நானு பேசிக்கினு இருந்தபோது—நான் சொன்னத்தெ யெல்லாம் கேட்டுகினு இருந்தா! அவ மொகத்தெ உத்துபார்த்தேன்—என்னமோ சந்தேகப்பட்ட மாதிரி அப்பவே தோணுச்சி—இப்பவந்து, உங்களே பாத்துட்டா இண்ணு, காரியம்கெட்டு பூடும்!—நீங்கபடுத்துங்க! படுத்துங்க என்மாதிரி! [அப்படியே ஆநந்தன் செய்கிறான்.]

ரஞ்சிதம் வருகிறாள்.

பி. என்னும்மா சமாசாரம்? இந்த வேளெயிலே வந்தைங்களே?

ர. வேறே ஒண்ணுமில்லே, மஹாராணி அனுப்பிச்சாங்கோ — எப்போ எடுக்கப் போராங்கண்ணு கேட்டுகினு வரசொல்லி — அரண்மனேயிலிருந்து நாலு ஆளு அனுப்பிக்கரத்துக்காவ.

பி. அவ்வளவு உபகாரம் யார் பண்ணப்போராங்க! — நாளே காலமே தானிண்ணு சொல்லுங்க—எங்கபந்துங்களெல்லாம் வரவேண்டியிருக்குது.

ர. அப்படியே சொல்கிரேன். [போகிறாள்.]

ஆ. [எழுந்திருந்து] அடே, அவ திரும்பிவரப்போரா பாத்துகினு இரு—

பி. வரமாட்டா அண்ணு, நாளெ காலமே வரைக்கும்!

[அந்த பக்கம் போய்பார்த்து]

அண்ணு! அண்ணு! நீங்க சொன்னது சரிதான் அண்ணு! அதோ திரும்பி வர்ராள்! படுத்துங்க! படுத்துங்க!

[ஆநந்தன் அப்படியே செய்கிருன்.]

ரஞ்சிதம் மறுபடியும் வருகிருள்.

ர. அப்பா, ஒண்ணுகேக்க மறந்து பூட்டேன், நாளே காலமே எத்தனி நாழிக்கு?

பி. பத்து நாழிக்கிமேலே—ஒருவேளெ எங்க பந்துக்களெல்லாம் வர்ரத்துக்கு நேரமாணு—

ர. அது நாயந்தான், நான் வர்ரேன்—ஏண்டாப்பா, இங்கே நானு வர்ரப்போ என்னமோ பேச்சி கொரல் கேட்டாப் போலே இருக்குதே?

பி. நானு யாரோடே பேசரது? இந்த பக்கத்து வூட்லே ஒரு பயித்தியம் இருக்குது, அது சும்மா பேசிகினு இருக்கும்—அந்தக் குரல் கேட்டிருக்கும்!—

ர. சரிதான்—நானு வர்ரேன். [போகிருள்.]

பி. இந்த கதவெயும் தாப்பாள் போட்டுக்கரேன்.

[அப்படியே செய்து]

அண்ணு, மீதி 50 பொன், சம்பாதிக்கரத்தே அப்புறம் பாத்துகலாம்—முன்னே இந்த ராத்திரியே நம்ப சாமான்களே சுத்திகினு, இந்த ஊரே விட்டு பூடணும்! இல்லா போணு சமாசாரம் வெளியாயி பூடும், அப்புறம் ராஜா நம்மே தண்டிச்சூடுவாரு! கண்ணாலம் எப்படியாவது ஆயிபோணு பரவாயில்லே, அப்புறம் கல்யாணம் இப்பொதானே ஆச்சி, இண்ணு மன்னிச்சுட்டாலும் உடுவாரு.

ஆ. ஆமாண்டாப்பா!—வா, நம்ப துணிமணியெல்லாம் சீக்கிரம் மூட்டை கட்டுவோம். [அப்படியே செய்கிருர்கள்.]

காட்சி முடிகிறது.

ஐந்தாம் காட்சி

இடம்—அரண்மனை தோட்டம்.

மஹாராஜாவும், மஹாராணியும், எதிர்புறமாக வந்து சந்திக்கிறார்கள்.

ம. தேவி, என்ன அவ்வளவு அவசரமாய் வருகிறாய்?

தே. உங்களை பார்க்கத்தான் வந்தேன்.

ம. நான் உன்னை பார்க்க அவசரமாய் வந்தால்—நீ என்னைப் பார்க்க அவசரமாய் வருகிறாய்! என்ன விசேஷம்?

தே. நமது அரண்மனை விதூஷகன் திடீரென்று இறந்துபோய் விட்டானாம்.

ம. யார்? நமது அரண்மனை விதூஷகனா!—ஆநந்தனா!

தே. ஆமாம்—பாவம்!

ம. உனக்கென்ன பயித்தியமா? உனக்கு யாரோ தப்பாக சொல்லியிருக்க வேண்டும்!—திடீரென்று இறந்துபோனது அவனல்ல—அனுடைய தம்பி—

தே. உம்—எனக்கா பயித்தியம்? அவன் தம்பி இப்பொழுது தான் என்னிடம் வந்து சொல்லிவிட்டுப் போனான்!—தம்பி உயிரோடுதான் இருக்கிறான். இறந்துபோனது அவன் அண்ணன்—ஆநந்தன்.

ம. நீ என்ன கனவு கினவு காண்கிறாயா என்ன! ஆநந்தன் தான் என்னிடம்வந்து சற்று முன்பாக அவன் தம்பி திடீரென்று இறந்துபோனான் என்று சொன்னானே!

தே. என்ன வித்தையாயிருக்கிறது!— அவன் தம்பி என்னிடம் வந்து இப்பொழுதுதான் அழுதுவிட்டு போனானே—அவன் அண்ணன் கர்ம செலவுக்காக மந்திரியிடம் நூறுபொன் கொடுக்கும்படி ஓலை வாங்கிக்கொண்டு போனானே!

ம. பிரம்மானந்தனா!—என்ன ஆச்சரியம்!—அவன் இறந்து போனான் என்றுசொல்லி ஆநந்தன் என்னிடம் நூறு பொன் னுக்கு ஓலை வாங்கிக்கொண்டு போனானே!—நீ என்னவோ

மதிமயங்கியிருக்கிருய், நான் சொல்வதைகேள்! மடிந்தவன் ஆனந்தன் தம்பிதான்!

தே. இதென்ன இப்படி சொல்லுகிறீர்களே! அவனை என் கண்ணுல் சற்றுமுன்பாக நான் பார்த்தேனே! மடிந்தவன் ஆநந்தன்தான்!

ம. பயித்தியகாரி! என்கண்ணுல் — ஆநந்தனைப் பார்த்துவிட்டு அவன் மடிந்தான் என்று நான் எப்படி நம்புவது! இதோ வீரபத்திரன் வருகிருன்—அவனை வேண்டுமென்ருல் — கேட்டுப்பார்.

வீரபத்திரன் வருகிருன்.

வீ. மஹாராஜா நமஸ்காரம்—ஆநந்தன் தம்பியை நாளைக்குத் தான் எடுக்க ஏற்பாடு செய்திருக்கிருன்.

தே. யாரை?

வீ. ஆநந்தன் தம்பியை—பிரம்மாநந்தனை.

தே. என்னடா அப்பா—ஆச்சரியமாயிருக்கிறது! இப்பொழுது தான்—சற்று முன்னே என்னிடம் அவன்வந்து தன் அண்ணன் இறந்து போய்விட்டதாகச் சொன்ஞனே!

வீ. இல்லேங்க! இறந்துபோனது ஆநந்தன் தம்பிதான், நான் தான் அவன் வீட்டுக்குப்போய் பிணத்தைபபார்த்துவிட்டு வருகிறேனே.

தே. எனக்கென்னமோ இன்னும் சந்தேகமாக இருக்கிறது—ஆ! இதோ நமது வேலேக்காரி ரஞ்சிதம் வருகிருள். அவள் அவர்களுடைய வீட்டிற்குப்போகத் தான் உத்திரவு கேட்டுக்கொண்டுபோனுள்!—ரஞ்சிதம்!—

ரஞ்சிதம் வருகிருள்.

தே. ரஞ்சிதம், இறந்துபோனது யார் அடி?

ர. இதென்னம்மா இப்படி கேக்கரைங்களே! இறந்துபோனது நம்ப அரண்மனே விதூஷகன்—ஆநந்தன்!

வீ. ஆநந்தனு!—பயித்தியம்.

ம. பயித்தியக்காரி!

ர. எனக்கா பயித்தியம்?—மஹாராஜா, என் பேரிலே சும்மா கோவிச்சிக்காதைங்க, நானு அவங்கவூட்டுக்கு போய்தான் இப்ப வர்ரேன்—நான் அங்கே நேராபார்த்தேன்—ஆநந்தன் தான் செத்துப்போய் விட்டார்! பாவம் அவர் தம்பி—ரொம்ப துக்கப்படுகிறுன் பாவம்!

வீ. ஏ! உனக்கென்ன கண்ணு கெட்டுப்போயிருக்குதா என்ன! நான் போய் இப்போதான் பாத்தூட்டு வர்ரேன்—அவன் தம்பி செத்துப் பூட்டானிண்ணு, ஆநந்தன் ஓயாதே அழுது கினு இருந்தானே!

ம. வீரபத்திரன் பொய் பேசமாட்டான்! தேவி, நீயும் உன் தாதியும் சொல்வது ஏதோ மனப் பிராந்தியாகும்.

தே. இதென்ன இப்படிச் சொல்கிறீர்களே!—என் கண்தான் கெட்டுப்போயிருந்தது, ரஞ்சிதம் கண் கூடவா கெட்டுப் போயிருக்கும்—அவளுக்கும் மனேப்பிராந்தியாயிருக்குமா?

ம. [கோபத்துடன்] தேவி! என்ன இன்னும் அதையே சொல் கிருயே! ஆனுல், என் கண் கெட்டுப்போய்விட்டதென் கிருயா?

தே. நாதா! நீங்கள் கோபித்துக் கொள்ளாதீர்கள் என்மீது! எனக்கென்னவோ இன்னும் சந்தேகமாகத்தானிருக்கிறது—நாம் நேரில் அவன் வீட்டுக்குப்போய்ப் பார்ப்போம், வாருங்கள்—அப்பொழுது தெரிந்து போகிறது, யார் வார்த்தை பொய், யார் வார்த்தை நிஜம் என்று.

ம. அப்படியே செய்வோம்—நான் குதிரையேரி அங்கு போகி றேன்—நீ பல்லக்கில் அங்கு உடனே வந்து சேர்—யார் இறந்தது என்று தெரிந்து விடுகிறது! வீரபத்திரா, நீயும் என்னுடன் வா— [போகிருர்.]

வீ. அப்படியே!—ஏ! ரஞ்சிதம், எல்லாம் உன்னுலே வருது இந்த கஷ்டமெல்லாம்.

ர. ஏ! நீதான் பொய் பேசரே! [வீரபத்திரன் போகிறுன்.] அம்மா, நானும் ஒங்களோடே வர்ரேன்—அவுங்க வூட்டுக்குப்போய் இந்த வீரபத்திரன் பொய் பேசனத்தே ரூபிக்கலாம் வாங்க! [போகிறுர்கள்.]

காட்சி முடிகிறது.

ஆருவது காட்சி

இடம்—ஆநந்தன் வீடு.

ஆநந்தனும், பிரம்மாநந்தனும், *மாறுவேஷம் பூண்டு மூட்டைகள் கட்டிக்கொண்டிருக்கிறுர்கள்.*

ஆ. அடே தம்பி! இந்த வேஷம் எனக்கு எப்படி யிருக்குதுடா?

பி. எனக்கே உங்களெ கண்டு பிடிக்கமுடியலே அண்ணு! அச்சம் அப்படியே, அம்பட்டனு பொறந்தது போலவே இருக்குது உங்களெ பாத்தா! அப்படியே எப்பவும் இருந்தூடுங்களே அண்ணு?

ஆ. குட்டுடா இவனே!—ஏண்டா! என்னெ அம்பட்டனுக்கிவுட பார்க்கிருயோ?—நீ சன்யாசியா இப்படியே இருந்துடேன்?

பி. இருந்தூடரேன் அண்ணு—அப்பறம் எப்படி கண்ணுலம் பண்ணிக்கிறது இண்ணு பாக்கரேன்.

ஆ. முன்னே, இந்த ஊரே விட்டு வெளியே போர வழியெ பார்க்கலாம்—அப்புறம் கண்ணுலத்தேபத்தி யோசிக்கலாம்—நம்பரெண்டுபேரும் ஒண்ணுபோனு ஏதாவது சந்தேகத்துக்கு எடமாகும்—நம்ப ஒவ்வொருத்தரும் ஒருவழியா போகலாம் வூட்டேவுட்டு; அப்புறம் ஊருக்கு வெளியிலே இருக்கிற பனேயாத்தா கோவிலண்டே சேருவோம்—நீ அப்படி சுத்திகினுவா—நானு இப்படி சுத்திக்கினு வர்ரேன்—நானு முன்னே புறப்படரேன்— [புறப்படுகிறுன்.] [வெளியில் சத்தம்] அதென்னடா சத்தம்?— [வெளியில் பார்த்து]

அடடே! கெட்டுதெடாகுடி! மஹாராஜா வர்ராருடா, குதிரைமேலே! நம்பவூட்டுக்கு! என்னமோ சந்தேகப்பட ராரோ என்னமோ!—வாடா! வாடா சீக்கிரம்! இந்த வேஷத்தை எடுத்தூட்டு, முன்னெபோலே செத்தாப் போலே படுத்துக்கோ!

பி. என்ணு அண்ணு, பெரியகஷ்டமாயிருக்குது! எத்தனிதரம் செத்து போரதண்ணு! — வேஷத்தெ கலேச்சூடரேன் அண்ணு! இந்த சன்யாசி உடுப்பெ இங்கே ராஜா பாத்தா ருண்ணு, என்னமாணு சந்தேகப்படுவாரு, இத்தெதெருவுலே குப்பெ தொட்டியிலே போட்டுடரேன்.

[வெளியே போய், உடனே ஓடி வருகிறுன்.]

அண்ணு அண்ணு! நம்பொ யோசனே எல்லாம் பாழாப் போச்சி அண்ணு!— ராஜாத்தி இந்த பக்கம், பல்லக்கிலே வந்து எரங்கராங்க! அந்த வேலெக்காரி என்னமாணு கோள் சொன்ளோ என்னமோ!—நீங்க செத்து பூட்டைங்க இண்ணு மஹாராணி கிட்ட சொல்லி விட்டேனே! – நீங் களும் செத்தாப்போலே படுத்துங்க — உங்க வேஷத்தெ எடுத்துவுட்டு! சீக்கிரம்!

ஆ என்னடா எழுவாபோச்சி! ஒரு கண்ணுலம் பண்ணிக்கிரத் துக்காக, எத்தனிதரண்டா செத்துபூடரது?

[அப்படியே செய்கிறுன்.]

அடே! தம்பி! மூச்சிகிச்சி உடாதே!—கப்சப்!

பி. அண்ணு! நீங்க கண்ணெ கிண்ணெ தெறக்கப் போரைங்க —பத்திரம்!

ஆ. குட்டுடா இவனெ!—படுத்துக்கடா!

பி. நீங்க படுத்துங்க அண்ணு! [இருவரும் படுத்துக்கொண்டு போர்த் துக் கொள்ளுகிறுர்கள்.]

பீமராஜன் வீரபத்திரனுடனும், மஹாராணி ரஞ்சிதத்துடனும், இரண்டு பக்கங்களிலிருந்து வருகிறுர்கள்.

பீ. என்ன ஆச்சரியம்!—இரண்டு பெயரும்!—

ம. இறந்து போய் விட்டார்களா என்ன!

பீ. அது எப்படி நேர்ந்திருக்க கூடும்?— தன் தம்பி இறந்து விட்டதாக என்னிடம் வந்து சொன்னானே, ஆநந்தன்!

ம. தன் அண்ணன் காலமாய் விட்டதாக, பிரம்மானந்தன் சற்று முன்பாகக் கூறினானே என்னிடம்!

வீ. இரண்டுபேரும் ஒரேசமயத்துலே செத்துப்போயிருந்தா—

பீ. நீ ரொம்ப புத்திசாலி! எவனாவது ஒருவன் தானே முதலில் இறந்து போயிருக்கக் கூடும்? ஒரு வேளை முன்பு தம்பி செத்துப் போயிருப்பான், பிறகு அண்ணன் அந்த வருத்தம் தாளமுடியாது இறந்து போனானோ என்னமோ?

ம. நாதா, அப்படியிராது, அண்ணன் தான் முதலில் இறந்து போயிருக்க வேண்டும், தம்பி என்னிடம் கூறினபடி; அப்புறம் அண்ணன் போய் விட்டானே என்று துக்கத்தால் மாண்டு போனானோ என்னமோ?

பீ. இந்த சந்தேகத்தை யார் நிவர்த்தி செய்வது? எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது—அடெ வீரபத்திரா! நம்முடைய அரண்மனை வெட்டியானிடம் நடந்ததைச் சொல்லி, பட்டணமெல்லாம் பறையறையச் சொல்—இவர்களிருவர்களில் யார் முதலில் காலமாய் விட்டது என்பதைக் கண்டு பிடித்துச் சொல்பவர்களுக்கு நான் நூறு பொன் கொடுப்பதாக!

ஆ. பி. [ஒரே தடவையில் இருவரும் எழுந்திருக்கிறார்கள்.] ஆ! ஆ!

ஆ. நான் சொல்ரேன்—என் தம்பிதான் மொதல்லே செத்து பூட்டான் மஹாராஜா!

பி. நான் சொல்ரேன்! என் அண்ணன் தான் மொதல்லே செத்து பூட்டார் மஹாராஜா! [எல்லோரும் நகைக்கிறார்கள்]

ஆ. நூறு பொன் எனக்குதான் கொடுக்கவேண்டும் மஹாராஜா!

பி. நூறுபொன் எனக்குதான் கொடுக்கணும் மஹாராஜா!

பீ. இதென்ன விகடமடா திருட்டுபயல்களா! உங்கள் இருவரையும் வாஸ்தவத்தில் கொன்று விடும்படி உத்திரவு செய்கிறேன் மந்திரிக்கு!

ஆ. மஹாராஜா! மஹாராஜா! அப்படி உத்திரவு ஆவக்கூடாது!

பி. மஹாராஜா! ஒணும்மிண்ணு, எங்களுக்கு கண்ணாலம் ஆன பிறகு கொண்ணாடச் சொல்லுங்கள்.

பீ. ஏண்டா! உங்களுக்கு கல்யாணம் ஆவதற்காக இறந்தது போல் பாசாங்குசெய்யச் சொன்னார்களோ!

பி. இல்லே மஹாராஜா! நீங்க கோவிச்சிக்ககூடாது தயவு பண்ணி!—நடந்த சமாசாரத்தெ நானு நெஜம்மா சொல்லி வுடரேன்—எங்க அத்தைக்கு இரண்டு பொண்ணுங்க இருக்கிறாங்க—அவங்களே எங்களுக்கு கண்ணாலம் பண்ணிக் கொடுக்க கேட்டா, ஒவ்வொருத்திக்கும் நூறு பொன் கொடுத்தா கண்ணாலம்பண்ணி கொடுக்கிரேனிண்ணாங்க—நீங்க என்னமோ இளவரசருக்கு கண்ணாலம் ஆவும்போது பாத்துகலாம் இண்ணேங்களாம்—அது வரைக்கும் எப்படி காத்துகினு இருக்கிறது—சீக்கிரம் கண்ணாலம் ஆவணும்—இண்ணு—

பீ. [சிரித்துக்கொண்டே] கருமாந்திரத்திற்காகப் பொன் கேட்டீர்களோ!

ஆ. ஆம் மஹாராஜா! ஆயிரம் பொய் பேசியானாலும் ஒரு கண்ணாலம் பண்ணலாம் இண்ணு பெரியவங்க சொல்லியிருக்கிராங்க! நாங்க ஒவ்வொரு கண்ணாலத்துக்காக ஒவ்வொரு பொய்தானே பேசினோம்!

[எல்லோரும் நகைக்கிறார்கள்.]

காட்சி முடிகிறது.

நாடகம் முற்றியது.

ஆஸ்தானபுரம் நாடக சபை

நாடக பாத்திரங்கள்

தேசராஜன்	ஆஸ்தானபுர அரசன்
ஹேமலதா	தேசராஜன் மனைவி
லட்சுமி சந்திரன்	ஹம்சிகையின் காதலன்
ஹம்சிகா	லட்சுமி சந்திரன் காதலி
தாமத்ரையன்	ஹைரம்பி காதலன்
ஹைரம்பி	தாமத்ரையன் காதலி
பிலந்தரன்	ஆஸ்தானபுரம் தர்பார் பக்ஷி
கோணசு சிசுநாகன் பாதம் நாய்க்கன் புளுவன் தம்பட்டன் தர்மலிங்கன்	ஆஸ்தானபுரம் நாடக சபை நடிகர்கள்.
குட்டி சைத்தான்	ஓர் சிறு யட்சினி

கதை நிகழிடம் — ஆஸ்தானபுரத்திலும், அடுத்த காட்டிலும்.

ஆஸ்தானபுரம் நாடக சபை

முதல் அங்கம்

முதற் காட்சி

இடம்—கோணசு வீட்டில் ஓர் அறை.

கோணசு, சிசுநாகன், பாதம் நாய்க்கன், புளுவன், தம்பட்டன், தர்மலிங்கன் வருகிறார்கள்.

கோ. நம்போ ஜமெயெல்லாம் வந்து சேர்ந்திருக்குதா ?

பா. அடே, நீ அல்லாரையும் மொத்தமா கூப்பிடாது நல்லது —ஒவ்வொருத்தரா—அந்த பொஸ்தகத்துலே எய்தி யிருக்கிர பிரகாரம்.

கோ. நம்ப ராசா வூட்லெ கண்ணலம் ஆவப்போவுதே—அண்ணைக்கி ராத்திரிக்கி, நம்ப கூத்தாடணும் இண்ணு—நம்ப ஊரு ஆஸ்தானபுரம்—முழுதலும் தேடி—நம்பதான் சரியானவங்க, இண்ணு நேமிச்சி இருக்கராங்க—நம்ப பேரெல்லாம் இதுலே எய்தி யிருக்குது— [சுருளை எடுக்கிறான்.]

பா. என்னடா, எய்வெடுத்தவனுயிருக்கரான்! வெவகாரத்தெ ஒயுங்கா நடத்தவேணுமா ?—மொதல்லே என்ன கூத்து இண்ணு தெரிவி—அப்பறம் நாடக பாத்தரங்களையெல்லாம் அறிவி—கடைசியிலெ வெவகாரத்தெ தருவி!

கோ. அது நியாயம்தான்—நம்போ ஆடப்போர கூத்து—ரொம்ப சோககரமான கல்யாணம்—பெருமீசனுக்கும் திரிசூலிக்கும்—அப்பறம் அவங்கரெண்டுபேரும் ரொம்ப வேடிக்கையா செத்து பூடராங்க!

பா. நல்ல கதையாச்சுதே அது!—நான் கேட்டிருக்கரேன்—கடைசியிலே பலே ஜோக்காயிருக்கும்! அடே கோணசுபத்தா,

அந்த பட்டியிலெ யிருக்கர பேரை யெல்லாம் ஒவ்வொரு வேஷமா படிச்சிகினுவா—அடே பசங்களா, நீங்கள்ளாம் வரிசையா நில்லுங்க.

கோ. நானு ஒருத்தன் ஒருத்தம் பேரா கூப்பிட்டுகினு வர்ரேன் — ஆஜர் சொல்லிக்கினு வாங்க — கைக்களவன் பாதம் நாய்க்கன்.

பா. ஆஜெர்!—எனக்கு என்ன வேஷம் இண்ணு சொல்லிவுட்டு —அப்பறம் போ.

கோ. பாதம் நாய்க்கா — உனக்கு பெருமீசன் வேஷம் கொடுத் திருக்குது.

பா. அவன் யார்டா பெருமீசன்? அவன் என்ன ஷோக் பேர் வழியா, தடபுடல் ஆசாமியா?

கோ. பலே ஷோக் பேர்வழி! ஒரு பொம்பளே பேர்லே ஆசெ பட்டு, தன்னையே கொண்ணுகினு செத்து பூடரான்!

பா. ஆ—அந்த வேஷத்தெ சரியா ஆடாது இண்ணு ரொம்ப அழணுமே!—நானு அந்த வேஷங் கட்டி அழரத்தே பாத் தாங்கண்ணு—அப்படியெ நாடகத்தே பாக்கரவுங்கல்லாம் அழுது அழுது டிமான்ஜி பூடமாட்டாங்களா? கண்லெ இருந்து வர்ர ஜலமெல்லாம் வெள்ளமா போகாதா? கண்லெ கொஞ்சம் வெங்காயத்தெ தீட்டிவுடணும்!— ஒண்ணு தீர்ந்தது—அப்புறம்—ஆனாலும் என் வழியெல்லாம் தட புடல் ஆசாமிதான்! ஒரு பீமசேனன் வேஷம் கட்ட னேண்ணு, புலி கிலி, பூனெ கீனே!—எது வந்தாலும் கிழிச்சி எறிஞ்சூட மாட்டனா!

மலையோடு மலையைத் தாக்கி!
மண்ணோடு மண்ணைப் பொடியாக்கி!
வெண்ணெயை வெட்டி, வில்லாக வளைத்து
சூரியன் ரதத்தைச் சுழலும்படிச் செய்து!
அண்டரண்டா பயிரண்டங்களையும்
அனைத்தையும் முண்டமாக்குவேன்!—

எப்டி?—பலே ஜோக்காயில்லே!—இது பீமசேனன் வேஷம்

—வீரரசம்!—சிங்காரரசம் சோக கரமாயிருக்கணும் — உம் —அப்பறம், மத்தவங்க வேஷத்தெ யெல்லாம் சொல்லிகினு போ.

கோ. பிராந்திப் புளுவன்—துத்தி.

பு. ஆஜெர், கோணுசுபத்தர்.

கோ. புளுவா, நீ திரிசூலியெ எடுத்துக்கணும்.

பு. திரிசூலி யாரது? ரெண்டாவது ராஜபார்ட்டா?

கோ. அயன் இஸ்திரிபார்ட்—அயன் ராஜபார்ட் பொஞ்சாதி.

பு. அடடெ! தூ! எனக்கு பொம்மனட்டி வேஷம் வாணும்பா —எனக்கு மீசெவருதப்பா!

கோ. அது பரவாயில்லெடாப்பா. அத்தெ முக்காடு போட்டுகினு மறைச்சிகனுபோச்சி! கொரலே மாத்திரம்—பொம்மனட்டி கொரல்மாதிரி மாத்திகணும்.

பா. அப்படி மூஞ்செ மறைச்சிகராதானு, அந்த வேஷம்கூடநானு எடுத்துகரேன்! தடபுடலா சின்ன கொரல்லே பேசுவனே! —திரிசூலி! திரிசூலி! ஹா! என் கண்ணுளா பெருமீசையே! —உன் கண்ணுட்டி திரிசூலி! — பெண்ணே! கண்ணே! மண்ணே! மணியே!

கோ. அதெல்லாம் ஒதவாதப்பா! நீ பெருமீசன் வேஷந்தான் எடுத்துக்கணும்.—புளுவா நீ திரிசூலி.

பா. சரி—அப்புறம்போ.

கோ. ரம்பெதர்மலிங்கம்—தையக்காரன்.

தர். இதோ ஆஜெர், கோணுசுபத்தரே.

கோ. ரம்பெதர்மலிங்கம், நீ திரிசூலியின் தாயாரை எடுத்துக்கணும்—தமாஷ் தம்பட்டன்—கலாய் பூசரவன்.

தம். ஆஜெர் —கோணுஸ்பத்தரே.

கோ. நீ வந்து பெருமீசன் தகப்பன்—நானு திரிசூலியின் தகப்பன் —தகரவேலே சிசுநாகன்—நீ சிங்கவேஷம்—அவ்வளவு தான் —பாத்திரங்களெல்லாம் சரியாபோச்சி இண்ணு நெனைக்கரேன்.

சி. சிங்கம் பேசவேண்டிய பேச்செல்லாம் நீ எழுதிஉட்டையாப்பா? எழுதியாஞ, உன்னெ இப்பவே கேட்டுக்கரெம்பா, அத்தெ இப்பவே குடுத்தூடு எங்கிட்ட, எனக்கு குருட்டுப் பாடம்பண்ண சீக்கிரம்வராது.

கோ. நீ குருட்டுபாடம் பண்ணுமலே அத்தெ சொல்லிவுடலாம் —ஏனிண்ணு, நீ பேசவேண்டியதெல்லாம், சும்மா கர்ஜிக்க வேண்டியதுதான்.

பா. அப்படியாஞ அந்த சிங்க வேஷம் கூட நான் கட்டரனெ! நண்ணு கர்ஜிப்பேனே நானு! அத்தெ கேக்கரவங்கல்லாம் சும்மா டிமான்ஜி பூடமாட்டாங்களா! நானு சும்மா கர்ஜிச் சேணிண்ணு — சும்மா! மகாராஜா மறுபடியும் இவன் கர்ஜிக்கட்டும் மறுபடியும் இவன் கர்ஜிக்கட்டும்! — இண்ணு சொல்லமாட்டாரா!

கோ. அப்படி நீ கர்ஜிச்செ இண்ணு, மகாராணி அந்தப்புற இஸ்திரிங்கல்லாம் பயந்துபூட மாட்டாங்களா!—அப்பறம் நம்பளுக்கெல்லாம் கழுத்துக்கு கவுறுதான்!

மற்றவர்கள். அப்பொ நம்பல்லாம் சாவ வேண்டியதுதான்!

பா. என்னடாபசங்களா!—ராஜ இஸ்திரிங்களெயெல்லாம் பயப்பட வைச்சா நம்ப ஜமெயெல்லாம் தூக்கிலே போடுவாங்க இண்ணு எனக்கு தெரியாதா என்ஞ! என்கொரலெ கம்பீரப் படுத்திகினு, மாடப் பொறுவெபோல குடு குடு குடு குடு இண்ணு கூவமாட்டனு! சும்மா குயில்மாதிரி கூவமாட்டனு!

கோ. அதெல்லாம் ஒதவாது, நீ பெருமீசன் வேஷம்தான் போடணும். பெருமீசன் அயன் ராஜபார்ட்டு, ரொம்ப அழகாயிருக்கணும், மம்மதனெபோலெ இருக்கணும், அத்தொட்டு அந்த வேஷம் நீ தான் எடுத்துகணும்.

பா. சரி, அப்படியே ஆவட்டும். அந்த வேஷத்துக்கு நானு என்ஞ டோபா போட்டுகணும்?

கோ. ஏன்? உனக்கு எந்த டோபா போட்டுக்க இஷ்டமோ அத்தெ போட்டுகோ.

பா. சுருள் சுருளாயிருக்குதே, அந்த டோபா போட்டுகலாமா? நீட்டா யிருக்கர டோபா போட்டுகலாமா? சும்மா அப்படி பாதி கத்திரிச்ச டோபா போட்டுகலாமா? இல்லாப்போனு, கரடியாட்டம் இருக்குதே அக்தெ போட்டுகலாமா? இல்லாப்போனு, நெருக்கமா வெட்டி யிருக்குதே அத்தெ போட்டுகலாமா?

கோ. நெருக்கமா வெட்டியிருக்கர டோபா போட்டுகனெ இண்ணு, ஜெயில்லே இருந்து இப்பதான் உன்னெ உட்டுட் டாங்க இண்ணு நெனச்சிகிவாங்க, பாக்கரவங்கல்லாம்!— அது மாத்திரம் வாணும். இந்தாங்கடாப்பா—உங்க பாகங் கல்லாம்— உங்களே கேட்டுக்கரேன், வேண்டிகரேன் — தயவு பண்ணி நாளெராத்திரிக்குள்ளோ குருட்டுட்பாடப் பண்ணிகினு, அரமனெக்கி பின்னாலே ஒரு காடு மாதிரி இருக்குதே—பட்டணத்துக்கு ஒரு கல்லுக்கு அப்பறம்— அங்கே வந்து சேருங்கோ—நெலா வெளிச்சத்துலே— அங்கே ஒத்திகே நடத்துவோம். பட்டணத்துக்குள்ளே, ஒத்திகே நடத்தினு, கும்பல் கூடிப்பூடும்—நம்ப சமாசாரம் எல்லாம் தெரிஞ்சி பூடும். இதுக்குள்ள நம்ப கூத்துக்கு வேண்டிய சாமான்களுக்கெல்லாம், ஒரு ஜாப்தா போட ரேன். வந்து சேர்ரத்துக்கு மறந்து பூடாதைங்க பத்திரண் டாப்பா.

பா. அப்படியே சேர்ரோம்—அங்கே நம்போ ரவசியமாயும் தைரியமாயும் ஒத்திகெ பண்ணலாம்—அல்லாரும் கொஞ் சம் கஷ்டம் எடுத்துகோங்கடாப்பா — எல்லாம் சும்மா ஜோக்காயிருக்கணும்—போய்வாங்க!

கோ. அங்கே பெரிய அரசமரம் இருக்குதெ அங்கெ சந்திப் போம்.

பா. அப்படியே—சரியாயிருந்தா சரிகெ தலெகுட்டெ! இல்லா போனு தலெமொட்டெ! [போகிறார்கள்.]

காட்சி முடிகிறது.

இரண்டாம் காட்சி

இடம்—வனப்பிரதேசம். காலம்—இரவு.

கோணுசு பத்தன், சிசுநாகன், பாதம் நாய்க்கன், புளுவன், தம்பட்டன், தர்மலிங்கன் வருகிறார்கள்.

பா. எல்லாரும் வந்தூட்டமாடா ?

கோ. சரிசரி !—இது நம்ப ஒத்திகெ பண்ண சரியான இடம். பச்சிண்ணு இருக்குதே, இந்த இஸ்தலம் தான் நம்ப நாடவ மேடே — இந்த மூங்கில் பொதார், நப்ப வேஷம் போட்டு கிற இடம்—ராஜா எதிர்லே எப்படி ஆடுவோமோ அப்படியே ஆடிப்பாக்கலாம்.

பா. [கனைத்துக்கொண்டு] கோணுசு பத்தா.

கோ. என்னு சொல்ரே அப்பா, பாதம் நாய்க்கா ?

பா. இந்த பெருமீசன் திரிசூலி நாடகத்துலே செல வெவகாரங்க இருக்குது, அது ஓரத்தருக்கும் புடிக்காது — மொதல்லெ, இந்த பெருமீசன் கத்தியெ இழுக்கணும் தன்னெயே கொண்ணுகிறத்துக்கு, இத்தெ பாத்து ராஜ இஸ்திரிங்கல்லா பொறுக்க மாட்டாங்க—இதுக்கு என்னு ஜவாப் சொல்ரே ?

தம். எப்பாடி ! ரொம்ப பயம் ! அது கூடவே கூடாது.

தர். மத்ததெல்லாம் ஆடி முடிஞ்ச உடனே, அந்த கொண்ணு கிரத்தெ மாத்திரம் உட்டுடணும்.

பா. அப்படி வேண்டவே வேண்டாம்—எல்லாத்தையும் சரிப் படுத்த நானு ஒரு யுக்தி—யோசனெ, பண்ணியிருக்கிறேன். எனக்கு ஒரு முன்ஓரெ எழுதிக்கொடுத்தூடு—அந்த முன் ஓரெ என்னு சொல்லணும் இண்ணு—நாங்க கத்திங்களாலெ ஒரு கெடுதியும் செய்யாதில்லே — பெருமீசன் வாஸ்தவமா கொல்லப்படலெ—இத்தெபத்தி அவுங்களுக்கு சந்தேகமே இல்ல! திருக்கரத்துக்கு—பெருமீசனாகிய நான் பெருமீசன் அல்ல—தரி நெய்யர, பாதம் நாய்க்கன்—இண்ணு சொல்லிடணும். அதனாலே அவுங்க பயமெல்லாம் பறந்து பூடும்.

கோ. சரி, அப்படியே ஒரு முன்ஓரெ எழுதரது—இத்தெ ஒரு தருவா எழுதி வுடரது.

பா. வேணும் வேணும்—இத்தெ ஒரு விருத்தமா எழிதுபுடு.

தம். ஆமாம்—அதெல்லாம் இருக்கட்டும்—இந்த சிங்கத்தெ பாத்து பொம்மனுட்டிங்கல்லாம் பயப்பட மாட்டாங்களா?

தா். அதுக்கு சந்தேகமில்லெ—எனக்கென்னமோ பயமாயிருக்குது—நான் சொல்ரனே பாருங்க.

பா. ஆசாமிங்களே! இந்த வெவகாரத்தெ இப்பொ நண்ணு ஓசனே பண்ணணும்—அப்பப்பா! பொம்மனுட்டிங்க நடுவுலே ஒரு சிங்கத்தெ கொண்டாரது இண்ணு, அது சாதாரணமான வெவகாரம் அல்லா, ரொம்ப பயங்கரமான வெவகாரம்! இந்த ஒலகத்துலே இருக்கர பயங்கரமான பச்சிஜாதிங்கள்ளெ யெல்லாம், உயிரோடிருக்கர சிங்கந் தான் ரொம்ப பயங்கரமானது! இத்தெ பத்தி நாம்ப ரொம்ப ஓசனெ பண்ணணும்.

தம். அத்தொட்டு, இன்னொரு முன்ஓரெ எழுதி, இவன் சிங்கம் அல்லா இண்ணு சொல்லிவுடணும்.

பா. தூ தூ தூ! அப்படி வேணும்பா—அவன் இன்னுண்ணு அவன் பேரெ சொல்லிடணும்—சிங்கத்துங் கழுத்துங் கீழே அவன் மூஞ்சி பாதி தெரியணும். அவன் அந்த வழியா — இந்தப் பிரகாரம் தெரிவிக்கணும் — "அம்மா, பாருங்களேன்! — ராஜ இஸ்திரியிங்களே! நீங்க பயப்படக் கூடாது--நடுங்கக் கூடாது, இண்ணு ஒங்களே கேட்டுகரேன் — வேண்டிக்கரேன்—நானு வாஸ்தவமான சிங்கமா இங்கெ வந்திருக்கரேண்ணு நீங்க நெனச்சா—என் உசிரே கொடுக்கரேன்—உங்களுக்கு பதிலா—எம்பேர்லெ கொஞ்சம் தயவு பண்ணுங்க—நானு சிங்கம் கிங்கம் ஒண்ணுமல்லா—மத்தவங்களே போலே நானும் ஒரு மனுசன்தான்!" இண்ணு —அப்பறம் தான் இன்னுன் இண்ணு தம்பேரே சொல்லணும்—அதாவது 'நானு தவலெ சொம்பு செப்பனிடர சிசுநாகன இண்ணு சொல்லிடட்டும்.

கோ. சரி—அப்படியே செய்யரது—ஆனாலும் ரெண்டு கஷ்டமான சமாசாரங்க இருக்குது. நம்ப ஆடரமண்டபத்துக்குள்ளே நெலாவெ கொண்டுவரணும் — ஏனிண்ணு பெருமீசனும் திரிசூலியும் நெலவு வெளிச்சத்துலேதான் சந்திக்கராங்க.

தம். நம்ப நாடவம் ஆடர நண்ணு நெலா இருக்குதா ?

பா. பஞ்சாங்கம்! பஞ்சாங்கம்!—பாருங்க பஞ்சாங்கம் எடுத்து! அதுலே பாருங்க நெலா இருக்குதா இண்ணு — பாருங்க அதுலே நெலாவே.

கோ. [பார்த்து] ஆமாம்—அண்ணைக்கி நெலா இருக்குது.

பா. சரியாபோச்சி—அந்த மண்டபத்துலே நம்ப ஆடர எடத்துக்கு மேலே ஒரு பெரிய ஜன்னலே தெறந்துவைச்சூட்டா போச்சி—அந்த வழியா நெலா வந்தூடுது நம்ப ஆடர எடத்துக்கு!

கோ. அப்படியாவது செய்யலாம்— இல்லாப்போனா—ஒருத்தன், ஒரு கையிலே ஒரு மொசனும், இன்னொருகையிலே ஒரு வெளக்கையும் எடுத்துகுனு வந்து—இவன் நெலாவுக்கு பதிலா வந்தான்—இவன்தான் சந்திரன்! இண்ணு சொல்லிடணும்.—அப்பறம்—இன்னொண்ணு கஷ்டம் இருக்குது— அந்த பெரிய மண்டபத்திலே ஒரு மதில் செவுரு இருக்கணும்—ஏனிண்ணா—பெருமீசனும் திரிசூலியும்—நம்ப கதெ பிரகாரம்—அந்த மதில் செவுர்லே இருக்கர ஓட்டெ வழியா தான் பேசராங்க.

தம். செவுத்தே நம்போ கொண்டார முடியாது—முடியவே முடியாது - நீ என்னப்பா சொல்லரே பாதம் நாயக்கரே ?

பா. நம்பள்ளேயாராவது ஒருத்தன் குட்டிச்செவுருமா திரிவேஷம் போட்டுகணும் — அவ்வளவுதான்! அவன் கையிலே ஒரு செங்கல்லு, களிமண்ணு, சுண்ணும்பு, என்னமானா வைச்சி கினு இருந்தா, அவனெ எல்லாரும் குட்டிச்செவுரு இண்ணு நெனைச்சிகிவாங்க. அவன் ரெண்டு வெரலுங்களே இப்படி வைச்சிகினா—அந்த துவாரத்தும் வழியா பெருமீசனும் திரு சூலியும் ரகசியம் பேசராங்க.

கோ. அப்படியானு—அல்லாம் சரியாபோச்சி—வாங்க எல்லாரும் உக்காருங்க-எல்லா டவனுங்களும் ஒக்காந்து ஒத்திகெ ஆரம்பிங்க—பெருமீசா—நீ ஆரம்பி—நீ பேசி ஆனவுடனே அந்த மூங்கல் பொதுருக்குள்ளே பூடு. ஒவ்வொருத்தரும் பேச வேண்டியது முடிஞ்சவுடனே — அதுக்குள்ள பூடனும். —அவன் அவன் பாடம்பிரகாரம்.

பின்புறமாக **குட்டிசைத்தான்** வருகிறது.

கு. [ஒரு புறமாக] நம்முடைய அரசி படுத்துக்கொண்டு தூங்குகிற இடத்தருகில் யார் இந்த தடியாம்பிள்ளைகள் எல்லாம்! என்ன செய்கிறார்கள் இவர்களெல்லாம்?—ஓகோ! நாடகமா ஆடப்போகிறார்கள்?—நான் இங்கே மறைந்திருந்து பார்க்கிறேன், சமயம்வாய்த்தால் நானும் ஒரு நாடகபாத்திரமாகச் சேர்ந்து கொள்ளுகிறேன்

கோ. ஆரம்பி சீக்கிரம், பெருமீசா—திருசூலி, நீ எதிரில்நில்லு.

பா. திரிசூலி! அழகிய புஷ்பங்களைத் தோற்கடிக்கும்—உன்வாயினின்றும் வரும் நாறுமணமானது—

கோ. நறுமணமானது—நறுமணமானது!

பா. நறு—மானமானது—என்மனதை அப்படியே மயங்கச் செய்கிறது—ஆயினும் பொறு!—அதோ ஒரு சப்தம் கேட்கிறது. இங்குதான் சற்று இரு, நான்போய் அது இன்னதென்று பார்த்து வந்து உனக்குத் தெரிவிக்கிறேன்.
[போகிறான்.]

கு. [ஒரு புறமாக] இந்த மாதிரி பெருமீசன் வேஷம் நான் இதுவரையில் பார்த்ததேயில்லை. [மறைகிறது.]

பு. நானு இப்பொ பேசணுமா?

கோ. ஆமாம்—நீ பேசணும். அவன் ஏதோ ஒரு சத்தத்தெ கேட்டு, அது இன்னதுண்ணு தெரிஞ்சிகினுவர போயிருக்கரான், தெரியலெ?

பு. [பாடுகிறுன்.]

தேடரும் ஜோதி தெருவெலாம் பிரகாசிக்கும்
காடரும் கவினுடை நாடெலாம் புகழ்ந்திடும்
ஓடரும் துரகம் போன்ற உத்தம வீரனே
ஈடு ஜொடே யில்லாத என் தன் புராண நாத்தா!

உம்மை நான் நாய்க்கர் கோயிலில் சந்திக்கிறேன்.

கோ. நாயனர் கோயிலில்—நாய்க்கர் கோயிலல்லாடாப்பா!—அதிருக்கட்டும், இன்னெரு வரியேகூட இப்பவே சொல்லூட்டையெ என்ன? அத்தெ பெருமீசன் திரும்பிவந்து கேட்டபிப்பாடு சொல்லணும்—எல்லாத்தையும் ஒண்ணு சேத்து ஒப்பிச்சூடரைமெ என்ன?—வாடாப்பா பெருமீசா! நீ வரவேண்டிய வார்த்தெ சொல்லியாச்சீ!—வா வா—கடைசி ரெண்டடி இன்னெருதரம் சொல்லப்பா நீ.

பு. [பாடுகிறுன்.]

"ஓடரும் துரகம் போன்ற உத்தம வீரனே
ஈடு ஜொடே யில்லாத என் தன் புராணநாத்தா!

இன்னம் வரலேயே-ஒருபாட்டு பாடரேன் ஆஹ—[பாடுகிறுன்]
"உன் மூஞ்சியைக்காண இருகண்கள் போதாதே".

பாதம் நாய்க்கன் கழுதைத் தலையுடன் வருகிறுன்.

பா. இதோ வந்து விட்டேன்! இஷ்டப்படியே புராண நாயக்கி!

கோ. இதென்னடா இது!—ஐஐயோ! பிசாசு! பிசாசு!—நம்பல்லாம் ஓடிப்பூடலாம் வாங்க! வாங்கடாப்பா!

[பாதம் நாய்க்கன் தவிர மற்றவர்கள் ஓடிப் போகின்றனர்.]

கு. நான் இவர்களைத் தொடர்கிறேன்—

ஓட்டக் குதிரை போலும் வேட்டை நாய் போலும்
காட்டுப் பன்றி போலும் தலையிலாக் கரடிபோலும்
கனைத்தும் கத்தியும்
உளைத்தும் உறுமியும்
கல்லிலும் முள்ளிலும்
புதரிலும் பொழிலிலும்
விரட்டி விரட்டி புறட்டித் துறத்துகிறேன்!

[மறைகிறது.]

பா. ஏன் இவங்கெல்லாம் ஓடிப்போனுங்க? என்னெ பயப்படத் தரத்துக்காவ இவங்கெல்லாம் என்னமோ குட்ரயுக்தி பண்ணியிருக்காங்க!

தம்பட்டன் மெல்ல திரும்பி வருகிறுன்.

தம். ஐயோ! பாதம் நாய்க்கரே!—என்ஞ இது! இப்படி மாறி பூட்டைங்களே!— இதென்ஞ இது! உங்க தலெமேலெ?

பா. என் தலெமேலெ—என் தலெ இருக்குது!—உன் கழுத்து மேலெ இருக்கா கழுதெ மூஞ்சி அல்லா!

[தம்பட்டன் ஓடிப் போகிறுன்.]

கோணுசு மெல்ல திரும்பி வருகிறுன்.

கோ. ஐயோ! பாதம் நாய்க்கா! யாரோ மந்திரவாதி உன்ரூபத்தே மாத்தி உட்டான்! [ஓடிப்போகிறுன்.]

பா. இந்தப் படுக்காளிப் பசங்கல்லாம் என்னெ ஏமாத்தப் பாக்க ராங்க! என்னெ அசல் கழுதெ ஆக்கப் பாக்கராங்க! நானு பயந்து பூடுவேண்ணு நினைச்சிகினு இருக்கராங்க!—இந்த எடத்தெ வுட்டு நானு நகரப்போரதில்லெ; அவுங்க என்ஞ ஒணும்ஞலும் செய்துகட்டும் — இங்கே இப்டி ஓலாத்திகினே பாடிகினு இருக்கரேன்—அத்தெ அவுங்ககேட்டு, இதுக்கல்லாம் பயப்படமாட்டேன் இண்ணு, அவுங்களுக்குத் தெரியட்டும்! [பாடுகிறுன்.]

மயில்கள் பாடட்டும், குயில்கள் ஆடட்டும்
மான்கள் வாடட்டும், மலர்கள் ஓடட்டும்
ஓயிலாக நடந்துமே, ஒழுங்காய் கை வீசியே
உத்தமியே உன்னிடம், ஓடிநான் வருவேனே.

[படுத்து உறங்கி விடுகிறுன்.]

குட்டிசைத்தான் மறுபடி வருகிறது.

கு. இத் தலையை எடுத்துவிட்டு, இவனை எழுப்பிவிட்டு, நாம் புறப்பட்டு விடுவோம். [அங்ஙனமே செய்கிறது]

பா. [கண் விழித்து] என் பாகம் வரும்போது சொல்லுங்கப்பா— நானு வர்ரேன்-நான்வரவேண்டிய எடம் "மிகவும் பிரியமான

பெருமீசனே!" — ஐயோ!—என்னடா இது?—கோணசு பத்தா! துத்தி புளுவா!—தகரக்கடெ தம்பட்டா!—தர்ம லிங்கம்!—அடே என் சாமிமலெ!—என்னெ இங்கே உட்டுட்டு ஓடிப் பூட்டாங்க எல்லாரும்!—நான் தூங்கட்டுண்ணு —தூக்கத்திலெ நானு என்னை அதிசயங்க பாத்தென்!— நானு கனவு கண்டேனா? —அத்தெ இன்னது இண்ணு சொல்ல எங்கப்பென் மவனலேயும் முடியாது! அத்தெ கண்ணுலெ சொல்ரத்துக்கு கழுதையாலே கூட முடியாது. நானு என்னமோ மாறி—அத்தெ மனுஷனலே சொல்லவே முடியாதிண்ணு!—நானு ஒரு—என் தலெமேலெ ஒரு— என் தலெமேலெ என்ன இருந்ததிண்ணு எந்த மடையனலேயும் சொல்ல முடியாது!—என்ன ஆச்சரியம்! எந்த மனுஷனும் கண்ணுலெ கேட்டிருக்க மாட்டான்! காதாலெ பாத்திருக்க மாட்டான்! கையாலே நெனைக்கவே முடியாது! மனசுனலே தொடகூட முடியாது, அது என்ன கனவு இண்ணு! இந்த கனவெபத்தி, கோணசுபத்தன் கிட்ட சொல்லி ஒரு பாட்டு எழுதச் சொல்ரேன்— அதுக்கு, "பாதம் நாய்க்கன் கனவு பாட்டு" இண்ணு பேர் வைக்கரேன்; நாடகத்துங் கடைசியிலே இத்தெ பாடரேன்—ராஜாவுக்கு எதிர்லெ அயன் ஸ்திரிபார்ட் எறந்து போனவுடனே நானு இத்தெ பாடன, ரொம்ப சரியா யிருக்கும் — சொகுசா யிருக்கும்!—வேஷாக்காயிருக்கும்! [போகிறான்.]

நான்காவது காட்சி

இடம்—கோணசுபத்தன் வீடு.

கோணசு, புளுவன், தம்பட்டன், தர்மலிங்கன் வருகிறார்கள்.

கோ. பாதம் நாய்க்கன் வூட்டுக்கு ஆளெ அனுப்பிச்சையா? அவன் திரும்பிவுட்டுக்கு வந்தூட்டானா?

தர். அவன் சேதியே ஒண்ணும் தெரியலே, அவன் என்னமோ மாயமா பூட்டான், சந்தேகமில்லெ.

பு. அவன் வராமெபோனு நாடகம் தீந்துது!—நடத்தவே முடியாது!—முடியுமா அப்பா?

கோ. முடியவே முடியாது! அவனெப்போலே பெருமீசன் த்வேஷம் கட்ட இந்த ஆஸ்தானபுரத்திலெயே ஒருத்தரும் கெடையாது.

பு. வாஸ்தவம், தொழிலாளிங்களுக்குள்ளே அவனெப்போலே புத்திசாலி இந்த ஆஸ்தானபுரத்திலேயே கெடையாது.

தா். ஆமாம்—அவனெபோலே ஒடம்பு டீக்கான ஆசாமி யாரும் கெடையாது, பாட ஆரம்பிச்சாண்ணு—காவாய்தான்!

கோ. கவாய் இண்ணு சொல்லப்பா--காவாயிண்ணு ரொம்ப தப்பான அர்த்தம்.

சிகுநாகன் வருகிறுன்.

சி. அண்ணமாருங்களே! ராஜா கோயில்லேயிருந்து திரும்பிவர்ராரு. அவரோடேகூட இன்னம் ரெண்டு மூணு பேருக்குக்கூட கலியாணமாச்சி. நம்ப கூத்து மாத்திரம் நடந்திருந்தா—நம்பல்லாம் பணக்காருங்களா ஆயி இருப்போம்!

பு. ஐயோ! பாதம் நாய்க்கா!—உன் ஆயுசுவரைக்கும் தெனம் ஆறுகாசுகெடைச்சி இருக்குமே அப்பாவுனக்கு! கொறைஞ்ச பட்சம் ஆறுகாசு ஆவது கெடைச்சிருக்கும். எங்கப்பாணே நான் சொல்ரேன்—பெருமீசன் வேஷம் போடரத்துக்காக தினம் ஆறுகாசு கொடுத்திருப்பாரு ராஜா! அவ்வளவு கொடுத்தாலும் அவனுக்கு தகுமப்பா! பெருமீசன் வேஷம் போடாரது இண்ணு தினம் ஆறு காசுக்கு கொறைச்சலா வாங்கலாமா?

பாதம் நாய்க்கன் வருகிறுன்.

பா. எங்கேடா இந்தப் பசங்கள்ளாம்? எங்கே இந்த சினேகிதருங்கல்லாம்?

கோ. பாதம் நாய்க்கா! பாதம் நாய்க்கா!—நம்ப அதிஷ்டமே அதிஷ்டம்!—நல்லநாளுடா நம்பளுக்கு!

பா. அடெ பசங்களா!—ரொம்ப ஆச்சரியமான சமாசாரம் ஓங்களுக்கெல்லாம் நானு சொல்லவேண்டிய திருக்குது!—ஆனா அது இன்னாதுண்ணு என்னெகேக்காதைங்க! இப்பொ சொல்லவேமாட்டேன் எங்கப்பாணே!—நானு நடந்ததெல்லாம் அப்படியே சொல்லிகினு வர்ரேன் கேளுங்க.

கோ. கொஞ்ச சொல்லப்பா கேப்போம்—என் ராஜா பாதம் நாய்க்கா!

பா. இப்பொ ஒரு வார்த்தையும் சொல்லமாட்டேன்—இப்போ நானு ஓங்களுக்கு சொல்லப்போரதெல்லாம்—நம்ப ராஜா சாப்பிட்டாச்சி இண்ணுதான்! மின்னே உங்க வேஷ சாமான்களெ யெல்லாம் மூட்டெகட்டிங்க—தாடி மீசெங்களுக்கெல்லாம் கவுறுங்க சரியாயிருக்கட்டும், நெஜாருங்களுக்கெல்லாம் நர்டா சரியாயிருக்கட்டும். எல்லாரும் அரமனெக்கிவந்து சேருங்க வுடனே—அவன் அவன் பாடத்தெ சரியா படிச்சிகினு. ஏனிண்ணா—சுருக்கி சொல்லிவுடரேன், நம்ப ராஜா நம்ப நாடகத்தெ கேக்க பிரியப்பட்டிருக்காரு. திரிசூலிக்கு பொடவெ கிழிச்சலில்லாமெ யிருக்கட்டும். சிங்க வேஷம் போட்டுக்கிறவன் நெகத்தெ வெட்டிகவாணும்—ஏனிண்ணா நெகங்க சிங்கநெகம் போலே நீளமாயிருக்கணும்—செநேகிதருங்களே! கொஞ்சம் தயவுபண்ணி—இண்ணைக்கு மாத்திரம்—வெங்காயம் வெள்ளெப்பூண்டு சாப்பிடாதைங்க, நம்ப பேசரப்பொ நல்ல வாசனேவரணும், அப்பதான் அவுங்கல்லாம் நல்லகூத்து இண்ணு சொல்லுவாங்க—கப்சப்! பேசாதைங்க! இப்பொ போங்க! போங்க! அர்மணைக்கி சீக்கிரம் வாங்க! வாங்க!

[எல்லோரும் போகிறார்கள்.]

காட்சி முடிகிறது.

ஐந்தாம் காட்சி

இடம்—தேசராஜன் அரண்மனை.

தேசராஜன், ஹேமலதா, லட்சுமிசந்திரன், ஹம்சிகா, தாமத்ரையன், ஹைரம்பி, பிலந்தரன், சேவகர்கள் வருகிறார்கள்.

தே. மணவினை முடிந்தபின், மணவிருந்தும் ஆயது ; இனி நாம் மணப் பள்ளிக்குட் புகுமுன், தற் காலத்தை எவ்விதம் சந்தோஷத்துடன் கழிப்போம்? வேடிக்கை விநோதங்களை யெல்லாம் ஏற்படுத்தும் நமது மந்திரி, பேரானந்த அதிகாரி பிலந்தரன், எங்கே? இக்கடிந்து செல்லும் காலத்தைக் கழிப்பதற்கு, கதை, நாடகம், கேளிக்கை, ஏதேனும் இல்லையா? கூப்பிடு பிலந்தரரை.

பி. இதோ காத்திருக்கிறேன் மன்னர் மன்னனே.

தே. இன்று சாயங்காலம் பொழுதினைக் கடிதினில் கழிப்பதற்கு, என்ன விநோதம் ஏற்படுத்தி யிருக்கிறீர்? என்ன சங்கீதம்? என்ன கச்சேரி?

பி. சித்தமாயிருக்கும் விநோதங்களின் அட்டவணை இதோ இருக்கிறது. இதைப் படித்து மஹாராஜா அவர்கள் எதை முதலில் பார்க்க விரும்புகிறார்களோ தெரிவிக்க வேண்டுகிறேன். [ஒரு கடிதத்தைக் கொடுக்கிறார்.]

தே. [படித்துக் கொண்டே] "தேசிங்கராஜன் கதை, தம்பட்டத்துடன் தாராமங்கலம் வாலிபனால் பாடப்படும்"— இது வேண்டாம், இதை என் காதலிக்கு நான் என் முன்னோர்களைப்பற்றிக் கூறிய பொழுது சொல்லி யிருக்கிறேன்— [படிக்கிறார்] "விளமர் நகரத்துக் கூட்டத்தார் வெறியாட்டம்"—இதை நான் இந் நாட்டை ஜெயித்து பட்டம் கட்டிக் கொண்ட காலத்தில், இள வயதிலேயே பார்த்திருக்கிறேன். [படிக்கிறார்] "ஹரிச்சந்திர நாடகம்— மயான காண்டம்—பிள்ளையை உதைக்கிற பாகம்"—இது மிகவும் சோககரமானது—சந்தோஷமான கலியாணச் சடங்குகள் காலத்தில் பார்க்கத் தக்கதல்ல [படிக்கிறார்] "நீண்ட சுருக்கமான காட்சி—பெருமீசன் திரிசூலியின் காதல்—சோககர

மான சந்தோஷம்!"—சந்தோஷம் சோககரமானது! நீண்டது சுருக்கமானது!— அதாவது கொதிக்கும்படியான பனிநீர்! ஆச்சரியமான ஆலங்கட்டி மழைநீர்! இந்த எதிர் மொழிகளின் ஒருமைப்பாட்டை நாம் எப்படி கண்டறிவது?

பி. மஹாராஜா, இந்த நாடகத்தில் சுமார் பத்து வசனங்கள் தானிருக்கின்றன. இதைப் பார்க்கிலும் சுருக்கமான கதையை நான் கண்டதில்லை—ஆயினும் இதில் இருக்கும் இந்த பத்து வசனங்களே அதிகமானவை! ஆகவே இது அதிக நீளம்தான்—ஏனெனில், கதை முழுவதிலும் ஒரு வார்த்தையும் பொறுத்தமானதாயில்லை! ஒரு நடிகனுவது தக்கபடி யில்லை! சோககரமானது என்பதென்னவோ மெய் தான்—ஏனெனில், பெருமீசன் இதில் தற்கொலை செய்து கொள்ளுகிருன், அதை அவர்கள் ஒத்திகை செய்த பொழுது நான் பார்த்தபொழுது என் கண்களினின்றும் கண்ணீர் தாரை தாரையாக வந்தது!—சிரிப்பினுல்! இவ்வாறு நான் ஆநந்த பாஷ்பம் என்றும் சொரிந்ததில்லை!

தே. இதை ஆடும் நடிகர்கள் யார்?

பி. நமது ஆஸ்தானபுரத்தில் வேலை செய்யும் தொழிலாளிகள். அவர்கள் இது வரையில் தங்கள் மூளைகளுக்கு வேலையே கொடுத்தவர்களல்ல-தங்களுடைய கலியாணச்சடங்கிற்காக, அவர்கள் மூளைகளுக்கு கஷ்டம் கொடுத்திருக்கிருர்கள்.

தே. ஆனுல் அதைக் கேட்போம் நாம்.

பி. மஹாராஜா, தாங்கள் பார்க்கும்படியாக அவ்வளவு உசிதமாயிராது. அதை நான் முற்றிலும் கேட்டிருக்கிறேன். அது ஒன்றுக்குமே உதவாதது—இவ்வுலகில் அவர்கள் உங்கள் மனதை ஏதோ திர்ப்தி செய்யவேண்டுமென்று கஷ்டப்பட்டு இதை ஒத்திகை செய்திருக்கிருர்கள், என்பதினுல் மாத்திரம், உங்கள் மனம் சந்தோஷ மடைவதானுல், தாங்கள் பார்க்கலாம் இதை.

தே. நான் கட்டாயமாய் இக் கூத்தைக் கேட்கிறேன். பேதமையானது கடமையைச் செலுத்துவதானுல் அதில் பெருங்

குற்றம் ஒன்றும் இராது—போய் அவர்களை அழைத்து வாரும்—நீங்கள் எல்லோரும் உட்காருங்கள்.

[பிலந்திரன் போகிறான்.]

ஹே. அவர்கள் ஏதோ கஷ்டப்பட்டுக் கற்றதை நாம் நகைப்பதற்காகக் காண்போம் என்பது, என் மனதிற்குப் பிடிக்கவில்லை.

தே. என் பிரியே! நாம் அப்படி ஒன்றும் செய்வதை நீ பார்க்க மாட்டாய்.

ஹே. அவர்தான் கூறினாரே, அவர்கள் ஒன்றும் சரியாகச் செய்ய முடியாதென்று.

தே. ஒன்றும் சரியாகச் செய்யாததற்காக நாம் அவர்களுக்கு வந்தனம் அளித்தால், அது நமது பெருங் கருணையை அதிகமாய்க் காட்டும். அவர்கள் செய்யும் குற்றங்களைக் கண்டு நாம் நகைத்த போதிலும், அவர்கள் நமக்காக இவ்வளவு கஷ்டம் எடுத்துக்கொண்டார்களே யென்று நாம் சந்தோஷப் படுவோம்.

பிலந்திரன் மறுபடியும் வருகிறான்.

பி. மஹாராஜா அவர்கள் பராக்! சூத்திரதாரன் வருகிறான்.

தே. வரச்சொல் விரைவில்.

கோணசுபத்தன் சூத்திரதாரனாக வருகிறான்.

கோ. [படிக்கிறான்]

பாலர்களாகிய நாங்கள்—ஏதோ எங்களுக்குத் தெரிந்த
தையாடிக் காட்டுகிறோமதைப்பெரியமனசு
பண்ணி நீங்கள்—ஏற்றுக் கொள்ளவேண்
டுகிறோம்—நாங்களா டும் ஆட்டத்தில்குற்றமே
தேனுமிருந்தால் கனவான்களே நீங்கள் அன்
னப்பட்சியைப்போல்—பாலைப்பிரித்து நீரை உட்கொள்
வீர்களென்று பிரார்த்திக்கிறோம தைப்பார்க்கநீங்
கள் வந்திருக்கிறது எங்களுக்கு மிகவும் திர்ப்தி
யைத் தருகிறது நாங்கள் உடனே நாடகத்தை ஆரம்
பிக்கப் போகிறோமாகையால் நீங்கள் சந்தோஷப் படுவீர்
கள்சபையோர்களுக்குநமஸ்காரம் செய்கிறேன் நானே.

தே. இவனுடைய உபாத்தியாயர்—சக்குமி, ளகுதி, பிலி, என்று பிரிக்கக் கற்பித்திருக்க வேண்டும்.

ல. அர்த்தத்தை அறியாது எழுத்துகளைக் கூட்டிப் படிக்கும் பள்ளிக்கூடத்துப் பையன்போல் படித்து விட்டான்.

தே. பிறகு என்ன?

பெருமீசன், திரிசூலி, மண்சுவர், நிலாவெளிச்சம், சிங்கம் வருகிறார்கள்.

கோ. கனவான்களே! இது என்ன காட்சியென்று நீங்கள் ஆச்சரியப்படக் கூடும். ஆயினும் உண்மையை உரைத்திட்டால் அந்த ஆச்சரியம் போய்விடும்.

இவனை அறிய விரும்பினால்இவன் பெருமீசன் தான்.
கட்டழகியாகிய திரிசூலி கட்டாயமாய் இவள்தான்.
கல்லும் மண்ணும் கையில் வைத்திருக்கும் இம்மனிதன் மண் சுவர்
காதலனையும் காதலியையும் கருணையின்றி பிரித்த குட்டிச்சுவர்!
இந்தக் குட்டிச்சுவரில் ஒரு துவாரமிருக்கிறது
அதன் வழியாக காதலர்கள் பேசவேண்டி வருகிறது.
இதைக்கேட்டு நீங்கள் ஆச்சரியப்படக்கூடாது
ஏனென்றால் எங்களுக்கு வேறு வழி கிடையாது.

முயலையும் விளக்கையும் வைத்துக் கொண்டிருக்கும் இவன் நிலா சந்திரன் — நாயனார் சமாதியருகில் காதலர்கள் சந்திக்கச் செய்தார்கள் தந்திரம்.

இந்த பயங்கரமான மிருகம் ஒரு சிங்கம்
அது முதலில் வந்த திரிசூலியை செய்தது பங்கம்
அவள் ஓடும்பொழுது அவிழ்ந்து விழுந்தது அவள் முக்காடு
அதைச் சிங்கம் வாயினால் கிழித்து செய்தது ரத்தக் காடு.
பிறகு காதலனாகிய பெருமீசன் அங்கே வருகிறான்
காதலியின் துணியில் ரத்தம் படிந்திருப்பதைக் காண்கிறான்.
உடனே வருத்தப் படுகிறான்
தன் கத்தியை உருவுகிறான்

திடீரென்று குத்திக் கொள்கிறான்
படார் என்று கீழே விழுகிறான்
சடார் என்று உயிர் போகிறான்!

பிறகு மா மரத்தின் பின் ஒளிந்திருந்த மாது திரிசூலி
சட் என்று ஓடி வந்தாள்
பட்டென்று பிடுங்கினாள் கத்தியை
வெட் என்று மார்பில் குத்திக்கொண்டாள்—
உடனே உயிர் போய் விடுகிறது
கதையும் உடனே முடிவாகிறது!

இதை இனி, சிங்கம், நிலாவெளிச்சம், மண்ணாங்கட்டிச் சுவர், காதலர்கள், இதையெல்லாம் நடித்துக் காட்டுவார்கள், உங்களுக்கெல்லாம் தெரிவிப்பார்கள்!

[சூத்திரதாரன், பெருமீசன், திரிசூலி, சிங்கம், நிலா, போகின்றனர்.]

தே. இந்த சிங்கம் ஒருவேளை பேசினாலும் பேசும் போலிருக்கிறதே!

தா. அரசே! அதில் ஒன்றும் ஆச்சரிய மிராது. அநேகம் கழுதைகள் கத்தும் பொழுது ஒரு சிங்கம் பேசக் கூடாதா என்ன?

மண்சுவர். [பாடுகிறான்.]

நான் தகரக்கடை தம்பட்டன்
ஜாதியில் அசல் அம்பட்டன்
தற்காலம் கதையில் மண் சுவர்
காதலர்கள் சந்திக்கும் குட்டிச் சுவர்
என் மத்தியில் இருக்கிறது ஒரு ஓட்டை
அதுதான் காதலர்கள் பேசப்பாட்டை
என் கையிலிருப்பது மண்ணாலான செங்கல்
அதனால் நான் மண் சுவரென அறி யுங்கள்
ஓட்டையின் இருபுறம் நின்று அவசியம்
காதலர்கள் பேசவேண்டியது ரகசியம்!

தே. இதைவிட எந்த மண்ணாங்கட்டியாவது, நன்றாய்ப் பேசுமா?

தா. ஏதோ கேட்டால் குட்டிச்சுவர் என்கிறார்களே—அக்காரணம் பற்றிதான் காதலர்கள் இங்கு வரப் போகிறார்கள் போலிருக்கிறது.

தே பொறுங்கள்! பெருமீசன் சுவரருகில் வருகிறான்.

பெருமீசன் குட்டிச் சுவரிடம் வருகிறான்.

பெ. வெளிச்சமில்லா இருளே — கருப்பாயிருக்கும் பொருளே!
கருப்பாயிருக்கும் பொருட்டே-கவின்பெரும் இருட்டே!
திரிசூலி சொன்னதை மறந்தனளே!
என்னைக் கைவிட்டுத் துறந்தனளே!
அழகிய செங்கல் சுவரே! அழகிய மண்சுவரே!
எங்கள் இருவர் நிலங்களுக்கும் இடையில் இருக்கும் கற்சுவரே! உன் பிளவைக் கொஞ்சம் காட்டு—இதோ பாடுகிறேன் ஒரு பாட்டு. [சுவர் இரண்டு விரல்களைக் காட்டுகிறது.]

பெ. [பாடுகிறான்.]

ஹா! உனக்கு கோடி வந்தனம்
என் இருகையால் தந்தனம்
ஹா! என்காதலியைக் காணேனே
மோசம் தான் போனேனே!
மட்டி சாம்பிராணியாகிய குட்டிச்சுவரே!
என்மதியை மயக்கிட உனக்கென்ன பவுரே!

தே. குட்டிச்சுவருக்கு புத்தி யிருப்பதானால், திட்டவேண்டும் திருப்பி.

பெ. அப்படி கூடாதுங்க மஹாராஜா! என்னபவுரே, என்று நான் சொன்னவுடன், திருசூலி வரவேணுங்க-இப்போ வரப்போரா பாருங்க! அவளை நான் இந்த சுவத்தின் பிளவு வழியாகப் பார்க்கப் போகிறேன்—நான் சொன்னபடியே நடக்கப்போகிறது பாருங்க!—அதோ அவள் வர்ராள்!

[திரிசூலி வருகிறாள்]

தி. சுவரே! சுவரே! குட்டிச்சுவரே! மண்ணுங்கட்டிச்சுவரே! என்காதலனிடமிருந்து விண்டு, உன்னை நான் கட்டிக் கொண்டு, எத்தனைமுறை அழுவேனோ, என்னை நீ அறியா

யோ! கல்லாலும் மண்ணுங்கட்டியாலும் கட்டப்பட்ட உன்னை—என்கனி வாயால் எத்தனை முறை முத்த மிட்டிருகிறேன் பின்னை!

பெ. ஒரு இனியகுரல் என் கண்ணிற்படுகிறது
ஒட்டையருகில் ஓடிப்பார்க்கிறேன்.
என்காதலியின் கருவிழிகள்—என்காதில்
படுகிறவாவென்று நாடிப் பார்க்கிறேன்,
—திரிசூலி!

தி. நீர்தான் என் காதலன்—என்று நான் நினைக்கிறேன்.

பெ. ஆம் நான் உன் காதலனே! நீ என்ன நினைத்த போதிலும்
அரைச்சந்திரன் பொய் பேச மாட்டான் வாதிலும்!

தி. அப்படியே நான் உன் சந்திரமதி
அடி யாளைக்கொன்றாலும் தலை விதி!

பெ. பரமசைவமாகிய நான் பார்வதியைவிட்டுப் பிரியேன்.

தி. பார்வதியாகிய நான் பரமசைவத்தை விட்டுப்பிரியேன்.

பெ. இந்தப் பிளவின் வழியாக
எனக்கொரு முத்தம் தருவாயாக!

தி. இந்த மண்ணுங்கட்டியை முத்தம் கொடுக்கிறது
என் தன் வாய் நிரம்ப களிமண் வருகிறது!

பெ. நாயினுவின் சமாதியருகில் உடனே என்னைவந்து சேர்!

தி. உயிர் வந்தாலும் போனாலும் அப்படியே செய்கிறேன்பார்!
[பெருமீசனும் திரிசூலியும் போகிறார்கள்]

சுவர். செவுராகிய என் வேலை முடிந்தது!
ஆகவே இது வீட்டுக்கு நடந்தது! [போகிறது]

தே. சுவர் தான் போய்விட்டதே, இனி காதலர்கள் இங்கேயே தாராளமாய்ச் சந்திக்கலாமே?

ஹே. இதைப்பார்க்கிலும் ஆபாசமான நாடகத்தை நான் பார்த்ததேயில்லை!

தே. இதோ இரண்டு சிரேஷ்டமான மிருகங்கள் வருகின்றன—சிங்கமும் மனிதனும்!

சிங்காம் நெலவும் வருகின்றன.

சி. மாது சிரோமணிகளே
மனமிளகிய நாரீமணிகளே !
பயங்கரமான சிறிய
தரையினில் ஓடும் பெரிய
சுண்டெலியினைக்கண்டு
சும்மா பயந்திடும்—சீமாட்டிகளே !
அங்கமெல்லாம் நடுங்கிட கர்ஜிக்கும்
சிங்கத்தின் சப்தத்தினைக் கேட்டு
ஒருகால் நீங்கள் பயப்படாதபடி
இதைச் சொல்கிறேன் இப்படி—
என் மேலிருப்பது சிங்கத்தின் தலை
இதை வாங்கினேன் கொடுத்து அதிக விலை !
சிங்கமல்ல எனக்கு அச்சன்
நான் சிசுநாகத் தச்சன் !
வாஸ்தவமாக வந்தால் சிங்கமாய்
என் உயிர் உடனே போம் பங்கமாய் !

தே. இந்த சிங்கம் மிகவும் சாதுவான ஜந்து—பழிபாவத்திற்கு மிகவும் அஞ்சுவது !

ல. தைரியத்தில் இந்த அரி—நரிதான்.

தே. குள்ளநரிக்கு—உள்ள தைரிய முடையது !—அதிருக்கட்டும்—இனி நிலவு சொல்வதைக் கேட்போம்.

நெலா. இந்த விளக்கானது சந்திரபிம்பம்
நான் அந்த சந்திரனைத் தாங்கும் கம்பம்.

தே. அப்படியானால் இவன்தான் பரமசிவம் — ஆனால் இந்த விளக்காகிய சந்திரனைத் தலையில் தரிக்கவேண்டும்—கையில் தரிக்கலாகாது.

தா. அந்த விளக்கிலிருக்கும் மெழுகுவத்தி உருகி அவன் தலையில் விழுந்தால் என்ன செய்வான் பாவம் !

ஹே. இந்த சந்திரனைப் பார்க்க என்மனம் பிடிக்கவில்லை—இவனைச் சீக்கிரம் போகச் சொல்லுங்கள்.

தே. அது மரியாதையாகாது—அவன் பேசுவதை யெல்லாம் நாம் கேட்டுத்தான் ஆக வேண்டும்.

ல. அப்பா சந்திரனே! பேசு—நீ பேசவேண்டியதை யெல்லாம் சீக்கிரம்!

நிலா. நான் பேசவேண்டிய தெல்லாம்—

இந்த விளக்கு நிலாதான்
அதைப் பிடிக்கும் மனிதன் நான்

தா. சரியான வேலையாள்! — பொறுங்கள்! — இதோ திரிசூலி வருகிறாள்.

திரிசூலி மறுபடி வருகிறாள்.

தி. இது தான் நாயினு சமாதி!—என் பிராணநாத்! எங்கே?

சிங்கம். ஓ ஓ ஓ ஓ ஓ! [கர்ஜிக்கிறது-திரிசூலி ஓடிப்போய் விடுகிறாள்.]

தா. நன்றாய்க் கர்ஜித்தது சிங்கம்!

தே. நன்றாய் ஓடினாள் திரிசூலி!

ஹே. நன்றாய்ப் பிரகாசித்தது நிலா!—நிலவு என்ன சந்தோஷமாய்க் காய்கிறது பாருங்கள்!

[சிங்கம் திரிசூலியின் அங்க வஸ்திரத்தைக் கிழித்தெறிந்து விட்டுப் போகிறது.]

தே. அழிப்பது எலியைப்போல், கிழித்தது துணியை சிங்கம்!

தா. கிழித்துவிட்டுத் துணியை மறைத்து விட்டது சிங்கம்!

ல. ஆதலால் காதலன் பெருமீசன் கடிந்து வருகிறான்!

பெருமீசன் மறுபடி வருகிறான்.

பெ. அழகிய நிலாவே! சூரியன் போன்ற உன் கிரணங்களுக்கு வந்தனம், இவ்வளவு பிரகாசமாய் பிரகாசிப்பதற்காக நமஸ்காரம் தந்தனம். கிருபையுடன் ஜொலிக்கின்ற உன் கிரணங்களின் ஒளி, என் காதலியின் முகத்தைப் பார்க்கக் காட்டும் எனக்கு வழி.

—பொறு! இதுவென்ன கோரம்!
நான் காண்பதென்ன கடூரம்!
ஹா! இருதயத்திற் பாரம்!
எப்படி நேர்ந்ததிக்குரூரம்?

ஹா! கண்ணின்மணியே—காதற்கிளியே!
உன் ஆடையானது சுத்தம்
படிந்திருக்கிறது ரத்தம்!
யமனே! நீ விரைவாய்
என் அருகில் வருவாய்!
என்னைக் கொன்று தின்று மென்றுவிடுவாய்!

தே. இதைப்பார்த்து, உடனே தன் ஆப்த நண்பன் மடிந்ததாக ஒருவன் கேள்விப்படுவானாயின்—அவனுக்கு துக்கம் வராமலிருக்குமா?

ஹே. ஐயோ! பாபம்! இவனைப்பார்த்தால் எனக்கு பரிதாபமாயிருக்கிறது.

பே. சிவமே! இந்த சிங்கத்தை யேன் படைத்தாய்
என் காதலியைக் கொல்லவோ. நினைத்தாய்!
இவ்வளவு — இல்லை இல்லை! — இப்படிப்பட்ட அழகிய பெண்மணியை
எந்த ஜென்மத்தில்
எந்த வுலகத்தில்
எந்த தேசத்தில்
எந்த ஊரில்
நான் மறுபடியும் காணப்போகிறேன்!
கண்ணீரே! நீ சொரிவாய்!
கத்தியே! நீ வெளிவருவாய்!
என் மார்பிற்குள் புகுவாய்!
—ஏ ஏ! இந்தபக்கம் அல்லா —இந்தப்பக்கம்தான் இருதயம் இருக்கிறது—ஆகவே— [மறுபடியும் குத்திக்கொண்டு]
நான் மாள்கிறேன்!
மடிகிறேன்!
சாகிறேன்!
இதோ நான் என்னைக்குத்திக் கொள்கிறேன்
இதோ நான் கொன்று கொள்கிறேன்!
என் உயிர் போய்விட்டது!
ஆகாயத்தில் பறந்து விட்டது!
சுவர்க்கம் புகுந்து விட்டது!

சூரியன் இருண்டு விட்டது—சந்திரன் மருண்டு விட்டது!
[நெலா போகிறது]
என் உயிர் போய்விட்டது! [சாகிருன்]

ல. ஐயோ! பாவம்! எவ்வளவு கஷ்டப்பட்டு மடிந்தான்!

தே. ஆனல் ஒரு சிட்டிகை மூக்குத்தூள் போட்டால், எழுந்து உட்கார்ந்து கொள்வான்!

ஹே. திரிசூலி வருவதற்குள்ளாக நிலவு மறைந்து விட்டதே! அவள் எப்படி தன் காதலனைக் காண்பாள்?

தே. நட்சத்திரங்களின் வெளிச்சத்தினல்!—இதோ வருகிருள்—அவளது துக்கத்துடன் நாடகத்தின் சோகம் தீரும்.

திரிசூலி மறுபடியும் வருகிருள்

ஹே. இப்படிப்பட்ட பெருமீசனுக்காக அவள் அவ்வளவு துக்கம் காட்டல், தகாதென்று நினைக்கிறேன்.—அவள் அழுகை சுருக்கமாயிருக்குமாக!

தா. பெருமீசன் கெட்டிக்காரன, திரிசூலி கெட்டிக்காரியா, என்று நம்மால் சொல்வது மிகவும் கடினமாம். இப்படிப்பட்ட ஜன்மங்களை ஈசன் சிருஷ்டித்தாரே!

ல. தன் கடைக் கண்ணினல் அவள் தன் காதலனைக் கண்டு விட்டாள்! இனி கணமும் தாமதிக்கமாட்டாள்!

தி. கண் உறங்குறீரா, என் காதலனே!—
மடிந்து விட்டாரா! இதென்ன பாதகமே!
எழுந்திருமே பிராண நாதா!
உமது களி வாயால் பேசலா காதா!

கோ. [உள்ளிருந்து] கனிவாயால்! கனிவாயால்!

தி. உமது கருமையான அதரத்தையும்
சிவந்த கண்களையும்
வில்லைப்போல் வளைந்திருக்கும்—மூக்கையும்—

கோ. [உள்ளிருந்து] புருவத்தையும்! புருவத்தையும்!—

தி. நான் எந்த ஜன்மத்தில் காணப்போகிறேன்— [திரும்பி]
அப்புறம் என்னப்பா?

கோ. [உள்ளிருந்து] பாட்டு! பாட்டு!—முகாரியிலெ விருத்தம்.

தி. எனக்கு தொண்டே கட்டிகினு இருக்குதப்பா.

கோ. [உள்ளிருந்து] ஆனு வசனமா சொல்லிவுடு.

தி.
பாதகம் என்றும் பாராமல் நீதான்
காதலனைக் கொன்றுவிட்ட கட்கமே!
ஆதலால் என் உயிரை அபகரிப்பாய்!
சாதலுக்கு நான் சற்று மஞ்சேனே!

[பெருமீசன் கத்தியின் உரையால் குத்திக்கொள்கிருள்.]

தே. இப்படி சாவதற்கு ஒருவரும் அஞ்சவே வேண்டாம்.

பே. [எழுந்து தன் கத்தியைக் கொடுத்து] இத்தாலெ குத்திகடா தடியா!

தி.
இதோ கத்தி வருகிறது!
நான் சாகிறது!
என் உயிர் போகிறது! [சாகிருள்.]

ஹே. பெருமீசன்தான் எழுந்து விட்டானே! அவனை உடனே கலியாணம் பண்ணிக்கொள்ளக் கூடாதா பாவம்!

தே. இனி நெலாவும் சிங்கமும் இவர்களைப் புதைக்கவேண்டும் போலும்.

தா. மண்சுவர் கூட!

பா. [எழுந்திருந்து] இல்லேங்க! அப்படி இல்லேங்க! — இந்த ரெண்டு குடும்பத்தையும் பிரித்த செவுரு பூட்டுதுங்க— இனி நாந்திபாடி—அப்பறம் மங்களம்பாடணும்.

ல. இரண்டு பெயர் இறந்ததற்காக ஒரு நாந்தியாவது பாட வேண்டாமா?

தே. செ! நாந்திவேண்டாம் — நீங்கள் தான் சந்தோஷமாய் மடிந்து விட்டீர்களே! இதற்கு நாந்தி என்னத்திற்கு?— மங்களம் பாடுங்கள் எல்லோரும்!

[நடிகர்கள் மங்களம் பாடுகிருர்கள்.]

காட்சி முடிகிறது.

நாடகம் முற்றிற்று.

சங்கீதப் பயித்தியம்

நாடக பாத்திரங்கள்

சங்கீதாநந்தர்	- -	ஒரு சன்யாசிப் பாடகர்
சங்கரன் பரசுராமன்	} - -	இரண்டு தாயாதிகள்
காவேரி அம்மாள்	- -	சங்கரன் மனைவி
காந்தாரி அம்மாள்	- -	பரசுராமன் மனைவி
வசந்த ராயர்	- -	தோடியூர் அரசர்

வெட்டியான், தெருப் பள்ளிக்கூடத்து உபாத்தியாயர், சட்டாம் பிள்ளை, சிறுவர்கள், படைத் தலைவர், படைவீரர்கள், பீடா விற்கிறவன், பால் மிட்டாய் விற்கிறவன், கறிகாய்க்காரி, துடப்பம் விற்கிறவள், கொத்தவால், கட்டியக்காரன், மந்திரி, :: :: முதலியோர். :: ::

கதை நிகழிடம் — தோடியூர்.

சங்கீதப் பயித்தியம்

முதல் அங்கம்

முதற் காட்சி

இடம்—தேரடியூரில் கடை வீதி.

வெட்டியான் *தமுக்கடிக்கிறான், ஜனங்கள் சேர்கின்றனர்.*

வே. இதனால் சகலமான பேர்களுக்கும், தெரிவிக்குப்படியான இவ்வூர் அரசரது ஆக்கினை என்னவென்றால்—"அரசருடைய தாயார் அந்திய காலத்தில் சங்கீதம் கேட்கவேண்டுமென்று பிரியப்பட்டபோது, ஆஸ்தான சங்கீத வித்வான் வந்து சேரு முன், அவர்கள் உயிர் போய்விட்ட படியால், அந்த ஆத்மாவின் பிரீதிக்காக, இன்று முதல் ஒரு வருஷ காலம் வரையில், இவ்வூரிலுள்ள எல்லா ஜனங்களும், சங்கீதத்திலேயே சம்பாஷிக்க வேண்டும். இவ்வூரின் பெயரும் தேரடியூர் என்பதிலிருந்து தோடியூர் என்று மாற்றப்பட்டது. அரசரும் தன் பெயராகிய வசந்த ராயர் என்பதை வசந்த ராக ராயர் என்று மாற்றிக்கொண்டார். அப்படியே எல்லோரும் எல்லாப் பெயர்களையும் மாற்றிக்கொள்ள வேண்டியது. ஆண்பெண் குழந்தைகள் உட்பட எல்லோரும் சங்கீதத்திலேயே சம்பாஷிக்க வேண்டியது. இந்த ஆக்கினையை மீறி நடப்பவர்களுக்கு ஒவ்வொரு குற்றத்திற்கும் பத்து பணம் வரையில் அபராதம் விதிக்கப்படும்"—திடும் திடும் திடும்! [ஜனங்கள் கூக்குரலுடன் கலைகின்றனர்.]

காட்சி முடிகிறது.

இரண்டாவது காட்சி

இடம்—ஒரு தெரு பள்ளிக்கூடம்.

பிள்ளைகள் *நிற்கின்றனர்.* உபாத்தியாயர் வருகிறார்.

உ. *அடே பசங்களா! இதென்னடா பெரிய எழவா போச்சி! இதுவரைக்கும் சொன்னமாதிரி பாடம் சொல்லக் கூடா தாம், புது மாதிரியிலே சொல்லணுமாம், இல்லாப்போனா அபராதம் விழுமாம்—உம்—என்ன செய்யரது! ராஜா ஆக்கினெ, மீறக் கூடாது — நான் சொல்ரபடியே பாடம் சொல்லுங்கள்.* [பாடுகிறார்.]

ராகம்—தன்யாசி—தாளம்—ஆதி

பல்லவி

அ ஆ, இ ஈ, உ ஊ, எ ஏ,
ஐ, ஒ ஓ ஔ.

[*பிள்ளைகள் அப்படியே பாடுகின்றனர்.*]

அனுபல்லவி

கக் கா, கிக் கீ, குக் கூ, கெக் கே,
கை, கொக் கோ கௌ,

சரணங்கள்

சச் சா, சிச் சீ, சுச் சூ, செச் சே,
சை, சொச் சோ சௌ.
தத் தா, தித் தீ, துத் தூ, தெத் தே,
தை, தொத் தோ தௌ.

[*பிள்ளைகள் அப்படியே பாடுகின்றனர்.*]

சட்டாம்பிள்ளை விரைந்து வருகிறான்.

ச. *சாமி! சாமி!—உங்க—*

உ. *அடெ பையா! சொல்லவேண்டியத்தெ பாட்டா சொல்லு, இல்லாப்போனா உனக்கும் எனக்கும் ரெண்டு பேருக்கும் அபராதம் விழும்!*

ச. உங்க இஷ்டம் [*சவுக்கமாகப் பாடுகிறான்*]

ராகம்—காம்போதி—தாளம்—ஆதி

பல்லவி

வாத்தியாரே உங்கள் வீட்டில்—ஐயோ!

உ. என்னுடா வீட்லே? யாருக்கென்ன உடம்பு? யாருக்காவது அசௌக்கியமா என்ன?

ச. இல்லே! இல்லே! [பாடுகிறான்.]

வாத்தியாரே உங்கள் வீட்டில் குதிரை—

உ. குதிரை என்ன! ஓடிப்பூட்டுதா என்ன-சீக்கிரம் சொல்லுடா!

ச. இல்லே! இல்லே! [பாடுகிறான்.]

வாத்தியாரே—உங்கள் வீட்டில்—குதிரை—
கொட்டகை—

உ. கொட்டகையா! — அதுரொம்ப பழசு — பிரிச்சுடணும் இண்ணு இருந்தெ, என்ன அதுக்கு?

ச. [பாடுகிறான்.]

வாத்தியாரே உங்கள் வீட்டில் குதிரை
கொட்டகை தீ பற்றியது!

உ. ஐ ஐயோ! அத்தெ முன்னெயே சொல்லி யழக்கூடாதா! அப்புறம் என் வீடுகூட பத்திக்கொண்டால்!—பாழும் சங்கீதம்!—வாங்கடா பசங்களா!

[உபாத்தியாயர் ஓடுகிறார். பிள்ளைகள் பின்தொடர்கின்றனர்.]

காட்சி முடிகிறது.

மூன்றாவது காட்சி

இடம்—அரசரது சைனியம் கபாத் பழகும் வெளி.

படைத்தலைவர் வருகிறார், பிறகு **படைவீரர்கள்** வருகின்றனர்.

ப.த. நட பைரவ்!—ஏக்தாள்! [வீரர்கள் நடக்கின்றனர்.]
நீல்—ஆம்பரி! [வீரர்கள் நிற்கின்றனர்.]

ப.த. இப்பொழுது கமாஸ் (கபாத்) பழகுவோம்.
ஆரோஹண்! [கைகளைத் தூக்குகின்றனர்.]
அவரோஹண்! [கைகளை இரக்குகின்றனர். இப்படி மூன்று முறை செய்கின்றனர்.]

ப.த. கை சுருட்டி! ஆதி தாளம் — ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு—ஐந்து, ஆறு, ஏழு, எட்டு! [இப்படி மூன்று முறை]

ப.த. தோடிராகம்! [வீரர்கள் துப்பாக்கிகளை தோளில் ஏந்துகின்றனர்.]

ப.த. பிரசண்டமாருதம்! [வீரர்கள் துப்பாக்கிகளை முன்னால் ஏந்துகின்றனர். இப்படி மூன்று முறை செய்கின்றனர்.]

ப.த. முத்தாயிப்பு! [முடிவு] பீர்பிளாஸ்! [போகின்றனர்.]

—o—

நான்காம் காட்சி

இடம்—கடைத் தெரு.

பீடா விற்கிறவன் பாடிக்கொண்டு வருகிறான்.

பீ.வி. ராகம்—கலாநிதி—தாளம்—ஆதி

பல்லவி

பீடா வாங்கலையோ பெருஞ்சீமான்களே
பீடா வாங்கலையோ! (பீ)

அனுபல்லவி

தேடாமல் வருகிறது தெருவிலே
திவ்யமான பீடா இதுதான் உருவிலே (பீ)

பால் மிடாய்காரன் வருகிறான்.

பா.மி. [பாடுகிறான்] பால்மிடாய், பன்னீர்மிடாய், பலெஜோர்மிடாய், பலேபசந்த் மிடாய், காலணு மிடாய், கைமேல் மிடாய், கோவா மிடாய், கோதம் மிடாய்!

கறி காய்க்காரி வருகிறாள்.

க. ராகம்—தோடி—தாளம்—ஆதி

பல்லவி

கத்தரிக்காய் வற்றல்—வாங்கலையோ

ஒரு **வழிப்போக்கன்** வருகிறான்.

ஒ.வ. ராகம் — தோடி — தாளம் — ஆதி

பல்லவி

எத்தனை கொடுப்பாய்—துட்டுக்கே

அனுபல்லவி

க. ஒன்று, இரண்டு, மூன்று, நாலு, ஐந்து,
ஆறு, ஏழு, எட்டு— (க)

அனுபல்லவி.

ஒ.வ. மெத்தவிலெ, அதிகவிலெ, ரொம்பவிலெ, கொஞ்சம்குறை—

துடப்பம் விற்கிறவள் வருகிருள்.

து. துடப்பம்! துடப்பம்!

கோத்தவால் விரைந்து வருகிருன்.

கோ. ஏய்! துடப்பம்—வா இப்படி!

து. ஏன் சாமி?

கோ. வா, டாணுவுக்கு!

து. ஏன் சாமி!

கோ. இவ்வூர் சட்டம் தெரியாதோ உனக்கு?

து. தெரியாது சாமி!

கோ. தெருவுலெ யார் என்ன பேசனுலும் சங்கீதத்தோடு பேசணும்.

து. அப்படி இண்ணு?

கோ. பாட்டா பாடணும்.

து. எனக்கு பாடத்தெரியாதே சாமி, துடப்பக்கட்டைக்குக் கூடவா பாடணும்?

கோ. ஆமாம்! அப்படித்தான் ராஜா உத்திரவு, இல்லாபோனு தெருவுலே விக்கக்கூடாது.

து. எனக்குத் தெம்மாங்குதான் தெரியுங்க.

கோ. ஆனல் அதுலே பாடு.

து. [பாடுகிருள்.]

துடப்பக்கட்டே ராஜ்யத்துலே
துடப்பக்கட்டே விக்கக்கூட
துடப்பக்கட்டே பாடணுமாம்
துடப்பக்கட்டே! துடப்பக்கட்டே!

கோ. ஆ!—சரி!—போ போ!

காட்சி முடிகிறது.

இரண்டாம் அங்கம்

முதற் காட்சி

இடம்—முட்டுசந்து—இரண்டுபக்கமும் இரண்டு வீடுகள்.
சன்யாசி உடையில் சங்கீதானந்தர் பாடிக்கொண்டு வருகிறார்.

சன். ராகம்—பைரவி—தாளம்—ரூபகம்

பல்லவி

சங்கீதத்தினும் சுகம்யாதே
சர்வலோகத்திலும் கிடையாதே (ச)

அனுபல்லவி

அங்கமெல்லாம் குளிருமே ஆனந்தமதனாலே
எங்குமிதற்கு நிகர் ஏதுமில்லே சொன்னாலே (ச)

சங்கரனும் பரசுராமனும் எதிர் எதிர் வீடுகளியிருந்து ஓடி வருகிறார்கள்.

இருவரும். சாமி! சாமி! நமஸ்காரம். [பாதத்தில் வீழ்கிறார்கள்.]

சன். யாரப்பா நீங்கள்? நான் ஒரு ஏழை, எனக்கேன் இப்படி நமஸ்காரம் செய்கிறீர்கள்?

இருவரும். நீங்கள்தான் எனக்கு குருவாயிருக்கணும்!

சன். நான் உங்களுக்கு குருவாயிருப்பதா! எனக்கொன்றும் அர்த்தமாக வில்லே.

இருவரும். நான் சொல்ரேன் கேளுங்கசாமி!

சங். அடே! பரசு! நான் பெரியவன்! நானுமுன்னே சொல்ரேன்.

பர. ஏய்! சங்கராபரணம், நீங்க பெரியவரானா உங்கமுட்டுக்கும் இருக்கட்டும்! நான் முன்னே சொல்ரேன்!—சாமி!

சன். இதென்னடா அப்பா!—சங்கராபரணம்! பரசு!—ஏனப்பா, உங்கள் பேர்களா இவைகள்?

சங். நான் செல்ரேன் சாமி!—இத்த ஊர்ராஜா ஒருத்தர் இருக்கிருரு—

பர. அவருக்கு சங்கீதப் பயித்தியம்!

சங். அவர் என்னா ஆக்கினெ பண்ணியிருக்கருரு இண்ணா—

பர. எல்லாரும், பேருங்களே, சங்கீத பேரா மாத்திகணும், இண்ணு—உத்திரவு பண்ணி இருக்கருரு.

சங். அத் தொட்டு, சங்கரன் என்ற என் பெயரெ சங்கரா பரணம் இண்ணு மாத்திகனேன்.

பர. எம்பேரு பரசுராமன், நானு பரசு இண்ணு மாத்திகனேன்.

சன். ஆமாம், இப்பொழுது என்னை என்னகேட்கிறீர்கள்?

சங் அவரு—எங்க ராஜா—வீட்டுக்கு வெளியே யார் என்ன பேசனாலும் சங்கீதத்தோடு பேசணும், இல்லாப்போனு அபராதம் போடப்படும், இண்ணு தண்டோரா அடிச்சி யிருக்காரு—எனக்கென்னமோ சங்கீதம் அவ்வளவாவராது.

பர. அவ்வளவா வராதென்னு—அவர் தொண்டையெ கிழிச் சாலும் ஒரு சொரம்கூட சரியா வராதுங்க—

சங். உனக்கு மாத்திரம் சங்கீதம் ரொம்ப தெரியுமோ? உன்னெ சுட்டு போட்டாலும் தாளமே வராதே!

சன். இதற்கு என்னையென்ன அப்பா செய்யச் சொல்கிறீர்கள்?

இருவரும். என் ஊட்டுக்கு வந்து எனக்கு வாத்தியாராயிருந்து கொஞ்சம் சங்கீதம் கத்துக் கொடுக்கணும் சாமி!

சன். உம்—அப்படியே ஆகட்டும்; ஏதோ எனக்குத் தெரிந்ததைச் சொல்லிக் கொடுக்கிறேன்—வாருங்கள்.

சங் சாமி! என் ஊட்டுக்கு முன்னே வரணும்.

பர. சாமி! என் ஊட்டுக்கு முன்னே வரணும்.

சங். நான் தானே முன்னே கூப்பிட்டேன்.

பா. நானு உங்களெ முன்னேயே கூப்பிடலாமிண்ணு இருந்தேன்.

[இருவரும் சன்யாசியை இழுக்கிருர்கள்.]

கோத்தவால் வருகிருன்.

கோ. சங்கீதம்! சங்கீதம் !சங்கீதம்!

சங். [பாடுகிருன்.]

வாருங்களையா டாணுகாரரெ!
தீருங்களையா எங்கள் சண்டையை!
பாருங்களையா என் வீட்டிற்கு பரதேசி
போகக்கூடாதென்று தடுக்கிருன்.

பர. கூறுங்களையா நீர்தான் நியாயம்
குமபிட்டு நான் இவரை முன்பழைத்தேன்
தாறுமாருய் உளறுகிருர்
தடியாம் பிள்ளை இவர்தானையோ!

சங் ஏண்டா, கொழுப்பொ! [இருவரும் அடித்துக் கொள்கின்றனர்.]

கோ. பொறுங்கள்! பொறுங்கள்! [அவர்களைப் பிரித்து] —தாளம் தப்பு!—தப்பு!—நான் தாளம் போடுகிறேன்—அதற்கு சரியாக அடித்துக் கொள்ளுங்கள்!
[ஜம்பை தாளம் கையில் போடுகிருன்.]

சங். ஏனையா—நாங்க சண்டெ போட்டா—

பர. உங்களுக்கு அது வேடிக்கையா யிருக்குதோ?

கோ. இல்லெடாப்பா! ராஜா ஆக்கினெ! அடிதடில் உழுந்தாலும் தாளத்தோடெ இருக்கணும்!-இல்லாபோனு அரமனைக்கு இழுத்துகினு போயி அபராதம் போட்டு வைக்கணும்!

சங். சரிதான்! அபராதம் குடுத்தது போதும்—

பர. நாங்க சமாதானமா போரோம்.

இருவரும். நீங்க சொல்லுங்கையா மத்யஸ்தம்—யார் ஊட்டுக்கு பாட்டு வாத்தியார் போவணும் முன்னே.

கோ. உம்—நீதான் பெரியவன்—நீ அழைச்சிகினு போ முன்னே.

பர. சரிதான் இருக்கட்டும்—அப்பறம் நானு அழைச்சிகினு போரேன். [சங்கரன் சன்யாசியைத் தன் வீட்டுக்கு அழைத்துக் கொண்டு போகிருன்.]

காட்சி முடிகிறது.

—∘∘✠∘∘—

இரண்டாம் காட்சி

இடம்—சங்கரன் வீட்டில் கூடம்.

சங்கரன் வருகிருன்.

சங். சாவேரி!—சாவேரி!

காவேரி அம்மாள் அடுப்பங்கரையருகிலிருந்து வருகிருள்.

கா. இதோ வந்தேன்—இதென்ன இது! என்பெயரெச்சொல்லி கூப்பிடுங்களேன்! சாவேரி என்ன வந்தது! சாவேரி!

சங். இல்லெடி, உம்பேரெசொல்லி காவேரி இண்ணு கூப்பிட்டத்துக்குதான், நேத்து ஒரு பணம் அபராதம் விழுந்துதே! மகாராஜா கட்டளெ, எல்லாபேருங்களும் சங்கீத பேருங்களா இருக்கணும் இண்ணு.

கா. அதெல்லாம் வீட்டுக்கு வெளியே! உள்ளே எப்டியாவது பேசிக்கலா மில்லேயோ! யார் கேக்கப் போரா?

சங். அப்பறம் இந்தபழக்கம்தானே தெருவிலேயும் வரும் இண்ணு, இப்பவே பழகி வைக்கரேன்!—சமயல் முடிஞ்சுதா?

கா. இல்லெ, இன்னும் அரைநாழி ஆகும்.

சங். குருமகாராஜா ஸ்நானத்துக்குப் போயிருக்காரு; சீக்கிரம் சமயல் எல்லாம் முடிச்சூடு. [காவேரி உள்ளே போகிருள்.] அதுவரைக்கும் ஜன்டெவரிசெ பாடம் பண்ணிவைப்போம்—சா சா சா சா—

காவேரி வருகிருள்.

கா. இதென்ன இது? சா சா சா!—வெள்ளிக் கெழமெ சுபமா ஏதாவது சொல்லக் கூடாதா!

சங். சா சா சா சா!

கா. யாரெ சாவச்சொல்ரைங்க?

சங். நீ நீ நீ நீ!—

கா. என்னது?—என்னேயாசாவச் சொல்ரைங்க?

சங். தா தா தா தா!

கா. எங்க தா தாவையா?

சங். பா பா பா பா!

கா. யாரெ ஒண்ணு மிண்ணுலும் சொல்லுங்க, பாபாவே மாத்திரம் அப்படிச் சொல்லாதைங்க!

சங். மா மா மா மா!

கா. இதென்னடி இது! எங்கமாமாவெபத்தி அப்படிச் சொன்ன எனக்கு கோவம் வரும்!

சங். கா கா கா கா!

கா. ஆ!—அப்படி காக்காயே ஒண்ணும் இண்ண, என்ன வோணு மிண்ணுலும் சொல்லுங்க.

சங். இல்லெடி இதெல்லாம் ஜன்டெ வரிசெ, குருமஹாராஜா கத்து கொடுத்தாரு கொஞ்சமுன்னே.

கா. என்ன ஜன்டெ வரிசையோ கிண்டல் வரிசையோ! காது புளிச்சிப் போறது. [உள்ளே போகிருள்]

சங். அப்பறம் என்ன? — அந்த புஸ்தகத்திலே எழுதி வைச்சேனே! [அதை எடுத்துப்பார்த்து] சாணி சாணி சாணி சாணி— நிதா நிதா நிதா நிதா—அப்பறம்—தப தப தப தப!

காவேரி மறுபடி வருகிருள்.

கா. இதென்னடி எழவாயிருக்குது! தப தப இண்ணுகினு! போதும் நீங்க சங்கீசம் கத்துகிறது, நிறுத்துங்க! [உள்ளே போகிருள்.]

சங். மாங்கா—மாங்கா—மாங்கா—காரி—காரி—காரி— மாங்காகாரி—மாங்காகாரி—மாங்காகாரி!

கா. [வெளி வந்து] ஏம் மாங்காகாரியே கூப்பிடரைங்களே!

சங். இல்லேடி—வாத்தியார் காலமே பாடம் எழுதி கொடுத்தாரே—மாங்கா—காரி—மாங்கா—காரி இண்ணு—

கா. மாங்காயும்—கறியும்—நல்ல வாத்தியாரு—நல்லபாடம்!

சங். அடி அடி! அவரெ திட்டாதே—அப்பறம் அவரு எதிர் வீட்டுக்கு—எம்பங்காளி வூட்டுக்குப் பூடப்போராரு—நானு எவ்வளவு கஷ்டப்பட்டு இங்கே இழுத்துகினுவந்தே! [தெருவில் கதவைத் தட்டுகிற சப்தம்.] —அதோதோ! வந்துவிட்டாரு! சீக்கிரம் சமயல் முடிச்சூடு.

கா. செய்யரேன், அவரெ இந்த சாசாநீநீ தவிர ஏதாவது நல்ல ராகமா—பாட்டா கத்துகொடுக்கச் சொல்லுங்களேன்.

சங். அப்படியே ஆவட்டும், நீ போயி சமயலெபாரு. [காவேரி உள்ளே போகிருள்.]

சன்யாசி வருகிருர்.

வாங்கசாமி, ஸ்நானம் எல்லாம் ஆச்சோ?

சன். முடிந்தது அப்பா.

சங். இப்படி உக்காருங்க—சாமி, இந்த சரளி வரிசெ ஜண்டெ வரிசெ யெல்லாம் ஒரு பக்கம் இருக்கட்டும்—எம்பெண்சாதி நானு ஏதாவது பல்லவி கத்துகிணு மிண்ணு ஆசெ படரா, அத்தெ கொஞ்சம் முன்னே சொல்லிகொடுங்க.

சன். அப்பா, முதலில், சரளி வரிசை, ஜண்டெவரிசை எல்லாம் ஆகவேணுமப்பா.

சங். அப்பறம்தான் பல்லவி வரிசெ வருமோ?

சன். அதற்கப்புறம் ராகம்—கடைசியிலே பல்லவி.

சங். முன்னே கொஞ்சம் ராகமும் பல்லவியும் கத்துகொடுங்களேன்.

சன். அது வராதப்பா, இதற்குள்ளாக.

சங். கொஞ்சம் பாருங்களேன், அல்லாம்வரும்.

சன். சரி, உன் இஷ்டம்—இப்பொழுது கொஞ்சம் பசியாயிருக்குது—சாப்பாட்டுக்குமேலெ ஆகட்டும்— அப்புறம் ஆரம்பிக்கலாம்.

சங். சாவேரி!—சமயலாச்சா?

சன். உன் பெண்சாதி பெயர்—என்ன சாவேரியா?

சங். இல்லெ அவபேரு காவேரி— இந்த ராஜா எல்லாப் பெயரையும் சங்கீதமா மாத்திகணும் இண்ணு உத்தரவுபோட்டபோது, அத்தெ சாவேரி இண்ணு மாத்திவுட்டேன்.

காவேரி வருகிறள்.

கா. ஏங் கூப்பிட்டைங்க?

சங். சமயலாச்சோ?

கா. இதுக்குள்ள என்னமா ஆவும்?—வாதாபிகணபதி பச்சடியாச்சி, புந்நாகவராளி பொரியலாச்சி, கல்யாணிக்கா வேகுது, அத்தெ கொழம்புபண்ணி வுட்டு, அப்பறம் சாப்புதாளம் வரக்கணும்.

சன். இதென்னடாப்பா இது! ஒன்றும் அரத்தமாகவில்லே.

சங். எல்லாம் இந்த வூரு ராஜா வேலெ!— எல்லாபேரையும் மாத்தி வுட்டாரு! வாதாபிகணபதி பச்சடி இண்ணு—

வாழக்கா பச்சடி இண்ணு அர்த்தம்—புந்நாகவராளி பொரியல் — பொடலங்கா பொரியல் — கல்யாணிக்கா இண்ணு கல்யாணப் பூசணிக்கா.

சன். சாப்பு தாளம் என்றால் ?

சங். சோத்தப்பளம்!—உம்—அடி, இவருக்கு பசியாயிருக்குதாம் —சீக்கிரம் சமயலெமுடி. [காவேரி உள்ளே போகிருள்.]

சன். ஆனால், அது வரைக்கும் கொஞ்சம் ராகம் பாடி ஒரு பல்லவி பாடுகிறேன் கேள். தோம்தர னு .... [பாடுகிருர்.]

சங். கொஞ்சம் பொறுங்க—இதை யெல்லாம் எழுதிகிறேன்.

சன். இதெ யெல்லாம் எழுதிக்கொள்ள முடியாதப்பா, மனசுலெ பதிய வைத்துக் கொள்ளவேண்டும்.

சங். இல்லே சாமி — நானு எழுதிகிரேன் !

[சன்யாசி பாட, சங்கரன் எழுதுகிருன்.]

சன். [ராகம் பாடி முடிந்ததும்] அப்பா, என்ன எழுதிக்கொண்டாய்? படி, கேட்போம்.

சங். [படிக்கிருன்] தோம்புதெரெ—நாயினு — நாயினு — நாய் நரி —நாய் நரி ....

காவேரி உள்ளிருந்து வருகிருள்.

கா. இதென்ன இது ? நாயும் நரியும்—நல்ல பாட்டுதான் !— வேறெ என்னமானாலும் நல்ல பாட்டா கத்துருங்க.

சங். அப்படித்தான் செய்யுங்க சாமி — எம்பெண்டாட்டி கோவிச்சிகரா.

சன். அதெல்லாம் வராதே—பல்லவி வராதப்பா இதற்குள்ளாக—

சங். நீங்க கத்து குடுத்துதாம் பாருங்களேன்.

[காவேரி உள்ளே போகிருள்.]

சன். ஆகட்டுமப்பா. [கல்யாணி ராகத்தில் பல்லவி பாடுகிருர்.]

முருகையனே ! பன்னிருகையனே !—

அப்பா—தொண்டை வறண்டு போச்சுது–கொஞ்சம் தாகத்திற்கு வெந்நீர் கொண்டுவா.

சங். வேண்டாம் சாமி, வெந்நீரு சாப்பிட்டா அப்புறம் சாப்பாடு கொள்ளாது! — கொஞ்சம் வெத்திலெ வேணுமிண்ணா போட்டுங்க— [வெற்றிலைப் பெட்டியைத் திறந்து] இந்தாங்க—இந்த கொட்டெ பாக்கை போட்டுக்கொண்டு, கொஞ்சம் கடிங்க—இதொ வெத்திலெ—நான் பாடரேன் —கொஞ்சம் கேளுங்க— [பாடுகிறான்.]

முருக்கு—கையனே! பன்னீரு கையிலே—

[சன்யாசி பாக்கை வாயில்போட்டுக்கொண்டு சிரிக்கிறார், தொண்டை அடைத்துக்கொண்டு மூர்ச்சையாகிறார்.]

ஐஐயோ!—சாமி! சாமி! — சாவேரி! சாவேரி! — ஓடிவா!

காவேரி அம்மாள் உள்ளிருந்து வருகிறாள்.

கா. என்ன! என்ன!

சங். சாமியாருக்கு கொட்டெபாக்கு கொடுத்தேன்! அது மார்லே அடைச்சிகினாப்போலே இருக்குது! அப்படியே உழுந்துட்டார்டி! என்ன செய்யரதடி?

கா. நான் சொல்ரபடி கேளுங்க!— அப்படி என்னமானாலு— ஆனா—அப்பறம் நப்ப பேர்லே பழி வரும். அப்படியே எடுத்தும்போயி எதிர் ஊட்டு திண்ணேயிலெ வளத்தி உடுங்க!

சங். ஆமாம், அது தான் நல்லயுக்தி—நீ போயி தெருவுலெ யாரும் இல்லாத சமயம் பாத்து, கையெ தட்டு—நானு அப்படியே தூக்கிகினு போயி, எதிர் வூட்டிலெ வைச்சூடரேன் இவரே —இல்லாபோனா இவரெ கொண்ணூட்டோம் இண்ணு நம்பபேர்லே பழிவரும்! போதாக் குறைக்கு இந்த சாமி யாரு — சங்கீத வித்வான்!—ராஜாவுக்கு தெரிஞ்சா ரெண்டு பேருக்கும் கண்டம் தான்—நீ போயி வெளியிலே பாரு.

[காவேரி வெளியே போய் வருகிறாள்.]

கா. இந்தாங்க!—தெருவுலெ யாருமில்லே — எதிர்வூட்டு கதவு சாத்தியிருக்குது, அந்த கதவும் பேர்லெ சாத்தி வைச்சூடுங்க! பழி அவங்க பேர்லெ விழும்.

சங். ஆமாமாம்! நல்லயுக்தி!

காட்சி முடிகிறது.

மூன்றும் காட்சி

இடம்—பரசுராமன் வீட்டின் உள்புறம்.

தெருக்கதவு உள் தாப்பாள் இடப்பட் டிருக்கிறது. ஒருபுறமாக **பரசுராமன்** உட்கார்ந்து சரஸ்வதி படத்திற்குப் பூஜை செய்து கொண்டிருக்கிறான். காந்தாரி உள் அறையில் சமையல் செய்கிறாள்.

பர. அடி—காந்தாரி!—உம்—தேவகாந்தாரி?

காந். [அறையிலிருந்து வருகிறாள்] ஏன்! கூப்பிட்டைங்களே.

பர. சமய லாச்சோ?

காந். இதோ ஆயிபோச்சி—ஒரு நொடியிலே—பூஜெ பண்ணும் போதுகூட சாப்பாட்டு கியாபகம் தானு!

பர. இல்லெடி, ரொம்ப பசியாயிருக்குது.

காந். பூஜெ பண்ணும்போது மனசெ அடக்கவாணுமா!—ஏதா வது ஸ்தோத்திரமா பாடிகினு பூஜபண்ணு—சரியாபோவும்.

பர. ஸ்தோத்திரப்பாட்டு தமிழ்லே எனக்கு ஒண்ணும் தெரி யாதே.

காந். ஒண்ணுமா தெரியாது? ஏதாவது தெரிஞ்சபாட்டா பாடுங் களேன்—சாதத்தெ வடிச்சூட்டு வர்ரேன்.

[உள்ளே போகிறாள்.]

பர. என்னடா கஷ்டமாயிருக்குது! எனக்கென்ன தமிழ் பாட்டு தெரியும்? ஒண்ணுதான் கியாபகம் இருக்குது. [பாடுகிறார்.]

ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்
ஒருவரையும் பொல்லாங்கு சொல்லவேண்டாம்
—என் அம்மணி தாயே! சரஸ்வதி!
மாதாவை ஒருநாளும் மறக்கவேண்டாம்
வஞ்சனைகள் செய்வாரோ டிணங்கவேண்டாம்

[தவடையில் போட்டுக்கொண்டு]

—பூலோக சுந்தரி! கைலாசவாசி!

காந். [மறுபடியும் உள்ளிருந்துவந்து] இது என்ன பாட்டு இது! போதும் நிறுத்துங்க! யாராவதுபாத்தா சிரிக்கப் போரா!—அதோ! ஏதோ கதவண்டை சத்தம் கேட்டுது, என்னண்ணு பாருங்க.

பர. [கதவண்டைபோய் மெல்ல கொஞ்சம் திறந்து பார்த்து] அடி அடி! நம்ப பாட்டு வாத்தியார் வந்திருக்கிறாரடி!—[கதவை நன்றாய்த் திறக்க, சன்யாசியின் உடல் வீட்டிற்குள் விழுகிறது.]

காந். ஐ ஐயோ! இதென்ன கீழே விழுந்தூட்டாரே!

பர. ஆமாண்டி! ஆமாண்டி!—என்னா செத்துப்பூட்டாரா என்னா! மூச்சிகீச்சி ஒண்ணையும் காணோமே!—அடி தேவகாந்தாரி! நம்ப என்ன செய்யாது?

காந். எனக்கென்னமோ சந்தேகமாயிருக்குது—நானு ஒரு யுத்தி சொல்ரேன் அதும்படி செய்யுங்க—எதிர் வூட்டிலெ போய்—அவா புருஷன் பெண்சாதியெ எதாவது சாக்குசொல்லி ரெண்டாங்கட்டுக்கு—அழைச்சிகினுபோயி பேசிகினு இருக்கரேன், அந்த சமயம்—இத்தே தூக்கிகினு வந்து,மொதல் கட்டிலே மறவா வைச்சூடுங்க-நம்பொமேலெ பழியிருக்காது.

பர. அப்படியே ஆவட்டும்—அதோ அவுங்க கதவு தெறந்திருக்குது—நீ முன்னெபோ. [காந்தாரி போகிறாள்.]

காட்சி முடிகிறது.

—oo✻oo—

நான்காம் காட்சி

இடம்—சங்கரன் வீட்டில் கூடம்.

பரசுராமன் தெருக் கதவைத் திறந்துகொண்டு உள்ளே தலையை நுழைத்துப் பார்க்கிறான்.

பர. யாரையும் காணோம் அந்த மட்டும்! அவுங்களெ ரெண்டாம் கட்டுக்கு அழைச்சிகினு போயிருக்கரா—இதான் சமயம்— [உடலைக் கொண்டுவந்து அங்கு மூலையில் இருக்கும் நாற்காலியின் பேரில் உட்காரவைத்து ஒரு போர்வையால் மூடி விட்டு வெளியே ஓடிப்போய் விடுகிறான்.]

இரண்டாங்கட்டிலிருந்து **சங்கரனும், காவேரியும், காந்தாரியும்** வருகிறார்கள்.

காவே. அதுதாம்மா வழி, ரகசியமா-யாருக்கும் தெரியாமெ—செய்தூடச் சொல்லு—இல்லாப்போனா நம்பபேர்லெ பழிவரும்.

காந். அப்படியே ஆகட்டும். [விரைந்து வெளியே போகிறாள்.]

சங். சாவேரி, தெருக் கதவெ சாத்திக்கோ — இல்லாப்போனு நம்ப யுக்தியெ நம்பளுக்கே காட்டப்போராங்க! — நம்ப இல்லாதபோது நம்ப ஊட்டிலெ கொண்டாந்து போட்டாங் கண்ணு என்னு செய்யரது!

[காவேரி தெருக் கதவைத் தாளிடுகிருள்.]

கொண்டா, சாப்பாட்டெ—பசி யெடுக்குது.

[காவேரி உள்ளே போய் இலையைக் கொண்டு வருகிருள்.]

சங். இந்த போர்வையை நாற்காலி பேர்லெ யார் போட்டது? அந்த முட்டும் நம்ப பழியே கழிச்சிகனமே!

[மூலைக்குப்போய் போர்வையை எடுக்க சன்யாசி உடலைக் கண்டு]

இல்லேடி! இந்த பழி நம்ப ஊட்டுக்கு மறுபடியும் வந்துட்டு தடி!

கா. ஐயோ! கெட்டேனே! நம்பொ சொல்லரத்துக்கு முன்னேயே இந்த யுக்தி செய்திருக்கராங்க!

சங். ஆமாண்டி! ஆமாண்டி! ஏதோ நம்மெ ரகசியமா கேக்கரது போலெ, அவ ரெண்டாங்கட்டுக்கு நம்மெ அழைச்சிகினு போயிருந்தபோது, அவபுருஷென் இங்கெ கொண்டாந்துஇத்தெ வைச்சிட்டுப் போயிருக்கரான்!—இருக்கட்டும் சொல்ரேன்—சாயங்கால மாயிபோச்சி—கொஞ்சம் இருட்டட்டும் சொல்ரேன்—ஒரு கவுத்தெகட்டி, அவுங்க ஊட்டுக் கூரெயின்பேர்லெ ஏறி வாசல்வழியா எறக்கிவுடரே இத்தெ!

காட்சி முடிகிறது.

ஐந்தாம் காட்சி

இடம்—பரசுராமன் வீட்டின் வாசல்; பரசுராமனும், காந்தாரியும் சாப்பிட்டுக் கொண்டிருக்கின்றனர்.

பர. நம்போ யுக்தி பண்ணு—அதுக்குமேலெ யுக்தி பண்ணப் பார்க்கராங்க!

காந். அவுங்களுக்கு மேலெ நம்பளுக்கு யுக்தி பண்ண தெரியாதா என்னு! சீக்கிரம் சாப்டேட்டு—படுத்துக் கொள்ளலாம்—

[சாப்பிடுகின்றனர். இருவர் மத்தியில் சன்யாசியின் உடல் வாயில் வழியாக இறங்குகிறது.]

இருவரும். ஐயோ ! பிசாசி ! பிசாசி ! [எழுந்து ஓடுகிறார்கள்.]

பர. [மெல்ல திரும்பி வந்து] இல்லெடி! நம்ப பழய ஆசாமி! திரும்பி வந்திருக்காரு!—ஓ! கவுத்திலே கட்டி, வாசல் வழியா எறக்கி யிருக்கராங்க—கொஞ்சம் பொறு! அவுங்க யுக்தியெ அவுங்களுக்கே காட்டரேன்!— அவுங்க இந்த வெய்ய காலத்திலெ, வாசல்லெ தான் படுத்துகினு தூங்கர வழக்கம்!—நடுராத்திரி யாகட்டும் சொல்ரேன்!

காட்சி முடிகிறது.

ஆறும் காட்சி

காலம்—விடியற்காலம். **இடம்**—சங்கரன் வீட்டின் வாசல்.

ஒருபக்கம் கிணற்றின்மீது ராட்டினம் போட்டிருக்கிறது. வாசலில் **சங்கரனும்**, **காவேரியும்** படுத்துக்கொண்டிருக்கின்றனர். கூரையிலிருந்து, கிணற்றின் ராட்டினத்தின் வழியாக **பரசுராமன்** சன்யாசியின் உடலைத் தூக்கிக்கொண்டு இறங்கி, இருவர் மத்தியிலும் வளர்த்திவிட்டு, கொடியிலிருந்த சால்வை யொன்றைப் போர்த்திவிட்டு, வந்த வழியே எறிப்போய் விடுகிறான்.

சங். [கொஞ்சம் பொறுத்து விழித்து] அடி ! அடி!—காலமே எழுந்து சீக்கிரம் சமயலாகணுமிண்ணேனே — எழுந்திரு—ஏண்டி! இந்த சரிகெ சால்வையையா போத்துகினு படுத்துகினே!

கா. ஏ!— நானு சால்வையே போத்துகினு படுத்துகினேன்! நீங்க போத்துகினு— [அதை இருவருமாக இழுக்க சன்யாசியின் உடலைக்காண்கிறார்கள்.]

சங். கா. ஆ! ஆ! [அலறி எழுந்திருக்கின்றனர்.]

சங். என்னுடா! எழவா போச்சி! இந்த சனி நம்மெ விடாது போலிருக்குதே?

கா. இது என்னமா வந்து சேர்ந்தது நம்ப வூட்டுக்கு மறுபடியும்?

சங். நப்பளவங்க வேலெயாதான் இருக்கணும்—இரு சொல்லரேன், பொழுது நண்ணு விடியரத்துக்குள்ளோ—இத்தெ கொண்டுபோய் அவன் திண்ணேயிலெ வளர்த்தி விடரேன்! கதவெ தெற!— [எடுத்துக்கொண்டு வெளியே போகிறான்.]

காட்சி முடிகிறது.

ஏழாம் காட்சி

இடம்—இருவர் வீட்டிற்கும் இடையிலுள்ள முட்டுச் சந்து.
காலம்—விடியற்காலம்.

தன் வீட்டின் கதவைத் திறந்துகொண்டு சங்கரன் சன்யாசி உடலுடன் ஓடிவருகிறான். திண்ணையிலிருந்து பரசுராமன் எழுந்திருந்து ஓடிவந்து அவனைத் தடுக்கிறான்.

பர. பொறுங்க! பொறுங்க! எங்கே தூக்கிக்கினு வர்ரைங்க இத்தெ!—நிங்க வருவைங்க இண்ணு எனக்குத் தெரிஞ்சி தான் திண்ணையிலே காத்துக்கினு இருந்தேன் தூங்காதே!

சங். ஏண்டா பயலே! நி இந்த சன்யாசியே கொண்ணூட்டு எம் பேர்லே பழியே போடப் பாக்கிறையோ?

பர. அந்தக் கதையெல்லாம் ஓதவாது!—நீங்க பெரியவனிண்ணு உங்க வரைக்கும் இருக்கட்டும்—நீங்க கொண்ணூட்டு எம் பேர்லே பழியே போடப்பாக்கிறைங்களா! — எடுத்தும் போங்க உங்க வீட்டுக்கு இத்தே!

சங். நீ எடுத்தும் போ உன் வீட்டுக்கு இத்தே!
[இருவரும் மன்றாடுகிறார்கள்.]

சற்று தூரத்தில் கோத்தவால் வருகிறான்.

கோ. என்னடாப்பா! சந்துலே கலாடா?

காந்தாரியும், சாவேரியும் தங்கள் தங்கள் வீட்டிற்குள்ளிருந்து ஓடி வருகிறார்கள்.

காங். கா. கொத்தவால்! கொத்தவால்!
[இருவரும் தங்கள் தங்கள் கணவரைப் பற்றி இழுக்க சன்னியாசியின் உடல் கீழே விழுகிறது.]

பர. ஐயா! கொத்தவால்! அவர்தான் கொண்ணாரு சன்யாசியே.

சங். இல்லெ! நானல்லா, இவன்தான் கொண்ணான்.

கோ. சங்கிதம்! சங்கிதம்! [இருவரையும் பிடித்துக்கொண்டு]

[பாடுகிறான்] ராகம்—பூபாளம்—தாளம்—ரூபகம்

சங்கிதம் சங்கீதம்—சமாசாரத்தை
சங்கீதமாய்ச் சொல்லுங்கள்.

சங். அடெபோயா! இப்பொகூடவா பாட்டு! அவன்கொண் ணூட்டு பழியெ எம் பேர்லே போடப் பாக்கரான்!

பர. அவர் கொண்ணூட்டு எம்பேர்லே பழி போடப் பாக்கராரு!

கோ. [பாடுகிறூர்] ஹோ! அப்படியா வியாஜ்ஜியம்!
நீங்களிருவரும் சாட்சியம்! [ஸ்திரீகளுக்கு]
மன்னிப்புக் கிடையாது பூஜ்யம்!
வாங்க எல்லாரும் ராஜ சபைக்கு—தூக்குங்கடா உடலே.

சங். நான் மாட்டேன் ஐயா! அவன்தான் கொண்ணுன்! அவனே தூக்கச் சொல்லுங்க.

பர. நான் மாட்டேன்! அவர்தான் கொண்ணூரு! அவரெ தூக்கச் சொல்லுங்க.

கோ. சரி! நான் தூக்கிக்கினு வர்ரேன்! உங்கபேர்லே மூணு வியாஜ்யம்—மொதல்லே தெருவிலே பாடாமேயே சும்மா பேசனது! ரெண்டாவது, கலாடா பண்ணினது! மூணுவது, சன்யாசியே கொண்ணது! [பாடிக்கொண்டே போகிறுன்.]

ராகம்—கேதாரம்—தாளம்—ஆதி

பல்லவி

எல்லோரும் வாருங்கள்—
வியாஜ்ய மிருக்குது பாருங்கள்
எல்லோரும் பாருங்கள்.

[போகின்றனர்.]

காட்சி முடிகிறது.

மூன்றாம் அங்கம்

முதற் காட்சி

இடம்—வசந்தராயர் கொலு மண்டபம். காலம்—காலை.
மந்திரி முதலியோர் வீற்றிருக்கின்றனர். கோத்தவால், சங்கரனையும், பரசுராமனையும் கைதியாகப் பிடித்துக் கொண்டு நிற்கிறான். பரிவாரங்கள் சூழ்ந்திருக்கின்றனர். காவேரியும், காந்தாரியும் ஒரு புறம் நிற்கின்றனர்.

கட்டியக்காரன் [பாடுகிறான்]

ராகம்—வசந்தா—தாளம்—ஆதி

பல்லவி

வசந்தராயர் வருகிறார்
வசந்தராக ராயர் இதோ கொலுவிற்கு (வ)

அனுபல்லவி

இசைந்தமனத்துடன் எல்லோரையும் காத்திடும்
திசைகள் புகழ்ந்திடும் தேவர்கள் போற்றிடும் (வ)

வசந்தராயர் பரிவாரங்களுடன் வந்து கொலுவில் அமர்கிறார்.

வ. [பாடுகிறார்]

ராகம்—சங்கராபரணம்—தாளம்—ரூபகம்

மண்டலம் எங்கும் புகழும் மந்திரியே கூறும் நீரும்
தண்டனை விதிக்கவேண்டிய தகராறுண்டோ பாரும்.

ம. மகாராஜா! தாங்கள் தீர்மானிக்கவேண்டிய வியவகாரம் இன்று ஒன்று உண்டு. [கானடா ராகத்தில் பாடுகிறார்.]
உள்ளபடி உரைத்திடுவாய் உத்தமனான கொத்தவாலே
கள்ளமொன்றின்றியே நடந்ததை நீதான் இன்றே.

கோ. அரசே! [கேதார கௌளத்தில் பாடுகிறான்.]
கொலைதனைச் செய்தனர் கொடும்பாவியர் இருவருமே
குலை நடுங்கிடவே கொன்றார் சன்யாசியைத் தெருவினிலே

வ. [அடாணா ராகத்தில் பாடுகிறார்.] ஆஹா! அப்படியா சமாசாரம்!
ஓஹோ! இதென்ன கிரஹசாரம்!
—பாபிகளே! என்ன சொல்லுகிறீர்கள்?

சங். மஹாராஜா!—பாரினில் நாணிந்தப் பாபம் செய்தறியேனிக் காரியம் செய்த துரோகி உம்முன் நிற்கின்ருனே.

பர. தானே செய்துவிட்டு அனியாயமாய் மன்ஞ என்மேல் நானே செய்ததாக நாட்டுகின்ருர் இப்பெரும் பழியை.

வ. ஆனல்— [பாடுகிருர்.]

ராகம்—பிலஹரி—தாளம்—ரூபகம்.

பல்லவி

தண்டனை விதிக்கிறேன்
தப்பாமல் இருவர்க்கும்—நான்

அனுபல்லவி

கண்டனம் செய்யாவிட்டால்
கர்மம் எனைச் சாரும்!

[முதலில் ஒவ்வொருவராய், பிறகு எல்லோரும் ஒன்ருக கீழ்க்கண்ட பாட்டுகளைப் பாடுகின்றனர்.]

ம. ராகம்—நளினகாந்தி—தாளம்—ஆதி

பல்லவி

சந்தோஷம்—மகாராஜா மிக
சந்தோஷம் மகாராஜா.

அனுபல்லவி

சன்யாசியைக் கொன்ற பாபம்
சாற்றிடப் போமோ புவியில்.

சங். ராகம்—முகாரி—தாளம்—ஆதி

பல்லவி

ஒரு பாபமு மறியா என்னை
தண்டிப் பீராயின் உம்மை

அனுபல்லவி

பெரும் பாவம் சூழ்ந்திடும்
பின்னும் யோசிப்பீரே.

பர. ராகம்—சஹாணு—தாளம்—ரூபகம்

பல்லவி

கொன்றவன் அவனிருக்க
கொடுங்கோல் மன்னு நீரும்

அனுபல்லவி

இன்றென்னை தண்டிப்பீரேல்
இன்னலுமக்கு வருந்தானே

காவே. ராகம்—நாதநாமக்கிரியை—தாளம்—ரூபகம்

பல்லவி

மாங்கல்ய பிச்சை தாரும்
மன்னனே என்னைக் காரும்

அனுபல்லவி

இங்கிவரைக் கொல்வீராஞல்
என் கதி என்னகும்.

காங். ராகம்—எதுகுல காம்போதி—தாளம்—சாப்பு

பல்லவி

கணவனைப் பிரிந்தே நான்
கணமேனும் வாழேனே

அனுபல்லவி

பிணமதாயப் போனாலும்
பெறுவேன் நான் சுவர்க்கத்திலே

கோ. [பியாகடையில் பாடுகிறான்.]

பாட்டைத் தப்பாகப் பாடுகிறார்
பாதகர்கள் இவர்களே
நாட்டைவிட் டிவர்களை
நானே துரத்த வேண்டும்.

[இக் கூச்சலில்சன்யாசியின் வாயினின்றும் இருமல் சத்தம் கேட்கிறது. பிறகு சன்யாசி எழுந்திருந்து வாயினின்றும் ஒரு கொட்டைப் பாக்கை உமிழ்கிறார். எல்லோரும் ஆச்சரியப்பட்டு திகைத்து நிற்கின்றனர்.]

வ. ஆஹா !—ஸ்வாமி பிழைத்தீர்களே !—நீங்கள் தேவலோகம் போய் விட்டீர்களென்று அல்லவோ நினைத்தோம் !

சன். ஆம், அங்குதான் போய்ச் சேர்ந்தேன்—சற்று முன்பாக.

வ அங்கே !—என் தாயாரைக் கண்டீர்களோ ?

சன். கண்டேன்.

வ. அவர்கள் எனக்கு ஏதாவது சொல்லி யனுப்பினார்களோ ?

சன். அதைக் கூறத்தான் திரும்பி வந்தேன்—அவர்கள் இவ்வூரில் சிலகாலமாக பாடப்படும் அபஸ்வரமான ராகங்களையும், காலமில்லாத தாளங்களையும் கேட்டு, சில தினங்களாக தனக்கு தலைவலி உண்டான தாகவும், நித்திரையே யில்லா திருப்பதாயும், தெரிவிக்கச் சொன்னார்கள்; ஆகவே, உடனே இந்த சங்கீதத்தை யெல்லாம் நிறுத்திவிடும்படியாக கட்டளையிடச்சொன்ன தாகவும் சொன்னார்கள்.

வ. ஸ்வாமி! அவர்கள் உத்திரவுபடியே!—மந்திரி! இனி நம்மூரில் ஒருவரும் பாடவேண்டியதில்லை யென்று உத்தரவிடு.

ம. சந்தோஷம்—கொத்தவால், இனி நம்மூரிலுள்ள ஒருவரும் பாட வேண்டியதில்லை.

கோ. ஐயா ! நீங்கள் எல்லோரும் இனி பாடவேண்டியதில்லை.

சங். பர. அப்பா !—நாம் இனி ஒருவரும் பாடவேண்டியதில்லை.

கா.காங். அம்மா !— இனி நாம் இந்தப்பாட்டைக் கேட்க வேண்டிய தில்லை !

பரிவாரங்கள். அப்பா ! ஒழிந்தது இந்த சங்கீதத் தொல்லை !

வ. ஆயினும் மங்களம் மாத்திரம் பாடுவோம். [பாடுகின்றனர்.]

காட்சி முடிகிறது

நாடகம் முற்றியது.

PRINTED AT THE PEERLESS PRESS, G. T., MADRAS.